ஸ்ரீ

ஸர்வம் விஷ்ணு மயம் ஜகத்.

ஸ்ரீமதேராமாநுஜாயநமஃ.

ஸ்ரீமத்வால்மீகிராமாயணவசனம்

ஆரண்ய காண்டம்.

யாவரும் எளிதிலுணர்ந்துகொள்ளும்பொருட்டு

ஸ்ரீமத் உபயவேதாந்த

ஏடுரிம்படி திருமலை லக்ஷ்மிகுமாரர் கோடி கன்னிகாதானம்,

வித்துவான் அஷ்டாவதானம்,

மேல்பாக்கம்,

தாததேசிகதாதாசாரிய சுவாமியவர்களால்,

வடமொழியினின்றும், தென்மொழியில் வசனநடையாய்

மொழி பெயர்ப்பித்து,

ஆவுல - கிருஷ்ணசாமி நாயுடு,

நகர் - அந்தல - மூர்த்தி நாயுடு,

குளத்தூர் - முத்துசாமி நாயுடு,

என்னும் மூவர்களால்,

சென்னை மவுண்டுரோடு கார்டியன் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கலி. சகூஅநு-க்கு - விஷு௵ - கடகயீ.

1881.

Registered Copy Right.

ஸ்ரீ

படத்தின் அட்டவணை.

படத்தின் நெம்பர்.		பக்கம்.
சுகூ.	விராதன் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை எடுத்துத் தோளில தாங்கி நடந்தது...	ருரு0
எ0.	சரபங்கர் பெருமாளைக்கண்டு மகிழ்ந்த பின்பு விண்ணுலகடைந்தது.	ருருங
எக.	பெருமாள் அகஸ்தியமகாமுனியைக்கண்டு பணிந்து அவரால் பூஜிக்கப்பட்டது.	ரு[illegible]
எஉ.	சூர்ப்பணகையை லக்ஷ்மணர் மூக்குச் செவி அறுத்தது.... ...	ருஅச
எங.	பெருமானுக்கும், கரதூஷணாதிகளுக்கும யுத்தம்.	சாகக
எச.	மாரீசன் மானுருக்கொண்டு ஸ்ரீராமரிடத்துக்கேகியது.	சாசச
எரு.	பிராட்டியாரிடம் இராவணன் முனிவேடம் பூண்டு வந்து எடுத்துக்கொண்டோடியது.	சாருச
எசா.	இராவணனுக்கும், ஜடாயுவுக்கும் போர் நடந்தது....	சாசாரு
எஎ.	பிராட்டியார், மகாராஜர் வானரர்களைக்கண்டு ஆபரணங்களை கயட்டியது.	சாஎரு
எஅ.	பிராட்டியாரை ராக்ஷஸ ஸ்ரீகளுடன் அசோகவனத்தில் வைத்தது. ...	சாஎஅ
எகூ.	பெருமாள் ஜடாயுவைக்கண்டு சேதியறிந்து ஸம்ஸ்காரஞ் செய்தது.	எ0க
அ0.	கபந்தன் தோள்களை பெருமாளிளையபெருமாளிருவரும் வாள்களினால் கண்டித்தது.	எ0எ
அக.	சபரியினால் பெருமாளிளையபெருமாள்களை பூஜிக்கப்பட்டது. ...	எகச
அஉ.	பெருமாளிளையபெருமாள் பம்பா புஷ்கரணிக் கெழுந்தருளியது. ...	எகசா

ஸ்ரீராமஜயம்.

ஆரண்யகாண்டத்தின் அட்டவணை.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
௧.	சக்கரவர்த்தித்திருமகனார் ரிஷிகளது ஆச்ரமங்களில் சென்றருளி, அவர்களால் பூஜிக்கப்பட்டனரென்பது....	௫௪௫.
௨.	பெருமாள் காட்டிடையில் விராதனைக் கண்டது.	௫௪௭.
௩.	விராதன் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை எடுத்துத் தோளில்தாங்கி நடந்தது.	௫௫௦.
௪.	பெருமாளும் இளையபெருமாளும் விராதனைக் கொலைசெய்து புதைத்தருளியது.	௫௫௧.
௫.	சரபங்கர் பெருமாளைக்கண்டு மகிழ்ந்தபின்பு விண்ணுலக மடைந்தது.	௫௫௩.
௬.	பெருமாள் சரணமடைந்த ரிஷிகளுக்கு அபயமளித்தது. ...	௫௫௬.
௭.	பெருமாள் ஸுதீக்ஷ்ணமுனிவரால் பூஜிக்கப்பட்டது.	௫௫௭.
௮.	பெருமாள் ஸுதீக்ஷ்ணமுனிவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டது.	௫௫௯.
௯.	பிராட்டியார் பெருமாளை நோக்கி, அரக்கர்களைக் கொலைசெய்வது தருமமோவென்று வினவி யருளியது.	௫௬௦.
௰.	பெருமாள் பிராட்டியார்க்கு ராக்ஷஸஸம்ஹாரம் தருமமென வருளிச்செய்தது.	௫௬௩.
௰௧.	பெருமாள் ரிஷிகளது ஆச்ரமங்களைச் சுற்றிக்கொண்டு, மீளவும் சுதீக்ஷ்ணாச்ரமம் வந்து, அங்கிருந்து அகஸ்தியாச்ரமத்திற் கெழுந்தருளியது.	௫௬௫.
௰௨.	பெருமாள் அகஸ்தியமஹாமுனியைக்கண்டு பணிந்து அவரால் பூஜிக்கப்பட்டது.	௫௭௦.
௰௩.	பெருமாள் அகஸ்தியமுனிவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு பஞ்சவடிக்குப் புறப்பட்டது.	௫௭௩.
௰௪.	பெருமாள் பஞ்சவடிக்குப் போகும்வழியில் ஜடாயுவைக் கண்டது.	௫௭௫.
௰௫.	பெருமாள் இளையபெருமாளால் பஞ்சவடியில் கட்டப்பட்ட பர்ணசாலையில் பிராட்டியாருடன் எழுந்தருளியிருந்தது.	௫௭௭.
௰௬.	பெருமாள் ஹேமந்தகாலத்தில் பரதாதிகளை நினைந்துகொண்டு கோதாவரியில் நீரிலாடியது.	௫௭௯.
௰௭.	சூர்ப்பணகை பெருமாளைக்கண்டு காமுற்றுப் பதியாகும்படி வேண்டியது.	௫௮௨.
௰௮.	ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் சூர்ப்பணகையை யலைத்து மூக்குச் செவிகளை யரிந் தோட்டிவிட்டது....	௫௮௪.
௰௯.	சூர்ப்பணகை பெருமாளிடத்துக்குப் பதினாலாயிரம் ராக்ஷஸர்களை அழைத்துக்கொண்டு வந்தது.	௫௮௬.
௨௰.	பெருமாள் பதினான்கு படைத்தலைவர்களையுங் கொலைசெய்தருளியது.	௫௯௮.
௨௧.	சூர்ப்பணகை கரனை மீளவும் போர்செய்யத் தூண்டியது.	௫௯௯.
௨௨.	கரன் பெருமாள்மேல் போர்செய்யப் படையெடுத்தது. ...	௬௦௦.
௨௩.	கரனுக்கு வழியில் அவசகுனங்களாகியது.	௬௦௨.
௨௪.	பெருமாள் போர்செய்ய சன்னத்தராகியருளியது.	௬௦௪.
௨௫.	பெருமாளுக்கும் அரக்கர்களுக்கும் தமுலயுத்தம் நிகழ்ந்தது. ...	௬௦௬.
௨௬.	பெருமாள் தூஷணன் முதலிய சேனைகளைக் கொலைசெய்தருளியது.	௬௦௮.
௨௭.	பெருமாள் திரிசிரனுடைய தலைகளை யரிந்தருளியது.	௬௰.
௨௮.	பெருமாளுக்கும் கரனுக்கும் போர் விளைந்தது.	௬௧௧.

சருக்கம்	விஷயம்.	பக்கம்.
௨௯.	பெருமாள் கரனுடைய கதையைப் பிளந்தருளியது. ...	௬௧௨.
௩௰.	பெருமாள் கரனைக் கொலைசெய்து ஸாதுஜனங்களைப் பாதுகாத்தளித்தருளியது.	௬௧௫.
௩௧.	இராவணன் கராதிகளிறந்ததை யகம்பனன் சொல்லக்கேட்டுச் சீதையை யபஹரிப்பதற்கு மாரீசனிடஞ் சென்று அவன் வாக்கியத்தினால் அதைவிட்டு மீண்டு லங்கை சேர்ந்தது....	௬௨0.
௩௨.	சூர்ப்பணகை யோடி வந்து ராவணனைக் கண்டது....	௬௨௪.
௩௩.	சூர்ப்பணகை ராவணனை யரசாக்ஷி நன்கு செய்கின்றிலையென இகழ்ந்தது.	௬௨௫.
௩௪.	சூர்ப்பணகி ராவணனுக்குப் பெருமாளிளையபெருமாள்இவர்களுடைய திறமையையும், பிராட்டியாரின் அழகினையும் அறிவித்துச் சீதையை யபஹரிக்கும்படி யுரைத்தது.	௬௨௮.
௩௫.	ராவணன் தேரூர்ந்து கடலையும், ஸுபத்திரமென்னும் ஆலமரத்தையும் பார்த்துக்கொண்டுபோய் மாரீசனைக் கண்டது.	௬௩0.
௩௬.	ராவணன் மாரீசனை மானுருக்கொண்டு சீதையைத் தான் எடுத்து வருவதற்கு உதவிசெய்யென உரைத்தது.	௬௩௨.
௩௭.	மாரீசன் ராவணனுடன் ஸீதாபிராட்டியாரை யபஹரிப்பாயாகில், எல்லாவரக்கர்களுடனும் நீ யழிவாயாதலின், இவ்வெண்ணத்தை விட்டு வாழென்று இதமுரைத்தது....	௬௩௪.
௩௮.	மாரீசன் ராவணனுடன் விசுவாமித்திரயாகத்தில் தான்பட்டபாட்டை யுரைத்துப் பெருமாளுடன் நீ பகை கொள்வாயாகில், சித்தமாக அழிவாயென உரைத்து மறுத்தது.	௬௩௬.
௩௯.	மாரீசன் ஸ்ரீராமபிரான் பஞ்சவடியி லெழுந்தருளியிருக்கையிலும், இரண்டு ராக்ஷஸர்களுடன் மானுருக்கொண்டு ஸ்ரீராமபிரானைக் கொலைசெய்ய முயன்று, ஸ்ரீராமபாணத்தால் மற்றிருவரிறக்கத் தான் ஓடிவந்துவிட்டேனென ராவணனுக்குரைத்து அவனை மறுத்தது....	௬௩௮.
௪௰.	இராவணன் மாரீசனை இகழ்ந்து வெருட்டித் தன் மதப்படி துணையாகும்படி யுடன்படுத்தியது.	௬௪0.
௪௧.	மாரீசன் மீளவும் ராவணனை நோக்கித் துயர்ந் துரைத்தது. ...	௬௪௨.
௪௨.	மாரீசன் மானுருக்கொண்டு ஸ்ரீராமபிரானிட மேகியது.	௬௪௪.
௪௩.	இளையபெருமாள் அம்மானை மாரீசனே யாகவேண்டுமென்றுரைசெய்தும், பெருமாள் பிராட்டியாரது சொற்படி யதைப்பிடிக்கத் திருவுளங்கொண்டு, பிராட்டியாரைப் பாதுகாத்திருக்கும்படி திருத்தம்பிக்குக் கட்டளையிட்டது.	௬௪௬.
௪௪.	பெருமாள் நெடுந்தூரம் தொடர்ந்து மானுருக்கொண்ட மாரீசனைக் கொலைசெய்து மீண்டருளியது....	௬௪௯.
௪௫.	பிராட்டியார் இளையபெருமாளை முனிந்தவள்போல வன்மொழி மொழிந்தனுப்ப, இளையபெருமாளும் பிராட்டியாரைத் தனியே விட்டுப் பெருமாளை நோக்கி, எதிராகச் செல்லுதல்.... ...	௬௫௧.
௪௬.	பிராட்டியார் முனிவேஷம்பூண்டு வந்த ராவணனை முனியெனவே எண்ணிப் பூசைசெய்தருளியது...	௬௫௪.
௪௭.	இராவணன் பிராட்டியார் வாக்கியத்தைக்கேட்டு முனிந்து, தன் திறமையினையும், உறைவிடத்தையும், நற்செல்வத்தையுங்கூறி, அவரைத் தனக்கு மனைவியாகும்படி மொழியப் பிராட்டியாரும் அவனைச் சீறி இகழ்ந்தது.	௬௫௬.
௪௮.	இராவணன் சினமுற்றுத் தன் திறமையை யுரைத்துத் தன்னைத்தானே புகழ்ந்து, தன்னைச் சேரும்படி யுரைக்கையில், பிராட்டியாரும் இருமடங்கு முனிந்து, அவனை எதிர்த்துரைத்திகழ்ந்தது.... ...	௬௬௰.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
௪௯.	இராவணன் நிஜரூபங்கொண்டு பிராட்டியாரை யெடுத்தோடுகையில், பிராட்டியார் நடுவழியில் ஜடாயுவைக்கண்டு ஸ்ரீராமபிரானுக்கு அறிவிக்கும்படி யருளிச்செய்தது.	௬௬௨.
௫௰.	ஜடாயு ராவணனுக்கு இதமுரைத்தும் கேளாமையால், போர்செய்ய தகைந்தது.	௬௬௫.
௫௧.	ஜடாயு ராவணனைப் பலவாறாக வருத்தித் தான் அவனால் அறுப்புண்டு பிராட்டியாரால் சோகிக்கப்பட்டது.	௬௬௮.
௫௨.	மீளவும் ராவணன் ஸீதாபிராட்டியாரை யெடுத்துக்கொண்டு செல்லுகையில், எல்லா உயிர்களும் துன்பமடைந்து வருந்தியது. ...	௬௭௧.
௫௩.	பிராட்டியார் ராவணனை இகழ்ந்தது.	௬௭௩.
௫௪.	பிராட்டியார் மஹாராஜர் முதலிய ஐந்து வானரர்களைக்கண்டு ஆபரணங்களைக் கட்டி நழுவவிட்டதும், ராவணன் பிராட்டியாரை யசோகவனத்தில்வைத்து ராக்ஷசிகளைப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டது.	௬௭௫
௫௫.	ராவணன் தன் செல்வங்களைப் பிராட்டியார்க்குக் காட்டித் தன்னைச் சேரும்படி வேண்டியது.	௬௭௬.
௫௬.	பிராட்டியார் ராவணனையிகழ்ந்து பெருமாளைப் புகழ்தலும், ராவணன் பிராட்டியார்க்குப் பன்னிரண்டுமாதம் கெடுவிட்டு வெருட்டி யசோகவனத்தில் வாழும்படி சேர்த்தது.	௬௭௮.
௫௭.	பெருமாள் மாரீசனைக் கொலைசெய்து மீண்டு வருகையில், இளையபெருமாள் வந்து விட்டதையும், அபசகுனங்களையும் கண்டு பிராட்டியார்க்குத் தீங்குநேர்ந்திருக்குமென்று சிந்தையுற்றது. ...	௬௮௧.
௫௮.	பெருமாள் இளையபெருமாளுடன் திரும்பிவந்து பிராட்டியாரை எங்குங்காணாமல் மிகவும் துயருற்று வருந்தியது.	௬௮௨.
௫௯.	பெருமாள் இளையபெருமாளை நோக்கி, ஏன் ஸீதையைவிட்டுத் தனியே வந்தனையென்று வினவியருள, இளையபெருமாள் பிராட்டியாருரைத்த வன்மொழியால் வந்தேனென உரைத்தருளியது. ...	௬௮௩.
௬௰.	பெருமாள் பிராட்டியாரைக்காணாமல் தேடி யலைந்து வருந்தல். ...	௬௮௫.
௬௧.	பெருமாள் பிராட்டியாரைக்காணாமல் புலம்பியதும், இளையபெருமாள் தேற்றியதும்.	௬௮௮.
௬௨.	பெருமாள் பிராட்டியாரைக்காணாமல் சோகக்கடலில் மூழ்கிப் பலவாறாகப் புலம்பி உயிரை விடுவேனென வருளிச்செய்ய இளையபெருமாளும் மிகத் துன்புற்றது.	௬௮௯.
௬௩.	இதுவும் பெருமாள் இளையபெருமாளுடன் பலவிதமாகப் புலம்பி வருந்தியது.	௬௯௧.
௬௪.	பெருமாள் பிராட்டியார் போனவழியை யுரைக்கும்படி கோதாவரி பறவை விலங்கு முதலியவற்றை வினவ, விலங்குகள் தென்றிசையை நோக்கிச் செல்ல, இளையபெருமாள் அதை யறிந்து, பெருமாளுடன் அத்திசையிற்செல்லுகையில், ராவண ஜடாயுக்கள் போர்க்களத்தைக்கண்டு நிற்க; பெருமாள் ஸீதை இறந்ததாக நினைந்து சீறி யருளியது.	௬௯௨.
௬௫.	இளையபெருமாள் பெருமாளைச் சமாதானப்படுத்திச் சினந்தணியச் செய்தது.	௬௯௬.
௬௬.	இதுவுமது.	௬௯௭.
௬௭.	பெருமாளிளையபெருமாளுடன்திரிந்து ஜடாயுவைக்கண்டு பிராட்டியாரது விருத்தாந்தத்தையறிந்து துன்பப்பட்டருளியது. ...	௬௯௯.
௬௮.	ஜடாயு சீதாபிராட்டியாரது சரிதத்தைச் சுருக்கமாக விடையுரைத்து மரணமடைகையில், பெருமாள் அவர்க்கு நல்லுலகங்களில் வாழும்படி அருள்செய்து, ஸம்ஸ்காரஞ்செய்து முடித்தருளியது. ...	௭௱௧.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
சுகூ.	பெருமாளிளையபெருமாள் இருவரும் பற்பல காடுகளில் திரிந்து, அயோமுகியென்னும் அரக்கியைச் சூர்ப்பணகையைப்போலச் செய்து, கபந்தாசுரனுடைய கைகளின் நடுவி லகப்பட்டுக்கொண்டது.	எளச.
எய.	பெருமாளிளையபெருமாளிருவரும் கபந்தனுடைய தோள்களிரண்டினையும் வாள்களினலரிந்தருளியது....	எளஎ.
எக.	கபந்தன் தன் முன்வினையை யுரைசெய்தது.	எளஅ.
எஉ.	கபந்தன பெருமாளால் கொளுத்தப்பட்டு, திவ்யரூபத்தையடைந்து சுக்கிரீவனுடன் நட்புச்செய்துகொண்டருளிப் பிராட்டியாரைத் தேடி யடையும்படி பெருமாளுக் குரைத்தது.	எளய.
எங.	கபந்தன் பெருமாளுக்கு நல்வழிகாட்டித் தானும் வானேறியது. ...	எகஉ.
எச.	பெருமாள் இளையபெருமாளுடன் சபரீயினல் பூஜிக்கப்பட்டு அவளை வானேற்றி யருளியது.	எகச.
எரு	பெருமாளிளையபெருமாளுடன் சபரியின் ஆசிரமத்தினின்றும் பம்பா புஷ்கரிணிக் கெழுந்தருளியது....	எகரு.

ஆரண்யகாண்டத்தின் அட்டவணை·

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம꞉.

ஸ்ரீரகுநந்தன பரப்ரஹ்மணேநம꞉.

ஸ்ரீமத்வால்மீகிராமாயணம்

ஆரண்யகாண்டம்.

தியானஶ்லோகம்.

నీలాంభోదనిభంనిశాచరచమూ నిర్మూలనోద్యోగినం
కోదండంశరధింశరంసునిశితం నిస్త్రింశమాబిభ్రతం ॥
వైదేహీంసహితంజటాలమజినం చీరంవసానంశుభం
తాదృక్షేణచలక్ష్మణేనసహితం శ్రీరామచంద్రంభజే ॥

நீலாம்போதநிபம்நிசாசரசமூ நிர்மூலநோத்யோகிநம்
கோதண்டம்சரதிம்சரம்ஸுநிசிதம் நிஸ்த்ரிம்சமாபிப்ரதம்.
வைதேஹீஸஹிதம்ஜடாலமஜிநம் சீரம்வஸாநம்சுபம்
தாத்ருக்ஷேணசலக்ஷ்மணேநஸஹிதம் ஸ்ரீராமசந்த்ரம்பஜே.

ப்ரஹ்மாண்ட புராணத்தில் நூற்றெழுபத்து நான்காவது அத்தியாயத்தில் (காகபக்ஷதரந்தேவம் வநமாலாவிபூஷிதம், ஸ்ரீராமம்பாலகந்த்யாயேத் பால காண்டே முனீஶ்வரா꞉; ஸீதாதேவியுதம்வீரம் ஸர்வாபரணபூஷிதம், ஸீதாபதிம் ஹரிந்த்யாயே தயோத்யாகாண்ட உத்தமே; ஜடிலஞ்சீரவஸநந் தண்டகாரண்ய வாஸிநம், முனிவேஷதரம்த்யாயே தாரண்யேகாண்ட உத்தமே; ஸுக்ரீவாதியுதம் ஸ்ரீஶம்பஸ் மாங்காவ்ருதமீஶ்வரம், மஹேஶ்வரஸமந்த்யாயேத் கிஷ்கிந்தாகாண்ட உத்தமே; சந்த்ரபிம்பஸமாகாரம் வாஞ்சிதார்த்த ப்ரதாயகம், ஹநூமத்ஸேவிதந்த யாயேத் சுந்தரோகாண்ட உத்தமே; ராவணாதிநிஹந்தாரம் ப்ரஹ்மருத்ராதிஸேவிதம், ஸீதாதேவியுதம்யௌத்தே ராமந்த்யாயேத் த்ருதம்புஜே; அகஸ்த்யாதிமுனிஸ்துத்யம் வாஞ்சிதார்த்த ப்ரதாயகம், ஸர்வதேவோத்தரம்த்யாதே துத்தரோகாண்ட உத்தமே;) என்று காண்டங்கள் தோறும் தியான பேதங்கள் கூறப்பட் டிருக்கின்றமையின், அயோத்தியாகாண்டத்தி லெழுதப்பட்ட சுலோகமே ஆரண்யகாண்டத்தின் தியான ஶ்லோகமெனவுணர்க.

பாலகாண்டத்தின் தியானஸ்லோகம்.

ఖేలాన్దోళితకాకపక్షలసితం నీలాళకంబాలకం
లోలాంగంవనమాలికామధిగళం డోలాయితాంబిభ్రతం॥
ఫాలాఞ్చన్మృగనాభిసారతిలకం కాలాన్తకాద్యైర్నుతం
లీలామానుషవిగ్రహంరఘుపతిం శ్రీలాఞ్ఛితంచిన్తయే॥ (౧)

கேலாந்தோளிதகாகபக்ஷலஸிதம் நீலாளகம்பாலகம்
லோலாங்கம்வநமாலிகாமதிகளம் டோலாயிதாம்பிப்ரதம்.
பாலாஞ்சன்ம்ருகநாபிஸாரதிலகம் காலாந்தகாத்யைர்நுதம்
லீலாமானுஷவிக்ரஹம்ரகுபதிம் ஸ்ரீலாஞ்சிதஞ்சிந்தயே. (க)

அயோத்தியாகாண்டத்தின் த்யானஸ்லோகம்.

కన్దర్పాభంకమలనయనం కంబుకణ్ఠంకటాక్షైః
కారుణ్యార్ద్రైఃకలితవచసాం కామితంకల్పయన్తం॥
భూషాభేదైర్విషదుచిరైః భూషితంభూషితాఙ్గ్యా
సీతాదేవ్యాదరహసితయా సేవితంరామమీడే॥ (౨)

கந்தர்ப்பாபம்கமலநயநம் கம்புகண்டம்கடாக்ஷை꞉
காருண்யார்த்ரை꞉கலிதவசஸாம் காமிதம்கல்பயந்தம்.
பூஷாபேதைர்திவிஷதுசிதை꞉ ர்பூஷிதம்பூஷிதாங்க்யா
ஸீதாதேவ்யாதரஹஸிதயா ஸேவிதம்ராமமீடே. (உ)

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஆரண்யகாண்டம்.

முதலாவது சருக்கம்.

சக்கரவர்த்தித் திருமகனார் ரிஷிகளது ஆஶ்ரமங்களிற் சென்றருளி அவர்களால் பூஜிக்கப் பட்டனரென்பது.

அநந்தரம் மிகவுந் தீரராகிய சக்கரவர்த்தித் திருமகனார் ஸீதா லக்ஷ்மணர்களுடன் தண்டகாரணியத்தி னுட்புகுந்து, தூப்புற்களாலும், மரவுரிகளாலும் நிறைந் துள்ளனவும், பிரஹ்ம தேஜஸ்ஸினல் விளங்கப் பட்டனவும், விண்ணிடையில் விளங்குகின்ற ஸூரியமண்டலம்போலக் கண்ணுற்றுப் பார்ப்பதற் கரியனவும், ஸர்வபூதங்களுக்குந் தஞ்சமாயினவும், மிகச் சுத்தி செய்யப்பட்ட அங்கணங்களை யுடையனவும், பலவகை மிருகங்களாலும், பலவகைப் பறவைகளாலும் சூழப்பட்டனவும், யாவராலும் பூஜிக்கப்பட்டனவும், நிரந்தரம் ஆடுகின்ற அப்ஸரஸர்களை யுடையனவும், விசாலங்களாயுள்ள அக்கினிஹோத்திர மாளிகைகளாலும், ஹோமபாத்திரங்களாலும், மான் புலிகளின் அஜினங்களாலும், யாகவேதியில் பரப்பப்பட்ட தூப்புற்களாலும், பலாசின் ஸமித்துகளாலும், பூர்ணகும்பங்களாலும், காய் கனி கிழங்குகளாலும் விளங்குகின்றனவும், காட்டிலுள்ள பற்பல சிறந்த விருக்ஷங்களால் சூழப்பட்டனவும், பூதபலி வைஶ்வ தேவாதிகளினல் பூஜிக்கப்பட்டனவும், வேதகோஷங்களினு லொலிக்கப்பட்டனவும், காட்டிலுள்ள பலவகை மலர்களாலும், கமலங்களுடன் கூடிய தடாகங்களினுலும், மணங்கமழ்ந்தும், குளிர்ந்து முள்ளனவும், ஐம்புலன்களை வென்றவர்களும், மரவுரி மனையுரிகளை யுடுத்தவர்களும், வெய்யோன் வைஶ்வாநரர்களைநிகர்த்தவர்களும், உண்டிசுருங்கினவர்களும், பிரஹ்மத்தை யறிந்தவர்களும், நெடுநாள் வாழ்ந்தவர்களுமாகிய முனிவர்களினல் திகழப்பட்டனவுமாகிய முனிவர்களின் ஆஶ்ரம மண்டலங்களைக் கண்ணுற்று, கட்டிய நாணை யவிழ்த்துக் கார்முகத்தைத் தோளில் பூட்டிக்கொண்டு விநயத்துடன் அங்கங்கே எழுந்தருளினர். திவ்விய ஜ்ஞானமுடைய அங்கங்குள்ள மஹரிஷிகளும், சந்திர னுதயமானுற்போலத் திகழ்ந் தெழுந்தருளிய பெருமாளையும், பிராட்டியாரையும், இளையபெருமாளையுங் கண் டெழுந் தெதிர்கொண்டு வந்து, இவர்

களது சேர்த்தியையும், அழகினையுங் கண்டு தீங்குவருமோவென் றச்சங் கொண்டு தீமை நீங்கி நன்மையுற்றுக் கூடி வாழ்கவென் ருசீர்வாதஞ் செய் தழைத்துக்கொண்டு வந்து பூஜித்துப் பெருமாளுடைய ஸௌகுமார்யத்தையும், அழகினையும், அவயவங்களின் இசைவையும், காந்தியையும், சிங்காரத்தையும் கண்டு வியப்புற்று, பிராட்டியாரையும், இளையபெருமாளையுங் கண்டு கண் கொட்டாமல் பார்த்துத் திகைத்து நின்றனர்கள். பின்பு முதன்மையாயுள்ள முனிவர்கள் பெருமாளைப் பர்ணசாலையி லெழுந்தருளப்பண்ணி, கந்தமூலபலங்களையும், அர்க்ய பாத்யாசமனீயங்களையும் கொண்டு வந்து விதியின்படி பூஜைசெய்து அவரை நோக்கி, ஸ்ரீராமசந்திரரே! நீரே எங்களுடைய தருமங்களைப் பாதுகாப்பவரும், யாங்கள் தஞ்சமடையத் தக்கவரும், எங்களால் பூஜை செய்துகொள்ளத் தக்கவரு மாகின்றீர்; துஷ்டநிக்ரஹ சிஷ்டபரி பாலனஞ் செய்து உலகங்களைப் பாதுகாக்கின்ற அரசனே குருவாகின்ற னல்லனே? (நாவிஷ்ணுః ப்ருதிவீபதிః) என்றிருப்பதால் விஷ்ணுவின் அம்சமின்றிப் பாதுகாக்குங் குணமுள தாகாமையினாலும், (அஷ்டாபிர் லோகபாலாநும் மாத்ராபிர்நிர்மிதோந்ருபః) என்றிருப்பதால் இந்திர னுடைய அம்சமுடைய னாதலாலேதானே போகங்களை யனுபவிக்கின்ற மையாலும், இரதராஜனும் பூஜைக் குரிய னாகின்றான்; ஸ்ரீமந்நாராயண னுடைய நாலிலொன்று அம்சமுடைய ராகியே யன்றோ? தேவர் அவ தரித் திருக்கின்றீர்; ஆதலின், நீர் உலகங்களைப் பாதுகாத்து உலகங்களி னால் வணங்கப்பட்டவராகி, எல்லாப் போகங்களையும் அநுபவிக்கின்றீ ரென்பதற் கையமுளதோ? தேவர் திருமாளிகையி லெழுந்தருளி யிருக் கினும், காட்டி லெழுந்தருளி யிருக்கினும், நித்ய விபூதியி லிருக்கினும், லீலாவிபூதியி லிருக்கினும், தேவரே எங்களுக் கிறையவர்; ஆதலின், உம்முடைய நாட்டிலுள்ளவர்களும், ஸம்ஸாரவிஷயங்களைத் துறந்து, உம் முடைய விஷயத்திலேயே குடிகொண்ட மன முடையவர்களும், காமக் குரோதங்களை வென்றவர்களும், பிறரைச் சபித் தழிக்கும் செயலை விட்ட வர்களும், (தாஸபூதாஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மானః பரமாத்மனః) என் கிறபடி உம்மைத் தொண்டு பூண்டவர்களும், உமக்குப் பிள்ளைகள் போன்றவர்களுமாகிய எங்களை நீர் பாதுகாத் தருளக் கடவீரென்று கைகுவித்துக்கொண்டு வேண்டிப் பற்பல ஆகாரங்களினால் ஸீதா ராம லக்ஷ்மணர்களைப் பூஜித்தனர்கள். மற்றுமுள்ள முனிவர்களும் விதியின் படி பெருமாளைப் பூஜித்து மகிழ்ந்தனர்கள்.

ஆரண்யகாண்டத்தில் முதலாவது சருக்கம்

முற்றிற்று.

இரண்டாவது சருக்கம்.

பெருமாள் காட்டிடையில் விராதனைக் கண்டது.

அநந்தரம் பெருமாள் அன்றிரவை யங்குப் போக்கி, மறுநாளுதயத்தில் முனிவர்களைப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு பலவகை மிருகங்கள் நிறைந்தும், புலி கரடி செந்நாய் முதலியவைகள் சூழ்ந்தும் முறிக்கப்பட்ட மரஞ் செடி கொடிகளை யுடையதும், காணற் கரிய மடுவுகளை யுடையதும், கூவுகின்ற பற்பல பக்ஷிகளை யுடையதும், பயந் தருவதுமாகிய காட்டினுட்சென்று, ஸீதா லக்ஷ்மணர்களுடன் கூடி யங்கே மலையின் சிகரம்போலப் பருத் துயர்ந்தவனும், கோரமாகக் கூவுகின்றவனும், மிகவும் ஆழ்ந்த கண்களை யுடையவனும், பெரிய தலையை யுடையவனும், பருத்த வயிற்றை யுடையவனும், அருவருப் புறத் தக்கவனும், பயங்கரனும், குருதியினால் நனைக்கப்பட்ட புலித்தோலை யுடுத்தவனும், வாயினைத்திறந்து உலகினை விழுங்க முயலும் யமன் போன்றவனும், எஃகினால் செய்யப்பட்ட நெடிய சூலத்தில் மூன்று சிங்கங்களையும், நான்கு புலிகளையும், இரண்டு செந்நாய்களையும், பத்து மான்களையும், தந்தங்களுடன் கூடிய பெரிய யானையின் தலை யொன்றினையும் கோத் தேந்திக்கொண்டு சிங்கநாதம் செய்பவனுமாகிய விராதனென்னும் ராக்ஷஸனைக் கண்டனர். அந்த ராக்ஷஸனும் இவர்களைக் கண்டு சினங்கொண்டு, காலாந்தகன்போல வோடி வந்து சீதையை இடையில் பற்றி எடுத்துக்கொண்டு திரும்பி யொதுங்கி, ஸ்ரீராம லக்ஷ்மணர்களை நோக்கி, மானிடர்களே! நீங்கள் யாவர்கள் ஜடைதிரித்து மரவுரியுடுத்து முனிவேடம் பூண்டு தண்டகாவனத்தை யடைந் திருப்பவர்க ளாயினும், பெண்ணொருத்தியை யுடன் அழைத்துக்கொண்டு வந்திருக்கின்றீர்கள்; என்னுடைய இவ்வனத்தை யடைந்தும் நீங்கள் உய்வீர்களோ? நீங்கள் தவசிகளா யிருக்கையில், பெண்ணுடன் வாழ்வ தெவ்வண்ண மொக்கும்? இவ்வண்ணம் நீங்கள் அதருமஞ்செய்து பாவிகளாகின்றமையின், முனி தூஷகர்க ளாகின்றீர்கள்; நீங்கள் யாவரோ உரைசெய்ம்மின்; யான் விராதனென்னுமரக்கன், நானிவ்விடத்தில் ரிஷிகளது மாம்ஸங்களைப் புஜித்துத் திரிகின்றேன்; யான் உங்களையும் கொலை செய்து, உங்களுடைய ரத்தத்தையும் பானஞ் செய்வேன்; இந்தப் பெண் எனக்கே பாரியை யாகுவாள்; என்றிவ்வண்ணம் அச்சமற்றுச் செருக்குற்று மொழிந்தனன். ஸீதாபிராட்டியாரும் அம்மொழியைக்கேட்டுப் பெருங்காற்றில் வாழைமரம்போல நடுங்கினள். இவ்வண்ணம் விராதனால் அபஹரிக்கப்பட்டு நடுங்குகின்ற சீதையைப் பெருமாள் கண்ணுற்று மிகத் துன்பமடைந்து இளையபெருமாளை நோக்கிப் பாராய் லக்ஷ்மணா! ஜனகமஹாராஜன் திருமகளும், தசரத

சக்கரவர்த்தி மருமகளும், என்னுடைய பாரியையுமாகியும், ஸீதை விராதனால் அபஹரிக்கப்பட்டு வருந்துகின்றனள்; நாம் இவ்வகையாகிய தீமைகளையுற் றிடப்போமென்பதை யறிந்தேயன்றோ? கைகேயி என்னைக் காட்டி லுறையும்படி வரங்கேட்டனள்; அவளுடைய கோரிக்கை இப்பொழுதே விரைவில் நிறைவேறி விட்டது; கைகேயி தீர்க்காலோசனையுடைய ளாதலாலேயே தன் மகனுக்கு ராஜ்ஜியம் வாய்ப்பதுமாத்திரத்தில் த்ருப்தியடையாமல் யான் காடு செல்லும்படிச் செய்தனள். இப்பொழுது கைகேயி தன் மன மீடேறி மகிழ்ந்தனள். ஸீதை பரபுருஷனால் பரிசிக்கப்பட்டன ளென்பதினும், எனக்குக் கடுந்துயர முளதோ? யான் தந்தையையு மிழந்து, ராஜ்ஜியத்தையுந் துறந்து, பாரியையும் பறிகொடுக்கும்படி நேர்ந்த தந்தோ? என்றிவ்வண்ணம் கண்ணீர் ததும்பத் துன்புற் றுரை செய்கையில், இளையபெருமாள் அதுகேட்டு மந்திரத்தினால் தடையுற்று நெட்டுயிர்ப்பு விடுகின்ற நச்சரவம்போலச் சினங் கொண்டு பெருமாளை நோக்கி, எம்மையனே!—

అనాథఇవభూతానాం నాథస్త్వంవాసవోపమః
మయాప్రేష్యేణకాకుత్స్థ కిమర్థంపరితప్యసే ||

அநாதஇவபூதாநாம் நாதஸ்த்வம்வாஸவோபமஃ
மயாப்ரேஷ்யேணகாகுஸ்த்த கிமர்த்தம்பரிதப்யஸே.

தேவர் ஸர்வபூதங்களுக்கும் நாதனாகிய ஸ்ரீமந்நாராயணனாகியும், இந்திரனுக்கு நிகரான பராக்ரம முடையவராகியும், திறமையற்றவன் போல ஏன் தவிக்கின்றீர்; தேவருக்குத் தொண்டனாகிய யானிருக்கையிலும், ஸந்தாப முறுவ தொக்குமோ? இந்த விராதன் சினமுற்ற என்னாலெய்யப்பட்ட கணையினா லடிபட் டிறந்து வீழ்கையில், இவனுடலிலுள்ள ரத்தத்தை இந்தப் பூமியே பானஞ் செய்யப் போகின்றது; முன் யான் பரதனிடத்திற்கொண்ட சினத்தை இப்போழ்து இந்த விராதனிடத்தில் விடுவேன்; இப்பொழுது என்னால் தொடுத் தெய்யப்பட்ட சரம் விராதன் மார்பில் விழக் கடவது; அவன் மார்பினின்றும் உயிர் வெளியிற் செல்லக் கடவது; அவனு முடனே தரையிற் சுழன்று வீழக் கடவன்; என்றுரைத்துத் தேற்றினார்.

ஆரண்யகாண்டத்தில் இரண்டாவது சருக்கம்
முற்றிற்று.

பெருமாள் பிராட்டியார் இளையபெருமாள் இவர்கள் துன்புறுவது மனுஷ்ய பாவனையென்று முன்பே கூறி யிருக்கின்றோம்; பிராட்டியாரை விராதன் தொட்டமையால் கற்பழியாதோவெனில், அழியாது; பெண்களாக ஒருவனைக் காமித்துத்

தொடுவார்களாயின், கற்பழியுமே யல்லது, அபச்சை யடைந்தாலொழிந்தில் இவ்வாகி னிஷ்டமின்றி, வலுவில் பிறர்களால் தொடப்பட்டமாத்திரத்தில் கற்பழியாது; ஆகையாலேயே சுந்தரகாண்டத்தில் பிராட்டியார் ஸ்ரீமதாஞ்சநேயர் முதுகி லேறிக் கொண்டு ஸ்ரீராமபிரானிடம் சேர்வதற் குடன்பட்டிலர்; இவ்வண்ணமே யங்குப் பிராட்டியார் உரைசெய் திருக்கின்றனர். (ஸராமம் லக்ஷ்மணம்) என்பது முதலா யுள்ள சுலோகங்களின் உண்மையாயுள்ள பொருள் யாதெனில், அங்கோ என்பதற்கு இடையென்னும் பொருளுமன்று, மடியென்னும் பொருளுமன்று, ஸமீபமென்பது பொருள்; (அங்கேநாதாய) என்பதற்கு, அங்கே அநாதாய என்று பதம், சீதையை எடாமல் என்று பொருள்; (ஸடார்யௌ) ஸபையில் பூஜிக்கத்தக்கவர்கள்; (க்ஷீண ஜீவிதௌ) பிறருயிரை மாய்த்தவர்கள்; (சதம்பாபௌ, முனிதூஷகௌ) ஏன் பாவிக ளாகுவீர்கள்; (அதர்மசாரிணௌ) அதர்மத்தை நாசம் செய்பவர்கள்; (பாபயோ:) பாவஞ்செய்கின்ற கைகளால்; (பார்யா) காந்தியினுற் சிறந்தவள்; (பரஸ்ப்ர்சாத்) விராதன் சமீபத்திற் சென்றிருப்பதால், என்று சிலர் பொருளுரைத்துப் பெருமானை விராதன் புகழ்ந்ததாகவும், ஸீதையைப் பரிசிக்காமலே நின்றதாகவும் கூறுகின்றனர் கள். இப்பொருள் நியாயமாகத் தோற்றுது; கிரமமான பொருளில் குற்ற மில்லா மையின், இவ்வளவு பிரயாஸம் பயனற்றது; ஸம்ப்ரதாயார்த்தம் ஏதெனில், பிராட்டி யார் விராதனிடத்தில் யாதுசெய்வானோ வென் றச்சங்கொண்டு நடுக்குற்றிலர்; மகன் கொடியனுயிருக்கினும், தாய் அம்மகன்மீ தருள்கொண்டு, இவன் பர்த்தாவினுல் சிக்ஷிக்கப்படுவனே என்றஞ்சி நடுக்குறுவதை யுலகில் யாம் கண்ணுல் கண்டிருக் கின்றோ மல்லோமோ? இவ்வண்ணமே லோகமாதாவாகிய பிராட்டியாரும் விராதன் இவ்வண்ணம் தீச்செயல் புரிந்து பெருமாளால் கொலைசெய்யப்படுவனே என்றச்சங் கொண்டே நடுக்குற்றனள்; ஆகையாலேயே அவனைக் காண்கையிலும், தன்னை யவன் பற்றுகையிலும் அச்சமுற்றிலள்; அவனுடைய கொடிய மொழியைக் கேட்டபின்னே யன்றோ? நடுங்கினள்; ஆதலின், இப்பொருளே யுண்மையெனக் கொள்க.

பெருமாளும் பிராட்டியாரை விராதன் கொண்டுபோய்விடுவனோ என்றாவது, நம்மை இவன் கொலைசெய்து விடுவனோ என்றாவது, அவனைக் கொலைசெய்யுந் திறமை இல்லையே என்றாவது பரிதாப முற்றிலர்; இப்பொழுது யான் ராஜதருமங்களைத் துறந் திருக்கின்றமையின், இப்பொழுது ராஜதருமத்தை யங்கீகரித்து வில்லெடுத் திவனைக் கொலை செய்வது தருமமாகுமோ வென்னும் ஐயத்தினுலும், இவனை யான் கொலைசெய்து விடுவேனோவென்று ஸீதை இவ்வண்ணம் அச்சங்கொண்டு நடுங்கு கையில், இவளை நிராகரித்து அவனை எவ்வண்ணங் கொலைசெய்வேனோ வென்பதினு லும்,பெருமாள் பரிதாபமுற்றனரேயன்றி, வேறில்லை; ஆகையாலேயே பிராட்டியாரை விராதன் எடுத்துக்கொள்ளும்போது துன்புறாமல், பிராட்டியார் நடுங்குவதைக்கண்ட பின், துயரங் கொண்டனர். இளையபெருமாளும் பெருமானை நோக்கித் தேவர் ஸ்ரீமந் நாராயணனே யாதலின், தேவேந்திரன் போலத் தேவரும் மூவுலகங்களுக்கும் நாத ராகி யிருக்கையில், அற்பமாகிய கோஸலராஜ்ஜியத்தை மானிடபாவனையில் துறந் திருக்கினும், அநாதர்போ லாகுவீரோ? நாதரே யாதலின், இவனைக் கொலைசெய்வது தருமமே என்றருளி, மேலும் பிராட்டியார் தாக்ஷிண்யத்தினுலும், தேவர் ஒருவேளை இவனைக் கொல்ல மனமுறீராகில், தேவர்க்குத் தாஸனுகிய அடியேனுக்கு ஆஜ்ஞை செய்வீராகில், யானே இவனைக் கொலை செய்வேனெனவும் விண்ணப்பஞ் செய்தனர். ஆதலின், இதுவே பெருமாள் திருவுளமென்றுணர்க. பெருமாளும் இளையபெருமானை நோக்கி, தம்பி! பாராய்; (விராதாங்கே) விராதனுடைய வாழ்வில் (ப்ரவேசிதாம்)

மூன்றாவது சருக்கம்.

விராதன் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை எடுத்துத் தோளில் தாங்கி நடந்தது.

அநந்தரம் மீளவும் விராதன் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை நோக்கி, மானிடர்களே! நீங்கள் யாவர், எங்குச் செல்லுகின்றீரென யான் கேட்கையிலும், பதிலேன் உரைக்கின்றிலீர்கள்; பதிலுரைமின் என்று வினவினன். பெருமாளவனை நோக்கி, அடா விராதா ! யாங்கள் இக்ஷ்வாகு குலத்திற் பிறந்தவர்கள் ; யாங்கள் நற்செயலினர்களாதலின், இவ்வநத்தை யடைந்து சஞ்சரிக்கின்றனம் ; யாங்கள் உன்னையு மறிய விரும்புகின்றோம் ; நீ யாவன் ? இவ்வரணியத்தில் ஏன் திரிகின்றனை ; உரையாயென் றருளிச்செய்தனர். விராதனும் பெருமாளை நோக்கி, ராஜனே ! யானுரைக்கின்றேன் கேளாய், யான் ஜயனென்பவனுக்குச் சதஹ்ரதை என்பவளிடத்திற் பிறந்தேன் ; என் பெயர் விராதனென்பார்கள் ; யான் தவஞ்செய்து பிரஹ்மதேவனிடத்தில் சஸ்திரங்களினால் அழிவுறாத வாறும், பிளப்புஞ் சிதைப்பும் அடையாதவாறும், வரம்பெற்றிருக்கின்றேன் ; ஆதலின், நீங்கள் என்னை எதிர்க்காமல் இந்தப் பெண்ணை விட்டு விட்டு விரைவாக வந்தவழி பற்றிச் செல்லுக ; இவ்வண்ணம் நீங்கள் ஓடி விடுவீர்களாயின், உங்களை யான் கொலை செய்யேனென்று மொழிந்தனன். பெருமாள் அதுகேட்டுச் சினமுற்று அவனை நோக்கி, அடா அற்பப் பயலே ! நீ வலுவில் யமனைத் தேடுகின்றனைபோலும், போரில் என்னெதிரில் நின்றபின்பும் பிழைத்துச் செல்வாயோ ? மரண முறுவாய் ; நிற்க ; என்றருளிச் செய்து, கோதண்டத்தில் நாணை ஏறிட்டு, விரைவாகக் கூரிய கணைகளைத் தொடுத்து, கருடவேகம், வாயுவேகங்களை யுடையனவும், தங்கக்கட் டமைந்தனவுமாகிய

ஆதரங்கொண்டிருக்கின்ற ஸீதையை ; கைகேயி என்னப்படும் மாயையும், யானருகிலிருக்கின், க்ஷத்ரதருமத்தைத் துறவே னாதலின், தன் மக்களாகிய உயிர்கள் ஸம்ஸார மென்னும் ராஜ்ஜியத்தைப் பெறுவர்களாயினும், என்னால் திருத்தப்பட்டு விரைவில் தன்னைக் கடந்து செல்வர்கள் ; என்று ஆலோசனை செய்தே யல்லளோ ? என்னைக் காடு புகும்படிப் பிரித் தனுப்பினள் ; ஆதலின், அவளுடைய எண்ணம் இந்த விராதன் விஷயத்தில் இப்போழ்தே நிறைவேறுகின்றதன்றோ ? (மமமாதாஸுமத்யமா) மம், மா, தாஸு, மத்யமா என்று பதம் ; என்னுடைய இருவாகிய ஸீதையும், அந்த மாயை முதலானோர்களது நடுவிற் சேர்ந்தவளே ? இவளும் இவனைக் கொலை செய்வதில் வருந்துகின்றன ளல்லளோ ? என் ஸீதைக்கு (பரஸ்பர்சாத்து) பகைத்த கொடிய இந்த விராதன் பிழைப்பதாலும், (நதுஃகதரம) மிகவும் மகிழ்வு, (அஸ்தி) உளது, இவள் தந்தையைப் பிரிந்து வந்ததற்கும், ராஜ்ஜியத்தை விட்டு வந்ததற்கும் துன்புறாது, இவனைக் கொலை செய்வதில் துன்புறுகின்றனளே என்று கருத்துக் கொண்டே யருளிச் செய்தன ரெனவு மறிக ;—

ணர். பின்பு, மாலைப்பொழுதாயினமையின், ஸந்தியாவந்தனம் முதலிய நித்யகருமங்களை முடித்துக்கொண்டு, ஸீதா லக்ஷ்மணர்களுடன் அந்த ஆஶ்ரமத்திலேயே எழுந்தருளி யிருந்தனர். பின்பு, ஸுதீக்ஷ்ணமஹா முனிவரும் தவசிகள் புஜிப்பதற்குரிய கந்தமூலபலங்களைத் தாமே நேராகக் கொணர்ந்து, ஸ்ரீராம லக்ஷ்மணர்களுக்கு அர்க்யபாத்யாசமனீயாதிகளினல் பூஜித்தளித்து மகிழ்வித் தருளினர். *

ஆரண்யகாண்டத்தில் ஏழாவது சருக்கம்
முற்றிற்று.

எட்டாவது சருக்கம்.

பெருமாள் ஸுதீக்ஷ்ணமுனிவரிடத்தில் விடை
பெற்றுக்கொண்டு புறப்பட்டது.

பெருமாள் பிராட்டியாருடனும், இளையபெருமாளுடனும் ஸுதீக்ஷ்ண மகாமுனிவரால் பூஜிக்கப்பட்டவராகி, அங்குத் துயில்கொண்டன்றிரவைப் போக்கி, மறுநாளுதயத்தில் துயிலுணர்ந்து, ஸீதா லக்ஷ்மணர்களுடன் நித்ய கர்மங்களை முடித்து, அக்கினியையும், தேவர்களையும் விதிப்படி பூஜித்து, வெய்யோ னுதயமாகுகையில், உபஸ்தானஞ் செய்து விட்டு, ஸுதீக்ஷ்ணமஹாரிஷியைக் கண்டு பணிந்து, அவரை நோக்கித் தபோ நிதியே! யாங்கள் பூஜிக்கத்தக்க தேவரால் யாங்களே பூஜிக்கப் பட்டவர்களாகித் தேவருடைய ஆஶ்ரமத்தில் இன்புற்று வாழ்ந்தோம்; உடன் வந்த முனிவர்கள் எங்களைத் துரைப் படுத்துகின்றனர்கள்; ஆதலின், விடை கேட்கின்றேன்; போய் வருகிறேம்; யாங்களும் எல்லா ஆஶ்ரமங்களையுங் கண்டு களிப்புறத் துரைப்படுகின்றேம்; ஆதலின், எங்களெல்லோர்க்கும் அன்பு கூர்ந்து, விடை கொடுத் தருள்க;—

అవిషహ్యతపోయావ త్సూర్యోనాతివిరాజతే
అమార్గేణాగతాంలక్ష్మీం ప్రాప్యేవాన్వయవర్జితః ||

அவிஷஹ்யாதபோயாவத் ஸூர்யோநாதிவிராஜதே
அமார்கேணுகதாம்லக்ஷ்மீம் ப்ராப்யேவான்வயவர்ஜிதஃ.

---

* இளையபெருமாள் உணவு துயில்களைத் துறந்தவ ராதலின், முனிவர் தமக் களித்த காய் கனிகளைப் பெருமாளுக் களித்து விட்டனர். பெருமாளும் தம்பி யளித் ததைத் தாமுண்டு, முனிவர் தமக் களித்ததைப் பிராட்டியார்க் களித்தனர். ஆதலால், முனிவர்கள் பிராட்டியார்க் களித்திலரென்றறிக.

இழிகுலத்தோன் அநியாயத்தால் மிகப் பொருளை யடைந்து, பிறனைத் தவிக்கச் செய்வதுபோல, இந்த வெய்யோன் கதிர் விரிந்து உலகங்களைத் தவிக்கச் செய்வதற்கு முன்னமே யாங்கள் வழியைக் கடந்து செல்ல விரும்புகின்றோமென் றுரைசெய்து, மீளவும் பணிந்து நின்றனர். இவ்வண்ணம் பணிந்த ஸ்ரீராம லக்ஷ்மணர்களைக் கரங்களாலெடுத்து அணைத்துக்கொண்டு, சுதீக்ஷ்ணமுனிவரும் இவர்களை நோக்கி, ஸ்ரீசக்கரவர்த்தித் திருக்குமாரர்களே! நீங்கள் வழியில் இன்புற்று மகிழ்ந்து செல்லக் கடவீர்கள்; தண்டகாரண்ய வாஸிகளாகிய இந்த முனிவர்களது ஆஶ்ரமங்களையுங் கண்டு மகிழ்க; மிகுந்த காய் கனிகள் நிறைந்தும், நறுமலர்கள் மலர்ந்தும், சிறந்த மிருக இனங்கள் சூழ்ந்தும், பகை நீங்கிய பறவைகளையுடையதும், மலர்ந்த கமலங்களை யுடையதும், குளிர்ந்து தெளிந்த நன்னீரை யுடையதும், நீர்ப்பறவைகள் நிறைந்துள்ள தடாகங்கள் பொருந்தியதுமாகிய கானன மண்டலத்தையுங் காண்க; இப்போழ்து சென்று மீளவும் இங்கெய்துக; என்று அருளிச்செய்து விடைகொடுத் தருளினர். அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் அம்முனிவரை வலம் வந்து புறப்படுகையில், பிராட்டியார் இருவர்க்கும் அம்பறாத் தூணிகளையும், கோதண்டங்களையும், வாள்களையுங் கொடுத்தனர். இவ்விருவர்களும் அவைகளை வாங்கிக்கொண்டு தூணீரங்களைக் கட்டிக்கொண்டும், வாள்களைக் கச்சையிலிறுக்கிக் கொண்டும், கோதண்டங்களை நாணேற்றிட்டுக் கரத்திலேந்திக் கொண்டும், பிராட்டியாருடன் கூடி, அந்த ஆஶ்ரமத்தை விட்டுப் புறப்பட்டருளினர்கள்.

ஆரண்யகாண்டத்தில் எட்டாவது சருக்கம்

முற்றிற்று.

ஒன்பதாவது சருக்கம்.

பிராட்டியார் பெருமாளை நோக்கி, அரக்கர்களைக் கொலைசெய்வது

தருமமோவென்று வினவி யருளியது.

இவ்வண்ணம் ஸுதீக்ஷ்ணமஹாமுனிவரிடத்தில் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட பெருமாளைப் பிராட்டியார் நோக்கி, ஸ்வாமி என் பிராணநாயகரே! தேவர் இப்போழ்து செய்யும்படி மேற்கொண்டிருக்கின்ற முனி தருமம் மிகவும் ஸூக்ஷ்ம மார்க்கத்தினால் சித்திக்கின்றது; இஃது காமக் குரோதாதிகளினா லுண்டாகிய துன்பத்தைத் துறந்தவர்க் கெளிதேயன்றிச் சினமுற்றோர்களுக் கெளி தாகாது;—

త్రీణ్యేవవ్యసనాన్యత్ర కామజానిభవన్త్యుత
మిథ్యావాక్యంపరమకం తస్మాద్గురుతరావుభౌ
పరదారాభిగమనం వినావైరంచరౌద్రతా ॥

த்ரீண்யேவவ்யஸநான்யத்ர காமஜாநிபவந்த்யுத
மித்யாவாக்யம்பரமகம் தஸ்மாத்குருதராவுபௌ
பரதாராபிகமனம் விநாவைரஞ்சரௌத்ரதா.

பொய்ம்மொழியை மொழிவது, பரத்தையலைப் புணர்வது, பகையின்றி யொருவனைப் பகைத் தடிப்பது என்னும் இம்மூன்றும், காமத்தினால் பிறந்த வியஸனங்களெனப்படுகின்றன; இவைகளுள் பொய்ம் மொழியைத் தேவர் இதுவரையி லுரைத்திலீர்; இப்போழ்து முரைக்கின்றிலீர்; இனி யுரையீர்; பிறர் மனைவிகளையும் தேவர் கனவிலும் விருப்புற்றிலீர்; இனி மேலும் விருப்புறீர்; எப்பொழுதும் ஸ்வபாரியை யிடத்திலேயே ஆஸத்தி யுறுகின்றீர்; தரும மறிந்தவரும், ஸத்தியவாதியும், பித்ருவாக்கிய பரிபாலனஞ் செய்பவரு மாகின்றீர்; இவை முதலிய நற்குணங்கள் ஐம்புலன்களை வென்றவர்களுக்கு அரியனவல்ல; தேவர் ஜிதேந்திரிய ரென்பதையு மறிவேன்; ஆகிலும், வைரமின்றி யொருவனைக் கொலை செய்வதென்னும் கொடுமையே தேவருக் கிப்போது நேர்கின்றது; தண்டகாரண்ய வாஸிகளாகிய ரிஷிகளைப் பாதுகாப்பதன் பொருட்டு, ராக்ஷஸர்களைக் கொலை செய்வேனென்று பிரதிஜ்ஞை செய்தருளினீ ரல்லீரோ? இதன்பொருட்டே யன்றோ? தேவர் தம்பியுடன் வில்லைக் கரத்திலேந்திப் புறப்பட் டிருக்கின்றீர்; ஆதலின், யான் தேவருடைய இந்தச் செயலைச் சிந்தை செய்கையில், இஃதெனக்கு நலமெனத் தோன்றுகின்றிலது; என் மனமும் சிந்தாகுல மாகின்றது; ஆதலின், யாம் இப்பொழுது தண்டகா வனத்திலுட் புகுவது தகுதியற்றது; இது நலமென யானுடன்படேன்; அதற்குக் காரண முரைக்கின்றேன் கேட்டருளீர்; தேவர் ஆயுதத்தைக் கையிலேந்திச் செல்லுகையில், வனசரங்களைக் கண்டு பாணங்களைத் தொடுத் தடிப்பீர்; கையில் ஆயுத மிருக்கின், அஃது வாளா இருக்க விடாது; க்ஷத்திரியர்களுக்கு வில்லும், அக்கினிக்கு விறகும் அருகிலிருக்கையில், தேஜஸ்ஸையும், பலத்தையும், பெரும்பாலும் வளரச் செய்யும்; முற்காலத்தில் ஒரு மஹாமுனிவர் காட்டிடையில் தவஞ் செய்துகொண் டிருக்கையில், அவருடைய தவத்தைக் கெடுப்பதன் பொருட்டு, இந்திரன் வாளைக் கையிற்பிடித்துக்கொண்டு ஏவலாளன்வேஷம்பூண் டங்கெய்தி, அந்த முனியை நோக்கி, ஸ்வாமி! யான் ஒரு காரியமாக ஒரிடம்போய் வருவேன்; யான் வருமளவும் இந்த வாளைத் தேவர் பாதுகாத் தளிக்க; மீளவும் யான் வந்து பெற்றுக் கொள்வேனென்றுரைத்து, அந்த வாளை வைப்பாக அவரிடத்தில் கொடுத்து விட்டுப் போய் விட்டனன். அந்த முனியும் அந்த வாளை வாங்கிக்கொண்டு

வைப்பாதலால், அதனை யோரிடத்திலும் வைத்துச் செல்ல நம்புதலின்றி, எப்பொழுதும் அதனைக் கையில் வைத்துக்கொண்டே திரிந்தனர். அதனை விட்டு எங்கும் சென்றிலர்; இவ்வண்ண மிருக்கையில், தவமுயற்சியில் ஊக்கந்தப்பிக் கொடுமைபூண்டு வாளினால் பற்பல உயிர்களைக் கொன்று கடையில் நரகத்தை யடைந்தனர். இவ்வண்ணம் நிகழ்ந்ததென்று பெரியோர்கள் கூறுகின்றனர்கள். ஆதலின், ஆயுதம் அருகிலிருக்கின், இத்தன்மையதாகிய தீமையை விளைக்கும்; ஆயுதமென்பது நெருப்புப்போலச் சேர்ந்தவனைப் பற்றி எரிக்கும்;—

స్నేహాచ్చబహుమానాచ్చ స్మారయేత్వాంనశిక్షయే ||

ஸ்நேஹாச்சபஹுமானாச்ச ஸ்மாரயேத்வாம்நசிக்ஷயே.

தேவர் யாவு முணர்ந்தவரும், எனக்குக் குருவு மாகின்றீ ராதலின், தேவர்க்கு யான் உபதேசஞ் செய்கின்றிலேன்; ஸ்நேஹத்தினாலும், பஹுமானத்தினாலும், தேவருக்கு நினை வூட்டுகின்றேனே யன்றி, சிக்ஷிக்கின்றிலேன்; தேவர் இப்பொழுது வில்லையேந்தி வைரமின்றி யொருவனைக் கொலைசெய்வதென்பது ஒருகாலுந் தகாது; பகையின்றி யொருவனைக் கொலைசெய்ய யானுடன்படேன்; வீரராகி யரசாட்சிசெய்கின்ற க்ஷத்திரியர்களல்லரோ வில்லையேந்தி யார்த்தர்களைப் பரிபாலனஞ் செய்யவேண்டியவர்கள்; தேவருக்கு இது தகுதியற்றது; ஆயுத மெங்கே? வனவாஸமெங்கே? க்ஷத்திரிய தருமமெங்கே? தவமெங்கே? இவ்வண்ணம் ஒன்றுக்கொன்று விரோதமாயுள்ள தருமங்களை மேற்கொள்வதாகாது; தேசதர்மமாகிய தவமொன்றே பூஜிக்கப்படக் கடவது. இப்பொழுது வில் கையிலிருக்கையில், புத்தி கலக்கமுறும்; மீளவும் திருவயோத்தி சேர்ந்தபின்பு, வில்லேந்தி க்ஷத்திரதருமத்தைப் பாதுகாக்கக் கடவீர். தேவர் இவ்வண்ணம் முனி யாகுவீராகில், கைகேயி தசரதர்களும் மிக மகிழ்வார்கள்;—

ధర్మాదర్థఃప్రభవతి ధర్మాత్ప్రభవతేసుఖం
ధర్మేణలభతేసర్వం ధర్మసారమిదంజగత్ ||

தர்மாதர்தஃப்ரபவதி தர்மாத்ப்ரபவதேஸுகம்
தர்மேணலபதேஸர்வம் தர்மஸாரமிதஞ்சகத்.

தருமத்தினாலேதானே பொருளின்பங்கள் உண்டாகின்றன; மற்றுமுள்ள யாவும் தருமத்தினாலே பெறப்படுகின்றன; ஆதலின், இவ்வுலகமே தர்மமூலமாகின்றது; அந்தத் தருமமும், பற்பல நியமோபவாஸாதிகளினால் மெய்யை வருத்தித் தவஞ்செய்பவர்களால் பெறப்படுகின்றது; ஸுகத்தினால் ஸுகங்கிடைக்குமோ? ஆதலின், தேவர் நியமம் பூண்டு தபோ

வனத்தில் முனி தர்மத்தையே யநுஷ்டிக்கக் கடவீர். தேவர் திருவுளத் தில் மூவுலகங்களும் இயல்பாக விளங்குகின்றன ; ஆதலின், தேவருக்குந் தருமோபதேசம் செய்பவர் யாவருளர் ? தேவரோ தம்பியுடன் நன்கா ராய்ந்து தக்கவண்ணஞ் செய்தருள்க என்று விண்ணப்பஞ் செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் ஒன்பதாவது சருக்கம்

முற்றிற்று.

பத்தாவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியார்க்கு ராக்ஷஸ ஸம்ஹாரம்

தருமமென வருளிச் செய்தது.

அநந்தரம் பெருமாள் பிராட்டியா ரிவ்வண்ண முரைசெய்த வாக்கி யத்தைக் கேட்டு மகிழ்ந்து, பிராட்டியாரை நோக்கி, அடி ஜனகராஜன் திருமகளே ! நீ விண்ணப்பஞ்செய்த வாக்கியம், உன் குலத்திற்கும், உன் குணத்திற்கும், என்னிடத்திலுள்ள ஸ்நேஹ பகுமானங்களுக்கும், மிகவும் தகுதியுள்ளதே யாகின்றது ; ஆகிலும், யான் உரைசெய்யும் வாக்கியத்தை நன்கு கேட்டுணர் ; க்ஷத்திரியர்கள் ஆர்த்த ஜனபரி ரக்ஷணத்தின் பொருட்டு வில்லெடுத்துக் கொடியர்களைத் தண்டிப்பது தருமமே யென்று நீயே யுரைத்தனை யல்லையோ ? தண்டகாரண்ய வாஸிகளாகிய அந்த முனிவர்களும், ராக்ஷஸர்களால் கொலைசெய்யப்பட் டார்த்தி யடைந்து என்னைச் சரணமடைந்தனர்கள் ; அவர்கள் நாடோறும் ராக்ஷ ஸர்களால் பீடிக்கப்பட்டவர்களாகி இன்பமுறுகின்றிலர்கள் ; அவர்களே என்னிடம் வந்து எங்களைப் பாதுகாத் தளிப்பாயென்று வேண்டினர்கள் ; யானும் அவர்களது வேண்டுகோளுக்கிரங்கி, அவர்களைப்பணிந்து, அவர் களை நோக்கி, மஹாயோகிகளே ! தேவர் என்மீது அன்புற்றருள்க ; யானே தேவர்களிடம் வந்து பணிந்து குற்றேவல்களைச் செய்து செல்ல வேண்டி யிருக்க, தேவர்களே என்னிடம் வந் திவ்வண்ணம் வேண்டு வதற்கு யான் மிகவும் நாணமுறுகின்றேன் ; அடியேன் இப்போழ்து செயல் வேண்டுவது யாதோ வென்று வினவினேன் ; அவர்களும் என்னை நோக்கி, ஸ்ரீராமா ! கொடியர்களும், வலியர்களும், காமரூபிகளுமாகிய அரக்கர்கள் ஹோமாதிகாலங்களில் வந்து எங்களைப் பீடிக்கின்றனர்கள் ; அவர்களைக் கொன்று எங்களை ரக்ஷிக்கக் கடவை. எமக்கு யார் கதி யென்று தேடிக்கொண் டிருக்கையில், நீயே தற்செயலா யிங்கெழுந்

தருளினே ; ஆதலின், நீயே எங்களுக்குத் தஞ்சம் ; யாங்களும் தவத் திறமையினல் அரக்கர்களை நாசஞ்செய்ய வல்லோம் ; ஆகிலும், நெடுநாள் செய்த தவங்களின் பலன்களை இது விஷயத்தில் அழித்துக்கொள்ள விரும்புகின்றிலோம் ; தவ மென்பது பற்பல விக்கினங்களை யுடையது ; செய்வதற்கும் எளியதன்று ; ஆதலின், அரக்கர்களால் யாங்கள் பக்ஷிக்கப் படுகையிலும், அவர்கள்மேல் சாபமிடுகின்றிலோம் ; ஆதலின், நீயே தம்பியுடன் கூடி எங்களை ரக்ஷிக்கக் கடவை. யாங்கள் உன்னையே நாதனக உடையோமே யன்றி, எமக்கு வேறே தஞ்ச மிலதென் றருளிச் செய்த னர்கள். யானும் அதுகேட்டு அவர்களை நோக்கி, முனிவர்களே ! யான் உங்களுக்கு விரோதிகளாகிய ராக்ஷஸர்களெல்லோரையும் கொலைசெய்து உங்களெல்லீரையும் பாதுகாத் தருள்வேனென்று பிரதிஜ்ஞைசெய் துரைத் தேன் ; யான் பிரதிஜ்ஞை செய்துவிட்ட பின்பு, உயிருள்ளவரையில், எப்படியாவது அதனை நிறைவேற்றுவேனேயன்றி, பிரதிஜ்ஞையை யொரு பொழுதும் தப்பி நடவேன்; எனக்குச் சத்தியமே மிகப் பிரியமுடையது ;

అప్యహంజీవితంజహ్యాం త్వాంవాసీతేసలక్ష్మణాం
నతుప్రతిజ్ఞాంసంశ్రుత్యబ్రాహ్మణేభ్యోవిశేషతః ॥

அப்யஹம்ஜீவிதஞ்ஜஹ்யாம் த்வாம்வாஸீதேஸலக்ஷ்மணாம்
நதுப்ரதிஜ்ஞாம்ஸம்ஶ்ருத்ய ப்ராஹ்மணேப்யோவிஶேஷதஃ.

கேளாடி ஸீதையே ! யான் பிரதிஜ்ஞையைப் பரிபாலனஞ் செய்வ தன்பொருட்டு எல்லோர்க்கும் மிகப் பிரியமாகி யிருக்கின்ற உயிரையாயி னும் விட்டு விடுவேன் ; உயிரினும் பிரியமுள்ள உன்னையாயினும் விட்டு விடுவேன் ; உன்னிலும் பிரியமுடைய லக்ஷ்மணனையாயினும் விட்டு விடு வேனே யன்றி, பிரதிஜ்ஞையை யொருகாலையிலும் முடியாது விட்டு விடேன் ; முனிவர்கள் பொருட்டுச் செய்த பிரதிஜ்ஞையை மிகவுங் கைவிடேன் ; அடி வைதேஹி ! முனிவர்க ளுரையாதிருக்கினும், யான் அவர்களைப் பரிபாலிப்பது கடமை ; அவர்களாலும் வேண்டப்பட்டு என்னாலும் பிரதிஜ்ஞை செய்யப்பட் டிருக்கையில், யான் அவர்களை ரக்ஷிக்கவேண்டு மென்பதற்குக் கேட்கவேண்டுமோ ? ஆதலின், யான் முனிவர்களைப் பாதுகாப்பதன் பொருட்டுப் பலாசர்களைக் கொலைசெய்ய வேண்டு மென்பதே தருமம் ; நீயு மிதனை யறிவாயாயினும், என்னிடத் தில் ஸ்நேஹத்தினாலும், பஹுமானத்தினாலும், இவ்வண்ண முரைத்தனை; அதற்கு யான் மிக மகிழ்ந்தேன் ; பிரியமிலாதார்க் கொருவர் இதமுரைப் பார்களோ ? நீ யவ்வண்ண முரைத்தது உனக்கும், உன் குலத்திற்கும், மிகத் தகுதியுள்ளது ; நீ இவ்வண்ணம் தருமசிந்தையுற்று என்னுடன் கூடித் தருமவழிகோணமல் நடக்கின்றமையின், நீ எனக் குயிரினும்

பிரியமுடையாளாயினை ; என்றிவ்வண்ணம் அருளிச்செய்து மைதிலியை மகிழ்வித்துத் தம்பியுடன் சாபபாணதாரியாகி, மிகவும் அழகிய தபோ வனங்களை நோக்கி, எழுந்தருளினர்.

ஆரண்யகாண்டத்தில் பத்தாவது சருக்கம்
முற்றிற்று.

பதினொன்றாவது சருக்கம்.

பெருமாள் ரிஷிகளது ஆஶ்ரமங்களைச் சுற்றிக்கொண்டு, மீளவும் சுதீக்ஷ்ணாஶ்ரமம் வந்து, அங்கிருந்து அகஸ்த்ய ப்ராதாவின் ஆஶ்ரம வழியாக அகஸ்த்யாஶ்ரமத்திற் கெழுந்தருளியது.

అగ్రతః ప్రయయౌ రామః సీతా మధ్యే సుమధ్యమా
పృష్ఠతస్తు ధనుష్పాణిః లక్ష్మణో నుజగామ హ॥

அக்ரதஃப்ரயயௌராமஃ ஸீதாமத்யேஸுமத்யமா
ப்ருஷ்டதஸ்துதனுஷ்பாணிஃ லக்ஷ்மணோநுஜகாமஹ.

அநந்தரம் பெருமாள் முன்னும், பிராட்டியார் நடுவிலும், இளைய பெருமாள் பின்னுமாக எழுந்தருளினர்கள். இவ்வண்ணம் ஸ்ரீராமலக்ஷ்மணர்க ளிருவரும் பிராட்டியாருடன் சென்று, பற்பல மலைகளையும், வனங்களையும், நதிகளையும், ஸாரஸ சக்கரவாகம் முதலிய நீர்ப்பறவை களையும், தாமரை யோடைகளையும், நிரை நிரையாகக் கூடித் திரிகின்ற மான்களையும், மதமேறிக் கொம்பை யசைத்துத் திரிகின்ற மஹிஷங்களை யும், காட்டுப் பன்றிகளையும், மரங்களை முறிக்கின்ற யானைகளையும் கண் ணுற்றுக் கொண்டே நெடுந்தூரஞ் சென்று, மாலைப்பொழுதாகுகையில், ஒரு காதவழி நீள முள்ளதும், தாமரை மலர்ந் தடர்ந்து யானைக் கூட்டங் கள் திகழ்ந்தும், ஸாரஸஹம்ஸகாதம்பாதி ஜலசரபக்ஷிகள் நிறைந்தும், தெளிந்து குளிர்ந்த ஜலம் நிரம்பியு முள்ளதுமாகிய ஒரு தடாகத்தின் கரை சேர்ந்து, ந்ருத்த கீதவாத்யங்களின் தொனியைக் கேட்டும், ஒருவரு மில்லாமையைக் கண்டும் வியப்படைந்து, தம்முடன் வருகின்ற முனிவர் களுள் தர்மபிருத்தென்பவரை நோக்கி, மாதவரே ! வாத்தியங்களின் ஒலிமாத்திரம் மிகவும் இனிமையாகக் கேட்கப் படுகின்றதே யன்றி, யொருவரையும் காண்கின்றிலோம் ; ஆதலின், மிக வியப்புற் றிருக் கின்றோம் ; இந்தத் தொனி எங்கிருந் தொலிக்கின்றது ; இது யாதோ ?

இதனை யாங்கள் கேட்கத் தகுமாயின், அருளிச் செய்கவென்று வினவியருளினர்கள். அம்முனிவரும் அதுகேட்டு, இவர்களை நோக்கிக் கேளீர் ராஜகுமாரர்களே! இந்தத் தடாகம் பஞ்சாப்ஸரமென்னும் பெயருடையது; அழிவற் றிவ்வண்ணமே எப்போழ்தும் நிறைந்துள்ளது; மாண்டகர்ணியென்னும் முனிவர் தம் தவத்திறமையினு லியற்றப்பட்டது; அந்த ரிஷி பதினுயிரம் வருஷம் வாயுபக்ஷராகி, உண்டி நீங்கிக் கடுந்தவஞ் செய்கையில், இந்திராக்கினிகள் முதலிய தேவர்களெல்லோரும் அச்சங்கொண்டு, இம்முனிவர் நம்முள் யாருடைய பட்டத்தைக் கோரித் தவஞ் செய்கின்றனரோ? என்றொருவர்க் கொருவர் உரைத்துக்கொண்டு, இவருடைய தவத்தைக்கெடுப்பதன்பொருட்டு, அப்ஸரஸர்களுள் சிறந்தவர்களாகிய ஐந்துபேர்களை யனுப்பினர்கள்; அந்த அப்ஸரஸர்களும் இவரிடம் வந்து இவரை மயக்கிக் கேளிக்காளாக்கி விட்டனர்கள். பின்பு அந்த மாண்டகர்ணியும், இவர்களைக் காமுற்று மணஞ் செய்துகொண்டு தம் யோக மஹிமையினுல் யுவாவாகி இந்தத் தடாகத்தையும், இதன் நடுவில் மாடமாளிகையையும் இயற்றி, அல்லும் பகலும் அந்த அப்ஸரஸர்களுடன் புணர்ந் தின்புறுகின்றனர்; அந்த மனையும், இந்தத் தடாகத்தினுள் மறைந் திருக்கின்றது; அந்த அப்ஸரஸர்களே ஆட்டமாடியும், பாடியும், அம்முனிவரை மகிழ்விக்கின்றனர்கள்; அந்த வொலியே இங்கே கேட்கப் படுகின்றதென் றுரை செய்தனர். ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் பிராட்டியாருடன் அதைக் கேட்டு மகிழ்ந்து, ரிஷிகளுடனும் பிரஹ்மதேஜஸு விளங்குகின்ற ஆஶ்ரமமண்டலங்களைக் கண்டு புகுந்து பூஜிக்கப்பட்டவராகி வாழ்ந்தனர். இவ்வண்ணம் பெருமாள் அந்த ஆஶ்ரமங்களில் எல்லாருடனும் வாழ்ந்து, முறையே யங்கங்குள்ள ஆஶ்ரமங்களுக்கு மெழுந்தருளி, சில விடங்களில் பத்து மாஸங்களும், சில விடங்களில் ஒரு வருஷமும், சில விடத்தில் நான்குமாஸமும், சில விடத்தில் ஐந்து மாஸமும், சில விடத்தில் ஆறு மாஸமும், சில விடத்தில் ஒரு மாஸமும், சில விடத்தில் ஒன்றரை மாஸமும், சில விடத்தில் மூன்று மாஸமும், சில விடத்தில் எட்டு மாஸமும் சுகமாக வாசஞ் செய்கையில், பத்து வருஷங்கள் சென்றன; பின்பு பெருமாள் மீளவும் திரும்பி ஸுதீக்ஷ்ணுஶ்ரமத்திற் கெழுந்தருளி, அவரால் பூஜிக்கப் பட்டவராகிச் சிலகால மிருந்து, ஒருநாள் ஸுதீக்ஷ்ணமஹாமுனியைப் பணிந்து, பகவானே! இந்த அரணியத்திலே அகஸ்த்யமஹாமுனி எழுந்தருளியிருக்கின்றனரென்று முனிவர்கள் கதை சொல்லக் கேட்டிருக்கின்றேன்; ஆகிலும், இவ்வரணியம் மிகப் பெரி தாதலின், அவருடைய ஆஶ்ரமம் எங்கிருக்கின்றதோ அறிகின்றிலேன்; அவருடைய ஆஶ்ரமம் எங்கிருக்கின்றதோ அருளிச் செய்க; தேவருடைய அருளினுல் ஸீதா லக்ஷ்மணர்களுடன் கூடி யகஸ்த்யமஹாமுனிவரைக் கண்டு பணிந்து மகிழ்வேன்; அம்முனிவரை யான் கண்டு பணிந்து குற்றேவல் செய்ய

வேண்டுமென மிக விருப்புறுகின்றேனென்று வினவினர். ஸுதீக்ஷ்ண மஹாமுனியும் அதுகேட்டு மகிழ்ந்து பெருமாளை நோக்கி, அடா ராமா! யானே உன்னை நோக்கி, யகஸ்த்யாஸ்ரமத்திற்கு ஸீதா லக்ஷ்மணர்களுடன் செல்லுகவென் றுரைசெய்யவேண்டுமென் றிருந்தேன்; தைவாதீனமாக நீயே வினவினை; ஆதலின், யான் அகஸ்த்யாஸ்ரமம் இருக்குமிடத்தை யுரைக்கின்றேன் கேளாய்; இங்கிருந்து தெற்காக நான்கு யோஜனம் செல்வாயாகில், அங்கே அகஸ்த்ய ப்ராதாவின் ஆஸ்ரம மிருக்கின்றது; அவ்விடத்தில் பிப்பலிக் காடுளது; அதில் கனிகள் பழுத்தும், மலர்கள் மலர்ந்தும், பற்பல பறவைகள் ஒலித்தும்; தாமரை பூத்தும், தண்ணீர் நிறைந்தும், பலவகைப்பட்ட நீர்ப்பறவைகள் சூழ்ந்தும் திகழும்; அவ்விடத்தில் ஓரிரவுதங்கி, மறுநாளுதயத்தி லங்கிருந்து புறப்பட்டு அதற்குத் தெற்கில் அடர்ந்த வனத்தின் பக்கமே சென்று ஒரு யோஜனம் தாண்டுகையில், அங்கு அகஸ்த்யாஸ்ரம மிருக்கின்றது; அதனைக் கண்டு நீங்க ளெல்லீரும் மகிழ்வுறுவீர்கள்; அந்த அகஸ்திய மஹாமுனியைக் கண்டு பணிய ஆவலுள்தாயின், இப்பொழுதே புறப்பட்டுச் செல்க; என்றருளிச் செய்தனர். பெருமாளும் அதுகேட்டு உடனே ஸீதா லக்ஷ்மணர்களுடன் அவரைப் பணிந்து விடை பெற்றுக்கொண்டு, அகஸ்த்யாஸ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டு, ஸுதீக்ஷ்ணர் உரைத்த மார்க்கமே பற்றிச் சென்று, பற்பல வனங்களையும், மலைகளையும், ஆறுகளையுங் கண்டு மகிழ்ந்து, இளையபெருமாளை நோக்கிப் பாராய் லக்ஷ்மணா! இதோ அந்த அகஸ்த்ய ப்ராதாவின் ஆஸ்ரமங் காணப்படுகின்றது; பழுத்த பிப்பலிகளின் மணங்கமழ்ந்த மந்தமாருதம் வீசுகின்றதன்றோ? அங்கங்குக் கட்டைகளும் வெட்டிக் குவிக்கப்பட்டிருக்கின்றன; தூப்புற்களும் அறுக்கப்பட்டிருக்கின்றன; இந்த ஆஸ்ரமத்தின் நடுவில் ஹோம தூமமும் மிகக் கறுத்து மேலெழுகின்றது; பரிசுத்தியுள்ள தீர்த்தங்களில் நீரிலாடித் தூய்மைகொண்ட முனிவர்களும், பகவதாராதனத்தின் பொருட்டு மலர் கொய் கின்றனர்கள்; ஆதலின், ஸுதீக்ஷ்ண மஹாமுனிவரால் கூறப்பட்ட அகஸ்திய ப்ராதாவின் ஆஸ்ரமமே இதுவாகும்; உலகங்களுக்கு இதஞ் செய்வதன் பொருட்டே இவர்க்கு ப்ராதாவாகிய அகஸ்த்யமஹாமுனிவர் இந்தத் தென்திசையை யடைந்து மிருத்யுவைப் போக்கி யருளுகின்றனர்; இங்கே முன்பு இல்வல வாதாபிக ளென்னும் இரண்டு அஸுரர்கள் வாஸஞ் செய்து கொண்டு, பிராஹ்மணர்களைக் கொலை செய்துகொண்டிருந்தனர்கள். அவர்களுள் இல்வலன் பிராஹ்மணவேஷம்பூண்டு ஸம்ஸ்க்ருதபாஷையுரைத்துக்கொண்டு, வேதியர்களை ஸ்ராத்தமென்று நிமந்த்ரணஞ்செய்து ஆட்டினுருவங்கொண்ட வாதாபியை யறுத்துச் சமைத்து உண்டிகளில் கலந்து, அந்த வேதியர்களைப் புஜிப்பித்து, மந்திர பூர்வமாகத் தம்பியை யுத்தேசித்து, அடா வாதாபி! எழுந்துவாவென்று கூவி யழைக்கையில், உடனே வாதாபியும்

ஆடுபோலக் கற்றிக்கொண்டு அந்த வேதியர்களது குடலைப் பீறிக் கொண்டு வெளியே வருவான். இவ்வண்ணம் அவர்களால் அநேகமாயிரம் பிராஹ்மணர்கள் கொலைசெய்யப்பட்டனர்கள். அநந்தரம் தேவர்களெல்லோரும் அகஸ்த்யமஹாமுனிவரை வேண்டி, அந்த வசுரர்களைக் கொலை செய்யும்படி யுரைத்தனர்கள். அகஸ்தியமஹாயோகியும் அதற்குடன்பட்டிங்கு வருகையில், இல்வலன் இவரைக்கண்டு வழக்கப்படி நிமந்தரணஞ் செய்து ஆட்டினுருவங்கொண்ட தம்பியைப் புஜிப்பித்து, ஸகலம் ஸம்பூர்ணமென் றுரைத்த பின்பு, உத்தரா போசன மளித்துத் தம்பியை யுத்தேசித்து, வாதாபியே! எழுந்திராயென் றுரைத்தனன். அகஸ்திய மஹாமுனிவர் அதுகேட்டு (வாதாபே ஜீர்ணோபவ) என்றுரைசெய்து இல்வலனை நோக்கி, அடா இல்வலா! என்னால் புஜிக்கப்பட்ட பின்பும், வாதாபி எழுந்துவருந் திறமையுளனாகுவானோ வென்று நகைத் துரை செய்தனர். இல்வலனதுகேட் டிவரைக் கொலை செய்யும்படி எதிர்த்து வருகையில், அகஸ்தியமுனிவரும் வெகுண்டு விழிக்கையில், இல்வலன் பக்கென் றெரிந் திறந்தனன். அத்தன்மையராகிய அகஸ்தியமஹா யோகியின் பிராதாவினுடைய ஆஶ்ரமம் பாரடா தம்பி! என்றிவ்வண்ணம் உரைத்துக்கொண் டிருக்கையில், ஆதித்தன் அத்தகிரி யடைந்தனன்; சந்திப் பொழுதும் தோன்றிற்று; பின்பு, பெருமாள் இளையபெருமாளுடன் நித்ய கருமங்களை முடித்துக்கொண்டு ஆஶ்ரமத்தினுட்புகுந்து அகஸ்த்ய ப்ராதாவைக் கண்டு பணிந்தனர். அம்முனிவரும் இவர்களைக் கண்டு மகிழ்ந்து பூஜித்தனர். பெருமாளும் சுகமாக அன்றிரவை யங்குப் போக்கி, மறுநாளுதயத்தி லெழுந்து செய்கடன்களை முடித்துக்கொண்டு அகஸ்த்ய ப்ராதாவைக் கண்டு பணிந்து அவரை நோக்கி, மாதவரே! தேவருடைய ஆஶ்ரமத்தில் இரவைச் சுகமாகப் போக்கினேன்; தேவருடைய தமைய ராஶ்ரமஞ் செல்வோம், விடை கொடுத்து வாழ்த்தியருள்க; என்றுரைத் தருளினர். அம்முனிவரும் அது கேட்டுப் பெருமானை நோக்கி, ஸ்ரீராமா! நீங்கள் சுகமாகப் போய் வாரீர்களென்று விடைமொழி மொழிந்து வாழ்த்தி யனுப்பினர். பெருமாளும் விடை பெற்றுக்கொண்டு ஸுதீக்ஷ்ணமஹாமுனிவர் அருளிச்செய்த வழியே பற்றிச் சென்று, அருகிலுள்ள வநத்திலிருந்த நீவார பன ஸதாலத மாலதி மிசவ குளவஞ் சுளதவ மதுக பில்வ சிரிபில்வ திந்துகம் முதலிய மரங்களையும், அம்மரங்களில் படர்ந்து மலர்ந்துள்ள வல்லிகளையும், யானைகளின் துதிக்கைகளினால் முறிக்கப்பட்ட கிளைகளையும், குரங்குகளினா லசைக்கப்பட்ட நுனி மரங்களையுங் கண்டு மகிழ்ந்து, பின் புறத்தில் வருகின்ற இளையபெருமாளை நோக்கித் தம்பி! இங்கே மரங்கள் யானை முதலியவைகளால் முறிக்கப்படாமல் அடர்ந்த இலைகளை யுடையன வாதலாலும், விலங்குகளும், பறவைகளும், பகை நீங்கி யடங்கி இருக்கின்றமையாலும், அகஸ்தியமஹாமுனிவரது ஆஶ்ரமம் அருகி லிருக்கின்றது

போலும், அந்த மஹாமுனிவர் தம்முடைய தவமஹிமையினாலேயே அகஸ்தியர் அகஸ்தியரென் றெங்கும் புகழப் படுகின்றனர்; ஆதலின், அவருடைய ஆஸ்ரமமே இது; இவ்வனம் மிகுந்த புகை சூழ்ந்தும், மரவுரிகளினால் விளங்கியும், பகையற்ற விலங்குகள் பொருந்தியும், பல வகைப் பறவைகள் ஒலித்தும் விளங்குகின்றது; இந்த அகஸ்தியமஹா முனியினிடத்தி லச்சங்கொண்டே அரக்கர்கள் இங்குச் சேர்கின்றிலர்கள்; அம்முனிவர் இந்தத் தென்திசைக்கு எதுமுத லெழுந்தருளினரோ? அதுமுதல் அரக்கர்களும் பகைநீங்கிச் சாந்தியடைந் திருக்கின்றனர்கள். இம்மஹாமுனிவரால் இத்தென்திசை பீடையற் றிருக்கின்றமையின், இது அகஸ்திய திசையென்றே கூறப்படுகின்றது; வெய்யோனுடைய வழியையும் தகையும்படி மேலெழுந்து வளர்ந்த விந்திய சைலமும், இவருடைய ஆஜ்ஞைக்கு உட்படிந்தே அடங்கி வளரா திருக்கின்றது; அத் தன்மையருடைய ஆஸ்ரம மாதலின், இது மிக விநயமுற்ற ஜனங்களினால் அடையப்பட் டிருக்கின்றது; இம்மஹாமுனிவரோ நாம் வந்ததை யறிந் தாதரஞ் செய்து நமக்கு நலஞ்செய் தருள்வர்; யான் அவரைப் பூஜை செய்து கொண்டே வனவாஸ சேஷத்தையும், அங்கு வாஸஞ் செய்து போக்குவேன்; இவ்விடத்தில் தேவகந்தர்வ ஸித்தசாரணாதிகளும் வந்து அகஸ்த்யமஹாமுனிவரைப் பணிகின்றனர்கள்; இவ்விடத்தில் பொய் யுரைப்பவனும், கொடுமையுடையோன், ஏகாந்தமாகத் தீமைசெய்பவன், பீடை செய்பவன், மனம் போன்றபடி நடப்பவன், காமங் கொண்டவன், இவர்களுள் ஒருவனும் இவ்விடத்தில் பிழைத்திரான்; இம்மஹாமுனிவர் அத்தன்மைய ரல்லரோ? இவ்விடத்தில் தேவாதிகளும் ஆகார நிய முடையவர்களாகித் தவஞ் செய்கின்றனர்கள்; இவ்விடத்தில் தவஞ் செய்தவர்கள் சித்தி யடைந்து திவ்விய விமானங்களிலேறி விண்ணுலகஞ் சேர்கின்றனர்கள்; இவ்விடத்தில் தவஞ் செய்பவர்களுக்குத் தேவர்கள் யக்ஷலோகத்தையும், விண்ணுலகினையும், இம்மையில் பற்பல ராஜ்ஜியங் களையும் அளிக்கின்றனர்கள்; அடா லக்ஷ்மணா! யாம் இந்த ஆஸ்ரமம் வந்து சேர்ந்தனம்; ஆதலின், நீ முன்னே சென்று யான் ஸீதையுடன் வந்திருக்கின்றேனென்று அகஸ்தியமகாமுனிவருக்கு அறிவிக்கக் கடவை யென் றருளிச் செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் பதினொன்றாவது சருக்கம்
முற்றிற்று.

அயோத்தியாகாண்டத்தில் பெருமாள் காடு புகுகையில், இளையபெருமாளை முன்னும், பிராட்டியாரை இடையிலும், தாம் பின்னும் செல்லும்படி ஏற்பாடு செய் தருளிச் செய்து, அவ்வண்ணமே தாம் எழுந்தருளினர். இங்கே (அக்ரதஃப்ரயயௌ ராமஃ) என்று பெருமாள் தான் முன்னே எழுந்தருளி இளையபெருமாளைப் பின்னே

பன்னிரண்டாவது சருக்கம்.

பெருமாள் அகஸ்தியமஹாமுனியைக் கண்டு பணிந்து அவரால் பூஜிக்கப் பட்டது.

அநந்தரம் இளையபெருமாள் அகஸ்தியாஸ்ரமத்தினுள்ளே சென்று அகஸ்தியசீட ரொருவரை நோக்கி, முனியே! ஸ்ரீதசரதசக்கரவர்த்தியின் மூத்த குமாரரும், சிறந்த தோள்வலி யுற்றவருமாகிய ஸ்ரீராமபத்திரர் பாரியையாகிய ஸீதாபிராட்டியாருடன் உம்மாசிரியரைக் கண்டு வந்தனஞ் செய்வதன் பொருட் டெழுந்தருளி யிருக்கின்றனர்; யான் அவர்க்குத் தம்பியும், அநுகூலனும், பத்தி யுடையவனும், லக்ஷ்மணனென்னும் பெயருடையோனு மாகின்றேன்; நீர் எங்களைக் கேட்டிருக்கின்றீரோ? அந்த நாங்கள் மூவரும் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்வதன் பொருட்டு, இந்தத் தண்டகாவனத்தை யடைந்தோம்; ஆதலின், நாங்கள் அகஸ்தியபகவானைக்காணக்கோருகின்றோம்; இச்செய்தியை நும் மாசிரியருக்கு அறிவிக்கக் கடவீரென் றுரைத்தருளினர். அம்முனிவரும் அதுகேட்டு அக்கினிஹோத்திராலயத்தி லெழுந்தருளியிருந்த அகஸ்த்ய

வரும்படி செய்த தென்னெனில், முன்பு துணையின்றி, மூவரோ புறப்பட்டமையாலும், அக்காட்டில் எவ்விடத்தில் எவர்களிருப்பதையும் அறிந்திலாமையாலும், தாம் முன்னே செல்லுங்கால், பின்புறத்தில் யாரேனும் ஒளித்திருந்து பிராட்டி இளைய பெருமாள் இவர்களுக்குத் தீங்கு செய்வார்களோவென் றையமுற்றுப் பெருமாள் அவ்விருவர்களையும் பாதுகாக்கும்படி தாம் பின்னே எழுந்தருளினர். இங்கே எல்லா விடங்களிலுந் திரிந்து அங்கங்குள்ள விசேஷங்களை யறிந்திருக்கையாலும், முனிவர்கள் பின்னே துணையாக வருகின்றமையாலும், அச்சமின்றித் தாம் முன்னே எழுந்தருளினர். ஸ்திரீயாதலாலும், முன்னுகிலும் பின்னுகிலும் பெருமாளைச் சார்ந்தே இருக்கவேண்டியவ ராதலாலும், பிராட்டியார் எப்பொழுதும் இடையிலேயே வந்தாரென்றுணர்க. ஸம்ப்ரதாயார்த்தமேதெனில், குரு வந்தனம் செய்பவர்கள் ஸ்வாசார்ய ப்ராசார்யன் முதலாகப் பிராட்டியார் பெருமாளளவாகவாவது, பெருமாள் தொடங்கி ஸ்வாசார்யனளவாகவாவது வந்தனம் செய்யவேண்டு மென்பதை யறிவிப்பதற்காக அங்கே பின்னும், இங்கே முன்னுமாகப் பெருமா ளெழுந்தருளினரென்றறிக; லக்ஷ்மணசப்தம் ஸ்ரீஉடையவரிடத்திலும் வர்த்திக்கின்றமையின், ஆசார்ய ஸமுதாயத்தையும், தாற்பரிய லக்ஷணையால் அறிவிக்கின்றது; அன்றியும், பெருமாளைச் சரணமடைவோர் ஆசார்யாளை முன்னிட்டுக்கொண்டே தன்னைச் சரணமடைய வேண்டுமென்பதை யறிவிப்பதற்காக அங்கே இளையபெருமாளை முன்னே செல்லவிட்டுத் தாம் பின்னெழுந்தருளினர். இங்கே ஆசிரியரா லுபதேசஞ் செய்யப்படு மூலமந்திரத்தின் முதலெழுத்தின் பொருளி னிலையை வெளி இடுவதன் பொருட்டு முன்னே எழுந்தருளினரெனவும் உணர்க; ஸ்ரீமத் வேதாந்த தேசிகரால் இங்குற்ற சுலோகமே எட்டக்கரத்தின் முதலெழுத்தின் பொருண் முறைக்குத் திருஷ்டாந்தமாக வருளிச்செய்யப் பட்டது.

பகவானை நோக்கி, ஆசிரியரே! தாசரதிகளாகிய ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் ஸீதாபிராட்டியாருடன் வந்திருக்கின்றனர்கள்; தேவரைக் கண்டு பணிய விரும்புகின்றனர்கள்; இதைத் திருச்செவிசார்த்தி மேலே நடக்க வேண்டுவதை யருளிச் செய்க வென்று விண்ணப்பஞ் செய்தனர். அகஸ்தியபகவானும் பெருமாளெழுந்தருளியதைக் கேட்டு மகிழ்ந்து, அஹோ? ஸ்ரீராமபிரான் ஸீதா லக்ஷ்மணர்களுடன் தண்டகாவனத்திற்கெழுந்தருளி நெடுநாளாகியும், இப்பொழுதே எமது நல்வினையினு லிங்கெழுந் தருளினர்; யானும் அவர் எப்பொழுது இங்கெழுந் தருளுவரோ வென்றே எதிர்பார்த் திருந்தேன்; நீர் விரைவாகச் சென்று ஸீதா லக்ஷ்மணர்களுடன் ஸ்ரீராமபிரானைப் பூஜித் தெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வருக; ஏன் இதுவரையில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வராமல் ஆலஸ்யஞ் செய்தீர்களென்று அருளிச்செய்தனர். சீடரும் அதுகேட்டு ஆசிரியரைப் பணிந்து, ஸ்வாமி! அவ்வண்ணமே ஸ்ரீராமாதிகளை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வருவேனென்று கைகுவித்து விண்ணப்பஞ் செய்து விட்டு விரைவாக வெளியில் வந்து இளையபெருமாளை நோக்கி, லக்ஷ்மணரே! ஸ்ரீராமபிரான் எங்கே? எங்கே? விரைவாக வெழுந் தருளுக; உள்ளே புகுக என்று வினவினர். இளையபெருமாளும் அது கேட்டு அம்முனிவரை யாஶ்ரமத்தின் வாயிலில் அழைத்துக்கொண்டு வந்து பெருமாளைக் காட்டினர். அம்முனிவரும் பெருமாளைக் கண்டு அகஸ்தியபகவான் அருளிச்செய்த வாக்கியத்தை யுரைத்துத் தக்கபடி பூஜைசெய்து உள்ளே எழுந்தருளப் பண்ணிக்கொண்டு சென்றனர். பெருமாளும் ஸீதா லக்ஷ்மணர்களுடன் ஆஶ்ரமத்தினுட்புகுந்து, அங்கே அகஸ்தியாதிகளினுல் பிரதிஷ்டைசெய்யப்பட்டிருக்கின்ற பிரஹ்மா, அக்கினி, ஸ்ரீமஹாவிஷ்ணு, மஹேந்திரன், விவஸ்வான், ஸோமன், பகன், குபேரன், தாதா, விதாதா, வாயு, திருவநந்தாழ்வான், காயத்ரி, வஸுதேவர்கள், வருணன், கார்த்திகேயன், தர்மன் என்னும் இப்பதினேழு தேவர்களது ஸ்தானங்களைக் கண்ணுற்றுக்கொண்டே எழுந்தருளினர். அகஸ்தியபகவானும் சீடர்களுடன் கூடிப் பெருமாளை எதிர்கொண் டெழுந்தருளினர். பெருமாள் அவரைக் கண்டு இளையபெருமாளை நோக்கிப் பாரடா லக்ஷ்மணு! அகஸ்த்யபகவான் ஆஶ்ரமத்தினின்றும் புறப்படுகின்றனர்; இவரிடத்திலுள்ள தேஜோவிஶேஷத்தினுல் இவரே அகஸ்த்யபகவானென்றறிகின்றேனென்றருளிச்செய்து, அகஸ்தியமஹாமுனிவரைக் கிட்டித் திருவடிகளைத் தொழுது ஸீதா லக்ஷ்மணர்களுடன் கைகுவித்து நின்றனர். அகஸ்தியபகவானும் இவர்களை யழைத்துக்கொண்டு வந்து அர்க்யபாத்யாஸநாதிகளினுல் பூஜித்து, நல்வரவு வினவிப் பின் புட்கார்கவென்று அருளிச்செய்து, அக்கினியில் ஹோமஞ் செய்து வானப் பிரஸ்த விதியின்படி பூஜித்துப் போஜனமும் அளித்தனர். பின்பு, கைகுவித்து வீற்றிருக்கின்ற பெருமாளை யகஸ்தியமுனிவர் நோக்கி, கேளாய் ஸ்ரீராமா! தவசியாயி

னேன் முதலில் ஹோமஞ்செய்து, பின்பு அதிதியை யர்க்யாதிகளினல் பூஜிக்கக் கடவன். இவ்வண்ணஞ் செய்யானாகில், தப்புஸாக்ஷி சொன்ன வன்போல நரகில் வீழ்ந்து, தன்னுடைய மாம்ஸங்களையே தானுண்பான்; நீ எல்லா வுலகங்களுக்கும் நாதனும், தரும முடையோனும், மஹாரத னும், யாவர்க்கும் பிரிய முடையோனுமாகி யதியாக வந்தமையின், நீ பூஜைக் குரியவனென் றுரைத்துக் காய் கனி மலர் முதலியவற்ருல் பூஜித்து, மீளவும் பெருமாளை நோக்கி, ஸ்ரீராமசந்திரா! இங்கே பாராய், இந்த வில் விஸ்வகர்மனு லியற்றப்பட்ட ஸ்ரீமஹாவிஷ்ணுவினுடைய கோதண்டம்; இந்தக் கணையோவெனில், சூரியன்போல விளக்க முடை யது; பிரஹ்மாவினு லளிக்கப்பட்டது; இது ஒருகாலும் பயனற்ற தாகாது; எரிகின்ற அக்கினிகள் போன்ற பாணங்கள் நிறைந்த அம்பருத் தூணிக ளிவை யிரண்டும், தங்கத்தினுற்செய்த உறை யுடையதும், தங்கக் கட் டமைந்ததுமாகிய கூரியவாளிஃது, இந்த வில்லினுலேயே முன்பு ஸ்ரீமஹாவிஷ்ணு போரில் அஸுரர்களை வெற்றிகொண்டு, தேவர்களைப் பாதுகாத் தருளினர். இவைகளைத் தேவேந்திரன் உன் பொருட்டு என் னிடத்தில் வைத்துச் சென்றனன்; ஆதலின், நீ வெற்றி கொள்வதன் பொருட்டிவைகளைப் பெற்றுக்கொள்க; என்றருளிச்செய்து, அவைகளை எடுத் தளித்து, மீளவும் பெருமாளை நோக்கி யருளிச்செய்யலுற்றனர்.

ஆரண்யகாண்டத்தில் பன்னிரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

இந்தச் சருக்கத்தில் அகஸ்தியாஸ்ரமத்தில் எல்லாத்தேவாலயங்களும் இருக் கையில், சிவாலயம் மாத்திரம் இருந்ததாகக் கூருமையின், ஸாத்விகர்களுக்குச் சிவன் பூஜைக் குரியனல்லனென்று விளங்குகின்றது; பூஜைக் குரியனேல் அகஸ்தியமஹா யோகியும் அவனைப் பூஜித் திருக்கவேண்டுமன்றே? ஆதலின், சிவபூஜை செய்பவர் கள் தாமஸர்களே யாகுவாரென்று அறிஞர் கூறுகின்றனர்கள். ஸாத்விகர்கள் பிரஹ் மாதிகளைமாத்திரம் பூஜிப்பதொக்குமோவெனில், ஸ்ரீமத் பரமவைதிகர்கள் தேவதாந் தரங்களைத் தொழார்களே யன்றி, அப்ரபன்னர்கள் தொழுவார்கள். பிரபன்னர்களும், இங்குரைக்கப்பட்ட பதினேழு தேவர்களும், யாகவிசேஷத்தி லுரைக்கப்பட்ட பதி னேழு மந்திராக்ஷர தேவர்க ளாதலின், தத்தச் சரீரக பரமாத்ம புத்தியால் பூஜிப் பார்கள். ஸர்வ பதங்களும் முக்கிய விருத்தியால் ஸ்ரீமந்நாராயண வாசகமென்று சூத்ரகாரராலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றதெனவறிக; பெருமாள் ஸ்ரீபரசுராம னிடத்திலிருந்து விஷ்ணுதனுஸ்ஸை வாங்கி வருணனிடத்தில் கொடுத்ததாகப் பால காண்டத்திலே கூறப்பட்டிருக்கின்றது; இந்திரன் அந்த வில்லையே வாங்கிக்கொண்டு வந்து அகஸ்திய பகவானிடத்தில் வைத்தனன்; இத்தையே பெருமாள் அங்கீகரித் தனர். ஜனஸ்தான யுத்தத்திலே இதற் குபயோக மாதலின், இதுவரையில் சுமையே யென்று பெருமாள் முன்னே வருணனிடத்தில் கொடுத்தருளினரெனவுணர்க.

பதின்மூன்றுவது சருக்கம்.

பெருமாள் அகஸ்தியமுனிவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பஞ்சவடிக்குப் புறப்பட்டது.

கேளாய் ஸ்ரீராமா! யான் மிகவும் மகிழ்வுகொண்டேன்; என்னைக் காண்பதன் பொருட்டே ஸீதா லக்ஷ்மணர்களுடன் இங்கெழுந்தருளினை யல்லேயோ? வழிநடந் தச்ரமம் உங்களை மிகவும் வருத்துகின்றது; இந்த ஸீதையும், ஜனகராஜன் திருமகளும், காட்டுவோகைப் பூவினும் மெதுவாகிய திருமேனி யுடையவளும், இதுவரையில் துக்க முறாதவளு மாதலின், அவள் பெரும்பாலும் வருத்த முறுவாள்; வன மென்பது பற்பல தோஷங்களை யுடையது; பர்த்தாவினிடத்திலுள்ள ஸ்நேஹத்தி னால் இத்துன்பங்களைப் பொறுத்தும் இங்கெய்தினள்; இவள் இவ் வண்ணம் உன்னுடன் வந்ததென்பது மிகச் செயற்கரியது; ஆதலின், இவள் துன்புறாவண்ணம் செய்யக் கடவை.—

ఏషా హి ప్రకృతిస్స్త్రీణా మాసృష్టే రఘునన్దన
సమస్థమనురజ్యన్తి విషమస్థం త్యజన్తి చ॥

ஏஷாஹிப்ரக்ருதிஸ்த்ரீணா மாஸ்ருஷ்டேரகுநந்தந
ஸமஸ்த்தமனுராஜ்யந்தி விஷமஸ்த்தம்த்யஜந்திச.

கேளாய் ஸ்ரீரகுநந்தன! ஸ்திரீகள் பர்த்தா செல்வமுற்றிருக்கையில், காமுற்றுச் சேர்கின்றனர்கள்; ஆபத்துறுகையில், துறக்கின்றனர்கள்; இதுதான் பெண்களுக் கியல்பாயுள்ள பண்பு, பெண்கள் மின்னினின் நிலை யின்மையினையும், வாளின் கூர்மையினையும், கருடாநிலர்களின் வேகத்தை யும் அநுஸரிக்கின்றனர்கள்; உன் பாரியையாகிய இச்சீதையோவெனில், இத்தன்மையனவாகிய தோஷங்களின்றி, அருந்ததிபோலப் புகழத்தக்கவ ளாகின்றனள்; ஸ்ரீராமா! நீ ஸீதா லக்ஷ்மணர்களுடன் இங்கெழுந்தருளி யிருக்கின்றமையின், இவ்விடம் அலங்காரஞ் செய்யப்பட்டதுபோல விளங்குகின்றது; என்றிவ்வண்ணம் அகஸ்தியமுனிவர் பெருமாளை நோக்கி யருளிச் செய்தனர். பெருமாளும் எரிதழல்போன்ற அம்முனி வரை நோக்கிக் கைகுவித்து, அகஸ்தியமஹாயோகியே!—

ధన్యోఽస్మ్యనుగృహీతోఽస్మి యస్య మే మునిపుంగవః
గుణైస్సభ్రాతృభార్యస్య వరదః పరితుష్యతి॥

தன்யோஸ்ம்யநுக்ரஹீதோஸ்மி யஸ்யமேமுநிபுங்கவ:
குணைஸ்ஸப்ராத்ருபார்யஸ்ய வரத:பரிதுஷ்யதி.

முனிவர் கோமானாகிய தேவரே ஸீதா லக்ஷ்மணர்களுடன் கூடிய் அடியேனிடத்தில் அன்புகூர்ந்து மகிழ்கின்றமையின், யான் தன்யனும், அருள்செய்யப் பட்டவனு மாகின்றேன்; அடியேன் வாஸஞ் செய்வதற் குரிய நீர்வளமுள்ள இடம் எங்குளதோ அதனை யருளிச் செய்க; அவ் விடத்தில் யான் பர்ணசாலை கட்டிக்கொண்டு வாழ்வேனென் றருளிச் செய்தனர். அகஸ்தியபகவானும் பெருமாளருளிச்செய்த வாக்கியத்தைக் கேட்டு முகூர்த்தகாலம் தியானம் செய்து, முன்பு நடப்பதை ஞானக் கண்ணினால் கண்டு பெருமாளை நோக்கி, ஸ்ரீராமா! இதற்கிரண்டுயோஜன தூரத்தில் பஞ்சவடியென்னும் பெயருற்ற ஒரு ஸ்தானமுளது; அது காய் கனிக ளுடையதும், நீர்வள முற்றதுமாக விளங்குகின்றது; அவ் விடத்தில் நீ பர்ணசாலை கட்டிக்கொண்டு ஸீதா லக்ஷ்மணர்களுடன் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்துகொண் டிருக்கக்கடவை. காகுத்தா! தந்தை யுனக் குரைத்த காலமும் பெரும்பாலும் சென்று விட்டது; இனி யற்பகாலமே யுளது; ஆதலின், நீ விரைவில் பிரதிஜ் ஞையை முடித்துவிட்டுச் சுகமாக ராஜ்ஜியத்தையடைந்து மகிழ்வாய்; உன் தந்தை யொருவரே யல்லரோ? நல்வினையினர்; அவர் மூத்தகுமார னாகிய உன்னால் யயாதிபோலக்கடையேற்றப்பட்டு மகிழ்வுற்றனரல்லரோ? யான் தபோமகிமையினாலே நீ பிறந்ததுமுதல் இதுவரையிலும் நிகழ்ந்த சரிதங்களையும், உன்னுடைய திருவுள்ளத்திருக்கின்ற பாவத்தையும் அறிந்திருக்கின்றேன்; ஆகிலும், இங்கே என்னுடன் சிலநாள் வாஸஞ் செய்து, பின்பு பஞ்சவடிக் கெழுந்தருள லாகுமேயென் றிவ்வண்ண முரைத்தேன்; உன் பாவத்தை யான் அறிகின்றமையாலேயே பஞ்சவடிக் கெழுந்தருளுகவென்று உரைக்கின்றேன்; அந்தப் பஞ்சவடியும் மிக வழகிய தாதலின், ஸீதாபிராட்டி யங்கே மகிழ்வுறுவள்; அந்த இடம் கோதாவரிநதியினருகி லிருக்கின்றது; அதில் காய் கனிகள் நிறைந்தும், பலவகைப் பறவைக ளொலித்தும் விளங்குகின்றன; அவ்விடம் ஒருவரு மின்றி, ஏகாந்தமாயுள்ளது; அவ்விடத்தில் தீமை நேரின், அதனைப் போக்கிக்கொள்ள நீயே வல்லவன்; ஆகிலும், இங்கே வாழ்ந்து தாபஸர் களைப் பாதுகாத் தருளாயென் றுரைத்தேன்; இப்பொழுதே யங்கே எழுந்தருளவேண்டுமென்று திருவுள முளதாயின், இதோ இலுப்பை மரக் காடு தோற்றுகின்றதே? இதற்கு வடக்காக அதோ பெரிய ஆல மரத்தைச் சேரும் வழிபற்றிச் செல்வீர்களாகில், அந்த மலையின் ஸமீ பத்தில் பெரியமேடு எதிர்படும், அதன்மேலேறிச் செல்க; அவ்விடத்தி லேயே பஞ்சவடியென்பது இருக்கின்றது; அது எப்பொழுதும் மலர் கள் மலர்ந்தும், கனிகள் பழுத்தும், தளிர்கள் தளிர்த்தும், தழைத்தும் விளங்குமென் றுரை செய்தனர். பெருமாளும் அந்த வாக்கியத்தைக் கேட்டுமகிழ்ந்து, அவரைநோக்கி, முனிவரே!எங்களுக்குப் பஞ்சவடிக்குச் செல்வதன்பொருட்டுவிடைகொடுத்தருள்கவென்றுவிண்ணப்பஞ்செய்து

விடை பெற்றுக்கொண்டு, ஸீதா லக்ஷ்மணர்களுடன் அவரைப் பணிந்து, அந்த ஆஸ்ரமத்தை விட்டுப் பஞ்சவடியை நோக்கிப் புறப்பட்டருளினர். இவ்வண்ணம் ஸ்ரீராம லக்ஷ்மணர்க ளிருவரும் வில்லைக் கையிலேந்தி அம்பறுத் தூணிகளைக் கட்டிக்கொண்டு, அச்சமின்றி, தீரமுற்றுப் பிராட்டியாரோடு ஊக்கமுடையாராய்ப் பஞ்சவடியை நோக்கி எழுந்தருளினர்கள். *

ஆரண்யகாண்டத்தில் பதின்மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

பதினான்காவது சருக்கம்.

பெருமாள் பஞ்சவடிக்குப் போகும் வழியில் ஜடாயுவைக் கண்டது.

அநந்தரம் ஸ்ரீராம லக்ஷ்மணர்க ளிருவரும் பிராட்டியாருடன் பஞ்சவடிக்கு எழுந்தருளுகையில், நடுவழியில் பெரிய ஆலமரத்தின்மீ துட்கார்ந்திருந்த கிருத்திர ராஜனாகிய ஜடாயுவைக் கண்டு, மிகப் பெரிய உருவமுற்றிருந்தமையின், அரக்கனே இவ்வுருவங்கொண்டிருப்பதாக வெண்ணி, அவரை நோக்கிப் புள்ளிறையே! நீயாரென்று வினவினர்கள்; ஜடாயுவும் இவர்களை நோக்கிக் குமாரர்களே! யான் உங்கள் தந்தைக்குத் தோழனென் றுணர்கவென்று இனியமொழியினாலேயே இவர்களை மகிழ்வித்தனர். பெருமா ளதுகேட்டுத் தந்தைக்குத் தோழரென்று மதிப்புக்கொண்டு, பின்

* அகஸ்தியமஹாமுனி பெருமாளைத் தம்முடன் வாஸஞ்செய்யும்படி உரை செய்கையிலும், பெருமாள் அதனை மறுத்து, வேறிடம் காட்டும்படி கேட்டதினாலும், அகஸ்தியபகவானும் இவர் நம் வார்த்தையை ஏன் மறுக்கின்றனரென்று தியானஞ்செய்து பார்த்து, ஞானத்தினால் இவர் திருவுள்ளத்தையறிந்து, சினமுறாமல் மகிழ்ந்து புகழ்ந்தமையாலும், பெருமாள் ஸ்ரீமந்நாராயணனே யென்றும், கராதிராக்ஷஸ ஸம்ஹாரம் ஸமீபித் திருந்தமையின், அகஸ்தியாஸ்ரமத்தில் வாசஞ்செய்ய உடன்படாமல் மறுத்துக்கேட்டனரென்றும், இந்தஎண்ணத்தை யவரும் ஞானத்தினாலுணர்ந்தே பஞ்சவடிக்குப் போவென்று உரைக்கின்றேனென்று பெருமாளை நோக்கி யுரைத்தமையின், இவர் திருவுள்ள மிதுவே யென்றும் நன்கு விளங்குகின்றது; ஆதலின், பெருமாள் தான் பரதெய்வமென்பதை மறைப்பதற்காகவே மனுஷ்யபாவனையால் ஆங்காங்குச் சோக முற்றவர் போலவும், சினங் கொண்டவர் போலவும், மூடர்களுக்குத் தோற்றுகின்றனர்; தத்துவ முணர்ந்த அகஸ்தியர் முதலானோர்களுக்குப் பரதெய்வமாகவே விளங்கினர். இவரோ பரப்பிரஹ்ம மென்பதுவும், அங்கங்கே நன்றாக விளங்குகின்றது; ஆதலின், முற்றும் நன்றாக வுணர்ந் தையந்தீர்ந்து மகிழ்க;—

பவரை நோக்கிக் குலத்தையும், நாமத்தையும் வினவினர். ஜடாயுவும் ஸ்ரீராமபிரானுடைய வாக்கியத்தைக் கேட்டு அவரை நோக்கி, ஸ்ரீரகுநந்தனு! கேளாய் முற்காலத்தில் கர்தமர், விக்கிரீதர், சேஷர், ஸம்ஶ்ரயர், ஸ்தாணு, மரீசி, அத்திரி, க்ரது, புலஸ்தியர், அங்கிரர், பிரசேதர், புலஹர், தக்ஷர், விவஸ்வான், அரிஷ்டநேமி, காஶ்யபரென்னும் பிரமர்கள் உலகினைப் படைத்தனர்கள். அவர்களுள் தக்ஷருக்கு அறுபது பெண்கள் பிறந்தனர்கள். அவர்களுள் எட்டுப்பெண்களைக் காஶியபர் விவாஹஞ்செய்துகொண்டனர். அவர்கள் அதிதி, திதி, தனு, காளிகை, தாமரை, குரோதவசை, மனு, அநலை என்னும் பெயருடையார்கள்; காஶியபர் இவர்களை நோக்கிப் பத்தினிகளே! மூவுலகங்களுக்கும் இறையவர்களாகத்தக்க பிள்ளைகளைப் பெறுக வென்று கட்டளையிட்டனர். இதில் அதிதி திதி காளிகை என்பவர் களே விருப்புற்றனர்கள். இதரர்கள் விருப்புக்கொண்டிலர்கள்; ஆதலின், அதிதி ஆதித்தர்கள் பன்னிருவர், வஸுதேவர்கள் எண்மர், ருத்ரர்கள் பதினொருவர், அஶ்விநர்கள் இருவர்கள், ஆக முப்பத்துமூன்று பிள்ளை களைப் பெற்றனள்; திதி தைத்யர்களைப் பெற்றனள்; முன்பு இப்பார் முழு தும் அவர்களுடையதாகவே யிருந்தது; தனுவென்பவள் அஶ்வக்ரீவனைப் பெற்றனள்; நரகன் காலகன் என்பவர்களைக் காளிகையும் பெற்றனள்; தாம்ரை என்பவள் க்ரௌஞ்சி, பாஸி, ஶ்யேனி, த்ருதராஷ்ட்ரீ, சுகி என் னும் ஐந்து பெண்களைப் பெற்றனள்; அவர்களுள் க்ரௌஞ்சி உலூகங் களையும், பாஸி பாஸங்களையும், ஶ்யேனி பருந்துகளையும், கிருத்ரங்களையும், த்ருதராஷ்ட்ரீ ஹம்ஸகள ஹம்ஸ சக்ரவாகங்களையும், சுகி நதையையும் பெற்றனர்கள். இந்த நதைக்கு விநதை பிறந்தனள்; குரோதவசை என் பவள் ம்ருகி, மிருகமந்தை, ஹரி, பத்ரமதை, மாதங்கி, சார்த்தூலி, ஶ்வேதை, ஸுரபி, ஸுரஸை, கத்ரு என்னும் பத்துப் பெண்களைப் பெற்ற னள். ம்ருகி என்பவள் மிருகங்களையும், மிருகமந்தை என்பவள் கரடி, சமரம், ஸ்ருமரம் என்பவைகளையும், ஹரி என்பவள் சிங்கம் வானரம் இவைகளையும், பத்ரமதை என்பவள் இராவதியையும் பெற்றனர்கள். இராவதி ஐராவதத்தைப் பெற்றனள்; மாதங்கி யானைகளையும், சார்த்தூலி என்பவள் புலி கோலாங்கூலங்களையும், ஶ்வேதை என்பவள் திசாகஜங்களை யும் பெற்றனர்கள். ஸுரபி என்பவள் ரோஹிணி கந்தர்வி என்பவர்களையும் பெற்றனள்; ரோஹிணி பசுக்களையும், கந்தர்வி குதிரைகளையும் பெற்றனர் கள்; ஸுரஸை பல தலையுடைய நாகங்களையும், கத்துரு ஒரு தலையுடைய பன்னகங்களையும் பெற்றனர்கள். மனு வென்பவர்கள் மனுஷியர்களைப் பெற்றனள்; அநலை என்பவள் புண்யகரமாகிய கனிகளையுடைய விருக்ஷங் களை யுண்டுபண்ணினள்; அந்தக் கத்துரு வென்பவளே பூமியைத் தலை மிசை ஏந்திக்கொண் டிருக்கின்ற ஆயிரம் படங்களையுடைய திருவனந்தாழ் வானைப் பெற்றனள்; விநதை புத்திரர்கள் அருணன் பெரிய திருவடி யென்னு மிருவர்கள், அந்த அருணன் பிள்ளையே நான்; ஜடாயுவென்னும்

பெயருடையோன்; என் தமையன் ஸம்பாதி; எங்களுக்குத் தாய் ஸ்யேநி யென்பவள். இத்தன்மையனாகிய யான் கொடிய மிருகங்களும், ராக்ஷஸர்களும் திரிகின்ற இக்காட்டி லுனக்குத் துணையாக இருந்து, நீ லக்ஷ்மணனுடன் புறத்திற் செல்லுங் காலேயில், யான் ஸீதையைப் பாதுகாப்பேனென்று உயிர்களின் உற்பத்தியுடன் தன் பிறப்பினையு முரைத்தனர். பெருமாளும் அதுகேட்டு மகிழ்ந்து, ஜடாயுவைத் தழுவி வணங்கித் தன் தந்தைக்குத் தோழனென்பதைப் பலமுறைகேட்டுப் பிராட்டியாரைப் பாதுகாத் தருளும்படி யொப்புவித்து, ஸீதா லக்ஷ்மணர்களுடனும், அந்த ஜடாயுவுடனுங் கூடப் பஞ்சவடிக் கெழுந்தருளினர்.

ஆரண்யகாண்டத்தில் பதினான்காவது சருக்கம் முற்றிற்று.

பதினைந்தாவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளால் பஞ்சவடியில் கட்டப்பட்ட பர்ணசாலையில் பிராட்டியாருடன் எழுந்தருளி யிருந்தது.

அநந்தரம் பெருமாள் பஞ்சவடி சேர்ந்தருளி, இளையபெருமாளைநோக்கித் தம்பி லக்ஷ்மணா! அகஸ்தியமஹாயோகியால் அருளிச்செய்யப்பட்ட பஞ்சவடி வந்து சேர்ந்தோம்; இவ்விடத்திலெங்கும் கண்ணுற்றுப் பாராய், எவ்விடம் நாம் பர்ணசாலை கட்டிக்கொண்டு வாழ்வதற் குரியதாகின்றது; அந்த இடம் ஸீதை நீ நான் மூவரும் மகிழ்வுறத்தக்கதாகவேண்டும்; அந்த இடமும் அழகுற்றதாகவேண்டும்; அதனைச்சார்ந்த காடும் மிகவழகுற்றிருக்கவேண்டும்; தூப்புல், ஸமித்து, மலர், காய், கனி, கிழங்குகளும் நிறைந் திருக்கவேண்டும்; நீரும் அருகி லிருக்கவேண்டும்; இப்படிப்பட்ட இடத்தைத் தேடாயென் றருளிச் செய்தனர். இளையபெருமாளும் அதுகேட்டுக் கைகுவித்துக்கொண்டு, ஸீதாபிராட்டியார்க் 'கெதிரிலே பெருமாளை நோக்கி, எம்மையரே! தேவர் நெடுநாள் எழுந்தருளியிருந்து அடியேனுக்கு ஆஜ்ஞை செய்துகொண் டிருக்கையில், அடியேன் தேவர் கட்டளையின்படி நடப்பவனே யன்றி, ஸ்வதந்தரனுகேன்; தேவரே இவ்விடத்தில் பர்ணசாலை கட்டென்று சுட்டிக் காட்டிக் கட்டளை செய்தருள்வீராகில், யான் அவ்வண்ணமே செய்வேன்; ஆதலின், தேவரே ஆஜ்ஞை செய்தருள்க வென்று விண்ணப்பஞ் செய்தனர். பெருமாளும் அதுகேட்டு போர வுகந்தருளி, தாமே ஆராய்ந்து, நல்ல தோரிடத்தைக்கண் டங்கெழுந் தருளி, இளையபெருமாளுடைய இரண்டு கரங்களையும், தமது திருக்

கரத்தினுல் பற்றி, அவரை நோக்கி, அடா லக்ஷ்மண ! இந்த இடம் மேடு பள்ள மின்றிச் சமமாகவும், மலர்ந்த மரங்கள் சூழ்ந்தும், குளிர்ந்து மிருக்கின்றது; ஆதலின், இவ்விடத்திலேயே பர்ணசாலை கட்டக்கடவை. இதற்கருகில் மலர்ந்து, மணங்கமழ்ந்து, மதுதோய்ந்த கமலங்களையுடைய புஷ்கரிணியும் விளங்குகின்றது; அகஸ்தியமுனிவரா லுரைக்கப்பட்ட கோதாவரி நதியும் அருகில் பெருகி யோடுகின்றது; இதுவும் மலர்ந்த கமலங்கள் நிறைந்தும், ஹம்ஸஸாரஸாதி நீர்ப்பறவைக ளொலித்துத் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தழைத்த மரங்களடர்ந்த கரைகள் பொருந்தியும் விளங்குகின்றது; நெடுந்தூரத்திலு மிருக்கின்றிலது; மிக வருகிலும் இருக்கின்றிலது; மான்களின் கூட்டங்கள் நிறைந்தும், மயில்களினுல் கேகாதொனி செய்யப்பட்டதும், பற்பல குகைகள் பொருந்தியும், உயர்ந்துமுள்ள மலைகள் சுற்றிலுமுள்ளன; வெள்ளி தங்கம் முதலிய தாதுக்களினுல் சூழப்பட்ட யானைகள் ஜாலகங்களுடையனபோல விளங்குகின்றன; ஸாலதாலதமால கர்ஜூரபநஸாம்ரக நீவாரதி மிசநாகபுந்நாகரஸால தமாலாசோகதிலக சம்பகேதக சந்தனஸ்பந்தன நீபபனஸலி குசதவா ஸ்வகர்ண கதிரஸமீகிம் சுகபாடலாதிகளா லடர்ந்து குளிர்ந்துள்ள இவ்விடத்திலேயே இந்த ஜடாயுவுடன் கூடி வாஸஞ் செய்வோம்; ஆதலின், இவ்விடத்திலே பர்ணசாலை இயற்றுகவென் றருளிச் செய்தனர். இளையபெருமாளும் அது கேட்டு உடனே சுவரொடுத்துத் தூண்கள் நாட்டித் தூலங்களையேற்றி, மூங்கில்களைப் பரப்பிக் கயிறுகளா லிறுக்கி, வன்னித் தழைகளை நிரைத்து, தருப்பம், நாணல், விழல்களை நிரப்பிக் காற்றும் புகாவண்ணம் வேய்ந்து, தரையைச் சமமாக நிரவிக் கட்டினைசெய்து, கோதாவரிக்குச் சென்று நீரிலாடி மலர் காய் கனிகளைப் பறித்துக் கொண்டுவந்து, விதியின்படி புஷ்பபலியும், சாந்தி ஹோமமுஞ் செய்து, சிங்காரித்துப் பெருமாளை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்து காட்டினுர்; பெருமாளும் பிராட்டியாருடனெழுந்தருளிப் பர்ணசாலையின் அழகினைக் கண்டு, திருவுளமுகந்து, இளையபெருமாளைத் தழுவிக்கொண்டு அவரை நோக்கி, அடா தம்பி ! நீ இந்தப் பர்ணசாலையை மிகவும் அழகாகக் கட்டி யிருக்கின்றனை; இதனுல் யான் மிக மகிழ்வுற்றேன்; நீ செய்த இந்தச் செயலுக்கு வெகுமதி கொடுக்கவேண்டு மாதலின், இந்த ஆலிங்கனமே வெகுமதியாகக் கடவது. பாவமுணர்ந்தவனும், தரும முணர்ந்தவனும், நன்றி யுணர்ந்தவனுமாகிய உன்னுல் என் தந்தை இறந்திலரென்று அருளிச்செய்து, அவ்விடத்திலேயே ஸீதா லக்ஷ்மணர்களுடன் கூடி விண்ணுலகில் சசியுடனும், உபேந்திரருடனும் கூடிய தேவேந்திரன்போலச் சிறிதுகாலம் வாஸஞ்செய்து மகிழ்ந்தின்புற்றனர்.

ஆரண்யகாண்டத்தில் பதினைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

பதினாருவது சருக்கம்.

பெருமாள் ஹேமந்த காலத்தில் பரதாதிகளை நினைந்துகொண்டு கோதாவரியில் நீரிலாடியது.

பெருமா ளிவ்வண்ணம் பஞ்சவடியில் எழுந்தருளி யிருக்கையில், சரத்காலம் சென்று, பனிக்காலம் நிகழ்கையில், ஒருநா ளிரவு நீங்கிப் பொழுது விடிந்த பின்னர், நீரிலாடுவதன் பொருட்டுக் கோதாவரி நதிக் கெழுந்தருளினர். இளையபெருமாளும் கலசத்தைக் கையிலேந்திக்கொண்டு பிராட்டியாருடன் பின்றொடர்ந்து செல்லுங்காலையில், பெருமாளை நோக்கி, எம்மையரே! தேவர்க்கு மிகப் பிரியமுள்ள ஹேமந்தரிது தோன்றிற்று; இதனாலேயே வருஷம் அலங்கரிக்கப்பட்டதுபோலத் திகழ்கின்றது; இக் காலத்தில் உலகம் பனியினால் கொடிய தாகின்றது; பூமி பயிர்களால் செழித்து விளங்குகின்றது; ஜலங்கள் பரிசிப்பதற்கு மரியன; செழுந்தீ மிக வினியது; இக்காலத்தில் இல்லறத்தோர்கள் ஆக்ரயணமென்னும் யாகஞ்செய்து, தேவபிதிரர்களைத் திருப்தியுறுவித்து மகிழ்கின்றனர்கள்; நாட்டிலுள்ளோர்கள் பெருகிய காமுடையோர்க ளாகின்றனர்கள்; அரசர் களும் பகைவர்மேல் படையெடுத்துச் செல்லுகின்றனர்கள்; வெய்யோன் தென்றிசையினைச் சேர்ந்து திகழ்கின்றமையின், வடதிசை நன்கு விளங்கு கின்றிலது; இப்பொழுது வெய்யோன் இமயமலைக்கு நெடுந்தூரத்தி லிருப் பதினால், இமயமலை இப்பொழுதே ஹிமவானென்னும் பெயரை யதார்த்த மாக்கிப் பனியைப் பெருக்கி விளங்குகின்றது; பகல்கள் நடப்பதற் குரி யனவும், இனிய வெயிலை யுடையனவும், இனிய அக்கினியை யுடையன வும், பிரியமல்லாத நீர் நிழல்களை யுடையனவு மாகுகின்றன; பனி மிகுந் தும், சீதம் வளர்ந்தும், காற்றுப் பெருகியு மிருக்கின்றன; இரவுகளும் புறத்தில் துயில்வதற்றும், பனிகள் தோய்ந்தும், பகலினும் வளர்ந்தும் நிகழ்கின்றன; திங்களும் ஆதித்தனிடத்தில் பற்றிய அழகினையுடைய வனும், பனியினால் மலினமடைந்த மண்டலமுடையவனுமாகி நெட்டுயிர்ப் பினால் அழுக்கடைந்த கண்ணாடிபோல விளங்குகின்றிலன்; பௌர்ண மாஸியிலும், நிலவு பனியினால் மலின மடைந்து, நன்கு நிலவுகின்றிலது; நிலவற்ற இரவும் வெயிலில்வாடிய பிராட்டியாரைப்போலவே காணப்படுகின் றது; இயல்பாகவே குளிர்ச்சியுள்ள மேல்காற்றும், பனியினாலிருமடங்குற்ற குளிர்மை யுடையதாக வீசுகின்றது; வெய்யோன் உதிக்கையில், காடுகள் ஜலதூமங்களினால் மறைக்கப்பட்டுள்ளன; சம்பாப் பயிர்களும், கர்ஜூர புஷ்பங்கள்போன்ற நுனிகளில் முதிர்ந்த கதிர்கள் திகழ்ந்தும், சாய்ந்தும், தங்கநிறமுற்றும் விளங்குகின்றன; கதிரவனும், பனி தோய்ந்த கிரணங்க ளுடையனாகிச் சந்திரன்போலக் காணப்படுகின்றனன்; அவன் காலையில்

வெப்பமற்றும், மத்தியானத்தில் இனிமையாகிய வெப்பம் பொருந்தியு மிருக்கின்றனன் ; செவப்புற்றும், கொஞ்சம் வெண்மைபொருந்தியு மிருக்கின்ற வெயிலும் பூமியில் விளங்குகின்றது ; உத்யான பூமியும், பனி படிந்து நனைந்த இளம்புற்களை யுடைய தாகின்றது ; காட்டு யானை மிகவும் பிபாஸையுற்றும், நீர் குடிக்கும்படியாகத் துதிக்கையை நீரில் நீட்டி மிகத் தண்மையால் நீரைக் கொள்ளாமலே துதிக்கையை வாங்கிக் கொள்ளுகின்றது ; இந்த நீர்ப் பறவைகளும், குளிரினால் அச்சமுடையோர் போரில் புகாமைபோலே நீரில் புகுகின்றில ; வனராஜிகளும், பனியினால் மறைக்கப் பட்டும், மலர்களின்றியும் உறங்குகின்றனபோலும்; ஜலதூமத்தினால் மூட்டப் பட்ட நீருடையனவும், தொனியாலே அறியத்தக்க ஸாரஸ பறவைகளை யுடையனவும், பனியினால் நனைந்த மணலுள்ள தீரங்களுடையனவுமாக நதிகளும் விளங்குகின்றன; பனி படிவதினாலும், வெய்யோன் விளங்காமையினாலும், குளிர்மையினாலும், மலை நுனியிலுள்ள நீரும் விஷம்போலாகின்றது ; கமலங்கள் பனி படிந்து, மட்லுதிர்ந்து, நாளம்மாத்திரம் மிகுந்திருக்கின்றமையின், தாமரை யோடைகளும் விளங்குகின்றில ; இக்காலத்தில் ஸ்ரீபரதாழ்வான் தேவரிடத்தில் பத்தியால் தவஞ்செய்துகொண்டிருக்கின்றனர் ; அவர் ராஜ்ஜியங்களையும், போகங்களையுந் துறந்து, தவமுற்றுக் குளிர்மை பொருந்திய சிலாதலத்தில் படுத்திருக்கின்றனர் ; அவரும் இப்பொழுது பிரகிருதிகளினால் சூழப்பட்டு ஸரயூநதிக்குச் செல்வர் ; மிகவும் ஸுகமாக வளர்ந்தவரும், ஸுகுமாரருமாகிய அவர்பின் மாலைகளில் எவ்வண்ணங் குளிர்ந்த ஸரயுவில் மூழ்குவார் ; செந்தாமரைபோன்ற கண்களை யுடையாரும், வீரரும், நீலமேகம்போன்ற திருமேனியரும், தர்ம மறிந்தவரும், ஸத்யவாதியும், நாணமுற்றவரும், புலன்களை வென்றவரும், இனியவை மொழிபவரும், தீர்க்கபாகுவும், மதுரருமாகிய அவர் தேவரிடத்திலுள்ள பத்தியால் போகங்களைத் துறந்து, தேவரையே தஞ்சமடைந் திருக்கின்றனர்; தேவர் பிராதாவாகிய ஸ்ரீபரதாழ்வானாலன்றோ? விண்ணுலகம் ஜயிக்கப் பட்டது ; தேவர் காட்டி லெழுந்தருளி யிருக்கையிலும், அவர் நாட்டி லிருந்தே தேவர்போலத் தவசியாகித் தேவரை யநுஸரிக்கின்றனர் ; உலகினில் புத்திரர்கள் தாயைக் கொள்வார்களே யன்றித் தந்தையைக் கொள்ளார்களென்று பழைமொழியுளது; ஸ்ரீபரதாழ்வானால் அது பொய்யாகச் செய்யப்பட்டது ; ஸ்ரீபரதாழ்வானுக்குத் தாயும், ஸ்ரீதசரதசக்கரவர்த்திக்குப் பத்தினியுமாகிய கைகேயி ! இவ்வண்ணம் கொடுமைகொண்டதேனோ ? என்றுரை செய்தனர். பெருமாளதுகேட்டுக் கைகேயியை இகழ்ந்ததைப் பொறுமல் இளையபெருமாளை நோக்கி, அப்பா தம்பி ! நீ கைகேயியாரை யொருபொழுது மிகழற்க ; பரதனுடைய குணங்களையே பெரும்பாலும் புகழ்ந் துரையாய் ; யான் வனவாஸம் தீர்ந்த பின்பே திருவயோத்திக்குச் செல்லவேண்டுமென்று நிச்சயங்கொண் டிருக்கையிலும், பரதனிடத்திலுள்ள அன்பினால் இப்பொழுதே போவோமென்று மனங் கலக்க

முறுகின்றது; மிகவும் பிரியமுள்ளனவும், மதுரமுள்ளனவும், மனத்தை மகிழ்விக்கத் தக்கனவும், அமிழ்தம் போன்றனவுமாகிய பரதனுடைய வாக்கியங்களையே யான் நினைந்து மகிழ்கின்றேன்; யான் பரதனுடனும், சத்துருக்கநனுடனும், உன்னுடனும் கூடி மகிழ்வேனே? என்றிவ்வண்ணமுரைத்துப் புலம்பி, கோதாவரியை யடைந்து நீராடி, தேவரிஷி பிதிரர்களைக் குறித்துத் தருப்பணஞ்செய்து, ஸூர்யோபஸத்தானஞ்செய்து தேவர்களையுந் துதித் தருளினர். இவ்வண்ணம் ஸீதா லக்ஷ்மணர்களுடன் நீரிலாடித் தூய்மையராகிய பெருமாள், பார்வதி நந்திகளுடன் ஸ்நாநஞ் செய்த சங்கரன்போல விளங்கினர்.

ஆரண்யகாண்டத்தில் பதினாறுவது சருக்கம்

முற்றிற்று.

இந்தச் சருக்கத்தில் இளையபெருமாள் ஹேமந்தருதுவை வர்ணனை செய்கிற வியாஜத்தால் ராவணனால் உலகம் மிகப் பீடிக்கப் படுகின்றமையின், அவனை விரைவில் கொலைசெய்ய முயற்சி கொள்ளவேண்டுமென்று பெருமாளுடன் ஸூசனை செய்கின்றனர்; அதெங்ஙனே யென்னில், (அயம்ஸகாலஃ) என்றதனால் காலன் போன்ற ராவணன் என்றும், (அலங்க்ருதஃ) என்றதனால் அவனால் அழிக்கப்பட்டதென்றும், பனி மூடிற் றென்பதினால், உலகம் மோகமுற் றிருக்கின்றதென்றும், பூமி (ஸஸ்ய ஶாலினி) என்பதினால் பாரம் மிகுந்ததென்றும், (ஜலாந்யநுபபோக்யாநி) என்பதினால் போகங்கள் துறக்கப்பட்டன வென்றும், அக்கினியும் ராவணபயத்தால் வெப்பம் நீங்கினனென்றும், (நவாக்ரயணபூஜாபிஃ) ந, வா, என்று பத மாதலின், ஸாதுக்கள் யாகாதிகள் செய்கின்றிலர்களென்றும், எல்லோரும் காமமே மேற்கொண்டனர்களென்றும், ராஜர்கள் அலைகின்றனர்களென்றும், வெய்யோனும் தென்றிசையிலிலங்கையில், ராவணஸேவை செய்கின்றனனென்றும், அரக்கர்கள் பயமற்றுப் பகலிலும் திரிகின்றனர்களென்றும், வீரர்களடங்கினர்களென்றும், தீயர்களோங்கினர்களென்றும், காடுகளும் முனிவர்களின்றிச் சூன்யமாயினவென்றும், இரவில் தேவர்களும் போகந் துறந்தனர்களென்றும், ராவணன் வெய்யோன்போலத் திகழ்கையில், சந்திரன்போல நீர் விளங்குகின்றிலீரென்றும், நிலவுற்ற ராத்திரிபோலச் சீதையும் விளங்குகின்றிலளென்றும், கரன்மேல் காற்றுப்போல வீசுகின்றனனென்றும், காட்டிலுள்ள முனிவர் கண்ணீர்விட் டழுகின்றனர்களென்றும், அவர்கள் சம்பாப் பயிர்கள்போலத் தலை வணங்கி யும்மைச் சரணமடைந் திருக்கின்றனர்களென்றும், ராவணனைக் கொலை செய்யாமல் சந்திரன்போல ஏன் ஒளிகுன்றி இருக்கின்றீரென்றும், பனித்துளிபோல முனிவர்கள் கண்ணீர்பெருக்கி யழுகையில், தேவர் கருணைகொண்டு கடாக்ஷித் திருக்கின்றீரோ யென்றும், காட்டு யானைபோன்ற இந்திரனும் ஆசைகொண்டும் பயத்தால் போகிக்கின்றிலனென்றும், நீர்ப் பறவைகள் போன்ற முனிவரும் நிஷ்டை குலைந்தனர்களென்றும், வநராஜிபோன்ற வநிதையர்களும், ராவணனால் வருத்தப்பட்டுக் கண்ணீர பெருக்கி மோக மடைந்தனர்களென்றும், நதிகள்போலவும் நாரிக ளிருக்கின்றனர்களென்றும், ராவண னிவ்வண்ணம் வருத்தினும், தேவர் வீரங்கொள்ளாமல் வெய்யோன்போல ஒளிகுன்றி இருக்கின்றமையின், ரிஷிகள் மிக வருந்துகின்றனர்களென்றும், மூப்பினர்களும், பொருளுள்ள

பதினேழாவது சருக்கம்.

சூர்ப்பணகை பெருமாளைக் கண்டு காமுற்றுப் பதியாகும்படி வேண்டியது.

பெருமா ளிவ்வண்ணம் ஸீதா லக்ஷ்மணர்களுடன் கோதாவரியில் ஸ்நாநஞ்செய்து, ஆஸ்ரமத்திற் கெழுந்தருளி நித்யகர்மங்களை முடித்துக் கொண்டு பர்ணசாலையில் வீற்றிருந்து, பற்பல கதைகளை யருளிச் செய்து கொண்டு, பிராட்டியினுல் சித்திராநக்ஷத்திரத்துடன் கூடிய சந்திரன்போல விளங்கினர். அத்தருணத்தில் ராக்ஷஸ ராஜனுகிய ராவணனுக்கு உடன் பிறந்தாளாகிய சூர்ப்பணகை யென்பவள் தற்செயலாய் அங்கு வந்து தேவ குமாரனுக்கு நிகரானவரும், அகன்ற மார்பினையும், ஜானுவளவும் நீண்ட திருத்தோள்களையும், செந்தாமரை இதழ்போன்ற திருக்கண்களையும், முழு மதிபோன்ற திருமுகமண்டலத்தையு முடையவரும், மிகவும் காண்பதற் கினியவரும், மதயானைபோன்ற நடை யழகினை யுடையவரும், ஜடை திரித்துக்கொண் டிருப்பவரும், காட்டுவாகைபோன்ற ஸௌகுமார்ய முற்ற வரும், சிறந்த பல முடையவரும், ராஜலக்ஷணங்கள் பொருந்தியவரும், கருநெய்தல்போன்ற திருமேனி யுடையவரும், கந்தர்ப்பனுக்கு நிகராகிய அழகினை யுடையவருமாகிய ஸ்ரீராமசந்திரனைக் கண்டு, வடிவழகிலீடுபட்டு மயங்கி, ஸுமுகனைத் துர்முகியாகியும், நுண்ணிடையனை மஹோதரியாகி யும், தாமரை மட்டல்போலகன் றழகிய திருக்கண்களை யுடையவனை இடுங்கி யாழ்ந்து கோரமாகிய கண்ணுடையளாகியும், கறுத்து நீண் டழகிய கேசத்தை யுடையவனை சிவந்து சுருண்டு விரிந்த தலைமயிரை யுடையவ ளாகியும், இனிய ரூப முடையவனைக் கொடிய ரூப முடையவளாகியும், செவிக் கினியமொழி யுடையவனைக் கழுதை குரல்போலப் பயங்கரமாகிய தொனி யுடையவளாகியும், யௌவனமுடையவனை மிகக் கொடிய மூப்பின ளாகியும், பேசுந்திறமையினனைப் பிதற்றுபவளாகியும், நல்லொழுக்க முடையவனைத் தீயொழுக்க முடையவளாகியும், பிரியமுடையவனை யப் பிரிய முடையவளாகியும், பெருமாளை நோக்கி, மஹாபுருஷா! நீர் ஜடை

வர்களும், எல்லாவற்றையுந் துறந்து தனியே நின்றனர்களென்றும், பரதகுண வர்ண நத்தால் விபீஷணுழ்வான் உம்மிடத்தில் பத்திகொண் டிருக்கின்றன னெனவும், கைகேயி நிந்தையினுல் ஸீதையை ரக்ஷிக்கின்ற ராக்ஷஸீ நிந்தையும், சூர்ப்ப ணகை யின் நிந்தையும், பரதகுணுநு மோதநத்தால், விபீஷணகுணுநு மோதனமும், பெருமாள் கோதாவரியில் அபிஷேகங் கொண்டதினுலும், ருத்ரோபமானத்தாலும், ராவணுதி ஸம்ஹாரம் செய்து பட்டாபிஷேகங் கொள்வாரொன்றும் நன்கு விளங்கு கின்றது; அன்றியும், ராவணன் சாங்காலம் கிட்டிற்றென்றும், இவைகள் அப சகுனக் குறிகளெனவும் தோற்றுகின்றது;—

திரித்துத் தவசிவேஷம் பூண்டும், மனையாளுடன்கூடி வில்லுங் கணையும் கையிலேந்திக்கொண்டு ராக்ஷஸர்கள் திரிகின்ற இங்கெழுந்தருளியதற்குக் காரணம் யாது ? உண்மையாக உரை செய்கவென்று வினவினள். பெருமாளும் சூர்ப்பணகையா லிவ்வண்ணம் வினவப்பட்டவரா்கிக் கபடமற்றவ ராதலின், உண்மையாக மொழியலுற்றனர். இவர் எப்பொழுதும் பொய்யுரைக்கத் திருவுள முறுகின்றில ராதலின், தாபஸவேஷத்தில் பெண்களுடன் பொய்யுரைத் தருள்வரோ ? கேளாய் பெண்ணே ! தசரதரென்னும் மஹாராஜர் தேவேந்திரனுக்கு நிகராக எழுந்தருளி யிருந்தனர். யான் அவர்க்கு மூத்தகுமாரன், ராமனென்னும் பெயருடையேன், என் பாரியையாகிய இவளும் ஜனகமஹாராஜன் திருமகள், ஸீதையென்னும் பெயருடையாள், யாங்கள் தாய் தந்தையர்களது கட்டளையினால் இக்காட்டை யடைந்து தருமம் செய்கின்றோம் ; நீ யாவள் ? யார் பெண் ? யாருடைய பாரியை ? இவற்றைக் கேட்டுணர விரும்புகின்றேன் ; உன்னுருவம் மிக வழகுற்றிருக்கின்றமையின், நீ யரக்கியல்லளென வெண்ணுகின்றேன் ; ஆதலின், நீ இவ்விடத்திற் கேன் வந்தனை ? நீயும் உண்மை யுரையாயென்று பெருமாள் வினவியருளினர். அவ்வாறு வினவப்பட்ட சூர்ப்பணகியும் பெருமாளைநோக்கிக் காமமோஹிதையாகி, கேளீர் மிக வழகரே! உண்மையாக உரைசெய்வேன் ; யான் சூர்ப்பணகையென்னும் ராக்ஷஸி ஆதலின், யான் அச்சமின்றிக் கண்டோர் அச்சமுறும்படி காமரூபிணியாகி இக்காட்டில்திரிகின்றேன்; எனக்குடன்பிறந்தவன் ராவணனென்னப்பட்டவன், அவன் அரக்கர்களெல்லோர்க்கும் ராஜன், மிகப் பராக்ரம முடையவன், அவன் பெயரை நீரும் செவியுற்றிருத்தலாகும், அவன் தம்பி கும்பகர்ணன், எப்பொழுதும் உறக்கமுடையோன், அவன் தம்பி விபீஷணன், இவன்மாத்திரம் ராக்ஷஸசேஷ்டை யுடையோனல்லன் ; மிக நல்லோன் ; அன்றியும், கரதூஷணர்களென்னு மிருவர்கள் ஸஹோதரர்களிருக்கின்றனர்கள் ; உம்மை யான் கண்டதுமுதல் யான் அவர்களை மீறி ஸ்வதந்தரையாகின்றேன் ; ஆதலின், உம்மைக் கண்டு புருஷோத்தமராகிய உம்மையே பர்த்தாவாக எண்ணி வந்தடைந்தேன் ; யான் மிக மகிமை யுற்றவள், சிறந்த பலமுற்றவள், வேண்டுமிடத்திற்குச் செல்ல வல்லவள்; ஆதலின், நீர் எனக்கு பர்த்தாவாகி நெடுநாள் வாழ்ந் தின்புறுக ; இந்தத் திறமையற்ற சீதையா லென்னபயன் ? இவள் மிகவும் விகாரமுற்றவள் ; ஆதலின், இவள் உமக்குத் தக்கவளல்லள் ; யானே உமக்கு மிகவுந் தகுதியுற்றவள், என்னை நன்குகக் கண்ணுற்றுப் பாரீர் ; உமக்குத் தகுதியற்ற இவளையும்,

உம்முடைய தம்பியையும், யான் பக்ஷித்து விடுகின்றேன்; பின்பு, நீர் பகையற்று என்னுடன் கூடி இன்புற்றுப் பற்பல மலைகளையும், காடுகளையும் கண்ணுற்று மகிழ்ந்து வாழ்க வென்று பிதற்றினள். பெருமாளும் இந்த வார்த்தையைக் கேட்டு நகைத்து, அவளை நோக்கி, மேற்கூறுமாறு மொழியலுற்றனர். *

ஆரண்யகாண்டத்தில் பதினேழாவது சருக்கம்
முற்றிற்று.

பதினெட்டாவது சருக்கம்.

ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் சூர்ப்பணகையை யலைத்து மூக்குச் செவிகளை யரிந் தோட்டிவிட்டது.

அநந்தரம் பெருமாள் காமவேட்கைகொண்ட சூர்ப்பணகையை நோக்கி, அடி சிறந்த வழகுடையாளே! யானிந்தச் சீதையை மனைவியாகக் கொண்டிருக்கின்றேன்; உன்னைப் போன்றவர்களுக்குச் சக்களத்தியிருப்பது மிகத் துன்பத்திற் கிடமன்றோ? என் தம்பியாகிய இந்த லக்ஷ்மணனும், மிக வழகினனும், சீல முடையோனும், திறமையுடையவனு மாகின்றனன்; யௌவனமுடையவன், மனைவியில்லாதான், ஆதலின், மனைவியும் கோருகின்றவன், கண்ணுக்கு மினியவன், அவனே யுனக்குத் தக்க பர்த்தா வாகுவான்; ஆதலின், நீ யவனை யடைந்து சக்களத்தியின்றி, வாழ்க வென்று நகைத் துரைத்தனர். சூர்ப்பணகையும் அதனை யுண்மையெனவே எண்ணிப் பெருமாளைவிட் டிளையபெருமாளிடம் வந் தவரை நோக்கி, லக்ஷ்மணரே! உம்முடைய அழகினுக்கும்,

* சூர்ப்பணகை காமரூபிணி யாதலின், பெருமாளைக் கண்டவுடன் காமுற்று, அவர் தன்னைக் கண்டு காமுறவேண்டுமென்று நல்லுருவங்கொண்டனளென்றறிக; கவி யவளுக் கியல்பாயுள்ள உருவத்தையே வர்ணனை செய்தனரென்றனர். வியாக்கியாதா, சூர்ப்பணகை காமாதிசயத்தால் மதிமயங்கி, ராக்ஷஸபுத்தியால் தன்னையே அழகினளாக ஒண்டை வேம்பினையே மதுரமாக வெண்ணுவதுபோல எண்ணி, அவ்வுருவத்தோடே வந்தனள். ராக்ஷஸரூபத்தையே தீதென்றறிந்தவளாயின், பிராட்டியாரை இகழ்வளோ? இவளும் அவளைப்போலன்றோ? உருவங்கொண்டிருப்பள்; (நஹிதாவன்மனோஜ்ஞாங்கி ராக்ஷஸீப்ரதிபாதிமே) என்பதற்கு நீ யழகிய உருவமுடையாளல்லை; ஆதலின், நீ எனக்கு ராக்ஷஸியாகவே தோற்றுகின்றனையென்று பொருள் கூறவேண்டும்; இவள் தன்னை இகழ்ந்து துறவாமைக்காகவும், தன்னுடன் பிறந்தோர்களைப் புகழ்ந்தனள். சூர்ப்பணகை என்பது, முறம்போன்ற நகமுடையளென்று காரணவிடுகுறிப்பெயராகின்றது;—

என்னுடைய அழகினுக்கும், மிகத் தகுதியாகின்றது ; ஆதலின், யான் உமக்கு மனையாளாகின்றேன் ; நீர் என்னுடன் கூடி இன்புற்று வாழ்க வென் றுரைத்தனள். இளையபெருமா ளதுகேட்டு நகைத்து, சூர்ப்ப ணகையை நோக்கி, அடி பெண்மணியே ! யான் ஸ்ரீராமபிரானுக்குத் தொண்டனாகிப் பணிவிடை செய்கின்றே னாதலின், அடிமைபூண்ட எனக்கு நீ பாரியை யாகுவது தகுமோ ? ஆதலின், மிகச் சிறந்த உருவ முடைய நீ எம்மையருக்கே பாரியை யாகக் கடவை. மிகவுங் குரூபியும், மூப்பினளுமாகிய சீதையை விட்டுவிட்டு, இளையாளாகிய உன்னிடத்திலே யே மோகமுற்றின்புறுவர்; ஆதலின், அவரை மணஞ்செய்துகொள்ளாய் ; சிறந்த வலிமைகொண்ட இந்த ராக்ஷஸரூபத்தை விட்டுவிட்டுத் திறமை யற்ற மானிடரூபத்தில் யாவன் விருப்புறுவானென் றுரைத்தனர். சூர்ப்ப ணகை பரிஹாஸமென்பதை யறியாமல், இந்த வாக்கியமும் உண்மை யெனவே எண்ணி, மீளவும் பர்ணசாலையில் வீற்றிருக்கின்ற பெருமா ளிடம் வந்து, காமமோஹிதையாகி, மீளவும் அவரை நோக்கி, ஸ்ரீராம சந்திரரே ! இந்தச் சீதை மிகவும் குரூபியா யிருக்கையிலும், இவளிடத் தில் ஆசையுற்று என்னை மணஞ்செய்துகொள்ளுகின்றிலீர் ; ஆதலின், இவளை இப்பொழுதே பக்ஷித்து விடுகின்றேனென்றுரைத்து, தூமகேது ரோஹிணி நக்ஷத்திரத்தைப் பிடிக்கச் செல்வதுபோல ஸ்ரீசீதாபிராட்டி யாரைப் பக்ஷிக்கும்படி யோடினள். பெருமா ளவளைக் கண்டு ஆவென் றதட்டி இளையபெருமாளை யழைத்து, அடா லக்ஷ்மணா !—

క్రూరైరనార్యైస్సౌమిత్రే పరిహాసః కథంచన
నకార్యః పశ్యవైదేహీం కథంచిత్సౌమ్యజీవతీం ॥

க்ரூரைரநார்யைஸ்ஸௌமித்ரே பரிஹாஸ꞉கதஞ்சந
நகார்ய꞉பஶ்யவைதேஹீம் கதஞ்சித்ஸௌம்யஜீவதீம்.

கொடுமையுற்றவர்களுடனும், மூடர்களுடனும், ஒருபொழுதும் பரி ஹாஸமுஞ் செயலாகாது; யாம் இவளைப் பரிஹாஸஞ்செய்து உபேக்ஷ யா யிருந்ததினாலன்றோ ? இவள் இவ்வண்ணஞ் சீதையைக் கொலை செய்ய முயன்றனள். சீதையைப் பாராய், நல்வினையால் இவளிடத்தில் தப்பிப் பிழைத்தனள். ஆதலின், கொடிய இவ்வரக்கியைக் கொலை செய்யாமல் நாசியையறுத் தோட்டாயென் றருளிச்செய்தனர். இளைய பெருமா ளதுகேட்டு மிகச் சினமுற்று வாளையுருவிச் சூர்ப்பணகையின் செவிநாசிகளை யரிந்து, வெருட்டி யோட்டிவிட்டனர். அவளும் செவி நாசி களி லறுப்புண்டு, கோரமாக வீறிட்டழுது ரத்தத்தை வழியில் பெருக்கிக் கொண்டே வந்தவழியே யோடிக் கைகளை யுயரவெடுத்துக் கூவி யழுது

ராக்ஷஸர்களால் சூழப்பட்ட கரனிடஞ்சென்று, விண்ணினின்றும் இடி வீழ்ந்தாற்போலத் தரையில் வீழ்ந்து, ஸ்ரீராமபிரான் ஸீதா லக்ஷ்மணர்களுடன் இங்கு வந்திருப்பதையும், தன் செவி நாசிகளை யரிந்ததையும், கரனுக்குக் குருதி பெருகப் பெருக மொணமொணவென் றுரைத்தனள்.

ஆரண்யகாண்டத்தில் பதினெட்டாவது சருக்கம்
முற்றிற்று.

பத்தொன்பதாவது சருக்கம்.

சூர்ப்பணகை பெருமாளிடத்துக்குப் பதினாலாயிரம் ராக்ஷஸர்களை அழைத்துக்கொண்டு வந்தது.

அநந்தரங் கரன் இவ்வண்ணம் மூக்கறுப்புண்டு, குருதியைப்பெருக்கித் தரையில் வீழ்ந்து புலம்பிய சூர்ப்பணகையைக் கண்ணுற்றுக் கடுஞ்சினங்கொண் டவளை நோக்கி, அடி ஸஹோதரி! எழுந்திராய்; நிகழ்ந்தவா றுரைசெயாய்; பதைப்பை விடுக; நீ யாவனா லிவ்வண்ணம் அங்கவீன முற்றனை; வெளிப்பட உரைசெய்க; யாவன் பகையின்றிப் படுத்திருந்த கொடிய கருநாகத்தை வலுவில் விரலினால் தூண்டி எழுப்புகின்றனன்; யாவன் மதிமயக்கினால் காலபாசத்தைத் தானே கழுத்தில் சுற்றிக்கொள்ளுகின்றனன்; யாவனொருவ னிப்பொழு துன்னை யணுகிக் கொடிய நஞ்சினை யுண்டனன்; பல முற்றவளும், பராக்கிரம முடையவளும், நினைத்தவிடஞ் செல்ல வல்லவளும், நினைத்தவா றுருவந் தரிப்பவளும், யமனுக்கு நிகராகியவளுமாகிய நீ யாவனால் இவ்வகையாகத் துயருற்றனை; உன்னை இவ்வகையாகச் செய்தவன் தேவர்களுள் சிறந்த தோள்வலி யுற்றவனா? அல்லது, கந்தருவனா? அல்லது, பூதமா? அல்லது, ரிஷியா? என்னுடன் பகைத் திவ்வண்ணந் தீங்குசெய்ய வல்லவன் ஆயிரங் கண்ணனே யாகுவானல்லது, வேறொருவனு மாகான்; உனக்குத் தீங்கு செய்தவன்மேல் கூரிய கணைகளைத் தொடுத்து, அன்னப்பறவை நீரினின்றும், பாலைப் பிரித் தெடுப்பதுபோல அவன் உடலினின்றும், உயிரைப் பிரித் தெடுப்பேன்; அவன் என் கணையினா லடிபட்டு, நுரையுடன் குருதியைக் கக்க, அது தரையில் படியக் காண்பாய்; என்னா லடிபட்ட யாவனுடைய மெய்யைப் பறவைகள் சூழ்ந்து மாம்ஸத்தைக் கடித் திழுத்துத் தின்னப் போகின்றன; என்னா லெதிர்க்கப்பட்ட வவனைத் தேவகந்தர்வ பிசாச ராக்ஷஸாதிகளுள் ஒருவரும் பாதுகாத்தளிக்க வல்லவராகார்; ஆதலின், நீ மனந்தேறி, யாவனால் அவமதிப்புற்றனையோ?

அவனை யுரைசெயா யென்று பகைவர்மேல் சினமுற்று வினவினன்; சூர்ப்பணகை அதுகேட்டு அவனை நோக்கிக் கேளப்பா சகோதரா!—

తరుణౌరూపసంపన్నౌ సుకుమారౌమహాబలౌ
పుణ్డరీకవిశాలాక్షౌ చీరకృష్ణాజినాంబరౌ॥

தருணௌரூபஸம்பன்னௌ ஸுகுமாரௌமஹாபலௌ.
புண்டரீகவிசாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ.

நித்ய யௌவன முடையவர்களும், காமனுக்கு நிகரான ஸௌந்தர்ய முடையவர்களும், காட்டுவாகைப் பூவுக்கு நிகரான ஸௌகுமார்ய முடையவர்களும், சிறந்த பல முடையவர்களும், தாமரை இதழ்போல அகன்ற திருக்கண்களை யுடையவர்களும், மரவுரி மரையுரி யுடுத்தவர்களும், காய் கனி கிழங்குகளை யுண்பவர்களும், புலன்களை வென்றவர்களும், தவஞ் செய்பவர்களும், தருமவழி கோணாமல் நடப்பவர்களும், ஸோதரர்களும், ஸ்ரீராம லக்ஷ்மணர்களென்னும் திருநாம முடையவர்களுமாகிய இருவர் தசரதசக்கரவர்த்திக்குப் புத்திரர்க ளிருக்கின்றனர்கள். அன்றியும், அவர்கள் கந்தர்வ ராஜனுக்கு நிகராகியவர்கள், ராஜலக்ஷணங்கள் நிறைந்துள்ளவர்கள், அவர்கள் தேவர்களோ? மானிடர்களோ? யான் தெளிகின்றிலேன்; அவர்களுடைய அருகில் யௌவன முடையவளும், சிறந்த கட்டழகுற்றவளும், பலகலனு மணிந்தவளுமாகிய ஒரு பெண் காணப்பட்டனள். அந்தப் பெண்ணின் பொருட்டு அவ்விருவர்களாலும் நாதனற்றுக் குலங்கெடுத்த பெண்போல இவ்வண்ணம் அங்கவீனஞ் செய்யப்பட்டேன்; ஆதலின், அவளுடையவும், அவ்விருவர்களுடையவும், உருதிரத்தைப் போர்க்களத்தில் பானஞ்செய்யக் கருதுகின்றேன்; அம்மூவர்களுடைய ரத்தத்தைப் பானஞ்செய்வேனென்பதே என்னுடைய சிறந்த கோரிக்கை; இஃது உன்னாலேதானே நிறைவேற்றக் கடவதென்று கண்ணீர் ததும்ப வழுது உரைத்தனள். கரனும் இவ்வண்ண முரைத்த தங்கையின் மொழி கேட்டு மிக முனிவுகொண்டு பதினன்காயிரம் சேனைகளுக்குந் தனித்தனி ஸேனாநாயகர்களாகிய பதினன்குபேர்களையும் அழைத் தவர்களை நோக்கிக் கேளீர் சேனாநாயகர்களே! மரவுரி மரையுரி யுடுத்தவர்களாகியும், ஆயுதந் தரித்தும், பெண்ணொருத்தியை யுடன் கொண்டும், மானிட ரிருவர் தண்டகாரணியம் புகுந்துறைகின்றனர்கள்; நீங்கள் விரைவாகச்சென்று, அவ்விருவரையுங் கொலைசெய்து, அவர்களையும், அப்பெண்ணையும் கொணர்க; அவர்களது சோணிதத்தை இந்த என் தங்கை பானஞ் செய்வாள்; கேளீர் அரக்கர்களே! இதுதான் என் தங்கையின் கோரிகை; எனக்கும் இஷ்டம்; ஆதலின், நீங்கள் இவ்வண்ணம் விரைவில் செய்து முடிக்கக் கடவீர்க

ளென்று கட்டளையிட்டனன். அப்பதினால்வரும் அதுகேட்டு காற்றினா லலைக்கப்பட்ட மேகங்கள்போலக் கர்ஜ்ஜித்து, அந்தச் சூர்ப்பணகையுடன் அங்கெய்தினர்கள்; இவர்கள் கூரிய கணைகளை யுடையவர்களும், ராக்ஷஸ ஜாதியர்களும், கொடியர்களுமாகியும், பெருமாள் லீலாமானுஷ விக்ரஹ ராகியும், அதிமானுஷ தேஜோபல பராக்கிரம முடையவ ராதலின், அவர்க ளிவரை வெல்லத் திறமைகொண்டிலர்கள்; காட்டிடையில் மத மேறிப் பிளிறித் திரியுங் களிறுகள் பல கூடியும், மிகப் பற்றி எழுந் தெரியுங் காட்டுத் தீயினை யணைக்க வல்லன வாகுமோ? ஆதலின், அவர் கள் பெருமாளைக் கண்டு அச்சங்கொண்டு நின்றனர்கள்.

ஆரண்யகாண்டத்தில் பத்தொன்பதாவது சருக்கம்

முற்றிற்று.

தனிஸ்லோகி ஸஹிதேவைருதீர்ணஸ்ய ராவணஸ்யவதார்த்திபிஃ அர்த்திதோ மானுஷேலோகே ஜஜ்ஞேவிஷ்ணுஸ்ஸநாதனஃ) என்கிறபடியே தசகண்ட குண்டித சக்திகளான தேவர்கள் ராக்ஷஸர்களுடைய ரஜஸ்ஸைப் போக்கும்படி ரஜோ தூஸர மான வடிவுகளும், ராக்ஷஸஸ்த்ரீகள் மாங்கல்யங்கள் வாங்கும்படி கழுத்திலே கட்டின கப்படங்களும், ராவண பந்திக்ருதைகளான தங்கள் ஸ்திரீகளுடைய விரித்த தலை, (விமுக்தகேஸ்யோ து்ஃக்கார்த்தாஃ) என்று ராக்ஷஸிகள் தலையிலே யாம்படி தாங்கள் விரித்த தலைமயிரும், (ஹாபுத்ரேதிசவாதின்யோ ஹாநாதேதிசஸர்வஸஃ) என்கிறபடியேயவர்கள் முகங்களிலே விலாபாக்ஷரங்களாம்படி தங்கள் முகங்களிலே ஸ்ப்புரிக்கிற சரணாக்ஷரங்களும், (உத்த்ருத்யசபுஜௌகாசித்) என்கிறபடியே அவர் கள் கைகளை எடுத்துக் கூப்பிடும்படி தாங்கள் தொடுத்த அஞ்சலி பதுமங்களும், (ஸ்நாபயந்திமுகம்பாஷ்பை ஸ்துஷாரைரிவபங்கஜம்) என்கிறபடியே அவர்கள் கண் களிலே கண்ணீர் பாயும்படி தாங்கள் கண்ணுங் கண்ணீருமாய், (சாயாவ்ருக்ஷ மிவாத்த்வகாஃ) என்றும், (சகோரா இவசீதாம் சுஞ்சாதகா இவதோயதம், அநாதா இவதாதாரம் தேவாஜக்மூர்ஜனார்தனம்) என்றும் சொல்லுகிறபடியே அத்த்வஸ்ராந்த ரானவர்கள் சாயாவ்ருக்ஷத்தைச்சென்று சேருமா போலேயும், சகோரங்களானவை சரச்சந்த்ரனை யணுகுமா போலேயும், சாதகங்களானவை வர்ஷுகவலாஹகங்களைச் சென்று கிட்டுமா போலேயும், தரித்ரரானவர்கள் தாதாவைச் சென்று கிட்டுமா போலேயும், ஸ்ரீயஃபதியைச் சென்று கிட்டி, (தமப்ருவன்ஸுராஸ்ஸர்வே ஸமபிஷ்டூ யஸந்நதாஃ) என்று ஸ்தவ ப்ரியனானவனை ஸ்தோத்ரம் பண்ணுவார்களாகத் தொட ங்கி, (ஸதைகரூபரூபாய) என்று அவிக்ருதரான தேவர் நாட்டிற் பிறந்து படாதன பட்டு மனிசற்காய் என்கிறபடியே அழிவுக்கிட்டு, த்ரிபாத விபூதியிலே இருக்கக்கடவ தேவர் சதுஷ்பாத்தாய் ஹிரண்யாக்ஷக்ஷபணம் பண்ணுதலும், கேவலம் திர்யக் த்வத் தாலே போராதென்று நரங்கலந்த சிங்கமாய் ஹிரண்ய நிரஸனம் பண்ணுற்றும், மஹத்துக்கும் மஹத்தாயுள்ள வடிவைக் குறளுருவாக்கி, அல்லி மலர்மகள் போக மயக்குகளை மறந்து, ப்ரஹ்மசாரியாய் (தத்யான்ன ப்ரதி க்ருஹ்ணீயாத்) என்றும், (கோஸஹஸ்ரப்ரதாதாரம்) என்றும், அலம்புரிந்த நெடுந்தடக்கை யென்றும் சொல்லுகிறபடியே ப்ரஹ்மாத்யநேக பதப்ரதரான தேவர் மஹாபலி பக்கலிலே பத

த்ரயத்தை யர்த்தித்தும், பிரஹ்ம க்ஷத்ரங்களுக்கு உத்பாதகனென்று ஓதப்பட்ட தேவர் (பித்ர்யமம்சமுபவீதலக்ஷணம் மாத்ருகஞ்சதனுரூர்ஜிதம்ததத்) என்கிறபடியே ஜமதக்நி ரேணுகைகள் பக்கலிலே பிரஹ்மக்ஷத்திரியராய் வந்து தோன்றி இருபத்தொருபடிகால் துஷ்ட க்ஷத்திரியனைப் பரசுவுக்குப் பிராதரசனமாக்கியதும், (பக்தாநாம்) என்றும், (வரதஸகலமேதத்ஸம் ஶ்ருதார்த்தஞ்சகர்த்த) என்றும், அடியோங்களுக்காகவன்றோவென்று ஸ்தோத்ரம்பண்ணி, சாபமானயவென்று கையிலே ஆயுதமெடுக்கும்படி தங்களுடைய வஜ்ரபரசு தண்டபாசாத் யாயுதங்களைப் போகட்டும், அவன் (ஸாகரம் சோஷயிஷ்யாமி) என்றும்படி கண்ணீரைக் காட்டி, (ஸுக்ரீவம் சரணங்கதஃ) என்றும், (ஸமுத்ரம்ராகவோராஜா சரணம்கந்துமர்ஹதி) என்றும், அவன் சரணம் புகும்படி தாங்கள் சரணம் புக்கும், (அஞ்சலிம்ப்ராங்முகஃக்ருத்வா) என்று அவன் அஞ்சலி பண்ணும்படி தாங்கள் அஞ்சலி பண்ணியும், (ப்ரஸீதந்துபவந்தோமே) என்று அவன் ஸ்தோத்ரம் பண்ணும்படி தாங்கள் ஸ்தோத்ரம் பண்ணியும், (ஸர்வேஸந்நிஹிதாஃ) என்று தமையனை இந்திரனும் முற்பாடனும்படி திருவடிகளிலே நம்ரராய், (நநமேயம்) என்றிருக்கிறவர்களைத் தலையழித்துத் தரவேண்டுமென்று விண்ணப்பஞ்செய்ய, பரமகாருணிகனை ஸர்வேஶ்வரனும் நித்யானபாயினியான பிராட்டியாரும், (பிதரம்ரோசயாமாஸததா தசரதம்ந்ருபம்) என்றும், (ஜனகஸ்யகுலேஜாதா) என்றும் சொல்லுகிறபடியே தாம் தாசரதியாயும், அவள் ஜனககுல ஸுந்தரியாயும் திருவவதரித்து, இருவரும் இரண்டிடத்திலுமாக வளர்ந்தருளுகிறகாலத்திலே, இம்மிதுனம் இப்படி யகலவிருக்கப் பெறாது; இப்படி யகலவிருந்தபோது, ரக்ஷகராகை யன்றிக்கே (ஜகத்ஸசைலம் பரிவர்த்தயாமி) என்றும், (ஸிந்துஸாகரமேகலாம் மஹீந்தஹதி) என்றும், இவர்கள் தங்களாலே ஜகத்துக்கு அழிவுவருமென்றும், சேர்ந்தபோது (ஆவாப்யாங்கர்மாணிகர் தவ்யாநிப்ரஜாஶ்சோத்பாதிதவ்யாஃ) என்றும், (உபேதம்ஸீதயாபூயஶ் சித்ரயாசசினம்யதா) என்றும், ஜகத்துக்கு மங்களாவஹமாயிருக்கையாலும், இம்மிதுனத்தைச் சேர்க்கவேண்டுமென்கிற அபிஸந்தியாலும், (விநாசாய சதுஷ்க்ருதாம்) என்றும், (ஸம்பவாமி) என்றும், (யஜ்ஞவிக்னகரம்ஹன்யாம்) என்றும், அவருடைய அவதார ரஹஸ்ய ஸங்கல்பத்தை யடியொற்றினவனாகையாலும், விஶ்வாமித்ரபகவானானவன் தசரதரத்னாகரத்தைக் கிட்டி ராமரத்நத்தை யபேக்ஷிக்க, அவனும் வாத்ஸல்யத்தாலே மதியெல்லா முள்கலங்கிப் பெருமாளை யுள்ளபடி யறியாதே (ஊநஷோடசவர்ஷோமே) என்றும், இன்னம் பதினாறு பிராயம் நிரம்பிற்றில்லை; (பாலஆஷோடசாத்வர்ஷாத் பௌகண்டஶ்சேதிகீர்த்யதே) என்கிறபடியே அப்ராப்தவ்யவஹாரராகையாலே, தனித்தொரு கார்யத்துக் காளல்லர்; (சதுரங்கபலைர்யுக்தம் மயாசஸஹதந்நய) முதுகண்ணாக வென்னையும் கூட்டிக்கொண்டு போவென்ன, விஶ்வாமித்திரரும் இவர் பருவத்திற் சிறுமைகண்டோ நீர் வார்த்தை சொல்லுகிறது; சிறுமையின் வார்த்தையை மாவலியிடைச்சென்று ஸாக்ஷிபாவித்துப் போய்க்கேட்க; மறுத்தாயாகில், (வஸிஷ்டோபிமஹாதேஜா யேசேமேதபஸிஸ்த்திதாஃ) என்றறியு மவர்களுமாய், ஸந்நிஹிதருமாய்ப் பலருமான இவர்களைக் கேட்கமாட்டாயோவென்றீடேற்றி இசைவிக்க, இவனு மிசைந்து, (ததௌகுசிகபுத்ராய) என்று இவனுக்கு இஷ்டவிநியோகார்ஹமாகப் பிள்ளைகளிருவரையுங் கொடுக்க, அவனும் ராம லக்ஷ்மணர்களைக் கொண்டுபோய், கர்மஜ்ஞானங்களாலே அவித்யையை நிரஸிக்குமாபோலே அவர்களை இடுவித்துத் தாடகையை நிரஸிப்பித்து, அநந்தரம் அவித்யாசஞ்சிதமாய்ப் புண்யபாபரூபமான உபயவித கர்மங்களையும்போலே தாடகாஜனிதரான ஸுபாஹு மாரீசர்களையு மழித்து, அது தன்னில், (உத்தரபூர்வாகயோரஶ்லேஷவிநாசௌ) என்னுமா

போலே, ஒருத்தனைக்கொன்று, ஒருத்தனை யகல வடித்து, விஶ்வாமித்ராத் த்வ ரத்ராணம் பண்ணி, (ஸ்ரீயமிச்சேத்துதாசனுத்) என்று லக்ஷ்மியைப் பெறும்போது அக்னி புரஸ்ஸரமாகப் பெறவேண்டுகையாலே, (விஶ்வாமித்ரோணஸஹிதோ யஜ்ஞந் த்ரஷ்டும்ஸமாகதஃ) என்று ஜனகனுடைய யஜ்ஞஸமயத்திலே சென்று, அக்னித்ரயங் களையும் உபாஸித்து, வில்லிறுத்து, மெல்லியல் தோள் தோய்ந்தாயென்றுஞ் சொல்லு கிறபடியே ரௌத்ரமான வில்லை யழைப்பித்து, தேவதாந்தரஸ்பர்சத்தாலே வந்த அதனுடைய தோஷம் போம்படி திருக்கையிலே வாங்கி குணரோபணம் பண்ணி, பங்கசுல்கையான பிராட்டியாரையுங் கைப்பிடித்து, மீண்டு வருகிற வளவிலே, ராமத்வம் ஈரரசு பட்டதோவென்று அதிகுபிதனாய் வந்த பரசுராமனைக் கண்டு, புத்ரவத்ஸலனான சக்ரவர்த்தி சகிதனாய், (அபயம்ஸர்பூதேப்போததாமி) என்னக் கடவ; பெருமாள் தமக் கதிசங்கைபண்ணி, (பாலாநாம்மமபுத்ராணா மபயந்தாது மர்ஹஸி) என்று பேர் வாசிக்கும் பிணங்கி வந்தவனாகையாலே, பெருமாள் திரு நாமஞ்சொல்ல வஞ்சி, ஸாதாரணமாக என் பிள்ளைகளுக்கு அபயப்ரதானம் பண்ண வேண்டுமென்றிரக்க; இவ்வார்த்தையைக்கேட்டும் ப்ரவர்க்யம்போலே கிளர்ந்தெரிகிற இவனைக் கண்டு தணிய விடுவோமென்று பார்த்து, வஸிஷ்டாதி ரிஷிகளும் (தந்த்ரு ஷ்ட்வாபீமஸங்காஶம் ஜ்வலந்தமிவபாவகம், ரிஷயோராமராமே திவசோமதுரமப்ரு வன்) என்கிறபடியே உன்னை யொழிய ராமாந்தர முண்டோ வென்று பெருமா ளுடைய ராமத்வத்தையும், அவன் தலையிலே இரட்டிக்கமாட்டெறிந்து நெருப்பிலே நீரைச் சொரிவாரைப்போலே குளிர வார்த்தை சொன்ன விடத்திலும், அவன் ஜாம தக்னி யாகையாலே யாருமையாலே, பெருமாளும் இவன் கையிலே இந்தக் கஷ்ட மிருக்கையாலேயிறே இவனெரிகிறதென்று பார்த்து மேலெழுந்து க்ஷத்ரதேஜஸ் ஸோடே யத்தை வாங்கி ஸஹஜமான ப்ராஹ்மண்யமே சேஷிக்கும்படி பண்ணி, (அக்ஷயம் மதுஹந்தாரம் ஜாநாமித்வாம்ஸுரோத்தமம், தநுஷோஸ்யபராமர்ஶாத் ஸ்வஸ்திதேஸ்துபரந்தப) என்றவனுந் தன் ஸ்வாபாவிகமான ப்ராஹ்மண்யத்துக் கீடாக ஸ்வஸ்தி சொல்லத் தன்னுடைய வைஷ்ணவமான வில்லை வாங்குகையாலே, பெருமாளுடைய வைபவம் ஸர்வ லோகஸித்தமாம்படி மழுவேந்திப்போக, பெரு மாளும் (ப்ராஹ்மணோஸீதிபூஜ்யோமே) என்று இவன் ஸ்வஸ்தி சொல்லுகையாலே, ப்ராஹ்மணனென் றறுதியிட்டு, அருகுந்தாளியும் பறித் திவன் காலிலே போகட்டுக் கும்பிட்டு மாரில் நூலே கடகாக விட்டு ரக்ஷித்து, மீண்டு திருவயோத்தியிலே புக்கு, இச்சரக்குப் பெறுகைக் குட்பட்ட வருத்த மறியுமவ ராகையாலே, இவள் சீர்மையை யறிந்து (ராமஸ்துஸீதயாஸார்த்தம் விஜஹாரபஹூந்ருதூன்) என்கிறபடியே பெரு மாளும், பிராட்டியாரும், இனிதமர்ந் தெழுந்தருளி இருக்கக்கண்டு ஸ்ரீபூமி பிராட்டி யானவள் (லோகபாலோபமம்நாதம் அகாமயதமேதிநீ) தானும் நாச்சியாரோபாதி அம்ஶபாகினியாகையாலும், (யதாதுபார்க்கவோராமஸ் ததாபூத்தரணீத்வியம்) என்று தனக்கு வருத்த பரசுராமாவதாரத்தினுடைய தேஜஸ்ஸு மிங்கே ஸங்க்ர மிக்கையாலும், தன் கூத்துக்கொக்கப் பெருமாளை ஸ்வயம்வரமாக வரிக்க, ராஜாவு மிது காந்தர்வ விவாஹமாக வொண்ணாது, ஸமந்த்ரகமாகக் கரக்ரஹணம் பண்ணி வைக்க வேண்டுமென்று பார்த்து, பௌரஜான பதமந்திரி புரோஹிதாதிகளைத் திரட்டி மந்த்ரித்து, (மந்த்ரயித்வாததஶ்சக்ரே நிஶ்சயஜ்ஞஸ்ஸு நிஶ்சயம்) (ஶ்வஏவ புஷ் யோபவிதாஶ்வோ பிஷிஞ்சாமிமேஸுதம் ராமம்ராஜீவதாம்ராக்ஷம் யௌவராஜ்ய இதிப்ரபுஃ) என்கிறபடி ஸம்பன்ன நக்ஷத்ரமான பூசத்திலே பெருமாளை யபிஷேகம் பண்ணக் கடவதென்று நிஶ்சயித்து, அதுக்கு வேண்டும் ஸம்விதானங்களைப்பண்ண, (ஸோஹம்விஶ்ரமமிச்சாமி) என்றும், (யௌவராஜ்யேநஸம்யோக்துமைச்சத்)

என்றும், நாட்டாரோடு ராஜாவோடு பண்ணின ஆசைப்பாடுகள் தாங்கள் பண்ணின வாகையாலே, எண்ணினவாறாக விக்கருமங்கள் என்கிறபடியே அவை ஸங்கல்பமாய் (ஆவாஸந்த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிவகாநநே) என்றும், (தபஸ்விநாம்ரணேஶத்ரூன் ஹந்துமிச்சாமிராக்ஷஸான்) என்றும், ஸத்ய ஸங்கல்பரானவர் தம்முடைய ஸங்கல்பமே ஸங்கல்பமாம்படி கைகேயி மந்தராந்தர்யாமியாய் நின்று கலக்கிக் காட்டிலே எழுந்தருளி, தண்டகாரண்ய வாஸிகளான பரமரிஷிகளைக் காணும்போது (ரிக்தஹஸ்தேநநோபேயாத்) என்கிறபடியே வெறுங்கைகொண்டு காணலாகாதென்று பார்த்து, விராதவத புரஸ்ஸரமாகச் சென்றுகாண: அவர்களும் மஹாராஜரைப்போலே பெருமாளுடைய வீர்யத்திலே அதிசங்கை பண்ணிப் பரிக்ஷித்துத் தெளிய வேண்டாதபடி விராதவதத்திலே த்ருஷ்டோதாஹரணராகையாலே, விநீதராய் வந்து (பரிபாலயநோராமவத் த்யமாநாந்நிசாசரை:) என்று எங்களை ரக்ஷிக்கவேண்டுமென்று சரணம் புக; (பவதாமர்த ஸித்யர்தமாக தோஹம்யத்ருச்சயா) என்று ஓம் கொடுத்து, (ஜகாமசாஶ்ரமாம்ஸ்தேஷாம் பர்யாயேணதபஸ்விநாம்) என்கிறபடியே சரபங்க ஸுதீக்ஷ்ணகஸ்த்யதத்ப்ராத்ருப்ரமுகரான ரிஷிகளாஶ்ரமத்திலே பர்யாயேண வெழுந்தருளியிருக்கிற பெருமாள் அகஸ்த்யோபதேசத்தாலே கோதாவரீதீரமான பஞ்சவடீபரிஸரத்திலே பர்ணசாலையுஞ் சமைத்து, (ஸராம:பர்ணசாலாயா மாஸீநஸ்ஸஹஸீதயா, விரராஜமஹாபாஹுஶ் சித்ரயாசந்த்ரமாஇவ, லக்ஷ்மணே நஸஹப்ராத்ரா) என்று நாச்சியாரோடு மிளையபெருமாளோடுங் கூட இனி தமர்ந்தெழுந்தருளியிருக்கிறவளவிலே, (தந்தேசம்ராக்ஷஸீகாசி தாஜகாமயத்ருச்சயா, ஸாதுசூர்ப்பணகீநாம) என்று சூர்ப்பணகியாயிருக்கிற ராக்ஷஸி யானவள் யாத்ருச்சிக ஸுக்ருதமடியாக வந்து கிட்டி, ப்ராப்த விஷயமாயிருக்கச் செய்தேயும், கடகனான ஓராசார்யனடியாக விசேஷஜ்ஞாநம் பிறவாமையாலும், புருஷகாரம் முன்னாகப் பற்றாதவளவளன்றிக்கே! அவ்விஷயத்திலே அஸஹ்யாபசாரம்பண்ணி, நக்ஷமாமிக்கிலக்காக (இத்யுக்தோலக்ஷ்மணஸ்தஸ்யா: க்ருத்தோராமஸ்யபஶ்யத:, உத்த்ருத்யகட்கம் சிச்சே தகர்ணநாஸௌமஹாபல:) என்றும், கூரார்ந்த வாளால் கொடி மூக்குங் காதிரண்டும் மீராவிடுத்தென்றும், காதொடு கொடி மூக்கன்றுட னறுத்த கைத தலத்தாவென்றும் சொல்லுகிறபடியே தக்ஷிணபாஹுவான இளையபெருமாளாலே தாங் கைகொடாராய் வைரூப்யத்தை விளைப்பிக்க, (விரூபணஞ்சாத்மநிசோணிதோக்ஷிதா சசம்ஸஸர்வம்பகினீகரஸ்யஸா) என்று வார்ந்த மூக்கும், வடிகிற உதிரமுமாய்த் தன் ப்ராதாவான கரனுக்கறிவிக்க; அவனும் குபிதனாய் (வ்யக்தமாக்யாஹிகே நத்வமேவம்ரூபாவிரூபிதா) என்று உன்னை இப்படிச் செய்தவர்களார்? அவர்களைத் தெளியச் சொல்லென்று கேட்க; அவர்களை இன்னாரென்று அடையாளந் தெரியச் சொல்லுகிறாள். (தருணௌ) என்று தொடங்கி (புத்ரௌதசரதஸ்யாஸ்தாம், ப்ராதரௌராமலக்ஷ்மணௌ) என்று, இன்னார்மகனென்றும், இன்னபேரை யுடையவனென்றும் சொல்ல ப்ராப்தமாயிருக்க; (தருணௌரூபஸம்பன்னௌ) என்று பருவத்தையிட்டுச் சொல்லுவது, வடிவழகையிட்டுச் சொல்லுவதாவதென்னென்னில், இவளுக்கு வைரூப்யம் பிறந்த தித்தனைபோக்கி, வைராக்கியம் பிறந்த தில்லையிறே; ஆகையாலே, (காமமோஹிதா) என்கிற தன்னபிநிவேசம் வடிவிட்டு ப்ராதாக்கள் முன்னென்று பாராதே தன்னுடைய ஹ்ருத்கதத்தைச் சொல்லுகிறாள். அநுகூலராகிலுமாம், பிரதிகூலராகிலுமாம், இவ்விஷயத்தில் அகப்பட்டவர்களுக்குப் பணியிறேயிது; (யாநிராமஸ்யசின்ஹாநி) என்று அடையாளந் தெரியச் சொல்லென்று பிராட்டியார் திருவடியைக் கேட்க;

(த்ரிஸ்த்திரஸ்த்ரிஃப்ரலம்பஶ்ச) என்று சொல்லுவதற்கு முன்னே (ராமஃகமல பத்ராக்ஷஸ்ஸர்வஸத்வமனோஹரஃ) என்று சொன்னுனிறே; இவை தனக்கு ப்ர யோஜகரூபநாமங்கள் சொல்ல வென்று முண்டிறே; அதிலே ரூபங்களைத்தேடியே பின்பு பெயரிட்டுச் சொல்லுகின்றனவொன்று சுருதியின் கடையில் கூறப்பட்ட க்ரமத்திலே ப்ரதமபாவியான ரூபத்தை முற்படச் சொல்லுகிருளாகவுமாம்; அன்றியிலே, (ஸுப்தப்ரமத்தகுபிதாநாம் பாவஜ்ஞாநம்த்ருஷ்டம்) என்று குபிதை யாகையாலே, ஹ்ருத்கதார்த்தத்தை அவசமாக வெளியிடுகிருளாகவுமாம்; இதிலே (ராமமிந்தீவரஶ்யாமம் கந்தர்ப்பஸத்ருசப்ரபம், பபூவேந்த்ரோபமந்த்ருஷ்ட்வா ராக்ஷஸீகாமமோஹிதா) என்கிறபடியே தானவரைக்கண்டு காமுகையாகைக் கடியாயிருப்பதொரு ஆகர்ஷகமான ஆகாரமும், தன் பரிபவத்தாலுண்டான கோபாதிசயத்தாலே (தயோஸ்தஸ்யாஶ்சருதிரம்பிபேயமஹம்) என்றுஞ்சொல்லு கிறவ ளாகையாலே, (கோயமேவம் மஹாவீர்யஃ) என்றிவர்களை அளவிடமாட் டாதே அருகிருக்கிற ப்ராதாவான கரனுக்கு (பலமூலாசிநௌதாந்தௌதாபஸௌ தர்மசாரிணௌ) என்றவர்கள் எளிமைசொல்லுகிற தொரு ஆகாரமும், (ராமஸ்ய சமஹத்கர்ம மஹான்ஸ்த்ராஸோபவேன்மம) என்றிவர்களுக் கஞ்சினவ ளாகை யாலும், அவன் நெஞ்சிலே எரிச்சல் பிறக்கைக்காகவும், (புத்யாஹமனுமஶ்யாமி நத்வம்ராமஸ்யஸம்ப்ரதி, ஸ்த்தாதும்ப்ரதிமுகேசக்தஸ் ஸசாபஸ்யமஹாராணே) என்று கையும் வில்லுமாய் அவ்வாண்பிள்ளை புறப்பட்டால் நீயோ அவர் முன்னே நிற்கிறுயென் றவர்களுடைய வாண்மை சொல்லுவ தொரு ஆகாரமுமாக, ஆகாரத் ரயமும்விவக்ஷிதம், அதில்முற்பட்டவாகாரத்தில் யோஜனையிருக்கிறபடி (தருணௌ ரூபஸம்பன்னௌ ஸுகுமாரௌமஹாபலௌ, புண்டரீகவிசாலாக்ஷௌ சீரக்ருஷ் ணாஜிநாம்பரௌ) அவர்களுடைய பருவமிருக்கிறபடியும், வடிவழகிருக்கிறபடியும், செயலிருக்கிறபடியும், மிடுக்கிருக்கிறபடியும், கண்ணழகிருக்கிறபடியும், ஒப்பனை யழ கிருக்கிறபடியும், அவர்க ளிருவருக்கு முண்டித்தனைபோக்கி வேறொருவர்க்கு மில்லைகாணென்கிருள். என்னை இதுவிளைத்த வீரிரண்டுமால்வரைத்தோள்மன்னவ னென்றும், என்னை யகப்பட விப்படி யாக்கிற்று, அந்தக் குணஸமுதாய மன்றோ? (தருணௌ) யுவாகுமாரஃ என்றும், (யவீயஸே) என்றும், (அரும்பினையலரை) என் றும், வேதாந்தசித்தமான அர்த்தத்தை இவளொரு ராக்ஷஸிகை யாட்சியாகச் சொல்லுகிருளிறே? இதுதான் ராக்ஷஸிகளுக்குப் பணியாயிருந்ததிறே? (வ்யக்த மேஷமஹாயோகீ பரமாத்மாஸநாதநஃ, தமஸஃபரமோதாதா சங்கசக்ரகதாதரஃ) என்ருளிறே, மண்டோதரியும் (தருணௌ) முக்தரானவர்களோடு பத்தரானவர்க ளோடு தசரதவஸு தேவாதிகளோடு வாசியற; கரியானொருகாளை யென்றும், காளை புகுதக்கனுக் கண்டேனென்றும், ப்ரணயினிகளை யகப்படுத்திக்கொள்ளுவது பருவத்தை யிட்டிறே? அப்பருவத்திலே யாய்த்திவளும், முற்படவீடுபட்டது; (தருணௌ) இவள் பத்தபாவையாய்த்து பெருமாள் பக்கலிலேயாகில், வைரூப் யம் விளைத்தாள். இளையபெருமாளாகி லிரண்டு பக்ஷத்திலும் ஒருத்தரே யமைந் திருக்க, த்விவசனுநந்தமாகச் சொல்லுவா னென்னென்னில், (அந்யோந்யஸத்ரு ஶௌவீரௌ) என்றழகுக்கும், ஆண்பிள்ளைத்தனத்துக்கும், ஒருவர்க்கொருவர் குறையாமையாலும், (க்ருததாரோஸ்மிபவதீ பார்யேயம்தயிதாமம) என்றும், (ஸ்ரீமாநக்ருததாரஶ்ச லக்ஷ்மணோநாம வீர்யவான், அபூர்வபார்யாப்ரார்த்தீச தருணஃப்ரியதர்சனஃ, ஏநம்பஜவிசாலாக்ஷிபர்த்தாரம்) என்று நான் க்ருதவிவா ஹனுமாய் ஸ்நிக்தபார்யனு மாகையாலே, உனக்கு யோக்யனல்லன்; இவன் அக்ருத விவாஹனுமாய் விவாஹம் பண்ணவேண்டுமென்கிற வாசையையுமுடையனுயிருக்

ஷிருன். பின் பிவனைப் பார்த்தாவாகவரியென்று பெருமாள் திருவுள்ளமாக, அவ்வழி யாலே இளையபெருமாள் பக்கலிலே இவள் பத்நபாவையாக (கதம்தாஸஸ்யமே தாஸீ பார்யாபவிதுமர்ஹஸி, ஆர்யஸ்யத்வம் விசாலாக்ஷீ பார்யாபவயவீயஸி) என்றவர் அடிமையான வெனக்கு ஸ்த்ரீயானல் நீயு மடிமையா வாயித்தனை; அது வணங்கலி லரக்கரான உங்களுச்குச் சேராது; நாச்சியாராக வாழலாம்படி அவர் தமக்கு இளைய நங்கையாராகப் பாராயென்று இளையபெருமாள் சொல்ல, பெருமாள் பக்கலிலே துவக்குண்டுமாச; இருவர் பச்கலிலுந் துவக்குண்டு இப்படி பத்தபாவை யாகையாலும், ஸ்வரூப்ய கரணத்திலும் (விரூபயிதுமர்ஹஸி) என்று ப்ரயோஜக கர்த்தாவாயும், (உத்க்ருத்யகட்சஞ்சிச்சேத கர்ணநாஸௌமஹாபல:) என்றிளையபெருமாள் க்ரியாகர்த்தாவாயுமாக இப்படி இருக்கையாலே (தாப்யாம் உபாப்யாம் ஸம்பூய, ப்ரமதாமதிக்ருத்தியதாம் இமாமவஸ்தாம்நீதாஹம்) என் றிருவரையும் கூட்டாகச் சொல்லுகிறவ ளாகையாலும், இங்கிருவரையும் ஒக்கச் சொல்லுகிருள்; (தருணௌ) (இருவராய் வந்தாரென் முன்னே நின்ருர்) என்னு மாபோலே ஒருவர் இருவராய் வந்தன்ருே? என்னை யீடழித்தது; (தருணௌ) தம்பி தமையனுனல் பருவத்திலேயும் சிறிது வேறுபாடு காணலாமிறே? அப்படி யன்றி, ஒருபடியாய்க் காணிருக்கிறது; புனர்ப் பூசம் பூசமாய் பின்னுளு முன்னுளுமானல் அத்தனை வாசி தெரியாதிறே! இப்படி பருவத்தையிட்டு மயக்கு மித்தனையாய் வடிவுதன்னைப் பார்த்தால் போலியா யிருக்குமோ வென்னில், (ரூப ஸம்பன்னௌ) ரூபத்தைப் பார்த்தால் அழகுவேண்டியிருப்பார்க்கு அவர்கள் பக்க லிலே இரந்துகொண்டுபோக வேண்டும்படியாய்காண்கூடு குறித்துக்கிடந்தபடி (ரூபஸம்பன்னௌ) காமனுர்தாதையென்று அந்தக்காமனகப்பட இவர் திருமேனி யிலேகதேசத்திலே உத்பந்தனுகையன்ருே? அவ்வழகுதானுண்டாயிற்று, (ரூபஸம் பன்னௌ - உத்பந்நம்த்ரவ்யம் க்ஷணம்நிர்க்குணம்திஷ்டதி) என்கிறபடியே முற்பட வாஶ்ரயமுண்டாய், பின்பு அவ்வாஶ்ரயத்திலே குணங்களுண்டா கையன்றிக்கே (ரூபதாக்ஷிண்யஸம்பந்நௌப்ரஸூதௌ) என்கிறபடியே ரூபத்தாஶ்ர யங்கள் ஸஹோத்பந்நங்களாய்க்காண், அவர்கள்பக்க லிருக்கிறது; (ரூபஸம் பன்னௌ) வடிவுடைவானேர் தலைவனேயென்றும், அச்சோ வொரு வழகியவா வென்றும், என்முலையாள ஒருநாளுன்னகலத்தாலாளாயென்றும், (காரார் திரு மேனிக் கண்டதுவே காரணமாப், பேராப்பிதற்றுத் திரிதருவன்) என்றும், (ராமேதிராமேதிஸதைவபுத்யா) என்றும், பெண் பிறந்தாரைப் பிச்சேற்றி வாய் வெருவப் பண்ணும் வடிவுகாண வருவது அவர் தம்பியா ரன்ருே? மற்ற யாவ ரிவர்க ளிருவருடைய வடிவழகிலேகாண நானுழலுகிறது; இவ்வழகேயாய னைத்துப் பார்த்தால் உறைத்திருக்குமோ வென்னில், (ஸுகுமாரௌ) முரட்டு இராட்சதரான உங்களைப்போலே யன்றுகாண்; அவர்கள் மார்த்வ மிருக்கிறபடி பூவிலே யணைத்தாப்போலே காணிருப்பது த்ருஷ்டாந்தஞ்சொல்லு மவர்களும் (அதஸீபுஷ்ப ஸம்காச) மென்றும், (ராமமிந்தீ வரஶ்யாமம்) என்றும், பூவைப் பூவண்ணு வென்றும், காயாம்பூ வண்ணு வென்றும், புஷ்பத்தை இட்டிறே சொல் லிற்று; (ஸுகுமாரௌ) வடிவினை இல்லா மலர்மகள் மற்ற நிலமகள் பிடிக்கு மெல்லடியென்றும், பூவிற் பரிமளத்தையும், மண்ணில் பரிமளத்தையும், உபாதான மாகவுடைய பிராட்டியாரும் அகப்பட்டவனைக் கையன்றிக்கே அடுத்தடுத்துப் பார்க்கவும் போராதபடியாய்க் காண்; அவர்கள் மார்த்வம் இருக்கும்படி (ஸுகு மாரௌ) நடந்த கால்கணுெந்தவோ வென்றும், அடியாரல்லல் தவிர்த்த வசைவோ வென்று மிப்படி தான் நீண்டு தாவிய வசைவோவென்றும், தாளா லுலகமளந்த

வசைவேசொலென்றும், ஸ்வாபாவிகமான வியாபாரம் அகப்படத் திருமேனிக்குப்பொருதென்று அனுகூலர் வயிறுபிடிக்கும்படியாய்க்காண் அவர்கள் மாத்ர்த்வமிருக்கும்படி (சுகுமாரௌ) திவ்யனுன காம ஞெருவனிறே ? இவர்க ளிளமையைப் பாரீர் ; இரண்டு காமராய்க்காண் தோற்றுகிறது ; (ரூபஸம்பன்னௌ சுகுமாரௌ) அவனனங்கனுயிறே யிருப்பது, (கந்தர்ப்ப இவமூர்த்திமான்) என்கிறபடியே ரூபவான்களாய்க்காணிந்தக்காமர்களிருப்பது (ராமமந்மதஶதாணிதாடிதா துஸ்ஸஹேநஹ்ருதயேநஶாசரீ) என்று காமனுகவே பரிக்ரஹித்துச் சொன்னுளிறே ? இப்படி எழிலு மழகுமாய்த் தூரத்திலே யகப்படுத்துமளவேயாய்க்கிட்டி யனுபவிக்கப் பார்த்தால் உடற்கொடுக்க மாட்டாதபடி துர்ப்பலராயோவிருப்பதென்னில், (மஹாபலௌ) வையாதயத்தில் வந்தால் தோற்றேரும், மடநெஞ்ச மெம்பெருமானுரணற்கென்றும், வரையெடுத்த பெருமானுக் கிழந்தேனென்வ ரிவளே யென்றும், பெண்பிறந்தார் தொத்தெழுதிக் கொடுக்கும்படியாய்க் காணிருப்பது (மஹாபலௌ - ராமஸ்துஷீதயாஸார்த்தம் விஜஹாரபஹூந்ருதூன், மைந்தனைமலராள்மணவாளனை) என்றுஞ் சொல்லுகிறபடியே ஶ்ருங்காரத்தில் வந்தால் அநேக ருதுக்களை யொருபடிப்பட நடத்தா நின்றாலும், எதிர்த்தலையப்ரதானமாய்த் தாமே ப்ரதானராம்படிகாண் ; அவர்கள் ப்ராபல்லிய மிருக்கும்படி யன்றிக்கே (மஹாபலௌ) (காதற்கடல்புரைய விளைவித்த காரமர்மேனிநங்கண்ணன்) என்கிறபடி பருவத்தையும்,வடிவழகையும், சிவப்பையுமிட்டுப் பிறரைப் படுகொலைப்படுத்தித் துடிக்கும்படி பண்ணிப் பின்னை யவர்க ணிலைவிலோடியும் புகுராதபடியாய்க் காணவர்கள் அத்தியவஸாய ப்ராபல்லிய மிருக்கும்படி என்னவுமாம் ; ஆக இப்படி சமுதாய சோபையிலும் அவயவஶோபை மட்டமா யிருக்குமோ வென்னில், (புண்டரீகவிஶாலாக்ஷௌ) அது கண்ணழகைத் தப்பினுலன்றே ? வேறொரு அவயவத்தி லிழியவொட்டுவது (புண்டரீகவிஶாலாக்ஷௌ) அவையெல்லாங் கிட்டினு லழிக்குமவை இனி இது அங்ஙனன்றிக்கே தூது செய்யக் கண்கள் கொண் டொன்று பேசி யென்றும், தாமரைக் கண்கள் கொண்டறிதி யாலோ வென்றும், தூதிலே தோற்றினபோதே அழிக்கும்படியாய்க்காண் கண்களிருப்பது ; (புண்டரீகவிஶாலாக்ஷௌ) புண்டரீகம் ஸிதாம்போஜமிறே ? (ஸம்ரக்தநயநாகோராஃ) என்றுங்களைப்போலே எரிவிழியா யிருக்கை யன்றிக்கே சுப்ரஸந்நதவளமான வக்கண்களிருந்தபடிகாண் ; (புண்டரீகவிசாலாக்ஷௌ) ரக்ஷணேபயோகியான கருவிழியும், செவ்விழியும், கண் பரப்பும், தமோகுணேத்ரேகத்தாலே நித்ராகஷாயிதமாதல், ரஜோகுணே த்ரேகத்தாலே கோபஸம்ரக்தமாத லன்றிக்கே, ஸத்வப்ரசுர ராகையாலே, அவர்களுடைய த்ருஷ்டி ப்ரஸாதமிருந்தபடிகாண், (புண்டரீக விசாலாக்ஷௌ) அவர் தாம் (ஆத்மாநம் மாநுஷம் மந்யே) என்று தம்மை மறந்தாராகிலும், அகவாயிற்கிடந்த பரத்வத்தைக் கோட் சொல்லித் தாராநின்ற தாயிற்றுக் கண்கள்தான், (புண்டரீக விசாலாக்ஷௌ) பாற்கடல்போலே யக்கண்களுக்குள்ள அகலம் ஒருவரால் கரை காண வெண்ணுதபடியாய்க் காண் கண்களிருப்பது, (புண்டரீக விசாலாக்ஷௌ) கண்ணிலுண்டான தெளிவுக்குப் புண்டரீகத்தை யொருபோலி சொன்னே மித்தனை போக்கி அகலத்தைப் பார்த்தால் கடலில் புக்கார், கரைகாண மாட்டாதே மயங்குமாபோலே புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட வப்பெரிய வாய கண்களென்று மித்தனைபோக்கி வேறொரு பாசுர மிட வொண்ணுதுகாண் ; (புண்டரீக விசாலாக்ஷௌ) உயிர்க் கெல்லாந் தாயாய் அளிக்கின்ற தண்டாமரைக் கண்ணனென்றும், தடங்கொள் தாமரைக் கண் விழித்து இடங்கொள் மூவுலகுந் தொழ விருந்தருளா

யென்றும் சொல்லுகிறபடியே பத்த முக்த நித்யாத்மகமாய் த்ரிவித கோடியான உபய விபூதியும், ஏகோத் யோகத்திலே கடாக்ஷிக்க வைத்தாய் காண் கண்களிருப்பது; (மஹாபலெள - புண்டரீகவிசாலாக்ஷெள) பலத்தைக் காட்டி யவர்களைத் தோற்பித்து, அவர்களை (ஜிதந்தே புண்டரீகாக்ஷ) என்றும், தாமரைக் கண்ணனை விண்ணோர் பரவுந் தலைமகனை என்றும், எழுதிக்கொள்வது கண்ணழகை யிட்டிறே? (மஹாபலெள புண்டரீக விசாலாக்ஷெள) அவர்களளவிலே யீடுபட்டவர்கள் நோராகக் கைவாங்க மாட்டாதே (அவலோகநதாநே நபூயோமாம்பாலய) வென்றும், (புண்டரீகாக்ஷரக்ஷமாம்) என்றும், தாமரைக் கண்களாலே நோக்கா யென்றும், திரியநசைபண்ணிக் கால் கட்டும்படி பண்ணுவது இக்கண்களில் தண்ணளிகாண்; (புண்டரீக விசாலாக்ஷெள சுகுமாரௌ) என்கிற பதத்வயத்தாலே காமர்களென்று சொல்லிற்றிறே? ஆனால் புஷ்பபாணராகவேண்டுமே? அப்படிக்குக் கண்ட தென்னென்னில், கடைக்கணென்றுஞ் சிறைக்கோலால் நெஞ்சூடுருவ வுண்டு நிலையுந் தளர்ந்து நைவேனை என்னும்படி என்னை நிலைகுலைத்த புஷ்பபாணங்க ளிருக்கிறபடி காண்; அவயவ சோபாமாத்ரத்தாலேயோ அகப்படுத்துவ தென்னில், (சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ) ஒப்பனையழகாலும், அழிப்பார்கள் காண் அவர்களெனகிருள்; (சிரக்ருஷ்ணஜிநாம்பரௌ) செவ்வாத்த வுடையாடை யதன் மேலோர் செவ்வளிகைக்கச் சொல்லுகிறபடியே உள்ளுடுப்பது மரவுரி, மேற்சாத்துவது கலைத்தோலுமர்யத்திருப்பது, (சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ) தாருண்யாதியான குணஸமுதாயத்தைப் பொதிந்த தொரு கிழிச்சீரை இருந்தபடிகாண், (தருணௌரூபஸம்பன்னௌ சுகுமாரௌ மஹாபலெள, புண்டரீகவிசாலாக்ஷெள சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ, கிமிவஹிமதுராணும் மண்டனந்நா க்ருதிநாம்) என்கிற படியே வனை முறுகலான ரிஷிகளு மகப்பட விக்ருதமாம்படி யிருக்கக்கடவ, அம்மரவுரியுந் தோலும் அவர்கள் வடிவிலே சேர்ந்த வடியாலே அழகுபெற்றிருந்தபடிகாண், (சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ) ஏதேனுமாக வங்கே சாற்ற வமையுமிறே? ஆகர்ஷகமாகைக்கு (தாஸாமாவிரபூச்செளரிஸ் ஸ்மயமானமுகாம்புஜ:, பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ ஸாக்ஷான்மன்மதமன்மத:) என்கிறபடியே பீதகவாடையுடைதாழ விருந்தாவனத்தே கண்டோமே யென்றும், செய்யவுடையுந் திருமுகமும், செங்கனிவாயுங் குழலுங் கண்டென்றும், பெண் பிறந்தார் வரய் புலர்த்தும்படியாய்க் காண், இடையழகிருப்பது (சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ) உடுத்துக் களைந்த நின் பீதகவாடையுடுத்து என்றுஸ்வரூபஜ்ஞ ராசைப்படுவதும், பெருமாளரையிற் பீதகவண்ண வாடைகொண் டென்னை வாட்டந் தணிய வீசிறே யென்று போசபராசைப் படுவதும், பரியட்டத்தையாய்த்து, (சீரக்ருஷ்ணஜிநாம்பரௌ) (ரூபஸம்ஹநநம்லக்ஷ்மீம் ஸெளகுமார்யம் சுவேஷதாம், தத்ருசுர்விஸ்மிதாகாரா:) என்றும், ஸ்வரூப த்யானபரரான ரிஷிகளகப்பட இவ்விக்ரஹகுணத்திலே யுடை குலைப்படா நின்றூர்கள்; (கன்யாகாமயதேரூபம்) என்று பெற்றக் காலவனுகம் பெண் பிறந்தோ முய்யோமோ வென்றும், உடம்பை யுகப்பிக்கக்கடவ; ஸ்த்ரீகளாழங் காற்படச் சொல்ல வேண்டுமோ? எளிமை சொல்லுகிற யோஜனையில், (தருணௌ) அவர்கள் பக்கலிலே சரக்குண்டாக நினைத்திருக்க வேண்டாகாண், (நயுத்தயோக்ய தாமஸ்யபஸ்யாமி) என்கிறபடியே பூசற்கு ஆளாகாதார் சில பாலராய்க் காணிருப்பது நானேயோ விது சொன்னேன்; (பாலோஹ்ய க்ருதவித்யஸ் சநசவேத்தி பலாபலம், நசாஸ்த்ரபலஸம்பன்னோ நசயுத்தவிசாரத:) என்று பெற்ற தசப்ப னகப்பட நெஞ்சாறல் பட்டிலனோ? (தருணௌ - யௌவநே விஷயைஷிணும்) என்கிறபடியே விஷயப்ரவணராய் அன்யபரராய்த் திரிதிறவர்

களுக்கும் ஒரு பூசலுண்டோ போருவது; பாலரான விவ்வளவு மன்றுகாண், (ரூபஸம்பன்னௌ) கன்யாகாமயதேரூபம் எனறும், ரூபேணவநிதாஜனமென்றும், ஸ்திரீகளாகப்படுகைக்கு மேனி மினுக்கித திரியு மத்தனை போக்கி, புருஷர்களாகப் படும்படியான வாண்மை யுடையவர்க ளல்லர்காண், (ரூபஸம்பன்னௌ) மூங்கிற் பொந்துபோலே தோலில் பச்சையித்தனை போக்கி யகவாயிலுள் வீடில்லைகாண், அதுக்கடி என்னென்னில், (சுகுமாரௌ) ஸ்ரீமத் புத்ரர்களாகையாலே, செல்வப் பிள்ளைகளாய்க் காணிருப்பது, (சுகுமாரௌ) (பரஸ்வதஹதஸ்யாத்ய மந்தப்ராணஸ்யபூதலே) என்கிறபடியே கடைக்கண் சிவந்து, நீ பார்க்கும் பார்வையிலே மாயும்படி இருக்கு மவர்களோ உன்னுடைய அத்யுக்ரமான வாயுதங்களைப் பொறுக்கப் புகுகிறுள்; வடிவைப் பார்த்தால் திறவியரல்லராகிலும், கார்யத்தில் வந்தால் திறவியரா யிரார்களோவென்னில், (மஹாபலௌ) பலஹீநரான வளவே யன்றுகாண், க்ரமாகதமான ராஜ்யத்தைக் கொடுக்கச் செய்தேயும், அகப்பட ஆளமாட்டாதே யொதுங்கிப் பெண்டாட்டிக் கஞ்சிப் போகட்டுப் போரும்படி அத்யந்தம் பாலராய் காணிருப்பது; அன்றியிலே, (மஹாபலௌ) பலவான்கள் தாளுனும், இவர்க ளிருவரு மித்தனை போக்கி, இவர்களுக்குமேல் பலமாய் வரப்புகுகிறுர்களுண்டோ? (த்ருஷ்டாதத்ரமயாநாரீ தயோர்மத்யே சுமத்யமா) என்கிறபடியே காற்கட்டாம்படி குழைச்சரக்கா விருப்பா ளொரு பெண்டாட்டியையும் முதுகிலேகொண்டு திரிகிறவர்களோ? பூசலாடப் புகுகிறுர்கள்; பூசலாடமாட்டார்களென்றும்; அறிந்தபடி என்னென்னில், (புண்டரீக விசாலாக்ஷௌ) விளைவ தறியாமையாலே இவளுக்கு வைரூப்யம் விளைத்தோம், மேலென்னுகப் புகுகிறதோவென்று அவர்கள் வெளுக்க வெளுக்க விழிக்கிற விழியிலே கண்டேன் காண், புண்டரீகம் ஸிதாம்போஜமிறே? (புண்டரீக விசாலாக்ஷௌ) நீரிற்ருமரையை வறளிலே இழுப்பாரைப்போலே தன்னிறமான நாட்டுக் கவர்களை யித்தனைபோக்கி, வெற்று நிலமான காட்டுக் காளல்லவொன்னு மிடம் அவர்கள் கண்கள்தாமே சொல்லித் தருகின்றனகாண், அவர் தாங்கள் சக்தராளுல் ஐஸ்வர்யத்தாலே படையாண்டு போரத்தட்டென்னென் றிருக்கவேண்டா? (சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ) உடுக்கைக் கொரு புடைவை யகப்பட வன்றியிலே, காட்டில் மரத்தோலையும், மான்தோலையுமுடுத்துத் திரிகிறவர்களோ? காசு நேர்ந்து படையாளப் புகுகிறுர்கள். (சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ) உடுக்கிற புடைவை இரண்டுமே சஜாதீயமாகப் பெற்றதோ? உள்ளுடையொன்றும்; மேலுடையொன்றுமாயன்றே யிருக்கிறது; (சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ) ஸ்தாவரமொன்று கொடுக்க, ஜங்கமமொன்று கொடுக்க, இப்படி பலர் பக்கலாக விரந்தன்றே? இது தானு முடுக்கிறது; பௌருஷோப பாதன யோஜனையில், (தருணௌ-ஊநஷோடஶவர்ஷ:) என்றும்படியான பிள்ளைப் பருவமு மன்றியிலே, (அநேகவர்ஷஸாஹஸ்ரோ வ்ருத்தஸ்த்வமவிபார்ததிவ) என்னும்படி முதிர்ந்த பருவமு மன்றியிலே, பூசலென்றல் காட்டு காட்டென்று வரும்படியான நல்ல பருவங்காண், (தருணௌ - யௌவநே விஷயைஷிணும்) என்றும், (ராஜ்யகாமவிஷயாவிபேதிரோ பவத்விஷயவாஸிந:) என்றும், விஷயஶப்தம் ராஜ்யவாசி யாகையாலே, இன்னம் ராஜ்யங் கொள்ள வேண்டுமென்று மேலே விஜயை ஷிக்களாம்பருவங்காண், (தருணௌ) இப்பருவமுடையாரொருவர் அமைந்திருக்க, இருவர் கூடினுல் இயலாத துண்டோ? இப்பருவமும் யோக்யதையு மறிய வடிவு பார்த்தால் இவர்களென்ன பூசல் போருவதென்னும்படி ஆபாஸமா யிருக்குமோ வென்னில், (ரூபஸம்பந்நௌ - ஸிம்ஹமாம்ஸகம் மஹாபாஹூ) என்கிறபடியே வேறொரு ஆயுதம் வேண்டாதபடி அவர்க

ளுடைய தோளையும், மார்பையுங்கண்டபோதே எதிரிகள் கால்வாங்கும்படியாய்க் காணிருப்பது; (ரூபஸம்பன்னௌ) ரூபமென்னும் மதிப்பாயிப் பருவங்கொண்டு அநுமிக்கையன்றிக்கே, (கத்வா ஸௌமித்ரிஸஹிதோ நாவிஜித்ய நிவர்த்ததே) என்றும், (யஶஸ்ஶை சபாஜநம்) என்றும், சொல்லுகிறபடியே அயோத்யா பரிஸரந்தொடங்கி, சுபாகு மாரீசாதி விரோதிவதம் பண்ணினத்தாலே பெருமதிப்பாயிருப்பவர்களல்லரோ வென்றுகவுமாம்; இப்படி விரோதிவதம்பண்ணுமிடத்தில் வருத்தத்தோடே க்லேசிதரோ பண்ணுவதென்னில், (சுகுமாரௌ) அவர்கள் ஆண்மைத்தனத்தில் வந்தால் ஒரு வகைக்குச் சிறிது சொல்லலா மித்தனை போக்கி வடிவழகைப் பார்த்தால் பகுமுகமாய்ப் பொல்லாதா யிருக்கை யன்றிக்கே? அத்யந்தமபிரூபமாய் காணிருப்பது; (சுகுமாரௌ) அவர்களுமாய்ச் சீறிப் பார்த்தார்களாகில், முன்னே வந்த நாலிரண்டுபேரைக் கொன்றுவிடுமளவேயோ? (ஸதேவ கந்தர்வ மனுஷ்ய பன்னகம் ஜகத்ஸஶைலம் பரிவர்த்தயாமி) என்றும், (ஸாகரமேகலாம் மஹீந்தஹதிகோபேந) என்றும், பூமியை இருந்ததே குடியாக நசிப்பியார்களோ? இப்படி நசிப்பிப்பது எது கைம்முதலாக வென்னில், (மஹாபலௌ) மஹச்சப்தத்தாலே கேவலம் பாகுபலமே யன்று, மநோபலமு முடையவர்கள், கேவலம் மனோபலமே யன்று; பாகுபலமும், மனோபலமு முடையவர்களென்று இரண்டையும் நினைத்துச் சொல்லுகிறாள். (மஹாபலௌ) உன்னுடைய சதுரங்கபலமும் அஸத்கல்பமாம்படி காண், அவர்கள் பலத்தின் மிகுதி யிருக்கும்படி (மஹாபலௌ) நெடும்போது யுத்தம் பண்ணினாலும், ஶ்ரமந்தட்டாதபடி பலாதிபலைகளென்கிற வித்தைகளை யுடையாராய்க் காணிருப்பது, இப்படிக்கு ஶ்ராந்தி தட்டாதென்று அறிந்தபடி என்னென்னில், (புண்டரீகவிசாலாக்ஷௌ) வெற்றுநிலமான விக்காட்டிலே திரியச் செய்தேயும், தன்னிலத்திலே நின்ற தாமரை போலே அக்கண்ணிற் செவ்விதானே சொல்லா நின்றது காண், (புண்டரீகவிசாலாக்ஷௌ) எதிரிகளென்று லவர்கள் பக்கலிலே ஒரு கௌரவத்தைப் பண்ணி, சிறுத்தல் பருததல் செய்கை யன்றிக்கே? அவிக்ருதமாய் காண் கண்களிருப்பது; (புண்டரீகவிசாலாக்ஷௌ) ப்ரீதிவிஸ்ப்பாரிதேக்ஷணம் என்று எதிரிகளைக் கண்டாலு ராவுகை யன்றிக்கே? மேனுணிப்பாலே ஒருகாலைக் கொருகால் விஸ்த்ருதங்களாய்க்காண் கண்களிருப்பது, (புண்டரீகவிசாலாக்ஷௌ) எதிரிகளைக் கண்டா லிப்படி மூக் மலருகைக் கடியென்ன? பூசலுக்கென்று கட்டி யுடுத்து ஸந்நத்தரானாலன்றோ? அப்படியே இருக்கலாவது; அநவஸரத்திலே வந்து தோற்றினாருண்டாகில், செய்யுமதென்னென்னில், (சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ) (ஸந்நத்தௌ விசரிஷ்யதஃ) என்கிறபடியே உள்ளுடையு மிறுக்கி, உடம்புக் கிடுமிட்டு, ஸந்நத்தராய்க் காண் அவர்களிருப்பது, (சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ) காட்டிலே ஸர்வவித ஸத்வங்களையும் வேட்டையாடித் திரிகிறவர்க ளாகையாலே, உடைத்தோலும் மரச்சட்டையுமாய்க் காணவர்களிருப்பது ஆக விப்படி (ஸத்யேநலோகான்ஜயதி தீ நான்தா நேநராகவஃ; குருன் ஶுஶ்ருஷயாவீரோ தனுஷாயுதிஶாத்ரவான்) எனகிறபடியே அபலைகளை யழகாலே யழித்தும், அரிகளை யம்பாலே யழித்தும், அகதிகளை யருளாலே யளித்தும், தக்கார்க்குத் தக்க கருவிகளை யுடையாராய்க் காணவர்களிருப்பது, ஆனபின்பு, (வல்லாளன்தோளும், வாளரக்கன் முடியும், தங்கை பொல்லாத மூக்கும் போக்கு வித்தா) னென்கிறபடியே நானா மூக்கறுப் புண்டாப்போலே நீயும் முடியறுப்புண்டுபோ மித்தனைபோக்கி, அவர்களோடு புக்கால் பலியாதுகாணென்று பரிபவித்துச் சொலலுகிறாள், ஸ்ரீமத்பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்த வியாக்கியானம் முற்றிற்று.

இருபதாவதுசருக்கம்.

பெருமாள் பதினன்கு படைத்தலைவர்களையுங் கொலைசெய் தருளியது.

அநந்தரம் கொடியளாகிய அந்தச் சூர்ப்பணகையும், பெருமாளெழுந் தருளி யிருக்கின்ற பர்ணசாலைக்கு அந்தப் பதினன்கு படைத்தலைவர் களையு மழைத்துக்கொண்டு வந்து, பெருமாளையும் இளையபெருமாளையுங் காட்டி, இவர்களே என்னுடைய செவி நாசிகளை யரிந்தவர்களென்று கூறினள். பெருமாளும் பிராட்டியாருடனும், இளையபெருமாளுடனும், அவர்களையும், அந்த அரக்கியையுங் கண்டு, இளையபெருமாளை நோக்கிப் பாரடா லக்ஷ்மணா! நம்மால் மூக்கறுப்புண்ட இந்த அரக்கி இவ்வரக்கர் களை யழைத்து வந்தனள்; ஆதலின், முகூர்த்தகாலம் ஸீதையை யருகி லிருந்து பாதுகாவாய்; யான் இவ்வரக்கர்களைக் கொலை செய்து வருவே னென் றருளிச் செய்தனர். இளையபெருமா ளதுகேட் டவ்வண்ணமே யாகுகவென் றுடன்பட்டுப் பிராட்டியாரைப் பாதுகாத்து நின்றனர். பெருமாளும் தங்கக்கட்டமைந்து சிறந்த கோதண்டத்தைத் திருக்கையி லேந்தி நாண்கட்டி ஸித்தஞ் செய்துகொண்டு, அந்த ராக்ஷஸர்களை நோக்கிக் கேளீர் பலாசனர்களே! யாங்கள் ஸ்ரீதசரதசக்கரவர்த்தித் திருக் குமாரர்கள்; ஆயினும், ஸீதையுடன் காய் கனிகளையுண்டு தவசிவேஷம் பூண்டு கொடிய இத்தண்டகாவனம் புகுந் துறைகின்றனம்; ஆதலின், நீங்கள் எம்மையேன் பீடைசெய்யக் கருதுகின்றீர்கள்; முனிவர்களது கட்டளையினல் பாவிகளாகிய உங்களைக் கொலை செய்வதன் பொருட்டே யானிங் காயுதமேந்தித் திரிகின்றேன்; ஆதலின், நீங்கள் வீரமுற்றுப் போர்செய்ய விருப்பங் கொள்வீர்களாயின், செல்லற்க; நிற்க; உயிர்வாழ விரும்புவீர்களாயின், மீண்டோடுக; என்று தீரமுற் றருளிச் செய்தனர். அந்த வரக்கர்க ளிம்மொழிகேட்டு மிக வெகுண்டு, சூலத்தைக் கையி லேந்திப் பெருமாளை நோக்கிக் கேளடா மானிடப் பயலே! எங்களுக் கிறையாகிய கரனுக்குத் தீங்குசெய்த பின்னும், நீ உயிர்வாழ்வுறுவாயோ? நீயே எங்களால் அடிபட் டுயிர்மாய்ந் திறப்பாய்; நீ யொருவனகிப் பதினல்வராகிய எங்கள் முன்னே நிற்க வாகிலும் வல்லையோ? அங்ஙன மாயின், போர்செய்ய எங்ஙனம் வல்லாய்; ஆண்பிள்ளையாகில், வெளியே வாடா? எங்களுடைய படைகளின லடிபட்டு உயிர் விடுவாயென் றுரை த்து, எல்லோரும் ஒருமைப்பட்டே சூலங்களை யோங்கி எறிந்தார்கள். பெருமாளும் உடனே அந்தப் பதினன்கு சூலங்களையும், பதினன்கு கணைகளைத் தொடுத் தறுத்து விட்டுப் பின்னும் கூரிய பதினன்கு நாராசங்களைத் தொடுத்து, அவ்வரக்கர்களது மார்பைக் குறித்திட்

டெய்யப் பொன்கட் டமைந்த அக்கணைகளும், இந்திரனல் விடுக்கப் பட்ட வச்சிராயுதம், மலைகளைப் பிளப்பதுபோல அவ்வரக்கர்களது மார்பினைப் பிளந்து, குருதி தோய்ந்து, வேகத்தினல் தரையிலும் விழ்ந் தழுந்தின; அவ்வரக்கர்களும் வேரில் அறுப்புண்ட மரங்கள் போலத் தரையில் சாய்ந்து விழ்ந்து உயிர்மாய்ந் திறந்தனர்கள். சூர்ப்பணகி இவ்வண்ண மிவர்க ளிறந்ததைக் கண்டு பெருங்கூச்சலிட்டுச் சினமும் அச்சமுங் கொண்டு, திரும்பி யோடி வந்து கரனைக் கண்டு கிட்டிக் கொஞ்சம் உலர்ந்த உதிர முடையா ளாதலின், பால் பெருகிப் புஷின் கட்டிய ஆனை வணக்கி மரம்போல வீழ்ந்து, அடிக்கடி கூவி முகஞ்சுளித்துக் கண்ணீர் பெருக்கிப் புலம்பி, அந்தப் பதினல்வரும் போரில் மடிந் திறந்ததைக் கூறலுற்றனள்.

ஆரண்யகாண்டத்தில் இருபதாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்தொன்ருவது சருக்கம்.

சூர்ப்பணகை கரனை மீளவும் போர்செய்யத் தூண்டியது.

இவ்வண்ண மேன்மேலுந் தீங்குசெய்பவளாகி வந்து வீழ்ந்து புலம்பிய சூர்ப்பணகியைக் கரன் கண்டு இருமடங்கு வெகுண்டு அவளை நோக்கி, அடி அருமைத் தங்கையே! உனக்கு நலம் செய்வதன் பொருட்டே சூரர்களும், கொடியர்களும், அன்புடையோர்களும், எக்காலையிலும் எனக் கிதமே செய்பவர்களும், பிறரைக் கொலைசெய்வோர்களாயினும், பிறரால் கொலைசெய்யத் தகாதோர்களுமாகிய பதினல்வரை யுன்னுடன் கூட்டி இப்பொழுதே யனுப்பி இருந்தே னல்லனே? மீளவும் ஏன் தனியே வந்து வீழ்ந் தழுகின்றனை? இதென்னகாரணம்? உன்னைப் பாதுகாப்பவன் யான் இருக்கையில், நீயேன் இவ்வண்ணம் அநாதையைப் போலப் புலம்புகின்றனை? எழுக; எழுக; அஞ்சற்க; துன்புறற்க; என்று இனிமையாகத் தேற்றி வினவினன். சூர்ப்பணகியும் அது கேட்டு மனந் தேர்ந்து, கண்களைத் துடைத்துக்கொண்டு கரனை நோக்கிக் கேளடா அண்ணு! யானிப்பொழுதே மூக்கறுப்புண் டோடிவந்து உன்னிடத்தில் முறையிட்டு, உன்னுலும் தேற்றப்பட்டு, என்பொருட்டே பதினன்கு படைத் தலைவர்களையும், என்னுடன் கூட்டி யனுப்பினு யல்லையோ? அவர்களும் அந்த ராமனுடைய கூரிய கணைகளா லடிபட்டிறந்தனர்கள்; கணப்பொழுதில் ராமனெருவனுலேதானே யவர்கள் மடிந்ததைக்கண்டு அச்சமுற்றேடிவந்து உன்னையே தஞ்சமடைந்தேன்;

ஆதலின், துயரமென்னும் முதலை யுடையதும், பேரச்சமென்னும் அலை பொருந்தியதும், கரைகாணப் படாததுமாகிய சோகக்கடலின் மூழ்கிய என்னை ஏன் பாதுகாத் தளிக்கின்றிலை ? என்னைப் பற்றி இப்பதினல் வரும், ராமனால் கொலைசெய்யப்பட்டு வீழ்ந்திருக்கின்றனர்கள் ; என் மீதும், அவ்வரக்கர்மீதும், உனக் கருளு மன்பு முளவென்ப துண்மை யாயினும், ராமனுடன் போர்செய்ய உனக்குத் திறமை யுளதாயினும், உனக்குத் தோள்வலியும் வீரமும் திரமும் உளவாயினும், அரக்கர்களுக் குப் பகையாகிய அந்தக் கொடிய ராமனைக் கொலை செய்யாய்; எமக்குப் பகையாகிய அந்த ராமனை நீ இப்போழ்து கொலை செய்யாயாகில், யானிப்பொழுதே உன்னெதிரில் உயிரை மாய்த் திறப்பேன்; நீ சதுரங்க சேனைகளுடன் கூடிப் போரில் செல்வாயாயினும், நீ ராமனுக் கெதிரில் நிற்க வல்லமை கொள்ளாயென்று எண்ணுகின்றேன்; யான் மிகத் தோள் வலி யுற்றோனெனவும், வீரமுடையோனெனவும், வாளாச் செருக்குற் றிருக்கின்றனையே யன்றி, நீ யுண்மையாகச் சூரனாகாய் ; மானிடர்க ளாகிய அவ்விருவர்களையும், நீ கொலைசெய்யத் திறமை கொள்ளுகின்றிலை யல்லையோ ? ராமனுடன் போர்செய்யத் திறமையுள்ளாயென்ப துண்மை யாயின், இப்பொழுதே சென் றவனை வெற்றி கொள்ளாய் ; வீரமும் திரமுமின்றி, அற்பனாகிய நீ இவ்விடத்தில் வாழ்வதென்பதெவ்வண்ணம்? ஆதலின், விரைவாக இனத்தார் சுற்றத்தார்களுடன் கூடி இந்த ஜனஸ் தானத்தை விட் டோடிச் செல்க ; இவ்வண்ண மிங்கிருப்பாயாகில், ராம னுடைய தேஜஸ்ஸினால் எரிக்கப்பட்டவனாகி, நீ விரைவில் அழிவாய் ; தசரதசக்கரவர்த்தித் திருமகனாகிய அந்த ராமன் மிகவும் தேஜஸ்ஸுற் றிருக்கின்றனன் ; அவன் தம்பியாகிய லக்ஷ்மணனும் மிகவும் பராக்கிரம முடையோன் ; அவனாலேயன்றோ யான் மூக்கறுப்புண்டேன் ; என்றிவ் வண்ணம் பலமுறை மொழிந் திகழ்ந்து, கைகளினால் வயிற்றி லடித்துக் கொண்டு மிக வருந்திப் புலம்பி யழுதனள்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்திரண்டாவதுசருக்கம்.

கரன் பெருமாள்மேல் போர்செய்யப் படை எடுத்தது.

கர னிவ்வண்ணம் சூர்ப்பணகியால் இகழ்ந்து மொழிந்து போர் செய்யத் தூண்டப்பட்டவனாகி, அரக்கர்களது நடுவில் தங்கையை நோக்கிக் கேளடி நங்காய் ! உனக்குற்ற அவமானத்தினால் பெருகிய

எனது கோபம் பொங்கோதம்போலத் தடைசெய் தடக்குவதற் கரிய தாகி மேலெழுகின்றது ; தான் செய்த தீச்செயலினாலே யாவனொருவன் என்னா லிப்பொழுதே யடிபட் டிறக்கப் போகின்றனனோ ? அத்தன்மைய னாகிய அம்மானிடனுக்கு யான் அச்சமுறுகின்றிலேன் ; அந்த ராமன் எனக்கு நிகராகுவானோ ? யான் அவனைப் போரில் மதிக்கின்றி லேன் ; ஆதலின், கண்ணீர் விடற்க ; பதைப்பை விடுக ; யானிப் பொழுது தம்பியுடன் ராமனை யமனிட மனுப்புவேன் ; ராமன் கோடா லியா லடிபட் டிறந்து தரையில் வீழ்கையில், நீ யவனுடைய வெப்பம் கொண்ட உதிரத்தைப் பானஞ் செய்வாய் ; தேறி எழுந்திராயென் றுரைத்தனன். சூர்ப்பணகையு மதுகேட்டு மகிழ்ந் தவனைப் புகழ்ந் தெழுந்தனள். தங்கையினால் தூண்டப்பட்ட கரனும், மீளவும் அவளால் புகழப்பட்டவனாகி மகிழ்ந்து, தூஷணனை நோக்கிக் கேளாய் ஸேனாபதி! என் மனத்துக் கிசைந்தனவும், கொடிய வேக முடையனவும், போர்க் களத்தில் வெற்றி கொள்ளாது மீளாதனவும், நீருண்ட கொண்டல்வண்ண முடையனவும், தீச்செயலினவும், உயிர்களை வருத்தி மகிழ்வனவும், சிறந்த தோள்வலி யுற்றனவும், புலிபோலப் பாயுந் தன்மையனவும், கொடியனவுமாகிய அரக்கர்களது பதினாலாயிரஞ் சேனைகளையும், சந்நத் தஞ்செய்க; விரைவில் வில் முதலிய படைகளையும், தேரையும் கொணர்க; வில், கணை, வாள், சக்தி இவ்வாயுதங்களைப் பலவாகத் தேரி லேற்றுக; யான் இப்படைகளுக்கு முன்னாக அந்தக் கொடிய ராமனைக் கொலை செய்வதன் பொருட் டேகக் கோருகின்றேனென்று கட்டளையிட்டனன். தூஷணனும் உடனே வெய்யோன்போலத் திகழ்ந்து, பற்பல வண்ணம் பொருந்திச் சிறந்த குதிரைகள் கட்டிய தேரைக் கொணர்ந்து கரனுக் கறிவித்தனன். கரனும் மேருகிரியின் சிகரம்போல உயர்ந்தும், சிறந்த பொன்னணிகளால் அலங்காரஞ் செய்யப்பட்டும், பொன்னாலியற்றிய சக்கரம் பூட்டியும், நெருக்கமின்றியும், வைடூரியத்தாற் செய்த ஏர்க்கால் அமைந்தும், மீன் மலர் மரம் செடி கொடி மலை இரவி மதி விண்மீன் பறவைகள் தங்கத்தினால்செய்து சிங்காரிக்கப்பட்டும், துவஜம் நாட்டியும், சதங்கைகள் கணகணவென் றொலித்தும், குதிரை கட்டியும், சித்தமாய் நிற்கின்ற அந்தத் தேரின்மே லேறினன். சேனைகளும் இவனைக் கண்டு படை ஏந்தி வந்து, இவனையுந் தூஷணனையுஞ் சுற்றி நின்றன ; கரன் தேர் நடுவி லிருந்தே எல்லா வரக்கர்களையும் நோக்கிச் செல்லுக செல்லுக வென்று கட்டளைசெய்கையில்,தானைகளுமுடனேபுறப்பட்டுச் சிங்கநாதஞ் செய்தும், ஈட்டி தடி வாள் சூலம் சத்தி பரிகம் கோடாலி வில் உலக்கை முதலிய கொடிய படைகளைக் கரங்களிலேந்திக் கரன் கருத்தின்படி பஞ்சவடியை நோக்கிச் சென்றன ; இவ்வண்ணம் பதினாலாயிரம் சேனை களும் விரைந்து செல்லுவதைக் கண்டு, கரனுடைய ஸாரதியும் யஜமான னுடைய மனமறிந்து தேரை மெல்ல நடாத்தினன். அப்பொழு தந்தத்

தேரினொலி பத்துத் திசைகளிலு மெழுந் தொலித்தது; இவ்வண்ணஞ் செல்லுகையில், கரன் சினமும் தீரமும் அதிகரித்துப் பகைவரைக் கொலை செய்வதில் விரைவுகொண்டு சிஹ்மநாதஞ்செய்து யமன்போலப் பயந்தருபவனாகி, கற்களையும் வீசி எறிகின்ற பெருங்காற்றுக் கருமுகிலைத் தாக்கி யோட்டச் செய்வதுபோல்ச் சாரதியைத் தூண்டித் தேரை விரைவாகச் செல்ல விட்டனன்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்திரண்டாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்துமூன்றாவது சருக்கம்.

கரனுக்கு வழியில் அவசகுனங்களாகியது.

இவ்வண்ணம் கரன் பதினாலாயிரம் சேனைகளுடன் போர்செய்யப் புறப்படுகையில், தீமை தருவதும், கண்ணுறற் கரியதும், கழுதையின் வண்ணம் பொருந்தியதும், கொடுமைகொண் டொலிப்பதுமாகிய மேகம் குருதியைப் பொழிந்தது; மேடுபள்ளமின்றி நறுமலர்தூவிய ராஜவீதியிலேதானே தேர்க்குதிரைகள் கால்மடிந்து வீழ்ந்தன; ஸூரியனைச் சுற்றிலும் கறுத்தும், முனையில் செவந்தும், குறைக்கொள்ளிபோலப் பரிவேஷ முளதாயிற்று; தங்கக்காம்புடைய தேர் துவஜத்தின்மேல் கொடிய கழுகுவந் துட்கார்ந்தது; புலாலுண்ணும் பறவைகளும், விலங்குகளும், ஜநஸ்தானத் தருகில் வந்து கோரமாக வொலித்தன; தற்செயலாய் எரிகின்ற தென்றிசை நோக்கி, நரிகள் நிரை நிரையாகக் கூடி யூளையிட்டன; இந்திரனால் சிறகுக ளறுப்புண்டு குருதி பெருகிய மலைகள் போன்ற செம்மேகங்களும், ஆகாசமெங்கும் பரவி மறைத்தன; மயிர்க்கூச்செறியத்தக்கதாகிக் காரிருள் மூடிற்று; திக்குகளாயினும், விதிக்குகளாயினும், நன்கு விளக்க முற்றில; ரத்தம்போலச் செவந்த சந்தியுங் காலமல்லாக் காலையில் தோன்றிற்று; கரனுக் கெதிராகப் பறவைகளும், விலங்குகளும், கோரமாகக்கூவின; கழுகு நரி கூளி முதலிய பறவைகள் அச்சமும் தீமையுந் தருவனவாகி யொலி செய்தன; நரிகள் தீயெழுந் தொலிக்கின்ற முகங்களுடன் படைகளை நோக்கி, ஊளையிட்டன; பரிகம் போன்ற தலையற்ற உடல் கதிரவனருகில் காணப்பட்டது; பருவமல்லாக் காலையிலும், ராகு ரவியை விழுங்கினன்; பெருங்காற்றெதிர்த்து வீசிற்று; வெய்யோனும் ஒளி யிழந்தனன்; இரவன்றியும், விண்மீன்கள் மின்மினிப் பூச்சிகள்போல வீழ்ந்தன; தாமரை யோடைகளும், அடங்கிய

மீன் பறவைகளை யுடையனவும், உலர்ந்த தாமரைமலர்க ளுள்ளனவுமாகக் காணப்பட்டன ; மரங்களும் தளிர் மலர் காய் கனிகளை யுதிர்த்தன ; காற்றின்றியே செந்தூளி எழுந்தது ; சாரிகைகளும் வீசிக் கூசி யென்று கூவின ; கொள்ளியும் ஒலியுற்ற சுழல்காற்றுடன் வீழ்ந்தது ; மலை செடி காடு கடல்களுடன் கூடிய பாரும் அசைந்தது ; கரனுடைய இடது புஜமும் நடுக்குற்றது ; ஒலியும் கண்டத்தில் தடையுற்றது ; கண்ணும் சோகநீருற்றது ; நெற்றியிலும் நோயுளதாயிற்று ; இவ்வண்ணம் பல அவசகுனங்கள் காணப்படினும், கரன் மதிமயக்கினால் திரும்பிச் சென்றிலன் ; அன்றியும், அவன் அந்த அவசகுனங்களைக் கண்டு கனகனவென்று நகைத்து, தன்னுடன் வந்த அவ்வரக்கர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர் வீரர்களே! யான் மிகத் திறமையுற்றவனா யிருக்கையில், இவ்வுற்பாதங்களைக் கண்டச்ச முறுவேனோ ? ஒருக்காலும் அச்சமுறேன் ; கூரிய கணைகளினால் விண்மீனையும், விண்ணினின் றறுத்து வீழச் செய்வேன் ; யான் சினமுறுவேனாகில், யமனையுங் கொலை செய்வேன் ; ஆதலின், அற்பர்களாகிய இந்த ராம லக்ஷ்மணர்களைக் கூரிய கணைகளினால் கொலைசெய்யாது மீண்டு செல்ல விரும்புகின்றிலேன் ; என் தங்கையும் அவர்களுடைய ரத்தத்தைப் பானஞ்செய்து கோரிக்கை யீடேறி மகிழ்க; அவள்பொருட்டே யல்லவோ ? ராம லக்ஷ்மணர்கள் தீமை செய்தனர்கள் ; யானிதுவரையி லெங்கும் போரில் தோல்வி யுற்றிலேன் ; இவ்விஷயத்தை நீங்கள் கண்ணாரக் கண்டிருக்கின்றீர்க ளல்லீரோ ? யான் பொய்யுரையேன் ; வச்சிரமேந்தி யைராவத மூர்ந் தெதிர்க்கு மிந்திரனையும் யான் வெல்வேனாகில், இம்மானிட ரிருவரை வெல்லேனோ ? என்று வீரவாதஞ்செய் துரைத்தனன். அப்படைகளும் ஆயுள்மாய்ந்தமையின், அம்மொழிகேட்டு மகிழ்ந்து சென்றன ; அப்பொழுது தேவகந்தர்வ ஸித்தசாரணாதிகளாயுள்ள தேவகணங்களும் இவர்களுடைய போரைப்பார்க்கவேண்டுமென்றும் கௌதூஹலங்கொண்டு இங்கு வந்து சேர்ந்து இப்படைகளைக்கண்டு பெருமாள் ஜயமுறுரோவென்றையமுற்று ;—

స్వస్తిగో బ్రాహ్మణేభ్యో౽స్తు లోకానాంయేభిసంగతాః
జయతాంరాఘవస్సంఖ్యే పౌలస్త్యాన్ రజనీచరాన్.

ஸ்வஸ்திகோப்ராஹ்மணேப்யோஸ்து லோகாநாம்யேபிஸங்கதா:
ஜயதாம்ராகவஸ்ஸங்க்யே பௌலஸ்த்யான்ரஜநீசரான்.

ஆனிரைகளின் பொருட்டும், அந்தணர்கள் பொருட்டும், உயிர்களுக் கிதங்கருதும் நல்லோர்கள் பொருட்டும், நலமுண்டாகக் கடவது. புலஸ்தியமஹாமுனியின் குலத்தில் தோன்றிய இவ்வரக்கர்களை ரகுகுல துரீணரான பெருமாள் வெற்றிகொள்ளக்கடவர். சக்கரபாணியாகிய ஸ்ரீமந் நாராயணன் போரில் அஸுரர்களை மடிப்பதுபோலவே இவரும் பகைவரை

வென்று நற்புகழ் பெறக்கடவர். என்றிவ்வகையாக ஆசீர்வசநஞ்செய்து சூழ்ந்து நின்று பார்த்திருந்தனர்கள். அவ்வண்ணம் கரனும் தேரூர்ந்து விரைவாக வருகையில், அவனைச் சேர்ந்த ராக்ஷஸர்களெல்லோரும் புறப்பட்டு விரைவாக வந்தனர்கள். அவர்களுள் சியேநகாமீ, பிருதுக்ரீவன், யஜ்ஞசத்துரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீராக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலீ, மஹாமாலீ, ஸர்ப்பாஸ்யன், ருதிராசனன் என்னும் பன்னிரண்டு மந்திரிகள் கரனுக்கு நாற்புறங்களிலுஞ் சென்றனர்கள்; மஹாகபாலன், ஸ்தூலாக்ஷன், ப்ரமாதீ, திரிசிரன் என்னும் நான்கு சேனாபதிகள் தூஷணனுக்குப் பின்புறத்திற் சென்றனர்கள்; போர்செய்யக் கருதிச் சிறந்த வேகமுற்றுச் செல்லுகின்ற அந்தப் பதினாலாயிரம் அரக்கர் படைகளும், விண்ணிடையில் விண்மீன்கள் சந்திர சூரியர்களைச் சேர்வனபோல ஸ்ரீராம லக்ஷ்மணர்களைச் சேர்ந்தனர்கள்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்துமூன்றாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்துநான்காவது சருக்கம்.

பெருமாள் போர்செய்யச் சன்னத்தராகி யருளியது.

இவ்வண்ணம் கரன் போர்செய்யப் புறப்பட்டு வருகையில், அவனுக்கு நேர்ந்த அவசகுநங்களையே பெருமாள் பர்ணசாலையிலிருந்தே கடாக்ஷித்து, இளையபெருமாளை நோக்கி, பாரடா தம்பி! இந்த உற்பாதங்கள் எல்லாவுயிர்களையும் அழிக்கத் தக்கனவும், அரக்கர்களுக்கு மிகவும் தீமை தருவனவுமாகின்றன; இம்மேகங்கள் செவப்புற்றுக் குருதிபொழிகின்றனவாகி, வான் முழுதும் பரவிக் கழுதைபோலக் கடுவொலி வொலிக்கின்றன; என்னுடைய கணைகளும் புகையெழுந்து மின்னுகின்றன; கோதண்டங்களும் அசைகின்றன; இப்பறவைகளின் ஒலிகளும் நமக்குக் கணப்பொழுதிலேதானே மஹாபயந் தோன்றுமெனச் சூசனை செய்கின்றன; ஆதலின், பெருஞ்சண்டை விளையப்போகின்றதென்பதில் ஐயமிலது; என்னுடைய இந்த வலது தோளும் அடிக்கடி துடிப்புற்றிருக்கின்றமையின், எமக்கு ஜயமும், எதிரிக்குத் தோல்வியும் நேருமென வுணர்க்கின்றது; உனது முகமும் ஒளியுற்று விளங்குகின்றது;—

ఉద్యతానాంహియుద్ధార్థం యేషాంభవతిలక్ష్మణ
నిష్ప్రభంవదనంతేషాం భవత్యాయుఃపరిక్షయః.

உத்யதாநாம்ஹியுத்தார்த்தம் யேஷாம்பவதிலக்ஷ்மண
நிஷ்ப்ரபம்வதநம்தேஷாம் பவத்யாயுꞏபரிக்ஷயꞏ.

போர்செய்ய முயலுங்காலையில், யாவருடைய முகம் ஒளியிழந்து வாடுகின்றதோ ? அவர்களே ஆயுள்மாண் டிறப்பார்கள் ; எமது முகம் அவ்வண்ணம் ஒளி இழந்திலதாதலின், யாமே வெற்றி கொள்வோம் ; ரணபேரியின் முழக்கமும், அரக்கர்களது சிம்ஹநாதமும், கலந் தொலிக்கின்றன ; ஆதலின், விரைவில் பெரும்போர் விளையும்,—

అనాగతవిధానన్తు కర్తవ్యం శుభమిచ్ఛతా
ఆపదంశంకమానేన పురుషేణ విపశ్చితా.

அநாகதவிதாநந்து கர்தவ்யம் சுபமிச்சதா
ஆபதம்சங்கமானேன புருஷேண விபச்சிதா.

அறிவுடையோன் நன்மைபெற விரும்புவானாகில், துன்பம் வருமென வறிந்தபின், அத்துன்பம் நேர்வதன் முன்னமே அத்துன்பம் தன்னை யணுகாவண்ணம் முயற்சி செய்யத்தக்கவன் ; ஆதலின், நீ இப்பொழுதே வில்லி னுணேறிட்டுக் கணைதொடுத்து ஊக்கங்கொண்டு வைதேஹியை யழைத்துக் கொண்டுபோய் மரங்களடர்ந்து நெருங்கிய இம்மலையின் குஹையினுட்புகுந்து பாதுகாத் தளிக்கக் கடவை. என்னுடைய இக்கட்டளையை மறுத் துரையற்க ; என்னுடைய திருவடிகளின்மேலே ஆணையிட்டிருக்கின்றேன் ; தாமஸஞ் செய்யாமல் செல்லுக ; நீ மிகத் தோள்வலியுற்றவனும், வீரமுடையோனு மாதலின், இப்படைகளைக் கொல்ல நீ யொருவனே வல்லை ; ஆயினும், யானே இவ்வரக்கர்க ளெல்லோரையுங் கொலைசெய்யக் கோருகின்றேனென்று கட்டளைசெய் தனுப்பி யருளினர். இளையபெருமாளு மதுகேட்டு அங்ஙனமே யாகுகவென்று வில்லைக் கையிலேந்திப் பிராட்டியாரையு மழைத்துக்கொண்டு பிறர் புகுதற்கரிய குகையினுட் புகுந்தனர். உடனே பெருமாளும் இவர்களை நல்லுபாயஞ்செய் தனுப்பி விட்டேனென்று மகிழ்ந்து, கவசம்பூண்டு, நள்ளிருளில் புகைநீங்கி எரிகின்ற செந்தழல்போலத் திகழ்ந்து, கோதண்டத்தைத் திருக்கரத்திலேந்தி, கூரியகணைகளையும் ஸந்நத்தஞ்செய்து, வில்லின் டங்காரத்தினுல் திசைக ளெல்லாவற்றையும் ஒலிக்கச்செய்து நின்றருளினர். முன்புற்ற தேவ கந்தர்வ ஸித்த வித்யாதர சாரண கின்னர கிம்புருஷாதி தேவகணங்களும், தேவரிஷி பிரஹ்மரிஷிகளும் வந்து கூடி, கோப்ராஹ்மணர்களுக்கு மங்கல முண்டாகுக வென்றும், ஸ்ரீமந்நாராயணன் அஸுரர்களைப்போலப் பெருமாளும் அரக்கர்களை வெல்லுகவென்று ஆசீர்வாதஞ்செய்து (தெருச் சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி) என்னும், பழமொழியின்படியே இவர்களுடைய சண்டையைக் கண்ணுறக் கருதிச் சுற்றிலும் அடர்ந்து நின்றனர்கள் ; அவர்களுள் சிலர் அரக்கர் பதினாலாயிரவர்களுடன் ஸ்ரீராமபிரானொருவனே எவ்வண்ணம் போர்செய்து வெற்றி கொள்வானோவென்று வியந்தனர்கள். யுத்தத்திற்குச் சித்தமாகி மஹாவொளிபொருந்திப் போர்க்

களத்தின் முன்னிற்கிற பெருமாளைக்கண்டு எல்லாப்பூதங்களும் நடுங்கின; அப்பொழுது பெருமாளுடைய திருமேனியும் ஊழிகாலத்தி லுருத்திரனுடைய உடல்போலத்திகழ்ந்தது; உடனே அவ்வரக்கர்களது சேனைகளும், பற்பல படைகளை ஏந்தியும், சிம்ஹநாதஞ் செய்தும், தனுஷ்டங்காரஞ் செய்தும், வீரவாத முரைத்தும், பேரிகளை முழக்கியும், விரைந்து வந்து சுற்றிக் கொண்டன; அவ்வொலிகள் யாவும் ஒன்றுசேர்ந் தொலித்தன; அவ்வொலியைச் செவியுற்று, அவ்வநத்திலுள்ள விலங்கு பறவைகள் யாவும் பயந்தோடின; பெருமாளும் தன்மே லெதிர்த்து வருகின்ற அந்தச் சேனை முழுவதும் கடாக்ஷித்துக் கோதண்டத்தில் நாணேக்கட்டி யம்பறாத் தூணிகளினின்றும் கணைகளை யெடுத்துக் கடுஞ்சினம் மேற்கொண்டு ஊழிகாலத் தீபோலக் கண்ணுறற் கரியராகி விளங்கினர். பெருமாளுடைய அவ்வுருவத்தைக் கண்டு வநதேவதைகளும் அஞ்சி யோடின; அந்த ரூபம் தக்ஷயாகத்தை யழிக்க வந்த பினகியின் ரூபம்போலக் கோரமாய் விளங்கிற்று; அவ்வுருவத்தை எல்லாப் பூதங்களும் கண் டஞ்சி யோடின; அந்த அரக்கர்களது தானையும், கார்முகங்களினலும், அணிகளினலும், துவஜங்களினலும் சூழப்பட்டதாகி, உதயகாலத்தில் கருமுகில்களின் திரள்போல விளங்கிற்று.

ஆரண்யகாண்டத்தில் இருபத்துநான்காவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்தைந்தாவது சருக்கம்.

பெருமாளுக்கும் அரக்கர்களுக்கும் துமுலயுத்தம் நிகழ்ந்தது.

அநந்தரம் கரனும் சேனைகளுடன் சூழ்ந்து வந்து, விற்பிடித்துச் சினமுற்றுப் பகைவரைக் கொலைசெய்பவராகி நிற்கின்ற பெருமாளைக் கண்டு தானும் வில்லை மேலெடுத்துக் கணைதொடுத்துத் தேரை ராமனுக் கெதிராக நடாத்துகவென்று சாரதியை ஏவினன்; சாரதியும் அவ்வண்ணமே தேரை ஸ்ரீராமபிரானுக்கெதிராகவோட்டுகையில், அமைச்சர்களும் அந்தக் கரனைச் சுற்றியே வீரவாதஞ்செய்துகொண்டேகினர்; கரனும் அவர்களுக்கு நடுவில் விண்மீன்களினிடையி லங்காரகன்போலத்திகழ்ந்து, ஸ்ரீராமபிரானைக்கிட்டி யாயிரம் கணைகளைத் தொடுத்து, ஸ்ரீராமசந்திரன்மேலே விடுத்துச் சிம்ஹநாதஞ்செய்து நிற்கையில், மற்றுள்ள வரக்கர்களும் பற்பல படைகளினல் பெருமாளையடித்தனர்கள். அவர்களுள் சிலர் தேரிலும், சிலர் யானைகளிலும், சிலர் குதிரைகளிலும் ஏறிக்கொண்டு பெருமாளை எதிர்த்து கருமுகில்கள் பெருமலையைப்போலச் சரமாரி பொழிந்து மகிழ்ந்து கர்ஜ்ஜித்தனர்கள்.

பெருமாளும் அவ்வரக்கர்களது படைகளைக் கணைகளினால் நதிகளின் பெருக்குகளை யாழ்கடல் அலைகளினால் தடுப்பதுபோலத் தடுத்துத் தம்முள்ளடக்கி யருளி, யவ்வாயுதங்களினால் பிளக்கப்பட்ட திருமேனியுடையராயினும், துயருற்றிலர்; ஆயினும், பலவகைப்பட்ட ஆயுதங்களினால் அடிபட்டு திருமேனியெங்கும் இரத்தம்பெருகி, வச்சிரங்களினால் பிளக்கப்பட்டுக் காவித்துகளெழுந்து பரவிய மகாமலைபோலவும், மாலைப்பொழுதில் சிவந்த மேகங்களி னிடையில் திகழுங் கதிரவன் போலவும் காணப்பட்டனர். இவ்வண்ணம் பதினாலாயிரம் சேனைகள் சூழ்ந் தொருவனாயே குறியிட் டடிக்கக் கண்டு தேவ கந்தர்வ ஸித்த சாரண மஹாரிஷி முதலிய யாவரும் துயரமடைந்தனர். பெருமா ளிவ்வண்ண மடிபட்டுக் கடுஞ்சினத்தை மேற்கொண்டு, நூறுயிரம் பதினாயிரமாகப் பாணங்களைத்தொடுத்து விடுத்தருளுதலும், அக்கணைகள் காலபாசங்கள் போலப் பகைவர்களுடைய உயிர்களைப் பற்றி இழுத்துக்கொண்டு அவர்களி னுடலையும் பிளந்து குருதி தோய்ந்து வானிற்சென்று செந்தழல்போலத் திகழ்ந்து வீழ்ந்தன; இவ்வண்ணங் கணக்கிறந்த பாணங்கள் பெருமாளுடைய கோதண்டத்தினின்று மிடைவிடாது புறப்பட்டு வானெங்கும் நிறைந்தன; இவ்வண்ணம் பெருமாள் அந்தக் கணைகளினால், பகைவர்களது வில் கணை துவஜம் கவசம் தலை கை கால் தொடை முதலியவற்றைப் பலவாக வறுத்தும், ஸாரதியுடன் தேர்க் குதிரைகளையும், யானைப் பாகர்களுடன் யானைகளையும், குதிரைக் காரர்களுடன் குதிரைகளையும், காலாள்களையும் கொலைசெய் தருளுதலும், அரக்கர்களெல்லோரும் பலவகைப்பட்ட பாணங்களினா லறுபட்டுக் கூவென்று கதறி, முதுவேனிற்பருவத்தில் தீயினாலெரிக்கப்பட்ட காடுகள்போல மடிந்தழிந்தனர்கள். அவர்களுள் சூரர்களாகிய சிலர் பெருமாளுக் கெதிராக வந்து கூரிய சூலம் வாள் கோடாலி முதலிய வாயுதங்களை எய்தனர்கள்; பெருமாளும் பாணங்களினால் அவர்களுடைய ஆயுதங்களையுந் தடுத் தறுத்துத் தலைகளையும் அரிந் தருளுகையில், அவர்களெல்லோரும் பெரிய திருவடி எழுந்தருளுங்காலையில், சிறகின் காற்றினால் முறிபட்ட மரங்கள் போலச் சாய்ந்து மாய்ந்தனர்கள். தப்பிப் பிழைத்தோரும், அச்சத்தினால் திரும்பி யோடிக் கரனையே தஞ்சமென் றடைந்தனர்கள். தூஷணன் அவர்களைக் கண்டு தேற்றித் திருப்பி யான் வந்து போர்செய்வேன் வாரீர்களென் றழைத்து வந்தனன்; அவர்களும் இவனுதவியினால் வெற்றி பெறுவோமென் றெண்ணி, மரம் மலை கல் முதலியவைகளையும், பாணங்களையும், மற்றுள்ள ஆயுதங்களையும், பெருமாள்மேல் சொரிந்து சூழநின் றடர்த்தனர்கள். பெருமாளும் இவர்களெங்குஞ் சூழநின்று பொருவதைக்கண்டு காந்தர்வாஸ்திரம் பிரயோகஞ் செய்கையில், அதினின்றும் கணக்கிறந்த கணைகள் தோன்றித் திசைகளெங்கும் நிறைந்து, வெய்யோனையும் மறைத்தன; அப்பொழு தவ்வரக்கர்கள் பெருமாள் கணைகளை எடுப்பதையும், தொடுப்பதையும், விடுப்பதையும் அறியாமல், திகைத்து நின் றடிபட்டு இறந்தனர்

கள். இவ்வண்ணம் இவர்களால் போர்க்களம் முழுதும் நிறைந்து, பற்பல வணிக ளணிந்த ரதகஜதுரகபதாதிகளின் அவயவங்களும், சூலம் வாள் முதலிய ஆயுதங்களும் அறுபட்டு, எங்கும் நிரம்பி இருந்தமையின், கண்டோர் அச்சமுறத்தக்கதாகி விளங்கிற்று ;—

ஆரண்யகாண்டத்தில் இருபத்தைந்தாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்தாறுவது சருக்கம்.

பெருமாள் தூஷணன் முதலிய சேனைகளைக் கொலைசெய் தருளியது.

இவ்வண்ணம் சேனைகள் போரில் மடிந் திறந்ததைத் தூஷணன் கண்டு, மிகக் கொடியவர்களாகிய ஐயாயிரம் ராக்ஷஸர்களுக்குப் போர் செய்யும்படி கட்டளையிட, அவர்களும் சுற்றி நின்று, பற்பல படைகளையும், மரம் கல் முதலியவைகளையும், சரமாரியையும், பெருமாள்மேல் சொரிந்து கர்ஜ்ஜனைசெய்தனர்கள். பெருமாளும் பாணவர்ஷத்தினுல் அவைகளைத் தடுத்துச் சிலவற்றை மழைமாரியைக் காளைபோலக் கண்களை மூடிக்கொண்டு பொறுத் துடனே சரமாரிபொழிந்து சேனைகளை யடித்துக் கொலை செய்கையில், தூஷணன் மிக முனிந்து, பேரிடிக்கு நிகரான பாணங்களைப் பெருமாள்மேலே சொரிந்து மகிழ்ந்தனன்; பெருமாளும் உடனே மிக வெகுண்டு ஒரு கணையினு லவன் வில்லை யறுத்து, நான்கு பாணங்களினுல் நான்கு தேர்க்குதிரைகளையும், மற்றொரு பாணத்தினுல் சாரதியையும் கொன்று, மூன்று சரங்களைத் தூஷணன் மார்பில் நாட்டினர். தூஷணனும் முனிந்தெழுந்து மலையின் சிகரத்தை நிகர்த்ததும், பொன்கட் டமைந்ததும், எஃகின் முளைகள் நிறைந்ததும், பிறரைப் பிளப்பதும், கருநாகத்தைப் போன்றதுமாகிய பரிகத்தைக் கையிலேந்திப் பெருமாளை எதிர்த் தோடி வந்தனன். பெருமா ளவனைக் கண்டு இரண்டு கணைகளைத் தொடுத்து கங்கணங்கதங்களை யணிந்த அவனுடைய இரண்டு புஜங்களையும் அறுத்துத் தள்ளுகையில், அந்தப் பரிகம் அறுபட்ட இந்திரத் துவஜம்போல நழுவி வீழ்ந்து விட்டது ; அவனும் இரண்டு தந்தங்களையும் முறித் தடிக்கப்பட்ட மதயானைபோலத் தரையில் வீழ்ந் திறந்தனன் ; இவ்வண்ணம் அவனிறந்ததைக் கண்டு எல்லாப் பூதங்களும் நலம் நலம் என்று பெருமாளைப் புகழ்ந்து மகிழ்ந்தன ; இதற்குள்ளே தூஷணனைக் கொலை செய்தனரோ யென்று மிகவும் சினங்கொண்டு மஹாகபாலன், ஸ்தூலாக்ஷன், பிரமாதி

என்னு மூவர்களும், முறையே சூலம், பட்ட்ஸம், பரசு என்கிற மூன்று படைகளேயுங் கையிலேந்திச் சாகுங்காலங் கிட்டினமையின், ஒரே காலத்தில் பெருமாளே எதிர்த் தோடி வந்தனர்கள்; ரணவீரரான ஸ்ரீராமசந்திரரும் அவர்களேக் கண்டு கூரிய கணேகளினல் அதிதிகளேப்போல எதிர்கொண் டங்கீகரித்து, மஹாகபாலனுடைய சிரத்தைப் பாணங்களின லறிந்து, கணக்கிறந்த பாணங்களினல் பிரமாதியை மர்த்தித்துக் கொலேசெய் தருளினர்; அவர்கள் வேரி லறுப்புண்ட் தழைத்த மரங்கள்போலச் சாய்ந்து வீழ்ந்தனர்கள். ஸ்தூலாக்ஷனுடைய ஆழ்ந்துபருத்தகன்ற கண்களிரண்டையும், சரமாரி பொழிந்து நிரப்பி யமலோகமனுப்பித் தூஷணஞலேவப்பட்ட் ஐந்தாயிரம் அரக்கர்களேயும், ஐயாயிரம் பாணங்களினலடித்து, மடித்து, யமபுரி சேர்த் தருளினர். கரன் இவர்களெல்லோரு மிறந்துவிட்டதைக் கண்டு, மிக முனிவுகொண்டு, சேனுத்தியக்ஷர்களே நோக்கிக் கேளீர் அன்பர்களே! இந்தத் தூஷணன் ஒரு அற்ப மனிதனுட்ன் போர்செய்து மிகுந்த சேனேகளுடன் மடிந்தனன்; ஆதலின், நீவிரெல்லீரும் பற்பல படைகளினல் அம்மானிடப் பயலேக் கொலே செய்க வென்று கட்டளேசெய் தனுப்பித் தானும் பெருமாளே எதிர்த் தோடினன்; உட்னே சியேநகாமீ, பிருதிக்கிரீவன், யஜ்ஞசத்துரு, விஹங்கமன், துர்ஜயன், கரவீர்ாக்ஷன், பருஷன், காலகார்முகன், மேகமாலீ, மஹாமாலீ, ஸர்ப்பாஸ்யன், ருதிராசனன் என்னும் பன்னிரண்டு பலாத்தியக்ஷர்களும், சேனேகளுடன் பெருமாளேயே எதிர்த்துச் சரங்களேத் தொடுத் தெய்தனர்கள். பெருமாளும் கடுஞ்சினம் பூண்டு, வச்சிரத்துக்கு நிகரான கணேகளினல் மிகுந்த சேனேக ளெல்லாவற்றையும் அடித் தருளினர். அந்தக் கணேகளும் புகைசூழ்ந்த தீபோலப் பாய்ந்து, பேரிடிகள் சிறந்த மரங்களே எரிப்பதுபோல அவ்வரக்கர்களேப் பற்றி எரித்தன; இவ்வண்ணம் பெருமாளும், அரக்கர் நூற்றுவரை நூறு கணேகளாலும், ஆயிரவரை ஆயிரங் கணேகளாலும் அடித் தருளுகையில், அவ்வரக்கர்கள் பாணங்களினல் பிளக்கப்பட்டு, வில்லறுந்து, கவசம் சிதறிக் கூந்த லவிழ்ந்து, தரையில் வீழ்ந் திறந்தமையின், அப்போர்க்களம் தூப்புல் முதலியவற்றுல் பரப்பப்பட்ட யாகவேதிபோலத் திகழ்ந்தது; இவ்வாறு ஒரு கணப்பொழுதில் அவ்வனம் முழுதும் மாம்ஸ சோணிதங்களினல் நிறைந்து, நரகம்போலாயிற்று; காலாளாகியும், மானிடஞகியு மிருக்கிற ஸ்ரீராமபிரானெருவனுலேதானே கரன், திரிசிரன், இவ்விரண்டு பேர்கள் தவிர மற்றுள்ள வீரர்களும், கொடியர்களுமாகிய பதினலாயிரம் அரக்கர்களும் அடிக்கப்பட் டிறந்தனர்கள். இவ்வண்ணம் எல்லோரும் இறந்துவிட்டதைக் கரன் கண்டு மிகச் சினமுற்றுப் படையைக் கையிற்பிடித்து, வச்சிராயுதத்தைக் கையிலேந்தி எதிர்க்கின்ற விண்ணுலகாளிபோலப் பெருமாளே எதிர்த்துத் தேருட னேடி வந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்தாருவது சருக்கம் முற்றிற்று.

இருபத்தேழாவது சருக்கம்.

பெருமாள் திரிசிரனுடைய தலைகளை யரிந் தருளியது.

பின்பு, கரன் பெருமாளை எதிர்த்து வருவதைத் திரிசிரன்கண் டோடி வந்து தடுத்துக் கரனை நோக்கி, மஹாபிரபு! ராமனைக் கொலைசெய்யுந் தொழிலில் என்னை ஏவி நீர் மீண்டு நின்று கண்ணுறுக; நான் ஒருவனே ராமனைப் போரில் மடிப்பேன்; யான் படையைக் கையிலேந்திப் பிரதிஜ்ஞை செய்வேன்; நம்மெல்லோர்க்கும் பகையான ராமனைக் கொல்வேன்; யானே அவனுக்கு மிருத்யுவோ? அவனே எனக்கு மிருத்தியுவோ? இரண்டிலொன்று இப்போழ்தே முடிவாகின்றது; யானே வெற்றி கொள்வேனாகில், நீ மகிழ்ந்து ஜனஸ்தானஞ் செல்லுக; அவனே என்னைக் கொன்று வெற்றி பெறுவானாகில், அடர்த்தவனுடன் போர் செய்க; ஆதலின், முகூர்த்தகாலம் சாக்ஷியாக நிற்க; யானே சென்று பொருவேனென்று சாகுங் காலம் கிட்டினமையின், வேண்டி யுரைத்தனன். கர னதுகேட்டு மகிழ்ந்து, அவ்வண்ணமே சென்று போர் செய்யாயென்று அனுமதிசெய் தனுப்புதலும், திரிசிரன் சிறந்த குதிரைகள் கட்டிய தேர்மீதேறி, மும்முடியுடைய மாமலைபோலத் திகழ்ந்து, பெருமாளை எதிர்த் தோடி, மஹாமேகம்போலச் சரமாரி பொழிந்து, நீரில் நனைந்த துந்துபிபோலக் கர்ஜ்ஜித்து மகிழ்ந்தனன். பெருமாளும் திரிசிரன் இவ்வண்ணம் ஓடி வருவதைக் கடாக்ஷித்துக் கோதண்டத்தில் கணைகளைத் தொடுத்து, அவனை எதிர்த்து விடுத்தனர். இவ்விருவர்களுக்கும் சண்டை மிக வளர்ந்தது; பின்பு, திரிசிரன் கூரிய கணைகள் மூன்றினால், பெருமாளுடைய நெற்றியில் நாட்டி யடிக்கப் பெருமாள் மிகவும் திருவுள்ளம் சீறி யவனை நோக்கி, அடா திரிசிரனே! நீ யரக்கர் குலத்திற் பிறந்தோனும், மிகவும் பராக்கிரம முடையோனுமாயினும், மூன்று பாணங்களையும் மலர்கள்போலவே என்னெற்றியில் தாக்கினையே? அந்தோ? உன் திறமையே திறமை; இந்த என்னுடைய கணைகளையும், தாங்கிக்கொள்ளென்று இகழ்ந் தருளிச்செய்து, பதினான்கு கணைகளை யவனுடைய மார்பில் நாட்டி, நான்கு ஸாயகங்களினால் தேர்க் குதிரைகள் நான்கினையும் அடித்து மடித்து, எட்டுப் பாணங்களினால் சாரதியைக் கொலை செய்து, தேர்த் தட்டிலேயே சாய்த்து, ஒரு சரத்தினால் துவஜத்தையும் அறுத்துத் தள்ளுகையில், திரிசிரன் அந்தத் தேரைவிட் டோடி வந்தனன்; அது கண்டு பெருமாள் மீளவும், பல பாணங்களை யவன் மார்பில் நாட்டினர். அதனால் திரிசிரன் ஜடனாகித் திகைத்து நிற்கையில், விரைவாக மூன்று கூர் கணைகளை எய்து, அவனுடைய மூன்று சிரங்களையும் அறுத்துத் தள்ளி யருளினர். உடனே யவனும் குருதி பெருகச் சாய்ந்து தரையில் வீழ்ந்தனன். மிகுந்துள்ள அரக்கர்களும், இவனிறந்ததைக்

கண்டு புலியைக்கண் டஞ்சிய மான்கள்போல நாற்புறங்களிலும் பயந் தோடினர்கள். கர னவர்களைத் தேற்றித் திருப்பி, ராகு சந்திரனைக்கண் டோடுவதுபோல ஸ்ரீராமசந்திரனைக் கண்டு வெகுண் டெதிர்த் தோடினன்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்தேழாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்தெட்டாவதுசருக்கம்.

பெருமாளுக்கும் கரனுக்கும் போர் விளைந்தது.

பெருமாள் பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடனும், தூஷண திரிசிரர் களையும், ஸம்ஹாரஞ் செய்தருளியதைக் கண்டு, கரன் தானும் அச்சங் கொண்டும் தீரத்தை விடாமல், நமுசிதானவன் வாஸவனை எதிர்ப்பது போலப் பெருமாளை எதிர்த்து, சீறிய நாகங்கள்போன்ற கூரிய விஷமூட்டிய பாணங்களை வில்லில் தொடுத் தெய்து, மேன்மேலும் ஆயுதப் பயிற்சியின் திறமையினால், பற்பல அஸ்திரங்களையும் தொடுத்து, திக்கு விதிக்குக ளெல்லாவற்றையும், சரமாரிகளினால் நிரப்பினன்.

பெருமாளும் அது கண்டு தாமும் கோதண்டத்தை இழுத்துச் சர மாரி பொழிந்து வான் முழுதும் நிறைத் தருளினர். இவ்வண்ண மிருவர்க ளுடைய பாணங்களாலும், பத்துத்திசைகளும் ஊசிமுனை நுழையவும் இடமின்றி நிறைந்தமையின், கதிரவனும் கதிர் விரிந்து திகழ்ந்திலன்; அத்தருணத்தில் பலவகைப்பட்ட கூரிய கணைகளைக் கரன் தொடுத்துப் பெருமாளைப் பாகன்மாவெட்டியினால் மதக்களிற்றினைப்போல அடித்துச் சின மூட்டினன். அப்பொழுது எல்லாப் பூதங்களும் கரனைக் கண்டு இவனே காலாந்தகனேவென் றச்சங்கொண்டன; ஸ்ரீராமன் இதுகாறும் போர்செய் திளைப்புற் றிருக்கின்றமையாலும், யான் இளைப்புறாது தேர்மீ திருக்கின்றமையாலும், வெற்றியே பெறுவேனென்று கரன் நினைத் திருந்தனன். கரன் மிகக் கொடியனாகி எதிர்த்துவரினும், தாம் இளைத் திருக்கினும், பெருமாள் அவனைச் சிறிதும் மதித்திலர்; சிங்கம் இளைப்புற் றிருக்கினும், அற்ப மிருகங்களைக் கண்டு அச்சமுறுமோ? அனந்தரம் கரன் விரைவாக வோடி வந்து விளக்கு வெட்டுப் பூச்சி செந்தழலை யணுகுவது போலப் பெருமாளைக் கிட்டி, இவருடைய பாணத்துடன் கூடிய கோதண் டத்தைப் பிடிக்கு மிடத்தி லடித் திருதுண்டாக வறுத்து, மேலும் ஏழு பாணங்களினால் கவசத்தி லடித்துச் சிதறுண் டது வீழ்கையில், மேன் மேலும் அநேகமாயிரம் சரங்களை விடுத்துப் பெருமாள் மெய் முழுதும்

நாட்டி கர்ஜ்ஜித்தனன். இவ்வண்ணங் கரனால் பெருமாள் துயருற்று மிகவும் திருவுளஞ் சீறி மிகக் கம்பீரமாக வொலிக்கின்ற வேறு சராஸனத்தைத் திருக்கரத்திலேந்தி, இந்திரனிடத்தில் வாங்கி யகஸ்தியபகவானளித்த அந்த விஷ்ணுவில்லில் நாண்கட்டிக் கணை தொடுத்துக் கரனுடைய துவஜத்தை யறுத்துத் தள்ளுகையில், அது தேவர்களது கட்டளையினால் ரவியே வீழ்வதுபோலப் பொன்னொளி திகழ வீழ்ந்தது ; கர னது கண்டு முனிந்து, நான்கு பாணங்களினால் பெருமாளை யடித்து, மேன்மேலும் பல பாணங்களினால் வருத்தினன். பெருமாளும் இவ்வண்ணம் வருத்தப் பட்டவராகி, ரத்தம் பெருகித் திருமேனி நனைந்து மிக முனிந்து, ஆறு பாணங்களைத் தொடுத்து, ஒன்றினைச் சிரத்திலும், இரண்டினை இரண்டு புஜங்களிலும், மற்ற மூன்றினை மார்பிலும் நாட்டி, மீளவும் பதின்மூன்று பாணங்களைத் தொடுத்து, ஒன்றினால் நுகத் தடியையும், நான்கினால் நான்கு குதிரைகளையும், ஆறினால் சாரதியின் சிரத்தையும், மூன்றினால் ஏர்க்காலையும், இரண்டினால் இருசையும், ஒன்றினால் நாணுடன் கூடிய வில்லையும் அறுத்துத் தள்ளிப் பதின்மூன்றாவதான மற்றொரு கணையினால் கரனை யடித் தருளினர்.

கரன் உடனே வில் முறிந்து, தேர் சலிந்து, குதிரை யிழந்து, சாரதி யழிந்து, மெய் வருந்தித் தேரைவிட் டெழுந்து கதாபாணியாகித் தரையில் நின்றனன். பெருமாளுடைய இச்செயலைத் தேவகந்தர்வ ஸித்தசாரண வைமானிக பரமரிஷி முதலானோர் கண்டு, கைகூப்பித் தொழுது மகிழ்ந்து புகழ்ந்தனர்கள்.

ஆரண்யகாண்டத்தில் இருபத்தெட்டாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது சருக்கம்.

பெருமாள் கரனுடைய கதையைப் பிளந் தருளியது.

தேரிழந்து கதாபாணியாகித் தரையில் நிற்கின்ற கரனைப் பெருமாள் கடாக்ஷித்து, இனிமையும் கொடுமையும் கொண்ட வாக்கியங்களினால் அருளிச்செயலுற்றனர். கேளடா கரா! ரதகஜ துரகபதாதிகள் மிகப் புடைசூழ்ந் திருக்கையில், நீ எல்லோரும் அருவருப்புறத்தக்க தீச்செயல்களைப் புரிந்தனை ;—

ఉద్వేజనీయోభూతానాంనృశంసః పాపకర్మకృత్
త్రయాణామపిలోకానా మీశ్వరోపినతిష్ఠతి.
కర్మలోకవిరుద్ధన్తు కుర్వాణంక్షణదాచర
తీక్ష్ణంసర్వజనోహన్తి సర్పందుష్టమివాగతం.

உத்வேஜநீயோபூதாநாம் ந்ருசம்ஸஃபாபகர்மக்ருத்
த்ரயாணுமபிலோகாநா மீச்வரோபிநதிஷ்டதி.
கர்மலோகவிருத்தந்து குர்வாணம்க்ஷணதாசர
தீக்ஷ்ணம்ஸர்வஜநோஹந்தி ஸர்பம்துஷ்டமிவாகதம்.

பூதங்களை யச்சமுறச் செய்பவனும், கொடுமையுடையோனும், பாவச் செயல் செய்வோனுமாகிய வொருவன், மூவுலகங்களுக்கு மிறையாயினும் அழிவானேயன்றி நிலையுறான்; உலகத்தார்க்கு விரோதஞ்செய்து கொடுமை கொண்டவனை நச்சரவத்தைப்போலக் கண்டோ ரெல்லோரும் அடிக்கின்றனர்கள்; யாவனொருவன் பொருளாசையினலாயினும், பெண்ணாசையினலாயினும், பாவங்களைச் செய்தும், இவை நலமலாதனவென வறிகின்றிலனே? அவன் கடையி லழிந் திகழ்வுற்றுத் துன்ப மடைந்த பின்னே நமக்கே தீங்கு செய்து கொண்டோமே யென்று மழையில் விழுகிற ஆலங் கட்டிக் கல்லைத் தனக்கு மரணந் தருமென் றுணரா துண்ட செய்யானைப் போல் வருத்த முறுவான்; அடா பாபி! இந்தத் தண்டகாவனத்தில் காய் கனிகளை யுண்டு தவஞ்செய்துகொண்டிருந்த யோகிகளைக் கொலை செய்து நீ நற்பயன் பெறுவாயோ?—

నచిరంపాపకర్మాణః క్రూరాలోకజుగుప్సితాః
ఐశ్వర్యంప్రాప్య తిష్ఠన్తిశీర్ణమూలా ఇవద్రుమాః.

நசிரம்பாபகர்மாண: க்ரூராலோகஜுகுப்ஸிதாஃ
ஐச்வர்யம்ப்ராப்யதிஷ்டந்தி சீர்ணமூலா இவத்ருமாஃ.

கொடுமை கொண்டு தீச்செயல் செய்து உலகத்தாரா லிகழப்பட்ட பாவிகள் முன் வினையினல் மிகச் செல்வமுறினும், வேரறுந்த மரங்கள் போலத் தாழ்வுற்றுச் செல்வம் நீங்கி யழிவார்களேயன்றி, நெடுங்காலம் பொருளுடன் வாழார்கள்; பாவிகள் தாம் செய்த தீச்செயலின் பலனை விரைவி லடைவார்களே யன்றி, அச்செயல் வீண் போகாது; மரங்கள் தத்தம் காலங்களில் மலரா யுறுகின்றன வல்லவோ? மிகக் கொடிய பாவங்களின் பலன்கள் விரைவிலேதானே யடையுமே யன்றித் தாமஸப்படா? விடங்கலந்த சோற்றை யுண்டவர்கள் உடனே இறக்கின்றனரோ யன்றி, யுய்வார்களோ? தீச்செயல் புரிந்து உலகங்களை வருத்துபவர்களைக் கொலை செய்வதன் பொருட்டே யானிங் கெய்தினேன்; இப்பொழுது என்னல்

விடப்பட்ட பாணங்கள் பன்னகங்கள் புற்றினுட் புகுவனபோல உன்னுடலில் புகப்போகின்றன; நீ முன் இங்கே எவ்வெவர்களைக் கொலை செய்தனையோ? அவ்வவர்களை, நீயு மிப்பொழுது என்னால் கொலை செய்யப்பட்டவனாகி, எல்லாச் சேனைகளுடனும் பின்றொடர்ந்து செல்வாய்; முன் புன்னால் கொலை செய்யப்பட்ட பரமயோகிக ளெல்லோரும், திவ்விய விமானத்திலிருந்து, என்னாலடிபட்டிறந்து நரகில் வீழ்கின்ற உன்னைக் கண்டு மகிழக் கடவர்கள். அடா பாவி! நீ இப்பொழு துன் விருப்பின்படி என்னை எதிர்த்துப் பொருக; உன் தலையைப் பனம் பழத்தைப்போல அரிந்து தள்ளித் தரையி லுருளச் செய்வேன்; என்றிவ்வண்ணம் பெருமாள் இகழ்ந்துரைத் தருளினர். இவ்வா றிகழ்ந் துரை செய்யப்பட்ட கரனும் மிக முனிந்து, கண்கள் சிவந்து, கோபத்தினால் நகைத்துப் பெருமாளை நோக்கி, அடா தசரதன் மகனே! அற்பர்களாகிய சில வரக்கர்களைக் கொலை செய்தமையின், திறமையற்றவனென் றிகழ்ந்து கொள்ளத்தக்க உன்னையே நீ புகழ்ந்து கொள்ளுகின்றனை;—

విక్రాన్తాబలవన్తోవాయే భవన్తినరర్షభాః
కథయన్తినతేకించి త్తేజసాస్వేనగర్వితాః.
ప్రాకృతాస్త్వకృతాత్మానో లోకేక్షత్రియపాంసనాః
నిరర్థకంవికత్థన్తే యథారామవికత్థసే.

விக்ராந்தாபலவந்தோவா யேபவந்திநரர்ஷபா:
கதயந்திநதேகிஞ்சித் தேஜஸாஸ்வேநகர்விதா:.
ப்ராக்ருதாஸ்த்வக்ருதாத்மானோ லோகேக்ஷத்ரியபாம்ஸநா:
நிரர்த்தகம்விகத்தந்தே யதாராமவிகத்தஸே.

பல பராக்கிரமமுடைய நரவீரர்கள் யாவருளரோ? அவர்கள் தமது திறமைக்குத் தாமே இறுமாப்புற்று யாதுங் கூறார்கள்; விவேகமின்றி யறபர்களாகிய ராஜர்களில் கடையோர் யாவருளரோ? அவரே அடா ராமா! நீ பிதற்றுவதுபோலப் பயனின்றிப் பிதற்றுவார்கள்; நற்குலத்திற் பிறந்த வீரன் யாவன்தான் தன்னைப் புகழ்ந்து கொள்வான்; ஒருவன் தான் மரணமுறுங் காலையிலேயே மதிமயங்கிப் புகழத்தகாத காலத்தில் தானே புகழ்ந்து கொள்வான்; அவ்வண்ணமே நீயும் புகழ்ந்து கொள்ளுகின்றனை; நீ இவ்வண்ணம் புகழ்ந்து கொள்வதினாலே யுன்னுடைய திறமையின்மையே நன்கு விளக்கப்பட்டது; திறமையுடையோன் தன்னைப் புகழ்ந்து கொள்வானோ? புல்லில் பற்றிய தீ பொன்போலச் செவந்து காணப்படினும், அது தன் மேனியை மினுக்கிக் கொள்ளுமேயன்றிச் சுடுமோ! கதையைக் கையிலேந்திப் பலவகைத் தாதுக்கள் நிறைந்த மாமலைபோல அசைவற்று நிற்கின்ற என்னைக் காண்கின்றிலையோ? உன்னைக் கொலை செய்ய யானொருவனே போதுமானவ னல்லேனோ? யமனொருவனே மூவுலகங்களையும்

கொலை செய்கின்றன னல்லனோ? யானும் உன்னை நோக்கி, உரை செய்யத் தக்கன பலவாகவுள; ஆயினும், உரைக்கின்றிலேன்; வெய்யோன் மறைந்து விடுவானாகில், சண்டைக்குத் தடை நேரு மன்றோ? பதினாலாயிரம் ராக்ஷஸர்களை நீ கொன்றமையின், உன்னை யான் கொன்று அவர்கள் துன்பத்தைப் போக்கி, மகிழ்வேனென் றுரை செய்து, அந்தக் கதையைச் சுழற்றிப் பெருமாள்மே லெறிந்தனன்; அந்தக் கதையும், எரிகின்ற அக்னிபோல மரங்களையும், புதர்களையும் எரித்துக்கொண்டு பெருமாளைக் கிட்டி வந்தது; பெருமாளதுகண்டு பாணங்களை எய்து, அதனைப் பல துண்டுகளாக அறுத்துச் சிதற வடித்தனர். உடனே அந்தக் கதை மணிமந்திரௌஷத பலத்தினால் நச்சரவம் சிதறுண்டு வீழ்வதுபோலச் சிதறுண்டு தரையில் வீழ்ந்தது.

ஆரண்யகாண்டத்தில் இருபத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

முப்பதாவது சருக்கம்.

பெருமாள் கரனைக் கொலை செய்து ஸாது ஜனங்களைப் பாதுகாத் தளித் தருளியது.

பெருமா ளந்தக் கதையைக் கணைகளினால் பிளந்து புன்னகை கொண்டு கரனை நோக்கி, அடா பலாசனா! உன் திறமை இவ்வளவே யன்றோ? உன்னுடைய திறமை முழுதும் காட்டப் பட்டதா? திறமை யின்றியும் மதங்கொண்டு வாளாப் பிதற்றினை யல்லையோ? மொழிவதற்கே திறமைகொண்ட உன்னுடைய இக்கதை என்னுடைய பாணங்களினால் பிளக்கப்பட்டுத் தரையில் வீழ்ந்து கிடக்கின்றதே? உன்னை யான் கொலை செய்து, உன்னால் கொலை செய்யப்பட்ட பதினாலாயிரம் சேனைகளின் துன்பத்தைப் போக்கிக் கொள்வேனென் றுரைத்தனையே அவ்வுரையும் பொய்யாயிற்றே? நீசனும், அற்பச் செயலினனும், பொய்யனும், அரக்கனுமாகிய உன்னுடைய உயிர்களைப் பெரிய திருவடி யமிழ்தத்தைப்போல அபஹரிப்பேன்; யானிப்போழ் துன் தலையை யறுக்கையில், நுரை குமிழிகளுடைய உன்னுடைய ரத்தத்தைப் பூமி பானஞ் செய்யப் போகின்றது; நீயு முடனே துகள் படிந்த மேனியனாகி, அச்சத்தினா லிருகரங்களையுந் தரையிலூன்றி, மனத்துக் கினிய மனையாளைப் போலப் பூமியை யணைந்துகொண் டுறங்குவாய்; நீ இவ்வண்ணம் மீளாத் துயில்கொள்ளின், தஞ்ச மின்றி யலைந்த ஸாது ஜனங்களுக்கு இந்தக் காடுகள் தஞ்சமாகக் கடவன; எனது சரங்களினால் நீ இறந்த பின்னர்,

முனிவர்கள் அச்ச மின்றி, ஜனஸ்தானத்தில் உறைவார்கள்; உங்களுடைய மனைவியர்களாகிய அரக்கிக ளெல்லோரும், கைம்பெண்களாகிக் கண்ணீர் பெருக்கிப் புலம்பிக்கொண்டு அச்சங்கொண் டோடப்போகிறார்கள்; உனக் கனுரூபர்களாகிய உன் மனைவியர்களும், இது வரையில் துயர மென்பதையே அறியார்களாயினும், இப்போழ்து துயரமென்பதித்தன்மையதென் றுணர்ந் தனுப விப்பார்கள். அடா நீசா! கொடிய அற்பா!! வேதியர்களுக்குப் பகைவா!!! உன்னிடத்தி லச்சமுற்றேயன்றோ? முனிவர்கள் செந்தீவளர்த்து ஹோமஞ்செய்யவும், ஏகாந்தந் தேடி நாற்றிசைகளையும் நோக்கித் திரிந்தனர்களென் றருளிச் செய்தனர். கர னதுகேட்டுப் பெருமாளை வெருட்டி, அடா ராமா! நீ மிகச் செருக்குற்றிருக்கின்றனை; அச்சமுறுங் காலையிலு மச்சமற் றிருக்கின்றனை; ஆதலின், நீ இது உரைக்கத் தக்கது, இது உரைக்கத் தகாதென் றுணர்கின்றிலை;—

కాలపాశపరిక్షిప్తాభవన్తి పురుషాహియే
కార్యాకార్యంనజానన్తి తేనిరస్తషడిన్ద్రియాః.

காலபாசபரிக்ஷிப்தா பவந்திபுருஷாஹியே
கார்யாகார்யம்நஜாநந்தி தேநிரஸ்தஷடிந்த்ரியாஃ.

யாவர் சாகுங்காலங் கிட்டிக் காலபாசத்தினுல் கட்டுண் டிருக்கின்றனர்களோ? அறுபுலன்களு மழிந்த அவர்கள் செய்வனவும், செயற் கரியனவு முணரார்களிறே? என்றிவ்வண்ண முரைத்துப் புருவத்தை நெரித்து, அருகிலுள்ள நெடிய வொரு ஸாலமரத்தைக் கண்ணுற்று, அதனை இருகரங்களினுலும் பற்றி, உதட்டைக் கடித்துக்கொண்டு வேருடன் பிடுங்கிச் சிஹ்மநாதஞ்செய்து, ஸ்ரீராமபிரானை நோக்கி, அடா ராமா! நீ இறந்தனையென்றுரைத் தம்மரத்தை எறிந்தனன். பெருமாளும் அதனைப் பல பாணங்களினுல் முறித் தறுத்துத் தள்ளி, மிகத் திருவுளஞ் சீறி, திருமேனி புழுங்கிக் கண் சிவந்து, கரனை யாயிரம் பாணங்களினுல் பிளந்தனர். அவனுடலினின்றும் ரத்தங்கள் மலையினின்றும் அருவிகள் போலப் பெருகின; கரனும் கணப்பொழுது திகைத்து நின்று தெளிவுற்று, விரைவாகப் பெருமாளருகி லோடிவந்து விட்டனன்; பெருமாளும் கோதண்டத்தில் கணைதொடுத் திழுக்க முன்னே இடமின்மையால், இரண்டு மூன்றடி பின்னே எழுந்தருளி, உருக்கொண்ட வேதியர்களது சாபம் போன்றதும், செந்தழல் போன்றதுமாகிய வோர் சரத்தைத் தொடுத்து விடுத் தருளினர். தேவேந்திரனு லளிக்கப்பட்ட அந்தச் சரமும் ஸ்ரீராம கோதண்டத்தி னின்றும் புறப்பட்டு இடிபோல முழங்கிக் கொண்டு கரனுடைய மார்பில் வீழ்ந்து புதைந்தது; கர னுடனே அந்தப்

பாணத் தீயினு லெரிக்கப்பட்டு ச்வேதாரணியத்தில் ருத்திரனு லெரிக்கப் பட்ட அந்தகன் போலவும், இந்திரனுடைய வச்சிரத்தினு லடிபட்ட விருத்திராஸுரன் போலவும், நுரையினு லடிபட்ட நமுசி போலவும், அசனியா லடிபட்ட வலாஸுரன் போலவும், தரையில் வீழ்ந் திறந்தனன்.

அநந்தரம் ராஜரிஷிகள், தேவரிஷிகள், பிரஹ்மரிஷிகள் முதலிய யாவரும் சேர்ந்து, பெருமாளைப் புகழ்ந்து மகிழ்ந் தவரை நோக்கி, ஸ்வாமி சக்கரவர்த்தித் திருமகனுரே! இவ்வரக்கர்களைக் கொலை செய்விப்பதன் பொருட்டே மஹேந்திரன் சரபங்காச்ரமம் வந்து விண்ணப் பஞ் செய்து சென்றனன்; முனிவர்களும் உபாயத்தினுல் முறையே தேவரை இவ்விட மெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வந்தனர்கள்; எங்களுடைய இந்தக் காரியம் தேவரால் நிறைவேற்றப் பட்டது, இனிமேல் முனிவர்கள் இவ்வனங்களில் அச்சமின்றிச் சுகமுற்றுத் திரிவார்களென் றுரைத்தனர்கள். அத்தருணத்திலே தேவகந்தர்வ சித்த சாரணுதியர் களும் ஒன்று சேர்ந்து, தேவதுந்துபிகளையும் முழக்கி, வியந்து மகிழ்ந்து பெருமாள்மேலே நறுமலர் மழை பொழிந்தனர்கள். அந்தோ? மூன்று நாழிகைக்குள்ளே பதினுலாயிரம் சேனைகளுடன் தூஷண திரிசிரர் களையும், கரனையும், பெருமாள் கொலை செய்தனரோ? இவருடைய செய்கை மிக வியக்கத் தக்கதும், செயற் கரியது மாகின்றது; இவருடைய திறமை யந்தோ? இவருடைய வலிமை யந்தோ? ஆராயுங்கால் இவர் ஸ்ரீமந்நாராயணுகவே காணப்படுகின்றனரென்று எல்லோரும் புகழ்ந்து மகிழ்ந்து நிகழ்ந்தனர்கள். அப்போழ் திளையபெருமாளும் பிராட்டியாரைக் குகையினின்றும், பர்ணசாலைக் கெழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து, பெருமாளுடன் ஆச்ரமஞ் சேர்ந்தனர்.—

తన్దృష్ట్వాశత్రుహన్తారం మహర్షీణాంసుఖావహం
బభూవహృష్టావైదేహీ భర్తారంపరిషస్వజే.

தந்த்ருஷ்ட்வாசத்ருஹந்தாரம் மஹர்ஷீணும்ஸுகாவஹம்
பபூவஹ்ருஷ்டாவைதேஹீ பர்தாரம்பரிஷஸ்வஜே.

இவ்வண்ணம் பெருமாள் அவ்வரக்கர்க ளெல்லோரையும் கொலை செய்து, முனிவர்களை மகிழ்வித்துச் சிறிதேனும் சிரமமின்றி, ஆண் சிங்கம்போல வெற்றி கொண்டு வந்து நிற்கப் பிராட்டியார் கண்டு மிக மகிழ்ந்து, தம் திருக்கரங்களினுல் ஆலிங்கனஞ் செய்துகொண்டு, மீளவும்

அவ்வரக்கர்கள் மடிந் திருப்பதையும், பெருமாள் வருத்தமின்றி நிற்பதையும், மஹாரிஷிகள் மகிழ்ந்து பெருமாளைப் புகழ்வதையுங் கண்டு மகிழ்வு மிகப் பெருகி, முழுமதிபோலத் திருமுகந் திகழ்ந்து, பெருமாளுடைய சிரமந்தீர ஆலிங்கனஞ் செய்து கொண்டு பெருமகிழ் வுற்றனள்.

ஆரண்யகாண்டத்தில் முப்பதாவது சருக்கம் முற்றிற்று.

தனிஸ்லோகி, (சதுர்தசஸஹஸ்ராணி) இதிப்ரக்ரியையாலே ராக்ஷஸவேட்டையாடின பெருமாளுடைய யுத்தாயாஸச்ரம பரிஸ்வின்னமான திருமேனியில் ராட்சஸ சரவ்ராத வ்ரணரோபண திவ்யௌஷதமான காடாலிங்கனத்தைப்பண்ணி, பிராட்டி ஸத்தைப் பெற்றாளென்கிறது; (தம்) ஸ்த்ரியம்புருஷவிக்ரஹம், என்று விண்ணப்பஞ் செய்ய வேண்டும்படி ராட்சஸ பூயிஷ்டமான தேசத்தி லுன்னைக் கொண்டுபோக அஞ்சுவேனென்றவனை, (தம்) ஸ்த்ரியம்புருஷ விக்ரஹமென்று பிராட்டி வாயாலே அநுமதமாக அன்று தொடங்கித் திருவுள்ளத்திலே கறுவியிருந்து, பதினாலாயிரம் ராட்சஸரையும் முடியும் உடலுமாகத் தெறித்து, உதிர வெள்ளத்திலே மிதக்க விட்டுப் பிராட்டியாரைக் கையைப் பிடித்துக்கொண்டு காட்டினவனை, (தம்) ஆதித்ய இவதேஜஸ்வீ, இத்யாதிப்படியே வீரப்பாட்டுக்குச் சிறுவிரல் முடக்கும்படி அவதீர்ணரானவனை, (தம்) படுக்கைத் தலையில் இடு பூ விழுந்து திருமேனி சிவக்கும் ஸௌகுமார்யாதிசயத்தை யுடையவனை, (தம்) உகப்பாலே அடுத்துப் பார்க்கில் நயமான தேஜஸ்ஸுக்கும் ஸ்தானமான திருமேனி யுடையவனை, (தம்) ரிஷிகளுக்குப் பண்ணின பிரதிஜ்ஞையைக் கடலோசை யாகாதபடி தலைக் கட்டுகையாலே, பூர்ணரானவனை, (தம்) ரத்னகசிதமான பொன்னரிமாலைபோலே சத்துருசரவ்ராதவ்ரணங்கிதமான திவ்ய மங்கள விக்ரஹத்தை யுடையவராயுள்ளவனை, (த்ருஷ்ட்வா) கருமுகை மாலையைப் பனி நீரிலே தோய்த் தெடுப்பாரைப்போலே யுத்தாயாஸ பரிஸ்விந்நமான திருமேனியைத் தம் பார்வையான பனி நீராலே வழிய வார்த்து (த்ருஷ்ட்வா) ஆதபாபி பூதருடைய சீததடாக ப்ரவேசம்போலே ராட்சஸாஸ்ங்கராபி பூதமான திருமேனியைத் தம் பார்வையாகிற பூர்ணதடாகத்திலே தோய்த்தெடுத்து, (சத்ருஹந்தாரம்) ப்ரதிபட்ச நிரஸனத்தாலே வந்த புகருடைமை, ஸமோஹம்ஸர்வபூதேஷு, என்கிற பெருமாளுக்குச் சத்துருக்களுண்டோ வென்னில், ஜ்ஞாநீத்வாத்மைவ, மமப்ராணஹி, இத்யாதிகளாலே ஆச்ருத விரோதிகள் தமக்கு விரோதிகளாமித்தனையிறே, (மஹர்ஷீணாம் சுகாவஹம்) யுத்த ப்ராரம்பம் தொடங்கி, கிம்பவிஷ்யதி, என்று வயிறுபிடித்துத் துக்கிதராயிருந்த மஹரிஷிகளுடைய பயந்தீரச் சத்ருக்களடங்கக் கொன்று அவர்களுக்கு ஸுகாவஹராயுள்ளவனை, (மஹர்ஷீணாம் ஸுகாவஹம்) தம்முடைய போஷ்ய குடும்பத்துக்குச் சுகத்தைப்பண்ணித் தம்முடைய ஸத்தைக்கு ஆபாதகரானவனை, (பபூவ) மாலையும் மணமும்போலே அத்யந்தம் சுகுமாரமான விக்ரஹத்தையும், ஸ்வபாவத்தையுமுடைய பெருமாள் கடினகாத்ரஸ்வபாவரான முரட்டு ராட்சஸரோடே யுத்தம் ப்ராரம்பித்தபோது தொடங்கி ப்ரேமாதிசயத்தாலே ஸத்தை மாண்டு கிடந்த பிராட்டியார் திருமேனியி லொரு தீங்கன்றி நின்ற பெருமாளைக் கண்டு ஸத்தைப் பெற்றாளென்கிறது; (ஹ்ருஷ்டா) தர்மி யுண்டானால் தர்மம் பிறக்கக் கடவதிறே, ராமஸௌந்தர்யத்தை முழுக்கக் கண்டு திருவுள்ள மீடு பட்டபடி (வைதேஹீ) அய்யர் வயிற்றிலே பிறந்திலேனாகில், எனக் கிப்பேறில்லையே (வைதேஹீ) இக்குடியிற் பிறந்திலேனாகில், பெருமாளென்னைக் கைப்பிடியாரோ,

(வைதேஹீ) இந்நிலத்திற் பிறந்திலேனாகில், இவ்வில்லோட்டை ஸௌப்ராத்ரம் கிடையாதே, அவ்வில்லோட்டை ஸௌப்ராத்ர மில்லையாகில், வீர்ய சுல்கையாக விவ்வாகாரங் கூடாதே (வைதேஹீ) தநுர்ப்பங்கமாத்ரத்திலே என்னையும், தம்முடைய வம்சத்தையும், பெருமாளுக்கு அடிமையாக வெழுதிக் கொடுத்த அய்யர் இத்தை யாகாரங்கண்டா லென்னபடுகிறரோ? (வைதேஹீ) (பும்ஸாம்த்ருஷ்டி சித்தாபஹாரிணம்) என்கிறபடியே ஸர்வலோகாகக்ஷர்கமான விக்ரஹத்தை அய்யரையொழிய நான் காண்பதென்று, பித்ருஸ்மிருதிபண்ணுகிறர். (பர்தாரம்) பாணிக்ரஹணம் ஜீவித்தது, (பரிஷஸ்வஜே) ஆலிங்கனம் பண்ணினர், பரிபூர்ணமாகத் தழுவினர், பர்யாப்தமாகத் தழுவினர், தழும்பு மாறுமளவுந் தழுவினர், சரவ்ரணங்களாலே வந்த தழும்பெல்லா மாறுமளவுந் திருமுலைத் தடத்தாலே வேது கொண்டார், தாம் கைக்கண்ட மருந்திறே, சரவ்ரணங்களுக் காலிங்கனமாமிடத்தி லேந்தோ டைந்நூற்றுவாசி யில்லையே? அந்தரங்க ருள்ளூற வெய்த புண்ணுக்கு மருந்தான விது தோல்புரையெய்தப் புண்ணுக்கு மருந்தாகச் சொல்லவேண்டுமே என்றிருந்தார்; ஒரு கொடியாகிறது, கொழுகொம்பைத் தழுவி யல்லது, நில்லாதிறே? (பர்தாரம் பரிஷஸ்வஜே) நித்ய ஸம்யோக ஸ்திதிருபமான பர்த்ருத்வாகாரம், ஒரு கொழு கொம்புக் குண்டானால், ததாதாரமாய்க்கொண்டு கொழு கொம்பை முட்டப்படர்ந்து அத்தைச் சிறப்பித்துக் கொண் டல்லது, ஸ்வரூப மில்லையோ? பார்யாத்வாகாரமான கொடிக்கு, (பர்தார மவலம்ப்யைவ பார்யாயா ஸ்திதிரிஷ்யதே, அவலம்ப்ய த்ருமம்வல்லீ ஸ்தீயதே நவிநாத்ருமம்) என்னுமாபோலே (தம்) என்கிற பதம் பெருமாளுடைய ஸர்வாகாரங்களையும் காட்டுகிறது; (த்ருஷ்ட்வா) என்கிற பதத்தாலே பெருமாளுடைய ஸர்வாகாரங்களையும் நோக்கிக் காணக் கண்ணுடையார் பிராட்டி யென்கிறது; சத்ருஹந்தாரம் (மஹர்ஷீணாம் சுகாவஹம்) என்கிற பதங்களாலே தன்னோடு குடல் துவக்குண்டான சேதனர்க்கு அநிஷ்ட நிவ்ருத்தியையும், இஷ்ட ப்ராப்தியையும் பண்ணினபோதல்லது, இவரைக் காணக் கண்ணில்லை யென்கிறது; (பபூவ) அத்தலைக்கு அதிசயாவஹையாய்ஸத்தை பெற்றபடி (ஹ்ருஷ்டா) ஸதிதர்மிணிதர்மாச்சிந்த்யந்தே (வைதேஹீ உபகாரஸ்ம்ருதி பண்ணுகிறர்) தங்கார்யம் சுமந்து நடத்துகையாவது, பிதுர்தச குணம்மாதா வென் கையாலே தம் புத்ரரட்சணம் பண்ணுகையிறே, (பர்தாரம் பரிஷஸ்வஜே) ஆச்ருத ரட்சணத்தால் வந்த களிப்புக்குப் போக்கு வீடு ஆலிங்கனம்போலே யிருந்தது; அவருக்கும் ப்ரயோஜனம் அதுபோலே காணும், (ஆர்தார்தேமுதிதேஹ்ருஷ்டா) என்கிற பதிவ்ரதாலட்சணத்திற்கு ப்ரதமோதாஹரணபூதை யாகையாலே, பிராட்டி வெற்றிகொண்டு மோதமடைந்த பெருமாளைக் கண்டு மகிழ்ந்து தழுவினர்.

பெருமாள் இரண்டு மூன்றடி பின் சென்று, கரனைக் கொலைசெய் தருளினரோ? இவ்வண்ணம் முன்னிட்ட காலைப் பின்னிடுவது, வீரத்தன்மைக்குக் குறைவன்றோ வெனில், குறை வன்று; அச்சத்தினால் முன்னிட்ட காலைப் பின்னிட் டோடிவிட்டால் குறைவே யன்றிப் பகையை வெல்லு முபாயத்திற்காகப் பின் செல்லின், குறைவாகாது; கர னேரடியி லெதிரில் வந்து விட்டமையில், சரந்தொடுத்து நாணை இழுப்பதற்கு இட மின்மையால், பின்னடி இட்டனரோயன்றி, அச்சமுற்று மீண்டிலர்; இதுவும் தோஷமாகுமாயின், மல்லர்கள் பொருங் காலையில், முன்னும் பின்னும் சுற்றியுந் திரிந்து, எதிரியைச் சாய்க்கு முபாயந் தேடுவதும், குற்றமே யாகவேண்டு மன்றோ? ஆதலின், பெருமாள் கரனைக் கொலை செய்வதன் பொருட்டுப் பின்னெழுந் தருளியது குற்றமாகாதென் றுணர்க.

முப்பத்தொன்றாவது சருக்கம்.

ராவணன் கராதிக ளிறந்ததை யகம்பனன் சொல்லக் கேட்டுச் சீதையை யபஹரிப்பதற்கு மாரீசனிடஞ்சென்று அவன் வாக்கியத்தினால் அதை விட்டு மீண்டு லங்கை சேர்ந்தது.

இவ்வண்ணம் பெருமாள் கராதி ராக்ஷஸ கணங்களைத் தாமொருவரே கொலை செய்து வெற்றிகொண்டதை அகம்பனன் கண்டு அச்சமும் ஆச்சரியமு மடைந்து, விரைவாக லங்காபுரஞ் சேர்ந்து ராவணனைக் கண்டு, கேளீர் அரக்கர் கோமானே! ஜனஸ்தானத்திலுள்ள பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் கரனும் போரில் மடிந் திறந்தனன்; யான் மாத்திரம் தப்பிப் பிழைத் தோடி வந்தே னென்றனன். ராவண னது கேட்டு மிகச் சினத்தினால் கண் சிவந்து, அகம்பனனை நோக்கி, அடா யாவனவன்? ஆயுள் மாண்டு மிக வழகிய என்னுடைய ஜநஸ்தானத்தைப் பாழாளாகப் படை பொருதான்? யாவனவன் அனைத்துலகங்களிலும் தஞ்சம் பெறுகின்றிலன்? எனக்குத் தீமை செய்த பின்பு, அவன் இந்திரனேயாயினும், குபேரனேயாயினும், யமனேயாயினும், விஷ்ணுவேயாயினும், சுகமுறுவானோ? யான் யமனுக்கும் யமன், தீக்கும் தீ, மிருத்தியுவுக்கும் மிருத்தியு வாகின்றேன்; யான் சினமுறுவேனாகில், தரணி பாவகர்க ளிருவரையும் எரிப்பேன்; வாயுவின் வேகத்தையும் தடை செய்வேன்; தீங்கு செய்தவன் யாவனோ? அவனை யுரை செய்க வென்றனன். அகம்பன னதுகேட்டு, இவன் சினமுற் றிருப்பதை யுணர்ந்து, ராவணனை நோக்கி, ராஜரே! யான் யாதுரை செயினும், சினமுறா தருள் செய்வீராகில், உரை செய்வேனென்று வேண்டினன். ராவணனும் அவ்வண்ணமே யாகுகவென்று அபய மளித்தமையின், அகம்பனன் அவனை நோக்கிக் கேளீர் மஹாராஜரே! தசரதசக்கரவர்த்தியின் குமாரனும், சிறந்த ரூப முடையவனும், யௌவன முற்றவனும், காளைக்கு நிகரான ஸ்கந்தத்தை யுடையவனும், நீண்டுருண்ட திருத்தோள்களை யுடையவனும், வீரத்தன்மையனும், நெடும்புகழ் பெற்றவனும், ஒப்பற்ற பல பராக்கிரம முடையவனும், சிறந்த ஜ்ஞான பலைச்வர்ய முடையவனும், ஸ்ரீராமனென்னும் பெயருடையவனுமாகிய ஒருவன் வந்திருக்கின்றனன்; அவ னொருவனாலேதானே ஜனஸ்தானத்திலுள்ள தானைகள் யாவும், கரதூஷணர்களும், கொலைசெய்யப் பட்டனர்களென்று அச்சந்தீர்ந் துரை செய்தனன். பௌலஸ்தியனும் அகம்பனன் வாக்கியத்தைக் கேட்டு, சினமேறிய நச்சரவம்போல நெட்டுயிர்ப்பு விட்டுக் கேளடா அகம்பனா! ராமனொருவனே இச்செய்ல் செய்திரான்; அவன்

தேவர்களுடனும், தேவேந்திரனுடனுங் கூடியே வந்து அவர்களைக் கொன்றனனோ? உரைசெய்யாயென்று வினவினன். அகம்பனனதுகேட்டு ராவணனை நோக்கிக் கேளீர் அரக்கர் சீமானே! ஸ்ரீராமனுக்குத் தேவர்களது உதவி வேண்டுவதில்லை; அவனுடைய பல பராக்கிரமங்களை யுரைசெய்வேனென்று மொழியலுற்றனன்; மஹாராஜரே! ஸ்ரீராமனென்பவன் மிகவும் பராக்கிரமமுடையோன்; வில்லாளிகளெல்லோர்க்குஞ்சிறந்தவன்; திவ்வியாஸ்திரங்கள் யாவும் உணர்ந்தவன்; போரில் புரந்தரனை நிகர்த்தவன்; அவனுக்குத் தம்பி யொருவ னிருக்கின்றான்; அவனும் இவனுக்கு நிகரான ரூப பல பராக்கிரம முடையோனும், செந்தாமரைக் கண்ணனும், துந்துபி முழக்கம்போன்ற நாத முடையோனும், மதி முகத்தோனும், லக்ஷ்மணனென்னும் நாம முடையோனு மாகின்றனன்; ஸ்ரீராமன் அந்தத் தம்பியுடன் சேர்ந்து, தீயுடன் சேர்ந்த பெருங்காற்றுப்போல வொளி யுற்றவனாகி, ஜனஸ்தானத்தி லுள்ளவர்களெல்லோரையுங் கொலை செய்தனன். தேவர்க ளிவ்விஷயத்தில் சேர்ந்திலர்; ஐயமுறற்க; உண்மையாகக் கூறுவேன்; ஸ்ரீராமனால் விடப்பட்ட சரங்களே வாயைத் திறந்து கொண்டு ஐந்தலை நாகங்களாகி யரக்கர்களை யுண்டன; உன்னைச் சேர்ந்த அரக்கர்கள் ஸ்ரீராமனுக் கஞ்சி எங்குச் செல்லுகின்றனர்களோ? அங்கும் அச்சத்தினால் ஸ்ரீராமன்போலக் கண்டு மற்றோரிடத்திற்கோடித் திரிகின்றனர்கள்; அந்த ஸ்ரீராமசந்திரனால் உன்னுடைய ஜனஸ்தானம் நாசஞ் செய்யப் பட்டது; என்றிவ்வண்ணம் மொழிந்தனன். அகம்பனன் வாக்கியத்தை ராவணன் கேட்டு, அடா அகம்பநா! யானிப்பொழுதே ஜனஸ்தானஞ்சென்று, தம்பியுடன் ராமனைக் கொலை செய்வேனென் றுரைசெய்து புறப்படுகையில், அகம்பனன் மீளவும் அவனை நோக்கிக் கேளீர் கொற்ற வேந்தே! ஸ்ரீராமனுடைய பல பௌருஷங்களைக் கண்டவண்ணம் உரை செய்வேன்; ஸ்ரீராமன் உள்ளஞ் சீறுவானாயின், பிறரால் வெல்ல வொண்ணான்; மேன்மேலும் நிறைந்து விரைவாகப் பெருகிவரும் மஹாநதியின் வேகத்தையும், சரங்களால் தடை செய்வான்; கிரஹங்களுடனும், விண்மீன்களுடனும் கூடிய விண்ணையும் அழிப்பான்; இப்பூமி யூழிகாலத்தில் கடல் நீரில் மூழ்கிவிடினும், மேலெடுக்க வல்லான்; கடலின் கரையைப் பிளந்து உலகினை மூழ்த்தினும் மூழ்த்துவான்; கடலின் வேகத்தையாயினும், வாயுவின் வேகத்தையாயினும் தடுப்பான்; அனைத் துலகங்களையு மழித்து, அவ்வண்ணமே படைக்கவும் வல்லான்; கேளீர் தசகண்டரே! ஸ்ரீராமன் உம்மால் வெல்லத் தக்கவ னல்லன்; மற்றுள்ள ராக்ஷஸ ஸேனைகளாலும், வெல்லத்தக்கவனாகான்; சுவர்க்கம் பாவிகளால் வெற்றிகொள்ளப்படுமோ? யான் ஸ்ரீராமசந்திரனைத் தேவாஸுரர்க ளெல்லோரும் ஒன்று சேர்ந்து போர்செயினும், அவன் தோல்வியுறுவானென யான் நினையேன்; ஆதலின், அவனைக் கொலை செய்யு முபாயத்தை யுரை செய்வேன்; கேளீர் அவ

னுக்குச் சீதையென்னும் மனத்துக் கினிய மனையா ளொருத்தி ; உலகி னின் மிக்காளும், நுண்ணிடையினளும், யௌவன முற்றவளும், இசைந்த திருமேனியளும், பல மணிகளிழைத்த வணிகளை யணிந்தவளுமாகி யிருக்கின்றனள் ; அவளுக்கு நிகராகியவள் தெய்வப் பெண்களுள்ளும், கந்தர்வப் பெண்களுள்ளும், அப்ஸரஸர்களுள்ளும், தானவப் பெண்க ளுள்ளும், நாககன்னியர்களுள்ளும், ஒரு பெண்ணு மிலள் ; மானிடப் பெண்களுள் அத்தன்மைய ளுளளோ வென்னும் ஐயம் யார்க்கேனுந் தோற்றுமோ ? அந்தச் சீதையை யவர்களுக்குக் காணமல் எடுத்துக் கொண்டு வந்து விடுக ; பின்பு, மனையாளைத் துறந்தும், காமியாகிய ராமன் உய்யான் ; இவ்வண்ணம் துன்புற்றவன் இறக்கவேண்டுமே யன்றிப் போரில் ஒருவரிடத்திலும் தோல்வியுறுனென்று உரைத்தனன். ராவணனு மதுகேட்டு, இதுவே நல்லுபாயமெனத் தேர்ந்து, முன்பு தனக்கு ஸநத்குமாரபகவா னருளிச்செய்திருந்த வாக்கியத்தையும் நினை ந்து அகம்பனனை நோக்கி, அடா அகம்பனு ! நீ யுரைசெய்தவண்ணம் செய்வேன் ; நாளைத்தினம் உதயத்தில் யான் தனியே ரதமேறிச் சென்று சீதையைக் கொணர்ந் திந்நகரி சேர்ப்பேனென் றுரைசெய்து, மறுதின முதயத்தில் கோவேறு கழுதைகள் கட்டிய தேர்மீதேறி, விண்ணிடையில் செல்லுகையில், மேகத்திடையில் தன் தேர் சந்திரன்போலத் திகழும்படி மாரீசாச்ரமஞ் சேர்ந்து, அவன் செய்த பூஜோபசாரங்களைப் பெற்றுக் கொண்டு ஆஸநத்தில் உட்கார்ந்தனன். அப்பொழுது மாரீசன் ராவணனை நோக்கி, ராக்ஷஸராஜரே ! உங்க ளெல்லோர்க்கும் குசலம் நன்கமைந் திருக்கின்றதா ? நீர் இங்கு விரைவாக வந்தமையின், யாதோ மனத் தில் சிந்தையுற் றிருப்பதாக நினைக்கின்றேன் ; அதனை யுரைசெய்க வென்று வினவினன். ராவணனும் அதுகேட் டவனை நோக்கிக் கேளடா மாரீசா ! என்னுடைய எல்லையைப் பாதுகாப்பவர்களாகிய கரன் முதலிய ராக்ஷஸர்களெல்லோரும் மிக வீரனுன ராமனொருவனல் கொலை செய்யப் பட்டனர்கள் ; ஆதலின், அவன் பாரியையை யான் பறித்துவரக் கருது கின்றேன் ; நீ யுதவிசெய்யக் கடவை யென்று மொழிந்தனன். தாட கேயனு மவ்வாக்கியத்தைக் கேட்டு ராவணனை நோக்கி, வேந்தே ! அந்தச் சீதையை யபகரிக்கும்படி யுமக் குரைத்தவன் யாவன் ? அவன் மித் திரன்போலிருக்கினும், சத்துருவே யாகுவான் ; யாவன் உன்னல் தீமை யுற்று, நீ வாழ்ந் தின்புறுவதைப் பொறுக்கின்றிலன் ? அவனை யுரை செய்வீர் ; சீதையை யபஹரிக்கும்படி யுரைத்தவனை மாத்திரம் எனக் குரை செய்க ; அரக்கர்க ளெல்லோரும் புகழுற்றுச் சிறந் திருப்பதை யாவன் அழிக்க நினைக்கின்றுனே ? உம்மை யாவ னிவ்வண்ண மேவு கின்றுனே ? அவன் உமக்குச் சத்துருவே யென்பதி லையமேயில்லை ; உம்மைக் கொண்டு நச்சரவத்தின் வாயினின்றும், நச்சுப்பல்லைப் பிடுங்கு விக்க நினைப்பவன் யாவன் ? உம்மை இவ்வண்ணந் தீச்செயலில் மூட்டி

யழிப்பவன் யாவன்? பகை நீங்கி, இன்புற்றுத் துயில்கொண்ட உம் தலையில் கோல்கொண் டடித்தவன் யாவன்? அடா ராவணா! நின்மலமாகி நற்குலத்தில் பிறப்பென்னும் துதிக்கையையும், தேஜஸ்ஸென்னும் மதத்தையும், உயர்ந்த தோள்களென்னும் தந்தங்களையும் பொருந்திய ராமனென்னும் மதயானையைக் கண்ணெடுத்துப் பார்க்கவும் தகுமோ? போரில் அச்சமுற்றோடாமல் நிலைத்திருப்பதென்னும் அங்கஸந்தி வாலங்களை யுடையதும், சிறந்த ராக்ஷஸர்களென்னும் மான்களைக் கொலை செய்வதும், பாணங்களென்னும் அங்கங்க ளமைந்ததும், வாளென்னும் கோரப் பல்லுடையதுமாகிய ஸ்ரீராமனென்னும் சீரிய சிங்கம் படுத் துறங்குகையில், அதனை யடித் தெழுப்புவது முமக்குத் தகுமோ? வில்லென்னும் முதலையையும், புஜவேகமென்னும் பங்கத்தையும், சரங்களென்னுந் தரங்கங்களையும், பெருஞ்சண்டையென்னும் வெள்ளத்தையுமுடையதாகி, மிகக் கொடிய ராமனென்னும் பாதாளமுகத்தில் வீழ்வது தகுதியற்றது; கேளீர் ராக்ஷஸ ராஜரே! யானிவ்வண்ண முரைத்தேனெனச் சிறக்க; அருள் செய்க; மனந்தேர்ந்து மீண் டெய்தி லங்கைசேர்ந் தின்புறுக; நீர் உம்முடைய மனைவியர்களிடத்திலே இன்புற்று வாழ்க; ஸ்ரீராமனும் தன் மனைவியைச் சேர்ந் தின்புறுக; நீர் ஏன் பரவநிதையைக் காமுற்றுக் கெடுகின்றீர்; கெடற்க வென்று வேண்டி யுரைத்தனன். ராவணன் அம்மொழிகேட்டு, இதுவும் நலமெனவே கருதி மகிழ்ந்து, மீளவும் லங்காபுரி யுற்றுத் தன் மனை சேர்ந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

சரணாகதி மந்திர விவரண ரூபமான இந்த ஸ்ரீராமாயணத்தில் இதுவரையில் அம்மந்திரத்தின் உத்தரகண்டத்தின் பொருள் கூறப்பட்டது; அம்மந்திரத்தை யனுஷ்டிக்குங் கால், பூர்வகண்டார்த்தம் முதன்மையா யிருப்பதாயினும், பொருளை யறியுங்கால், உத்தரகண்டார்த்தமே முதன்மையாகக் கூறத்தக்கது; பலனை யறிந்த பின்பே உபாயத்தில் முயற்சி கொள்வது வழக்கமன்றோ? ஆதலின், உத்தரகண்டத்தின் பொருள் முதலில் விவரிக்கப்பட்டது; எங்ஙனே என்னில், பாலகாண்டத்தில் திருமந்திரத்தின் உத்தரகண்டத்தினுடைய முதல் பதத்தின் பொருளாகிய புருஷகார யோகமும், அயோத்தியாகாண்டத்தில் இரண்டாவது பதத்தின் பொருளாகிய ஸௌலப்யாதிகுண யோகமும், ஆரண்யகாண்டத்தில் சூர்ப்பணகை வருவதன்முன் வரையில், நான்காவது வேற்றுமையின் பொருளாகிய கிங்கர வ்ருத்தியும், அதுமுதல் கரவதம் வரையிலுள்ள வ்ருத்தாந்தத்தால் கடைப்பதத்தின் பொருளாகிய விரோதி நிவ்ருத்தியும் கூறப்பட்டன; மேல் முடியும் வரையில், பூர்வகண்டார்த்தங் கூறப் படுகின்றது; அதனுள் இதுமுதல் ஆரணியகாண்டம் முடியும் வரையில், விபீஷணருக்குப் புருஷகார ஸாந்நித்யமும், கிஷ்கிந்தாகாண்டத்தில் நாராயண பதப்பொருளான வாத்ஸல்யமும், ஸுந்தரகாண்டத்தில் சரணபதோபாத்த திவ்ய மங்கள விக்

முப்பத்திரண்டாவது சருக்கம்.

சூர்ப்பணகையோடி வந்து ராவணனைக் கண்டது.

அநந்தர மங்கே சூர்ப்பணகையும், ஸ்ரீராம னொருவனே பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் கராதிகளையும் கொலை செய்து வெற்றி கொண்டதைக் கண்டு, நீருண்ட கொண்டல்போலக் கர்ஜ்ஜித்து, மிக வச்ச முற்று விரைவாக வோடி வந்து லங்காபுரி சேர்ந்து, புஷ்பகவிமானத்தின் நடுவில் மந்திரி புரோஹிதாதிகள் சூழ்ந்திருக்க வீற்றிருந்து, தேவர்கள் சூழ வீற்றிருந்த தேவேந்திரன்போலத் திகழ்ந்து, தங்கச் சிங்காஸனத்தில் பொன்வேதியில் செழுந்தீப்போல வொளிகொண்டு, தேவகந்தர்வாதிகளால் வெற்றிகொள்ள வொண்ணுமல், வாயைத்திறந் துலகினை விழுங்கு மந்தகன்போல அச்சந் தந்தும், தேவாஸுரர்களுடன் போர் செய்து, அவர்களுடைய வச்சிரம், அசனி, இவைகளினுலடிபட்டுக் காயம் பொருந்

ரஹ யோகமும், உயுத்தகாண்டத்தில் சரணுகதியும், உத்தரகாண்டத்தில் சரணுகத நிஷ்டையும் கூறப்படுகின்றன; அகம்பநன் பெண்வேஷம்பூண்டு தப்பிப் பிழைத் தோடிவந்தனனென வுணர்க ;—

இந்தச்சர்க்கத்தின்பொருளை நன்காராயுங்கால், ஸ்ரீராமபிரானே தசாவதாரஞ் செய்தருளிய ஸ்ரீமந்நாராயணனென்பதும், ஜகஜ்ஜன்மஸ்திதிஸம்ஹாரகர்த்தா வென்பதும் நன்கு விளங்கும் ; முன்பு கிருதயுகத்தில் ராவணன் ஸனத் குமாரரைக் கண்டு பகவானே ! ஸ்ரீமஹாவிஷ்ணுவினுல் கொலைசெய்யப்பட்டவர்கள் எங்குச் செல்லுகின்முரோ ? அருளிச் செய்க வென்று வினவ ; அவரும் இவனை நோக்கித் தசாநநா ! ஸ்ரீமந்நாராயணனுல் கொலைசெய்யப்பட்டவர்களெல்லோரும் நிரதிசய வின்ப வீட்டையே யடைந்து மகிழ்வார்கள்; பகவானுடைய சீற்றமும், வரத்துக்கு நிகரொனவே யறிக; என்றருளிச்செய்தனர். ராவண னதுகேட்டு எனக்கும் ஸ்ரீமந்நாராயணனுடன் சண்டை நேர்ந்து, நற்கதி வாய்க்குமோ வென்று சிந்தையுற ; ஸநத்குமாரர் அதனை யறிந் தவனை நோக்கி, ராவணு! நீ சிந்தை யுறற்க; உனக்கும் அம்முதற்பெருந்தேவுடன் போர் விளையும் ; நேருங்காலத்தை எதிர்பார்த்திருவென்று அருளிச்செய்து, மேலும் அடா ராவணு ! அதனை வெளிப்பட அறிய விரும்புவாயாயி னுரை செய்வேன் ; இந்தக் கிருதயுகஞ்சென்று திரேதாயுகத்தின்கடையில், ஸ்ரீதசரதசக்கரவர்த்தியென்னு மொருவர் இக்ஷ்வாகுகுலத்தில் பிறப்பர், அவருக்கு ஸ்ரீராமபத்திரனென்னும் திருநாம முடையவராகி, ஸ்ரீமந்நாராயணரோ அவதாரஞ் செய்யப் போகிருர் ; நீ யவருடன் போர்செய்திறந்து, அழிவிலாவீட்டைப் பெறுவாயென வருளிச்செய்திருந்தனர். அந்த வாக்கியத்தை நினைந்தே ராவணன் தான் நற்கதி பெறுவதன்பொருட்டுச் சீதையை யபஹரித்தனன். இவ்வண்ணமே உத்தரகாண்டத்தில் பெருமாளை நோக்கி, அகஸ்தியமுனி வருளிச் செய்கிருர். ராவணனும் ஜயனென்னும் துவாரபால காம்ச மாகையால், உண்மையறிந் திவ்வண்ணம் செய்வதில் தடையில்லை; இவன் பெருமாள் பிராட்டியார்களை யுத்தேசித் துரைசெய்யும் வாக்கியங்கள் துர்ப்பாஷணமாகத் தோற்றினும், ஆராயுங்கால் நற்பொருளுள்ளனவே யாகும், அதனை யங்கங் குரா செய்வோம்;—

தியும், ஐராவதத்தின் தந்தத்தினுல் மோதப்பட்டு மார்பில் காய்ப்புற்றும், இருபது தோள்களையும், பத்துச் சிரங்களையு முடையவனுகி, வெண்குடை கவிய, வெண்சாமரங்களால் வீசப்பட்டும், அகன்ற மார்பினையுற்றும், வைடூரியத்தை நிகர்த்தும், சிறந்த பொன்னுற்செய்த குண்டலங்களை யணிந்தும், நீண்டுருண்ட புஜங்களையும், வெண்மை பொருந்திய பற்களையும், பருத்த முகங்களையு முடையவனுகியும், விஷ்ணுவின் சக்கராயுதத்தாலும், தேவர்களுடைய பற்பல படைகளாலு மடிபட்டும், கலக்கமற்ற கடல்களையும் கலக்குந் திறமையுற்றும், எத்தொழிலும் விரைவில் செய்யும் வல்லமை பொருந்தியும் திகழ்பவனும், மாமலை போன்றவனும், சிறந்த மலைகளையு மசைப்பவனும், தேவர்களையும் அடிப்பவனும், தருமங்களைக் கெடுப்பவனும், பரத்தையல்களைப் புணர்பவனும், திவ்வியாஸ்திரங்க ளெல்லாவற்றையும் உணர்ந் தெய்பவனும், யாகங்களைத் தடுப்பவனும், போகவதி பட்டணஞ் சென்று, வாஸுகியை வென்று, தக்ஷகனையும் நிராகரித்து, அவனுடைய மனத்துக் கினிய மனையாளைப் பிடித்துக்கொண்டு வந்தவனும், கயிலைமலை சேர்ந்து குபேரனை வென்று புஷ்பக விமானத்தைப் பறித்தவனும், சைத்திரரதம் நந்தனம் முதலிய தேவோத்தியானங்களை யழித்தவனும், உதிக்கின்ற ஸூர்ய சந்திரர்களையும், கைகளினுல் தடுப்பவனும், பதினுலாயிரம் வருஷம் திசைமுகத்தேவனைக் குறித்துத் தவஞ்செய்து, தன் தலைகளையே கொய்து ஹோமஞ் செய்தவனும், தேவதானவ கந்தர்வ பிசாசோரகபதகாதி பூதங்களாலும், மிருத்தியு வினுலும், மற்றுள்ள உயிர்களாலும் இறவேனென வரம்பெற்றவனும், அப்பொழுது மானிடரை மதியா திகழ்ந்து உபேக்ஷை செய்தவனும், வேதியர்களால் மந்திர பூர்வமாகக் கலங்களில் பிழியப்பட்ட ஸோமங்களையுண் டழிப்பவனும், கொடியனும், வேதியர்களைக் கொலை செய்பவனும், தீச்செயலினனும், தயா தாக்ஷிண்ய மற்றவனும், பிரஜைகளுக்குத் தீமை விளைப்பவனும், தனக்குப் பிராதாவுமாகிய ராவணனைக் கண்டு கிட்டியவனை நோக்கிக் கொடுமை கொண்டு மொழிய லுற்றனள்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்திரண்டாவது சருக்கம்
முற்றிற்று.

முப்பத்துமூன்றுவது சருக்கம்.

சூர்ப்பணகை ராவணனை யரசாட்சி நன்கு
செய்கின்றிலையென இகழ்ந்தது.

அநந்தரம் மிகவுந் தீனமுற்ற சூர்ப்பணகை யுலகங்களை யெல்லாம் கூவி யழச் செய்யும் ராவணன் மந்திரிகள் நடுவில் வீற்றிருக்கக் கண்டு

அவனை நோக்கிக் கேளடா ஸோதரா ! நீ வேற்கணார் கலவி இன்பத்திலே மூழ்கி மயக்குற்றுக் கேட்போரின்றி நீதி தப்பித் தடையின்றித் திரிகின்றனை ; இப்பொழு தித்திங்கு விளையுமென்று முன்னமே யாராய்ந் தறிய வேண்டியதை யறியா திருப்பது மன்றி, தீமை நேர்ந்த பின்னரும், அறிகின்றிலை யந்தோ ?—

సక్తంగ్రామ్యేషుభోగేషు కామవృత్తంమహీపతిం
లుబ్ధంనబహుమన్యన్తేశ్మ శానాగ్నిమివప్రజాః.
స్వయంకార్యాణియః కాలేనానుతిష్ఠతిపార్థివః
సతువైసహరాజ్యేన తైశ్చ కార్యైర్వినశ్యతి.
అయుక్తచారందుర్దర్శమస్వాధీనంనరాధిపం
వర్జయన్తినరాదూరాన్నదీ పంకమివద్విపాః.

ஸக்தம்க்ராம்யேஷுபோகேஷு காமவ்ருத்தம்மஹீபதிம்
லுப்தம்நபஹுமன்யந்தே ச்மசாநாக்நிமிவப்ரஜாஃ.
ஸ்வயங்கார்யாணியஃகாலே நாநுதிஷ்டதிபார்த்திவஃ
ஸதுவைஸஹராஜ்யேநதைச் சகார்யைர்விநச்யதி.
அயுக்தசாரந்தூர்தர்ச மஸ்வாதீநம்நராதிபம்
வர்ஜயந்திநராதூராந் நதிபங்கமிவத்விபாஃ.

கிராம்யபோகங்களில் ஆசத்தியுற்றவனும், தன்மனத்துக்குத் தோன்றினபடிசெய்பவனும், லோபமுடையவனுமாகி, ராஜனைப்பிரஜைகள் முதுகாட்டிலுள்ள தீயைப்போலக் கண்டிகழ்வார்களேயன்றி, உகவார்கள்; யாவனொருவன் தக்ககாலத்தில் செய்யத்தக்கன செய்கின்றிலனோ ? அந்த ராஜன் அந்த ராஜ்ஜியத்துடனே அந்தக் காரியங்களினாலேயே யப்பொழுதே யழிந்து விடுவான் ; சாரர்களை யேவாதவனும், சுளித்தமுகத்தனாகிக் காணற் கரியனும், ஸ்வாதீன னாகாதானுமாகிய ராஜனை யானைகள் நதியின் சேற்றைப்போலப் பிரஜைகள் துறக்கின்றனர்கள் ; எந்த அரசர்கள் ஸ்வாதீனம் தப்பித் தேன்மொழியா ரதீனராகிப் பாதுகாக்கின்றிலரோ ? அவர்கள் கடலிலாழ்ந்த மலைகள்போல மேன்மையுற்று விளங்கார்கள் ; மிகத் திறமையுள்ள தேவகந்தர்வ தானவாதிகளுடன் பகையுற்றும், சாரர்களை ஏவிச் செய்தி யறிந்து கொள்ளாமல் சபலனாகத் திரிகின்ற நீ எவ்வண்ணம் ராஜ்ஜியத்தை யாள்வாய் ? அடா நீ மதியின்றி, மடத்தன்மைகொண்டு, அறிந்து கொள்ளத்தக்க காரியங்களை யறிந்து கொள்ளுகின்றிலை ; ஆதலின், நீ எவ்வண்ண மரச னாகுவாய்; எந்த ராஜர்களுக்கு வேவுகாரர்களும், பொருள்களும், நீதிகளும், திட்டங்களும்,

ஸ்வாதீனங்க ளல்லவோ ? ஸ்வாதீனமற்ற அந்த ராஜர்கள் அற்பர்களுக்கு நிகரானவர்களே யாகின்றனர்கள்; வேந்தர்கள் சாரணர்களைக்கொண்டு தேசாதேசங்களிலுமுள்ள சமாசாரங்களை யறிந்துகொள்ளுகின்றமையின், அவர்கள் தூரதிருஷ்டிகளெனப்படுகின்றனர்கள்; ஜனஸ்தானத்திலுள்ள கரன் முதலிய யாவரும் அழிந்திருக்கையில், நீ இதுவரையில் தெரிந்து கொள்ளாமையால், அற்பர்களான மந்திரிகளுடன் கூடியவனெனவும், சாரணனில்லாதானெனவும், உன்னை யானெண்ணுகின்றேன்; பதினாலாயிரம் ராக்ஷஸர்களுடன் கரன் முதலானோர்களும், ஸ்ரீராமனொருவனாலே தானே கொலைசெய்யப்பட்டனர்கள். அந்த ஸ்ரீராமன் ரிஷிகளுக்கும் அஞ்சற்க என்றபயங்கொடுத்தனன். ஆதலின், தண்டகாரண்யங்களின்புற்றன; இவ்வண்ணம் அந்த ஸ்ரீராமனால் ஜனஸ்தானம் பாழாளாக்கப்பட்டது; இவ்வண்ணம் திங்குநேர்ந்திருக்கையிலும், அதனை யுணராமல் லோபமும், மதமும், காமமும் கொண்டு ஸ்வாதீனமின்றி, மடமைகொண்டிருக்கின்றனை; கொடுமை கொண்டவனையும், அற்பமாகக் கொடுப்பவனையும், மதமுற்றவனையும், கர்வமடைந்தவனையும், வஞ்சனைசெய்பவனையும், பிரஜைகள் சேரார்கள்; அவனுக்கு இடையூறுவருங்கால் நீங்கிச் சென்று மகிழ்வார்கள்; அகங்காரமுற்றும், நிலைமையற்றும், தன்னைத்தானே புகழ்ந்தும், சினமடைந்தும், கொடுமைகொண்டு மிருக்கின்ற ராஜனைத் தன் ஜனமே ஸமயம்பார்த்துக் கொல்லும்; பயம் நேர்கையி லச்சமின்றியும், செயற்குரிய காரியங்களைச் செய்யாமலுமிருக்கின்ற ராஜன் விரைவில் அரசிழந்து, புல்லுக்கு நிகராகுவான்; உலர்ந்த கட்டைகளினாலும், உடைந்த சில்லி யோடுகளினாலும், துகள்களினாலும் கூடப் பயன் நேரும், அரசிழந்த ராஜர்களாலேமாத்திரம் ஒரு பயனும் இலது; உடுத்துக் கிழிந்த துணிபோலவும், அணிந்துவாடிய மலர்மாலைபோலவும், அரசிழந்த வேந்தன் திறமை யுற்றவனாயினும், திறமை யற்றவனே; ஊக்கமுடையோனும், யாவுமுணர்ந்தோனும், புலன்களை வென்றவனும், நன்றியுள்ளவனும், தார்மிகனுமாகிய ராஜனே நெடுங்காலம் உலகாண்டு வாழ்வான்; கண்களில் துயிலுற்றவனாயினும், நீதியென்னும் கண்களால் விழித்திருப்பவனும், பயன்படும் சினம், அருள்களை யுடையவனுமாகிய ராஜனே யாவராலும் கொண்டாடப் படுவான்; அடா ராவண! நீயோவெனில், மதிமயங்கி யானுரைத்த நற்குணங்களை யிழந்து, தீக்குணங்களை மேற்கொண்டு, சாரர்களினால் கராதிகள் இறந்ததையு முணரா திருக்கின்றனை; பிறர்களை யிகழ்ந்தும், விஷயங்களிலாழ்ந்தும், தேசகாலங்களுக்

குரிய செயல்களை யிழந்தும், குணதோஷங்களை யறியு முணர்வைத் துறந்து மிருக்கின்றமையின், நீ விரைவில் அரசிழந்து துன்புறுவாய்; என்றிவ்வண்ணம் சூர்ப்பணகையாலுரைக்கப்பட்ட வாக்கியத்தை ராவண னும் நன்காராய்ந்து, செல்வமும், செருக்கும், பலமும் உற்றவ னாதலின், நெடுநேரஞ் சிந்தையுற்றிருந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்துமூன்றாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்துநான்காவது சருக்கம்.

சூர்ப்பணகி ராவணனுக்குப் பெருமா ளிளையபெருமாள் இவர்களுடைய திறமையையும், பிராட்டியின் அழகினையு மறிவித்துச் சீதையை யபஹரிக்கும்படி யுரைத்தது.

அநந்தரம் ராவணன் பகைமேல் சினமுற்றுத் தன்னை வன்மொழிகளா லிகழ்ந்த சூர்ப்பணகியை நோக்கிச் சொல்லடி சூர்ப்பணகி! ஸ்ரீராமனென் பவன் யாவன்? எத்திறமையன்? எவ்வுருவத்தவன்? எத்தன்மையன்? அவன் புகற்கரிய தண்டகாவனத்து ளேன் புகுந்தனன்? எப்படையினன்? அரக்கர் களை எதனால் மடித்தனன்? விரைவி லுரையாயென வினவினன். சூர்ப்ப ணகியு மிந்த வாக்கியத்தைக்கேட்டு ராவணனைநோக்கிக் கேளாய் ஸோதரா! நீண்டுருண்ட திருத்தோள்களும், அகன்ற திருக்கண்களு முடையவனும், மரவுரி மரையுரிகளையுடுத்தவனும், காமகோடி சுந்தரனுமாகிய ஸ்ரீராமனென் பவன் தசரதசக்கரவர்த்தியின் திருக்குமாரன், பொன்கட்டமைந்த தேவே ந்திரன் வில்லை நிகர்த்த திருக்கோதண்டத்தைக் கையிலேந்தி இழுத்து நச்சரவங்கள்போன்ற கணைகளை எய்கின்றனன்; அவன் கணைகளை எடுப் பதும், தொடுப்பதும், இழுப்பதும், விடுப்பதும், யாராலுங் கண்ணுறப் பட்டில; சரமாரிகளாலடிபட்டு மடிந்த சேனைகளை மாத்திரமே கண்டேன்; மழைக் கல்லுகளினா லடிபட்டு மடிந்த நெற்பயிர்கள்போலச் சரமாரிகளால் பதினாலாயிரம் ராக்ஷஸசேனைகளும் அடிபட்டு மடிந்து சாய்ந்தன; இவ் வண்ணம் மூன்று நாழிகைக்குள் அந்த ஸ்ரீராமனொருவனே எல்லாப் படைக ளுடன் கரதூஷணத் திரிசிரர்களையும் கொலை செய்தனன். ரிஷிகளுக்கும் அபயமளித்தனன்; யாவருமின்புற்றனர்கள். அந்த ஸ்ரீராமன்மிகவும்சூரனும், தரும முணர்ந்தவனு மாதலின், பெண் கொலை தீதென வுணர்ந் தென்னை யுபேக்ஷைசெய்து கொல்லாது விட்டுவிட்டனன். ஆதலின், யானொருத்தியே தப்பிப் பிழைத்து வந்தேன்; அவனுக்குத் தம்பியு மொருவன் மிகவும்

தேஜஸ்ஸுடையவனும், ரூபௌதார்ய பல பராக்கிரமங்களினால் அண்ணனுக்கு நிகரானவனும், அன்பும் பத்தியு முடையோனும், பிழையைச் சிறிதேனும் பொறுத்தருளாதானும், பிறரால் வெல்லவொண்ணாதானும், பகைவரை வெல்லுபவனும், கூரிய புத்தி யுடையோனும், ஸ்ரீராமனுக்கு வலது திருத்தோளெனவும், வேறுருக்கொண்டு புறத்தி லுலாவுகின்ற உயிரோ இவனெனவுமுரைக்கப்பட்டவனும், மிகத் தோள்வலியுற்றவனுமாகி, இலக்ஷ்மணனெனப் பேருற்று விளங்குகின்றனன்; ஸ்ரீராமனுடைய மனையாளொருத்தியும், அகன்ற திருக்கண்களையும், முழுமதிபோன்ற திருமுகமண்டலத்தையும் பொருந்தி, மிகப் பிரிய முடையாளும், மிக வழகிய சுரிகுழலினளும், அழகுற்ற நாசி யுடையாளும், கட்டழகியும், புகழ்பெற்றவளும், அந்த வனதேவதையோவென வெண்ணப்பட்டவளும், மற்றொரு மஹாலக்ஷ்மியோவென ஐயுறத்தக்கவளும், உருக்கிய தங்கம்போன்ற வண்ணமுற்றவளும், சிவந்துயர்ந்த நகங்களை யுடையவளும், நுண்ணிடையினளும், சீதையென்னும் திருநாமமுடையவளு மாகின்றனள்; தேவகந்தர்வ யக்ஷ ராக்ஷஸ பதகோரகாதிப் பெண்களுள்ளும், இவ்வண்ணம் வண்ணமழகிய பெண்ணை எங்கும் கண்டிலேன் ;—

యస్య సీతా భవేద్భార్యా యంచ సీతా పరిష్వజేత్
అతిజీవేత్స సర్వేషు లోకేష్వపి పురన్దరాత్.

யஸ்யஸீதாபவேத்பார்யா யஞ்சஸீதாபரிஷ்வஜேத்

அதிஜீவேத்ஸஸர்வேஷு லோகேஷ்வபிபுரந்தராத்.

யாவனொருவனுக்குச் சீதை மனையாளாகுவாளோ? யாவனொருவனைச் சீதை யாலிங்கனஞ்செய்துகொள்ளுவாளோ? அவ்விருவரோ எல்லோரையும் விடச் சிறந்த பிறப்புடையோரும், இந்திரனிலுஞ் சிறந்த போகமுற்றோருமாகி வாழ்வார்கள்; நல்லொழுக்க முடையவளும், உருவத்தி லொப்பற்றவளுமாகிய அந்தச் சீதை யுனக்குத் தக்கவளாகுவாள்; நீயு மவளுக்குத் தக்கவனாகுவாய்; அவளை யானுனக்குப் பாரியார்த்தமாகவெடுத்தோடிவர முயன்றேன்; அப்பொழுது கொடியனான லக்ஷ்மணன் முனிந் தென்னைச் செவி நாசிகளை யரிந் தோட்டி விட்டனன்; அவளை நீ கண்ணுறுவாயாகில், மன்மதபாணங்களுக்குக் குறியாகுவாய்; அவ்விஷயத்தி லுனக்கு மனமுளதாயின், ஜயார்த்தமாக வலதுகாலை இப்பொழுதே முன்னெடுத் திடுக; ஸ்ரீராமனைக் கொலைசெய்வதினால் அவ்வரக்கர்களுக்குப் பிரியஞ் செய்க; அந்த ஸ்ரீராமனையும், லக்ஷ்மணனையும் கூரியகணைகளினாலடித்துப் பதியற்ற சீதையைச் சுகமாகவெடுத்து வந் தின்புறுக; யானுரைசெய்த இவ்வாக்கியம் உனக்கிதமெனத் தோற்றுமாயின், உடனே யவ்வண்ணஞ் செய்க; உன்னுடைய திறமையையும் நன்குணர்ந்து சீதையை எடுத்தோடிவருக; என்

வாக்கியத்தைச் செவியுற்று, ஸ்ரீராமனால் கரதூஷணத் திரிசிரர்களும், பதினாலாயிரம் சேனைகளும் அழிந்தனர்களென்பதையறிந்து, மேல்செய்யத் தக்க காரியத்தை நன்காராய்ந்து செய்யக்கடவையென மொழிந்தனள். *

ஆரண்யகாண்டத்தில் முப்பத்துநான்காவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவதுசருக்கம்.

ராவணன் தேரூர்ந்து கடலையும், ஸுபத்திரமென்னும் ஆலமரத்தையும், பார்த்துக்கொண்டுபோய் மாரீசனைக் கண்டது.

அநந்தரம் ராவணன் சூர்ப்பணகையின் வாக்கியத்தைக்கேட்டு, மந்திரிகளுட னாராய்ந்து தேர்ந்து, மந்திரிகளை யனுப்பிவிட்டுத் தானுந் தனியே

---

* யஸ்ய என்னும் சுலோகத்தின் கருத்துரை.

எவனுக்குச் சீதை பாரியை யாகுவாள் ? எவனைச் சீதை மகிழ்ந்து தழுவிக் கொள்வள் ? அவன் ஸ்ரீராமனே யல்லனோ ? அவனே எல்லோர்க்கும் சிறந்த புருஷோத்தமன் ; அவனே இந்திரனுக்குப் பின் னவதரித்த உபேந்திரன் ; ஆதலின், சீதையை லக்ஷ்மியென்றே வுணர்க என்பது கருத்து; மேல் வாக்கியங்களிலும் வேறே யொரு பொருளும் தோற்றுகின்றது ; அவள் நல்லொழுக்க முடையா ளாதலின், அவனுனக்குத்தக்க பாரியை யாகுவாளோ ? ஒருகாலும் ஆகாள் ; நீதான் அவளுக்குப் பதியாகுவாயோ ? ஆகாய் ; நீ பாரியையைத் துறந்து, வைராக்கியமுறும் விஷயத்தில் யானவளை எடுத்துவர முயன்றேன் ; லக்ஷ்மணன் என் மூக்கை யரிந்தான் ; நீ யவளைக் கண்ணுறுவாயாகில், (மன்மதஸ்ய) என் மூக்கை யரிந்து மர்த்தனஞ்செய்த அந்த லக்ஷ்மணன் சரங்களுக்குக் குறியாகுவாய் ; பாரியையைத் துறக்கும் விஷயத்தில் உனக்கபிலாஷமிருக்குமாயின், (ஜயார்த்தம்) முன்போல விஷ்ணுலோகத்தில் ஜயனென்னும் துவாரபாலனாகும் விஷயத்தில் மகிழ்ந்து வலதுகாலை முன்னிடாய் ; கூரிய கணைகளினால் பகைவரைப் பிளந்து நிற்கிற பெருமாளையும், திருவனந்தாழ்வானையும், (ஹதநாயகாம்) அடையப்பட்ட நாயகனையுமுடைய பெரியபிராட்டியாரையும் (அதாவத்) முன்போலவே சேர்ந்து சுகமாக வாயில் காப்போனாகி இன்புறுவாய்; அவ்வரக்கர்களுடைய வதத்தினால் (ந்ருசம்ஸஸ்ய) மனிதர்களால் புகழப்பட்ட அந்த ராமனுக்குப் பிரியமளிக்கக் கடவை. என் வாக்கியம் இதமெனத் தோற்றுமாயின், ஸ்ரீராமன், நீ, நம்மிருவருடைய சக்தியை நன்குணர்ந்து, சீதையை எடுத்துவா ? யானுரைத்ததையுங் கேட்டு, ஸ்ரீராமனால் கராதிகள் மடிந்ததையு முணர்ந்து தக்கவண்ணம் செய்யா யென்றும் பொருள் தோற்றுகின்றமையின், ராவணன் பெருமாளை எதிர்த்துப் போர் செய்யாமல், மறைவில் எடுத் தோடிவந்தானென்பது அமைகின்றது ;—

ஆலோசனை செய்து, குணதோஷங்களையும், பலாபலங்களையு மறிந்து, இவ்வண்ணமே செய்யவேண்டுமெனத் தேர்ந்து, யானசாலைக்குட்புகுந்து ஒருவருமறியாமல் சாரதியை நோக்கித் தேரைச் சித்தஞ்செய்யும்படி கட்டளையிட்டு, அவனால் சித்தஞ்செய்யப்பட்ட சிறந்த பொன்னாற்செய்த தேர்மீதேறிப் பிசாசமுகம்போன்ற முகங்களுள்ள கோவேறுகழுதைகளைத் தூண்டி விண்மிசைசென்று, வெண்குடைபிடித்தும், வெண்சாமரங்கள்வீசியும், மற்றும் பற்பல உபசாரங்களும்செய்கின்ற பரிஜனங்களுடன் கூடி, பத்துத்தலைகளை யுடையனாகி வைடூரியத்தை நிகர்த்தமையில், பத்துச் சிகரங்களையுடைய மாமலைபோன்றவனாகி, மின்னலுடன் கூடிப் பலாகைகளினால் சூழப்பட்ட மேகம்போலும் விளங்கி, மலையுடன் கூடிய கடற்கரையையும், பலவகை மரங்களடர்ந்து திகழக் கண்ணுற்று குளிர்ச்சியுற்றுப் பாவனமாகிய நீர்களை யுடையனவும், தாமரை மலர்ந்து மணம் வீசுகின்றனவுமாகிய தாமரை யோடைகளினாலும், யாகவேதிகளுடன் கூடிய விசாலமான ஆசிரமங்களினாலும் திகழ்ந்தும், வாழை பலா தேங்கு பனை ஆச்சா பச்சிலை முதலிய மரங்கள் மலர்ந்து கனிந்துச் சூழ்ந்தும், நாக கந்தர்வ ஸுபர்ண கின்னரர்களும், பிறப்பற்ற யோகிகளும், வைகானஸர்களும், (பிரஹ்மத்தின் நகத்திற் பிறந்தோரும்) மஷரென்பவர் குலத்தவர்களும், வாலகில்யர்களும், (பிரஹ்மத்தின் வாலிற் பிறந்தோர்களும்) வெயிலையுண்டே தவஞ் செய்பவர்களும், உணவு நீங்கிய யோகிகளும் நிறைந்தும், சிறந்த ஆடையாபரணங்களை யுடைய அப்ஸரஸர்கள் நிரந்தரம் கிரீடைசெய் தின்புற்றும், தேவர்களும் தெய்வப்பெண்களும் திகழ்ந்தும், மற்றுமுள்ள தேவதானவகணங்கள்நெருங்கியும்,அன்னம் கிரௌஞ்சம் நீர்க்கோழி வெண்ணாரை முதலிய நீர்ப்பறவைகள் ஒலித்தும், வைடூரியக் கற்களடர்ந்தும் விளங்குகின்ற காடுகளையும், வெண்மைநிறமுற் றகன்று திவ்விய மாலைகள் பொருந்தி கீதவாத்தியங்கள் முழங்கித் திகழும் வைமானிகர்களது விமானங்களையும், கிட்டி யங்கங்குள்ள கந்தர்வாப்ஸரர்களையும், மற்றுள்ள விநோதங்களையும் கண்ணுற்றுச் சந்தநக்காடுகளையும், அகிற்காடுகளையும், தக்கோலக்காடுகளையும் கண்டு மகிழ்ந்து, தமால புஷ்பங்களையும், மிளகு புதருகளையும், கரையி லலைகளினா லொதுக்கப்பட்ட முத்துகளையும், சங்குகளின் திரளையும், பவளங்களின் குவைகளையும், பொன்மலை வெள்ளி மலைகளையும், மலையருவிகளையும், மடுவுகளையும், தனதான்யங்கள் நிறைந்து, மிக வழகிய பெண்கள் திகழ்ந்து, யானை குதிரை தேர்க ளடர்ந்துமுள்ள பட்டணங்களையும் கண்டு களித்து, அந்தக் கடலோரத்தில் பருத் துயர்ந்த ஒரு ஆலமரத்தையும் கண்டனன். அம்மரத்தின் கிளைகள் சுற்றிலும் நூற்றுக்காதவழி வளர்ந்துள்ளன; அம்மரத்திலேதானே பெரிய திருவடிகள் கஜகச்சபங்களைக் கால்களி லிடுக்கிக்கொண் டவைகளை யுண்பதின் பொருட்டுப் பறந்து வந் துட்கார்ந்து, உடனே தாமுட்கார்ந்த கிளை முறியத் தக்ஷணமே அதன் கீழே தவஞ்செய்கின்ற வாலகில்யர் முதலிய

யோகிக ளிறப்பார்களென வஞ்சி, அந்தக் கிளையினையும் மூக்கில் கொந்தி எடுத்துப் பறந்தெழுந்து நெடுந்தூரமெழுந்தருளி, அந்தக் கஜகச்சபங்களையும் பக்ஷித்து, நூறுயோஜன நீளமுள்ள அந்தக் கிளையை வேடுவச்சேரியிலெறிந் தங்குள்ளோரையும் கொலைசெய்தருளி மகிழ்ந்து, முனிவர்களையும் பாதுகாத்தளித் துடனே தேவலோகஞ்சென்று, அங்குள்ள எஃகினுற் செய்த யந்திரங்களை முறித்து, மணிமாடங்களையு மிடித்து, அங்கு ஏகாந்தமாய்ப் பாதுகாக்கப்பட்ட அமிர்தகலசங்களையு மெடுத்துக்கொண் டெழுந்தருளினர். பற்பல மஹாமுனிவர்கள் நிறைந்த ஸுபத்திரமென்னும் அந்த ஆலமரத்தையும் தாண்டிக் கடலின் அக்கரை சேர்ந்து, மிக வழகிய வோராசிரமத்தில் மரவுரி யுள்ளுடுத்து மனையுரி மேல்கட்டிச் சடைதிரித்து உணவடக்கித் தவஞ்செய்துகொண்டிருக்கின்ற தாடகா புத்திரனை மாரீசனைக் கண்டு கிட்டிச் செல்லுகையில், மாரீசனும் இவனைக் கண்டு எதிர் கொண்டழைத்துவந்து, விதியின்படி அர்க்கியபாத்தியம் முதலிய உபசாரங்களினுல் பூஜித்து, ராவணனை நோக்கி, அரக்கர்கோனே ! இலங்கையிலெல்லோரும் இன்புற்று வாழ்கின்றனர்களா ? விரைவாக மீளவும் இங்கெய்திய செய்தி யாதோ ? அதனை யுரைசெய்கவென்று வினவினன். பின்பு ராவணனும் மாரீசனை நோக்கி, மொழியலுற்றனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தைந்தாவது சருக்கம்
முற்றிற்று.

முப்பத்தாறுவது சருக்கம்.

ராவணன் மாரீசனை மானுருக்கொண்டு, சீதையைத் தான் எடுத்து வருவதற்கு உதவி செய்யென உரைத்தது.

அநந்தரம் ராவணன் மாரீசனை நோக்கிக் கேளடா என் மொழியை! யான் மிகவும் துன்பமடைந்திருக்கின்றேன் ; இத்தருணத்தில் நீயே எனக்குத் தஞ்சம் ; எனக்குப் பிராதாவாகிய கரன், தூஷணன், திரிசிரன் முதலிய பதினுலாயிரம் ராக்ஷஸர்களுடனும், சூர்ப்பணகியுடனும், என் கட்டளையின்படி ஜனஸ்தானத்திலுறைந்து, அங்குள்ள முனிவர்களைப் பீடித்துக்கொண்டிருந்தன னென்பதை நீ யறிந்தே யிருக்கின்றனை யல்லையோ ? அந்தக் கரன் முதலிய ராக்ஷஸர்க ளெல்லோரும் ராமனுல் கொலை செய்யப்பட் டிறந்தனர்கள். இப்பொழுது தண்டகாவனம் அச்சமற்றதாகச் செய்யப்பட்டது; அந்த ராமனும் தந்தையினுல் பெண்டாட்டியுடன் அடித் தோட்டப்பட்டுக் காடு சேர்ந்தும், மதியின்றி யாயுள்மாண்டு அவ்வரக்கர்

களைக் கொலை செய்தனன்; ஆதலின், அவன் ராஜர்களுள் கடையவனும், தீச்செயலினனும், கொடுமைகொண்டவனும், அருளற்றவனும், மடமை கொண்டவனும், லோபமுடையோனும், தவமியற்றிப் புலன்களை வென்றவனு மாகின்றனன்; ஆதலின், அவன் தருமத்தைத் துறந்து அதருமத்தையே மேற்கொண்டு உயிர்களுக்குத் தீமைசெய்யவே முயன்றனன்; பகையொன்று மின்றியே பல மதத்தினால் அவன் என் ஸஹோதரியான சூர்ப்பணகியின் செவி நாசிகளை யரிந்து விட்டனன்; ஆதலின், அவன் மனையாளாகிய மிக வழகிய சீதையை எடுத்துக்கொண்டுவரப்போகிறேன்; இவ்விஷயத்தில் எனக்கு நீ ஸஹாயமாகக் கடவை. நீ என்னுடன் வந்துதவி செய்வாயாகில், கும்பகர்ணன் முதலிய தம்பிகளுடனுங் கூடிய யான் போரில் தேவர்களெல்லோரும் எதிர்த்துவரினும் யான் இலக்ஷியஞ் செய்யேன்; ஆதலின், நீ எனக்குத் துணையாகக் கடவை. வீரியத்திலும், மதத்திலும், உனக்கு நிகரானவ னொருவனுமிலன்; நீயே உபாயமறிந்தவன், சௌரியமுள்ளவன், மாயைகளெல்லாவற்றையு மறிந்தவன், இதற்காகவே யானிங்கெய்தினேன்; நீ செய்யவேண்டிய காரியம் யாதோ? அதனையுமுரைசெய்வேன் கேளாய்; நீ வெள்ளிமயமான புள்ளிகளை யுடையதும், பொன்மயமாகி மிக வழகியதுமாகி, மானுருக்கொண்டு அந்த ராம னிருக்கின்ற ஆசிரமத்தி லுலாவுக; சீதை யுன்னைக் கண்ணுறுவாளாயின், அவாவுற்று ராம லக்ஷ்மணர்களை நோக்கி, இம்மானைப் பிடித் தளிக்கக் கடவீர்களென உரை செய்வாள்; உடனே யவ்விருவர்களும் உன்னைப் பிடிக்கும்படி வருவார்கள்; அவர்கள் சென்ற பின்னர், தனியே யிருக்கின்ற அந்தச் சீதையைத் தடையொன்று மின்றியே சுகமாக எடுத்துக் கொண்டு வந்துவிடுவேன்; பின்பு, பெண்டாட்டியைப் பறிகொடுத்து மிக வருந்தி இளைத்துத் துயருற்ற ராமனைச் சுகமாகக் கொலை செய்வேனென் றுரைசெய்து முடித்தனன்.

மாரீசன் அந்த வாக்கியத்தைக் கேட்டு, ஸ்ரீராமபிரானுடைய பிரபாவத்தையும் நினைந்து, உதடுகளுலர்ந்து, அவற்றை நாக்கினால் வருடி, இமைநீங்கிக் கண்கள் மருள விழித்து, சவம்போல நின்று, துயருற்றுத்தேர்ந்து, ராவணனை நோக்கி, மனங்கலங்கிச் சிந்தைகொண்டவனாகிப் பெருமாளுடைய தோள்வலியை யறிந்தவனாதலின், ராவணன் வாக்கியம் நலமற்றதென வறிந்து, கைகளைக் கூப்பி ராவணனுக்கும் தனக்கும் இதமுறத்தக்கதாக ஒரு மொழி மொழியலுற்றனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

முப்பத்தேழாவது சருக்கம்.

மாரீசன் ராவணனுடன் ஸீதாபிராட்டியை யபஹரிப்பாயாகில் எல்லாவரக்கர்களுடனும் நீ யழிவாயாதலி னிவ்வெண்ணத்தை விட்டு வாழென்று இதமுரைத்தது.

அநந்தரம் ராவணனுரைத்த அந்த வாக்கியத்தை மாரீசன் கேட்டு ராவணனை நோக்கி,—

సులభాఃపురుషారాజన్ సతతంప్రియవాదినః
అప్రియస్యచపథ్యస్య వక్తాశ్రోతాచదుర్లభః.

ஸுலபாஃபுருஷாராஜன் ஸததம்ப்ரியவாதிநஃ
அப்ரியஸ்யசபத்யஸ்ய வக்தாச்ரோதாசதுர்லபஃ.

"கேளீர் ராக்ஷஸர் கோனே! பின்பு, துன்பம் விளைவிக்கத்தக்கனவும், கேட்பதற் கினியனவாகத் தோற்றுகின்றனவுமாகிய மொழிகளை மொழிவோர்கள் உலகினி லெப்பொழுதும் பெரும்பாலு முளர்கள்; கேட்பதற் கினியன வல்லனவாயினும், மேலே நலமளிக்கத்தக்கனவாகிய வன்மொழிகளை மொழிவோனும், இவன் மொழிவது நலமேயென மகிழ்ந்து கேட்போனும், நமக்கு மிவன் உபதேசஞ் செய்கிறானென்று செருக்கினால் சினமுறாமல் அவ்வண்ணமே நடப்பவனும், எங்கும் கிடையார்கள்; பிரியமலா துரைசெயின், கேட்போர் சுளிப்பார்கள்; இதமும் பிரியமுமாகியது அரிது; ஆதலின், யாவரும் தாக்ஷிணியத்தால் பிரியமே மொழிவார்கள்; நீர் சாரர்கள் முகமாய்ப் பிறர் தன்மையை யறிந்து கொள்ளாமலும், வேற்கணார் வலையில் கட்டுண்டு மிருக்கின்றமையின், ஸ்ரீராமன் பிறரால் வெல்லுதற்கரிய தோள்வலியுற்றவனெனவும், சிறந்த நற்குணமுடையோனெனவும், மஹேந்திரனுக்கும்,வருணனுக்கும்,நிகரானவனெனவுமறிந்திலீர்; அந்தோ? வேந்தே! இவ்வுலகினி லரக்கர்களெல்லோர்க்கும் நன்மை விளையுமா? ஸ்ரீராமன் சினமுற் றுலகினை யரக்க ரற்றதாகச் செய்யா தருள்செய்வனா; ஜனகராஜன் திருமகளாகிய சீதை யும் குலத்தை யழிப்பதன் பொருட்டுப் பிறந்திலளா? சீதையின் நிமித்தம் யானும் இறக்காம லுய்வேனா? காம வேட்கையுற்று மரியாதை கெட்டுத் திரிகின்ற உம்மை ராஜனாகப்பெற்று இலங்கை பாழாளாகாமல் சீருறுமா? உம்மைப்போலக் காமமுற்றுச் சீல மழிந்து தீயோர்சொற்கேட்டு மதிகெட்டுத் திரிகிற ராஜன் தானுமழிந்து, தன்னினத்தாரையு மழித்து, நாட்டையு மழிப்பான்; ஸ்ரீராமன் தந்தையினால் துறக்கப்பட்டவனு மல்லன், மரியாதை தப்பினவனு மல்லன்,

லோபியு மல்லன், தீச்செயலினனு மல்லன், ராஜர்களுள் பாவியு மல்லன், தருமகுண மற்றவனுமல்லன், கொடியனு மல்லன், உயிர்களுக்கு இதமலாச் செயலினனு மல்லன், அவன் நற்குணங்களெல்லாவற்றாலும் சிறந்தவனே; கைகேயி தந்தையை வஞ்சனை செய்து வரம்பெற்றுக் கொண்டமையால், பிதாவைப் பொய்யினின்றும் பாதுகாப்பதன் பொருட்டே பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்வேனென்றே கைகேயிக்குப் பிரிய முரைத்து, அரணியத்துக் கெழுந்தருளினன். ஆதலின், ஸ்ரீராமன் கொடியனுமல்லன், அறிவிலனுமல்லன், புலன்களை யடக்காதானுமல்லன், ஸ்ரீராமனிடத்தில் நீ பொய்யும், வன்மொழியு மிவ்வண்ண முரையற்க; ஸ்ரீராமன் உருவங்கொண்ட தருமம்போலும், நற்குணமுடையோனும், உண்மையான தோள்வலி யுற்றவனு மாகின்றனன்; அவன் தேவர்களுக் கிந்திரன்போல அனைத் துலகங்களுக்கும் ராஜனாதலின், ஒளி ஸூரியனை விட்டு நீங்காததுபோல ஸ்ரீராமனை விட்டுப் பிரியாத பிராட்டியை நீ எவ்வண்ணம் வலுவில் எடுத்துவரக் கருதுகின்றனை; கணைகளென்னும் ஜ்வாலையுற்று, வில் வாள்களென்னும் விறகைச் சேர்ந்து, தகதகவென்று பற்றி எரிகின்ற ஸ்ரீராமனென்னும் தீயில் வலுவில் வீழ்ந் தழியற்க; வில் லென்னுந் திறந்தமுகத்தைப்பெற்றுக் கணையென்னும் ஜ்வாலைபொருந்திச் சினங்கொண்டு பகைவர் சேனைகளை மடிக்கின்ற கோதண்டமென்னும் யமனுடன் சேர்ந்து திகழு மிராமனை ராஜியத்தையும், சுகத்தையும் துறந்து வலுவில் கிட்டி உயிரைவிட்டழியற்க; அவனுடைய பலம் அளவற்ற தாதலின், அவனுக்குயிரினும் பிரியமுள்ள பாரியையை யபஹரிக்க நீ எவ் வண்ணந் திறமை யுறுவாய்? எரிகின்ற தீயின் அனல்போலச் சுடுகின்ற சீதையை நீ சேர்வதென்பது, நீ யழிவதற்கே ஏதுவாகும்; ஆதலின், பய னற்ற இம்முயற்சியை ஏன் வாளாச்செய்கின்றனை? ஸ்ரீராமன் போர்க் களத்தி லுன்னைக் காணுமளவே உன் வாழ்வு; பின்பு, உன்னுயிரும், இன்ப மும், ராஜ்ஜியமும், உனக்கு நிலைப்ப தரிது; நெடுங்காலம் வாழ்ந் தின் புறக் கோருவாயாகில், ஸ்ரீராமனுக்குத் தீங்கு செய்யற்க; ஸ்ரீவிபீஷணன் முதலிய தருமபுத்தியுள்ள மந்திரிகளனைவர்களுடனும் கூடி நன்காராய்ந்து, குணதோஷங்களையும், ஸ்ரீராமன், நீ, இவ்விருவருடைய பலத்தி னளவை யும் நன்குணர்ந்து, இது இதம்; இது இதமலாதெனத் தேர்ந்து; பின்பு, தக்கவண்ணஞ் செய்க; நீ ஸ்ரீராமனுடன் போர் செய்வாயாகில், தோல்வி யுற்றழிவாயென்று யான் நம்புகின்றேன்; இதமாயும், யுக்தமாயும், மீளவு மொரு வாக்கிய முரைப்பேன் கேளாயென்று மொழியலுற்றனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தேழாவது சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தெட்டாவதுசருக்கம்.

மாரீசன் ராவணனுடன் விசுவாமித்திரயாகத்தில் தான் பட்ட பாட்டை யுரைத்துப் பெருமாளுடன் நீ பகைகொள்வாயாகில் சித்தமாக அழிவாயென வுரைத்து மறுத்தது.

கேளாய் ராக்ஷஸர் கோமானே! யான் முன்பொருகாலையில், ஆயிரம் யானை பலமுடையேனென்றும், மலைபோலப் பருத் துயர்ந்தேனென்றும் மதங்கொண்டு, நீருண்ட கொண்டல் வண்ணனும், சிறந்த பொற்குழை யினனும், உலகங்களை யச்சமுறுவிப்பவனும், கிரீட மணிந்தவனுமாகிப் பரிகாயுதத்தைக் கையிலேந்தி, ரிஷிகளைக் கொலைசெய்து, அவர்கள் மாமிசத்தைப் புஜித்துக்கொண்டு, தண்டகாவனத்திற் றிரிந்துகொண் டிருந்தேன்; அப்பொழுது தருமாத்துமாவான விசுவாமித்திரமஹாயோகி என்னைக்கண் டச்சங்கொண்டு, தானே நேராகத் திருவயோத்திக் கெழுந்தருளித் தசரதசக்கரவர்த்தியைக் கண்டு, வேந்தர் கோமானே! யான் யாகஞ் செய்கையில், மாரீசன் வந்து தடைசெய்து பீடிக்கின்றனன்; ஆதலின், அச்சங்கொண் டோடி வந்தேன்; தேவர் திருக்குமாரனுகிய ஸ்ரீராமசந்திரன் என்னுடன் வந்து, யாகத்தை முடிப்பித்து, என்னைப் பாதுகாக்கக் கடவனென்றுரைத்து ஸ்ரீராமனை யாசனை செய்தனர். தசரத சக்கரவர்த்தி யதுகேட்டு அவரை நோக்கி, மாதவச் செல்வரே! என் திருமகன் பாலனும், ஆயுதப்பயிற்சி யற்றவனும், பன்னிரண்டு வயதுள்ளவனு மாகின்றனன்; ஆதலின், யானே மிகுந்துள்ள சதுரங்க சேனைகளுடன் வந்து, அரக்கர்களைக் கொலைசெய்து, தேவருடைய யாகத்தை நிறைவேற்றுவேன்; இவ்வண்ண மருள்செய்க; என வேண்டினர். விசுவாமித்திரமஹாமுனியும் அதுகேட்டு அவரை நோக்கிக் கேளீர் தசரதசக்கரவர்த்தி! நீர் தானவர்களுடன் போர்செய்து வெற்றிபெற்றுத் தேவர்களையும் பாதுகாத்தளிக்குந் திறமை யுற்றவராயினும், அந்த அரக்கர்களைக் கொலைசெய்யுந் திறமை ஸ்ரீராமபத்திரனை விட்டு மற்றொருவரிடத்திலு மிலது; நீ ரிதுவரையிலும் பிறர் செயற்கரிய செய்கைகளைச் செய்து மூவுலகிலும் நிலைத்த புகழ் பெற்றே யிருக்கின்றீர்; ஆதலின், நீர் சேனைகளுடன் இவ்விடத்திலேதானே சுகமாக வாழ்க; இந்த ஸ்ரீராமன் பாலனுயினும், அளவற்ற பராக்கிரம முடையவ னாதலின், அவ்வரக்கர்களைக் கொல்ல வல்லவனே யாகின்றனன்; யான் ஸ்ரீராமனையே யழைத்துக்கொண்டு செல்வேன்; உமக்கு மங்கல முண்டாகுக; என்றிவ்வண்ண முரைசெய்து ஸ்ரீராமனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு தன்னாசிரமஞ்சேர்ந்து யாகதீக்ஷைபூண்டு யாகஞ் செய்யத் தொடங்கினர். ஸ்ரீராமனும் ஸ்ரீகோதண்டத்தில் நாண்கட்டி டங்காரஞ்செய்பவனும் தோன்றாத யௌவன லக்ஷணங்களுடையவனும்,

மிக வழகுற்றவனும், செந்தாமரை இதழ்போன்ற திருக்கண்களை யுடையவனும், ஓரே வஸ்திரத்தை யுடுத்தவனும், சிகை யுடையவனும், பொன்னூலணிந்தவனும், தன் காந்தியினாலேதானே அந்தத் தண்டகாவனமெங்குந் திகழச் செய்பவனும், அப்பொழுதே உதயமான பூர்ணசந்திரன் போன்றவனுமாக விளங்கினன். யானும் அப்பொழுது வரத்தினால் ஆயிரம் யானை பலமுற்றிருக்கின்றேனெனச் செருக்குற்றங்கெய்தினேன்; அவனும் என்னைக் கண்டு கணையை வில்லில் தொடுத்தெதிர்த்தனன். யானவனை இளமையுற்றவனென உபேக்ஷை செய்து, விசுவாமித்திரனுடைய யாக வேதியை யழிக்கும்படி சென்றேன்; ஸ்ரீராமனுடனே ஒரு பாணத்தை எய்து, என்னைக் கொலை செய்ய எண்ணங் கொண்டில னாதலின், அந்தப் பாணத்தினால் என்னைத் தள்ளிக்கொண்டுபோய் நூற்றுக்காதவழிதாண்டுவித்து, நடுக்கடலி லழுத்திவிட்டனன். யானு மப்பொழுது நெடுநேரம் மூர்ச்சையடைந்திருந்து, பின்பு தெளிந்தெழுந்து வருந்தி லங்காபுரி வந்து சேர்ந்தேன்; யானிவ்வண்ண மப்பொழுது விட்டுவிடப் பட்டுய்ந்தேன்; எனக்குச் சஹாயமாயிருந்த ஸுபாகு முதலிய அரக்கர்களெல்லோரும் அவ்விடத்திலேதானே கொலைசெய்யப்பட்டனர்கள்; ஸ்ரீராமன் பாலனாகவும், ஆயுதப்பயிற்சி யில்லாமலும், இருக்கும் காலத்திலேயே இவ்வண்ணஞ்செய்திருக்கையில், இப்பொழுது அவன் திறமை எத்தன்மையதாகவேண்டும்; ஆதலின், நீ இப்பொழுது பகை யுறற்க; என் சொற் கேளாமல் பகை கொள்வாயாகில், விரைவில் நாசமுற்றழிவாயென்பதில் சிறிதேனு மையமிலது; எப்பொழுதுந் துபாமற்று இன்புற்றிருக்கின்ற ராக்ஷஸர்களெல்லோர்க்குந் தீங்கு விளையும்; மணிமாடங்கள் நெருங்கியும், பற்பல மணிகள் திகழ்ந்தும், மிக வழகிய இலங்கையும் அழியக் காண்பாய்; நீ யொருவன் தீச்செயல் புரியினும், உன்னைச் சேர்ந்த பற்பல நல்லோரும் நச்சரவமுடைய மடுவிலுற்ற மீன்கள்போல அழிவார்கள்; (ஏகஃபாபாநிகுருதே பலம்புங்க்தேமஹாஜனஃ) என்னும் பழமொழியை யுண்மையாகச் செய்யற்க; உன்னுடைய தோஷத்தினால் திவ்வியகந்தம்பூசி நறுமலர்மாலையணிந் தின்புற்ற எல்லோரும் அழியக் காண்பாய்; இறந்தவர்போக மிகுந்தவர்கள் மனைவியற்றவர்களும், மனையாளுடன் கூடியவர்களுமாகிப் பத்துத் திசைகளிலும் அச்சமுற்றோடக் கண்ணுறுவாய்; இலங்காபுரியை ஸ்ரீராமனுடைய பாணங்கள் நிறைந்து, தீப்பற்றி எரிந் தழியவுங் காண்பாய்; இதற்கையமிலது;—

పరదారాభిమర్శాత్తు నాన్యత్పాపతరం మహత్.

பரதாராபிமர்சாத்து நாந்யத்பாபதரம்மஹத்.

உலகினில் பரத்தையல்களைச் சேர்வதைவிடச் சிறந்த பாவமொன்றுமிலது; உனக்கு அளவற்ற சிறந்த பெண்கள் காமித்திருக்கின்றனர்கள்;

ஆதலின், தீச்செயலைத் துறந்து உன் மனைவிகளிடத்திலேதானே இன்புற்று நீயும் வாழ்ந்து குலத்தையும் பாதுகாக்கக் கடவை. இவ்வண்ணஞ் செய்வாயாகில், மானம், செல்வம், ராஜ்ஜியம், உயிர், இவை நிலையுறும்; இல்லாவிடின், இவை யழியும்; மனைவியர்களுடனும், நட்பினர்களுடனு மின்புற்று நெடுங்காலம் வாழ விரும்புவாயாகில், ஸ்ரீராமனுக்குத் தீங்கு செய்யற்க; இவ்வண்ணம் யான் தகைந்து இதமுரைசெயினும், என் மொழியைக் கேளாமல் சீதாபிராட்டியை யபஹரிப்பாயாகில், உடனே சேனைகளழிந்து, இனத்தார் சுற்றத்தார்களிறந்தும், ஆயுள்மாண்டு யமலோகம் போய்ச் சேர்வாய்; இதில் சிறிதும் சந்தேஹ முறற்க; என்று மாரீசன் ராவணனுக் கித முரைத்தனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தெட்டாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது சருக்கம்.

மாரீசன் ஸ்ரீராமபிரான் பஞ்சவடியிலெழுந்தருளியிருக்கையிலும், இரண்டு ராக்ஷசர்களுடன் மானுருக்கொண்டு ஸ்ரீராமபிரானைக் கொலை செய்யமுயன்று, ஸ்ரீராமபாணத்தால் மற்றிருவரிறக்கத் தான் ஓடிவந்து விட்டேனென ராவணனுக் குரைத்து அவனை மறுத்தது.

மீளவும் மாரீசன் ராவணனை நோக்கிக் கேளாய் லங்காபுரீ நாயகா! இவ்வண்ணம் முன்பு ஸ்ரீராமனால் அடிபட்டிறவாமல் தப்பிப் பிழைத்தேன்; இப்போழ்தும் நிகழ்ந்த செய்தி யுரைப்பேன்; பதிலுரையாமல் கேட்க; ஸ்ரீராமன்மேல் பகைகொண்டு, யானிப்போழ்து இரண்டு ராக்ஷஸர்களுடன் மான்வேஷம்பூண்டு தண்டகாவனஞ்சேர்ந்து, எரிகின்ற நாவுடையவனும், பருத்த மேனியனும், கூரிய கோரப்பற்களை யுடையவனும், மாம்ஸத்தைப் புஜிப்பவனுமாகி மிருகவேஷம் பூண்டு ரிஷிகள் ஹோமஞ்செய்யு மிடங்களிலும், நீராடு மிடங்களிலும், நற்சந்தி மரங்களிலும் சென்று, முனிவர்களைக் கொன்று தின்று கோரமாகத் திரிந்தேன்; இவ்வண்ணம் முனிகளைக் கொலைசெய்து மாம்ஸங்களைப் புசித்து, உதிரத்தைப் பானஞ்செய்து, யாவரையு மச்சமுறச் செய்து, மதமேறித் தருமங்களை யழித்துக்கொண்டு, இளையானுடனும், சானகியுடனுங் கூடித் தவசியாகி எழுந்தருளி யிருந்த ஸ்ரீராமனைக்கண்டு, முன் பகையை

நினைந்து, இவன் இப்போழ்து தவம்பூண்டிருக்கின்றமையின், கொலைத் தொழில் புரியானென வெண்ணிச் சினமுற்றுக் கிட்டி யோடிக் கூரிய கொம்புகளினால் முட்டிக் கொந்திக் கொலைசெய்ய முயன்றேன்; ஸ்ரீராமனும் எங்களைக் கண்டு, சினமூண்டு மூன்று சரங்களைத்தொடுத்து விடுத்தனன். யானந்தப் பாணங்களைக் கண்டு அவனுடைய பாணங்களின் பிரபாவத்தை யான் முன்னே யனுபவித்தவனாதலின், உடனே யச்சங்கொண்டு நெடுந்தூர மோடி யொளித்துக்கொண்டு தப்பிப் பிழைத்தேன்; மற்றிருவரும் அவ்விரண்டு பாணங்களினாலடிபட் டிறந்துவிட்டனர்கள். யான் மாத்திரம் அதிகப் பிரயாஸத்தால், அந்தப் பாணத்துக்குத் தப்பிப் பிழைத்து, இனித் தீச்செயல் புரியேனென உறுதிகொண்டு பற்றற்றுத் தவசியாகித் துறவறம் பூண்டு நியமங்கொண் டிருக்கின்றேன்; யான் அச்சத்தினால் மரஞ் செடி மலை முதலிய காணு மிடங்கள்தோறும் ஸ்ரீராமன் சீரகிருஷ்ணாஜினதாரியாகிக் கோதண்டத்தைத் திருக்கரத்திலேந்திப் பாசத்தைக் கையிற்கொண்ட யமன்போல எதிரில் நிற்பதாகக் காண்கின்றேன்; எங்கும் ஆயிரவர் பதினாயிரவராக ஸ்ரீராமனைக் கண்ணுறுகின்றேன்; இக்கானகமெல்லாம் ராமமயமாகவே காணப்படுகின்றது; துயிலுங்காலையிலும் கனவில் ஸ்ரீராமனையே கண் டச்சங்கொண்டு திடுக்கிட்டு விழித் தெழுகின்றேன்;—

రకారాదీనినామానిరామ త్రస్తస్యరావణ
రత్నానిచరథాశ్చైవ త్రాసంసంజనయన్తిమే.

ரகாராதீநிநாமாநி ராமத்ரஸ்தஸ்யராவண
ரத்நாநிசரதாச்சைவ த்ராஸம்ஸம்ஜநயந்திமே.

கேளாய் ராவணா! ஸ்ரீராமனால் அஞ்சுகின்ற எனக்கு ரத்நம், ரதம், ராவணன் என்பவை முதலிய ரகரத்தை முதலிலுள்ள பதங்களில் முதலெழுத்தைச் செவியுறும் காலையிலே, ராமனென்னும் பெயர் நினைவில் தோன்றச் செய்கின்றமையின், அப்பதங்கள் அச்சத்தைப் பெருகச் செய்கின்றன; யான் அவனுடைய பிரபாவத்தை நன்கறிவேன்; ஆதலின், நீ யவனுடன் போர்செய்வது மிகவும் தகுதியற்றது; ஸ்ரீரகுநந்தனன் பலி சக்கரவர்த்தியையாயினும், நமுசியையாயினும், போரில் கொலைசெய்வான்; இனி நீ யவனுடன் போர் செய்யினுஞ்செய்க; கராதிவதத்தைப் பொறுக்கினும்பொறுக்க; என்னை நீ காண விரும்புவாயாகில், என்னுடன்மாத்திரம் ஸ்ரீராமன் கதையை யுரையற்க; உலகினில் ஒருவனுடைய தீச்செயலினால் பற்பல நல்லோர்களும், இனத்தாருடன் அழிந்தனர்கள்; அவ்வண்ணம் யானும் உன்னுடைய தீச்செயலினா லழிவேன்; ஆதலின், யான் உன் மதப்படி இசைந்து பின்னெய்தேன்; நீ யுன் மனத்துக் கிசைந்த வண்ணஞ் செய்க; ஸ்ரீராமன் அளவற்ற தேஜஸும், தோள்வலியும்,

மனோபல காயபலமு முடையவன்; அவன் அரக்கர்களெல்லோர்க்கும் மிருத்யுவாகாதவாறு செய்வாய்; மேலும் ஒன்று கேட்கின்றேன், பதிலுரையாய்; சூர்ப்பணகை முதன் முதல் ஸ்ரீராமனிடஞ்சென்று பகைத்தமையின், அவன் அவளுடைய செவி நாசிகளை யறிந்தனன்; கரனவளுக்காகப் பரிந்து படையெடுத்து வந்தமையின், அவன் அவர்களையும் கொலை செய்தனன். இவ்விஷயத்தில் ஸ்ரீராமன்மீதென்ன பிழையுளது? அதனை யுரையாய்; உனக்கு இத சிந்தையின லிவ்வண்ண முரைக்கின்றேன்; இதனை நீ கேட்டு நலமெனவுரையாத துன்மனப்படியே செய்வாயாகில், விரைவி லினத்தார் சுற்றத்தார்களுடன் கூரிய ராமபாணங்களினு லடிபட்டு, ஆயுள்மாண் டுயிரைவிட்டழிவாயென்று பலவாறாக உரைத்தனன்.

ஆரண்யகாண்டத்தில் முப்பத்தொன்பதாவது சருக்கம்
முற்றிற்று.

நாற்பதாவது சருக்கம்.

ராவணன் மாரீசனை இகழ்ந்து வெருட்டித் தன் மதப்படி துணையாகும்படி யுடன் படுத்தியது.

அநந்தரம் ராவணன் இவ்வண்ணம் மாரீசனுரைத்த வாக்கியத்தை யாயுள்மாண்டவன் மருந்தைப்போல மனத்துட் கொள்ளாமல், இதமுரைத்த அம்மாரீசனை நோக்கி, ஆயுள்மாளுங்காலங் கிட்டினமையின், வன்மொழி மொழியலுற்றனன்; கேளாய் மாரீசா! நீ என்னிடத்தி லெனக்குப் பிரியமல்லாச் சொற்களை இப்போது மொழிவது ஊஷரபூமியில் விதை விதைப்பதுபோலப் பயனற்றதாகும்; உன்னுடைய வாக்கியங்களினுல், யான் ராமனுக் கஞ்சி மீளுவேனே? அவன் பாப சீலனும், மூர்க்கனும், மானிடனும், சஹாய மற்றவனு மாதலின், அவன் போரிலெனக்கு நிகராகுவானே? அவன் ஒரு பெண்வார்த்தை கேட்டு ஆராயாமல், தாய் தந்தை ராஜ்ஜியம் நட்பினர் முதலிய வெல்லாரையுந் துறந்து, விரைவாகக் காடு வந்து சேர்ந்தனனே? அவன் மூர்க்கனே யல்லனோ? அன்றியும், அவன் கரனையுங் கொலை செய்தமையின், அவனுக் குயிரினு மினியளான சீதையை யான் உன்னெதிரில் அவசியமாய் எடுத்தோடிவருவேன்; இவ்வண்ணம் யான் மனதிற்றி லுறுதிகொண் டிருக்கின்றேன்; அவ்வுறுதியை இந்திரன் முதலிய தேவாஸுரர்களாலும் விடுவிக்க முடியாது; யான் இவ்வண்ணஞ் செய்வது நலமா? தீதா?

என்று வினவி இருப்பேனாகில், நீ இவ்வண்ண மெனக் கபாயத்தையோ? உபாயத்தையே உரைசெய்யவேண்டும்; யான் விதித் திவ்வண்ணஞ் செய்யென உரைசெய்கையில், நீ இவ்வண்ணம் மொழிந்தது மதியற்றது; யாவனொருவன் செல்வமுற்று வாழ்வுற விருப்பங்கொள்வானோ? அவன் வேந்தன் கேட்டதற்குக் கைகுவித் துடன்பட்டு, பதிலுரைக்கவேண்டுமே யல்லது, இவ்வகையாகமொழியத்தக்கவனல்லன்; உரைசெய்யுமிடத்திலும் வேந்தனுக் கனுகூலமாகவும், இதமாகவும், இனிதாகவும், மெதுவாகவும், உபசாரத்துடன் மரியாதையாக உரைக்கவேண்டும்; பூஜைக்குரிய ராஜன் தன்னை எதிர்த் துரைத்த மொழியைச் செவிகொடுத்துக் கேட்டு, மகிழ்ந் தாதரஞ்செய்யான்; அடா மாரீசா! ராஜர்கள் அக்கினியின் வெம்மையினை யும், இந்திரனுடைய விக்கிரமத்தையும், சந்திரனுடைய தண்மையையும், வருணனுடைய தண்டத்தையும், தருமனுடைய அருளையு மடைந்து சிறப்புற் றிருக்கின்றனர்கள்; ஆதலின், அரசர்கள் எல்லாத் தருணங் களிலும் ஆதரஞ்செய்து பூஜிக்கத்தக்கவர்கள்; நீயோவெனில், தருமத் தைத் துறந்து, மோஹமடைந்து, அதிதியாக வந்த என்னைத் துர்மார்க்க மாய் வன்மொழிமொழிந் திகழ முயன்றனை; யானுன்னை இவ்விஷயத்தில் குணதோஷங்களையாயினும், யாதுசெய்யின் தகுமென்றாயினும், வினவு கின்றிலேன்; யான் உரைத்தது என்னுடைய சிறந்த இக்காரியத்தில் துணையாயிருந் துதவிசெய்யவேண்டுமென்றதேயன்றோ? அந்த உதவி யாவது எத்தன்மைத்தோ? அதனை மொழிகின்றேன் கேளாய்; நீ ரஜதமய மான புள்ளிகளையுடைய பொன்மானுருவாகி அந்த ஆசிரமத்தில் சீதையி னெதிரி லுலாவுக; அங்குச் சீதையை யாசையுறும்படி செய்து, ராம லக்ஷ்மணர்களைப் புறப்படுத்திப் பின்புன் மனப்படி செல்லுக; பொன் மானுருவமடைந் ததாகிய உன்னைச் சீதை கண்ணுற்று, இதனைப் பிடித் தளிக்கவென்று ராமனை ஏவுவாள்; அவ்வண்ணம் ராமன் உன்னைத் தொடர்ந்து வருகையில், நெடுந்தூரஞ் சென்றபின்னர், அந்தோ? ஸீதா! அந்தோ? லக்ஷ்மண! என்று ராமனுரைத்தாற்போ லுரைசெய்; அம் மொழியைச் சீதைகேட்டு ராமனுக்கேதோ தீங்கு நேர்ந்ததென் றெண்ணி, லக்ஷ்மணனைப் போய்ப் பார்த்துவரும்படி ஏவுவள்; லக்ஷ் மணனும் அவ்வண்ணமே அண்ணன்மீதுள்ள நேசத்தினால் செல்வான்; இவ்வண்ண மிருவரு மின்றிச் சீதை தனித் திருக்கையில், இந்திரன் சசி யைப்போல யானவளைக் கொணர்ந்து விடுவேன்; இவ்வண்ணம் நீ யுதவி செய்து பின்பெங்கேயாகிலும் செல்லுக; என்னுடைய ராஜ்ஜியத்தில் பாதிராஜ்ஜிய முனக்களிப்பேன்; ஆதலின், இக்காரியம் நிறைவேறும்படி நல்வழிபற்றிச் செல்லுக; யானும் உன்னைப் பின்றொடர்ந்தே தேரூர்ந்து தண்டகாவனம் வந்து சேர்வேன்; யானிவ்வண்ணம் போரின்றி, ராமனை வஞ்சனை செய்து சீதையைப் பறித்துக்கொண் டுன்னுடன் கூடி லங்காபுரி சேர்வேன்; நீ இதற் குடன்படாயாகில், யானிங் கிப்பொழுதே யுன்னைக்

கொலே செய்வேன்; ஆதலின், இக்காரியத்தைப் பலாத்காரத்தினுலாவது செய்யப் போகின்றனே; ராஜனே எதிர்த்து நடப்பவன் ஒருக்காலும் இன்படுரான்; நீ மானுருக்கொண்டு ராமனுக் கெதிரில் செல்வாயாகில், நீ இறக்கினும் இறப்பாய்; உய்யினும் உய்வாய்; நீ இப்பொழுதெதிர்த் துரைப்பாயாகில், யானுன்னே யுடனே கொல்வ துண்மை; நீ என் சொற்படி கேட்கி னிறப்பதோ சந்தேஹம்; என் சொல்லே மறுக்கின் இறப்பதோ நிச்சயம்; இவ்விரண்டில் எது நலமோ நீயே மதியினுல் நன்காராய்ந்து, எது நலமாகுமோ? அதனேயே நீ செய்க; என்றிவ்வகையாக ராவணனுல் மாரீசன் உரைத்துப் பயமுறுத்தப்பட்டனன்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பதாவது சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தொன்ருவது சருக்கம்.

மாரீசன் மீளவும் ராவணனே நோக்கித் துயர்ந் துரைத்தது.

ராவண னிவ்வண்ணம் *வேந்தன்போலப் பிரதிகூலமாக மொழிகையில், மீளவும் மாரீசன் ராவணனே நோக்கிக் கோரய் ராக்ஷஸர் கோமானே! எந்தப் பாவி யுனக் கிவ்வண்ணம் தீச்செயல் புரிந் தழியும்படி யுபதேசம் செய்தனன்? இதனுல் புத்திர மித்திர களத்திராதிகளுடன் நீ யழிவாய்; எந்தப் பாவி நீ இன்புற்று வாழ்ந்திருப்பதைப் பொறுக்கின்றிலன்? எவன் உபாயமாக யமலோகத்தின் வழியை நல்வழியென மொழிந்தவன்? உன்மீது பொருமையும், பகையும் கொண்டவர்கள் தாம் நேராக வெதிர்த் துன்னே வெல்ல வொண்ணுமல், இதஞ் செய்பவர்போலப் பலவானுடன் உனக்குப் பகைமூட்டி, உன்னேக் கொல்விக்க நினேக்கின்றனர்கள்; நீ யுன்னுடைய தீச்செயலினுலேதானே யழியும்படி எந்தப் பகையாளி யுனக் கிதம்போ லுரைசெய்தான்? நீ இவ்வண்ணம் நல்வழி கடந்து செல்லுகையிலும், இதமுரைத் துன்னேத் திருப்பாமல் அழிந்திறக்கினு மிறக்கவென் றுன்னே யாவர் உபேக்ஷை செய்கின்றனர்களோ? அந்த மந்திரிகள் கொலேக் குரியர்களாயினும், கொல்லப்படுகின்றிலர்கள்; அமைச்சர்கள் நல்லோர்களாயின், தன்னிச்சையாய்த் தீச்செயல் புரிய முயன்ற உன்னேத் தடுக்காம லிருந்தனர்க ளந்தோ! ஸசிவர்கள் அறம்பொருளின்பம் புகழ்களேயும், ராஜனருளினுலேதானே யடைகின்றனர்களல்லரோ? ராஜனருளில்லானுயினும், தன்னிச்சையாய்த் தீச்செயல் புரிவானுயினும், அவர்களுக் கவையெல்லாம் பயனற்றன வாகின்றனவல்லவோ? அரசனுடைய தீச்செயலினுல் மற்றுள்ள ஜனங்களும் துன்

புறுகின்றனர்கள்; தருமம் புகழ் முதலிய யாவும் அரசனடியாக வருவன வாதலின், ராஜர்கள் தீச்செயல் புரியாதிருக்கும்படி யாவரும் செய்யக் கடவர்கள். ராஜன் கொடியனாயினும், பிரதிகூலனாயினும், விநயமற்றவனாயினும், அரசுசெய்ய வல்லவனாகான்; எந்த மந்திரிகள் கெட்ட ஆலோசனை யுற்றவர்களோ? அவர்கள் துன்பம் நேருங்காலையில், வேந்தனுடன் கூடிக் கடுவேகமுள்ள குதிரைகள் திறமையற்ற பாகர்களுடன் கூடி மேடு பள்ளமுள்ள விடங்களிற்போல வீழ்ந்தழிவார்கள்; உலகினில் பற்பல நல்லோர்களும் பிறர் செய்த பிழையினா லழிந்திருக்கின்றனர்கள்; பிரஜைகள் கொடிய ராஜனால் பாதுகாக்கப் படுகின்றவர்களாயினும், நரியினால் பாதுகாக்கப்பட்ட ஆடுகள்போல அழிவார்கள்; ராக்ஷஸர்கள் யாவரும் விரைவி லழிவார்களென்பதில் சிறிதேனும் ஐயமிலது; அவர்களுக் கிறையாகிய நீ கொடியனும், கெடுமதியினனும், காமுகனு மாயினை யல்லையோ? யானு மிங்குன்னால் மரணமுறுகின்றேன்; காகதாளீயமாக (காகம்வரவும் பனம்பழம் விழவும் காகம் தற்செயலாய் வீழ்ந்துடைந்த அப்பழத்தை யுண்டது போல) யானிங்கிருக்கத் தற்செயலாய் உன்னா லெனக்கிந்த ஆபத்து நேர்ந்தது; யானிறக்கின்றேனேயென்று யான் சிறிதுந் துன்புறுகின்றிலேன்; நீ சேனைகளுடன் விரைவி லழிவாயே யென்றே மிகவும் துன்புறுகின்றேன்; ஸ்ரீராமன் என்னைக் கொலை செய்துவிட் டுடனே யுன்னையும் கொல்வான்; யான் ஸ்ரீராமனா லடிபட்டு இறக்கின்றமையின், தீவினை யழிந்து நல்வினையனாகிப் பொன்னுலகமடைவேன்; யான் ஸ்ரீராமனுக்குக் கட்புலனாகுமளவே எனக் காயுளென வுணர்க; அவனைக் கண்டவுடனே யானழிந்தேனென்று நம்புக; சீதையைப் பறித்து வந்த பின்பு, நீ யுன்னையும், இனத்தார் சுற்றத்தார்களுடன் அழிந்தவனாகவே எண்ணுக; நீ என்னுடன் சீதையைக் கொணர்வாயேயாகில், நீயு முய்யாய்; யானுமுய்யேன்; இனத்தார் சுற்றத்தார்களு முய்யார்கள்; இலங்கையு மழியும்; யானிவ்வண்ண முனக் கிதங்கருதி யுரைத்த இந்த என் வாக்கியத்தை நலமெனக் கேட்டு மகிழ்கின்றிலை; சுளிக்கின்றனை; ஆயுள்மாண்டவர்கள் நட்பினர்களுரைக்கு மிதத்தைக் கேட்கின்றிலர்களந்தோ? என்று பலவகையாகப் பயமுறுத்தியும், இதங்காட்டியும், கூறி முடித்தனன்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்தொன்றாவது சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்திரண்டாவதுசருக்கம்.

மாரீசன் மானுருக்கொண்டு ஸ்ரீராமபிரானிட மேகியது.

இவ்வண்ண முரைத்த மாரீசன் மீளவும் ராவணனை நோக்கி, அவன் வாக்கியத்திற் கிசையாவிடின், இப்பொழுதே கொலை செய்வானேயென்றும், செல்லின், அங்கு ராமன் கொல்வானேயென்றும் நினைந்துகொண்டும்; வேறு கதி யின்மையால், செல்வோம் வாராயென்றுரைத்து, மேலும் கேளாய் ராவணா! யான் மீளவும் ராமன் கண்ணில் தென்படுவேனாகில், உடனே என்னுயிர் மாய்ந்ததே? ஸ்ரீராமனைச் சினமுறுத்தி எதிர்த்தபினொரு வனும் பிழைத்து மீளான்; ஆயுள்மாண்ட உனக்கு யானும் நிகராயினேன்; நீ இவ்வண்ணம் தீயோனாகுகையில், யான் என்செய்யத் தக்கது; யானிப் படியே செல்வேன்; உனக்கு நலமுண்டாகுக; என்று கடையில் உடன் பட் டுரைத்தனன். ராவணனு மதுகேட்டு மகிழ்ந் தவனைத் தழுவி, அடா மாரீசா! இப்பொழுதென் மனப்படி வீரத்தன்மையுற்று மொழிகின்ற மையின், இப்பொழுதே மாரீசனாகின்றனை; இதற்கு முன் வேறோரரக்க னாயினை; மணிகளிழைத்தும், பிசாசங்கள்போன்ற முகங்களையுடைய கோவேறு கழுதைகள் கட்டியும், அழகிய என்னுடைய இத்தேர்மீ தேறுக; என்னுடன் அங்குச்சென்று, சீதையை யாசையுறுவித்து, வஞ்சனை செய்த பின்பு, உன்னிச்சையின்படி செல்லுக; ராம லக்ஷ்மணர்களின்றிச் சீதை தனியே யிருக்கையில், யானும் அவளை எடுத்தோடி இலங்கை சேர்வே னென்றனன். அநந்தரம் ராவண மாரீசர்க ளிருவரும் தேவவிமானம்போல விண்ணிடையில் செல்லவல்ல அத்தேர்மீதேறி, அங்கிருந்து புறப்பட்டு விரைவாகச்சென்று, பற்பல நாடுகளையும், நகரங்களையும், வனங்களையும், நதிகளையும், மலைகளையும், பட்டணங்களையும், கிராமங்களையும், அக்கிர ஹாரங்களையும் கண்ணுற்றுக்கொண்டே தண்டகாரணியஞ் சேர்ந்து, ஸ்ரீராமாச்சிரமத்தைக் கண்டு தேரினின்று மிறங்கினர்கள்; அப்பொழுது ராவணன் மாரீசன் கையைப் பிடித்துக்கொண்டு அவனை நோக்கி, அடா மாரீசா! இதோ பார் வாழைகளடர்ந்த ராமாச்சிரமங் காணப்படுகின்றது; யாமிங்கெதன்பொருட்டு வந்தோமோ? அக்காரியத்தை நிறைவேற்றக் கடவை; என்று மீளவும் வேண்டி யுரைத்தனன். உடனே மாரீசனும் இந்திரநீலமயமான கொம்பு நுனி யுடையதும், வெண்மையுங் கருமையுஞ் சேர்ந்த முகவொளியுற்றதும், செந்தாமரைபோலவும், உற்பலம்போலவும் விளங்கும் முகமுடையதும், இந்திரநீலம்போன்ற வண்ணமும், உற்பலம் போன்ற உருவமுமமைந்த செவியுற்றதும், கொஞ்சமுயர்ந்த கந்தரமுடை யதும், இந்திரநீலம்போன்ற கீழுதடு பொருந்தியதும், குந்தம் சந்திரன் வச்சிரம் இவைகள்போன்ற வயிற்றை யுடையதும், இலுப்பைப்பூவினுக்கு

நிகரான பார்சுவங்களையுடையதும், தாமரைமலர்த்தாதுகளுக்கு நிகரான தும், வைடூரிய ரத்தினத்தை நிகர்த்த குரங்களையுடையதும், நுண்ணிய முழங்கால்களை யுடையதும், மிகவு மிசைந்த அவயவங்களை யுடையதும், இந்திராயுதத்தை நிகர்த்த புச்சத்தைமேலசைப்பதும், மனத்துக் கினிய வண்ண முடையதும், பற்பல மணிகள் பொருந்தியதுமாகிய மானுருவங் கொண்டு, தன்னொளியினு லந்த ஸ்ரீராமாசிரமமெங்கும் விளங்கச்செய்பவ னாகிப் பிராட்டியை யாசைப்படுத்தி வஞ்சிப்பதன் பொருட்டுப் புற்களை மேய்ந்துகொண்டும், மரங்களின் தளிர்களை முறித் துண்டுந் திரிந்து, வாழைத்தோட்டத்திலும், கோங்குமரங்களிலும், அங்கு மிங்குமாகச் சஞ்ச ரித்து, மெதுவாக நடந்து ஸ்ரீராமாசிரமத்தினருகில் முன்சென்றும், மீண்டும் விரைவாக வோடியும், மீண்டெழும்பியும், சிலவிடத்தில் குதித் தும், சிலவிடத்தில் துள்ளியும், சிலவிடத்திலுட்கார்ந்தும், சுற்றுமோடியும், ஸ்ரீசீதாபிராட்டி தன்னைக் காணும்பொருட்டுப் பலவிதமாக விளையாடினன்; இம்மானுருவை யங்குள்ள மான்களெல்லாங் கண்டு, அருகிலோடிவந்து மோந்துபார்த் துடனே யச்சங்கொண்டு, பத்துத் திசைகளிலு மோடின; இம்மானுரு வமைந்த மாரீசனும் அவைகளைக் கொன்று தின்பவனுயினும், தன் தன்மையை மறைப்பதன்பொருட்டு, அவைகளைத் தின்னுமல் பார்த் திருந்தனன்; அந்தத் தருணத்திலேதானே சீதாபிராட்டியார் நறுமலர்களைக் கொய்வதன் பொருட்டுப் பூந்தோட்டத்தில் வந்து, மலர்களைக் கொய்து, கொண்டு வருகையில், மிகவும் அழகுற்ற அம்மாயா மிருகத்தைக் கண்டு, வியப்படைந்து, பெரும்பாலும் பார்த்து நின்றனர்; அம்மாயா மிருகமும் இவரைக் கண்டு மிக விநோதமாக விளையாடி யவ்விடத்தைத் திகழ்வித்துப் பிராட்டியையும் மகிழ்வித்துத் தன்மீது விருப்பமுறச் செய்தது; பிராட்டி யாரும் காணுதுகண்ட அம்மானைநோக்கி, மிக வியப்பும், மகிழ்வுங்கொண்டு அதனைப் பிடிப்பித்துத் தம்மாசிரமத்திலே தாமே வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினர்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்திரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்துமூன்றாவது சருக்கம்.

இளையபெருமாள் அம்மானை மாரீசனே யாகவேண்டுமென்றுரைசெய்தும், பெருமாள் பிராட்டியாரது சொற்படி யதைப்பிடிக்கத் திருவுளங்கொண்டு, பிராட்டியாரைப் பாதுகாத்திருக்கும்படி திருத்தம்பிக்குக் கட்டளையிட்டருளியது.

அநந்தரம் நறுமலர் கொய்துகொண்டிருந்த பிராட்டியும் அந்த மானைக் கண்டு, ராமலக்ஷ்மணர்களைக் கூவி அழைத்துக் காட்டி விரும்பினர். ஸ்ரீராம லக்ஷ்மணர்களும் அங்கெய்தி அம்மானைக் கண்டனர்கள். அப்பொழுது இளையபெருமாள் பெருமாளை நோக்கி, எம்மையரோ! முன்பு மானுருக் கொண்டு வந்து தப்பிப் பிழைத்தோடின மாரீசனே இப்போதும் இம்மானாக வந்திருக்கின்றானென யான் எண்ணுகிறேன்; பற்பல ராஜர்கள் வேட்டையாடக் காடு சென்று மானுருக்கொண்ட இப்பாவியினால் கொலைசெய்யப் பட்டிருக்கின்றனர்கள்; இம்மாரீசன் மிகவும் மாயை செய்பவன்; இம்மான் மாரீசனுடைய மாயையேயன்றி, வேறன்று; இது கந்தர்வ புரத்துக்கு (வானிடையில் பல உருவாகக் காணப்பட்டுக் கணத்தி லழியும் மேகத்திற்கு) நிகரானதேயன்றி, உண்மை யன்று; இத்தன்மையதாகிய மான் இப்புவியிலேயே யில்லை; ஆதலின், இது மாயை யென்பதற்குச் சிறிதும் சந்தேஹமில்லையென்று உரைசெய்தனர். பிராட்டியார் அதுகேட்டு இளைய பெருமாளைத் தகைந்து மைத்துனா! உன் சொல்லிங்கமையாதென்று மறுத்துப் பெருமாளை நோக்கி, எம்பிராணநாதரோ! இம்மான் மிக வழகியது; என் மனத்துக் கினியது; இதனைப் பிடித்துக்கொண் டெழுந்தருளுக; இது யாம் விளையாடுவதற் குபயோகமாகும்; இவ்வாசிரமத்தில் மிருகம், சிருமரம், சமரம், கரடி, புள்ளிமான், குரங்கு, கின்னரம் முதலிய விலங்குகள் மிக வழகுற்றனவாகத் திரிகின்றன; ஆயினும், இந்த மானுக்கு நிகரான மானை யான் முன் பெங்கும் கண்டிலேன்; இஃது ஒளியினாலும், பொறுமையினாலும், தேஜஸ்ஸினாலும், மற்ற மிருகங்களினுஞ் சிறந்தது; இதனது ரூபமும், காந்தியும், ஒலியும் மிக வினியன; இது என் மனத்துக்கு மிகவு மினியதாகி, என் மனத்தைக் கவர்கின்றது; இதனைத் தேவர் உயிருடனே பிடித் தெழுந்தருள்வீராகில், மிகவும் ஆச்சரியமுறத்தக்க தாகும்; யாம் வனவாஸந் தீர்ந்து திருவயோத்திக்குச் செல்லுங்காலும், இதனை யுடன் கொண்டுபோனால், அங்குள்ளோ ரெல்லோருங் கண்டு வியப்புறுவார்கள்; இதனை யுயிருடன் பிடிப்பது அரிதாயினும், இதனைக் கொலை செய்து இதன் தோலைக் கொணர்க; தருப்பாஸனத்தின்மே லிந்தத் தோலைப் பரப்பி வீற்றிருக்க விரும்புகின்றேன்; குலமகளிர்கள் கணவ

னுக்குக் கட்டளை செய்வது மிகத் தகாச்செய லாதலின், யான் தேவரை இவ்வண்ண மேவுதல் மிகக் கொடியதும், தகாதது மாகின்றது ; ஆயினும், இதன் அஜினத்தைக் கண்டு வியப்படைந் திவ்வண்ணம் மொழிந்தேன் ; இம்மான் பொன்னின் வண்ணம் பொருந்தியதும், இந்திரநீலம்போன்ற கொம்புகளை யுடையதும், பாலசூரியன்போல வொளிசெய்கின்றதும், விண்மீன்களைப்போன்ற புள்ளிகளுள்ளதுமாகி யிருக்கின்றதன்றோ? என்று மொழிந்தேவினர். பெருமாளும் அம்மானைக் கண்டு வியப்படைந்து ஸ்ரீபிராட்டியாரது வாக்கியத்தையுங்கேட்டு ஆராய்ந்து இளையபெருமாளை நோக்கிப் பாரடாலக்ஷ்மணா!சீதையோ இம்மானை விரும்புகின்றனள். இம்மானோ மிகச் சிறந்த உருவமமைந்திருக்கின்றமையின், மாயையேயன்றி, உண்மையெனத் தோற்றாது ; இதற்கு நிகரான மான் நந்தவனத்திலு மிலது ; சைத்திரதத்திலு மிலது ; ஆதலின், இப்புவியிலுளதாகுமோ ? நேராகவும் எதிராகவுமுள்ள இதன் மயிர்கள் முழுதும், பொன் புள்ளிகளினாலும், வெள்ளிப் புள்ளிகளினாலும், சித்திரமாக விளங்குகின்றன ; இது கொட்டாவி விடுகையில், வாயினுள் எரிகின்ற தீச்சுடர்போலவும், நீருண்ட மேகத்திடையில் மின்னுகின்ற மின்னற்கொடிபோலவும் நாவொளிவிடுகின்றது; முகம் இந்திரநீலக் கிண்ணி போன்றது ; சங்கு முத்துகளுக்கு நிகராகி வயிறு விளங்குகின்றது ; இம்மானைக் கண்ணுற்ற எவர்தாம் வியப்புறார்கள் ? இஃது எவரைத்தான் வியக்கச் செய்யாது ? அரசர்கள் மாம்ஸத்தின் பொருட்டாயினும், விநோதத்திற்காயினும், வேட்டையில் மானை யடிக்கின்றனர்களிறே ? இவ்வண்ணம் நவமணிகளும், பொன்னு மமைந்த மிக வழகிய இம்மானைப் பிடிப்பதற்குக் கேட்கவேண்டுமோ ? மணிகளையும், தங்கம் வெள்ளி முதலியவற்றையு மளிக்கத்தக்க பலவகை தாதுக்களும், காட்டில் மிக்க முயற்சியால் கிடைக்கப்படுகின்றன ; நாட்டிலுள்ளவைகளைவிடக் காட்டிலுள்ளவை அரியன வாதலின், சிறந்த பொருளாகின்றன வல்லவோ ? கோரப்பட்ட பொருள்களைச் சுக்கிரன்போலப் பெறுவதென்பதும் சிறப்புற்றதன்றோ ? ஒரு பொருளை யொருவன் எப்பொழுது கோருகின்றனனோ ? அப்பொருளை யப்பொழுதே முயற்சிசெய்து பெறுவானாயின், அப்பொருளே சிறந்ததெனவும் நீதியுணர்ந்தோர் மொழிகின்றனர்கள் ; சிறந்த பொன்மயமாகிய இம்மானின் அஜினத்தில் சீதை என்னுடன் வீற்றிருந்து மகிழ்வாள் ; மெதுவும், நுட்பமும், உயர்வும், பலவகை வண்ணமும், கரிய முனையுமுள்ள மயிருடைய கதளி யென்னும் மானின் தோலும், மெதுவும், உயர்வும், பருமனும் பொருந்திய மயிருள்ள பிரியகமென்னும் மானின் தோலும், பிரவேணியென்னும் மான் தோலும், அவி யென்னும் ஆட்டின் தோலும், மெதுவில் இம்மானின் தோலுக்கு நிகராகாவென்று யான் நினைக்கின்றேன்; புவியில் சிறந்த இம்மானும், விண்ணில் விண்மீன்களுள் சேர்ந்த மிருகசீர்ஷமென்னும் மானும், ஆகிய இவ்விரண்டுமே உலகங்களிற் சிறந்தன ; கேளாய் லக்ஷ்மணா ! ஒருகால் நீ யுரைத்தவண்ணம் மாரீசனே மாயையினா

லிவ்வுருக்கொண்டு வந்திருப்பவனாயினும், இதனைக் கொலைசெய்யவேண்டு வது அவசிய மன்றோ ? இந்தக் கொடிய மாரீசனாலேதானே முன்பு பல யோகிகள் மாயையால் கொலைசெய்யப்பட்டனர்கள் ; மற்றும் பற்பல வேந்தர்களும் வேட்டையாடுகையில், இவனால் கொலைசெய்யப் பட்டனர்க ளிறே ? ஆதலின், இவனைக் கொலைபுரியவேண்டுவதே முக்கியம் ; இவ்விடத் திலேதானே முன்பு வாதாபியானவன் ஆட்டுக்கறியாகிப் பிறரால் புஜிக்கப் பட்டு, அவர்களுடைய குக்ஷியையடைந்து, தேளின் கருவு தான் பிறக்கும் போது தாயைக் கொல்வதுபோலப் பற்பல வேதியர்களைக் கொலைசெய் தனன். இவ்வண்ண மிருக்கையி லொருநாள் அந்த வாதாபி யகஸ்தியபகவா னால் புஜிக்கப்பட்டு, அவரைப் பிளந்து வெளியில்வர முயலுகையில், அவர் இதனை யறிந்து நகைத்து, அவனை நோக்கி, அடா வாதாபி ! நீ சிறிதும் லக்ஷியஞ் செய்யாமல் பல பேர்களைக் கொன்றனை யாதலின், நீ இப்பொழு திறக்கின்றனை ; என்றருளிச்செய்து, ஜரிக்கச்செய்தருளினர். இம்மாரீ சனும் அவ்வண்ணம் என்னை வஞ்சனை செய்வானாகில், இவனும் அவன் போலவே பிழையாதிறப்பான் ; ஆதலின், நீ இவ்விடத்திலேதானே மிகவும் ஊக்கத்துடன் சீதையைப் பாதுகாத்திருக்க ; நாம் செய்வதற்குரிய செயல் கள் (ராவணாதிகளைக் கொலை செய்வது முதலியவைகள்) யாவும் இந்தச் சீதையின் அதீநங்களே யல்லவோ ? இம்மான் மாரீசனாயின், கொலை செய் வேன் ; மானேயாயின், பிடித்து வருவேன் ; யானிதனைப் பிடிக்கச் செல்வ தன் முன்னமே இந்தச் சீதை இம்மான் தோலின் மிக விருப்பங்கொண் டிருக்கின்றனள் ; பாராய் இத்னது தோல் மிகச் சிறந்திருக்கின்றமையின், இது மானாகாது ; ஆதலின், நீ சீதையுட னிங்கிருந்து மிகவும் ஊக்கங் கொண்டு வாழாய் ; யானு மொரு கணையினா லிதனைக் கொன்று தோலை யுரித்தெடுத்துக்கொண்டு விரைவாக வருவேன் ; நீ மிகத் திறமை யுள்ள வரும், நட்பினரும், மதியுடையோருமாகிய ஜடாயுவுடன்கூடிக் கணப் பொழுதாயினும் ஊக்கமற்றிராமல், நாற்புறங்களையும் பார்த்துக்கொண்டு சீதையைப் பாதுகாத்துக்கொண்டிருக்கக் கடவையென் றருளிச்செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்துமூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

இந்தச் சருக்கத்தில் பெருமாளுடைய வாக்கியங்களாலும், இளையபெருமா ளுடைய வாக்கியங்களாலும், மாரீசனே மாயாமிருகமாக வந்திருப்பதை யவர்கள் நன்குணர்ந்தார்களெனவும், ராவணாதிகளைக் கொலைசெய்வதன்பொருட்டே சீதையின் வாக்கியத்திற் குடன்பட்டனர்களெனவும் நன்குவிளங்கும்; சீதாபிராட்டியாரு மிதனை யறிந்தே யதனைப் பிடித்துவரும்படி ஏவினளெனவும் நன்கு தோன்றும் ; எங்ஙனே யென்னில், சீதை இளையபெருமாள் வாக்கியத்தைக்கேட்டுப் புன்னகையுடன் தகை ந்து, பெருமாளை நோக்கி, (ஆநயைநம்மாஹாபாஹோ க்ரீடார்த்தம்நோபவிஷ்யதி)

நாற்பத்துநான்காவதுசருக்கம்.

பெருமாள் நெடுந்தூரம் தொடர்ந்து மானுருக்கொண்ட மாரீசனைக் கொலைசெய்து மீண்டருளியது.

பின்பு பெருமா ளிளையபெருமாளுக் கிவ்வண்ணங் கட்டளை யருளிச்செய்து, பொன் பிடியுள்ள வாளைக் கச்சையி லிறுக்கிக் கட்டி, மூன்று வளைவுள்ள கோதண்டத்தையுந் திருக்கரத்திலேந்தி, அம்பறாத்தூணீரங்களையுமிருபுறத்திலு மிறுக்கி, விரைவாக மானைத் தொடர்ந் தெழுந்தருளினர். மானுருக்கொண்ட அந்த மாரீசனும், பெருமாளை வஞ்சனைசெய்பவனாகியும், பெருமாளைக்கண் டச்சங்கொண்டு மறைந்தும், மறுபடியும் கட்புலனாகியும், தன்னைக்கண் டோடிவரும் பெருமாளைக் காணுந்தோறும் நெடுந்தூரமோடியும், பின்பு கிட்டியும், சிலவிடத்தில் பாணம் பாயுந்தூரங் கடந்தும், சிலவிடத்தி லகப்படுவான்போல வாசையுறுவித்தும், அச்சங்கொண்டு கடலோரம் வரையில் துள்ளிப் பாய்ந்தும், கண்டங்கண்டமாயுள்ள மேகங்களினிடையில் வருஞ் சந்திரன்போல அடிக்கடி மறைந்தும், கட்புலனாகியும், இவ்வண்ணமே முகூர்த்தமாத்திரத்தில் பெருமாளை நெடுந்தூர மிழுத்துக்

மிகத் தோள்வலியுற்ற பெருமாளே இதனை (இம்மாரீசனை) கொணர்க; இது விளையாட்டின்பொருட்டு (நோபவிஷ்யதி) ஆகாது; நாம் விளையாடுவதற்கு இக்காட்டில் பற்பல மிருகங்களுள; ஆயினும், இதைப்போன்ற மிருகங்களைக் கண்டிலோம்; இது உண்மையான மானன்றாதலின், இதனை யுயிருடன் பிடித்துவரின், மிக வியப்பாகும்; நம்மெதிரில் போலவே ஸ்ரீபரதாழ்வான் கோஸலையார் முதலானோர்களுக்கும், நாட்டார்களுக்கும் எதிரில் இவ்வண்ணம் மாயை செயினும் செய்யும்; ஆதலினிஃது யிருடன் அகப்படாவிடினும், இதனைக் கொலை செய்து தோலைக் கொணர்க; அதன்மீதுட்கார்வேன்; (காமவ்ருத்த மிதம்ரௌத்ரம் ஸ்த்ரீணாமஸத்ருசம்மதம்) (இதம்) இம்மான் (ரௌத்ரம்) கொடியது; (காமவ்ருத்தம்) நீதியற்றுப் பாவச்செயல் புரிவது; (ஸ்த்ரீணாம்) பெண்களுக்கு (அஸத்ருசம்) தகாதது; ஆயினும், இந்த ஸத்வத்தின் சரீரத்தினால் எனக்குக் குதூஹல முண்டாயிற்று; இதனைத் தேவர்களு மாராய்ந்து செய்க; என்று மொழிந்தன ரல்லரோ ? ஆதலின், இம்மூவர்க்கும் இதனது உண்மை தெரியுமெனவும்.—

கடையில் பெருமாளும் இளையபெருமாளை நோக்கி, (பச்யலக்ஷ்மணவைதேஹீம் ம்ருகத்வசிகதஸ்ப்ருஹாம்) அடா தம்பி! சீதையை இம்மான் தோலில் (கதஸ்ப்ருஹாம்) ஆசையற்றவளாகவே (பச்ய) அறி, என்று சீதையின் பாவத்தையும் வெளிப்பட வருளிச்செய்தனரெனவும், முடிவில் (ப்ரதக்ஷிணோநாதிபலேநபக்ஷிணா ஜடாயுஷாபுத்திமதாச) என்று ஜடாயுவின் பெயரை எடுத்தமையாலும், நாம் தூரத்திற் சென்றபின், ராவணன் சீதையை எடுத் தோடுகையில், ஜடாயு ராவணனுடன் போர் செய்வா னென்பதும், பெருமாள் முன்புணர்ந்தே அருளிச்செய்தனரெனவு முணர்க.

கொண்டு போயினன்; பெருமாளு மிவ்வண்ணம் மாரீசனுல் நெடுந்தூர மிழுக்கப்பட்டுத் திருவுளஞ்சீறி, இலைநிழலுற்ற புற்றரையில் நின்றருளினர். அம்மானும் காட்டிலுள்ள மிருகங்களினுல் சூழப்பட்டுப் பெருமாளருகில் மீளவும் வந்தது; பெருமாள் பிடிக்க வருகையில், விரைவாகவெழும்பித் தூரஞ்சென்றும், பயங்கொண்டு மறைந்தும், மீளவும் மரங்களினிடையி னின்றும் தோன்றிக் கட்புலனுகியும், பெருமாளை யலைத்தது; பெருமாளும் இவ்வண்ணம் இது அலைப்பதைக்கண்டு முனிந் தத்னைக் கொலைசெய்ய நிச்சயித்து, இரவியின் கிரணம்போல வொளிவிடுகின்ற சூரிய கணையை வலிய வில்லில் தொடுத்து, பிரஹ்மாஸ்திர மந்திரத்தால் அபிமந்திரித்து வலுவாக இழுத் தெய்தனர். உடனே யந்த அஸ்திரமும் அந்தப் பொய்ம்மானினுடலைப் பிளந்து கொண்டு மாரீசனுடைய மார்பினில் பாய்ந்து பிளந்து புதைந்தது; உடனே யவன் பனைமரவுயர மெழும்பித் தரையில் வீழ்ந்து கோரமாகக் கூவி யானிப்பொழுது யாதுபாயஞ்செயின், சீதை விரைவாக லக்ஷ்மணனை இங்கனுப்புவாள்; தடையின்றி, ராவணனும் சீதையை எடுத்தோடுவானென்று ஆலோசனைசெய்து தேர்ந்து, அந்தோ? சீதையே! அந்தோ? லக்ஷ்மணு! என்று ஸ்ரீராமபிரானே யாயுள்மாண் டழுதாப்போலக் கூச்சலிட்டு, ஆயுள்மாண்டு மானுருவை விட்டு நவமணிகளிழைத்த புஜகீர்த்தி யுடையதும், பலகலனு மணிந்ததும், பொன்மாலை பூண்டதும், நீண்ட கோரப்பல்லுடையதும், மிகப் பயந்தருவதுமாகிய தன்னுடைய நிஜரூபத்தை யடைந்து, பாணவேதனையினுல் துடித்து, மரண மடைந்தனன். பெருமாளும் இவன் இவ்வண்ண மிறந்ததைக் கண்டு சீதையைச் சிந்தித்து, இம்மான் உண்மை யன்று; மாரீசன் செய்த மாயையே? ஆதலி னிம்மானைப் பிடிக்க வேண்டுவதில்லை; என்று முன்பு லக்ஷ்மணன் உரைத்த வாக்கியமே யதார்த்த மாயிற்றேயென்று எண்ணி, என்னை லவ்வண்ணமே கொலைசெய்யப்பட்ட இந்த மாரீசனும் என்னுடைய கண்டவொலிபோலக் கூவி யழுதனனே? இதனைச் சீதையும் லக்ஷ்மணனுங்கேட்டு என்செய்வார்களோ? என்றெண்ணி, அச்சத்தினுல் மயிர்க்குச்செறிந்து கடுந்துயருற்று, மற்றொருமானையும் அடித் ததன் மாம்ஸத்தை எடுத்துக்கொண்டு மீண்டு ஜனஸ்தானத்தை நோக்கி, விரைவாகப் புறப்பட் டெழுந்தருளினர்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்துநான்காவது சருக்கம்

முற்றிற்று.

இந்தச் சருக்கத்திலும் சீதை லக்ஷ்மணனை யனுப்பாளோ வெனவும், லக்ஷ்மணன் அவள் சொற்படி வாரானே வெனவும், பெருமாள் சிந்தித்துத் துயருற்றன ரெனவே யுணர்க.

நாற்பத்தைந்தாவது சருக்கம்.

பிராட்டி இளையபெருமாளை முனிந்தவள்போல வன்மொழிமொழிந் தனுப்ப இளையபெருமாளும் பிராட்டியைத் தனியே விட்டுப் பெருமாளை நோக்கி, எதிராகச் செல்லுதல்.

இங்கே பிராட்டியும் மாரீசனிட்ட கூக்குரலைக் கேட்டுப் பெருமாள் தொனிக்கு நிகராக விருப்பதை யறிந்து, இளையபெருமாளை நோக்கி, மைத்துனரே! நீர் விரைவாகச் சென்று உம்மையனைக் காண்க; மிகத் துயருற்றுக் கூவுகின்ற உம்மையரின் தொனியைக் கேட்டபின்னர், என் னுயிர் என்னிதயத்தில் நிலைக்கின்றிலது; நீர் சென்று உம்மையனைப் பாதுகாத் தருள்க; உம்மையர் தஞ்சம் வேண்டிக் கூவுகின்றமையின், நீர் விரைந்தோடுக; காளை சிங்கங்களின் வசத்தி லகப்பட்டாற்போல உம்மையர் அரக்கர்களது வசத்தி லகப்பட்டனர்போலும்; என்று செல்லும்படித் தூண்டி ஏவினர். இளையபெருமாளதுகேட்டுப் பெருமா ளுடைய திறமையையும், பிராட்டியையே பாதுகாத்திருக்கும்படி யவர் தமக்குச் செய்த கட்டளையையும், மாரீசன் கபடத்தையும் ஆராய்ந்து, செல்லாது நின்றனர்; பிராட்டி யதுகண்டு மிகச் சுளித்து, இளையபெரு மாளை நோக்கி, மைத்துனரே! நீரிதுகாறும் நட்பினர்போலிருந்தும், உம்மையர்க்கு நீர் மாற்றுத்தாய் குமாரராதலின், பகையாளிபோலக் காணப்படுகின்றீர்; அல்லீராகில், உம்மையரிவ்வண்ணந் துன்புற்றிருக் கையிலுஞ் செல்லீரோ? நீரென்னை யடைவதன்பொருட்டு ஐயரிறக்கவே நினைக்கின்றீர் போலும்; என்மீதுமக்கு வேட்கையிலதாயின், நீரிப்பொ ழுதும் செல்லீரோ? என் பர்த்தா துன்புறுவதே யுமக்குப் பிரியமென நினைக்கின்றேன்; அவர்மீதுமக்கன்பேயிலது; ஆதலாலேதானே நீர்சிந்தை யின்றி, இங்கு நிற்கின்றீர்; என் பிராணநாயகர் இறந்தபின், இங்கென்னா லுமக்கு யாதுபயன் கிடைக்கும்? என்று கடுமொழிகள் கூறினர். இளையபெருமாளும் இவ்வண்ணந் துயருற்றுக் கண்ணீர்பெருக்கிக் கொடு மைகொண்டுரைத்த வாக்கியத்தைக் கேட்டுப் பிராட்டியாரை நோக்கிக் கேளீர் அன்னையே! உமது பர்த்தாவாகிய என்னையர் பன்னகாசுர கந்தர்வ தேவமானுஷ ராக்ஷஸாதிகளெல்லோரும் ஒன்று கூடி எதிர்த் தடர்க் கினும் வெல்லப்படுவரோ? இவ்விஷயத்தி லையமேயிலது? போரில் என்னையனை எதிர்த்து நிற்பவன், தேவர்களுள்ளும், மனிதர்களுள்ளும், கந்தர்வர்களுள்ளும், பறவைகளுள்ளும், ராக்ஷஸபிசாச கின்னராதிக ளுள்ளும், மிருகங்களுள்ளும், தானவர்களுள்ளும், ஒருவனு மிலன்;

என்னையர் போரி லொருவராலும் கொலைசெய்யப்படுபவரல்லார்; ஆதலின், நீர் இவ்வாறு மொழியற்க; பெருமாளை விட்டுத் தேவர் தனியே எழுந்தருளியிருக்கையில், யான் விட்டுச் செல்லேன்; என்னையரது பலம் ஒருவராலும் தடைசெய்யத்தக்க தன்று; மூவுலகத்தோரெல்லோரு மொன்று சேரினும், என்னையரோ வெற்றி யுறுவாரல்லது, தோல்வி யுறார்; நீர் துயருறற்க; மகிழ்ந்திருக்க; உமது பர்த்தா! அம்மாரீசனைக் கொலைசெய்து விரைந் தெழுந்தருள்வர் பாரீர்; அந்த வொலியும் என்னையரது கண்டத் தொனியே யன்று; யான் நன்குணர்வேன்; வேறொருவன் மாயையால் அவ்வண்ணங் கூவினன். அந்த மாரீசனுடைய மாயையே யிது; கந்தர்வநகரம் போன்றது; உண்மை யன்று; என்னையர் உம்மை என்னிடத்தில் வைப்பாக அளித்து விட் டெழுந்தருளினர்; ஆதலின், யான் உம்மைத் தனியே விட் டெய்தேன்; என்னையர் கரன் முதலிய வரக்கர்களைக் கொலைசெய்தமையின், மற்றுள்ள வரக்கர்களெல்லோரும் நம்மேல் பகைகொண்டு ஸமயம்பார்த்திருக்கின்றனர்கள்; அவ்வரக்கர்களோ கொடுமைகொண்டு பலபேர்களது தொனிபோலக் கூவுகின்றனர்கள்; நீர் இவ்வண்ணஞ் சிந்தையுறற்க; என்றிவ்வண்ணம் பலவாறாக மொழிந்து தேற்றினர்; பிராட்டியார் அதுகேட்டும் மனந் தேறாம லிருமடங்கு முனிவுகொண்டு கண்கள் சிவந்து இளையபெருமாளை நோக்கி, அடா நீசா! அருளற்றவனே? கொடியவனே? குலங்கெடுப்பவனே? பெருமாளிறப்பதே யுனக்குப் பிரியமென வெண்ணுகின்றேன்; என் பதி! இறக்குகவென்றே நீ இவ்வண்ணம் ஸமாதானம்போல உரைக்கின்றனை? நீ யவர்க்குச் சக்களத்திமகனாதலின், நீ இவ்வண்ணம் நினைப்பதும் வியப்புறத்தக்கதன்று; உன்னைப் போன்றவர்கள் உள்ளத்திற் கொடுமை கொண்டும், புறத்தில் நட்பினர்போல இருக்கின்றனர்களல்லரோ? நீ என் பொருட்டே காட்டில் தனியே பெருமாளைப் பின்றொடர்ந்து வந்தனை; ஒருவேளை பரதனே பெருமாளைக் கொலைசெய்து என்னை எடுத்துவரும்படி யுன்னை ஏவி யிருக்கின்றனன்போலும், இவ்வண்ணம் உன்னெண்ணமும், பரதன் எண்ணமும், முடியுமெனக் கருதற்க; கருநெய்தல்போன்ற திருமேனி யுடையவரும், தாமரையிதழ்போன்ற திருக்கண்களை யுடையவருமாகிய என் பர்த்தாவைச் சேர்ந்தபின், மற்றொருவனை யான் காமுறுவேனோ? அடா லக்ஷ்மணா! உன்னெதிரிலேதானே யான் உயிரை விட்டு விடுவேனல்லது, பெருமாளின்றிக் கணப்பொழுதும் பிழையேனென்று மிகக் கொடுமையாக மொழிந்தனர். ஐம்புலன்களையும் வென்ற இளையபெருமாளும் சீதாதேவி மொழிந்த அந்த வன்மொழியைச் செவியுற்றுப்பிராட்டியாரைநோக்கிக் கைகுவித்துக் கேளீர்பிராட்டியாரே! நீர் மொழிந்த வல்லுரைக்குப் பதிலுரைக்க விரும்புகின்றிலேன்; நீர் எனக்குத் தெய்வ மல்லீரோ? நீரிவ்வண்ணம் மொழிந்ததும் வியக்கத் தக்கதன்று; நீரும் பெண்ணாகின்றீரல்லீரோ?—

స్వభావస్త్వేషనారీణామేవంలోకేషుదృశ్యతే
విముక్తధర్మాశ్చపలాస్తీక్ష్ణా భేదకరాస్స్త్రియః.

ஸ்வபாவஸ்த்வேஷநாரீணு மேவம்லோகேஷுத்ருச்யதே
விமுக்ததர்மாச்சபலாஸ் தீக்ஷ்ணுபேதகராஸ்த்ரியஃ.

இவ்வண்ணம் வன்மொழி மொழிவது பெண்களின் இயல்பே யன்றே? இவ்வாறே யுலகங்களிலும் காணப்படுகின்றது; பெண்கள் தருமத்தைத் துறந்தவர்களும், சபல முடையவர்களும், கொடுமை யுற்ற வர்களும், மித்திரபேதஞ் செய்பவர்களுமே யாகின்றனர்களல்லரோ? நீருரைத்த இம்மொழியைக் கேட்டு யான் பொறுக்கின்றிலேன்; அம் மொழி என் செவிகளிரண்டிலும் காய்ச்சின நாராசம்போலப் புகுந்தது; இக்காட்டிலுள்ள எல்லாப் பூதர்களும் கேட்கக் கடவர்கள்; யான் உண் மையாக நியாயத்தை யுரைத்திருக்கையிலும், இவரென்னை நோக்கி, நீதி தப்பி மொழிந்திருக்கின்றனர்; ஜனகராஜன் திருமகளாரே! நீர் இகழத் தக்கவராயினீர்; இப்பொழுதே நீர் கெடுதி யுறுக; என்மீதும் இவ்வண் ணஞ் சங்கைகொண்டு மொழிந்தீரல்லீரோ? பெண்மையென்பதே கொடியது; அது இயல்பாகவே தகாச்சொற்களை யுரைக்கச்செய்கின்றது; என்னையர் எங்கெழுந்தருளி யிருக்கின்றனரோ? அங்கே யான் செல்லு கின்றேன்; உமக்கு மங்கல முண்டாகுக; வனதேவதைகளெல்லோரும் உம்மைப் பாதுகாத்தளிக்கக் கடவர்கள். மிகவும் கோரமான அவசகுநங்க ளாகின்றனவே? யான் மீளவு மிங்கெய்தி, ஐயருடன் கூடி நீர் வீற்றிருக் கக் காண்பேனே? என்று துயருற்று மொழிந்தனர். பிராட்டியார் மீளவும் இளையபெருமாளை நோக்கி, லக்ஷ்மணு! நீ செல்லாதிருப்பாயாகில், யான் கோதாவரியில் வீழ்வேன்; உட்சுருக்கையாயினும் போட்டுக் கொள் வேன்; மலையினுச்சியினின்றாயினும் வீழ்வேன்; கடுவிஷத்தையாயினும் உண்பேன்; தீயிலாயினும் குதிப்பேன்;—

నత్వహంరాఘవాదన్యం పదాపిపురుషంస్పృశే.

நத்வஹம்ராகவாதன்யம் பதாபிபுருஷம்ஸ்ப்ருசே.

பெருமாளை விட்டு மற்றொரு புருஷனைமாத்திரம் காலினுலும் தொடேன்; என்றிவ்வண்ண முரைத்துக் கைகளினுல் மார்பிலடித்துக் கொண்டழுதனர். இளையபெருமாளும் இவ்வண்ணம் பிராட்டியார் வருந்தி யழுவதைக் கண்டு, பலவாறாக இனிய வாக்கியங்களினுல் தேற் றினர்; ஆகிலும், பிராட்டியார் மனந்தேறாமலும், இவரை நோக்கி, யாது முரை செய்யாமலும், வருந்தி யழுதனர். பின்பு, இளையபெருமாள் இனி

யிருப்பது தகாதென்றுராய்ந்து, பிராட்டியார்க்குக் கைகூப்பித் தண்டம் ஸமர்ப்பித்துப் புறப்பட்டுக் கண்மறையுமளவும், பிராட்டியாரைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு தீரங்கொண்டு, பெருமாளெழுந்தருளியிருக்கும் இடம் நோக்கிச் சென்றருளினர். *

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்தைந்தாவது சருக்கம் முற்றிற்று.

நாற்பத்தாறுவது சருக்கம்.

பிராட்டியார் முனிவேஷம் பூண்டு வந்த ராவணனை முனியெனவே எண்ணிப் பூஜைசெய்தருளியது.

இளையபெருமா ளிவ்வண்ணம் பிராட்டியாரால் வன்மொழியுரைத்தவப்பட்டுச் சினமுற்றுப் பெருமாளை நோக்கி, விரைவாகச் செல்லுகையில், இங்கே ஸமயம்பார்த்திருந்த ராவணனும் இதுவே நல்ல ஸமயமென்று மெதுவான காஷயத்தை யுடுத்துச் சிகைபொருந்திக் குடைபிடித்துப் பாதுகையேறி, இடதுதோளில் திரிதண்டத்தையும், கமண்டலுவையும் பூட்டித் துறவறத்தோன் வேஷங்கொண்டு, சந்திர ஸூரியர்களின்றித் தனியே நின்ற சந்திப்பொழுதை நள்ளிருள் கிட்டுவதுபோல ஸ்ரீராம லக்ஷ்மணர்களின்றித் தனியே யிருக்கின்ற பிராட்டியாரைக்கிட்டி, திங்களை விட்டுப் பிரிந்த ரோஹிணியைக் கொடிய அங்காரகன் காண்பது போலக் கண்டனன். அப்பொழுது ஜனஸ்தானத்திலுள்ள மரங்களும், அவனைக் கண்டு அசைந்தில; காற்றும் வீசிற்றிலது; விரைந்து பெருகு

* இளையபெருமாள் யாவு மறிந்தவராயினும், பெண்கள் கொடியவர்களென்பதை வெளிப்படுத்துவதற்காகவும், ராவணன் வந்தெடுத்துக்கொண்டு போனபின்பு, இவர் மனம் எவ்வண்ணமாகுமோவென்றெண்ணி, அவருடைய மனவுறுதியை யறிவதன் பொருட்டும், பெருமாளுடைய மாஹாத்மியத்தை வெளியிடுவதன் பொருட்டுமே தாம் பிராட்டியாரை விட்டுச் செல்லேனென்றனர். பிராட்டியாரும் தம் மனவுறுதியை யவர்க் கறிவிப்பதன் பொருட்டும், ஒருவேளை இவர் செல்லா திருப்பாராகில், இலங்கை யழிவதற் கிடமில்லையே யென்றும் கருதிச் சினமுற்றவர் போலவும், துயருற்றவர் போலவும் பாவித்து, வன்மொழி மொழிந்தனர். அதுவும் இலக்ஷ்மணரை வியாஜமாகக்கொண்டு, ராவணனை யுத்தேசித்தே இசழ்ந்தனரென வுணர்க. இவர்கள் கருத்து இவ்வண்ணமன்றாயின், இளையபெருமாள் ஏன் பிராட்டியார் வாக்கியத்தை மறுத்தனர்; பிராட்டியாரும் ஏன் மறுத்துரைத்தனர்; இளையபெருமாளும் பிராட்டியாரையும் அழைத்துக்கொண்டு ஏன் ஸ்ரீராமபிரானிடஞ் சென்றிலர்; ஆதலின், இவை யாவும் மனுஷியபாவனையெனவே யறிக;—

கின்ற கோதாவரிநதியும், அவனைக்கண்டஞ்சி, மெல்லெனப் பெருக முயன்றது; மிகவுந்தீயனுன ராவணனும் மிகவும் நல்லாராகிய சீதாபிராட்டியாரை முனியுருவங்கொண்டு கிட்டி, சனி சித்திராநக்ஷத்திரத்தை எதிர்த்துச் செல்வதுபோல வெதிர்பட்டுப் புல் மூடிய பாழ்ங்கிணறுபோல உளத்தில் தீமைகொண்டு, புறத்தி லினிமை பூண்டு, மிகப் புகழுற்றவரும், நல மளிப்பவரும், அழகிய தந்தோஷ்டங்களையுடைய முழுமதிபோன்ற முகத்தவரும், துயருற்றுக் கண்ணீர் பெருக்கி யழுபவருமாகப் பர்ணசாலையில் வீற்றிருக்கின்ற பிராட்டியாரைக்கண்டு தீயொழுக்க முடையோனுதலின், காமவேட்கைகொண்டு திகைத்து நின்று, பின்பு தேர்ந்து, வேதாந்த வாக்கியங்களை யுரைத்துக் கொண்டு, அருகில் வந்து, பிராட்டியாரை நோக்கிப் பெண் மணியே! நீ தாமரைமலரை நீங்கிய மலர்மகள் போலத் திகழ்கின்றனை; இவ்வுலகினில் உனக்கு நிகரான பெண் ஒருத்தியு மிலள்; நீ யாவள்? தங்கக்கொடி போன்றனை; பீதகவாடை யுடுத்தனை; தாமரையோடைபோலத் தாமரைமலர்மாலைபொருந்தி யிருக்கின்றனை; நீ நிலமகளோ? பூமகளோ? நாமகளோ? ரதியோ? காந்தியோ? கீர்த்தியோ? அப்சரசோ? நற்செல்வமோ? நீ யாவள்? தன்னிச்சையாய் இங்கெய்தினை; உன்னுடைய பற்கள் ஏற்றத்தாழ்வற்றனவும், நுனியுள்ளனவும், நயமுற்றனவும், வெண்மை கொண்டனவு மாகின்றன; கண்களே அகன்றனவும், அழுக்கற்றனவும், செவ்வரி படர்ந்தனவும், கருமையுற்றனவுமாகிவிளங்குகின்றன; தொடைகளிரண்டும் யானைத்துதிக்கைகள் போன்றன; குசங்களும் பனம்பழம் போன்றன; மணிவடங்களணிந்தன; அடி யழகிய புன்னகையினளே! அழகிய கண்களை யுடையவளே! நீ என் மனத்தை நதிகரையைப்போல அழிக்கின்றனை; பிடிக்குள்ளடங்கிய நுண்ணிடையினளே! நீ அழகிய கூந்தலுடையவளும், பெண்ணிலக்கணங்கள் யாவும் பொருந்தியவளு மாகின்றமையின், உன்னைப் போன்ற பெண்ணைத் தெய்வப் பெண்களுள்ளும், கந்தர்வப் பெண்களுள்ளும், யக்ஷப் பெண்களுள்ளும், கின்னரர்களுள்ளும், ஒருத்தியையும் இப் புவியில் யான் கண்டிலேன்; உன்னுடைய சிறந்த அழகும், அங்கங்களின் மேன்மையும், நற்பருவமும், இக்காட்டில் நீ தனியே வாஸஞ்செய்வதும், என் மனத்தை மயக்குகின்றன; அத்தன்மையளாகிய நீ கொடிய அரக்கர்கள் வாழ்கின்ற இவ்விடத்தில் வாழத்தக்கவளல்லே; ஆதலின், இங்கிருந்து மீளுக; உனக்கு மங்கல முண்டாகுக; அழகிய மேன்மணிமாடங்களிலும், நகரங்களினருகிலுள்ள உத்தியான வனங்களிலும், மணங்கமழ்ந்து மலர்ந்த பூந்தோட்டங்களிலும், நீ வாழ்வது தகும்; நீ யணிந்த மாலை! நீ யுண்ட உணவு! நீ யுடுத்த ஆடை! நீ மகிழ்ந் தணைந்த பர்த்தா! இந் நால்வரோ சிறப்புற்றோரென யான் நினைக்கின்றேன்; நீ ருத்திரர்களுள் சேர்ந்தவளோ? மருத்துகளுள் சேர்ந்தவளோ? வஸுக்களுள் சேர்ந்தவளோ? யாவள் உரையாய்; நீ தேவதையெனவே யான் நினைக்கின்றேன்;

இவ்விடத்தில் தேவகந்தர்வ கின்னராதிகள் ஒருவரும் வருகின்றிலர்கள்; இராக்கதர்களே பெரும்பாலும் திரிகின்றனர்கள்; இவ்விடத்தில் நீ தனியே எவ்வண்ணம் வந்தனை; இங்குக் குரங்குகளும், சிங்கங்களும், ஓநாய்களும், வேங்கைப் புலிகளும், மான்களும், கரடிகளும், நரிகளும், மற்றும் கொடிய விலங்குகளும், கழு முதலிய பறவைகளும் உலாவு கின்றன; அவைகளைக்கண்டும் நீ எவ்வண்ணமும் அஞ்சுகின்றிலை; மத மேறித் திரிகின்ற காட்டி யானைகளைக்கண்டும் நடுங்குகின்றிலை; நீ யாவள்? யாருடையவள்? எங்கிருந் தெய்தினை? இங்குறைவதற்குக் காரணம் யாது? ஏன் தனியே யிருக்கின்றனை? இவைகளை முற்று முரைசெயா யென வினவினன். பிராட்டியாரிவ்வண்ணம் ராவணனால் புகழ்ந்து வினு வப்பட்டு, அவனை யுண்மையாகவே வேதியனென வெண்ணி, அர்க்கியம் பாத்தியம் முதலிய பூஜோபசாரங்களினால் பூஜிப்பதற்காக முதன்முதல் தவிசுதந்தளித்து, பாத்தியங்கொடுத்து, அந்நமும் சித்தமாக இருக்கின்ற தென வுரைத்து, அவன் அஞ்சாமைக்குரிய முனிவேஷம்பூண்டிருக்கின்ற மையின், அமுதுசெய்ய வாரீரென மொழிந்து, காய் கனிகள் முதலிய நல்லுணவுகளையும் தந்தளித்தருளினர். பிராட்டியாரிவ்வண்ணங் கசு ழ்ந்து மொழியினும், ராவணன் தான் தன்னினத்தாருடன் மடியுங்காலம் கிட்டினமையின், அவரை எடுத்தோடவேண்டுமென்றே நிச்சயங்கொண்ட னன். பிராட்டியாரும் காடெங்கும் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண் டிருந்தனராயினும், ஸ்ரீராம லக்ஷ்மணர்களை மாத்திரம் கண்டிலராயினர்.

ஆரண்யகாண்டத்தில் நாற்பத்தாறாவது சருக்கம்
முற்றிற்று.

நாற்பத்தேழாவது சருக்கம்.

ராவணன் பிராட்டியார் வாக்கியத்தைக் கேட்டு முனிந்து, தன் திறமை யினையும், உறைவிடத்தையும், நற்செல்வத்தையுங்கூறி, அவ ரைத் தனக்கு மனைவியாகும்படியும் மொழியப் பிராட்டியாரும் அவனைச் சீறி இகழ்ந்தது.

துறவறத்தோன் வேஷங்கொண்ட ராவணனு லிவ்வண்ணம் வினவப் பட்ட பிராட்டியாரும் இவன் தவசியும், அதிதியு மாகின்றமையின், யான் உண்மை கூறுவிடின், சாபமிடுவானேவென்று அஞ்சி, முகூர்த்தகாலந் திரு வுளத்தில் எண்ணிப் பின்பு, ராவணனை நோக்கிக் கேளீர் மாயோகி! யான் மிதிலைக் கிறைவனாகிய ஜனகசக்கரவர்த்தியின் திருமகள்; சீதையென்னும்

பெயருடையேன்; உனக்கு மங்கல முண்டாகுக; ஸ்ரீராமபிரான் மனையாளாகின்றேன்; யான் திருமணஞ் செய்துகொண்ட பின்னர், திருவயோத்தியில் பன்னிரண்டாண்டு பதியுடன் கூடிச் சிறந்த போகங்களை யனுபவித்துக் கொண்டு வாழ்ந்திருந்தேன்; பதின்மூன்றாவது வருஷத்தில் என் மாமனார் என் பர்த்தாவுக்குப் பட்டங்கட்டும்படி ஆலோசனைசெய்து, அதற்குரிய பண்டங்களைச் சேர்க்கையில், கைகேயி யென்னும் எனக் கிளைய மாமியார் அச்செய்தியைக்கேட்டுத் தம் பர்த்தாவாகிய என் மாமனாரைக் கண்டு, அவர் தமக்கு முன்பளித்திருந்த இரண்டு வரங்களுக்கும், என் பர்த்தாவைக் காட்டி லனுப்புவதையும், தம்புத்திரராகிய பரதாழ்வானுக்குப் பட்டங் கட்டுவதையும் கோரி, இவ்விரண்டுவரங்களையும் நீர் எனக் களித்தருளீராகில், யானிப்பொழுது உணவும் உண்ணேன்; உறங்கலுஞ் செய்யேன்; நீர் பருகலுஞ் செய்யேன்; ராம னிப்பொழு தபிஷேகங் கொள்வானாகில், இதுவே என்னுயிர் வாழ்க்கையின் முடிவாகும்; என்று விரும்பி யுரைத்தனர். என் மாமனாரும் ஸத்தியவாதி யாதலின், அவரைப் பலவிதமாக வேண்டியும், அவருடன் படாமையினால், மிகச் சிந்தையுற்று நின்றனர். அப்பொழுது என் பர்த்தா! இருபத்தைந்து திருநக்ஷத்திர முடையவர்; யான் பதினெட்டு வயதுடையாளெனப்பட்டேன்; அப்பொழுது என் பர்த்தா! ஸ்ரீராமன் ஸ்ரீராமனென்று எங்கும் புகழப் பட்டவரும், நற்குண முடையோரும், ஸத்திய முடையோரும், தூய்மை கொண்டவரும், அகன்ற திருமார்புற்றவரும், செந்தாமரை இதழ்போன்ற திருக்கண்களை யுடையோரும், நீண்டுருண்ட திருத்தோள்களை யுடையோரும், எல்லாவுயிர்களுக்கும் இனியரும், மிகத் தோள்வலி யுற்றவருமாகி விளங்கினர். ஆயினும், என் மாமனார் காமுகராகிக் கைகேயியார்க்குப் பிரியஞ்செய்வதன் பொருட்டுத் தாம் அவரை நிராகரித்து, என் பர்த்தாவுக்கு அபிஷேகஞ் செய்வித்திலர்; அபிஷேகத்தின் பொருட்டே என் பர்த்தா! தந்தந்தையினருகிற் செல்லுகையில், கைகேயி என் பர்த்தாவை நோக்கி, அடா ராமா! உன் தந்தை கட்டளையிட்டதை யானே மொழிகின்றேன் கேளாய்; இந்த ராஜ்ஜியம் பரதனுக் களிக்கக்கடவது. நீ ஒன்பதும் ஐந்துங்கூடிய வருஷங்களில் வனத்திலுறைக; இவ்வண்ணம் நீ செய்து தந்தையைப் பொய்ம்மையினின்றும் பாதுகாத் தளிக்க; என்று நாணமற்று, மண்ணாசையுற்று மொழிந்தனர். என் பர்த்தாவாகிய ஸ்ரீராமபிரானும் அச்சமற்றவரும், தோள்வலி பெற்றவருமாதலின், அவ்வண்ணமே யாகுகவென்றுடன்பட்டுக் கைகேயியாரின் வாக்கியத்தின்படி விரதம் பூண்டு தண்டகாரணியமடைந்தருளினர்.

దద్యాన్న ప్రతిగృహ్ణీయాత్సత్యం బ్రూయాన్న చానృతం
ఏతద్బ్రాహ్మణరామస్య ధ్రువంవ్రతమనుత్తమం.

தத்யான்னப்ரதிக்ருஹ்ணீயாத்ஸத்யம் ப்ரூயான்னசாந்ருதம்
ஏதத்ப்ராஹ்மணராமஸ்ய த்ருவம்வ்ரதமனுத்தமம்.

கேட்டருளீர் அந்தணரே ! என் பர்த்தா வொருவர்க்கு வேண்டியவைகளைக் கொடை செய்வாரே யல்லது, ஒருவரிடத்தினின்றும், தாம் ஒரு பொருளைக் கோரிக்கை கொள்ளார் ; உண்மை யுரைப்பாரே யன்றிப் பொய் யுரையார் ; என் பர்த்தாவுக்கு இதுவே சிறந்த அளவற்ற விரதமாகும் ; இவர்க்குத் தம்பியும், மாற்றாந்தாய் குமாரரும், மிகத் தோள்வலி யுற்றவரும், இலக்குமணனென்னும் திருநாம முடையோருமாகிய என் மைத்துனர், இவர்க் கெக்காலங்களிலுந் துணையாகி யிருக்கின்றனர் ; ஆதலின், யாங்கள் மூவரும் கைகேயியார் பொருட்டு, ராஜ்ஜியத்தைத் துறந்து, இக்கானகஞ்சேர்ந்து, திறமையினு லச்சமின்றித் திரிகின்றனம் ; என் பர்த்தா தம்பியுடன் காட்டிலுள்ள உணவுகளை மிகுதியாகச் சேர்த்துக்கொண்டு கணப்பொழுதில் இங்கெழுந்தருள்வார் ; தேவரிங்கு முகூர்த்தகாலம் இளைப்பாறுக ; இவ்விடம் நும்மைப் போன்றவர்க ளிளைப்பாறுவதற் குரியதே ? நும்முடைய திருநாமத்தையும், மரபினையும், திருமாளிகையையும் அருளிச்செய்க ; நீர் ஒருவராக இந்தத் தண்டகையிலேன் திரிகின்றீர் ; உண்மையாக மொழிக ; என்று இனிமையாக வினவினள். கபடவேஷம் பூண்ட அக்கொடிய ராவணனும், அம்மொழி கேட்டுப் பிராட்டியாரை நோக்கிக் கேளடி பெண்மணி ! யாவனல் தேவாஸுர பன்னகர்களுடன் கூடிய மூவுலகங்களும், அச்சமுற்றுத் தவிக்கும்படி செய்யப்பட்டனவோ ? யாவன் அரக்கர்க ளெல்லோர்க்கு மிறைவனோ ? அவனே யான் ராவணனென்னும் பெயருடையேன் ; குற்றமேதுமற்ற கட்டழகி, பொன்னின் வண்ண முடையவளும், வெண்பட்டுடுத்தவளும், இனியாளுமாகிய உன்னைக் கண்ணுற்ற பின்னர், என் மனைவிகளிடத்தில் ஆசையுறுகின்றிலேன் ; யான் எல்லாவுலகங்களினின்றும், சிறந்த பெண்களை எடுத்துவந்திருக்கின்றேன் ; அவர்களெல்லோர்க்கும் எனக்கும் ராணியாகி, எனக்குப் பட்டமஹிஷி யாகுக ; உனக்கு மங்கல முண்டாகுக ; கடலினிடையில் இலங்கையென்னும் நகரியே யானுறையும் இடம் ; அது கடலினுல் சூழப்பட்டும், திரிகூட மலையினுச்சியில் கட்டப்பட்டு மிருக்கின்றது ; அவ்விடத்தில் பற்பல உத்தியான வனங்களில் என்னுடன் கூடி விளையாடுக ; அவ்விடத்தை நீ கண்ணுறுவாயாகில், இக்காட்டிலுறைய விருப்புறாய் ; பல கலன்களையுமணிந்தழகிய ஐயாயிரந்தாதிகள் உனக்குப் பணிவிடை செய்வார்கள் ; ஆதலின், நீ எனக்குப் பாரியை (ஒளியிற் சிறந்தவள்) ஆகுக ; என்று வன்மையாகக் கூறினன். பிராட்டியாரும் அம்மொழியைக்கேட்டு

யன்றி, ஸ்ரீராமன் வலுவில்சென்றடித்தனனே? நீ இப்போது ஸ்ரீராமன் பத்தினியைக் களவாடி யோடுகின்றனே; இவ்விஷயத்தில் ஸ்ரீராமனிடத்தில் குற்றம் யாதுளதோ? உரையாய்; விரைவாகப் பிராட்டியாரை விட்டு விடாய்; விடாமற்செல்வாயாகில், விருத்திராஸுரனை இந்திரன் வச்சிராயுதத்தினால் எரித்தாப்போலப் பெருமாளுன்னைத் தீக்குநிகராகக்கண்களை முனிந்து விழித்தெரிப்பார்; சீதையாரை நீ எடுத்தோடுவது நச்சரவத்தை யுத்தரீயத்தில் மறைத்தெடுத்தோடுவதுபோலவும், காலபாசத்தைக்கழுத்தில் பூட்டிக்கொண்டோடுவதுபோலவுமாகும்; இதனை நீ யறிகின்றிலையே? எந்தச் சுமையை யொருவன் சுமந்தால், அது தன்னை அழுத்தி யழிக்காமலெளிதாகுமோ? அந்தச் சுமையையே யவன் சுமக்கவேண்டுமே யன்றி, சுமப்பதற்கரிய சுமையை எடுப்பது தகாது; எவ்வளவு அன்னம் புசிப்பானாகில், மந்தஞ்செய்யாமல் ஜீர்ணமாகுமோ? அவ்வளவு அன்னமே புசிக்கக்கடவன். எந்தச்செயலைச்செயின், தருமமாகாதோ?கீர்த்திவிளையாதோ? இகழ்வேவிளையுமோ? மெய்யும்வாடித் துன்புறுமோ?அத்தன்மையதாகிய செயலை எவன்தான் செய்வான்; அடா ராவணா! நான் பிறந்து தேவமானத்தால் அறுபதினாயிரம் வருஷமானபடியால், மிகவும் மூப்புற்றிருக்கிறேன்; பிறப்புமுதல் குலமுறையாகவந்த பக்ஷிராஜ்ஜியத்தை நீதிவழுவாமல் பாதுகாத்து மீளத்தேன்; நீயோ யௌவனமுடையோனும், வில்லாளியும், கவசம்பூண்டவனுமாகின்றனை; ஆயினும், யான் பார்த்துக் கொண்டிருக்கையில், என்னை நிராகரித்து, வைதேஹியை எடுத்துக் கொண்டு துன்பற்றுச் செல்ல வல்லமை கொள்ளாய்; வேதார்த்தங்கள் முற்றுமுணர்ந்தவனொருவனிருக்கையில், அவன் எதிரில் நிலைகொள்ளாத ஹேதுவாதங்களினால் பிரமாணமான சுருதியை யழிக்க முடியுமோ? அடா ராவணா! நீ சூரனானால் என்னுடன் போர்செய்க; முகூர்த்தகாலம் நிற்க; கணப்பொழுதில் என்னால் கொல்லப்பட்டவனாகிக் கரன்போலவே தரையில் வீழ்வாய்; அடிக்கடி தைத்தியதானவர்கள் எவராலே கொல்லப்பட்டனர்களோ?அந்த ஸ்ரீராமசந்திரனே உன்னையும் விரைவில் கொல்வார்; இப்போழ்தந்த ராஜபுத்திரர்களிருவரும் நெடுந்தூரஞ் சென்றனர்களே? யானிப்போழ்து யாது செய்வேன்; அவர்களைக்கண்டச்சங்கொண்டே நீ விரைவிலிறப்பாயென்பதிலு மையமில்லை; யான் பிழைத்திருக்குமளவும், இவரை நீ எடுத்தோட வல்லவனாகாய்; உயிரை வழங்கியாயினும், மஹாத்துமாவாகிய அந்த ஸ்ரீராமபத்திரனுக்கு உபகாரஞ்செய்வேன்; தசரதசக்கரவர்த்தியும் எனக்குத் தோழராதலின், இவ்வண்ணம் அவசியம் செய்

வேன்; நில்லடா ராவணா! கணப்பொழுது பாரடா! யானுனக்குப் போரென்னும் பூஜையை யளித்து மகிழ்விப்பேன்; காம்பினின்றும் பனம்பழங்களை யுதிர்ப்பதுபோல உன்னை இத்தேரினின்றும் கீழேதள்ளி யுருட்டுவேன்; என்று தீரங்கொண்டு கெட்டியாகக்கூவி யுரைசெய்தனர்.*

ஆரண்யகாண்டத்தில் ஐம்பதாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தொன்றாவது சருக்கம்.

ஜடாயு ராவணனைப் பலவாறாக வருத்தித் தான் அவனாலறுப்புண்டு பிராட்டியாரால் சோகிக்கப்பட்டது.

ஜடாயு இவ்வண்ணம் நீதிப்படி யுரைசெய்கையில், ராவணன் கேட்டு மிக முனிந்து, இருபது கண்களிலுந் தீப்பொறிகளெழ விழித்துக் கண்கள் செவந்து ஜடாயுவை எதிர்த்தோடிவந்து போர் செய்தனன். இவ்விருவர்களுக்கும் அந்தப் போர் மிகவும் காண்போர்க்கச்சந்தருவதாகி, கீழ்காற்று மேல்காற்றிரண்டினாலும், ஒன்றுக்கொன்று மோதப்பட்ட மேகங்களின் சேர்க்கை போலவும், சிறகுகளுடன் கூடிய மாலியவந்தங்களென்னும் இரண்டு மலைகளும் போர்செய்தாப் போலவும் விளங்கிற்று; பின்பு, ராவணன் கூரிய பலவகைப்பட்ட கணைகளினால் ஜடாயுவை யடித்தனன். ஜடாயுவும் அவைகளைப் பொறுத்துக்கொண்டு மூக்கினாலும், கால்களினாலும், ராவணனைக் கடித்துக் கீறி வருத்தினர். பின்பு, ராவணன் முனிந்து மிகவுங் கொடிய பத்துச் சரங்களினால் ஜடாயுவைப் பிளந்து மகிழ்ந்தனன். ஜடாயுவும் பிராட்டியார் ராவணன் தேர்மீது அழுது வருந்துவதைக் கண்டு, அந்த பாணங்களையும் லக்ஷியஞ்செய்யாமல் விரைவாக வோடிக் கால்களினாலேதானே ராவணனுடைய வில்லையும், கணையையும்

* ராவணன் ஐம்பதுலக்ஷம் வருஷங்களுக்குக் குறையாமல் ஜீவித்தானென்பதற்குப் பல திருஷ்டாந்தங்களிருப்பதினால், ஜடாயு தனக் கறுபதினாயிரம் வயதே ஆயிற்றென்றும், தன்னைவிட ராவணன் சிறியவனென்றும் உரைத்தது பொருந்தாதென்று, தேவமானத்தால் ஜடாயு அறுபதினாயிரம் வயதுடையேனென்றுரைத்ததாகப் பொருள் கொள்ளப்பட்டது. அவருடைய வயது மனுஷியமானத்தால் இரண்டு கோடி பதினாறுலக்ஷம் வருஷங்களாகின்றமையின், தன்னைவிட ராவணன் சிறியவனென்பது அமையுமெனக் கொள்க. இதுவும் இந்த வைவஸ்வத மன்வந்தரத்திலேயே பிறந்தானென்னும் பக்ஷத்திலேதான் அமையும்; இந்த மன்வந்தரத்துக்கும் முன்பு பிறந்தானென்னும் பக்ஷத்தில்தான் அரசாட்சிசெய்த காலமே இவ்வளவென்றுரைத்தானெனப் பொருள் கொள்ளவேண்டும்;—

முறித்துத் தள்ளினர். ராவணனும் வேறுவில்லை எடுத்துக்கொண்டு சினம் மூண்டு, ஆயிரம் பதினாயிரமாகக் கணக்கிறந்த பாணங்களை எய்து ஜடாயுமேலே நிறைத்தனன். ஜடாயுவும் கூட்டினிடையிலுறையும் பறவை போல விளங்கி யந்தப் பாணங்களைக் கால்களாலும், துண்டத்தினாலும், சிறகுகளாலும் தடுத் துதைத் துதறி, விரைவாக அந்த வில்லையும், கால்களினால் முறித்துப் பக்ஷங்களினால் உதறித் தள்ளிவிட்டு, பிசாசம்போன்ற முகங்களையுடைய தேரில் கட்டிய கோவேறு கழுதைகளையும் கொன்று, சிறந்த அத்தேரையும் முறித்து, வெண்குடையையும், வெண்சாமரைகளுடன் முறித்துத்தள்ளித் தன்னைப் பிடிக்க வந்த ராக்ஷஸர்களையும் கடித்துக் கீழேதள்ளிமிதித்து, சாரதியின் பருத்ததலையையும் மூக்கினால் கடித் தறுத்துத்தள்ளி, ராவணனை யச்சமுறச் செய்தனர். ராவணனும் தேர் முறிந்து, வில்லொடிந்து, வாஹனமிழந்து, சாரதியிழந்து, சீதையை மடியிலேந்திக்கொண்டு, (தான் தொடாம லெடுத்துக்கொண்டு) தரையில் வீழ்ந்தனன். இவ்வண்ணம் ராவணன் விழக்கண்டு, எல்லாப் பூதங்களும் நன்கு நன்கென்று, ஜடாயுவை மகிழ்ந்து புகழ்ந்தன; ஜடாயுவும் மூப்புடையராதலின், இவ்வண்ணம் போர்செய்து இளைப்புற்று உட்கார்ந்தனர். ராவணனதுகண்டு மகிழ்ந்து, ஸீதாதேவியை யங்கத்தில் வைத்துக்கொண்டு விரைவாக வோடினன். ஜடாயுவும் அவனோடுவதைக் கண்டு, பறந்தோடி எதிர்த்துத்தகைந்து, அவனை நோக்கி, அடா ராவணா! வச்சிராயுதத்தையொத்த பாணங்களையுடைய ஸ்ரீராமனுடைய பாரியையை நீ யழிவதன்பொருட்டே யன்றோ ? எடுத்தோடுகிறாய்; நீ புன்மதி யுடையோனாதலின், அறிகின்றிலை; பிபாஸை யுண்டானால் விஷபானஞ் செய்வதுண்டோ மூடா ? நீ இந்தச் சீதையை எடுப்பது புத்திர மித்திர களத்திராதிகளுடன் விஷபானஞ் செய்வதை யொக்கும்; தாம் செய்யும் வினைகளினால் விளையும் பலனை யறியாதார்கள் விரைவி லழிவார்கள். இப்போழ்து நீயே அவர்களுக்கு உதாரணமாகின்றனை; இப்பொழுது நீ காலபாசத்தினால் கட்டுண்டமையின், நீ எங்கே செல்லின் விடுபடுவாய்; மீனானது தானழிவதை யறியாமலே பசையூட்டிய தூண்டு முள்ளைக் கவ்வி யழிகின்றதன்றோ ? மிகவும் சூரர்களாகிய ஸ்ரீராமலக்ஷ்மணர்கள் நீ செய்த இந்த அபகாரத்தைப் பொறுப்பார்களோ ? நீ யவர்களுக்கு அச்சங்கொண்டே கள்ளன்போலக் களவாடினை; இது மானமற்றோர்கள் செயற்குரியதேயன்றி, சூரர்கள் இவ்வண்ணம் செய்வார்களோ ? நீ சூரனாகில் போர் செய்க; கணப்பொழுது நிற்க; கரன் போலவே நீயும் அடிபட்டிறப்பாய்;—

పరేతకాలే పురుషో యత్కర్మ ప్రతిపద్యతే
వినాశాయాత్మనోఽధర్మ్యం ప్రతిపన్నోఽసి కర్మ తత్.

பரேதகாலேபுருஷோய த்கர்மப்ரதிபத்யதே
விநாசாயாத்மநோதர்ம்யம் ப்ரதிபன்னோஸிகர்மதத்.

(விநாசகாலே விபரீதபுத்திஃ, யானைவரும்பின்னே மணியோசைவரு முன்னே கேடுவரும்பின்னே மதிகெட்டுவருமுன்னே) என்கிறபடியே மானிடர் ஆயுள்மாளுங்காலையில், தாமழிவதற்கே ஹேதுவான தீச்செயல் களையே நற்செயல்களெனச்செய்வார்கள்; அத்தன்மையதான தீச்செயலை யே நீ இப்போது செய்தனை; எந்தச்செயல்செயின், தீமைவிளையுமோ? அச் செயலை லோகாதிபதியாயினும்செய்வானோ? என் றிவ்வண்ணம் இதமுரைத் தும் அவன் கேளாமையின், அவனது முதுகில் பாய்ந்து நகங்களிலிடுக்கிக் கொண்டு கடித்துக் கீறிக் கிழித்து, மதமேறி வசப்படாத யானையை யதன் மேலேறிய கஜபாலன்போலப்பிடித்துத் தலைமயிர்களைக் கவ்வி யிழுத்துப் பிடுங்கி வருத்தினர். ராவணனிவ்வண்ணம் அவமானத்தையும், பீடையை யும், மனவருத்தத்தையுமடைந்து, கோபத்தினால் உதடு துடித்துச் சீதை யை இடதுதொடையில்வைத்துக்கொண்டு கைகளினாலணைத்து, வலதுகை களினால் ஜடாயுவையறைந்தனன். ஜடாயுவும் அவனைச் சுற்றிப்பறந்து கடி த்து, இடதுகைகள் பத்தையும் கடித் தறுத்துத் தள்ளினர். உடனே அக்கைகளும் புற்றிலிருந்து பாம்புகள் புறப்பட்டாற்போல முளைத்தன ; பின்பு, ராவணன் சீதாபிராட்டியாரைத் தரையில் விட்டுவிட்டு முட்டிகளா லும், கால்களாலும், ஜடாயுவைக் குத்தி யுதைத்து மிதித்து வருத்தி னன். பின்பிருவருக்கும் முகூர்த்தகாலம் பெருஞ்சண்டை விளைந்தது ; அநந்தரம் ஸ்ரீராமபத்திரனுக்கு உபகாரஞ்செய்வதன்பொருட்டே போர் செய்கின்ற ஜடாயுவினுடைய சிறகுகளையும், பார்சுவங்களையும், பாதங் களையும், வாளினால் அரிந்து தள்ளிவிட்டனன். உடனே ஜடாயு ஆயுள் மாண்டு தரையில் வீழ்ந்தனர். இவ்வண்ணம் பொருது குருதியில் நனை ந்து வீழ்ந்த ஜடாயுவைப் பிராட்டியார் கண்டு தன் தந்தை விழுந்தாற் போல மிகவும் துன்புற்றோடி வந்து, நீருண்ட கொண்டல்போன்றவரும், மூப்பினால் வெளுத்த மார்பினை யுடையவரும், மிகவும் சூரமுடையவரு மாகிய அவரைக் கிட்டி யோடிவந்து தழுவிக்கொண்டு கூவி யழுதனர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

இந்தச் சருக்கத்திலும் ராவணன் சீதாதேவியாரைத் தொட்டே எடுத்துக் கொண்டோடினனென்பது நன்கு விளங்கும்; குலமகளிற்குப் பலாத்காரமாய் ஒரு வன் தொட்டமாத்திரத்தால் கற்பழியாது; பெண்கள் பிறனைச் சேரக் கருதினாலும், கற்பழியுமென வுணர்க.

ஐம்பத்திரண்டாவது சருக்கம்.

மீளவும் ராவணன் ஸீதாபிராட்டியாரை எடுத்துக்கொண்டு செல்லுகையில், எல்லாவுயிர்களும் துன்பமடைந்து வருந்தியது.

பின்பு, ராவணன் ஜடாயு தரையில் வீழ்ந்து மரணதசையை யடையக் கண்டு மகிழ்ந்தனன். முழுமதிபோன்ற திருமுகமண்டலத்தையுடைய பிராட்டியார் அவ்வண்ணமே ஜடாயுவைத்தழுவிப் புலம்பிப் பெருமாளைக் குறித்து, என் பிராணநாதா!—

నిమిత్తంలక్షణజ్ఞానంశకునిస్వరదర్శనం
అవశ్యంసుఖదుఃఖేషునరాణాం ప్రతిదృశ్యతే.

நிமித்தம்லக்ஷணஜ்ஞாநம் சகுநிஸ்வரதர்சனம்
அவச்யம்சுகதுக்கேஷு நராணாம்ப்ரதித்ருச்யதே.

கண்துடிப்பது முதலிய அங்கக்குறிகளும், கன்னிகை மோர் முதலியவைகள் எதிரில் வருவதும், காக்கை முதலிய பறவைகள் தொனிசெய்வதும், மனிதர்களது இன்பதுன்பங்களையே உண்மையாக வறிவிக்கின்றன வல்லவோ? தேவர் எனக்குற்ற இத்துன்பத்தை யறிகின்றிலீரோ? என்பொருட்டே இப்பறவைகள் தேவரை நோக்கிக் கூவிப் பறக்கின்றனவே? என்னைப் பாதுகாப்பதன் பொருட்டே இந்த ஜடாயுவும் இந்தப் பாவியுடன் போர்செய் தடிபட்டுத் தரையில் வீழ்ந்தனரோ? காகுத்தரோ! என்னைப் பாதுகாத்தருள்க; லக்ஷ்மணா! என்னைக் காத்தருள்; என்று கூவி யழுது புலம்பினர். இவ்வண்ணம் மாலை வாடி யுதிர்ந்து வருந்தி அநாதைபோலப் புலம்புகின்ற பிராட்டியாரை எடுப்பதன்பொருட்டு ராவணனோடிவந்து, கூவி யழுதுகொண்டு, கொடிபோல மரங்களைத் தழுவிக்கொண்டு வருந்துகின்ற பிராட்டியாரை விடுகவிடுகவென்றுரைத்துத் தலைமயிரைப்பற்றி யிழுத்துப் பிடித் தெடுத்தனன். பிராட்டியாரும் ராமாராமாவென்று கூவி யழுது புலம்பினர்; அப்பொழுது உலகமெல்லாம் நிலைகடந்து தவித்தன; எங்கும் இருளெழுந்து பரவிற்று; காற்றும் வீசிற்றிலது; கதிரவனும் ஒளியிழந்தனன்; சத்தியலோகத்தில்திசைமுகத்தேவனும் ஞானக்கண்ணால் இந்தச் செய்தியை யறிந்துகொண்டு இனித் தேவகாரியம் நிறைவேறிற்றென் றுரைத்தனர். அங்குள்ள பரமயோகிகளெல்லோரும் துன்பமும் மகிழ்வுங் கொண்டனர்கள்; ராவணனும் ராமாராமா! லக்ஷ்மணா லக்ஷ்மணா! என்று புலம்புகின்ற பிராட்டியாரை எடுத்துக்கொண்டு ஆகாசமார்க்கத்திற்சென்றனன்; பிராட்டியாரும் அணிமணியொளிபொருந்தி மின்னற்கொடிபோலத் திகழ்பவரும், பீதகவாடை யுடுத்தவருமாகி, ராவணனை யனல்பற்றி எரி

கின்ற மாமலையைப்போல விளங்கச்செய்தனர்; அவரணிந்த மாலையி னின்றும் தாமரையிதழ்களுதிர்ந்து ராவணனைச் சுற்றிலும் வீழ்ந்தன; காற்றினலசைக்கப்பட்ட பொன்பட்டும் கதிரவனது கதிரொளிபொருந்திய மேகம்போலத் திகழ்ந்தது; அப்பொழுது பெருமாளைப் பிரிந்தமையின், பிராட்டியாரது திருமுகமண்டலம் காம்பினைக்கிள்ளிக் கரையிலெறிந்த கமலம்போல விளங்கியது; அழகிய நெற்றியும், அழகிய குந்தளங்களும் பொருந்திக் கமலத்தை நிகர்த்து வெண்மைபொருந்திய பற்களையுடைய தாகிய பிராட்டியாரது திருமுகமண்டலமும், வானில் மேகத்திடையிற் செல்லுகின்ற முழுமதிபோலத் திகழ்ந்தது; ஆகிலும், ராவணனுல் பீடை செய்யப்பட்டமையில், பகலில்தோன்றிய சந்திரன்போலக் காணப்பட்டது; கரிய ராவணனருகில் பொன்னொளிகொண்ட பிராட்டியார் மேகத்திடையில் மின்னல் போலவும், யானை யணிந்த பொன்மாலை போலவும், பச்சிலை மரத்தில் படர்ந்த பொற்கொடிபோலவும் விளங்கினர். பிராட்டியார் சார்த் திய மாலைகளினின்றும் நறுமலர்களுதிர்ந்து வரிசையாகத் தரையில் வீழ்ந் தன; அப்பொழுது திருவடியினின்றும் மணிகளிழைத்து மின்போல மின்னுகின்ற சதங்கைத்தண்டையும், இனிமையாக வொலித்துக்கொண்டு வீழந்தது; பிராட்டியாரணிந்த மணியணிகளும், விண்மீன்கள்போலச் சிதறி வீழ்ந்தன; திருமார்பில் சார்த்திக்கொண்டிருந்த முத்துவடமும், விண்ணினின்றும் கங்கைபோல வீழ்ந்தது; அப்பொழுது உற்பாத வாயு வினு லசைக்கப்பட்டும், பலவகைப் பறவைகளினு லொலிக்கப்பட்டுமுள்ள மரங்கள் பிராட்டியாரை நோக்கி, அஞ்சேலென வுரைத்தனபோலவும், அசைக்கப்பட்ட கமலங்களை யுடையனவும், அச்சங்கொண்டு தவிக்கின்ற மீன் முதலிய ஜந்துக்களை யுடையனவுமாகிய தாமரையோடைகளும், தோழிகள்போலப் பிராட்டியாரைக்கண்டு துன்புற்றனபோலவும் விளங்கின; புலி கரடி முதலிய விலங்குகளும், பிராட்டியாரது நிழலைத் தொடர்ந்து பின் னேடி ராவணனைக் கடிக்க மேலெழும்பின; மலைகளும் அருவிகளென்னும் கண்ணீர்பெருக்கிச் சிருங்கங்களென்னும் கைகளை மேலெடுத்துப் பிர தித் தொனிகளினுல் கூவி யழுதன; கதிரவனும் பிராட்டியாரைக் கண்டு ஒளிகுன்றி வெண்மைகொண்டு வெப்பந்தணிந்தனன்; ராவணன் தருமம், சத்தியம், கசடின்மை, அருள், இவை முதலிய நற்குணங்களுள் ஒன்று மிலாதானுதலின், பிராட்டியாரைப் பறித்தானென்று எல்லாப் பூதங்களும் குவைகுவையாகக் கூடி யழுதன; மான் குட்டிகளும் அச்சங்கொண்டு தீனமுற்றுக் கூவின; வனதேவதைகளும் பிராட்டியாரைப் பார்த்துப்பார் த்துக் கண்ணீர்பெருக்கி மெய்ந்நடுங்கி வருந்தி யழுதன; இவ்வண்ணம்

ராவணனும், தலையவிழ்ந்து, திலகமழிந்து, மனங்குன்றி, நாற்புறமும் நோக்கி, ஸ்ரீராமா! லக்ஷ்மணா! என்று கூவிக் கண்ணீர்பெருக்கி யழுகின்ற பிராட்டியாரை எடுத்துக்கொண்டோடினன். பிராட்டியாரும் பெருமா ளிளையபெருமாள் இருவருமின்றித் தனியே யிருந்தமையின், ராவணனா லெடுக்கப்பட்டு, தம்மவரைக்காணாமல் முகவொளிகுன்றி யச்சங்கொண்டு சிந்தையுற்று வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்திரண்டாவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்துமூன்றாவது சருக்கம்.

பிராட்டியார் ராவணனை இகழ்ந்தது.

இவ்வண்ணம் ராவணன் கோரரூபமுடையனாகிப் பிராட்டியாரை எடுத்துக்கொண்டு ஆகாயத்திற்செல்லுகையில், பிராட்டியார் அச்சமும், துன்பமும், சினமுங்கொண்டு ராவணனை நோக்கி, அடா சண்டாளப் பயலே! நீ இவ்வண்ணம் நீசத்தொழில் புரிந்தும், நாணமுறுகின்றிலை யந்தோ? யான் தனியே யிருப்பதையறிந்து, கள்ளன்போலக் களவாடி யோடுகின்றனையே? அடா நீசா! நீ என்னை யபஹரிப்பதன்பொருட்டே ஸ்ரீராமபத்திரனுக்கஞ்சி, மாயையினால் மான்செய்து, என்பர்த்தாவை நெடுந் தூர மோட்டினைபோலும், என் மாமனாருக்குச் சகாவும், மிகவும் மூப்புடை யாருமாகிய இந்தச் சடாயுவும், என்பொருட்டுப் போர்செய்து கொல்லப் பட்டனர். நீ மிகச் சூரன்போலும், ஆகிலும், இவ்வண்ணம் கபடம் செய்யா மல் யான் ராவணனென்றுரைத்து எதிரில் நின்று என் பர்த்தாவுடன் போர் செய்து வெற்றிகொண்டு என்னை எடுத்துவருவாயாகில், சூரனே யாகுவாய்; இவ்வண்ணம் என்னைக் களவுசெய்தும் நாணுகின்றிலையே? பர்த்தாவின்றித் தனியேயிருக்கையில், பரத்தையலை எடுத்துவருவதென்பது மிகத் தீதென யாவரு முரைக்கின்றிலரோ? மிகக் கொடுமை கொண்டதும், தருமமற்றது மாகிய உன்னுடைய சௌரியத்தையும், பலத்தையு மிகழ்க; நீ யுன்னை என் முன்னாகப் பொய்யாகவே புகழ்ந்து கொண்டனையே; பல குலத்தோர் அழிந்தழும்படியான உன்னுடைய இச்செய்கையைச் சுடுக; நீ இப் பொழுது ஓட்டமாகவே ஓடுகின்றமையின், யாதுசெய்யக்கூடும்; நீ யொரு கணப்பொழுதாயினும் நிற்க; பின்பு, நீ பிழைத்துச் செல்ல மாட்டாய்; நீ ஸ்ரீராமலக்ஷ்மணர்களுக்கு முன்பாகப் படைகளுடன் கூடிப் போர்செய் வாயாயினும், பிழைத்து மீளமாட்டாய்; பற்றி யெரிகின்ற காட்டுத்தீயின் வெம்மையைப் பறவை பொறுக்காததுபோல அவ்விருவர்களது பாண

வேகத்தை நீ பொறுக்க வல்லவனல்லை; நீ நன்காராய்ந்து என்னை விட்டு விட்டு உய்யும் வழி தேடிக் கொள்ளாய்; என்னை நீ எடுத்துக்கொண்டு போவாயாகில், என் பர்த்தா முனிந்து தம்பியுடன் கூடி யுன்னைக் கொல்வார்; நீ என்ன எண்ணங்கொண்டு என்னை எடுத்துக்கொண்டோடு கின்றனையோ? அந்த எண்ணம் ஒருகாலும் நிறைவேருதென வுணர்க; தேவர்க்கு நிகராகிய என் பர்த்தாவைக் காணுமல் பகைவர்களுக்கு வசமாகிக் கணப்பொழுதும் உயிரை வைத்துக்கொள்ள விரும்பேன்; நீ மாளுங்காலங் கிட்டினமையின், இது நலமெனவும், இது தீதெனவும் உணர்கின்றிலை;—

మృత్యుకాలేయథామర్త్యో విపరీతానిసేవతే
ముమూర్షూణాంహిసర్వేషాంయత్పథ్యంతన్నరోచతే.

ம்ருத்யுகாலேயதாமர்த்யோ விபரீதாநிஸேவதே
முமூர்ஷூணாம்ஹிஸர்வேஷாம் யத்பத்யந்தன்னரோசதே.

மனிதரெல்லோரும் மரணகாலத்தில் தீமைகளையே செய்வார்கள்; அக்காலையில், அவர்களெல்லோர்க்கும் யாது நலமோ அது தோற்ருதன்றே? இப்பொழுது உன் கழுத்தில் யமன் காலபாசங்களைப்பூட்டிக் கட்டுகின்றனனென நம்புகின்றேன்; இப்பொழுது அச்சமுறவேண்டு கையிலும், அச்சமுறுகின்றிலை யல்லையோ? விரைவில் மரணமுறுவார்கள் போல நீயும் எல்லாமரங்களையும், பொன்மயமுள்ளனபோலக் காணுகின்றனைபோலும், விரைவில் குருதிகளைப்பெருக்குகின்ற வைதரணீநதியையும் பலவகைப்பட்ட கோரமான நரகங்களையும் கண்ணுறுவாய்; இவ்வண்ணந் தீமைசெய்தும் பிழைப்பாயோ? விடத்தை யுண்பவனும், வாழ்வுற்று மகிழ்வானே? அடா ராவணு! நீ காலபாசத்தினுல் கட்டப்பட்டமையின், நீ எங்கே ஓடி யொளித்துக்கொள்ளினும், தப்பாய்; ஒரு முகூர்த்தகாலத்திலேதானே என் பர்த்தாவினுல் பதினுலாயிரம் ராக்ஷஸர்களுடன் கரதூஷணுதிகள் கொல்லப்பட்டனர்களல்லரோ? அவ்வண்ணம் மிகச் சூராகிய என் பர்த்தா உன்னைக் கொலைசெய்யாரோ? என்றிவ்வண்ணம் பலவாருகவுரைத் திகழ்ந்து தீனமாகப் புலம்பினர். ராவணனும் அந்த வார்த்தைகளை யொன்றும் கேளாமல் நடுக்குற்றுப் புலம்பி யழுகின்ற பிராட்டியாரை எடுத்துக்கொண்டோடினன்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்துமூன்ருவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்துநான்காவது சருக்கம்.

பிராட்டியார் மஹாராஜர் முதலிய ஐந்து வானரர்களைக்கண்டு ஆபரணங்களைக் கட்டி நழுவவிட்டதும், ராவணன் பிராட்டியாரை யசோக வனத்தில் வைத்து ராக்ஷஸிகளைப் பாதுகாக்கும்படி கட்டளையிட்டதும்.

இவ்வண்ணம் ராவணனால் அபஹரிக்கப்பட்ட பிராட்டியாரும் தஞ்சமொருவரையும் காணுமல் மிகத் துன்பக்கடலில் மூழ்கிச் செல்லுகையில், ஒரு மலையின் உச்சியில் ஐவர் வானரர்கள் வீற்றிருக்கக்கண்டு தம் முத்தரியமான வெண்பட்டையும், நல்லணிகளையும், இவர்கள் இதனை எடுத்துவைத்திருந்து பெருமாளுக்களித்துச் செய்தி யுரைப்பார்களென வெண்ணி, அவர்களிடையில்விழ நழுவவிட்டனர். ராவணன் வேகத்தாலும், அச்சத்தினுலும், அதனை யுணர்ந்திலன்; அந்த வானரர்களும் பிராட்டியார் கூவி யழுவதைக் கேட்டுக் கண்டனர்கள். ராவணனும் பிராட்டியாரை எடுத்துக்கொண்டு பம்பாநதியைத் தாண்டி மகிழ்ந்து லங்கையை நோக்கிச் சென்று மடியில் நச்சரவத்தைக் கட்டிக்கொண்டேனென்பதை யறியாமல், காடுகளையும், ஆறுகளையும், மலைகளையும், தடாகங்களையும், ஆகாயமார்க்கத்தினுல் கடந்து, வில்லினின்றும் புறப்பட்ட பாணம்போல விரைவாகச் சென்று, திமிதிமிங்கிலாதிகள் சூழ்ந்தாழ்ந்த ஸாகரத்தையும் தாண்டினன். அப்பொழுது ஸாகரமும் கரைபுரண்டு மேலெழுந்த அலைகளை யுடையதும், தடையுற்ற மீன் முதலை காளை யுடையதுமாயிற்று; விண்ணிடையிலுள்ள சித்தசாரணுதியர்களும், ராவணனுக்கு ஆயுள் இவ்வளவேயென்று மொழிந்தனர்கள்; மிருத்தியுவே உருவங்கொண்டதோவென்று ஐயுறத்தக்க பிராட்டியாரை ராவணன் மடமையினுல் எடுத்துக்கொண்டு இலங்காபுரி சேர்ந்து, அந்தப்புரத்தினுட்புகுந்து, மயன் மாயையைப்போலப் பிராட்டியாரையங்கெழுந்தருளப்பண்ணி, அங்குள்ள பிசாசங்களை நோக்கிக் கேளீர் பெண்களே! இந்தச் சீதையை மற்றொரு ஆணுயினும், பெண்ணுயினும், கண்ணுறுவண்ணம் பாதுகாத்தளிக்க; அணிகளையோ? ஆபரணங்களையோ? எவற்றை இவள் கோருகின்றனளோ? அவைகளை யளிக்க; அறிந்தாயினும், அறியாமையினுலாயினும், இவளை நோக்கி, யாவள் வன்மொழி மொழிவாளோ? அவள் உடனே கொலைசெய்யப்படுவாள்; என்றிவ்வண்ண முரைத்துவிட்டு, அந்தப்புரத்தினின்றும் புறப்பட்டு இனி யாதுசெய்யத்தக்கதெனச் சிந்தைசெய்து, எட்டு அரக்கர்களைக் கண்டு வரதானத்தினுல் அகங்காரமுற்றவனுதலின், அவர்களை நோக்கிக் கேளீர் அன்பர்களே! நீங்கள் பற்பல படைகளையுமேந்தி இங்கிருந்து

புறப்பட்டு முன்பு கராதிகளிருந்திறந்த ஜனஸ்தானஞ்சேர்ந்து வாழ்க; அங்கே ராமனென்பவன் அவர்களைக் கொலை செய்தமையின், அவன்மேல் மிகச் சினங்கொண்டிருக்கின்றேன்; அந்தப் பகையையும் விரைவில் தீர்க்க முயல்கின்றேன்; அவனைக் கொல்வதன்முன்னம் யான் துயிலுங் கொள்ளேன்; பொருளற்றவன் பொருளையடைந்தாப்போல யான் அந்த ராமனைக் கொலைசெய்தின்புறுவேன்; நீங்களங்கிருந்துகொண்டு அடிக்கடி எனக்குச் செய்தி யனுப்புவதுமன்றி, மிகவும் ஊக்கத்துடன் ராமனைக் கொல்லும் வழியையே தேடுக; நீங்கள் மிகவும் சூரமுடையோர்களாதலின், உங்களது திறமையையறிந்தே ஏவுகின்றேனென்று புகழ்ந்துரைத்தனன். அந்த எட்டு ராக்ஷஸர்களும் அதனைக்கேட்டு மகிழ்ந்து அவ்வண்ணமே யாகுகவென்றுடன்பட்டு ராவணனைத் தொழுது விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டு ஒருவர்க்குங்காணுமல் ஜனஸ்தானம் வந்து சேர்ந்தனர்கள்; ராவணனும் பிராட்டியாரைப் பறித்துப் பெருமாளுடன் பகைத்தும், மடமையினுல் மகிழ்ந்திருந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்துநான்காவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவதுசருக்கம்.

ராவணன் தன் செல்வங்களைப் பிராட்டியார்க்குக் காட்டித் தன்னைச் சேரும்படி வேண்டியது.

ராவணன் மிகச் சூரர்களாகிய அந்த எட்டு ராக்ஷஸர்களையும் அனுப்பிவிட்டு, தன்னுடைய காரியங்கள் யாவுங் கைக்கூடினவென மகிழ்ந்து வைதேஹியை நினைந்து காமவேட்கைகொண்டு மறுபடியும் அந்தப்புரஞ்சென்று ராக்ஷஸிகளின் நடுவில் எழுந்தருளியிருந்த பிராட்டியார் சோகங்கொண்டு, கண்ணீர்பெருக்கி, ஒளிகுன்றி, அலைகடலில் வாயுவினுலலைத்து மூழ்த்தப்பட்ட மரக்கலம்போலவும், தன்னினத்தை விட்டு நாய்களின் இடையிலகப்பட்ட மான்பேடுபோலவும் துன்பமடைந்து தலைகுனிந்து சிந்தையுற்று வருந்தக்கண்டு, பலாத்காரமாய் அழைத்துக்கொண்டுபோய் மாடம் மேல் மாடங்கள் அடர்ந்து, பற்பல உயர்ந்த பெண்கள் நிறைந்து, பற்பல பறவைகளொலித்துப் பற்பல மணிகளிழைத்து, பொன், வெள்ளி, படிகம், வைடூரியம், வைரம், இவைகளினுல் செய்யப்பட்ட கம்பங்கள் நாட்டி, தேவதுந்துபிகளை முழக்கி, தங்கத்தோரணங் கட்டிக் காணற்கினிய தன் வீட்டினுட் புகுந்து தங்கப்படியேறிப் பிராட்டியார்க்குச் சுட்டிக் காட்டினன். அங்கு

சில கவாக்ஷங்கள் தந்தங்களாலும், சில கவாக்ஷங்கள் தங்கங்களாலும், சில வெள்ளிகளாலும் செய்யப்பட்டுள்ளன; தரைகள் நவமணிகளிழைத் தொளி கொண்டன; நடவாபிகளும், தாமரையோடைகளும், மலர்கள் மலர்ந்து, சுற்றிலும் மரங்களடர்ந்து திகழ்ந்தன; இவ்வண்ணம் பற்பல விநோதங் களையும், ராவணன் பிராட்டியார்க்குக்காட்டி யாசையுறச்செய்யவேண்டு மென்னும் எண்ணத்தினல் பிராட்டியாரை நோக்கிக் கேளடி பெண்மணி! மிகவுங் கொடியர்களாகிய முப்பத்திரண்டுகோடி ராக்ஷஸர்கள் என் வசத்தி லிருக்கின்றனர்கள்; அவர்களெல்லோர்க்கும் யானொருவனே இறைவன்; மூப்புடையோரும், வாலிபர்களுந்தவிர ஒவ்வொரு வேலைக்கும் ஆயிரம் ஆயிரம்பேர்களிருக்கின்றனர்கள்; இத்தன்மையதாகிய இந்த ராஜ்ஜியமும், என்னுயிரும், யாவும் இனி யுன்னதீனமாயின; நீதான் எனக்குயிரினும் சிறந்தவள்; இந்த அந்தப்புரத்தில் எனக்கு அநேகமாயிரம் பெண்கள் மனைவியர்களாயிருக்கின்றனர்கள்; அவ்வெல்லோர்களுக்குங்கூட நீயே இறைவியாகக்கடவை. வேறெண்ணத்தைத்துறந்து என்மொழியைமகிழ்ந்து என்னை யங்கீகரித்தருள்க; அநேகமாயிரம் அரக்கர்களால் சூழ்ந்து காக்கப் பட்டுக் கடலிடையிலிருக்கின்ற இவ்விலங்கையும், இந்திரன் முதலிய தேவாஸுரர்களாலும் புகழப்படுமோ? தேவயக்ஷகந்தர்வ பக்ஷிபன்னகர்தி களிலும், என்னை எதிர்ப்பவனொருவனையுங் கண்டிலேன்; அரசிழந்து, தீனமுற்றுத் தவம்பூண்டு, ஆயுள் குன்றி, அற்பமனிதனான ராமன் என்னை எதிர்ப்பானே? இனி யவனால் யாதுசெய்வாய்? ஆதலின், என்னையே யடைக; யானே உனக்கு நிகராகுவேன்; யௌவனம் நிலையற்றதாதலின், என்னுடன் கூடி மகிழ்க; இனி ராமனைக் காண்பதில் மனமுறற்க; ராமன் இங்கு வரவேண்டுமென்று எண்ணுவதற்காயினும் வல்லனோ? அவனுக் கத்திறமை எங்குளது? காற்றினை யாகாயத்தில் கயிற்றினால் கட்ட முடியு மோ? தீ பற்றியெரிகையில், அதன் ஜுவாலையைக் கையினால் பிடிக்க முடியுமோ? என்வசத்திலகப்பட்ட உன்னை விடுவிப்பவன் எங்குளன்? மூவுலகிலும் யான் எங்குங்காண்கின்றிலேன்; இந்த லங்காராஜ்ஜியம் மிகப் பெரிது, இதனை நீ பாதுகாக்க விருப்புறுக; என்போன்றவர்களும், தேவர் களும், மற்றுள்ள யாவர்களும் உனக்குப் பணிவிடைசெய்வோர்களாகுவார் கள்; நீ திருவபிஷேகம்பூண்டு மகிழ்ந்து, என்னையும் மகிழ்வித்தருள்க; நீ முற்பிறவியில் செய்த தீவினை வனவாஸஞ்செய்தகோட்டிழிந்தது; இனி நல்வினையின் பலத்தை யனுபவிக்கக்கடவை. இங்குச் சிறந்த மாலைகளும், நற்சாந்தங்களும், நல்லணிகளுமுள; என்னுடன் கூடி இவைகளை யனுப விக்கக்கடவை. என் பிராதாவாகிய குபேரனை வெற்றிகொண்டு அவனிட த்திலிருந்த புஷ்பகமென்னும் திவ்விய விமானத்தைப் பறித்துக்கொண் டேன்; அதிலும் என்னுடனேறி விளையாடுக; தாமரைமலர்போல மலர்ந்த உன்னுடைய திருமுகமண்டலம் துன்புறுகையில் திகழ்கின்றிலது; என் றிவ்வண்ணம் பிதற்றினன். பிராட்டியாரதுகேட்டுத் திருமுகமண்டலத்தை

யாடையின் நுனியினால் மறைத்துக்கொண்டு கண்ணீர்பெருக்கிப் பெருமாளையே நினைந்து ஒளிகுன்றி வருந்தினர். ராவணன் மீளவும் பிராட்டியாரை நோக்கி, அடி வைதேஹி! நீ இனி நாணமுறற்க; இதனால் தர்மலோபமொன்றுமிலது; உனக்கும் எனக்கும் இப்பொழுது தெய்வத்தினாலே சேர்க்கை நேர்ந்தமையின், இதுவுந் தருமமேயாகும்; இஃது ரிஷிகளாலும் உகக்கப்பட்டது; யான் உனது திருவடிகளிரண்டிலும் தலைவணங்கி வேண்டுகின்றேன்; அருள் செய்க; யான் உன்னதீனனும், தாஸனுமாகின்றேன்; யான் உன்னைப் பணிவேனென்று காமத்தீயினால் எரிக்கப்பட்டு வருந்துகின்றமையின், தீனமாகமொழிந்தேன்; ராவணனும் ஒருபெண்ணைத் தலைவணங்கி வேண்டுவனோ? ஒருகாலும் வேண்டியிலன்; இப்பொழுதுன்னைமாத்திரமே வணங்கி வேண்டினேன்; என்றிவ்வண்ணமுரைத்து மாளுங்காலங்கிட்டினமையின், இவள் எனக்கே உரியவளென்றெண்ணினன்*

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தாறுவது சருக்கம்.

பிராட்டியார் ராவணனையிகழ்ந்து பெருமாளைப்புகழ்தலும், ராவணன் பிராட்டியார்க்குப் பன்னிரண்டுமாதம் கெடுவிட்டு வெருட்டி யசோகவனத்தில் வாழும்படி சேர்த்தது.

பிராட்டியார் ராவணனிவ்வண்ணமுரைத்த வாக்கியங்களைச் செவியுற்று மிகக் கோபங்கொண்டு ஒரு புல்லை நடுவில்போட்டு அச்சமின்றி, யதனையே ராவணனாக எண்ணி, அதனை நோக்கி, அடா ராவணத்துரும்பே கேளடா! தசரதரென்னும் சக்கரவர்த்தியார் தருமத்திற்கழிவற்ற ஸேதுபோன்றவரும், சத்தியந்தவறாதவரும், மிகப் புகழுற்றவருமாகியிருந்தனர். அவருடையதிருக்குமாரரே ஸ்ரீராமபிரானென்பவர்; மூவுலகங்களிலும் புகழ்பெற்றவர்; நீண்டுருண்ட திருத்தோள்களை யுடையவர்; செந்தாமரையிதழ்போன்ற திருக்கண்களை யுடையவர்; அவர்தான் என் பதி; என் தெய்வம்; இக்ஷ்வாகுகுலத்திற் பிறந்தவர்; சிங்கம்போன்ற தோள்களை

* கீழ்ச் சர்க்கத்திலும், இந்தச் சர்க்கத்திலும், ராவணன் பிராட்டியாரை வேண்டித் தன்னை முன்போலவே தாஸனாகச்செய்துகொள்ளும்படி விண்ணப்பம் செய்து, அவ்வண்ணமே நிறைவேறுமென நினைத்தனனெனவும் கருத்துத்தோன்றும்; கூர்மதியோர் ஆராயின் இது நன்கு விளங்கும்.

யுடையவர்; சிறந்த தோள்வலியுற்றவர்; அவர்தான் லக்ஷ்மணனென்னும் தம்பியுடன் கூடிவந்து உன்னுயிரை மாய்க்கப்போகின்றனர்; நீ என்னை யவர் திருமுன்பே எடுத்துவருவாயாகில், கரன்போலவே நீயும் அப்பொழுதே யடிபட்டு ஜனஸ்தானத்திலேதானே வீழ்ந்திறந்திருப்பாய்; அநேகம்கோடி ராக்ஷஸர்களிருக்கின்றனர்களென எண்ணற்க; அவர்களெல்லோரும் என் பர்த்தாவினிடத்தில் திறமையற்றவர்களாகுவார்கள்; நச்சரவங்கள் பிறரைக் கடித்துக் கொல்லினும், கருடனிடத்தில் விஷமற்றனவாகின்றனவல்லவோ? என் பர்த்தாவின் வில்லினின்றும் விடப்பட்ட கூரிய கணைகள் உன்னுடைய சரீரத்தில் வீழ்ந்து கங்கையின் வெள்ளம் கரையை மோதி யழிக்கின்றது போல உன் சரீரத்தையும் அழித்துக் கரைக்கப்போகின்றன; தேவாஸுரர் களைப் பகைத்து நீ வெற்றிகொள்ளினும், இவர்க்குத் தீங்கு செய்தபின்பு, நீ உய்யாய்; உன்னுடைய மிகுந்துள்ள ஆயுளை மாய்ப்பதற்கு என் பர்த் தாவே காரணமாகின்றனர்; யாகவேதியில் யூபஸ்தம்பத்தில் கட்டப்பட்ட ஆட்டுக்குட்டிப்போல உனக்கும் இனி உயிர்வாழ்தலரிது; என் பர்த்தா உன்னை இப்பொழுது சிறிக் கடாக்ஷிப்பாராகில், நீயுடனே எரிந்தழிந்து விடுவாய்; என் பர்த்தா சந்திரனை விண்ணினின்றும் தரையில்விழச்செய்யி னும் செய்வார்; அழிக்கினும் அழிப்பார்; கடலை உலர்த்தினும் உலர்த்து வார்; அத்திறமையுடைய அவர் என்னை விடுவிக்கமாட்டாரோ? நீயரசிழந்து பலமொடுங்கி, வலிமைகுலைந்து, மதிமயங்கி, ஆயுள்மாளும் காலங் கிட்டின மையின், என்னைப் பறித்தோடிவந்தனை; உன்னால் இவ்விலங்கையே கைம் பெண்ணாகப்போகின்றது; நீசெய்த இத்தீச்செயல் ஒருக்காலும் நலந்தருவ தாகாது; என்னை நீ பலாத்காரமாக எடுத்தோடி வந்தனையே? யான் உன் மேல் ஒருகாலும் இச்சைகொள்ளேன்; அந்த ஸ்ரீராமபிரானே எனக்குத் தெய்வமும், பர்த்தாவும் ஆகுவார்; அவர் மிகச் சிறந்த காந்தியுடையவர்; அச்சமற்றவர்; தோள்வலியினாலேதானே தனியே தண்டகாவனத்தில் வாசஞ்செய்துகொண்டிருக்கின்றனர்; அவர் உன்னுடைய வீரத்தன்மையை யும், மதத்தையும், தோள்வலியையும், இறுமாப்பையும் போக்கப்போகின் றனர்; எல்லாவுயிர்களும் விநாசகாலத்தில் நற்செயலைத்துறந்து தீச்செய லில் விருப்பங்கொள்ளுகின்றன; என்னை நீ இவ்வண்ணம் அநியாய மாய் எடுத்துவந்தமையின், அந்த விநாசகாலம் உனக்கும் கிட்டி யிருக் கின்றது; நீ விரைவில் இனத்தார் சுற்றத்தார் முதலிய யாவருடனும் அழிவாய்; ஹோமத்திரவியங்கள் நிறைந்து, வேதியர்களால் சூழ்ந்து, மந்திரிக்கப்பட்ட யாகவேதியைச் சண்டாளனால் தீண்ட முடியாதாப் போலப் பதிவிரதையான என்னைக் கிட்ட உன்னாலும் முடியாது; மலர் ந்ததாமரை மலர்மிசைராஜஹம்ஸத்துடன் கூடி மகிழ்கின்ற அன்னப் பேடு புற்குவையின்மேலிருக்கின்ற நீர்க்காக்கையைக் கண்ணெடுத்துப் பார்க்குமோ? உணர்வற்ற என்னுடைய இந்தச் சரீரத்தைக் கட்டினும் கட்டுக; கடித்துத் தின்னினும் தின்க; எனக்கு இச்சரீரமும் உயிரும்

பாதுகாக்கத்தக்கனவல்ல; இவ்வுலகில் அழிவற்ற புகழென்னும் சரீரமொன்றே இகழ்வுறாது காக்கத்தக்கது; ஆதலின், யான் ஒருகாலும் பழிக்குரியவளாகேன்; என்றிவ்வண்ணம் வன்மொழிமொழிந்து மேலொன்றும் மொழியாது மௌனமடைந்தனர். ராவணனும் அந்த வாக்கியங்களைக்கேட்டு மிகவும் முனிந்து பிராட்டியாரை நோக்கி, கோசாய் மிதிலாதிபதியின் திருமகளே! யான் உனக்கு இன்றுமுதல் பன்னிரண்டுமாதம் கெடுவுகொடுத்திருக்கின்றேன்; அதற்குள் உடன்பட்டு என்னை நீ சேராயாகில், பின்பு உன்னை யான் தின்பதன்பொருட்டுப் பாசகர்கள் வெட்டித் துண்டித்துச் சமைக்கக் கடவர்களென்று முடிவுரைத்து, அருகிலிருந்த அரக்கிகளை நோக்கி, விரைவாக வருக; தாதிமார்களே! நீங்கள் இவளையழைத்துக்கொண்டுபோய் இவளுடைய தர்ப்பத்தைப் போக்குக என்று கட்டளையிட்டனன். உடனே அந்தக் கொடிய ராக்ஷஸிகளும் அவ்வண்ணமே செய்வோமென்று கைகுவித்துப் பதிலுரைத்துப் பிராட்டியாரைச் சூழ்ந்துகொண்டு நின்றனர்கள். ராவணன் மீளவும் அவர்களை நோக்கி, அரக்கிகளே! இவளை யசோகவனிகையின் நடுவில் அழைத்துக்கொண்டு போய்ச் சேர்க்கக் கடவீர்கள். அங்கிவளைச் சூழ்ந்து பாதுகாத்து வருக; அங்கிவளை வெருட்டியும், நன்மொழியுரைத்தும், அன்று காட்டினின்றும் பிடித்துவந்த யானைப்பேட்டைப்போலப் பழக்கி, என்வசமாகும்படி செய்க; என்று கட்டளையிட்டு, அடிவைப்பினாலேதானே பூமியைப் பிளப்பவன்போல நடந்து தன்மனை சேர்ந்தனன். அவ்வரக்கிகளும் அந்தப்படியே பிராட்டியாரை யழைத்துக்கொண்டு அசோகவனம் சேர்ந்தனர்கள். பிராட்டியாரும் புலிக்கூட்டத்தினுள்ளகப்பட்ட பெண்மான்போல அவ்வரக்கிகளால் சூழப்பட்டு நடுங்கித் துன்புற்றுச் சிறிதும் மனந்தேறியிலர்; அந்த அசோகவனமும் எக்காலையிலும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தழைத்த பலவகை மரங்களடர்ந்து எப்பொழுதும் மதுவுண்டு மதங்கொண்ட பற்பல பறவைகளினாலொலிக்கப்பட்டு விளங்கிற்று; அப்பொழுது பிராட்டியாரும் அங்கிருந்து மிகத் துன்புற்றுப் பெருமானையே தியானஞ்செய்துகொண்டு வேறொன்றினையும் கண்ணுறாமலும், நினைக்காமலும், மயக்கங்கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தாறுவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்தேழாவது சருக்கம்.

பெருமாள் மாரீசனைக் கொலைசெய்து மீண்டுவருகையில், இளையபெருமாள் வந்துவிட்டதையும், அபசகுனங்களையும் கண்டு பிராட்டியார்க்குத் தீங்குநேர்ந்திருக்குமென்று சிந்தையுற்றது.

அங்கே பெருமாளும் மானுருக்கொண்ட அந்த மாரீசனைக் கொலை செய்து விரைவாக மீண்டுவருகையில், தன் பின்புறத்தில் நரி கோரமாக ஊளையிடக்கண்டு அந்தோ ? யாதோ தீங்குநேர்ந்திருக்கின்றது ; வைதேஹி ! ராக்ஷஸர்களால் பக்ஷிக்கப்படாமல் இன்புற்று வாழ்ந்திருப்பாளா ? மாரீசன் என்னைப்போலக் கூவி யழுததொனியை லக்ஷ்மணன் கேட்டிருப்பானாகில், ஸீதையை யங்கே விட்டுவிட்டோடிவருவான் ; ஸீதையும் அந்தத்தொனியைக் கேட்டவுடன் மிகத் துன்புற்று லக்ஷ்மணனை யுடனே என்னிடமனுப்பிவிடுவாள் ; ஸீதையை யந்தத் தருணம் பார்த்து ராக்ஷஸர்கள் பலர்கூடிக் கொலைசெய்ய நினைப்பார்கள் ; இந்த எண்ணத்தினாலேதானே மாரீசன் மானுருக்கொண்டு என்னை நெடுந்தூரம் இழுத்தலைத்தனன்; ஸீதாலக்ஷ்மணர்களிருவர்க்கும் மங்களமுண்டாகுமா? கராதிகளைக்கொலைசெய்ததுமுதல் ராக்ஷஸர்கள் என்மேல் பகைகொண்டு சமயம்பார்த்திருக்கின்றனர்கள்; இப்பொழுது பற்பல அபசகுனங்களும் காணப்படுகின்றன ; என்றிவ்வண்ணஞ் சிந்தை செய்துகொண்டே விரைவாக வருகையில், இளையபெருமாள் தனியே வரக்கண்டு கிட்டி யவரை நோக்கி, அடா லக்ஷ்மணா ! ராக்ஷஸர்கள் நிறைந்த இந்தக்கொடிய கானகத்தில் ஸீதையைத் தனியே விட்டு வரலாகுமோ ? நீ இப்பொழுது ஸீதையை விட்டு வந்தது இகழத்தக்கதேயன்றி, உகக்கத்தக்கதாகாது ; இனி நமக்கு நல மெவ்வண்ணம் உளதாகும் ? ஸீதை ராக்ஷஸர்களால் கொல்லப்பட்டனளோ ? பக்ஷிக்கப்பட்டனளோ ? அல்லது, பறித்தொளிக்கப்பட்டனளோ ? இனி யாம் ஸீதையை யாசிரமத்தில் காணோம் ; இவ்விஷயத்தில் யான் சிறிதும் ஐயமுறுகின்றிலேன் ; மிகவும் அபசகுனங்களே யாகின்றன ; அடா லக்ஷ்மணா ! ஸீதை யழிவற்றிருக்கவும் காண்போமா ? நரி முதலிய விலங்குகளும், பறவைகளும், கோரமாக நாற்புறங்களிலும் கூவுகின்றனவே ? ஸீதை நலமுற்றிருப்பாளா ? இந்த மாரீசனும் மானுருக்கொண்டு என்னை மோசஞ்செய்து நெடுந்தூரமலைத்துக் கடையில் என்னால் கொலைசெய்யப்பட்டு இறக்கும்பொழுதே அரக்கனாயினன்; என்னுடைய மனமும் மகிழ்வற்று வருந்துகின்றது ; இடக்கண்ணும் துடிக்கின்றது ; அடா லக்ஷ்மணா ! சந்தேஹமேயில்லை ; ஸீதை பறிக்கப்பட்டனளோ ? அல்லது, கொல்லப்பட்டனளோ ? அல்லது, நடுவழியில்

இழுக்கப்படுகின்றனளோ ? நாம் இனிச் சீதையைக் காணமாட்டோம்; நீ சீதையை விட்டு வந்தது தகுதியற்றது; என்று லக்ஷ்மணருடைய கையைப் பிடித்துக்கொண்டு உரைத்து இகழ்ந்து வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தேழாவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்தெட்டாவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளுடன் திரும்பிவந்து பிராட்டியாரை எங்குங்காணுமல் மிகவும் துயருற்று வருந்தியது.

பெருமாள் மீளவும் பிராட்டியாரைவிட்டுத் தனியே வந்த இளைய பெருமாளை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மணு ! யான் திருவயோத்தியை விட்டுத் தண்டகாரணியத்துக்குப் புறப்படுகையில், யாவளொருத்தி முற்றுந்துறந்து என்னையே நம்பிப் பின்றொடர்ந்தனளோ ? அந்தச் சீதை இப்போது எங்கிருக்கின்றனள் உரையாய்; யான் அரசிழந்து தீனமுற்றுக் காடுறைந்து வருந்துகையில், யாவள் துணையாயினளோ ? அந்த என் தருமபத்தினி எங்கே ? எவளைப் பிரிந்து யான் கணப்பொழுதும் இன் புற்று வாழேனே ? அந்த நாயகி எங்கே ? இந்தப் பார் முழுதும் ஆளுகை யாயினும், இந்திரன்பட்டத்தையாயினும், யான் அந்தச் சீதையின்றி விரும்பேன் ; எனக்குயிரினும் பிரியமுள்ள அந்த ஜானகி ! பிழைத்திருக் கின்றனளா ? யான் பதிஞலாண்டு வனவாஸஞ் செய்வேனென்று செய்த பிரதிஜ்ஞை பொய்யாகாமல் நிறைவேறுமா ? (சீதையைக் காணேனுகில், உடனே இறப்பேன் ; அப்போது பதினன்குவருஷம் பூர்ணமாகாமல் போய்விடுமே) அடா லக்ஷ்மணு ! சீதையை யிழந்து, யானிறந்து, நீ மாத்திரம் படைவீடுபோய்ச் சேர்வாயாகில், கைகேயி மனமீடேறி இன் புற்று வாழ்வாள் ; தன்மகன் பாராளுகின்றனனெனச் செருக்குற்றிருக் கின்ற கைகேயியை மகனையிழந்த என் மாதா ! தினந்தோறும் வந்து வந்து பணியவேண்டும் காலம் நேருமந்தோ ? அவ்வண்ணம் நேராமல் நலம் விளையுமா ? சீதை யாசிரமத்தில் பிழைத்திருக்கின்றனளாயின், ஆசிரமத்திற்கு வருவேன் ; இறந்திருப்பளாயின், யான் இவ்விடத்திலே தானே உயிர் விடுவேன் ; யான் ஆசிரமத்திற்குச் செல்லுகையில், சீதை புன்னகையுடன் இனியமொழி மொழியாளாயின், உடனே இறப்பேன் ; அடா லக்ஷ்மணு ! நீ யுண்மை யுரையாய்; சீதை பிழைத்திருக்கின்றனளா? இல்லையா ? ஒருவேளை நீ யூக்கமற்றிருக்கையில், அரக்கரால் பக்ஷிக்கப் பட்டனளோ ? அவள் மிகவும் ஸுகுமாரமுடையவளும், இளமையுற்ற

வளும், துன்புறத்தகாதவளுமாதலின், என்னைப் பிரிந்ததனால் மிகவும் துன்புற்றே யிருப்பாளென நம்புகின்றேன்; அந்தக்கொடிய மாரீசன் இறக்கும் சமயத்தில் என்னைப்போலக் கூவி யழைத்தமையின், அதைச் செவியுற்று நீயும் அச்சமுற்றிருப்பாய்; சீதையும் அந்தத்தொனியைக் கேட்டுத் துன்புற்று உன்னை யனுப்ப நீயும் அந்த வாக்கியத்தைத் தவரு மைக்காக அவளை விட்டு வந்தனையென எண்ணுகின்றேன்; எவ்விதத்தி லும் நீ சீதையை விட்டு வந்ததினால் மிகவும் கஷ்டம் நேர்ந்தது; அந்தக் கொடிய ராக்ஷஸர்கள் நம்மேலுள்ள பகையைத் தீர்த்துக்கொள்வதற் கிடங்கொடுத்துவிட்டனை; கரதிவதத்தினாலே துன்புற்றுப் பகைகொண் டிருந்த ராக்ஷஸர்கள் இத்தருணத்தில் சீதையைக் கொலைசெய்திருப்பார்க ளென்பதிலையமிலது; அடா லக்ஷ்மணா! இனி யான் துன்பக்கடலில் மூழ்கினேன்; இனிச்செய்யத்தக்கதென்ன? விதிவசம் இத்தன்மைய தெனவே எண்ணுகின்றேன்; என்றிவ்வண்ணமுரைத்துச் சீதாதேவி யையே நினைந்துகொண்டும், இளையபெருமாளை இகழ்ந்துகொண்டும், பசி யினாலும், சிரமத்தினாலும், சோகத்தினாலும், பெருமூச்செறிந்துகொண் டும், முகம்வாடி, ஒளிகுன்றி, விரைவாக வாசிரமத்திற்கு வந்து சீதை யைக்காணாமல், மற்றும் பற்பல இடங்களிலும் தேடி எங்குங்காணாமையி னால், இதுதான் அது (யான் எண்ணபடியேயாயிற்று) இதுதான் (யான் இங்குவந்ததற்கு மூலம்) என்று நினைந்து மயிர்க்குச்செறிந்து துன்புற்று வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தெட்டாவது சருக்கம்
முற்றிற்று.

ஐம்பத்தொன்பதாவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளை நோக்கி, ஏன் சீதையைவிட்டுத் தனியே வந்தனையென்று வினவியருள, இளையபெருமாள் பிராட்டியாருரை த்த வன்மொழியால் வந்தேனென உரைத்தருளியது.

இது முன்பு சுருக்கி யுரைத்ததையே மீளவும் விரிவாக வுரைத்தது.

அநந்தரம் ஆசிரமத்தினின்றும் பிராட்டியாரைவிட்டுத் தனியேவந்த இளையபெருமாளைப் பெருமாள் நோக்கி, அடா லக்ஷ்மணா! நீ சீதையைத் தனியே விட்டு விட்டு ஏன் வந்தாயடா? உன்னை நம்பியே நான் அவளை

விட்டு வந்தேனே ? நீ தனியே வந்ததைக்கண்டு என்மனம் மிகவும் நடுங்கு கின்றது ; என்னுடைய இடக்கண்ணும், இடத் தோளும், இதயமும் துடிக்கின்றன; சீதையை ஏன் விட்டு வந்தனை யுரையாயென வினவுதலும், இளையபெருமாள் பெருமாளை நோக்கி, ஸ்வாமி எம்மையபோ ! யான் சுய மாகவே பிராட்டியாரை விட்டு விட்டு வந்திலேன் ; பிராட்டியார் மிகவும் கொடிய வன்மொழிகளினுலென்னை இகழ்ந்தேவினமையின் வந்தேன் ; தேவரைப்போல அந்த மாயா மாரீசனுல் அந்தோ ? லக்ஷ்மணு ! அந்தோ! வைதேஹி ! காத்தருள்க; என்று கூவின கூக்குரலைப் பிராட்டியார் செவி யுற்று, தேவருக்கே தீங்குநேர்ந்ததாக எண்ணி, மிக வருந்தி, அச்சங்கொ ண்டு, கண்ணீர்பெருக்கி யழுது போபோவென்று என்னை ஏவினர். அதற்கு யான் உடன்படாமல் அம்மா ! இது பெருமாளுடைய தொனியே யன்று ; யாரோ வஞ்சனைசெய்வதன்பொருட்டுக் கூவுகின்றனர் ; அஞ் சற்க ; என்று யான் பெரும்பாலும் தேற்றி மறுத்துரைத்தேன் ; தேவர் களையும் பாதுகாக்கவல்ல எம்மையர் இவ்வண்ணம் அற்பன்போலக் கூவு வாரோ ? என்றும், உறுதியாகவுரைத்து வேண்டினேன் ; பிராட்டியார் அதனைக்கேட்டும் தீரமுறுமல் மீளவும் ஏவினர் ; மீளவும் யான் அவரை நோக்கி, அம்மா ! நீர் ஏன் வீணுகத்துயருறுகின்றீர் ; தேவரும் இவ் வண்ணம் துன்புறலாகுமோ ? யாவனே ஒரு அரக்கனே என்னையர் போலக் கூவினன்.

నసోస్తిత్రిషులోకేషు పుమాన్ వైరాఘవంరణే
జాతోవాజాయమానోవా నంయుగేయఃపరాజయేత్.

நஸோஸ்தித்ரிஷுலோகேஷு புமான்வைராகவம்ரணே
ஜாதோவாஜாயமானோவா ஸம்யுகேயஃபராஜயேத்.

என்னையரைப் போரில் எதிர்த்து வெற்றிகொள்ளத்தக்க திறமை யுடையோன் மூவுலகங்களுள்ளும், பிறந்தவர்களுள்ளும், பிறக்கின்றவர்க ளுள்ளும், ஒரு ஆண்பிள்ளையுமிலன் ; இந்திரன் முதலிய தேவர்களாலும் வெற்றிகொள்ளப்படாரென்று பலவிதமாகவுந் தேற்றினேன் ; அதற்கும் மனந்தேறுமல் மனங்கலங்கிக் கண்ணீர்பெருக்கி என்னை நோக்கி, மைத்துன ! நீ என் மீது மிக விருப்பங்கொண்டிருக்கின்றனை ; ஆதலின், அண்ணன் இறக்கவேண்டுமெனவே நீ நினைக்கின்றனை ; என்னை நீ யொரு பொழுதும் அடையாய் ; சமயம்பார்த்து ராமனைக் கொலைசெய்து என்னைக் கொண்டுவரும்படி பரதன் சங்கேதஞ்செய்தே உன்னை யனுப்பி யிருப்பான்; ஆதலாலே, என் பிராணநாயகர் துன்புற்றுக் கூவுகையிலும், நீ விரைந்தோடிப் பாதுகாக்கின்றிலை ; என்னைப் பெறுவதன்பொருட்டே நீ கபடங்கொண்டு உடன் வந்தனை ; ஆதலின், நீ பகையே யாகின்றனை ; என்றிவ்வண்ணம் பிராட்டியார் என்னைப் பழித்துரைத்தமையின், யான்

சினங்கொண்டு, கண்சிவந்து, உதடுதுடித்து, வெறுப்புற்றோடிவந்தே னென்று மொழிந்தனர். பெருமாள் அம்மொழியைக்கேட்டு மீளவும் இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி! நீ யாதுரைக்கினும் சீதையைத் தனியே விட்டுவந்ததென்பது குற்றமேயாகும்; எல்லாவரக்கர்களையும் யான் கொலைசெய்வேனென்பதை யறிந்தும், சீதையின் கோபவாக்கியத் தைக்கேட்டு வந்தது தகுதியற்றது; நீ சீதையை விட்டு வந்ததை யான் தகுமென வுகவேன்; பெண்கள் சினமுறுவதும், வன்மொழி மொழி வதும் இயல்பேயாதலின், அதற்காக நீ வந்தது தகாது; சீதை முனிந் துரைத்த வன்மொழியைக்கேட்டு நீயும் முனிவுகொண்டு என் கட்டளையை மீறிவந்ததென்பது உனது குற்றமேயாகும்; மான்வேஷங்கொண்டு யாவ னொருவன் என்னை நெடுந்தூரமலைத்தனனோ? அந்த மாரீசன் என் கணை யினு லடிபட்டு இதோ வீழ்ந்திருக்கின்றனன் பாராய்; யான் வில்லைப் பிடித்து நாணேயிழுத்துக் கணைதொடுத்தெய்கையில், உடனே இவன் மானுருவைவிட்டுக் கேயூரகுண்டலாதியாயுள்ள வணிகளை யணிந்த ராக்ஷஸசரீரத்தையடைந் திறந்தனன்; அவனே என்னைப்போலத் தீனங் கொண்டு கூவினன்; அதைக்கேட்டு நீயும் சீதையைத் தனியேவிட்டு வந்தனை யந்தோ? என்றருளிச்செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் ஐம்பத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

அறுபதாவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியாரைக்காணுமல் தேடி யலைந்து வருந்தல்.

அநந்தரம் பெருமாளிளையபெருமாளுடன் விரைவாக எழுந்தருளு கையில், இடக்கண்துடித்துக் காலிடறி மெய்நடுங்கி மனங்குன்றின மையின், இந்த அவசகுனங்களினுல் யாதோ தீதுநேர்ந்ததென எண்ணி, சீதைக்கு க்ஷேமமும் நேருமாவென்று உரைத்துக்கொண்டே வந்து ஆசிரமத்தில் பிராட்டியாரைக்காணுமல் வருந்தி, வேகத்தினுல் மேலெழு பவர்போலவும், கைகளை யுயரவெடுத்துக்கொண்டு எங்கெங்கே பிராட்டி யார் வீற்றிருக்குமிடமோ? அங்கங்கே எழுந்தருளிப் பிராட்டியாரைக் காணுமல் பனிக்காலத்தில்சோபையிழந்துமடலுதிர்ந்ததாமரைபோலவும், வாடி வருந்திய பூ பறவை விலங்குகளையுடைய மரங்களினுல் அழுகின்றது போலவும் ஒளியிழந்து, வனதேவதைகளினுல் துறக்கப்பட்டும், அங்கங் கிறைக்கப்பட்ட தருப்பை, மரவுரி, தவிசு, பாய் முதலியவற்றை யுடை

யதுமாகிப் பாழடைந்த பர்ணசாலையைக் கண்டு புலம்பலுற்றனர். அந்தோ ? வைதேஹி ! அரக்கர்களால் பறிக்கப்பட்டனளோ ? அல்லது, கொல்லப்பட்டனளோ ? அல்லது, வழிதப்பி எங்கேயாயினும் சென்றனளோ ? அல்லது, பக்ஷிக்கப்பட்டனளோ ? அல்லது, அச்சமுற்று மறைந்திருக்கின்றனளோ ? அல்லது, காய் கனி மலர் தளிர்களைக் கொய்வதன்பொருட்டுக் கானிடைச்சென்றனளோ? அல்லது, தீர்த்தம் கொணர்வதன்பொருட்டுக் கோதாவரிக் கெய்தினளோ ? என்றிவ்வண்ணம் எண்ணிப் புலம்பி யங்கங்குச்சென்று தேடியும் பிராட்டியாரைக்காணமல் சோகத்தினால் கண்சிவந்து பித்தேறினவன்போல ஒரு மரத்தினின்றும் மற்றொருமரத்துக்கும், மலையினின்றும் மலைக்கும், நதியினின்றும் நதிக்குமாகவோடி யலைந்து, கடப்பமரத்தை நோக்கி, அடா கதம்பா ! சீதை யுன்மேல் மிகப் பிரியமுடையளாகுவாள் ; அவளை நீ எங்கேயாயினும் கண்டாயா ? அறிவாயாகில், உரையாயென்று வினவி ; பில்வமரத்தையுங் கிட்டி அடா பில்வா ! என் பாரியை உன்னுடைய இளந்தளிர்போலக் கோமளதமமான திருமேனியுடையாள், பீதாம்பரமுடுத்திருப்பாள், உன் கனியையொத்த கொங்கையுடையாள், அவளை யறிவாயாகில், உரையாயென்று வினவி ; வெண்பாலைமரத்தையும் கிட்டி, அடா வெண்பாலைமரமே ! உனது மலர்மேல் மிகப்பிரியமுடைய என்னாயகி ! பிழைத்திருக்கின்றனளோ ? இல்லையோ ? உரையாயென்று வினவிக் கருபமரத்தையுங் கிட்டி அடா மருதமரமே!உன்னைப்போன்ற தொடையையுடைய என் பத்தினியை யறிவாயல்லையோ ? எங்கிருக்கின்றனளுரையாய் என்று வினவியொன்றும் பதிலுரையாமையின், மஞ்சாடிமரத்தைக்கிட்டி யது தளிர்த்துப் பூத்து வண்டுகளொலித்து விளங்கினமையின், இது சீதையை யறிந்ததுபோலும் என்று நினைந்து அதனை நோக்கி, அடா திலகமரமே ! திலகப்பிரியையான என் பிரியையை நீ யறிவாயாகிலுரையாயெனவினவி; அசோகமரத்தைக்கிட்டி அசோகமரமே ! சோகத்தைப் போக்குகின்றமையின், அசோகமென்னும் பெயருடையோய்; என் பிரியையைக்காட்டி என்னையும் உன்னைப்போல அசோகனாக (சோகமற்றவனாக) விரைவில் செய்யாயென்று வினவிப் பனைமரத்தையும் நோக்கித் தாலமரமே ! என் பாரியை உன்னுடைய பழம்போன்ற கொங்கையுடையாள் ; அவள் எங்கிருக்கின்றனள் ? என்மீதுனக்கருளுளதாயின், உரையாயென்று வினவி ; ஜம்பூமரத்தை நோக்கி, நாவல்மரமே ! என்னாயகி உன்னுடைய பழம்போலத் தளதளவென்று மின்னுந் திருமேனியுடையள் ; அவளை யறிவாயாகில், ஐயமின்றி யுரையாயென்று வினவிக் கோங்குமரத்தை நோக்கிக் கர்ணிகாரமே ! உனது மலர்மேல் மிகவும் பிரியமுடைய என்னாயகியைக் கண்டனையாகிலுரையாயென்று வினவி; இவ்வண்ணமே மா, கடம்பு, ஆச்சா, பலா, மருதாணி, மாதளை, வேங்கை முதலிய மரங்களையும் வினவி ; அவ்வண்ணமே மல்லிகை, சிறுமல்லிகை, சம்பகம், தாழை முதலிய

செடிகளையும் வினவி; ஒன்றும் பதிலுரையாமையின், விலங்குகளையும் நோக்கி, அடா மானே! உன்னைப்போலவே கண்ணுக்குடைய என் மனையாளைக் கண்டனையோ? அடா யானையே! உனது துதிக்கைபோன்ற தொடையையுடைய என் பாரியையைக் கண்டனையோ? அடா புலியே! என்னுயகியுன்னைக்கண்ணுறின், அச்சமடைவாள்; அவளை நீ கண்டனையோ என்று வினவி; உன்மத்தங்கொண்டு நாற்புறங்களிலும் தேடி யலைந்து அதுவே சிந்தையாயிருந்தமையின், எங்கும் பிராட்டியாரிருப்பார்போலக் கண்டு அடி நாயகி! நீயேன் நெடுந்தூரமோடுகின்றனை; உன்னை யான் கண்டுகொண்டேன்; மரங்களின் இடையில் மறைந்து மறைந்து ஓடற்க; நிற்க நிற்க; உனக்கென்மீதருள் இல்லையா? ஏன் பதிலுரைக்கின்றிலை; நீ நெடுங்காலம் பரிஹாஸஞ் செய்ததில்லையே? ஏன் என்னை யுபேக்ஷை செய்கின்றனை; பீதாம்பரத்தினல் அறிந்துகொண்டேன்; என்மீதன்புள தாயின், ஓடாது நிற்க; அந்தோ? இவள் சீதை யல்லள்போலும், அரக்கர்களால் கொலைசெய்யப்பட்டனள்போலும், பிழைத்திருப்பாளாயின், இவ்வண்ணம் யான் வருந்துகையிலும் உபேக்ஷைசெய்வாளோ? யானில்லாமலிருக்கையில், அரக்கர்கள் சீதையின் அவயவங்களைப் பங்குபோட்டுக்கொண்டு பக்ஷித்தார்கள். அப்பொழுது முழுமதிபோன்ற நாயகியின் திருமுகமண்டலம் ஒளியிழந்திருக்குமந்தோ! சம்பகம்போன்ற நாயகியின் கண்டத்தை அவள் கூவி யழுகையில், அரக்கர்கள் கடித்துப் பக்ஷித்திருப்பார்கள்; தளிர்போன்ற கைகளும் முறிக்கப்பட்டுப் பக்ஷிக்கப்பட்டிருக்குமந்தோ? என் பிராணநாயகி! அரக்கர்களுக் குணவாவதன்பொருட்டே என்னை விட்டுப் பிரிந்து, லக்ஷ்மணனாலும், மற்றுள்ள வழிப்போக்கர்களாலும் துறக்கப்பட்டு, இனத்தார் சுற்றத்தார் பலபேர்களை யுடையளாகியும், அநாதையாகிப் பக்ஷிக்கப்பட்டனள். அடா லக்ஷ்மணா! என் பிராணநாயகியைக் காண்கின்றனையா? அடி சீதாதேவி! நீ என்னைவிட்டெங்கெய்தினையோ? என்றிவ்வகையாக அடிக்கடிக் கூவி யழுது, ஒரு காட்டினின்று மற்றொருகாட்டுக்கோடியும், சில விடங்களில் வேகத்தினல் சுழன்றும், சிலவிடத்தில் மயங்கியும், சிலவிடத்தில் பித்தேறினவன்போலவலைந்தும், பிராட்டியாரையே தேடிக்கொண்டு காடுகளையும், நதிகளையும், மலைகளையும், அருவிகளையும், சுனைகளையுங்கடந்து, எங்கும் நிலைகொள்ளாமல் காடெங்குந்திரிந்தும் பிராட்டியாரைக்காணமல் மேன்மேலும் தேட முயன்று மிக வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபதாவது சருக்கம்

முற்றிற்று.

அறுபத்தொன்றாவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியாரைக்காணமல் புலம்பியதும், இளையபெருமாள் தேற்றியதும்.

சக்கரவர்த்தித்திருமகனாரிவ்வண்ணம் தேடிப் பிராட்டியாரை யாசிரமத்தில் காணாமல் எங்குமலைந்து கூவிக் கைகளை யுயரவெடுத்து, அடா லக்ஷ்மணா ! சீதை எங்கே யிருக்கின்றனள் ; இங்கிருந்து எங்கேயாவது சென்றனளோ ? யாவனாயினும் எடுத்தோடினனோ ? எவனாலேயாவது பக்ஷிக்கப்பட்டனளோ ? அடி வைதேஹி ! என்னைப் பரிஹாஸஞ் செய்வதன்பொருட்டு மரத்திடையில் மறைந்திருக்கின்றனையோ ? அடி என் பிராணநாயகி ! என்னைப் பரிஹாஸஞ்செய்ததுபோதும் எதிரில் வருக ; நீ எந்த விலங்குகளுடனும், பறவைகளுடனும் விளையாடுவாயே ? அவையெல்லாம் இங்கே உன்னைக் காணாமல் கண்ணீர்பெருக்கிச் சிந்தையுற்றிருக்கின்றன ; அடா லக்ஷ்மணா ! சீதையின்றி, யான் பிழையேன் ; சீதாசோகத்தினாலிறந்த என்னை வானுலகில் சக்கரவர்த்தியார் காண்பார் ; அப்போழ்தவர் என்னை நோக்கி, அடா ராமா ! பதினான்குவருஷம் வனவாஸம் செய்வேனென்றுடன்பட்டுப் பின்பு, அதனைத் தீர்க்காமலே இங்கெய்தினை யல்லையோ ? இவ்வண்ணம் பொய்யனான உன்னை யிகழ்க ; என்று என்னை நோக்கி யுரைப்பார் ; அந்தோ ? அடி வைதேஹி ! மிகவும் சோகக்கடலிலாழ்ந்த என்னைப் புகழ், கபடமுடையோனைத் துறப்பதுபோலத் துறந்து எங்கெய்தினை ? என்னைத் துறவற்க ; யான் உன்னைப் பிரிவேனாகில், உயிரையே விட்டு விடுவேன் ; என்றிவ்வண்ணம் புலம்பிப் பிராட்டியாரைக்காணமல் துன்புற்றுச் சேற்றில் புதைந்த குஞ்சரம்போல வருந்துகையில், இளையபெருமாள் நோக்கி, எம்மையனே ! இவ்வண்ணந் துன்புறற்க ; என்னுடன் கூடி மேன்மேலு முயற்சிசெய்க ; இந்தக் கானகமும் பற்பல குகைகளையுடையதும், விஸ்தாரமுடையதுமாகின்றது ; பிராட்டியாரும் காட்டிலுலாவுகையில், மிகப் பிரியமுடையவராதலின், எங்கேயாயினும் சென்றிருப்பார் ; அன்றியில், கோதாவரிக்காயினும் சென்றிருப்பார் ; அல்லது, பரிஹாஸத்தின்பொருட்டு எங்கேயாவது மறைந்திருப்பார் ; அல்லது, மறைந்து நம்மை அச்சமுறச்செய்ய நினைத்திருப்பார் ; தேவரையும், அடியேனையும் தேடுவதன்பொருட்டாயினும் சென்றிருப்பார் ; ஆதலின், அவரைத் தேடுவதன்பொருட்டே முயற்சி செய்வோம் ; காடெங்குந்தேடிப் பிராட்டியாரிருக்குமிடத்தை யறிவோம் ; சீதாபிராட்டியாரைத் தேடத் திருவுளமுறுவீராகில், துன்புறற்க ; என்றுரைத்துத் தேற்றினர். பெருமாளும் அதுகேட்டுச் சோகத்தையடக்கித் திருத்தம்பியாருடன் காடு மலை யாறு குளங் குட்டை மலைத்தாழ்வரைகள்

குகைகள் சிகரங்கள் முதலிய எல்லாவிடங்களிலும்தேடியும் பிராட்டியாரைக்காணுமல் தம்பியை நோக்கி, அடா லக்ஷ்மணு ! இவ்விடங்களிலெங்கும் ஜானகியைக் காண்கின்றிலேனே ? இனி யாதுசெய்வோமென வினவினர். இளையபெருமாளும் அதுகேட்டுத் துன்புற்றுப் பெருமாளை நோக்கி, ஐயரே ! மீளவும் தேடுவோம் ; தேவர் பிராட்டியாரைக் கண்டு மகிழ்ந்து அவரை எடுத்தோடின பகைவனையும் கண்ணுற்று, ஸ்ரீமஹாவிஷ்ணு பலிசக்கரவர்த்தியைக் கட்டினுப்போலக் கட்டியருள்வீரென்று மொழிந்தனர். பெருமாளும் அதுகேட்டு இளையபெருமாளை நோக்கி, அடா லக்ஷ்மணு ! காடெங்குந்தேடினேமே ? இம்மலையும், தாமரையோடையும் தேடப்பட்டன ; என்னுயிரினும் பிரியமுடைய வைதேஹியைமாத்திரம் கண்டிலேன் ; இனித்தேடவேண்டுமிடம் எங்குளது ; என்றிவ்வண்ணமுரைத்தருளிச் சோகக்கடலில்மூழ்கி முகூர்த்தகாலம் மோஹங்கொண்டு வெப்பமாகநெட்டுயிர்ப்பெறிந்து தீனமடைந்துட்கார்ந்து, மீளவும் மோகந் தெளிந்து, அந்தோ ? பிராணநாயகி ! எங்குறைகின்றனையெனக் கூவிப் புலம்பி வருந்தினர். பின்பு, இளையபெருமாளும் பலவிதமாக விநயம் பூண்டு வணக்கமாகக் கைக்கூப்பி வேண்டி இனியனமொழிந்து தேற்றினர். பெருமாள் அதனைக் கேளாமலே பிராட்டியாரைக்காணுமல் அடிக்கடிக் கூவி யழுதனர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தொன்றுவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்திரண்டாவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியாரைக்காணுமல் சோகக்கடலில்மூழ்கிப் பலவாறுகப் புலம்பி உயிரைவிடுவேனென வருளிச்செய்ய, இளைய பெருமாளும் மிகத் துன்புற்றது.

பெருமாளிவ்வண்ணம் தேடியும் பிராட்டியாரைக்காணுமல் பலவிதமாகப் புலம்பி சிந்தையினுல் பிராட்டியார் எதிரில் நிற்பதாகவெண்ணியாராய்ந்து, பின்பு காணுமல் வருந்திக் காமவேட்கையால் வருந்தி அடிநாயகி ! நீ மலர்மேல் மிகப் பிரியமுடையை யாதலின், அசோகமரத்திடையில் மறைந்தனையோ ? உனது தொடைகள் வாழைத்தண்டுகளுக்கு ஒப்பானவையாதலின், வாழைமரத்திடையில் மறைந்தனையோ ? உன்னுல் மறைய முடியாது ; யான் கண்டு கொள்வேன் ; அடி வைதேஹி ! பரிஹாஸஞ் செய்வதன்பொருட்டுக் கோங்குமரத்திடையில் மறைகின்

றனையே ? பரிஹாஸஞ்செய்ததுபோதும், எனக்குத் துன்பம் வளர்கின்ற தே ; அடி பிராணநாயகி ! பரிஹாஸஞ்செய்வதினல் யாதுபலன் ? யான் மிக வருந்தி யிருக்கின்றேனல்லேனே?என்னுடன் பரிஹாஸஞ்செய்வதே தகுதியற்றது ; அன்றியும், தவசியாகிக் காட்டிலுறைகையில், இது மிகவுந் தகுதியற்றது ; உன்னுடைய இயல்பும் பரிஹாஸஞ்செய்வதிலே மிக விருப்பமுடையமதெனவுமறிவேன் ; அடி யகன்றகண்களையுடைய நாயகி ! நீயின்றி, இவ்வாசிரமம் பாழடைந்திருக்கின்றது ; விரைவாக இங்கெய் தாய் ; அந்தோ ? சீதை ராக்ஷஸர்களால் பக்ஷிக்கப்பட்டனளென்பதில் ஐயமிலது ; அல்லது, பறித்தொளிக்கப்பட்டனளோ ? அடா லக்ஷ்மணா ! அவள் இங்கே பிழைத்திருப்பளாயின், யானிவ்வண்ணம் கூவி யழுகையி லும், இங்கெய்தாதிருப்பளோ ? இம்மான்கூட்டங்களும் கண்ணீர்பெருக்கி வருந்துகின்றமையின், சீதை ராக்ஷஸர்களால் பக்ஷிக்கப்பட்டனளென உரைக்கின்றனபோலும், அந்தோ ? என் பிராணநாயகி ! எங்கெய்தினை ; அந்தோ ? உன்னல் கைகேயியார் மனம் ஈடேறிற்று ; சீதையுடன் புறப் பட்டுத் தண்டகாவனஞ்சேர்ந்தேனே ? இப்போழ்து சீதையின்றித் தனியே எவ்வண்ணம் மீளவும் திருவயோத்திக் கெய்துவேன் ; யான் சீதையை இழந்தமையின், திறமையற்றவனெனவும், அருளற்றவனென வும், அச்சமுடையோனெனவும், யாவரும் என்னை இகழ்வார்களந்தோ ? யான் வனவாஸந்தீர்ந்து மீண்டெய்துவேனாகில், ஜனகசக்கரவர்த்தியார் என்னை நல்வரவு வினவுவாராயின், யான் யாதுரைப்பேன் ; எவ்வண்ணம் அவரைக் காண்பேன் ; சீதையை யிழந்து தனியே வந்து நின்ற என்னை யவர் கண்டவுடனே மோஹமடைந்து வருந்துவாரந்தோ ? ஆதலின், யான் இனிப் பரதனல் காக்கப்பட்ட திருவயோத்திக்குப் போய்ச் சேரோன் ; சீதையின்றி எனக்குப் பொன்னுலகும் பாழேயாகின்றது ; அடா லக்ஷ்மணா ! நீ என்னை இவ்விடத்திலேதானே விட்டு விட்டுத் திரு வயோத்திக்குச் சென்று வாழ்க ; யான் சீதையின்றி, ஒருபொழுதும் பிழையேன் ; நீ யங்கே பரதனைக்கண்டு தழுவி யான் அனுமதிகொடுத்த மையின், நீயே பாராண்டு வாழ்க ; என்று யான் உரைத்ததாக வுரையாய் ; கைகேயி சுமித்திரை கோஸலையார் முதலிய மாதாக்களையும், யான் வண ங்கி வந்தனஞ்செய்ததாக வுரையாய் ; கோஸலையாருடன் இங்குற்ற செயல்களையெல்லாம் விரிவாகவுரைத்து, அவர் துன்புற்று வருந்தா வண்ணம் தேற்றிப் பாதுகாத்து வருக ; என்றிவ்வண்ணமொழிந்து புலம்பி வருந்துகையில், இளையபெருமாளும் அதுகேட்டு மிகவும் துன் புற்று வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்திரண்டாவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்துமூன்றாவது சருக்கம்.

இதுவும் பெருமாள் இளையபெருமாளுடன் பலவிதமாகப் புலம்பி வருந்தியது.

அந்தச் சக்கரவர்த்தித்திருக்குமாரர் இவ்வண்ணம் மங்கையர்க்கரசியாளையிழந்து காமத்தினாலும், சோகத்தினாலும் வருந்தித் தம்பியும் மிகத் துயருறும்படியாகப் பெரும்பாலும் துன்பக்கடலில் மூழ்கி நெட்டுயிர்ப்பு விட்டு இளையபெருமாளைநோக்கி, அடா லக்ஷ்மணா!எனக்கு நிகரான தீவினையோர் இவ்வுலகினில் வேறொருவருமிலரென நம்புகின்றேன்; துன்பங்கள் மேன்மேலுந்தோன்றி இடைவிடாது என்னிதயத்தைப் பிளக்கின்றனவே? முற்பிறப்பில் யான் பற்பல தீவினைகள் செய்தேன்போலும், அத்தீவினைகளின் பலன்களே இப்பிறப்பில் மேன்மேலும் விளைகின்றன; ராஜ்ஜியத்தையிழந்தேன்; இனத்தார் சுற்றத்தார்களைப் பிரிந்தேன்; தந்தையாரு மிறந்தனர்; தாயாரும் பிரிந்தனர்; மனையாளையும் பறிகொடுத்தேன்; அடா தம்பி! இத்துன்பங்களை நினைக்கையில், சோகக்கடல் கரைபுரண்டெழுகின்றது; முன்புற்ற சோகங்கள் யாவும் என் சரீரத்தைப்பற்றி எரிந்தணைந்திருந்து, இப்பொழுதுற்ற சீதையின் விரஹத்தினால் உலர்ந்த கட்டையைப் பற்றிக் காட்டுத்தீ மீளவும் எழுந்தெரிவதுபோல எரிகின்றது; என் பத்தினியாகிய அந்தச் சீதையும், அரக்கனால் பறித் தாகாயத்தி லெடுத்தோடுகையில், இனிமையாகவும், கொடுமையாகவும் புலம்பி, அடிக்கடி யச்சங்கொண்டு வருந்தி யிருப்பாளந்தோ? இவ்விஷயத்திலையமிலது; சிறந்த செஞ்சாந்தம் அப்புவதற்குரிய என்னாயகியின் கொங்கைகளும், குருதி பெருகி விளங்கியிரா? இனிமையாகவும், மெதுவாகவும், ஐயமற்றும் மொழியப்பட்ட நன்மொழியை யுடையதும், சுரிகுழல் பொருந்தியதுமாகிய என் பிராணநாயகியின் திருமுகம் ராக்ஷஸனெடுத்தோடுகையில், ராகுவினால் பிடிக்கப்பட்ட சந்திரன்போலத் திகழ்ந்திராது; சிறந்த முத்துவடங்கள் அணிவதற்குரிய சீதையின் கண்டத்தை யரக்கர்கள் பிளந்து குருதியைப் பானஞ்செய்திருப்பார்களய்யோ? அவள் நாமொருவருமின்றித் தனியேயிருக்கையில், அரக்கர்களால் பிடிக்கப்பட்டு, அச்சமும் துன்பமுமுற்று நாற்பக்கங்களிலும் நோக்கித் தஞ்சமின்றி, அழுகுரல் பறவைபோலக்கூவியழுதிருப்பாளே? அடா லக்ஷ்மணா! இந்தச் சிலையின்மேலே யன்றோ? சீதை என்னுடன் வீற்றிருந்து புன்னகையுடன் உன்னை நோக்கிப் பற்பல இனியமொழிகள் மொழிந்தனள்; அடா லக்ஷ்மணா! இந்தக் கோதாவரிநதி என் மனையாளுக்கு மிகப் பிரியமுடையதாதலின், அங்கே சென்றிருப்பாளோ என்று எண்ணுகின்றேன்; அவள் என்னை விட்டுத் தனியே யொருகாலும் சென்றிலளே? தாமரைமலர்போன்ற திருமுகமண்டலத்தை

யுடையாளும், செந்தாமரையிதழ்போலகன்ற திருக்கண்களை யுடையாளும், தாமரைமலர்மேல் மிக விருப்புடையாளுமாகிய என் சீதை என்னைவிட்டு மலர்கள் கொய்யவு மேகாளே ? இந்த வனமும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துத் தழைத்தடர்ந்த பற்பல மரங்களை யுடையதாயினும், அங்கும் என்னைவிட்டுத் தனியே யுலாவாள் ; மிக நாணமும் அச்சமும் உடையாளல்லளோ அவள்; அடா கதிரவனே ! நீ கடவுளது கட்டளையினால் எல்லாவுயிர்களுடைய நற்செயல் தீச்செயல்களுக்குச் சாக்ஷியாகி நிரந்தரம் திரிகின்றனையே? என் பிரியை எங்கெய்தினள்; பறிக்கப்பட்டனளோ? மரணமுற்றனளோ ? உண்மையாக வுரையாய் ; யான் மிகவும் துன்புறுகின்றேன் ; ஓ வாயுபகவானே ! அனைத்துலகங்களிலும் நீ அறியாச்செயலொன்றுமிலது ; ஆதலின், என் மனைவி பறிக்கப்பட்டனளோ ? மரித்தனளோ ? நடுவழியிலலைகின்றனளோ ? உரைசெய்க ; என்றிவ்வகையாகப் புலம்பித் துன்பக்கடலிலழுந்தி, மெய்வாடி மூர்ச்சையடைந்து வருந்துகையில், இளையபெருமாள் கண்டு சோகத்தையடக்கித் தீரங்கொண்டு பெருமாளை நோக்கி, ஐயரே ! தேவரும் இவ்வண்ணம் துன்புறலாகுமோ ? சோகத்தைத்துறக்க ; தீரமுறுக ; சீதாபிராட்டியாரைத்தேடுகையில், உற்சாகம் கொள்க ; உற்சாகமுடையோர்களே யல்லரோ ? எவ்விதக் கொடிய துன்பங்களிலும் வருந்துகின்றிலர்; என்று அக்காலத்திற்குத்தக்கவண்ணம் விண்ணப்பம்பண்ணியருளினர். பெருமாளதுகேட்டும் சோகந்தணியாமலும், தீரமுறாமலும், மிகத் துன்புற்று வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்துமூன்றாவது சருக்கம் முற்றிற்று.

அறுபத்துநான்காவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியார் போனவழியை யுரைக்கும்படி கோதாவரி பறவை விலங்கு முதலியவற்றைவினவ, விலங்குகள் தென்திசையைநோக்கிச் செல்ல, இளையபெருமாள் அதையறிந்து, பெருமாளுடன் அத்திசையிற்செல்லுகையில், ராவண ஜடாயுக்கள் போர்க்களத்தைக்கண்டு நிற்க ; பெருமாள் சீதை இறந்ததாக நினைந்து சீறி யருளியது.

பெருமாள் இவ்வண்ணந் துயரங்கொண்டு இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி ! சீதை யொருவேளை தாமரைமலர்கள் கொணர்வதன் பொருட்

டுக் கோதாவரிக்குச் சென்றிருப்பாள்; நீ யங்கே போய்ப்பாராயென்றருளிச் செய்தனர். இளையபெருமாள் அதுகேட்டு விரைவாகக் கோதாவரிக்குச்சென் றெங்குந் தேடித் திரிந்து வந்து பெருமாளை நோக்கி, ஐயரோ ! நான் கோதாவரியெங்குந் திரிந்து கூவினேன் ; பிராட்டியாரை எங்குங் கண்டி லேன் ; அவர் எங்கிருக்கின்றனரோ ? அறியேனென்று விண்ணப்பஞ் செய்தனர். பெருமாள் அதுகேட்டு மிக வருந்தித் தாமே நேராகக் கோதா வரிக்கெழுந்தருளித் தேடியும், பிராட்டியாரைக்காணுமல் அந்நதியை நோக்கி, அம்மா கோதாவரி! சீதை எங்கிருக்கின்றனளோ? உரையாயென்று வினவினர். அதுகேட்டும் அங்குள்ள பூதங்களும், கோதாவரியும், ராவண னுக் கச்சமுற்றுச் சீதையின் செய்தியை யுரைத்தில; பூதங்களெல்லாவற்று ளும் ஏவப்பட்டும் கோதாவரி யுரைசெய்திலது ; ராவணனுடைய அந்தக் கொடிய ரூபத்தையும், செயலையும் நினைந்து, அஞ்சி நடுங்கிற்று ; பின்பு, பெருமாள் ஆசையற்று இளையபெருமாளை நோக்கி, லக்ஷ்மண ! இந்தக் கோதாவரிநதியும் பதிலுரைத்திலது ; யான் யாதுசெய்வேன் ? ஜனகசக்கர வர்த்தியாருக்கு யாது சமாதானமுரைப்பேன் ? சீதையை விட்டு யான் தனியேபோய்க் கோஸலையாரை எவ்வண்ணங்காண்பேன்; யான் வனத்தில் காய் கனிகளையுண்டு வருந்துகையிலும், சீதையே யுடன்வந்து துயரைத் தீர்த்து மகிழ்வித்துக்கொண்டிருந்தனளே ? இனத்தார் சுற்றத்தார் மனை யாள் ஒருவருமின்றித் தனியேயிருக்கின்ற எனக்கு இரவுகள் இனிக் கல்ப கோடிகாலமாக வளருமே ! சீதையைக் காணுமளவும் கோதாவரியிலும், ஜனஸ்தானத்திலும், இந்தப் பிரஸ்ரவணமென்னும் மலையிலும், மற்றுள்ள எல்லாவிடங்களிலும் சீதையைத்தேடுவேன் ; இந்த மிருகங்களும் என்னை யடிக்கடி நோக்கி நோக்கிச் சீதையின் செயலுரைக்க முயலுகின்றனபோ லிருக்கின்றன ; என்று புலம்பி, அம்மிருகங்களை நோக்கி, அன்பர்களே ! சீதை எங்கே உரைசெய்க ; என்று கண்ணீர்ததும்ப வருந்தி வினவினர். அம்மிருகங்களும் அதுகேட்டவுடனே எழுந்து, தென்திசையாக ஆகா யத்தை நோக்கிக்கொண்டே ஓடி யடிக்கடிப் பெருமாளைப்பார்த்தன; இளைய பெருமாள் அம்மிருகங்களின் இங்கிதங்களையறிந்து, பிராட்டியார் இந்தவழி யாலேதானே போயிருப்பாரென்று ஊகித்து, பெருமாளை நோக்கி, ஐயரோ ! இம்மிருகங்கள் தேவரால் வினவப்பட்டு, உடனே தென்திசையை நோக்கி யோடுகின்றன ; ஆதலின், நாமும் அவ்வழியே செல்வோம், சீதாதேவியை யாயினும் காண்போம், செய்தியையாயினுங் கேட்போமென்று மொழிந் தருளினர். பெருமாளும் அவ்வண்ணமே யாகுகவென்று இளையபெருமாளு டன்கூடித் தென்திசையை நோக்கிப் பிராட்டியாரைத்தேடிக்கொண்டு எழுந் தருளுகையில், பிராட்டியாரணிந்த மலர்களுதிர்ந்து வழியில் வரிசையாக வீழ்ந்திருக்கக்கண்டு, துன்புற்று இளையபெருமாளை நோக்கிப் பாரடா லக்ஷ்மண ! இந்த மலர்கள் சீதை யணிந்தனவே ? என்னாலேதானே கொணர்ந்தளிக்கப்பட்டன ; இவைகளை வாட்டாமையால் வெய்யோனும்,

தூற்றுமையால் வாயுவும், அழுந்தாமலேந்திக்கொண்டிருக்கின்றமையின் மேதினியும் பாதுகாத்து, என்பொருட்டு உபகாரஞ்செய்தனர்கள்போலு மென்றுரைத்தருளி, அருவிகளினால் ஒலிக்கின்ற அந்தப் பிரஸ்ரவண மென்னும் மலையை நோக்கி,—

కచ్చిత్క్షితిభృతాంనాథ దృష్టాసర్వాంగసున్దరీ
రామారమ్యేవనోద్దేశే మయావిరహితాత్వయా.

கச்சித்க்ஷிதிப்ருதாம்நாத த்ருஷ்டாஸர்வாங்கஸுந்தரி
ராமாரம்யேவனோத்தேசே மயாவிரஹிதாத்வயா.

மலைகளுக்கிறையாகிய பிரஸ்ரவணமே ? ஸர்வாங்கஸுந்தரியும், என்னால் பிரிக்கப்பட்டவளுமாகிய (என்) பத்தினி ! உன்னால் (உன்னுடைய) அழகிய வனத்திடையில் காணப்பட்டனளோ ? என்று வினவ ? தம்முடைய வினசுலோகமே பிரதித்தொனியாக வொலிக்க ; அதைக்கேட்டு ராஜர்களுக்கிறையாகிய ஸ்ரீராமசந்திரரோ ! அங்கமெங்கும் அழகுற்றவளும், உம்மால் பிரிக்கப்பட்டவளுமாகிய (உம்முடைய) பத்தினி ! (என்னுடைய) அழகிய வனத்திடையில், என்னால் காணப்பட்டனள் ; உம்மால் பிரிக்கப்பட்டனளோ ? என்று பதிலுரைத் திகழ்ந்ததாக எண்ணிச் சினமுற்று, சிங்கம் அற்பமிருகத்தைப் பார்ப்பதுபோலப்பார்த்து, மீளவும் அதனை நோக்கி, அடா மாமலையே ! பொன்னிறமுடைய என் மனையாள் எங்கிருக்கின்றனளோ விரைவாகக் காட்டாய் ; தாமஸஞ்செய்வாயாகில், உன் தாழ்வரைகளை முற்றும் பிளந்தழிப்பேனென்றுரைத்தருளினர். அதுகேட்டும் அம்மலை பிரதித்தொனியினால் பதிலுரைப்பதுபோலிருந்தும் பிராட்டியாரைக் காட்டியதிலது ; பெருமாள் மீளவும் வெகுண்டு அதனை நோக்கி, அடா மலையே ! என் பாணத்தீயினால் எரிக்கப்பட்டு நீறுகுவாய்; புல் புதல் மரஞ் செடி குளங் குட்டைகளொன்றுமின்றி, ஒருவரும் சேர்வதற்கரியதாகி யழிவாய் ; அடா லக்ஷ்மணா ! இந்த நதியையாயினும் சுண்டும்படி செய்வேன் ; இது என் சீதையை யுரைக்கின்றிலது ; என்றிவ்வண்ணம் உரைத்துக் கொண்டே தேடுகையில், மிகக் கொடிய அரக்கனுடைய பெரிய காலடியையும், அவனுக்கஞ்சி நாலுபக்கங்களிலும் ஓடித்திரிந்த பிராட்டியாரது திருவடிகளையும், முறிந்து வீழ்ந்த வில் அம்பறாத்தூணிகளையும், பலபிளவாகச் சிதறுண்டு முறிந்த தேரையும் கண்டு, மிகவும் அச்சங்கொண்டு தம்பியை நோக்கிப் பாரடா லக்ஷ்மணா ! சீதை யணிந்திருந்த திருவாபரணங்களினின்றும் உதிர்ந்த பொன் தகடுகளும், அவிழ்ந்த மாலைகளுமிருக்கின்றன ; இவ்விடமெங்கும் செங்குருதி படிந்துளது ; ஆதலின், ராக்ஷஸர்கள் பலர் கூடிச் சீதையைக் கண்டங்கண்டமாகத் துணித்துப் பகிர்த்து பக்ஷித்தார்களென்றெண்ணுகிறேன் ; அவள் பொருட்டு இரண்டு ராக்ஷஸர்கள் இங்கே கோரமாகப் போர்செய்தனர்போலும், முத்துவடங்களினால் அலங்காரஞ்

செய்யப்பட்ட சிறந்த வில்லிங்கே முறிக்கப்பட்டுளதே; இது யாவனுடையதோ? அப்போதுதித்த ஸூரியன்போன்றதும், வைடூரியமணிகளிழைத்ததுமாகிய கவசமும் பிளக்கப்பட்டுளது; நூறு சலாகைகள்பொருந்தி, திவ்விய மாலைகளணிந்து திகழ்ந்த வெண்குடையும் முறிக்கப்பட்டுளது; யாவனுடையதோ? தங்கக்கவசம் பூண்டனவும், பிசாசமுகமுள்ளனவும், மிகப் பெரிய உருவமுடையனவுமாகிய கோவேறுகழுதைகளிறந்திருக்கின்றனவே? இவை யாவனுடையன; செழுந்திக்கு நிகராகிய சிறந்த தேரும் முறிந்து கிடக்கின்றது; தங்கக்கட்டமைந்த கணைகளும் முறிக்கப்பட்டன; அம்பறாத்தூணிகளும் ஒடிந்து கிடக்கின்றன; சாரதி கசையையும், கலினத்தையும், கையில் பிடித்துக்கொண்டே மடிந்து கிடக்கின்றனன்; பலவகை மணியணிகளையுமணிந்த இரண்டு சாமரம் வீசுவோரும் இறந்திருக்கின்றனர்; இந்த அடிவைப்பும் அரக்கனுடையதேயாகும், அரக்கருக்கே நம்மேல் மிகப் பகையுளதன்றோ? ஆதலின், கொடிய ராக்ஷஸர்களே சீதையைப் பறித்துக் கொன்று, பக்ஷித்திருப்பார்களோ? இவ்வண்ணம் சீதை துன்புறுகையிலும், தருமம் தலைகாத்திலதே? எனக்குத் தீமைசெய்வானவரும் திறமைகொள்ளார்களே? யான் எல்லாவுலகங்களுக்கும் கர்த்தனும், அழித்தளிக்க வல்லவனுமாயினும், கருணையினால் பொறுமைகொண்டிருக்கின்றமையின், எல்லோரும் மட்டமையால் மதிக்கின்றிலர்; அடா லக்ஷ்மணா! நான் புலன்களை யடக்கித் தயைபொருந்திச் சாந்தகுணமுற்றிருக்கின்றமையின், தேவர்கள் என்னைத் திறமையற்றவனெனவே நினைக்கின்றனர்போலும், அடா லக்ஷ்மணா! நற்குணமும் என்னைச்சேர்ந்து தோஷமாயிற்று பாராய்; எல்லாவுயிர்களையும், எல்லா அரக்கர்களையும் கொலைசெய்வதன்பொருட்டுப் பொறுமை முதலிய நற்குணங்களையுள்ளடக்கிப் பராக்கிரமத்தையே மேற்கொள்வேன்; கதிரவன் சந்திரனுடைய குளிர்ந்த நிலாவை யுள்ளடக்கியே தன் தேஜஸ்ஸை விரித்து விளங்குகின்றனனல்லனோ?—

నైవయక్షానగన్ధర్వాన పిశాచానరాక్షసాః
కిన్నరావామనుష్యా వాసుఖంప్రాప్స్యన్తిలక్ష్మణ
మమాస్త్రబాణసంపూర్ణ మాకాశంపశ్యలక్ష్మణ
నిస్సంపాతంకరిష్యామి హ్యద్యత్రైలోక్యచారిణాం.

நைவயக்ஷாநகந்தர்வா நபிசாசாநராக்ஷஸாঃ
கிந்நராவாமனுஷ்யாவா ஸுகம்ப்ராப்ஸ்யந்திலக்ஷ்மண.
மமாஸ்த்ரபாணஸம்பூர்ண மாகாசம்பச்யலக்ஷ்மண
நிஸ்ஸம்பாதம்கரிஷ்யாமி ஹ்யத்யத்ரைலோக்யசாரிணாம்.

கேளடா லக்ஷ்மணா! என் சீதையைக் கொடார்களாயின், தேவகந்தர்வ பிசாசராக்ஷஸ யக்ஷகின்னரமனுஷியபதகோரகாதிகளுள் ஒருவரும் இன்

புரூர்கள் ; என்னுடைய பாணங்களினாலும், அஸ்திரங்களினாலும், உலக மெங்கும் நிரம்பி மூவுலகத்தவரும் அழியும்படி செய்வேன் ; விண்மீன் சந்திரன் முதலானோரையும் தகைந்து, தீ வாயு சூரியர்களது வெம்மை வேகங்களையும் அழித்து, மலைகளைப்பிளந்து, நீரையும் சுண்டச்செய்து, மரஞ் செடி கொடி புதல் முதலியவற்றையும் அழித்து, கடலையும் வற்றச் செய்து, மூவுலகினையும் அழிப்பேன் ; இறைவர்கள் ஏன் சீதையை யளிக்கின்றிலர்; இப்பொழுது எனது திறமையை யாவரும் கண்ணுறக்கடவர்கள். இனி யொரு பூதமும் மேலெழாது ; என் கோதண்டத்தினின்றும் புறப்பட்ட பாணங்களினால் மடிக்கப்பட்டு, அச்சமுற்று நடுங்குகின்ற பசு பக்ஷிகளை யுடையதாகிய மூவுலகினையும் நிலைகெட்டலையச்செய்வேன் பார்த்திராய். சீதையின்பொருட்டே இவ்வுலகினை பிசாசராக்ஷஸப்பூண்டற்றதாக்குவேன்; யான் சீற்றங்கொண்டு பாணங்களை எய்வேனாகில், அதன் வேகத்தைத் தேவாதிகளெல்லோரு மொன்றுசேர்ந்தும் பொறுப்பார்களோ ? என் பலத்தை எல்லோரும் பார்க்க ; யான் சீற்றத்தால் மூவுலகினையும் அழிக்கையில், ஒருயிரும் உய்யாது; தேவதானவயக்ஷராக்ஷஸாதியர் லோகங்களையும், கணைகளினால் சிதறவடிப்பேன்; நிலையை யழிப்பேன்; சிறிதும் வாட்டமின்றிச் சீதை முன்போலவே மகிழ்ந்து திகழுமாறு கடவுளர்கள் ஏன் கொணர்ந்தளிக்கின்றிலர்; என்றிவ்வண்ணமுரைத்தருளிக் கோதண்டத்தைக்கையில்பிடித்துக் கூரியகணையைத்தொடுத்து, ஊழிகாலத்தீப்போல வெரிந்து கேளடா லக்ஷ்மணா ! மூப்பு, மிருத்தியு, காலம், விதி, இவை எவ்வண்ணந் தடுக்கப்படாவோ ? அவ்வண்ணமே யான் சினமுறுவேனாகில், ஒருவராலும் தடைசெய்தெதிர்க்கப்படேன் ; முன்போலவே புன்னகைகொண்டு மகிழ்ந்த சீதையை வானவர்கள் அளியார்களாயின், எல்லாவுயிர்களுடனும் கூடிய ஜகத்தையெல்லாம் அழித்து விடுவேனென்று அருளிச்செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்துநான்காவது சருக்கம்

முற்றிற்று.

அறுபத்தைந்தாவதுசருக்கம்.

இளையபெருமாள் பெருமாளைச் சமாதானப்படுத்திச்

சினந்தணியச்செய்தது.

பெருமாளிவ்வண்ணம் பிராட்டியாரையிழந்து, சோகமும் சினமுங் கொண்டு, ஊழிகாலத்தீப்போல மூவுலகங்களையும் எரிக்கும்படி விளங்கிப் பெருமூச்செறிந்து அடிக்கடி கையிலேந்திய கோதண்டத்தைக்கண்ணுற்று,

காலாந்தகன்போலத்திகழ்கையில், ஸ்ரீராமாநுஜர் இவ்வண்ணம் ஒருகாலத்துமின்றி, இப்போழ்தே பெருமாள் மிகத் திருவுளங்கலங்கி யுலகத்தையழிக்க நினைத்ததற்கு ஆச்சரியமடைந்து, பெருமாளை நோக்கிக் கைகூப்பி ஐயரே! தேவர் இதுவரையில் எல்லாவுயிர்களுக்கும் இனியராகிச் சாந்தகுணம்பொருந்தியிருந்தருளி, இப்பொழுது சினமடைந்து, இயல்பாயுள்ள நற்குணத்தைத்துறப்பது தகுதியற்றது; சந்திரனிடத்தில் நிலவும், கதிரவனிடத்தில் வெயிலும், காற்றினிடத்தில் கதியும், பூமியிடத்தில் பொறுமையும், எப்போதும் மாறாது நிலைத்திருப்பனபோலத் தேவரிடத்திலும் சிறந்த நற்புகழ் நிலைகொண்டிருக்கின்றது; ஒருவன் செய்த குற்றத்திற்காக எல்லாவுயிர்களையும் கொலைசெய்வது நீதியற்றது; முறிக்கப்பட்ட இந்தத் தேரும் எவனுடையதோ? எவனால் முறிக்கப்பட்டதோ? என்னகாரணத்தால் போர் நடந்ததோ? ஒரு செய்தியையும் அறிகின்றிலேன்; இவ்விடமும் குருதிதோய்ந்து, தேர்ச்சக்கரம் புதைந்து கோரமாகி விளங்குகின்றது; இங்கே ஓரோகாலடியாயிருக்கின்றதேயன்றி, பலர் நடந்திலர்; சேனையும் சென்றிலது; ஆதலின், ஒருவனுக்காக லோகங்களையெல்லாம் அழிப்பது தகாதது; ராஜர்கள் பக்ஷபாதமின்றி, அவரவர்க்குத்தக்கபடி தண்டனைசெய்வார்களே யன்றிக் குற்றமற்றவர்களை வருத்தார்கள்; தேவரோ எல்லாப்பூதங்களுக்கும் தஞ்சமாகின்றீர்; ஆதலின், எவன்தான் பிராட்டியாரைப் பறித்துக்கொண்டுபோனவனை யுகப்பான்; தேவர்க்குத் தீமைசெய்ய ஆறு மலை யலைகடல் தேவகந்தர்வதானவாதியர்களும் துணியார்கள்; யாகதீக்ஷைகொண்டவனுக்கு நல்லோர்கள் தீமை செய்யார்களல்லரோ? ஆதலின், பிராட்டியாரைப் பறித்தவன் யாவனோ? அவனைத் தேடுக; யாம் ரிஷிகளையும் துணையாகக்கொண்டு கடல் காடு மலை குகை யாறு குளங் குட்டைகளிலும், தேவகந்தர்வாதிகளது உலகங்களிலும் போய்த்தேடுவோம்; தேவர்களைக்கண்டும் கேட்போம்; நல்வார்த்தையில் அவர்கள் பிராட்டியாரைக்கொணர்ந்து கொடாராயின், பின்பு, தேவர் திருவுள்ளத்தின்படிச் செய்தருள்க; சீலத்தினாலும், நல்வார்த்தையினாலும், விநயத்தினாலும், நீதியினாலும், தேவர் பிராட்டியாரைப் பெற்று மகிழ்வுறீராகில், அநந்தரம் தங்கக்கட்டமைந்த கூரிய கணைகளினால் உயிர்களை வருத்திப் பிராட்டியாரைப் பெறுக; என்று விண்ணப்பஞ்செய்து வேண்டிச் சினந்தணியச் செய்தனர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தைந்தாவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்தாறுவதுசருக்கம்.

இதுவுமது.

இளையபெருமாளிவ்வண்ணம் வேண்டியும், சோகமும் சினமுந் தணியாமல், திறமையற்றவர்போலப் புலம்பி மோஹமடைந்து வருந்துகின்ற பெருமாளை நோக்கித் தண்டம் சமர்ப்பித்து, ஐயரே! சக்கரவர்த்தியார் பற்பல தவங்களினாலும், பற்பல தானதருமங்களினாலும், தேவர்கள் அமிழ்தத்தைப் பெற்றாற்போலத் தேவரைப்பெற்றனர். அவர் தேவருடைய திருக்கல்யாணகுணங்களிலீடுபட்டும், சத்தியந்தவறாமைக்காக ராஜ்ஜியத்தைப் பராதாழ்வானுக்களித்துத் தேவரைவிட்டுப் பிரிந் திறந்து வானேறினர். அளவற்ற பராக்கிரமமுடையாரும், மஹாநுபாவருமாகிய தேவரே இத்தன்மைத்தாகிய துன்பத்தைப் பொறுத்திரீராயின், திறமையற்ற மற்றுள்ள உயிர்கள் தத்தந்துன்பங்களை எவ்வண்ணம் பொறுப்பார்கள். தேவர் துன்புற்றுச் சினத்தினால் உலகங்களை எரித்து வருத்துவீராயின், குற்றமற்ற உயிர்களெல்லாம் எங்குச்சென்று நலமுறும்; எவ்வளவுச் சிறப்புற்றவராயினும், துன்புறுவது பண்பே? நஹுஷன், இந்திரன்பட்டத்தை யடைந்தும் பாம்பாயினன்; யயாதி இந்திரனுடன் ஒரு ஆசனத்திலிருந்தும் வீழ்ந்தனன்; ஆதலின், நீதிதப்புவது ஒருவர்க்கும் தகாது; நம் தந்தைக்குப் புரோகிதராகிய வசிஷ்டபகவானும், ஒரு தினத்திலேதானே நூறு பிள்ளைகளைப்பெற்று, பின்பொருதினத்திலேதானே அவர்களிறக்கக்கண்டனர். எல்லாவுயிர்களுக்கும் தாயாகிய இந்தப் பூதேவியும் அசைவுற்று நடுங்குகின்றது; மிகச் சிறந்த சூரிய சந்திரர்களும், ராகு கேதுக்களினால் பிடிக்கப்படுகின்றனர்கள்; எவ்விதப் பெரிய பூதங்களாயினும், தேவாதியர்களாயினும், ஸ்ரீபகவானுடைய சங்கல்பத்தைக் கடந்து நிற்க வல்லமைகொள்ளார்கள்; தேவாதியர்களும் இன்பமும் துன்பமுமடைகின்றனர்கள்; ஆதலின், தேவர் துன்புறற்க; பிராட்டியார் பறிக்கப்படினும், இறக்கினும், தேவர் தீரமுற்றிருக்கவேண்டுமல்லது, அற்பர்போலத்துன்புறுவது தகாது; தேவர்போன்ற தீரர்கள் எவ்விதத் துன்பம் நேரினும் வருந்தார்களல்லரோ? தேவர் புத்தியால் நன்காராய்க; ஆராய்பவர்களே நன்மை தீமைகளை நன்குணர்வார்கள்; முற்பிறப்பில் செய்த நல்வினை தீவினைகள் தத்தம்பலன்களினாலறியப்படுமே யன்றி, முன்புணரப்படா? இவ்வண்ணம் அடியேனுக்குத் தேவரே பலமுறைகளில் உபதேசஞ்செய்தருளினீரோ? தேவகுருவாயினும், தேவருக்கு நிகராகுவாரோ? தேவருக்கும் உபதேசஞ்செய்பவன் யாவனுளன்? தேவருடைய திருவுளமும் தேவர்களாலும் அறியப்படாது; சோகத்தினால் உள்ளடங்கிய தேவருடைய தெய்வத்தன்மையை யான் நினைவூட்டுகின்றேனேயன்றி, உபதேசஞ்செய்கின்றிலேன்;—

దివ్యఞ్చ మానుషఞ్చ త్వమాత్మనశ్చ పరాక్రమం
ఇక్ష్వాకువృషభావేక్ష్య యతస్వద్విషతాంవధే.

திவ்யஞ்சமானுஷஞ்சத்வ மாத்மனச்சபராக்ரமம்
இக்ஷ்வாகுவ்ருஷபாவேக்ஷ்ய யதஸ்வத்விஷதாம்வதே.

இக்ஷ்வாகு குலதிலகரே! தேவருடைய தெய்வத்தன்மையையும், மானிட பாவனையையும், தோள்வலியையும் நன்காராய்ந்து, பகைவர்களைக் கொலைசெய்யும்பொருட்டு முயலுக; எல்லோரையும் கொலைசெய்வதினால் தேவர்க்குப் பயன் யாது? பிராட்டியாரைப் பறித்தவன் யாவனோ? அவனையே தேடிப் பிடித்துக் கொலைசெய்தருள்க; என்று வேண்டிச் சினத்தை யாற்றியருளினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்தேழாவது சருக்கம்.

பெருமாளிளையபெருமாளுடன்திரிந்து ஜடாயுவைக்கண்டு பிராட்டியாரது விருத்தாந்தத்தையறிந்து துன்பப்பட்டருளியது.

இவ்வண்ணம் இளையபெருமாள் செய்த விண்ணப்பத்தைப் பெருமாள் திருச்செவிசார்த்தி, ஸாரத்தை யறிபவராதலின், மிகவும் ஸாரமான அந்த வாக்கியத்தை ஏற்றுக்கொண்டு, தாம் வருவித்துக்கொண்ட கோபத்தையடக்கி, கோதண்டத்தைத் திருக்கரத்தில் பிடித்துக்கொண்டருளி, இளையபெருமாளை நோக்கி, அடா லக்ஷ்மணா! நாம் இப்போது எங்கே செல்வோம்? யாது செய்வோம்? எந்த உபாயத்தால் சீதையின் சரிதத்தை யறிவோம்? நன்றாக ஆராய்ந்து சொல்லாய்; என்று வினவி யருளினர். இளையபெருமாளதுகேட்டுப் பெருமாளை நோக்கி, ஐயரே! இந்த ஜனஸ்தானத்திலேதானே மறுபடியும்தேடியருள்க; இவ்விடத்தில் பற்பல ராக்ஷஸர்களும் நிறைந்திருக்கின்றனர்கள்; காடும் அடர்ந்திருக்கின்றது; மலைகளும் பலவாகவுள; பிளவுகளும், குகைகளும், பள்ளங்களும், பலவகைகளாயிருக்கின்றன; கின்னர கிம்புருஷ கந்தர்வாதிகளும் வந்து வாழ்கின்றனர்கள்; அங்கெல்லாம் என்னுடன் கூடித் தேடியருள்க; தேவர்போன்ற மஹாத்துமாக்கள் எவ்வகைத் துன்பம்நேரினும் நடுங்கார்கள்; பெருங்

காற்றிலும் மாமலைகள் அசையுமோ என்று விண்ணப்பம் பண்ணினர். பெருமாளதுகேட்டு இளையபெருமாளுடன் கூடி யவ்விடங்களில் தேடிக் கொண்டு வருகையில், ஜடாயு மலையின் சிகரம்போலத் தரையில் வீழ்ந்து குருதிபடிந்து படுத்திருக்கக்கண்டு, இளையபெருமாளை நோக்கிப் பாரடா தம்பி ! இந்தப் பெரிய பறவையினாலேதானே சீதை பக்ஷிக்கப்பட்டிருப்பாள்; இவ்விஷயத்தில் ஐயமேயிலது; இக்கானகத்தில் கழுகின் உருவம் பூண்டு ஒரு அரக்கனே இங்குப் படுத்திருக்கின்றனன்போலும், இதுவே சீதையைப் பக்ஷித்துச் சுகமாகப் படுத்திருக்கின்றது; ஆதலின், இதனைக் கூரிய கணைகளினால் கொலைசெய்வேனென்றுரைத்துக் கோதண்டத்தில் கணையைத்தொடுத்து, ஜடாயுவைக் கிட்டிவருகையில், ஜடாயு பெருமாளைக்கண்டு நுரையுடன் குருதியைக் கக்கிக்கொண்டே கூவி யழைத்து அடா ஸ்ரீராமபத்திரா ! நீ திவ்விய மூலிகையைப்போல எந்தப் பிராட்டியை இக்காட்டில் தேடுகின்றனையோ ? அவளும், என்னுடைய உயிர்களும், ராவணனால் பறிக்கப்பட்டன ; நீங்களிருவருமின்றித் தனியேயிருந்த சீதையை ராவணன் வந்தெடுத்தோடினன் ; அப்பொழுது நான் அவனைக் கண்டு சீதையைக் காப்பதன்பொருட்டு ராவணனைத் தகைந்து போர்செய்து, அவனுடைய வில் தேர் முதலியவற்றையும் முறித்து, அவனையும் தரையில் விழச்செய்தேன் ; என்னால் முறிக்கப்பட்ட வில், அம்பறுத்தூணிகள், பாணங்கள், தேர் முதலியவை இங்கே கிடக்கின்றன பாராய் ; தேர்ப்பாகனும் கொலைசெய்யப்பட்டனன் ; குதிரைகளும் கொல்லப்பட்டன ; அவ்வண்ணம் யான் ராவணனுடன் போர்செய்து இளைத்திருக்கையில், அவன் என்னுடைய சிறகுகளை யறுத்துத்தள்ளிவிட்டுச் சீதையை எடுத்துக்கொண்டோடிவிட்டனன். இவ்வண்ணம் ராவணனால் கொலைசெய்யப்பட்ட என்னை நீயும் கொல்லற்க ; என்றுரைத்தனர். பெருமாள் அந்த வாக்கியத்தைக் கேட்டவுடன் துன்பம் இருமடங்குபெருகி, வில்லைத் தரையில் போட்டுவிட்டு, ஜடாயுவைத் தழுவிக்கொண்டு தரையில் வீழ்ந்து, இளையபெருமாளுடன் கூடிக் கூவியழுது புலம்பிச் சரமதசையையடைந்து களைத்து மிக வருந்தி, மூச்சொடுங்கிப் பிராணனைவிடுகின்ற ஜடாயுவைக்கண்டருளி, பெருந்துயரமடைந்து, இளையபெருமாளைநோக்கி, அடா லக்ஷ்மணா ! நாம் ராஜ்ஜியத்தையுமிழந்தோம், காட்டிலும் உறைந்தோம், சீதையையும்பறிகொடுத்தோம், ஜடாயுவையும் துறந்தோம், என்னுடைய தீவினை இத்தன்மையதாயிற்றே ? இது பெருந்தீயையும்பற்றியெரிக்கும்; யான் இப்பொழுது ஆழ்ந்து நிறைந்த பெருங்கடலில் வீழ்வேனாயினும், என்னுடைய தீவினையால் அதுவும் வற்றி யுலர்ந்துவிடும் ; என்னிலும் தீவினையோர் இவ்வுலகினில் வேறொருவருமிலர் ; இத்தன்மையதாகிய பெருந்துயரென்னும் வலையுள் மற்றெவராயினும் அகப்பட்டார்களோ ? இந்த ஜடாயு என் தந்தைக்குத் தோழரும், மூப்பினரும், அன்புடையோருமாயிருந்தும், என் தீவினையாலிறந்தனரந்தோ ?

என்றிவ்வண்ணமுரைத்தருளிப் புலம்பி, ஜடாயுவைத் தந்தையைப்போ லெண்ணித் தழுவித் தந்தையின் தோழரே ! மைதிலி எங்கிருக்கின்ற னளோ ? உரையீரென்று கூவித் தரையில் வீழ்ந்து வருந்தினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தேழாவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்தெட்டாவதுசருக்கம்.

ஜடாயு சீதாபிராட்டியாரது சரிதத்தைச் சுருக்கமாக விடையுரைத்து மரணமடைகையில், பெருமாள் அவர்க்கு நல்லுலகங்களில் வாழும்படி அருள்செய்து, ஸம்ஸ்காரஞ் செய்து முடித்தருளியது.

பின்பு, பெருமாள் கொடிய ராவணனால் அடிக்கப்பட்ட ஜடாயுவைக் கடாக்ஷித்து, மீளவும் இளையபெருமாளை நோக்கிப் பாரடா லக்ஷ்மணா! என்பொருட்டே இந்த ஜடாயு போர்செய்து ராவணனால் அடிபட்டு, விடு வதற்கரிய உயிரை விடப்போகின்றனர்; உயிர் இவரது சரீரத்தில் இன்னு மிருக்கின்றது; ஒளிகுன்றியும் தீனமாயும் நோக்குகின்றனரென்றுரைத்து, ஜடாயுவை நோக்கிப் பெருந்தகையோரே! மொழியுந்திறமை யுடையீ ராயின், மொழியீர்; சீதையை ராவணன் ஏன் பறித்தனன்? அவன் விஷயத்தில் யான் யாதுபிழைசெய்தேன்? அப்பொழுது சீதை எவ் வண்ணமிருந்தனள்? யாது மொழிந்தனள்? அந்த ராவணனுடைய தோள்வலி, திறமை, உருவம், செயல், இவை எத்தன்மையுடையன? அவன் வாழும் வீடு எவ்விடத்திலுளது? இவைகளை யுரைசெய்கவென்று வினவினர். ஜடாயு அதுகேட்டுப் பெருமாளை நோக்கிக் கேளாய் ஸ்ரீராமா! மிகவும் கொடிய ராவணன் மாயையினால் காற்றுமழை பொழியச்செய்து சீதையை எடுத்துக்கொண்டாகாயத்திலோடினன்; யான் அவனுடன் நெடுநேரம்போர்செய்திளைத்திருக்கையில், அவன் என்னுடைய சிறகுகளை யறுத்துவிட்டுச் சீதையை எடுத்துக்கொண்டு தென்திசையை நோக்கிச் சென்றனன். அடா ராமா! இனி வார்த்தைசொல்லத் திறமையில்லை; உயிர்தடுமாறுகின்றது; கண் சுழலுகின்றது; யானிப்பொழுது மரங்களைப் பொன்மயங்களாகவும், குருவேர்களால் செய்யப்பட்ட தலைமயிர்களை யுடையனவாகவும் காணுகின்றேன்; முடிவொன்று கூறுகின்றேன்

கேளாய்; ராவணன் சீதையை எடுத்தோடின முகூர்த்தம் விந்தமென்னும் பெயருடையது; அதில் பறிகொடுத்த பொருளை யஜமானன் மீளவும் பெறுவான்; ராவணன் அதனை யறியாமல் சீதையைப் பறித்தனன்; தூண்டுமுள்ளைக்கவ்விய மீன்போல அவன் விரைவிலிறப்பான்; ஆதலின், பிராட்டியாரைக்குறித்து துன்புறற்க; அவனை நீ விரைவில் போரில் மடித்துச் சீதையுடன் கூடி மகிழ்வாயென்றுரைத்துக்கொண்டிருக்கையில், வாயினின்றும் மாம்ஸத்துடன் ரத்தம் பெருகிற்று, அப்போதும் அவர் அடா ராமா! அந்த ராவணன் விச்ரவசுமஹாரிஷியின் புத்திரன்; குபேரனுக்குத் தம்பி என்று மொழிந்துகொண்டே உயிரை விட்டுவிட்டிறந்தனர். அப்பொழுது பெருமாள் கைகுவித்துக்கொண்டு உரையீர் உரையீரென்று வினவிக்கொண்டிருந்தும், ஜடாயுவின் உயிர்கள் சரீரத்தைவிட்டாகாசத்திலேறின; உடனே ஜடாயு தலையைத் தரையில் சாய்த்துக் காலைப்பரப்பி துள்ளித் தரையில் வீழ்ந்திறந்தனர். இவ்வண்ணம் ஜடாயு இறந்ததைப் பெருமாள் கண்டு; மிகச் சோகங்கொண்டு, இளையபெருமாளை நோக்கி, அடா லக்ஷ்மணா! மிகக் கொடிய ராக்ஷஸர்கள் நிறைந்த இந்தத் தண்டகாரண்யத்தில் ஜடாயு நெடுநாளாய் துன்பமின்றி, இன்புற்று வாழ்ந்து, இப்போழ்திறந்துவிட்டனர். இவர் அநேகமாயிரம் வருஷம் பிழைத்திருந்தும் இப்போழ்திறந்துவிட்டனரய்யோ? காலமென்பது ஒருவராலும் கடக்கத் தக்கதன்று; பாரடா லக்ஷ்மணா! இவர் என்பொருட்டுபகாரஞ்செய்ய வந்து மடிந்தனர். எவ்விடங்களிலும், எந்தச்சாதியிலும், எவ்வுயிரிலும், சூரர்களும், தர்மமுடையோரும், நன்றி செய்பவரும், கருணை கூர்ந்தவருமிருப்பார்கள்;—

సీతాహరణజం దుఃఖం న మే సౌమ్య తథాగతం
యథా వినాశో గృధ్రస్య మత్కృతే చ పరంతప.

ஸீதாஹரணஜந்துக்கம் நமேஸௌம்யததாகதம்
யதாவிநாசோக்ருத்ரஸ்ய மத்க்ருதேசபரந்தப.

அடா லக்ஷ்மணா! யான் சீதையைப் பறிகொடுத்த துன்பம் அத்தன்மையதாகவில்லை; என்பொருட்டே இவர் இறந்தனரோ என்னும் துன்பமே எனக்கு மிகுந்துளது; நமக்கிவர் சக்கரவர்த்தியார்போலவே பூசிப்பதற்கும், மரியாதை செய்வதற்கும் உரியவர்; ஆதலின், நீ விரைவாகக் கட்டைகளைக் கொணர்க. கட்டையைக் கடைந்து தீ வளர்த்து, என்பொருட்டே மரணமுற்ற இவர்க்குத் தகனஸம்ஸ்காரஞ் செய்வேனென்றுரைத்துக் கட்டளையிட்டனுப்பி, ஜடாயுவை நோக்கிப் புள்ளிறையாகிய சக்கரவர்த்தியார் தோழரே!—

యాగతిర్యజ్ఞశీలానా మహితాగ్నేశ్చయాగతిః
అపరావర్తినాంయాచ యాచభూమిప్రదాయినాం
మయాత్వంసమనుజ్ఞాతో గచ్ఛలోకాననుత్తమాన్
గృధ్రరాజమహాసత్త్వ సంస్కృతశ్చమయావ్రజ.

யாகதிர்யஜ்ஞசீலாநா மாஹிதாக்நேச்சயாகதி:
அபராவர்திநும்யாச யாசபூமிப்ரதாயிநும்.
மயாத்வம்ஸமநுஜ்ஞாதோ கச்சலோகாநநுத்தமாந்
க்ருத்ரராஜமஹாஸத்வ ஸம்ஸ்க்ருதச்சமயாவ்ரஜ.

மஹாபலமுடைய மஹாத்துமாவே! நீர் என்பொருட்டுயிரை விட்டமையின், என்னாலேதானே ஸம்ஸ்காரஞ் செய்யப்பட்டவராகி, பம்பல யாகங்கள் செய்தவர்கள் அடையும் லோகங்களையும், ஆகிதாக்கினிகள் (அக்கினி யணையாமலே தாம் சாமளவும் தினந்தோறும் ஹோமஞ்செய்து கொண்டு அக்கினியை வளர்ப்பவர்கள்) அடையும் லோகங்களையும், போரில் பயந்தோடாமல் தீரங்கொண்டு போர்செய்பவர்களும், அவ்வண்ணம் போர்செய்திறப்பவர்களும் அடையும் லோகங்களையும், பூதானம் செய்தவர்கள் அடையும் லோகங்களையும் அடைந்து, கடையில் மிகச்சிறந்த என்னுடைய நித்திய நிர்விகார நிரதிசயாநந்தரூபமான ஸ்ரீவைகுண்டத்தையும் அடையக்கடவீர். இவ்வண்ணம் யான் அனுக்கிரகஞ் செய்கின்றேனாதலின், தடையின்றி யடைந்து மகிழ்க; என்றுரைத்துச் சிதையடுக்கி ஜடாயுவை யதன்மேல்வைத்துத் தம்மினத்தாரைப்போல எண்ணித் தன் புற்று ஸம்ஸ்காரஞ்செய்து, தம்பியுடன் சென்று, பருத்த பெரு மிருகங்களை யடித்து ஜடாயுவைக்குறித்து தூப்புற்களைத் தரையில் பரப்பி, மாம்ஸங்களை யறுத்தெடுத்துப் பிண்டம்பிடித்து, இளம்புல்முளைத்த பூமியில் பிண்டப் பிரதானஞ்செய்து, இறந்தவர்களை வானேற்றத்தக்க யாம்யஸூக்தம் முதலிய மந்திரங்களை ஜபித்து, கோதாவரிக்குச்சென்று, தம்பியுடன் நீரிலாடி ஜடாயுவைக்குறித்துத் தருப்பணஞ்செய்து முடித்தருளினர். அந்த ஜடாயுவும் பிறர்செயற்கரிய செய்கைகளைச்செய்து, புகழ்பெற்றிறந்து, மாதவர்க்கு நிகரான பெருமாளால் விதிப்படி ஸம்ஸ்காரஞ்செய்தனுக்கிரகிக்கப்பட்டமையின், அப்பொழுதே நற்கதியையடைந்து மகிழ்ந்தனர். பின்பு, பெருமாளிளையபெருமாளிருவரும் ஜடாயுவுக்குச் செய்கடன்களை முடித்து ஜடாயுவின் வாக்கியத்தையே நம்பிப் பிராட்டியாரைத்தேடுவதில் முயற்சியுற்று, இந்திரோபேந்திரர்கள்போலத் திகழ்ந்து அங்கிருந்து புறப்பட்டருளினர்கள்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தெட்டாவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்தொன்பதாவதுசருக்கம்.

பெருமாளிளையபெருமாள் இருவரும் பற்பல காடுகளில் திரிந்து, அயோமுகியென்னும் அரக்கியைச் சூர்ப்பணகையைப் போலச்செய்து, கபந்தாசுரனுடைய கைகளின் நடுவி லகப்பட்டுக்கொண்டது.

இவ்வண்ணம் பெருமாளிளையபெருமாளிருவரும் ஜடாயுவுக்குத் தருப்பணஞ்செய்து முடித்துப் புறப்பட்டுக் காடெங்கும் பிராட்டியாரைத் தேடிக்கொண்டே சிறிதுதூரம் மேற்றிசையாகச்சென்று,தெற்கேதிரும்பி ஜனஸஞ்சாரமின்றி, மரஞ் செடி கொடி புதர்கள் அடர்ந்து மிகவும் அச்சந்தருவதும், புகற்கரியதுமாகிய வழியிற்சென்று, புலி கரடி முதலிய கொடிய விலங்குகள் நிறைந்த அக்காட்டை வேகமாகத்தாண்டி, ஜனஸ்தானத்துக்கு ஒருகாதம் தூரத்திலுள்ள நீருண்டகொண்டல்போன்றதும், எங்கும் மலர்களால் மலிந்தது போன்றதும், பற்பல பறவைகளும், விலங்குகளும் நிறைந்ததும், அடர்ந்ததுமாகிய கிரௌஞ்சாரணியமென்னுங்காடெங்கும் பிராட்டியாரைத்தேடி, அங்கிருந்து காதவழித்தூரம் கிழக்காகச்சென்று, அந்தக் கிரௌஞ்சாரணியத்தையும் தாண்டி, இதற்கும் மதங்காசிரமத்துக்கும் நடுவில் மிகக் கொடிய பலவகைப் பசு பக்ஷிகளுடையதும், பற்பல ஜந்துக்கள் நிறைந்ததும், புகற்கரியதுமாகிய காட்டில் மிகவும் ஆழ்ந்த பெருங்குகையைக்கண்டு, அது பாதாளம்வரையில் ஆழ்ந்திருப்பதையும், நள்ளிருள் சூழ்ந்திருப்பதையுமறிந்து, அதற்கருகில் பருத்துயர்ந்தவளும், கோரமான முகத்தை யுடையவளும், அற்பர்களுக் கச்சந்தருபவளும், வெறுப்புறத்தக்கவளும், கோரரூபமுடையவளும், கூரிய கோரப்பற்களை யுடையவளும், பருத்து மடிந்து தொங்குகின்ற வயிற்றினளும், கடினமான தோலை யுடையவளும், கொடிய மிருகங்களைத் தின்பவளும், விரித்த தலையினளும், மதங்கொண்டவளுமாகிய ஒரு ராக்ஷஸியைக் கண்டனர்கள். அவளிவர்களைக் கண்டவுடனே ஓடிவந்து பெருமாளுக்கு முன்னெழுந்தருளிக்கொண்டிருந்த இளைய பெருமாளைப்பற்றித் தழுவிக்கொண்டு, அவரை நோக்கிக் கேளீர் மஹாபுருஷரே! வாரீர் நாமிருவரும் புணர்ந்தின்புறுவோம்; யான் அயோமுகியென்னும் பெயருடைய ராக்ஷஸி! யானுமக்கு வாய்த்தேனென்பதே உமக்கு மிகுந்தலாபம்; நீரெனக்குப் பிரியராகின்றீர்; மலைச்சிகரங்களிலும், ஆறுகளின் மணற்குன்றுகளிலும், நீர் என்னுடன் கூடி யின்புற்று ஆயுளின் மிகுதி காலங்களைப் போக்கி வாழ்கவென்றுரைத்தனள். இளைய பெருமாள் அம்மொழியைக் கேட்டவுடனே மிக முனிந்து, வாளையுருவி

அவளுடைய முலை மூக்குச் செவிகளை யரிந்து, வெருட்டி யோட்டி விட்டனர். அவளும் கூவென்று கூவி வீறிட்டுக்கொண்டு வந்தவழிபற்றி யோடினள். பின்பு, ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் மிகக்கொடிய மற்றொரு காட்டினுட்புகுந்து செல்லுகையில், இளையபெருமாள் பெருமாளை நோக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு எம்மையரோ! என்னுடைய இடது தோள் மிகவும் துடிக்கின்றது; என் மனமும் நடுங்குகின்றது; மற்றும் பலவகையான கெட்ட சகுனங்களுமாகின்றன; இந்த அபசகுனங்கள் உடனே தீங்குவருமென வுரைக்கின்றன; ஆதலின், தேவர் மிகவும் ஊக்க முற்றெழுந்தருளுக; வஞ்சுளமென்னும் இப்பறவை போரில் நாம் ஜயம் பெறுவோமென உரைக்கின்றதுபோலக் கூவுகின்றது; என்றிவ்வண்ணமுரைத்துக்கொண்டே செல்லுகையில், அக்காட்டையெல்லாம் முறிப்பது போல மிகக் கொடிய ஒரு பேரிரைச்சலுண்டாயிற்று; ஊழிகாலத்திற் போலப் பெருங்காற்றுண்டாயிற்று; இவ்வொலி எங்கிருந்து தோன்றிற்றென்று சுற்றிப்பார்க்கையில், நெடுந்தூரத்தில் ஒரு புதரில் மிகப் பருத்த வயிற்றினனும், மிகவும் கோரரூபியுமான ஒரு ராக்ஷஸனைக்கண்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் எதிராகச்சென்று அவன் தலையின்றி, வயிற்றில் வாயுடையவனாகிக் கபந்தனென்னும் பெயர் யதார்த்தமாகி; மிகக் கூரிய மயிர்களை யுடையவனாகி, மாமலைபோலுயர்ந்து, காளமேகம்போலக் கறுத்துக் கோரமாகக்கர்ஜ்ஜித்து, நெற்றியில் அக்கினி ஜ்வாலைபோல எரிகின்ற ஒரு கண்ணும், மார்பில் ஒரு கண்ணுமாகப் பொருந்தி, நீண்ட கோரப் பற்களையுடைய அந்த வாயினை யடிக்கடி நாவினால் துழாவி நக்கிக் கொண்டு, சிங்கம் கரடி புலி மான் யானை முதலியவற்றைப் பக்ஷித்துக் கொண்டும், ஒவ்வொரு காததூரம் நீண்ட இரண்டு கைகளையுஞ் சேர்த்தணைத்துப் பற்பல பசுபக்ஷிகளையும் பிடித்துப் பற்றி யிழுத்துக்கொண்டிருப்பதை யொரு கோசுதூரத்திற் கண்டனர்கள். அத்தருணத்தில் அந்தக் கபந்தனும் கைகளை நீட்டி இவ்விருவர்களுடன் கூடவே நடுவிலுள்ள எல்லாவற்றையும் வலுவாகப் பற்றி யிழுத்தனன். அப்பொழுதும் பெருமாள் மூத்தவராதலாலும், மிகச் சூரத்தன்மையினராதலாலும், சிறிதும் அச்சமுற்றிலர்; இளையபெருமாள் பெருமாளுக்கெங்கே தீங்கு நேருமோவென்று மிகத் துன்புற்றனர். அப்பொழுதவர் பெருமாளையும் நோக்கி, அய்யரோ! யான் ராக்ஷசனுக்கு உணவாகுவேன்போலும், ஆதலின், தேவரைப் பாதுகாக்கத் திறமைகொண்டிலேன்; தேவர்க்குந் துன்பம் நேர்ந்ததேயென்று யான் மிகத் துயருறுகின்றேன்; கடாக்ஷித்தருள்க; ஆதலின், தேவர் அடியேனை இவ்வரக்கனுச்குப் பலியாகக் கொடுத்துவிட்டருளித் தேவர் தப்பிச்சென்றருள்க; தேவர் விரைவாகவே பிராட்டியாரை யடையப்போகின்றீர்; ஆதலின், தேவர் பிராட்டியாரைப் பெற்று, வனவாஸமுந்தீர்ந்து, திருவயோத்திசேர்ந்து, திருவபிஷேகம் பூண்டு, அடியேனை நினைத்தருள்கவென்றுரைத்தனர். பெருமாள் அது

கேட்டிளையபெருமாளை நோக்கி, அடா தம்பி ! நீ சிறிதும் அச்சமுறற்க ; உன்னைப்போன்ற சூரர்களும் அச்சமுறுவார்களோவென்று தைரிய முரைத்தருளினர். அந்தச்சமயத்தில் அந்தக்கபந்தன் இவர்களைநோக்கிக் கேளீர் மானிடர்காள் ! நீங்கள் எவர்கள் ரிஷபம்போன்ற தோள்களை யுடையார்களும், சிறந்த வில் வாள்களை யுடையார்களுமாகிக் கோரமான இக்கானகத்தில் ஏன் வந்தீர்கள்?எனக்கு நீங்கள் இரையானீர்கள்? நீங்கள் இங்கெய்தியகாரியம் யாது ? அதனை யுரையீர்கள் ; மிகவும் பசித்துள்ள என் வாயிலகப்பட்ட பின்பு, நீங்கள் பிழைப்பதரிதென்று உரைத்தனன். பெருமாள் அதுகேட்டு முகம்வாடித் துன்புற்று இளையபெருமாளை நோக்கிப் பாரடா தம்பி ! துன்பத்தினும் மிகத் துன்பமே நேர்ந்தது ; அந்தச் சீதையைமாத்திரம் அடைந்திலோம் ; காலமென்பது மிகத் திறமையுடையது ; அதனை வெல்ல வொருவராலும் முடியாது ; நீயும் நானும் ஒருசேரத் துன்பங்களினால் மோகமுற்றோமல்லோமோ ? காலம் செய்வதற்கரிய செயலொன்றுமிலது; சூரர்களும், பலவான்களும்,ஆயுதப் பயிற்சி யுடையார்களும், மிகச் சேனை யுடையோர்களாயினும், கெடுங் காலத்தில் போர்க்களத்தில் மணலணைகள்போல அழிந்திறக்கின்றனர்க ளல்லரோ ? என்றிவ்வண்ணம் அருளிச்செய்தும், இளையபெருமாள் பௌருஷமுற்றிருக்கக்கண்டு, தாமும் தமக்கியல்பாயுள்ள தீரத்தையும், மதியையும் மேற்கொண்டு உற்சாகத்துடன் நின்றருளினர்.

ஆரண்யகாண்டத்தில் அறுபத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

எவ்வளவு தீரமுடையோர்களும் சோகமாயினும், கோபமாயினும் நேருங்காலையில், தீரத்தையும், பொறுமையையும், தருமத்தையும் விட்டு விடுவார்களென்பதையும், அப்படி நேரினும், தருமத்தைத் துறப்பது தகாதென்பதையும், யாவர்க்கும் அறிவிப்பதன்பொருட்டே பெருமாளிளையபெருமாளிருவரும் சோகமுற்றவர்போலவும், சினமுற்றவர்போலவும் பாவனைசெய்தனர்களே யன்றி, அவர்களவ்வண்ணம் செய்ததுண்மையன்று ; உண்மையாயின், இருவர்களும் ஓரோகாலத்தில் சினமுற்றுலகங்களை யழித்தாவதிருக்கவேண்டும், சோகமுற்றுத் தாமே யழிந்தாவதிருக்கவேண்டும், அப்படியின்றி, இளையபெருமாள் சினமாவது சோகமாவது கொள்ளுங்காலையில், பெருமாள் தேற்றியும், பெருமாள் கோபசோகங்களை யுறுங்கால் இளையபெருமாள் தேற்றியும், தருமத்தைத்தவறாமல் பாதுகாத்து வந்தனர்களல்லரோ ? மேலேயும் இவ்வண்ணமே யிருக்கின்றது; இவர்கள் சோகமுறுவதுண்மையாயின், இந்தச் சருக்கத்தில் கபந்தனைக்கண்டே அச்சமும் சோகமுங்கொண்ட இளையபெருமாள் மேல் சருக்கத்தில் தீரமுற்றுப் பெருமாளைத் தேற்றுவதும், இச்சருக்கத்தில் தீரமுற்றுத் தம்பியைத் தேற்றிய பெருமாளே மேல் சருக்கத்தில் அச்சமும் சோகமுமுற்று வருந்துவதும் எவ்வண்ணம் ஒக்கும், ஒருக்காலும் ஒவ்வாது ; ஆதலின், இவர்கள் துன்புற்றது மாயையெனவே யுணர்க.

எழுபதாவது சருக்கம்.

பெருமாளிளையபெருமாளிருவரும் கபந்தனுடைய தோள்க ளிரண்டினையும் வாள்களினாலரிந்தருளியது.

பின்பு, ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் சிறிதுமச்சமின்றி நிற்பதைக் கபந்தன் கண்டு, மீளவும் இவர்களை நோக்கிக் கேளீர் மானிடர்களே! யான் பசித்துக் கைகளினால் பற்றி யிழுக்கையிலும், சிறிதும் அச்சமின்றி நிற்கின்றீர்களே? நீங்கள் யாவர்? நீங்கள் அரசர்கள்போலும், தெய்வ மெனக் குணவாக உங்களை யளித்துவிட்டது; இனி நீங்களுய்யீர்களென்று மொழிந்தனன். அதைக்கேட்டுப் பெருமாள் சிந்தையுற்றிருக்கையில், இளையபெருமாள் நோக்கி, ஐயரோ! இனி யாம் சோகத்தை மேற்கொண்டு சிந்தையுறுவது தீது; விரைவில் இந்த ராக்ஷஸன் தேவரையும், என்னை யும், விரைவில் விழுங்கி விடுவான்; ஆதலின், விரைவாகவே வாள்களினா லிவனது தோள்களிரண்டினையும் அரிந்து விடுவோம்; இவன் மிகக் கொடியவனும், கைகள்மாத்திரத்திலேதானே திறமையுற்றவனுமாகின்ற னன்; இதுவரையில் பற்பல ஜனங்களையுங் கொலைசெய்து, இப்போழ்து நம்மையுங் கொலைசெய்ய முயலுகின்றனன்; ஒரு தீச்செயலுமின்றி, அடங்கி யிருப்பவர்களைக் கொலைசெய்வதொன்றுமே க்ஷத்திரியர்களுக்கு அசுவமேதயாகத்தில் காட்டினின்றும்கொண்டுவரப்பட்ட யாகத்துக்குரிய தாகாத பசுக்களைக் கொல்வதுபோலவே தீதாகும்; கொடியர்களைக் கொல்வது யாகபசுவைக் கொல்வதுபோலவே தருமமாகும்; என்று அக்காலத்திற்குத்தக்கபடியுரைத்தனர். கபந்தன் அம்மொழியைச் செவி யுற்றுச் சினமுற்று வாயைத்திறந்து, இவர்களை விழுங்க முயன்றனன். உடனே காலதேசங்களை யறிந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் முறையே அவ்வரக்கனுடைய வலத்தோளையும், இடத்தோளையும், வாள்களை யுருவி யொரோ வெட்டாக வெட்டித் துணித்துவிட்டருளினர்கள். உடனே யவ்வரக்கன் கைகளறுந்து ஊழிகால மேகம்போல கர்ஜனைசெய்து மூவுலகிலும் ஒலியெழச்செய்து, தரையில் வீழ்ந்து, தனது கைகளறுபட்டு வீழ்ந்து குருதி பெருகக்கண்டு துயருற்று, இவர்களை நோக்கி, மகானு பாவர்களே! தேவர்கள் யாவரோ? அருளிச்செய்கவென்று வினவினன். அதுகேட்டு இளையபெருமாளவனை நோக்கிக் கேளடா ராக்ஷஸா! இவர் இக்ஷ்வாகு குலத்தவர்; ஸ்ரீராமனென்னுந் திருநாமமுடையோர்; யான் இவருடைய தம்பி! லக்ஷ்மணனென்னும் பெயருடையேன்; இவருடைய பத்தினியாகிய சீதாபிராட்டியாரை யோரரக்கன் களவுசெய்துகொண்டு ஓடிவிட்டனன்; அவனைத் தேடிக்கொண்டே யாங்களிங்கெய்தினோம்; யானு முன்னை வினவுகின்றேன் உரையாய்; நீ யாவன்? என் தலையின்றிக்

கபந்தமாக இக்காட்டிலுறைகின்றனை ? நீ கணுக்கால் முறிந்து, வயிற்றில் வாயினைப் பொருந்திப் புரளுகின்றனையென்று வினவினர். கபந்தன் அந்த வாக்கியத்தைக்கேட்டவுடன் தேவேந்திரன் தனக் குரைத்திருந்த வாக்கியம் நினைவில் தோன்றி மகிழ்வுற்று இவர்களை நோக்கி, மஹாபாகர்களே ! தேவர்களுக்கு நல்வரவாகக் கடவது. எனது தீவினைகள் தொலைந்து நல்வினைப்பயன் கைக்கூடினமையின், தேவர்களைக் கண்ணுறுகின்றேன் ; எனது நல்வினையினாலேதானே தேவர்கள் எனது தோள்களை வாளினாலறுத்தருளினீர்கள் ; என்னுடைய நல்ல ரூபமும் அழிந்து இந்தக் கோரரூபமும் எனது தீச்செயலினால் நேர்ந்தது ; அதனை யுண்மையாக விண்ணப்பஞ்செய்வேன் கேட்டருள்க ; என்று மொழிந்து மகிழ்ந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் எழுபதாவது சருக்கம் முற்றிற்று.

எழுபத்தொன்றாவது சருக்கம்.

கபந்தன் தன் முன்வினையை யுரைசெய்தது.

அநந்தரம் கபந்தன் சக்கரவர்த்தித்திருமகனை நோக்கிக் கேட்டருளீர் மஹாபல பராக்கிரமமுடைய ஸ்ரீராமசந்திரரே ! யான் முற்காலத்தில் சூரிய சந்திரர்கள்போல மிகச்சிறந்த ரூபமுடையனாயிருந்தேன்; அப்போதும் பல மதத்தினால் இந்தக் கொடிய ரூபத்தை யெடுத்துக்கொண்டு காட்டிலுள்ள முனிவர்களெல்லோரையும் பீடைசெய்துகொண்டு வருவேன் ; ஒருநாள் ஸ்தூலசிரரென்னும் மஹாரிஷி ! காய் கனி முதலிய பண்டங்களை மிகுதியாகச் சேர்த்துவைத்திருக்கையில், அவைகளை யான் கெடுத்துவிட்டேன் ; அதுகண்டு அவர் என்னை நோக்கி, அடா தனுவின் புத்திரனான கொடியா ! நீ எனக்கு இவ்வண்ணம் தீங்குசெய்தமையின், உனக்கெப்போதும் இந்த ரூபமே நிலைத்திருக்கக்கடவது. என்று முனிந்து சாபமிட்டனர். உடனே நான் அவரை வணங்கி வேண்டுகையில், மீளவும் அவர் என்னை நோக்கி, அடா அஸுரா ! ஸ்ரீராமசந்திரர் எப்பொழுதிங்கெழுந்தருளி உன்னுடைய தோள்களை யறுத்து உன்னைத் தீயிலிட்டெரித்தருள்வாரோ ? அப்பொழுதுதான் இந்தக் கோரரூபத்தை விட்டு முன்போலச் சிறந்த ரூபத்தை யடைவாய் ; என்று அருளிச்செய்தனர். பின்பிந்திரனுடன்போர்செய்து இவ்வண்ணம் கபந்தனாயினேன் ; அதற்குமுன்னமே யான்கொடியதவஞ்செய்து நாமகள் நாதனைச் சாக்ஷாத்தாகக்கண்டு நெடுங்காலம் வாழும்படி வரம்பெற்றுக்கொண்டு இனி எனக்

குச் சாவின்மையால், இந்திரன் என்னை யாதுசெய்யவல்லானென்று கர்வமடைந்து தேவேந்திரனைச் சண்டைக்கிழுத்துப் பொருதேன்; இந்திரன் கடுஞ்சினமுற்று வச்சிராயுதத்தால் என் தலைமேலடிக்கையில், எனது தலையும் நிதம்பங்களும் சரீரத்தினுள்ளடங்கியமுழுந்திவிட்டன; அப்பொழுது என்னுடைய யாசனையாலும், பிரஹ்மதேவன் வரத்தினாலும், என்னை இந்திரன் யமலோகத்திற்கனுப்பியிலன்; மேலும் யான் இந்திரனை நோக்கி, விண்ணவர் கோமானே! யான் வேதாவின் வரத்தினால் நெடுங்காலம் உய்வேனே? காலுந்தலையுமின்றி, எவ்வண்ணம் பிழைப்பேனென்று வேண்டினேன்; அப்போதிந்திரன் என்மீதருள்செய்து, வயிற்றில் வாயினையும், ஒவ்வொருகாதம் நீளமுள்ள கைகளையும் வரமளித்து, என்னையும் நோக்கி, அடா தானவா! ஸ்ரீராமபத்திரர் உனது தோள்களை எப்போழ்தறுத்தருள்வாரோ? அப்பொழுதே நீ வானேறுவாயென்றுமுரைத்தனன். ஆதலின், யான் கைகளிலகப்பட்ட சிங்கம் புலி கரடி முதலிய எல்லாவுயிர்களையும் பக்ஷித்துக்கொண்டிருந்தேன்; இக்கொடிய ரூபத்துடனிருக்கையில், கண்ணிற்காணப்பட்டவைகளையெல்லாம் பிடித்துத் தின்னல்வேண்டுமெனத் தோற்றுகின்றது; இந்தக் கபந்தரூபம் எப்போது நீங்குமோவென்றும், தேவர் எப்போது எழுந்தருளுவீரோவென்றும் எண்ணிக்கொண்டே அகப்பட்டவைகளையெல்லாம் பிடித்துவந்தேன்; தேவர் அந்த ஸ்ரீராமரோ ஆகின்றீர்; மற்றொருவராலும் யான் கொலைசெய்யப்படேன்; அவ்வண்ணமே அம்முனிவரருளிச்செய்திருக்கின்றனர்; தேவர்க்கு மங்களமுண்டாகக்கடவது. என்னை நீங்கள் சிதையிலிட்டு எரிப்பீர்களாகில், பின்பு, யான் தேவர்களுக்குப் புத்தியினால் ஸஹாயம் செய்வேன்; தேவர்கள் நேசஞ்செய்வதற்குரிய தோழனையும் உரைக்கின்றேனென்றுரைத்தனன். பெருமாள் அம்மொழிகேட்டவனை நோக்கி, அடா தானவா! யானும் தம்பியும் புறத்திற்சென்று ஜானகிமாத்திரம் தனியேயிருக்கையின், ராவணன் அவளைப் பறித்தோடிவிட்டனன்; என்றிம்மாத்திரமே யறிவோம்; அவன் எங்கிருக்கின்றனனோ? அவனது ரூபபலபராக்கிரமங்கள் எத்தன்மையனவோ? அறியோம்; ஆதலின், சோகமுற்றிவ்வண்ணந்திரிகின்றோம்; எங்கள்பொருட்டு உபகாரஞ்செய்ய நினைத்த உன்னைக் காட்டில் குஞ்சரங்களினால் முறிக்கப்பட்ட கட்டைகளைக் கொணர்ந்து பள்ளம் வெட்டித் தீவளர்த்துன்னை எரிக்கின்றோம்; சீதையை எவன் பறித்தனனோ? எங்கிருக்கின்றனளோ? அறிவாயாகில், இவ்வுபகாரத்தை நீ செய்யக்கடவையென்று ஆவலினால் வினவியருளினர். கபந்தன் அதுகேட்டுப் பெருமாளை நோக்கி, ஸ்வாமி! யான் சாபமடைந்தமையின், திவ்வியஜ்ஞானத்தை யிழந்திருக்கின்றேன்; ஆதலின், சீதையை யறிகின்றிலேன்; என்னைத் தேவர் எரித்த பின்னர், நிஜரூபத்தை யடைந்து, சீதையை யாவனறிவானோ? அவனை யுரைசெய்வேன்; எரிப்பதற்கு முன்பு அறிவதற்கு எனக்குத் திறமையிலது;

சாபத்தினுல் எனது ஞானமழிந்திருக்கின்றது ; கதிரவன் மேற்றிசையில் மறைவதன்முன்னமே என்னைக் குழியில்தள்ளி எரித்தருள்க; விதிப்படி தேவரால் ஸம்ஸ்காரஞ் செய்யப்பட்ட பின்பு, யான் அச்சீதையை யறி பவனை யுரைக்கின்றேன் ; அவன் நல்லொழுக்கமுடையோனுதலின், அவனுடன் நட்புச்செய்து கொள்க ; அவன் முன்பு வேறொருகாரணத் தால் லோகமுழுதும் சுற்றித்திரிந்திருக்கின்றமையின், அவன் அறியாத இடமேயிலது ; அவன் தேவரிடத்தில் நன்றியுடையனுகித் தேவர்க்குச் சகாயஞ்செய்வானென்றுரைசெய்தனன்.

ஆரண்யகாண்டத்தில் எழுபத்தொன்ருவது சருக்கம் முற்றிற்று.

எழுபத்திரண்டாவது சருக்கம்.

கபந்தன் பெருமாளால் கொளுத்தப்பட்டு, திவ்விய ரூபத்தையடைந்து சுக்கிரீவனுடன் நட்புச்செய்துகொண்டருளிப் பிராட்டியாரைத் தேடியடையும்படி பெருமாளுக் குரைத்தது.

சக்கரவர்த்தியின் திருமகனுர்களிருவரும் இவ்வண்ணம் கபந்த னுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு அங்கே மலையின்பள்ளத்தில் கட்டை களைச்சேர்த்துத் தீயைமூட்டி அந்தக்கபந்தனுடைய சரீரத்தை யதில் தள்

ஜடாயு கபந்தன் இவ்விருவரும் பெருமாளுடன் ராவணன் இருப்பிடம் முதலிய சங்கதிகளைச் சொல்லாதேன் ஒழிந்தனர்களெனின், சிவனுடைய சங்கற்பத்தாலே தான் என்று அப்பயதீக்ஷிதன் சொன்னுன்; இந்த ஸ்ரீமத்ராமாயணத்துக்குள் எங்கும் சிவனுடைய செயலினுல் ஒரு காரியமும் நடந்ததாக கூறப்பட்டுமிலது ; அவ்வண் ணங் கருத்துரைப்பதற்கும் இடமிலது ; ராவணன் சரிதங்களை முற்றும் தாம் முன் னமே யறிந்ததாக பாவித்தால் ஒருவர் துணையுமின்றி நேராகவே இலங்கைக்குச் சென்று ராவணனைக் கொலைசெய்யும்படி நேரும் ; அப்போது சபரீமோக்ஷமும், வாலி நிக்கிரஹமும், ஸுக்கிரீவஸக்கியமும், நேர்வதற்கிடமிராது ; ஆதலின், அப் போது தம்முடைய சங்கற்பத்துக்குப் பங்கம் நேருமென்று அதைச் சொல்வதன் முன்னமே ஜடாயுவை மரணமடையும்படி செய்தனர். முற்றும் உரைசெயின், தனக் குத் தகனம் செய்யார்களென்று கபந்தன் முதலில் மறைத்தனன் ; பின்பு, திவ்வியஜ் ஞானத்தால் ஸுக்கிரீவஸக்கியத்தை யறிந்தமையின், பெருமாள் திருவுளத்தின்படி அதைமாத்திரமே யுரைத்து, ராவணன்செய்தியை மறைத்தனன். பெருமாளே ராம தாரகமந்திரத்தைத் தான் செபிப்பது மல்லாமல், உமைக்கும் உபதேசித்த சிவனை விடச் சிறந்தவரென்பது பாலகாண்டத்திலும் விளங்கும் ; யுத்தகாண்டத்திலும் சிவனே சொல்லுகிருர் ; ஆதலின், வாதியின் வாதம் பயன்படாதென வுணர்க.

ளியருளினர்கள். அப்போழ்திளையபெருமாள் கொள்ளிக்கட்டைகளினுல் அச்சிதையின் நாற்புறங்களிலும் தீயைமூட்டினர். மஜ்ஜை, வசை, கொழுப்பு முதலியவற்ருல் நிறைந்த அந்தக் கபந்தனுடைய சரீரமும், தோய்ந்த நெய்போல எரிந்தமையினுல், அத்தீ மிக வொளிகொண்டது; ஆயினும், உடலிலுள்ள சவிர் தண்ணீரினுல் அணைந்தணைந்து மெதுவாக எரிந்தது; உடனே அந்தக் கபந்தன் அச்சிதையினின்றும் புகையற்ற அக்கினி போன்றவனுகி, திவ்வியரூபமுற்று, ஆகாசத்திலெழும்பி, சிறந்த ஆடையாபரணங்களை யுடையனுகி, திவ்வியமாலைபூண்டு, திவ்விய விமானத்தின்மேலேறித் தன் ஒளியினுல் பத்துத்திசைகளையும் விளங்கச்செய்பவனுகிப் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் பேரருளாளரே! தேவர் பிராட்டியாரை எவ்வண்ணம் பெறுவீரோ? அவ்வுபாயத்தை யுரைக்கின்றேன்; உலகத்தில் சந்தி, விக்ரகம், யாநம், ஆசனம், ஸமாச்ரயம், துவைதீபாவம் என்னும் ஆறு யுத்திகளையும் நன்குணர்ந்தே பகைவர்மேல் படையெடுத்து வெற்றிகொள்ளப்படுகின்றது; ஈனதசையை யடைந்திருப்பவன் தன்னைப் போலவே ஈனதசையையடைந்த மற்ருெருவனேடு நட்புச்செய்துகொண்டு, இருவரும் ஒன்றுசேர்ந்து படை யெடுத்தால்தான் ஜயம்பெறப்படும்; சகாயமின்றிச் செல்பவன் வெற்றியுருன்; தேவரும் இப்போழ்து அரசிழந்து, பாரியையைப் பறிகொடுத்து, ஈனதசையை யடைந்திருக்கின்றீர்; ஆதலின், தேவரும் அவசியமாக மித்திரர்களைத் தேடிக்கொள்ள வேண்டும்; யான் திவ்வியஜ்ஞானத்தினுல் நன்காராய்ந்து பார்க்கின், மித்திரர்களைத் தேடிக்கொள்ளாமல் தேவர்க்குப் பிராட்டியார் வாய்ப்பதரிதாகின்றது; தேவர் நேசங்கொள்ளத்தக்க தோழனையும் கூறுகின்றேன் கேட்டருள்க; சுக்கிரீவனென்னும் வானரர்கோமான் தமக்கு மூத்தோனும், இந்திரன் புத்திரனுமான வாலியினுல் துரத்தி யோட்டப்பட்டு நான்கு வானரர்களுடன் ரிசியமூகமலையில் பம்பாசரசினருகில் வாழ்கின்றனன்; அவன் மிகத் தோள்வலியுற்றவன்; மஹாபலமுடையவன்; மிக வொளிகொண்டு திகழ்பவன்; சத்தியம் தவருதவன்; விநயமுடையவன்; தீரமுடையவன்; நன்மதி பூண்டவன்; மொழிவதிலும், செய்வதிலும், மிகச் சிறப்புடையோன்; அவன் ராஜ்ஜியத்தின்பொருட்டுத் தமையனுல் துரத்தப்பட்டு ஈனதசையை யடைந்திருக்கின்றனன்; அவன் தேவருடன் நேசமுற்றுப்பிராட்டியாரைத்தேடியளிப்பன்; ஆதலின், தேவர் துன்புறற்க; எச்செயல் எவ்வண்ணம் ஆகவேண்டுமோ? அச்செயல் அவ்வண்ணமே யாகவேண்டுமல்லது, அதனை மாற்றுவதரிது; காலத்தை யொருவரும் மீறி நடக்கக்கூடாதன்ருே? தேவர் இங்கிருந்து விரைவாக வெழுந்தருள்க; அந்தச் சுக்கிரீவமஹாராஜனைக்கண்டு நேசம்மாறி மோசம் செய்யாமலிருப்பதற்காக அக்கினிசாக்ஷியாக அவனுடன் தோழமை கொள்ளுக; அவன் குரங்கேயாதலின், அவனுல் எமக்கு யாதுபயனென்று இகழ்ந்து அவமதி செய்யற்க; அவன் நன்றி யுடையவனும், நினைத்தபடி

ரூபந்தரித்துக்கொள்ள வல்லவனும், தேவரைப்போலவே ஈனதசையுற்றுச் சகாயத்தைக் கோருபவனும், வீரமுடையவனுமாகின்றனன்; அவனுடைய காரியத்தை இப்போழ்தே முடித்துக் கொடுக்கத் தேவர்களும் வல்லீர்கள்; அவன் தேவர்களுடைய காரியத்தையும், தான் நன்றி பெறினும், பெறுவிடினும், தப்பாமல் செய்வான்; அவன் ரிக்ஷரஜசு என்பவர் குமாரன், சூரியபகவானுடைய புத்திரன், வாலியினால் பகைக்கப்பட்டு அவனுக்கஞ்சிப் பம்பைக்கருகில் திரிந்துகொண்டிருக்கின்றான்; ஆதலின், ஆயுதங்களை மறைத்துக்கொண்டுபோய் அவனைக்கண்டு உண்மையாக நேசங்கொள்க; அவன் தேவதானவராக்ஷஸாதிகளது லோகங்களை முற்று முணர்வான்; அவன் அறியாத இடமேயிலது; ஆதலின், அவன் வானரர்களுடன் கூடித்தேடி சூரியகிரணம் செல்லுமளவும்சென்று பிராட்டியாரைக்கண்டு கொணர்ந்தளிப்பான்; நாற்றிசைகளுக்கும் வானரர்களையும் தேடும்படி யனுப்புவான்; பிராட்டியார் ராவணன் வீட்டிலிருக்கினும், மகாமேருவிலிருக்கினும், பாதாளத்திலிருக்கினும், அவனறிந்து அரக்கர்களைக்கொன்று தேவர்க்குக்கொணர்ந்து சமர்ப்பிப்பான்; ஆதலின், அவனைத் தோழனுக்கிக்கொள்க; என்று முடிவாக மொழிந்தனன்.

ஆரண்யகாண்டத்தில் எழுபத்திரண்டாவது சருக்கம் முற்றிற்று.

எழுபத்துமூன்றுவது சருக்கம்.

கபந்தன் பெருமாளுக்கு நல்வழிகாட்டித் தானும் வானேறியது.

கபந்தனிவ்வண்ணம் சுக்கிரீவருடன் தோழமைகொள்ளும்படி யுரைத்து, மீளவும் பெருமாளை நோக்கி, கேட்டருளீர் ஸ்ரீராமபத்திரரோ! தேவரிருசியமூகத்தற் கெழுந்தருளவேண்டிய மார்க்கம் இங்கே செல்லுகின்றதே பார்த்தருள்க; இங்கே மேல்திசையில் நாவல், பாதா, பலா, அரசு, பலாசு, ஆல், கோங்கு, மருதம், மா, திலகம், நெல்லி, கடம்பு, அசோகம் முதலிய பற்பல மரங்களடர்ந்து மலர்ந்திருக்கின்றனவே? அவ்வழியாகவே சென்று அங்குள்ள கனிகளை யடித்தாயினும், பறித்தாயினும், புஜித்துக்கொண்டெழுந்தருளுக; அக்காட்டைத் தாண்டிச்செல்லின், உத்தரகுருக்ஷேத்திரம்போல மிக வழகிய மற்றொருகாடிருக்கின்றது; அவ்விடத்தில் ஆறு பருவங்களும் எப்பொழுதும் விளங்குகின்றன; சைத்திரரதமென்னும் குபேரனுடைய உத்தியானவனம்போன்ற அந்தக் காட்டிலுள்ள மரங்கள் மேகம்போலவும், மலைபோலவும் விளங்கும்; அவ்விடங்களிலும் இளைய பெருமாள் அமிர்தம்போன்ற கனிகளை யடித்தாயினும், பறித்தாயினும்

ஸமர்ப்பிப்பார்; அங்கிருந்து தேசங்களையும், காடுகளையும், மலைகளையுங் கடந்து பம்பையென்னும் புஷ்கரிணியைச் சேர்க; திருவடிகளை வருத்தத் தக்க சிறிய கல்லுகளின்றியும், கரைகளழியாமலும், பாசியின்றியும், இறங்குந்துறைகளில் ஆழமின்றியும், நொய்யமணல்கள் படிந்தும், செந்தாமரை, வெண்டாமரை, செங்குவளை, வெண்குவளை முதலிய மலர்கள் மலர்ந்தும், ஹம்ஸகாரண்டவ ஸாரசம் முதலிய நீர்ப்பறவைகள் ஒலித்தும் விளங்கும்; அப்பறவைகள் தேவர்களைக்கண்டும் அச்சமுறா; அப்பறவைகளையும், பலவகை மீன்களையும் கண்டு மகிழ்க; அங்கே இளையபெருமாள் தாமரையிலையில் வெள்ளிபோலும், படிகம்போலும் விளங்குகின்ற அந்தப் பம்பா தீர்த்தத்தைக் கொணர்ந்து தேவர்க்குச் சமர்ப்பிப்பார்; அங்கு நீர் குடிப்பதன்பொருட்டு மலைக்குகையினின்றும் வந்த பற்பல வராகங்களையுங்கண்டு மகிழ்வீர்; மாலைப்பொழுதில் அக்காட்டிலுலாவுவீராகில், மிக மகிழ்ந்து சோகத்தை மறந்து விடுவீர்கள்; அங்குள்ள மலர்களைக் கொய்பவரும் ஒருவருமிலர்; அம்மலர்களும் வாடுவதும், வதங்குவதும், உதிர்வதுமின்றி, நிரந்தரம் விளங்கும்; அவ்விடத்தில் முன்பு, மதங்கமஹாமுனிவர் தவஞ்செய்துகொண்டிருந்தனர்; அவர் சீடர்கள் அக்காட்டில் காய் கனி கிழங்குகளை மிகுதியாகக் கட்டிக்கொண்டுவருகையில், அந்தச் சுமை சுமந்த வருத்தத்தால் சரீரத்தில் வேர்வைவிட்டு, அந்நீர்த்துளிகள் தரையில் வீழ்ந்தன; அத்துளிகளே அவர்களது தவத்தின்மகிமையினால் நறுமலர் மாலைகளாயின; அம்மாலைகள் ஒருக்காலும் அழிகின்றில; அவர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டிருந்த தாதி சபரி என்பவள் இப்போழ்தும் அங்கிருக்கின்றனள்; அவள் துறவறம்பூண்டு நெடுநாளாய்ப் பிழைத்திருக்கின்றனள்; அவள் தேவரைக்கண்டு தண்டம் சமர்ப்பித்துவிட்டே பொன்னுலகம் பெறவேண்டுமென்று காத்திருக்கின்றனள்; அந்த ஆசிரமமும் அந்தப் பம்பா புஷ்கரிணியின் மேற்குக்கரையைச் சார்ந்திருக்கின்றது; அக்காட்டிலும், அங்குள்ள மலைகளிலும், ஆனைகள் மிகுதியாகவுள்ளன; ஆயினும், அவ்வாசிரமத்துக்குள் புகுகின்றில; இவ்வண்ணம் மதங்கமஹாமுனிவர் ஏற்பாடு செய்திருக்கின்றனர்; அவ்வாசிரமத்திற்குத் தேவர் எழுந்தருளுவீராயின், நந்தனவனத்தில் வாழ்வதுபோல எண்ணி யானந்தமுறுவீர்; ரிசியமூகமலையும் அந்தப் பம்பையின் கீழ்த்திசையிலிருக்கின்றது; அங்கு யானைகள் மிகுந்துளவாதலின், அதன்மேலேறுவதுவருத்தம், அது முன்பு நான்முகத்தேவராலே தானே இயற்றப்பட்டது; அம்மலையின்மேல் படுத்துத் துயில்கொண்டு ஒருவன் கனவில் எப்பொருளைக் காணுகின்றனனோ? அதனை யவன் விழித்தவுடன் பெறுவான்; அதன்மேல் தீவினையோர்கள் ஏறார்கள்; ஒருக்கால் ஏறித் துயில்வானாகில், அரக்கர்கள் வந்து கொலைசெய்து விடுவார்கள்; அவ்விடத்திலேதானே யானைக்குட்டிகளின் பிளிறல்கள் பலவாறாகக் கேட்கப்படும்; அங்குத்திரிகின்ற யானை கரடி புலி மான் முதலியவைகளைக் கண்டும் மகிழ்வீர்கள்; அம்மலையி லொருபெரிய குகையும் கல்லினால்

மூடப்பட்டுளது; அதனுள் புகுவது மிகவும் அரிது; அக்குகையின் கீழ்ப்புறத்தில் ஒரு பெரிய தடாகமுமிருக்கின்றது; அவ்விடத்திலேதான் சுக்கிரீவன் நால்வருடன் வாழ்கின்றனன்; ஒருக்கால் அம்மலையினுச்சியிலுமிருப்பான் அங்கெழுந்தருளுக; என்றிவ்வண்ணமுரைத்து விடைகொடுத்துத் தானும் அவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு மீளவும் சுக்கிரீவனுடன் தோழமைகொள்ளுகவென்றுரைத்து மகிழ்ந்து வானேறினன். ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் அதுகேட்டு மகிழ்ந்து அவனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டுத் தாமும் புறப்பட்டருளினர்கள்.

ஆரண்யகாண்டத்தில் எழுபத்துமூன்றாவது சருக்கம் முற்றிற்று.

எழுபத்துநான்காவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளுடன் சபரீயினால் பூஜிக்கப்பட்டு அவளை வானேற்றியருளியது.

அநந்தரம் ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் கபந்தன் காட்டியவழியைப் பற்றி மேல்திசை நோக்கி நடந்து, காய் கனிகள் நிறைந்த பற்பல மரங்களையும் பார்த்துக்கொண்டே அங்குள்ள மலைமேல் அன்றிரவைப்போக்கி, மறுநாளுதயத்திலெழுந்து நடந்து பம்பாபுஷ்கரிணியின் மேற்புறத்திலுள்ள சபரியின் ஆசிரமத்தைச்சேர்ந்து, சபரியைக் கண்டருளினர்கள்; சபரியும் இவர்களைக்கண்டவுடனே கைகளைக் கூப்பிக்கொண்டெழுந்து எதிர்கொண்டு வந்து, இவ்விருவர்களுக்கும் தண்டம்சமர்ப்பித்து அர்க்கியபாத்தியாசமனீயம் முதலிய பூஜைகளை விதிப்படிசெய்து மகிழ்ந்தனள்; பெருமாளும் அந்தச் சபரியை நோக்கி, மாதவமுடையாளே! உனக்கு விக்கினங்கள் நீங்கித் தவம் வளர்கின்றதா? உணவு சுருங்கிச் சினமும் அடங்கியுளதா? விரதங்கள் இடையூறின்றி முடிந்தனவா? உன் மனம் மகிழ்கின்றதா? நீ ஆசிரியர்க்குச்செய்த பணிவிடைகள் பயன்பெற்றனவா? என்றிவ்வண்ணம் குசலம் வினவியருளுதலும், மாயோகினியாகிய அந்தச் சபரியும் பெருமானை நோக்கி, ஸ்வாமி தேவதேவோத்தமா! தேவதாஸார்வபௌமா! லீலாமானுஷவிக்கிரகா! மாயோகிகளினால் உபாசிக்கப்பட்ட பரப்ரஹ்மமாகிய ஸ்ரீராமா! தேவரை அடியாள் தண்டம்சமர்ப்பித்துப் பூசைசெய்தேனாதலின், இன்றுதான் தவமும் சித்தித்தது; இன்றுதான் எனது தவமும் பயன்பட்டது; இன்றுதான் ஆசிரியர்களும் பூஜிக்கப்பட்டனர்கள்; இன்றுதான் என் பிறப்பும் நற்பயன் பெற்றது; மீள்வதின்றி, நித்திய நிரவத்திய நிரதிசயமான தனிவிசும்பும் வாய்க்கின்றது;—

చక్షుషాతవసౌమ్యేన పూతాస్మిరఘున్దన
గమిష్యామ్యక్షయాఀలోకాఀ త్వత్ప్రసాదాదరిన్దమ.

சக்ஷுஷாதவஸௌம்யேந பூதாஸ்மிரகுநந்தன
கமிஷ்யாம்யக்ஷயான்லோகான் த்வத்ப்ரஸாதாதரிந்தம.

கருணைகூர்ந்து குளிர்ந்த தேவருடைய கடாக்ஷத்தினால் யான் தீவினைகள் முற்றுந்தீர்ந்து தேவருடைய அருளினாலேதானே அழிவற்ற பற்பல பொன்னுலகங்களையும்பெற்று, பரமானந்தமுறுவேன்; தேவர் திருச்சித்திரகூடத்திற் கெழுந்தருளுங்காலையிலே மதங்கமாமுனிவரது சீடர்களாகிய என்னாசிரியர்கள் திவ்விய விமானத்தின்மீதேறி வானேறினர்கள்; அப்போதவர்கள் அடியாளை நோக்கி, அடி சபரி! உன்னுடைய இந்த ஆசிரமத்திற்குப் பெருமாள் இளையபெருமாளுடன் எழுந்தருளுவார்; நீ யவரைக்கண்டு தண்டம் சமர்ப்பித்துப் பூஜைசெய்து, அவருடைய அருளினால் வைகுந்தம்பெறுவாயென்று உரைத்துச் சென்றனர்கள்; யான் அதுமுதல் தேவர்பொருட்டுப் பம்பாதீரத்திலுண்டாகிய பற்பல காய் கனிகளைச் சேர்த்துவைத்திருக்கின்றேனென்று விண்ணப்பஞ்செய்தனள். பெருமாளும் அதுகேட்டவளை நோக்கி, மாயோகினி! உன்னுடைய மகிமையைக் கபந்தாசுரன் உரைசெய்யக் கேட்டிருக்கின்றேன்; அதனை இப்போழ்து நேராகக்கண்டு மகிழ விரும்புகின்றேன்; உனக்கிஷ்டமுளதாயின், காட்புலனாக்குக என்று அருளிச்செய்தனர். சபரி யதுகேட்டு ஸ்ரீராமலக்ஷ்மணர்களை யவ்வனத்திற் கெழுந்தருளப்பண்ணிக்கொண்டுசென்று, அங்கங்கு சுட்டிக்காட்டிப் பெருமானை நோக்கிக் கடாக்ஷித்தருள்க; ஸ்ரீராமசந்திரரே! நீருண்ட கொண்டல்போன்றதும், பற்பல பசுபக்ஷிகள் நிறைந்ததுமாகிய இவ்வனத்திற்கு மதங்கவனமென்றே பெயர்; இவ்விடத்திலேதான் எம்மாசிரியர்கள் விதியின்படி யாகஞ்செய்தனர்கள்; அவர்கள் மிகவும் மூப்புடையர்களாகி, அங்கங்கெழுந்தருளுந் திறமையற்றமையின், ஏழுகடல்களையும் தியானஞ்செய்தனர்கள். உடனே அக்கடல்களேழும் வந்து வீழ்ந்தன; இங்கே கடாக்ஷித்தருள்க; எம்மாசிரியர்களால் அங்கே ஸ்நானஞ்செய்து மரங்கள்மேல் உலர்த்தப்பட்ட மரவுரிகள் இப்போழ்துங்காணப்படுகின்றன; தேவபூஜார்த்தமாக அவர்களால் கொண்டுவரப்பட்ட தாமரை நெய்தல் முதலிய மலர்களும் வாட்டமுறுகின்றில; இவ்வனத்தை முன்பு கேட்டும் அருளினீர்; இப்போழ்து கடாக்ஷித்தும் அருளினீர்; இனித் தேவரிடத்தில் அனுமதிபெற்று, இச்சரீரத்தை விட்டு விட்டு, எம்மாசிரியர்களுக்குச் சமீ

பத்திற்சேர்ந்து மகிழ்வுறக்கோருகின்றேனென்று விண்ணப்பஞ்செய்தனள். பெருமாளும் இளையபெருமாளுடன் அவ்வாச்சரியத்தைக் கேட்டும் கண்டும் மகிழ்ந்து சபரியை நோக்கி, மாயோகினியே! நான் உன்னால் நன்கு பூஜை செய்யப்பட்டு மிக மகிழ்ந்தேன்; இனி யுனது விருப்பின்படிச் செய்க; என்றருளிச்செய்தனர். சபரியும் உடனே மகிழ்ந்து தீயை வளர்த்து அதில் வீழ்ந்து மூப்புற்ற அச்சரீரத்தைத் துறந்து திவ்வியரூபமடைந்து, திவ்விய மான ஆடையாபரணங்களையும், நறுமலர் மாலைகளையும், நற்சாந்தங்களையு முடையளாகி, மின்னற்கொடிபோல அவ்விடங்களை எங்கும் விளங்கச் செய்து, தம்மாசிரியர்கள் மகிழ்ந்து வாழும் ஸ்ரீவைகுந்தத்தையடைந்து மகிழ்ந்து வாழ்ந்தனள்.

ஆரண்யகாண்டத்தில் எழுபத்துநான்காவது சருக்கம் முற்றிற்று.

எழுபத்தைந்தாவது சருக்கம்.

பெருமாளிளையபெருமாளுடன் சபரியின் ஆசிரமத்தினின்றும் பம்பா புஷ்கரிணிக் கெழுந்தருளியது.

இவ்வண்ணம் அந்தச் சபரி வானேறின பின்னர், பெருமாள் கணப் பொழுதாராய்ந்து, அம்முனிவர்களது மகிமையை நினைந்து வியப்படைந்து இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி! இவ்வாசிரமமெங்கும் நன்றாகப் பார்த்தோம்; இது மிகவும் ஆச்சரியமுறத்தக்கது; இவ்விடத்தில் பசு பக்ஷிகள் பகையின்றி, அச்சமற்றுக் கூடி வாழ்கின்றன; இந்த ஏழுகடலும் கூடிய தீர்த்தத்தில் ஸ்நாநமுஞ்செய்தோம்; பிதிரர்களுக்குந் தருப்பணஞ் செய்தோம்; ஆதலின், நமது தீவினைகள் தொலைந்தன; நல்வினைகள் வாய்த்தன; என் மனம் கலக்கமற்று மகிழ்கின்றது; இனி நமக்கு நலமே விளையும்; விரைவாகப் பம்பாஸரோவரத்தைச் சேர்வோம் வருக; அதனருகிலுள்ள ரிசியமூகத்திலேதான் சுக்கரீவன் நான்கு மந்திரிக ளுடன் வாழ்கின்றான்; அவன் வாலியின் பயத்தினால் வருந்துகின்றனன்; அவனை விரைவில் காணவேண்டுமென என் மனம் துடிக்கின்றது; நமது காரியமாகிய சீதையைத் தேடுவதும் அவனதீனமேயன்றோ? என்றருளிச்

செய்தனர். இளையபெருமாளதுகேட்டு அவரை நோக்கி, எம்மையரே! செல்வோம் எழுந்தருளுக; என் மனமும் துரைப்படுகின்றது; என்று விண்ணப்பம்பண்ணினர். உடனே பெருமாள் அவ்வாசிரமத்தினின்றும் புறப்பட்டு எழுந்தருளி, நல்வினை தருவதும், ஆழ்ந்து நின்மலமான தீர்த்தத்தை யுடையதும், பற்பல மரஞ் செடி கொடிகள் சூழ்ந்ததும், செந்தாமரை செங்கழுநீர் மலர்களினால் செவந்தும், வெண்டாமரை வெண்குவளைகளினால் வெளுத்தும், கருங்குவளை கருநெய்தல்களினால் கறுத்து மிருப்பதால் சித்திராஸனம் போன்றதும், நீரைப் பெருக்குவதுமாகிய அந்தப் பம்பையைத் தூரத்திலிருந்து கடாக்ஷித்துக்கொண்டே நடுவிலுள்ள மதங்கஸரஸ்ஸில் ஸ்நாநஞ்செய்தருளி, கமல குவலய குமுத புண்டரீக கல்ஹாரங்கள் மலர்ந்தும், ஹம்ஸஸாரஸாதி நீர்ப்பறவைகள் ஒலித்தும் விளங்கிய அப்பம்பைக்கு நாற்புறங்களிலும் மலர்ந்த மாஞ்சோலையுற்றதும், மயில் குயில்களொலிப்பதும், திலகாமல காசோகமாலதீ குந்ததிந்துக நாகபுந்நாக சம்பக சாம்பேய நிசுள வகுள தாலத மால ஹிந்தால கரவீர பீஜபூரகரவீர கர்ணிகார பாண்டீர ஸப்தபர்ண பாடலீகுட ஜகேதகி முதலிய மரஞ் செடி கொடிகள் மலர்ந்தும், தளிர்த்தும், கனித்தும், தழைத்தும், சுகசாரிகாதி பறவைகள் கூவியும் திகழ்கின்ற சிறந்த வனத்தையும் கடாக்ஷித்துக்கொண்டே பம்பாநதியைச் சேர்ந்து மகிழ்ந்து பல பறவைகள் ஒலித்தும், பல மரங்களடர்ந்துமுள்ள பற்பல காடுகளையும், தடாகங்களையும் பார்த்துக்கொண்டே அப்பம்பையைக்கிட்டி, பற்பல மலர்கள் மலர்ந்தும், வண்டுகளொலித்தும், படிகம்போல நின்மலமான தீர்த்தத்தை யுடையதாகியும், நொய்யமணல் உற்றும் திகழ்ந்த அந்தப்பம்பையை நன்றாகக்கடாக்ஷித்துக் காமவேட்கையுற்று இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி! இதனருகிலே தான் ரிசியமூகமிருக்கின்றது; அதிலேதானே ரிக்ஷராஜஸ்ஸின் புத்திரனான சுக்கிரீவன் வாழ்கின்றனன்; ஆதலின், நீ யந்தச் சுக்கிரீவனிடம் செல்லுக; நான் ராஜ்ஜியத்தையுமிழந்து, சீதையையும் பிரிந்து, யான் எவ்வண்ணம் உய்வேனென்றருளிச்செய்து பம்பையிலிழிந்தருளினர்.

తతోమహద్వర్త్మసుదూరసంక్రమః క్రమేణగత్వాప్రతికూలధన్వనం
దదర్శపంపాంశుభదర్శకాననాం అనేకనానావిధపక్షిజాలకాం.

ததோமஹத்வர்த்மஸுதூரஸங்க்ரமஃ க்ரமேணகத்வாப்ரதிகூலதன்வனம்
ததர்சபம்பாம்சுபதர்சகானனாம் அநேகநாநாவிதபக்ஷிஜாலகாம்.

இவ்வண்ணம் பெருமாளிளையபெருமாளுடன் நீர் பறவை மரஞ் செடி கொடிகளின்றிக் கோரமான பெருவழியைக் கடந்து காணற்கினிய காடுகளையுடையதும், பற்பல பசு பக்ஷிகளை யுடையதுமாகிய அப்பம்பா ஸரோவரத்தைக் கண்டருளினர்.

ஆரண்யகாண்டத்தில் எழுபத்தைந்தாவது சருக்கம் முற்றிற்று.

ஆரண்யகாண்டம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீராமஜயம்.

கிஷ்கிந்தாகாண்டத்தின் அட்டவணை.

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
௧	பெருமாள் இளையபெருமாள் பம்பா புஷ்கரணி கரையில் எழுந்தருளியிருக்கக்கண்டு மஹாராஜர் அச்சமுற்று நடுங்கியது. ...	௭௧௧
௨	மஹாராஜர் பெருமாள் இளையபெருமாள்களை இன்னாரென்றறிவதன் பொருட்டுச் சிறியதிருவடியை யனுப்பியது.	௭௨௭
௩	சிறியதிருவடி பெருமாள் இளையபெருமாளைக்கிட்டி புகழ்ந்து குலகோத்திரங்களை வினவ, இளையபெருமாளாலேவப்பட்டு விடையருளிச்செய்தது....	௭௨௯
௪	சிறியதிருவடி இளையபெருமாள் தங்கள் குலகோத்திரங்களையும், இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரணத்தையும் அருளிச்செய்ய ஸ்ரீராமலக்ஷ்மணர்களை தன் திருத்தோள்களிலெழுந்தருளப்பண்ணிக்கொண்டு மஹாராஜரிடஞ் சேர்த்தது.	௭௩௨
௫	பெருமாள் மஹாராஜருடன் நட்புசெய்து வாலியைக்கொன்று உனக்குப் பட்டங்கட்டுவிப்பேனென்று முன்னமே பிரதிஜ்ஞைசெய்து அபயஞ்செய்தருளியது....	௭௩௫
௬	மஹாராஜர் பிராட்டியார் ஆகாயத்தில் செல்லுகையில், கீழேபோட்ட திருவாபரணங்களைக் காப்பாற்றி பெருமாளுக்கு ஸமர்ப்பித்தது.	௭௩௮
௭	பெருமாள் பிராட்டியைத்தேடும்படி கட்டளையிட்டு வாலியைவென்று மஹாராஜருக்கு பட்டாபிஷேகஞ்செய்விப்பேனென்று பிரதிஜ்ஞை செய்து மகிழ்வித்தருளியது....	௭௪0
௮	மகாராஜர் பெருமாள் வாலியைக்கொலைசெய்வேனென்று பிரதிஜ்ஞை செய்தபின்னர், வாலி தன் மனையாளை யபகரித்துத் தன்னை வெருட்டியதும், வாலியுடன் பகை நேர்ந்த காரணத்தை உரைசெய்தது.	௭௪௪
௯	மஹாராஜர் மாயாவியுடன் வாலி பகைகொண்டு போர்செய்தது முதலிய சேதியைப் பெருமாளுக்கு அறிவித்தது.	௭௪௭
௧0	மஹாராஜர் பெருமாளை நோக்கி, வாலி என் வேண்டுகோளுக்கிரங்காமல் வெருட்டினனென்றும், பெருமாள் அவனைக் கொலைசெய்து ராஜ்யத்தை யளிப்பேனென்று அபயமளித்தது.	௭௪௯
௧௧	மஹாராஜர் பெருமாளுடன் வாலிக்கு நேர்ந்த மதங்கமாமுனியின் சாபத்தை யுரைசெய்து அவனுடைய தோள்வலியை புகழப் பெருமாள் மஹாராஜருக்கு விசுவாஸம் வருவதற்காக துந்துபியின் சரீரத்தை இடதுகால்கட்டைவிரலினால் பத்துசாதவழிதூரம்தள்ளினது	௭௫௧
௧௨	பெருமாள் ஸப்தஸாலங்களையும் பிளந்து மஹாராஜரை வாலியுடன் போர்செய்வித்துப் பின்பு பேதம் தெரியாமல் தோல்வியுற்றோடி வந்த அந்த மஹாராஜருக்கு அடையாளங்கட்டி மீளவும் போர் செய்யத் தூண்டியருளியது.	௭௫௭
௧௩	மகாராஜர் கிஷ்கிந்தைக்குப் போகும் வழியில் ஸப்தஜனர்களினுடைய ஆசிரமத்தின் மகிமையைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்தது.	௭௬௧
௧௪	மகாராஜர் பெருமாளால் ஏவப்பட்டு வாலியைப் போருக்கழைத்தது	௭௬௩
௧௫	வாலி மகாராஜர் தொனியைக்கேட்டுத் தான் சினங்கொண்டு புறப்படுகையில், தன்னைத்தடுத்துப் பலவிதமாக இதமுரைத்த தாரையை நிராகரித்துப் புறப்பட்டது.	௭௬௪

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
கசு	வாலி தாரைக்குச்சமாதானமுரைத்து புறத்தில் வந்து மகாராஜருடன் போர்செய்து பெருமாள் எய்த பாணத்தினால் அடிபட்டுத் தரையில் விழுந்தது.	எசுசு
கஎ	வாலி பெருமாளை இகழ்ந்தது.	எசுஅ
கஅ	பெருமாள் வாலிக்குச்சமாதானம் அருளிச்செய்ததும், வாலி அபராத க்ஷாபனம் செய்துக்கொண்டதும்.	எஎங
ககூ	வாலி இறந்ததைக்கேட்டுத் தாரை அங்கதனுடன் அங்கோடி வந்தது.	எஎகூ
உ0	தாரை புலம்பி அழுதது.	எஅச
உக	பிராயோபவேசஞ்செய்த தாரையைச் சிறியதிருவடி இனிய மொழிகளினாலே தேற்றியது.	எஅங
உஉ	வாலி மூர்ச்சை தெளிந்து மகாராஜர் அங்கதன் இவர்களுடன் மேலே நடக்கவேண்டிய விதத்தை யுரைசெய்து அவ்வண்ணமே செய்யும்படி வேண்டியது.	எஅரு
உங	தாரையின் புலம்பல்.	எஅஎ
உச	இவ்வண்ணம் தாரை துன்புற்றதைக்கண்டு மகாராஜர் சோகமடைந்து தீயில்விழுந்திறப்பேனென்று பெருமாளைவேண்டியதும், பெருமாள் கேட்டுத் தாரையைத் தேற்றுவதன்பொருட்டுச் செல்லுகையில், தாரை பெருமாளை நோக்கி புலம்பியதும், நன்மொழியால் பெருமாள் தேற்றியது.	எகூ0
உரு	மகாராஜனும், அங்கதகுமாரனும் முதலானவர்களுடன் வாலிக்கு ஸம்ஸ்காரஞ்செய்து நீர்க்கடனையும் முடித்து விட்டு பெருமாளருகில் வந்தது.	எகூஎ
உசு	மழைகாலம் சேர்ந்தமையின், சீதையைத்தேட முடியாதாகலின், இப்போழ்து பட்டாபிஷேகஞ் செய்துகொள்கவென்று பெருமாள் அருளிச்செய்து பட்டமுங்கட்டுவித்து அங்கதகுமாரனுக்கும் இளவரசுபட்டமுங் கட்டிவித்தது.	அ0க
	மகாராஜர் பட்டாபிஷேகம்.	அ0உ
உஎ	பெருமாள் இளையபெருமாளுடன் மழைகாலத்தை மலைக்குகையிற் போக்கிப் பிராட்டியாரை நினைந்து வருந்துகையில், இளையபெருமாள் சோகந்தணிய தேற்றியது.	அ0ச
உஅ	பெருமாள் இளையபெருமாளுடன் கார்காலத்தை வர்ணனைசெய்தருளியது.	அ0அ
உகூ	சிறியதிருவடி மகாராஜருக்குணர்வூட்டிச் சேனைகளை யழைப்பிக்கும்படி கட்டளைசெய்வித்தது.	அகங
ங0	கார்காலம் கழிந்தும் மகாராஜர் முயற்சியின்றி யிருப்பதறிந்து பெருமாள் திருவுளஞ் சீறியருளியது....	அகசு
ஙக	இளையபெருமாள் சினங்கொண்டு கிஷ்கிந்தைக்கெழுந்தருளுகையில், அங்கதன் கண்டு மகாராஜருக்கறிவித்தது.	அஉக
ஙஉ	சிறியதிருவடி மகாராஜருக்கு இதமுரை செய்தது.	அஉச
ஙங	சினங்கொண்டு வந்த இளையபெருமாளைத் தாரை இனியமொழியால் தேற்றிச் சீற்றத்தை யாற்றியது.	அஉசு
ஙச	இளையபெருமாள் மகாராஜருக்குப் பெருமாளுடைய கட்டளையை யறிவித்தருளியது.	அஙக
ஙரு	மீளவும் தாரை இளையபெருமாளை இனியமொழிகளினால் சமாதானஞ் செய்து சீற்றத்தைத் தணித்தது.	அஙங
ஙசு	இளையபெருமாளும் மகாராஜரும் சினமும் மயக்கமும் தீர்ந்து மகிழ்வுடன் ஸம்பாஷணஞ் செய்துகொண்டது.	அஙச
ஙஎ	மகாராஜருடைய கட்டளையின்படி வானரசேனைகள் வந்து கூடியது.	அஙசு

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
௩௮	மகாராஜர் இளையபெருமாளுடன் பெருமாளெழுந்தருளியிருக்குமிடத்திற்கு வந்து அவரைக்கண்டு மகிழ்ந்தது.	௮௩௮
௩௯	வானரசேனைகளெல்லாம் மகாராஜரிடம் வந்து கூடியது. ...	௮௪0
௪0	பிராட்டியைத் தேடுவதற்காக விநதனென்னும் யூதபதியை மகாராஜர் கீழ்த்திசைக்குக் கட்டளைசெய்தனுப்பியது.	௮௪௨
௪௧	மகாராஜர் தென்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.... ...	௮௪௮
௪௨	மகாராஜர் மேற்குத்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.	௮௫௧
௪௩	மகாராஜர் வடதிசைக்குச் சதவலியென்னும் யூதபதியைக் கட்டளைசெய்தனுப்பியது.	௮௫௫
௪௪	பெருமாள் சிறியதிருவடியிடத்தில் தமது மோதிரத்தைப் பிராட்டியாருக் கடையாளமாக அளித்தருளியது.	௮௫௯
௪௫	நாற்றிசையிலும் அனுப்பப்பட்ட வானரர்களெல்லோரும் பிரயாணப்பட்டது.	௮௬0
௪௬	மகாராஜர் தாம் முன்பு பார்முழுதும் சுற்றியதற்குக் காரணத்தை தம்மை வினவியருளிய பெருமாளுக் குரைசெய்தது... ...	௮௬௧
௪௭	தென்திசைநீங்கலான மூன்று திசைகளிலும் சென்ற வாநரர்கள் பிராட்டியாரைத் தேடிக் காணமல் மீண்டெய்திவிட்டது. ...	௮௬௩
௪௮	தென்திசையிற்சென்ற சிறியதிருவடி முதலானோர் நடுவழியில் ஓரஸுரனைக் கண்டு கொடிய ராவணனென்றெண்ணிக் கொலைசெய்தது.	௮௬௪
௪௯	அங்கதன் முதலானோர்கள் மற்றும் பிராட்டியைத் தேடியது. ...	௮௬௬
௫0	சிறியதிருவடி முதலானோர்கள் ரிக்ஷபிலமென்னுங் குகையினுள்ளே புகுந்துவிட்டது.	௮௬௭
௫௧	அந்த ரிக்ஷபிலத்தின் வரலாற்றை அங்குள்ள சுயம்பிரபையென்பவள் சிறியதிருவடி முதலானோர்க் குரைசெய்தது....	௮௭0
௫௨	சிறியதிருவடி சுயம்பிரபைக்குத் தாங்களங்கே வந்ததற்குக் காரணமுரைசெய்தது.	௮௭௧
௫௩	வாநரர்களெல்லோரும் ருக்ஷபிலத்தினின்றும் புறத்தில் வந்து மகாராஜர் கெடுவிட்ட காலம் கழிந்தும பிராட்டியைக்காணமல் போனதைக்குறித்து மிகச் சிந்தித்து வெறுப்புற்றிருந்தது.	௮௭௩
௫௪	சிறியதிருவடி அங்கதனுக்கிதங்கூறல்.	௮௭௬
௫௫	வாநரர்களெல்லோரும் தமக்குக் குறித்த காலந் தீர்ந்துவிட்டதன்மேல் அச்சங்கொண்டு பிராயோபவேசஞ்செய்தது.	௮௭௮
௫௬	பிராயோபவேசஞ்செய்த வாநரர்கள் ஸம்பாதியைக்கண்டு ஸம்பாஷணஞ் செய்தது.	௮௮0
௫௭	வாநரர்களெல்லோரும் ஸம்பாதியின் வினவுக்கு விடை கூறியது.	௮௮௨
௫௮	ஸம்பாதி வாநரர்களுக்குப் பிராட்டி யிலங்கையிலிருக்கின்றனளென வுரைசெய்தது	௮௮௪
௫௯	ஸம்பாதி வாநரர்களுக்கு மீளவும் பிராட்டியின் சேதி கூறியது.	௮௮௬
௬0	ஸம்பாதி தன்னுடைய முற்செயலை மீளவும் வானரர்களுக்கு மொழிந்தது.	௮௮௯
௬௧	இதுவுமது.	௮௯0
௬௨	நிசாகரமாமுனி ஸம்பாதிக்கு இதமுரைத்தது.	௮௯௨
௬௩	வாநரர்கள் ஸம்பாதியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தென்கடலின் வடகரை சேர்ந்து அதனை எங்ஙனந் தாண்டுவதெனச் சிந்தையுற்றது.	௮௯௩
௬௪	வானரர்களெல்லோரும் தென்கடலைக்கண்டு அதனைத் தாண்டுவதன் பொருட்டுத் தந்தமக்குள்ள திறமையை கூறுமாறு நிச்சயஞ் செய்துகொண்டது.	௮௯௫

சருக்கம்.	விஷயம்.	பக்கம்.
௬௫	அங்கதன் முதலிய வாநரர்களெல்லோரும் தந்தம் திறமையைக்கூறி யந்தக்காரியத்தை முடிப்பவர் யாவருளரெனச் சிந்தையுறுகையில், ஜாம்பவான் சிறியதிருவடியை யேவ முயன்றது.	௮௯௭
௬௬	ஜாம்பவான் சிறியதிருவடியின் மகிமையைப் புகழ்ந்து அவனைச் சென்று காரியத்தை முடிக்குமாறு உடன்படுத்தியது. ...	௮௯௯
௬௭	சிறியதிருவடி யலைகடலைத் தாண்டுவதன்பொருட்டு மகேந்திரமலைமேலேறி நின்று வாநரர்களை மகிழ்வித்து மகிழ்ந்தது.	௯0௧

கிஷ்கிந்தாகாண்டத்தின் அட்டவணை

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:.

ஸ்ரீரகுநந்தன பரப்ரஹ்மணேநம:.

ஸ்ரீமத்வால்மீகிராமாயணவசனம்

கிஷ்கிந்தாகாண்டம்.

த்யானஸ்லோகம்.

పశ్యన్పుష్కరిణీం ప్రసన్నసలిలాం పంపాం ప్రహృష్టద్విజాం
హృష్యన్ముగ్ధదృశం స్మరన్మహీభువం ముహ్యన్ లపన్ లక్ష్మణం
స్నిహ్యన్ సూర్యభువే సురేశ్వరభువే ద్రుహ్యన్ ధరన్ భస్మసం
నహ్యన్ రౌద్రవపూరణాయ సహరిస్నుహ్యత్వమన్దాం శ్రియం.

பச்யன்புஷ்கரிணீம்ப்ரஸன்னஸலிலாம் பம்பாம்ப்ரஹ்ருஷ்யத்த்விஜாம்
ஹ்ருஷ்யன்முக்தத்ருசம்ஸ்மரன் மஹிபுவம்முஹ்யன்லபன்லக்ஷ்மணம்.
ஸ்நிஹ்யன்ஸூர்யபுவேஸுரேச்வர புவேத்ருஹ்யன்தரன்பஸ்மஸம்
நஹ்யன்ரௌத்ரவபூரணாய ஸஹரிஸ்ஸ்நுஹ்யத்வமந்தாம்ச்ரியம்.

முதலாவது சருக்கம்.

பெருமாளும் இளையபெருமாளும் பம்பா புஷ்கரணியின் கரையில் எழுந்தருளி யிருக்கக்கண்டு, மகாராஜர் அச்சமுற்று நடுங்கியது.

அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் பற்பல மலர்கள் மலர்ந்த அந்தப் பம்பையைக்கண்டு, காமவேட்கை மிகுந்து, புலன்கள் நடுங்கி, இளையபெருமாளை நோக்கி, பாரடா லக்ஷ்மணா ! இந்தப் பம்பை வைடூரியம்போல நின்மலமான நீருடையதும், மலர்ந்த தாமரை நெய்தல் முதலிய மலர்களை உடையதும், பற்பல மரம், செடி, கொடிகளினுல் சூழப்பட்டதுமாகி விளங்குகின்றது ; இதைச் சுற்றிலுமுள்ள காட்டிலும் மலைகள்போல உயர்ந்த மரங்கள் வளர்ந்திருக்கின்றன ; வசந்தருது சீதையைப் பிரிந்த என்னை வெறுக்கின்றது ; பரதனுடைய துன்பத்தினுலும், சீதையைப் பிரிந்ததினுலும், மிக வருந்துகின்ற எனக்கும் இப்

பம்பை விளங்குகின்றது ; இது பற்பல மலர்கள் மலர்ந்தும், குளிர்ந்த நீர் நிறைந்தும், தாமரைகளினால் மறைந்தும், காணற்கினியதாகின்றது ; பாம்பு முதலிய கொடிய ஜந்துக்களும், பசு பக்ஷிகளும் அடர்ந்து, கறுத்தும், பசுமையாயுமுள்ள இந்த இளம்புல் உள்ள பூமி பற்பல மலர்கள் உதிர்ந்து சித்திராசனம்போல விளங்குகின்றது ; மலர்ந்த மலர்களினால் நிறைந்த மரங்களின்நுனிகளும், மலர்ந்த கொடிகளினால் சூழப்பட்டுள ; இக்காலம் மிகவும் இனிய மந்தமாருதமுள்ளதாதலின், காமம் மிக வளர்கின்றது ; இச்சித்திரைமாசத்தில் எல்லாமலர்களும் மலர்ந்தமையின், மணம் மிக கமிழ்கின்றது ; மலர்களை உதிர்க்கின்ற இம்மரங்களும், மழை பொழிகின்ற மேகங்கள்போலக் காணப்படுகின்றன ; அவைகளினின்றும் உதிர்ந்து காற்றினால் தூற்றப்பட்ட புஷ்பங்களைப்பார் ; எங்கும் பரவியிருக்கின்றன ; விழுந்தனவும், வீழ்கின்றனவும், வீழ்வனவுமாகிய மலர்களுடன் காற்று விளையாடுகின்றதுபோலும், மலர்ந்த மரங்களின் கிளைகளை அசைத்து வீசுகின்ற காற்று வண்டுகளினால் பின்றொடர்ந்து கானம் செய்யப்பட்டு, மதமேறிய குயில்களின் தொனிகளினால் மரங்களை ஆட்டுவிக்கின்றதுபோலும், குகைகளின் பிரதிதொனிகளினால் கானம் செய்கின்றதுபோலும், அதனால் அசைக்கப்பட்ட மரங்கள் ஒன்றுடனொன்று சேர்ந்து தொடுக்கப்பட்டனபோலும், இது சந்தனம்போலக் குளிர்ந்து, மணம் கமிழ்ந்து, மெல்ல மெல்ல நகர்ந்து, சிரமத்தைப்போக்குகின்றது; வாயுவினால் அசைக்கப்பட்ட இம்மரங்கள் வண்டுகளினால் கூவுகின்றன போலும், உயர்ந்த மரங்களினால் இம்மலைகளும் மிக உயர்ந்து தோற்றுகின்றன ; மலர்கள் நிறைந்த நுனி உள்ளனவும், காற்றினால் அசைக்கப்பட்டனவுமாகிய இம்மரங்கள்வண்டுகளினால்பாடுகின்றனபோலும். இந்தக் கோங்குமரங்களும், மலர்கள் நிறைந்து, பொன் அணிகளணிந்து, பீதக வாடை உடுத்த மனிதர்கள்போலத் திகழ்கின்றன ; இந்த வசந்தகாலம் சீதையைப் பிரிந்த என்னை வெறுக்கின்றது ; மன்மதன் என்னை பீடிக்கின்றான் ; மகிழ்ந்த இக்குயில் என்னைக் கூவி அழைக்கின்றதுபோலும்; இந்த வான்கோழியும், மலை அருவியில் மகிழ்ந்து கூவி என்னை வருத்த முறச்செய்யும் ; முன்பு, பஞ்சவடியில் இதன் தொனியை ஜானகி செவியுற்று, என்னை அழைத்து மிக மகிழ்ந்து புகழ்ந்தனள் ; இவ்வண்ணம் பற்பல பறவைகளும், பலவிதமாகக் கூவி, மரம், செடி, கொடி, புதல்களில் தத்தம் இனங்களுடன் கூடி, தத்தம் மனைவிகளுடன் புணர்ந்து மகிழ்கின்றன ; இவைகளின் தொனிகளால் இம்மரங்கள் எனது வேட்கையை வளர்க்கின்றன ; வசந்தமென்னும் அக்கினி, அசோகங்களின் பூங்கொத்தென்னும் தணலையும், வண்டுகளின் தொனி என்னும் இரைச்சலையும், தளிர்கள் என்னும் செவ்விய சுவாலைகளையுமுடையதாகி என்னை எரிக்கும் ; அடர்ந்த இமைகளையுடைய குவலயம்போன்ற கண்களையும், சுரிகுழலையும், இனிய மொழியையுமுடைய சீதையைக் காணாமல் யான்

பிழைப்பதில் யாது பயன் ? இக்காலமும், இவ்விடமும், அவளுக்கு மிக வினியனவாகும்; காமவேட்கையினால் தோன்றி, வசந்தத்தினால் வளர்க்கப் பட்ட என்னுடைய இத்துன்பமென்னும் தீ என்னை விரைவில் எரிக்கும் ; அந்தோ ? சீதையைக்காணாமல் இவைகளைக் காண்பதினால் எனது துன் பம் பெரும்பாலும் வளரும்; சீதை கட்புலனாகாமல் வருத்துகின்றனளோ? இவ்வசந்தருதுவோவெனில், காணப்பட்டே வருத்துகின்றது ; இந்தத் தென்றல் சீதையைப்பிரிந்து மிக சிந்தைகொண்டிருக்கின்றமையின், தவிக்கச்செய்கின்றது; இம்மயில்களும் சிறகைவிரித்துக்கொண்டு தங்கள் பேடுகளினால் சூழப்பட்டு மகிழ்ந்தாடுகின்றன ; அடா லக்ஷ்மணா ! ஆண் மயில் ஆடக்கண்டு, பெண்மயில் வேட்கைகொண்டு, அதற்கு எதிரில் ஆடுகின்றது பாராய் ; அதைக்கண்டு இம்மயிலும் வேட்கைகொண்டு ஓடிச் சிறகுகளை விரித்து, தொனிகளினால் மயக்குகின்றதுபோலும் ; இக் காட்டில் சீதை ராவணனால் பறிக்கப்பட்டிராள் ; ஆதலின், இது காந்தை யுடன் கூடி ஆடுகின்றது ; இக்காலத்தில் பசு பக்ஷிகளும், மிக வேட்கை கொண்டு புணர்ந்து மகிழ்கின்றமையின், சீதை அன்றி நான் இங்கிருப்பது மிகவும் கடினம் ; சீதை இருப்பாளாயின், இப்பெண்மயில் ஆண்மயிலை மகிழ்விக்கின்றதுபோல என்னையும் மகிழ்விப்பாளல்லளோ ? பாரடா லக்ஷ்மணா ! இம்மலர்ந்த மலர்களும், என் விஷயத்தில் பயனற்றன வாகின்றன ; இம்மலர்கள் வீணாக வண்டுகளுடன் தரையில் உதிர்ந்து விழுகின்றன ; கூட்டங்கூட்டமாகக்கூடி கூவுகின்ற இப்பறவைகளும், எனது காமவேட்கையைப் பெருக்குகின்றன ; சீதை இருக்குமிடத்திலும் இந்த வசந்தகாலமிருக்குமாயின், என்னைப்போலவே அவளும் வருந்துவா ளல்லளோ ? இது அவ்விடத்திலிராது ; இருக்குமாயின், என்னை விட்டு அவள் எவ்வண்ணமுய்வாள் ? ஒருகால் இந்த வசந்தமிருக்குமாயின், பிறர்களால் வெருட்டப்பட்ட அவள் யாது செய்வாள் ? யௌவனமுடைய வளும், தாமரை இதழ்போன்ற கண்களை யுடையவளும், இனிதாகவும், மெதுவாகவும், முன்பு மொழிபவளுமாகிய என் நாயகி ! இக்காலத்தில் உயிரையே விட்டு விடுவாள் ; இவ்விஷயத்தில் என் மனம் சிறிதும் ஐயமுறுகின்றிலது ;—

మయిభావస్తువైదేహ్యా స్తత్వతోవినివేశితః
మమాపిభావస్సీతాయాం సర్వథావినివేశితః

மயிபாவஸ்துவைதேஹ்யா ஸ்தத்வதோவிநிவேசித:
மமாபிபாவஸ்ஸீதாயாம் ஸர்வதாவிநிவேசித:.

வைதேகிக்கு என்னிடத்திலும், எனக்கு அவளிடத்திலும், ஆசையும் அன்பும் உண்மையாக உள அல்லவோ ? மணம் கமிழ்ந்தும், குளிர்ந்தும் வீசுகின்ற இக்காற்றும், அவளைப்பிரிந்து வருந்துகின்ற எனக்குத் தீப்போ

லத்தோற்றுகின்றது; யான் சீதையுடனிருக்கையில், இக்காற்றை எப்பொழுதும் குளிர்ந்தே யிருக்குமென நினைத்திருந்தேன்; இப்பொழுது அது சீதையின்றி, தீப்போலத் தீக்கின்றதே? இக்காக்கையும், முன்பு வன்மையாகக் கூவி இப்பொழுது இனிமையாகக் கூவுகின்றது; இக்காக்கையே முன்பு சீதையினல் ரக்ஷிக்கப்பட்டு, இப்பொழுது பிரதி உபகாரம் செய்கின்றதுபோலும்; ஆதலின், இது என் நாயகியின் சமீபத்தை அடைவிக்கும்; மலர்ந்த மலர்களின்மேல் மகிழ்ந்து கூவுகின்ற இப்பறவைகளைப் பாராய்; காற்றினல் அசைக்கப்பட்ட திலகமரத்தின் பூங்கொத்தை இந்த வண்டு மதத்தினல் மயக்குகின்ற நாயகியைப்போலச் சேர்கின்றது; காமிகளை மிகச் சோகமுறச்செய்கின்ற இந்த அசோகமரமும், காற்றில் அசைகின்ற பூங்கொத்துகளினல், என்னை வெருட்டுகின்றது போலும்; அடா லக்ஷ்மண! தளிர்த்து மலர்ந்த இம்மாஞ்சோலையும், மகிழ்ந்து செருக்குற்று, நற்சாந்தம்பூசிய மனிதர்போல விளங்குகின்றது; கின்னரங்களும், இப்பம்பையின் நாற்புறங்களிலும் உலாவுகின்றன; மலர்ந்த செந்தாமரைகளும், அப்பொழுது தோன்றிய சூரியன்போல விளங்குகின்றன; இப்பம்பையும் நிர்மலமான ஜலமுடையதும், தாமரை நெய்தல்கள் நிறைந்ததும், அன்னம் முதலிய நீர்ப்பறவைகள் ஒலிப்பதும், சுரும்புகள் அருந்திய மகரந்தங்களையுடைய செந்தாமரை திகழ்வதுமாகிக் காணப்படுகின்றது; யானை, மான் முதலிய விலங்குகளுமிறங்கி நீர் குடிக்கின்றன; கமலங்களும் காற்றினலுயர்ந்த அலைகளினல் மோதப்பட்டு அசைகின்றன; தாமரை இதழ்போலவகன்ற கண்களையுடைய நிரந்தரம் தாமரைமீது விருப்புற்ற சீதையைக்காணமல், என் உயிர் வாழ்க்கையை நன்கு மதிக்கின்றிலேன்; அந்தோ? காமனது கொடுமையை என்னென உரைப்பேன்; நெடுநாளாய்ப்பிரிந்து பார்க்கவரிய நாயகியை அவன் நினைக்கச் செய்கின்றனனே? இந்த வசந்தருது மலர்ந்த வனங்களையுடையதாகி என்னை வருத்தாதாயின், காமனை வெல்வேன்; சீதையுடன் கூடி யிருக்கையில், எவை எனக் கினியன வாயினவோ? அவை எல்லாம் இப்பொழுது இனியன ஆகின்றில; தாமரை இதழ்களை என் கண் சீதையின் கண்களென எண்ணுகின்றது;—

పద్మకేసరసంసృష్టో వృక్షాన్తరవినిస్సృతః
నిశ్వాసఇవసీతాయా వాతివాయుర్మనోహరః

பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டோ வ்ருக்ஷாந்தரவிநிஸ்ருதঃ
நிச்வாஸஇவஸீதாயா வாதிவாயுர்மனேஹரঃ.

தாமரை தாதுக்களுடன் கூடி இனியமரங்களின் இடையினின்றும் தோன்றிய இக்காற்று, சீதையின்மூச்சுக்காற்றுபோல வீசி என் மனத்தை எரிக்கின்றது; பாரடா லக்ஷ்மண! பம்பையின் தென்கரையில் மலைத்

தாழ்வரைமேல் மலர்ந்த கர்ண்ணிகாரமரம் மிகத் திகழ்கின்றது ; அம் மலையும் பற்பல தாதுக்கள் நிறைந்து, வாயுவினால் மோதப்பட்டு, பற்பல நிறமுள்ள தூளிகளைப் படைக்கின்றது ; மலையின் தாழ்வரைகளும், மலர்ந் தனவும், இலை உதிர்ந்தனவுமாகிய பலாசு மரங்களினால் எரிகின்றன போலக்காணும் ; பம்பையின்கரையில் முளைத்த ஜாதிமல்லிகை, அரளி, தாழை, நொச்சி, சிறுமல்லிகை, பெருமல்லிகை, குருக்கத்தி முதலிய பூஞ் செடிகளும், புங்கம், இருப்பை, வஞ்சுளம், வகுளம், சண்பகம், திலகம், புன்னை, கடம்பு, கர்ச்சூரம், மாவலிங்கை, அசோகம், ஆனைவணக்கி, அழிஞ் சில், மா, பாதிரி, மலை அத்தி, வஞ்சி, காட்டுவாகை, சிமிசுபம், மருதாணி, சந்தனம் முதலிய பற்பல மரங்களும் மலர்ந்து, தேன் பொழிந்து, மலர்ந்த கொடிகளினால் சூழப்பட்டு, அடர்ந்து விளங்குகின்றன ; தூரத்திலிருக் கின்றனவும், காற்றினால் அசைந்து அருகிலிருக்கின்றனபோலக் காணப் படுகின்றன ; காமிகள் காமினியர்களைப்போல இம்மரங்கள் கொடிகளைத் தழுவுகின்றன ; இக்காற்றும் மரத்தினின்றும் மற்றொருமரத்திற்கும், மலையினின்றும் மலைக்கும், வனத்தினின்றும் வனத்திற்கும் சென்று பற்பல ரசங்களையும் முகந்து கமழ்ந்து வீசுகின்றது ; சில மரங்கள் மிகுதியும் மலர்ந்து மதுவைப்பெருக்குகின்றன; சில முகிழ்த்துக் கருமை யாகத் தோற்றுகின்றன ; இது காணற்கினியது ; இது ருசியுள்ளது ; இது மலர்ந்தது; என்று பேராசைகொண்ட வண்டும், அங்கங்குத்திரிந்து அலைந்து உட்கார்ந்து, உடனே எழுந்து வேறு இடத்திற்கு நிகழ்கின்றது; இந்தப் பூமியும் தானே மலர்ந்து உதிர்ந்த மலர்களினால் பரப்பப்பட்டுப் படுக்கைபோல விளங்குகின்றது ; வெவ்வேறு வண்ணமுள்ள மலர்கள் நிறைந்த சிலைகள் தனித்தனிக் காணப்படுகின்றன; இந்த வசந்தகாலத்தில் மலர்ந்த மலர்கள் எவ்வண்ணம் நிறைந்திருக்கின்றன பாராய் ; மரங்கள் யாவும் ஒன்றுக்கொன்று பகையினால் முற்றும் மலர்ந்து வண்டுகளின் ஒலியினால் ஒன்றுக்கொன்று கூவி அழைக்கின்றனபோலும், இந்த நீர்க் காக்கை நீரில் மூழ்கிப் பேடுடன் புணர்ந்து மகிழ்கின்றது ; இவைகளைக் காண்பதினால் என்னைக் காமத்தீப்பற்றி யெரிக்கின்றது ; இந்தப் பம்பை எவ்வளவு அழகுற்றிருக்கின்றதோ ? மந்தாகினியும் இவ்வளவும் அழகுற்ற தே ? ஆதலின், அது உலகினில் புகழப்படுவது தகும் ; அடா லக்ஷ்மணா! என் பிராணநாயகியும் காணப்பட்டு, இவ்விடத்திலும் வாழ்வோமாகில், யான் இந்திரன் பட்டத்தையும் விரும்பேன் ; திருவயோத்தியையும் நினையேன் ; மிகவும் அழகிய இவ்விடங்களில் சீதையுடன் கூடி மகிழ்வே னாகில், வேறு சிந்தை எவ்வண்ணந்தோற்றும் ? தளிர்த்து மலர்ந்த இந்தச் சோலைகளும், சீதையைப் பிரிந்த என்னைப் பேதைமை செய்கின்றனவே? பாரடா லக்ஷ்மணா ! இந்தப் பம்பை மலர்ந்த தாமரை முதலிய மலர்களா லும், கூவுகின்ற அன்னம் முதலிய பறவைகளாலும், சுற்றிலுமுள்ள மான் முதலிய விலங்குகளாலும், பெரும்பாலும் விளங்குகின்றது ; மகிழ்ந்து

கூவுகின்ற இப்பறவைகளும், எனது காமத்தை வளர்க்கின்றனபோலும்; முழுமதிபோன்ற திருமுகமண்டலத்தையும், தாமரை யிதழ்போன்ற திருக்கண்களையுமுடைய என் நாயகியை நினைக்கையில், சோகம் வளர்கின்றதே? பற்பல வண்ணமுற்று அழகிய தாழ்வரைகளில், மான்கள் பெண்மான்களுடன் கூடிப் புணர்ந்து, சீதையையிழந்த என்னைத் துயருறச் செய்கின்றன; இவ்விடத்தில் யான் சீதையைக் காண்பேனாகில், உய்வேன்; வைதேகி என்னுடன் கூடி இந்தப் பம்பையின் காற்றைச் சேர்ந்து மகிழ்வாளாயின், யான் பிழைப்பேன்; அடா லக்ஷ்மணா! தாமரை செங்கழுநீர் முதலிய நறுமலர்களின் மணங்கமிழ்ந்தும், குளிர்ந்தின்பந் தருவதும், காந்தையர்களுடன் சேர்ந்தோர்களது சோகத்தைப் போக்குவதுமாகிய இப்பம்பாசரோவரத்தையும், அருகிலுள்ள சோலைகளையும் தாக்கிவருகின்ற மந்தமாருதத்தை நல்வினையர்களல்லரோ? மகிழ்ந்தெதிர் பார்த்து அனுபவிக்கின்றனர்கள்; ஜனகராஜன் திருமகளும், யௌவனமுடையவளும், தாமரை மலர்போன்ற திருக்கண்களையுடையவளும், கற்புடையாளுமாகிய என் பிராணநாயகி! இக்காலையில் எவ்வண்ணம் இறக்காமல் வாழ்வாள்? யான் சீதையைப் பறிகொடுத்து வனவாஸந்தீர்ந்து உரியவீடு சேர்ந்து வாழ்கையில், ஜனகசக்கரவர்த்தியாமொழுந்தருளி என்னைக்கண்டு என் மகள் எங்கேயென்று கேட்டருள்வாராயின், யான் யாது மறுமொழி யுரைப்பேன்? யான் தந்தையினலோட்டப்பட்டு அரசிழந்து காடு சேர்கையிலும், நல்வழிபற்றி நம்மைத் தொடர்ந்து வந்த என் நாயகி! இப்போ தெங்கிருக்கின்றனள்? அடா தம்பி! யான் அவளை விட்டெவ்வண்ணம் உய்வேன்? மிகவும் அழகிய அவளுடைய திருமுக மண்டலத்தைக்காணமல் என் மனம் மிகவும் வருந்துகின்றது; புன்னகையுடன் இனிதாகவும், இதமாகவுமுரைக்கப்பட்ட என்னுயகியின் வாக்கியத்தை யான் கேட்டின்புறுவதெக்காலம்? யான் காடடைந்து திரிந்து வருந்துகையில், அவள் வருத்தமுறினும், வருத்தமற்றவள்போலவும், மகிழ்வுற்றவள்போலவும், என்பால் இன்மொழிகள் மொழிவாளல்லளோ? யான் மீளவும் படைவீடு சேர்கையில், என் சீதை எங்கேயென்று கோஸலையார் கேட்பாராயின், யான் யாது பதிலுரைப்பேன்; ஆதலின், அடா லக்ஷ்மணா! நீயே திருவயோத்திக்குச்சென்று என்மீது மிகப் பத்தியுள்ள ஸ்ரீபரதனுக்குச் செய்தி கூறுக; யான் சீதையின்றி, உய்யேன்; என்று இவ்வண்ணம் மஹாத்துமாவாகியும், திறமையற்றவன்போலப் புலம்பி யழுதனர். இளையபெருமாள் அதுகேட்டவரை நோக்கிக் கேட்டருளீர் எம்மையரே! தேவர் சோகத்தையுள்ளடக்கி யருள்க; தேவர்க்கு மங்கலமுண்டாகுக; துன்புறற்க; தேவர் புருஷோத்தமரல்லீரோ? தேவர்போன்ற பற்றற்ற தூயோர்களது திருவுளம் இவ்வண்ணம் மயக்குறுமோ? உலகத்தில் ஒருவர்க்கொருவர் பிரிவதும், அதனல் துன்புறுவதும் இயல்பேயாகுமென்றெண்ணி, இஷ்டர்களிடத்திலும் நேசத்தை

மேற்கொள்ளாமல் துறந்தருள்க; ஸ்நேஹம் (எண்ணெய்—அன்பு) மிகுதியாயிருப்பதினாலன்றோ? திரியீரமாயினும், எரிக்கப்படுகின்றது; அந்த ராவணன் பாதாளத்திற்காயினும், மற்றெங்கேயாயினும் ஓடியொளித்துக்கொள்ளினும், அவன் நமக்குத் தப்பிப் பிழையான்; முன்பு அவனது செய்தியைமாத்திரம் அறிந்துகொள்ளவேண்டும்; அவன் பின்பு பிராட்டியாரையாயினும் விடுவான்; அல்லது, உயிரையாயினும் விடுவான்; பின்பு, அவன் அதிதியின் கர்ப்பத்தில் ஒளித்துக்கொள்ளினும், அங்கும் அவனைக் கொல்வேன்; ஆதலின், தேவர் தீரமுற்று நிலைகொண்டு தினத்தைத் துறந்து மகிழ்க; ஒரு பொருளும் முயற்சியின்றிப் பெறப்படாது; எம்மையரே! உற்சாகமென்பதே சிறந்த பலமுடையது; இதற்கு நிகரான பலம் ஒன்றுமிலது; உற்சாஹமுடையோர்க்கு இவ்வுலகினில் பெறற்கரிய பொருளொன்றுமிலது; உற்சாகமுடையோர்களே ஒரு விஷயத்திலும் சிந்தையுறுகின்றிலர்; ஆதலின், யாம் உற்சாஹத்தையே மேற்கொண்டு பிராட்டியாரைப் பெறுவோம்; ஆதலின், தேவர் சோகத்தைப் பின்னடக்கிக் காமத்தையும் வென்று தீரமுறுக; தேவர் மஹாதீரமுடையோரென்பதையும், பெரியோர்களுடன் பழகிய மதியுடையோரென்பதையும், பரமபுருஷரென்பதையும், மாயாமானுஷவிக்கிரகரென்பதையும் அறிகின்றிலீரோ? என்று விண்ணப்பஞ்செய்து தேற்றினர். உடனே பெருமாள் சோகத்தையும், மோகத்தையும் துறந்து தீரங்கொண்டு, மிகவும் அழகிய அந்தப் பம்பா புஷ்கரிணியைத்தாண்டி எழுந்தருளிப் பற்பல மரங்களையும், மலையருவிகளையும், குகைகளையும் கடாக்ஷித்துக்கொண்டே இளையபெருமாளுடன் கூடிப் புறப்பட்டருளினர். இளையபெருமாளும் இவ்வண்ணம் மிகவும் ஊக்கத்துடன் தருமத்தினாலும், பலத்தினாலும், புத்தியினாலும், பெருமாளைக் காத்துக்கொண்டிருந்தனர். இவ்வண்ணம் எழுந்தருளுகின்ற இவ்விருவரையும் ரிசியமூகமலையினருகி லுலாவிக்கொண்டிருந்த மஹாராஜர்கண்டு, வியப்பும், மயக்கும், ஐயமுமுற்று நடுங்கித் திகைத்து நின்று, நம்மைக் கொலைசெய்வதன் பொருட்டு வாலியே அனுப்பியிருப்பானென்று மஹாபயமடைந்து மிகவுந் துயருற்று வருந்தினர். மற்றுமுள்ள வானரமுதலிகளும், இவர்களைக்கண்டஞ்சி நாற்றிசைகளிலும் ஓடினர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முதலாவது சருக்கம்

முற்றிற்று.

ஆரண்யகாண்டத்தில் தீனஜனபரிபாலன ரூபமான தருமம் அனுஷ்டிப்பிக்கப்பட்டது; இக்காண்டத்தில் மித்திரஸம்ரக்ஷண ரூபமான தருமம் அனுஷ்டிப்பிக்கப்படுகின்றது; முன்காண்டத்தில் மோக்ஷப்ரதத்வரூபமான பரதத்வசிஹ்னம் அருளிச்

செய்யப்பட்டது ; இதில் அஸங்க்யேய கல்யாண குணாகரத்வம் அருளிச்செய்யப்படுகின்றது ; அன்றியும், சரணாகதிமந்திரத்தின் உத்தரகண்டத்தின், ஸ்ரீமச்சப்தார்த்தம் பாலகாண்டத்திலும், நாராயணசப்தார்த்தம், ஸர்வஜனவியாமோஹகரத்வ ப்ரதிபாதகமான அயோத்யாகாண்டத்திலும், சதுர்த்த்யர்த்தம், பஞ்சவடீவாஸபர்யந்தமாக முனிஜனக்ருதகைங்கர்ய ப்ரதிபாதகமான ஆரண்யகாண்டத்தின் பூர்வபாகத்திலும், நமச்சப்தார்த்தம், கராதிவத ப்ரதிபாதகபாகத்திலும் கூறப்பட்டன ; அதன்மேல் சேதனர்கள் உஜ்ஜீவிக்கும் வகை கூறப்படுகின்றது ; அதனுள் மாரீசதர்சன வ்ருத்தாந்தத்தால் ஸ்ரீபகவானுடைய நிரந்தரானுபவத்துக்குரிய சேதனர்கள் அதைத் துறந்து விஷயங்களில் காமுற்றலைவார்களென்பதும், ராவண விருத்தாந்தத்தால் அதனால் மோகம் மேற்கொள்வதும், ஜடாயு வ்ருத்தாந்தத்தால் கர்மமாத்திரத்தால் ராவணன்போல ஸம்ஸாரம் நீங்காதென்பதும், லங்கையில் புகுந்ததினால் சரீராந்தர ப்ராப்தியும், ஆரக்ஷகராக்ஷஸீ வியாபாரங்களினால் தாபத்ரயாதிதுக்கமும், பெருமாள் தேடுவதினால் பெருமாளுக்கு ஆசிரிதர்பாலுள்ள அவியாஜகாருண்யமும், ஆக ஆரண்ய காண்டத்தில் உரைக்கப்பட்டன ; இந்தக் காண்டத்தில் ஆசார்யமுகத்தாலே சேதனர்களுக்குத் தம்மேல் பத்தியுண்டாகச்செய்து வீடேற்றுவதன்பொருட்டு, பெருமாள் அதைத் தேடுவது கூறப்படுகின்றது ; அதனுள் முதல்சர்க்கத்தில் பெருமாள் நித்திய கைங்கர்யம்பண்ணும் நித்திய ஸூரிகளைக்கண்டு இவர்களைப்போலப் பத்தர்களும் ஏன் என்னை யடைந்து மகிழ்கின்றிலரென்று க்லேசிப்பது கூறப்படுகின்றது ;—

இதில் வஸந்த வர்ணன வியாஜத்தால் ஆசார்யலக்ஷணங்களும், சிஷ்யலக்ஷணங்களும், வர்ணாச்ரமோசித வியாபாரங்கள் அவர் ஜனீயங்களென்பதும், ஞான பத்திகளுடையோர்களது தன்மையும், நித்திய விபூதியிலும், லீலாவிபூதியிலும், அவர்களிருக்கும் பிரகாரங்களும், மற்றும் பற்பல ரஹஸ்யங்களும், காமுகர்களது செயல்களும் சூசனை செய்யப்பட்டன ; மதியுடையோர்கள் வாக்கியங்கள்தோறும் இவ்வர்த்தங்களைக் கண்டு கொள்வார்கள் ; விரிவாக உரைசெயின், கிரந்தம் வளருமாதலின், கூறுகின்றிலேன் ;—

தனிச்லோகி.

(பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ) என்பதினால் ஸர்வப்ராணிகளுக்கும் ப்ராண ஹேதுவான காற்றுத்தானே நம்மை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணுநின்றதென்கிறார் ; (பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ) இக்காற்றின் காரியம் தூளியெழுந்து செல்லாநின்றது; தாமரையாள் கைவிட்டபடியாலே தாமரைத்தாதும் பிரதிகூலித்தது ; (பாதாருந்துத மேவபங்கஜரஜஃ)என்று அவள்தனக்கு மகப்படப் பாதகமானது நமக்குப் பாதகமாகச் சொல்லவேண்டாவிறே ? இதினுடைய ராஜஸம் இருக்கும்படி நம்மையும் மதிக்கிறதில்லையே ? இதுக்கு அடிகண்டகிகளோட்டை ஸம்ஸர்க்கமிறே ? இத்தைக் காற்றென்றிருந்தோம் ; இது கேஸரியாயிருந்த தீ ? தனக்கு மேலே கூட்டுப்படையுந் தேடிவாராநின்றது ; ரூபவான்களிறே அசகாய சூரராயிருப்பார் ; இது ரூபஹீனமாகையாலே துணைதேடுமிறே ? இப்படி பாதகமாய் வந்ததாகில், அறிந்தருகவே பரிஹரிக்கத்தட்டென்னென்ன ? (வ்ருக்ஷாந்தரவிநிஸ்ஸ்ருதஃ) தூரத்திலே கண்டு பரிஹரிக்கவொண்ணாதபடி குன்றூடுபொழில் நுழைந்தேனென்கிறபடியே மரங்களிலே வந்து பதிகிடந்து நடுவே புறப்படக் கண்டதித்தனை; செல்வப்பிள்ளைகள் வெயில்பொறாமல் நிழலிலே வருமாபோலே இதுவும் மரத்து நிழலிலே வாராநின்றது ; கீழே பத்மகேஸரஸம்ஸ்ருஷ்டஃ, என்று ஸௌரப்யஞ்சொல்லிற்று; விருக்ஷாந்தரவி நிஸ்ஸ்ருதஃ,

என்று மரத்திலே தேங்கி இடைவெளியாலே யொழுகப் புறப்படுகையாலே மாந்த்யஞ் சொல்லிற்று, மரத்து நிழலிலே வருகையாலும், தாமரையிலுள்ள தேனிலளாவி வருகையாலும், சைத்தியஞ்சொல்லிற்று, ஆகசைத்தியமும், ஸௌரப்யமும், மாந்தியமும் சொல்லிற்று ; (வ்ருக்ஷாந்தரவிநிஸ்ருதஃ) விடாய்த்த நம்மை மரத்தடியிலே யொதுங்கவொட்டுகிறதில்லை ; இப்படி பாதகமாய் வந்தால் நம்மைக்கொண்டகலு மித்தனை யன்றோவென்ன ; (நிச்வாஸ இவஸீதாயாஃ) முகம்பழகினதுப்போலே யிருக்கையாலே யதுவுஞ் செய்யப்போகிறதில்லை; மைதிலியுடைய மூச்சுக்காற்றுப்போலே யிருக்கையாலே, அவள்தானிம்மரத்தடியிலே யொளித்து நின்று வருகின்றாளோ ? என்கின்ற நசையாலே போகப்போகிறதில்லை ; ஆமோதமுபஜிக்ரந்தெள ஸ்வநிச்வாஸாநுவாதினம், என்று நிச்வாஸத்துக்குப் பரிமளமுண்டாகச் சொல்லக்கடவதிறே ? ஸ்பர்சனமாய் நலிகிறதுக்குமேல் ஸ்மாரகமாயும் நலியாநின்றது ; இப்படிக்கொத்த காற்று தோன்றினவளவோவென்னில், (வாதி) சாடு தன் பரப்புந்தானும்படி யுலாவாநின்றது ; அன்றியிலே, வாதியென்று பாதகமென்று கொண்டுபோக வொண்ணுதபடி தான் சம்பாதித்த கந்தத்தாலே துவக்காநின்றது ; இதுதான் கந்தவாஹமிறே ? இப்படி பாதகமாக வந்து தோற்றி யுலாவுகிறதுதானே தென்னில், (வாயுஃ) ஸர்வோஜ்ஜீவநஹேதுவான காற்றுக் கெடீரிப்படி பாதகமாகிறது ; பரப்பிரஹ்மமான இவருக்கு அஞ்சித் திரிகிற காற்றிறே ? இவர் தம்மை யஞ்சப்பண்ணித் திரிகிறது ; இப்படி யஞ்சப்பண்ணுகிறபடி என்னென்னில், (மநோஹரஃ) மேலெழுந்ததன்றியும், உள்ளுள்ள பதார்த்தமகப்பட அபகரியாநின்றது ; இது லோகத்திலே ஒருவழிப்பறிகாரர் ஸமதியாய் நடக்கிறது ; (பத்மகேசரஸம்ஸ்ருஷ்டஃ) என்கையாலே தங்களை இன்னுரென்று அறியாமைக்கும், கண்டால் பயப்படுகைக்குமாகவும், அவர்களும் தூளநம்பண்ணி வருகிறுப்போலே யிருக்கிறது ; (வ்ருக்ஷாந்தரவி நிஸ்ஸ்ருதஃ) என்கையாலே, அவர்கள் வழிப்போகிறவர்களை வருந்தனையும், மாத்தடிகளிலே பதிகிடந்து அவர்கள் அணுகவந்தவாறே புறப்படுமாபோலே யிருக்கிறது; (நிச்வாஸ இவஸீதாயாஃ) என்கையாலே, அவர்கள் கைகழியப்போகாமே துவக்கும்படி பண்டுகேண்டறியுமாபோலே யிருந்து உம்முடைய வூர்சொல்லீர், பேர் சொல்லீர், என்றுப்போலே முகமறிவுசொல்லி யுகப்பிக்குமாப்போலே யிருக்கிறது ; (வாதி) என்கையாலே காரியம் கைப்புகருந்தனையும், அவர்கள் நின்றவிடத்திலே நில்லாதே பரகுபரசென்று சஞ்சரிக்குமாபோலே யிருக்கிறது ; (வாயுஃ) என்கையாலே, யாரேனுந்தொடர்ந்து பிடிக்கப்புக்கால் உடம்போடடம்பு தாக்கா நிற்கச்செய்தேயும், கைக்குப் பிடிகொடாதே யிருக்கும்படியைச் சொல்லுகிறது ; (மநோஹரஃ) என்கையாலே, மேலெழுந்த கீழ்ச்சீரையன்றியிலே, உள்ளுள்ள தடைய அபகரிக்கும்படி சொல்லுகிறது ;—

இரண்டாவது சருக்கம்.

மஹாராஜர் பெருமாள் இளையபெருமாள்களை இன்னுரென்று அறிவதன் பொருட்டுச் சிறிய திருவடியை யனுப்பியது.

அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரும் சிறந்த ஒளியுள்ளவர்களும், சிறந்த படைகளைக் கையிலேந்தியவர்களும், மிக வீரமுடையவர்களுமாக அங்கே உலாவினமையின், மஹாராஜர் கண்டு ஐயமுற்றுப் பத்துத் திசை

களையும் சுற்றிப்பார்த்து, எங்கும் நிலைகொள்ளாமல் நடுங்கி, மனம்பதைத்து, மிகச் சிந்தைகொண்டு, தன்னுடன் தொடர்ந்திருக்கின்ற வானரர்களைக் கூட்டி யவர்களை நோக்கிக் கேளீர் நட்பினர்களே! இவ்விருவரும் புகற்கரிய இக்காட்டில் நம்மைக் கொலைசெய்வதன்பொருட்டே வாலியினாலேவப் பட்டு வந்தனர்களென்றே நம்புகின்றேன்; ஆதலின், கபடத்தினால் மரவுரி யுடுத்து முனிவர்போலத் திரிகின்றனர்களென்றனன். அவ்வானரர்களும் அம்மொழிகேட்டு அவர்களையும்பார்த்துச் சந்தேகங்கொண்டு அவ்விடத்தை விட்டு மற்றொருவர் வந்து புகற்கரிய சிகரத்தின்மேற்சென்று மஹாராஜ னைச் சூழ்ந்து நின்றனர்கள். அவர்கள் ஓடிமிடவேகத்தில் மரங்களும் முறிந் தன; அங்குள்ள விலங்குகள் அச்சங்கொண்டோடின; இவ்வண்ணம் யாவரும் பயந்தோடி யொளித்துச் சிந்தையுறுகையில், மஹாபல பராக்கிரம முடையவரும், புத்திநுட்பமுடையவரும், மொழிவதிற் சிறந்தவருமாகிய சிறியதிருவடி மஹாராஜனை நோக்கி, வானரர் கோமானே! வாலிக்கு அஞ்சி ஏன் ஓடி யொளித்துக்கொள்ளுகின்றீர்கள்; அச்சமுறற்க; இது ரிசியமூகமலையாதலின், இங்கு வாலியின் பயமில்லையே? நீங்கள் அஞ்சத் தக்க வாலியையும், இங்கே காண்கின்றிலேன்; ஆதலின், நீர் அஞ்சத்தக்க காரணம் ஒன்றுமில்லை; இதனால் குரங்கின் தன்மையே நன்கு வெளிப் பட்டது; சஞ்சலசித்தமுடையவராகையால், மனதை அடக்கி தீரத்தை மேற்கொள்ளுகின்றிலீர்; தேவர் அரசாதலின், புத்தியினால் இங்கிதசேஷ்டை களை அறிந்து எல்லாக்காரியங்களையுஞ் செய்யவேண்டுமன்றோ? புத்தி அற்ற வன் அரசனாகி அரசாக்ஷிசெய்யான்; ஆகலின், அச்சம்துறந்து, தீரம்பூண்டு, நன்கு ஆராய்ந்து, இனி நடக்கவேண்டுவதை உணாயினெ மொழிந்தனர். மஹாராஜரும் இவ்வண்ணம் சிறியதிருவடி மொழிந்த வாக்கியத்தைக்கேட்டு அவனை நோக்கி, கேளீர் அனுமானே! நீண்டுருண்ட திருக்கைகளை யுடைய வர்களும், செந்தாமரைமலர்போலகன்ற திருக்கண்களை யுடையவர்களும், வில், கணை, வாள் முதலிய ஆயுதங்களை தரித்தவர்களும், தேவகுமாரர்கள் போன்றவர்களுமாகிய இருவர் எழுந்தருளுகின்றனர் பாரீர்; இவர்களைக் காணின், எவர்க்குத்தான் அச்சம் தோன்றாது; வாலியினால் ஏவப்பட்டு நம்மைக் கொலைசெய்யும்பொருட்டே இவர்கள் இங்கே வருகின்றனரென்று நம்புகின்றேன்; அரசர்கள் பற்பல வீரர்களுடன் நட்புகொண்டிருப்பார்க ளல்லரோ? ஆதலின், நாம் இவர்களை நம்பி யிருத்தல் தீது; ஆதலின், மாறுவேஷம்கொண்டு இவர்களின் எண்ணத்தை அறியவேண்டும்; நாம் நம்பி யிருக்கின், சமயம்பார்த்து இவர்கள் நம்மை கொலைசெய்து விடுவார் கள்; ராஜகாரியங்களில் வாலி மிகவும் ஊக்கமுடையவன், ராஜர்களென் றால், பற்பல உபாயங்களையும் அறிந்தவர்களல்லரோ? ஆதலின், கபட வேஷத்தினாலேயே இவர்கள் தன்மையை அறியவேண்டும்; ஆதலின், நீர் அற்பமனிதன்போல வேஷம்பூண்டு அவர்களிடம்சென்று இங்கிதங்களி னாலும், வியாபாரங்களினாலும், வாக்கியங்களினாலும், அவர்களுடைய கரு

த்தை நன்கு அறிந்து கொள்க; நல்ல எண்ணமுடையவர்களாயின், அவர்களை பலவாறாகப் புகழ்ந்து விசுவாசத்தை உண்டுபண்ணி, அவர்கள் குலகோத்திரங்களையும், இங்கே வந்ததற்குக் காரணத்தையும், நான் கேட்பதாகக்கேட்டு அவர்கள் உரைக்கும் ப்ரதி உத்திரத்தினால் உண்மையை நன்கு அறிந்துகொண்டு வாரீரென்று மொழிந்தேவினன். சிறிய திருவடியும் மஹாராஜரால் ஏவப்பட்டு அவ்வண்ணமே யாகுகவென்று மொழிந்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்க ளெழுந்தருளியிருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டனர். ⁕

கிஷ்கிந்தாகாண்டத்தில் இரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

மூன்றாவது சருக்கம்.

சிறியதிருவடி, பெருமாள் இளையபெருமாளைக் கிட்டி புகழ்ந்து குலகோத்திரங்களை வினவ, இளையபெருமாள் பெருமாளால் ஏவப்பட்டு விடை அருளிச்செய்தது.

பின்பு சிறியதிருவடி, மஹாராஜர் வாக்கியத்தின்படி ரிசியமூகபருவதத்தின் நின்று எழுந்து வாநரரூபத்தை விட்டு ப்ரஹ்மசாரிரூபந்தரித்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்களெழுந்தருளியிருக்குமிடம் வந்து அவர்களுக்கு தண்டம் சமர்ப்பித்து அவர்களை நோக்கி, இனிதாகவும், மெதுவாகவும் மொழியலுற்றனர். மஹானுபாவர்களே! தேவர்கள் ராஜரிஷிகளோ? தேவரிஷிகளோ? தாபசவேஷம்பூண்டிருக்கின்றீர்கள்; மிகவும் அழகுடைய தேவர்கள் இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரியம் யாதோ? தேவர்களைக் கண்டு மான் முதலிய விலங்குகள் அஞ்சுகின்றன; பம்பாதீரத்திலுண்டாகிய பற்பல மரங்களையும் கடாக்ஷித்துக்கொண்டு இவ்விடமெல்லாம் திகழச்செய்கின்றீர்கள்; தீரமுடையவர்களும், தங்கம்போன்ற திருமேனியையுடையவர்களுமாகியும், மரவுரி உடுத்திருக்கின்றீர்கள்; தேவர்கள் யாவரோ? சிங்கம் போன்ற நோக்குடையவர்களும், மஹாபல பராக்கிரமங்களை யுடையவர்களும், இந்திரதனுஸ்ஸுபோன்ற கோதண்டத்தையுடையவர்களும், காலை

⁕ முதல் சருக்கத்தில் சில சேதனர்கள் விஷயாந்தரத்தில் ஆவலுற்றிருப்பதைக் கண்டு, பெருமாள் சிந்தைகொண்டது உரைக்கப்பட்டது; இரண்டாவதில் சேதனர்கள் தாம் செய்த அபராதத்திற்கு குரூரதண்டங் கிடைக்குமென்று அச்சமுற்றதும், அப்படி அஞ்சாமல் தம்மையே சேரும்படி தாம் அபிமுகங்கொண்டு எழுந்தருளினதும் உரைக்கப்பட்டது; இனி பெருமாளை அடைவதற்குக் காரணமான ஆசாரிய கிருத்தியம் இத்தன்மையதென்று உரைக்கப்படுகின்றது.

போன்ற நடை யுடையவர்களும், யானை துதிக்கைபோன்ற திருத்தோள்களை யுடையவர்களும், பூமண்டலத்தை ஆளத்தக்கவர்களுமாகியும் இங்கு எவ்வண்ணம் எழுந்தருளினீர்கள்; மிகவும் சூரர்களும், ஜடாதாரியுமாகியும் ஒருவர்க்கொருவர் நிகராகி, காந்தியினால் தேவலோகத்து நின்றும் தற்செயலாய் வந்த சந்திர சூரியர்கள்போல விளங்குகின்றீர்கள்; அகன்ற திருமார்பும், தேவர்போன்ற திருமேனியும், சிங்கத்தின் தோள்போன்ற திருத்தோள்களும், உற்சாகமுங்கொண்டு தேவர்கள் மதமேறிய காளைகள்போல விளங்குகின்றீர்கள்; நீண்டுருண்ட திருபுஜங்களும், பரிகம்போல விளங்குகின்றன; இவை பற்பல அணிகளை அணிவதற்குரியனவாகியும், ஏன் அணிந்தில? தேவர் இருவரும் இப்பார்முழுதும் பாதுகாக்கவல்லீர்களென எண்ணுகின்றேன்; இவ்விரண்டு கோதண்டங்களும், தங்கத்தினால் அலங்கரிக்கப்பட்ட இந்திரன் வச்சிராயுதம்போல விளங்குகின்றன; நெட்டுயிர்ப்பு விடுகின்ற நச்சரவம்போன்ற நாராசங்கள் நிறைந்த அம்பறாத்தூணிகளும், மிக வொளியிடுகின்றன; நீண்டகன்ற தங்கப்பிடி அமைந்த இவ்விரண்டு வாள்களும், அன்று புனைவிட்ட பந்நகங்கள்போலத் திகழ்கின்றன; இவ்வண்ணம் யான் வினவியும், ஏன் மறுமொழி அருளிச்செய்கின்றிலீர்? சுக்கிரீவனென்னும் வானரராஜன் தமையனால் துரத்தப்பட்டு உலகமெங்குந்திரிந்து வருந்தியிருக்கின்றனன்; மகாத்துமாவான அந்தச் சுக்கிரீவனால் ஏவப்பட்டு யான் இங்கு எய்தினேன்; அனுமான் என்னும் பெயர் உடையேன்; அந்தச் சுக்கிரீவன் தேவர்களுடன் நேசங்கொள்ள விரும்புகின்றான்; அந்தச் சுக்கிரீவமஹாராஜனுக்கு யான் மந்திரி, வாயுபகவான் மைந்தன், சுக்கிரீவனுக்கு இதம் செய்வதின்பொருட்டு எனது நிஜரூபத்தை மறைத்து, இந்த ப்ரஹ்மசாரிரூபத்தை தரித்து வந்தேன்; யான் வேண்டுமிடம் செல்லுவேன்; வேண்டிய ரூபங்களையும் தரிப்பேன்; என்றிவ்வண்ண முரைசெய்து மௌனமடைந்தனர். பெருமாள் அம்மொழியைக் கேட்டு இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி! நாம் சுக்கிரீவனையே தேடி வந்தோமே? அவருடைய மந்திரியே தற்செயலாய் நம் ஸமீபத்திற்கு வந்தனர்; இந்த மந்திரியும் மொழிவதில் மிகவுஞ் சிறந்தவர்; ருக்கு யஜு- ஸ்ஸு- ஸாமம் என்னும் மூன்று வேதங்களையும் ஓதாதவன் இவ்வண்ணம் நன்றாக வார்த்தை சொல்லான்; ஒன்பது வியாகரணங்களையும், இவர் நன்கோதி யுணர்ந்திருக்கின்றனர்போலும், வெகுவாக இவர் மொழிந்திருக்கினும், சிறிதேனும் பிழைமொழி யுரைத்திலர்; முகத்திலாவது, கண்களிலாவது, நெற்றியிலாவது, புருவங்களிலாவது, மற்றுள்ள எந்த அங்கங்களிலாவது மொழியுங்காலையில், சிறிதேனும் விகாரந்தோன்றியிலது; மிகவும் விஸ்தாரமின்றியும், சந்தேஹமின்றியும், விரைவின்றியும், மெதுவின்றியும், வாக்கியங்கள் மார்பில் தோன்றிக் கண்டத்தில் ஒலித்து மத்யமஸ்வரத்தில் மொழியப்பட்டன; நன்றாகப் பழக்கங்கொண்டு பிழை சிறிதுமின்றி, மெதுவும் வேகமுமில்லாமல் நடுத்தரமாக மிகவும் இனிமையாக

மொழிந்தனர். உச்சநீசஸ்வரிதங்களுடன் மிகவு மினிதாகவுரைத்த இவருடைய வாக்கியத்தைக் கேட்கின், கொலைசெய்வதன்பொருட்டு வாளை யுருவிக்கொண்டெதிர்த்து வருகிற பகையாளிக்கும் சினந்தணிந்து, பெருமகிழ்வு மேலெழுந்து பெருகாதோ ? அடா லக்ஷ்மணா ! இவ்வண்ணம் மிகத் திறமையுள்ள தூதன் எந்த அரசனுக்கிலனோ ? அவனுடைய காரியங்கள் எவ்வண்ணங் கைக்கூடும் ; இவர்போன்ற தூதர்கள் எவர்களுக் கிருப்பார்களோ? அவர்களுடைய காரியங்களெல்லாம் தடையின்றிக் கடையேறும்; ஆதலின், இவருடன் நீ மிகவும் அன்புடனும், ஊக்கத்துடனும், பதில் உரைசெய்க ; என்று மிக மகிழ்வுகொண்டருளிச்செய்தனர். இளையபெருமாளும் அவ்வருளிச்செயலைக்கேட்டு, சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் அனுமானே ! யாங்கள் மஹாராஜருடைய நற்குணங்களையெல்லாம் கேட்டுணர்ந்திருக்கின்றனம் ; யாங்களும் அவரைத் தேடிக்கொண்டே இங்கெய்தினோம் ; மஹாராஜர் உரைசெய்ததாக நீர் உரைத்தபடியே செய்ய யாங்களும் விருப்பங்கொண்டிருக்கின்றனம் ; இவ்விஷயத்தில் சிறிதும் ஐயுறத்தக்கதில்லை ; என்று அருளிச்செய்தனர். சிறியதிருவடியும் அம்மொழியைக்கேட்டவுடனே பெருமகிழ்வுகொண்டு இனி நம்காரியமெல்லாம் நிறைவேறிற்றென்று நிச்சயமுற்று இவர்களுடன் மஹாராஜர்க்கு நட்புச் செய்விக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் மூன்றாவது சருக்கம்
முற்றிற்று.

சிறியதிருவடி பெருமாள் இளையபெருமாள்களுடைய திருவுள்ளத்தை யறியும்படி மாறுவேஷம்பூண்டு வந்தும், அதை யறிந்துகொள்ளாமலே தாமே யவர்களுடன் தான் மாறுவேஷங்கொண்டு வந்தேனென்று உரைசெய்த தென்னென்னில், பெருமாள் மாயாமானுஷவிக்கிரஹனானாலும், நித்திய நிர்விகார நிரஞ்சன நிர்மாய ஸச்சிதானந்த பரிபூர்ண பரமபுருஷனானமையால், இவரை சேவித்தவுடன் சிறியதிருவடிக்கு ஸத்துவந்தலையெடுத்து, மனந்தெளிவுற்று விளங்கினமையின், பொய்மொழிய வாயெழாமையாலும், மிகவும் புத்திநுட்பமுடையவராதலின், அவர்களின் கருத்தை யறிந்துவிட்டபடியாலும், தாமே முன்னதாகத் தான் வந்த செய்தியை யுரைத்துவிட்டனரென வுணர்க.—அனுமார் மஹாராஜருக்குத் தூதாகவந்தமையால், வேந்தர்கள் தூதர்களுடன் மந்திரிமுகமாக வார்த்தைசொல்வார்களே யன்றித் தாமே நேராகப் பேசார்களாதலின், பதிலுரைப்பதற்கு இளையபெருமாளை ஏவினாரென வறிக ;—

ஆசாரியமுகத்தாலேயே எம்பெருமானைச் சேரவேண்டுமென்பதை வெளிப்படுத்துவதற்காக மஹாராஜர் பெருமாளைச் சேர்வதற்கு சிறியதிருவடியை யாசாரியராக்கினார்; பெருமாள் வேதவேதாங்கங்களையும், அனுமார் அறிந்திருப்பாரென்றருளிச்செய்தமையால், ஆசார்யகுணபூர்த்தி சொல்லப்பட்டது ; இந்த அனுமான் போன்றவர்கள் தூதராயிருப்பவர்களுக்கெல்லாம் சித்திக்குமென்றதனால், சிஷியனிடத்தில் சிஷியகுண பூர்த்தியில்லாவிட்டாலும், ஆசார்ய மாஹாத்துமியத்தால் சிஷியன் சித்தியடைவானென்பது அறிவிக்கப்பட்டது,

நான்காவது சருக்கம்.

சிறியதிருவடி, இளையபெருமாள் தங்கள் குலகோத்திரங்களையும், முறையே இவ்விடத்திற்கு எழுந்தருளிய காரணத்தையும் அருளிச்செய்ய ஸ்ரீராமலக்ஷ்மணர்களைத் தந்திருத்தோள்களில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து மஹாராஜரிடஞ் சேர்த்தது.

அநந்தரம் மிகவும் மனமகிழ்வுகொண்ட சிறியதிருவடி இளையபெருமாளருளிச்செய்த வாக்கியத்தைக்கேட்டு, மனதில் மஹாராஜனை நினைத்து, இனி யவர்க்கு கிஷ்கிந்தாராஜ்ஜியம் கிடைக்குமென்று நிச்சயங்கொண்டு பெருமாளை நோக்கி, ஸ்வாமி! தேவர் மிகக் கொடிய இந்தப் பம்பாரணியத்திற்குத் திருத்தம்பியாருடன் ஏன் எழுந்தருளித்து; என்று வினவுதலும், பெருமாளதற்குப் பதிலுரைக்கும்படி இளையபெருமாளை ஏவியருளினர். இளையபெருமாளதுகேட்டு மாருதியை நோக்கிக் கேளீர் அனுமானே! கோஸலநாட்டில் திருவயோத்திமாநகரந்தன்னில் மஹாபலபராக்கிரம ரூபலாவண்ய சௌர்யாதிகுணங்கள் நிறைந்தவரும், தருமவழி வழுவாதவரும், நான்குவர்ணங்களையும், தருமமாகப் பாதுகாத்தளிப்பவருமாகிய தசரதனென்னும் சக்கரவர்த்தியார் வாழ்ந்திருந்தனர். அவர் ஒருவனையும் பகைத்திலர்; அவர்மீதும் ஒருவரும் பகைகொண்டுமிலர்; அவர் எல்லாவுயிர்களுக்கும், மற்றொரு பிதாமஹதேவர்போல இனியராகி, அக்கினிஷ்டோமம் முதலிய யாகங்களை விதிப்படி செய்து முடித்தனர். இவர் அந்தத் தசரதசக்கரவர்த்திக்கு மூத்த திருமகனர்; ஸ்ரீராமனென்னும் திருநாமமுடையோர்; எல்லாவுயிர்களுக்குந் தஞ்சம், பிதிர்வாக்கிய பரிபாலனத்தில் மிகவும் சிரத்தை யுடையவர்; மிக வீரமுடையவர்; சக்கரவர்த்தித்திருக்குமாரர்களுள்ளும், இவர் திருக்கல்யாணகுணங்களாலும் மிகச் சிறப்புற்றவர்; ராஜலக்ஷணங்கள் யாவும் பூர்ணமாயுள்ளவர்; மிகச் செல்வமுடையவராகியும், பிதாவின் வாக்கியத்தின்படி ராஜ்ஜியத்தைத்துறந்து, புலன்களையடக்கிக் கானகத்தில் வாழ விருப்புற்று, என்னுடனும், சீதையென்னும் பிராட்டியாருடனும் கூடிப் புறப்பட்டிங்கே தண்டகாவனத்திற்கெழுந்தருளினர். காந்தி கதிரவனை எப்பொழுதும் விட்டுப் பிரியாததுபோலப் பிராட்டியாரும் இவரை விட்டுப் பிரியார்; யானும் இவருக்குத் தம்பி; இலக்ஷ்மணனென்னும் பெயருடையேன்; இவரது திருக்கல்யாண குணங்களிலீடுபட்டு, போகங்களையுந்துறந்து, தொண்டுபூண்டு, உடன் வந்து, பணிவிடைசெய்து வருகிறேன்; மிகச் சிறந்தவரும், இன்புறுவதற்கே தக்கவருமாகியும், அரசிழந்து, காடுசேர்ந்து வாழ்கையில், யாவனோவொரு

ராக்ஷஸன் நாங்கள் ஒருவருமின்றித் தனியே யெழுந்தருளியிருந்த பிராட்டியாரைப் பறித்தோடி யொளித்துவிட்டனன்; அவன் யாவனோ? எங்கிருக்கின்றவனோ? எத்தன்மையனோ? அதனையும் யாங்களறியோம்; பின்பு, நாங்கள் பிராட்டியாரைத் தேடிக்கொண்டு வருகையில், தனுவென்னும் அஸுரன் சாபத்தினால் ராக்ஷஸனாகிக் கபந்தனென்னும் பெயர்பெற்று அக்காட்டில் வாழ்ந்த அவ்வஸுரன் எங்களால் கொலைசெய்யப்பட்டு சாபந்தீர்ந்து மகிழ்ந்து எங்களை நோக்கி, மஹானுபாவர்களே! ஸுக்கிரீவனென்னும் வானரராஜன் ரிசியமூகமலையில் வாழ்கின்றனன்; அவனுடன் நட்புக் கொள்வீர்களாயின், அவன் சீதை யிருக்குமிடத்தைத் தேடி யறிவான்; ஆதலின், அங்கெய்துகவென்று உரைத்து விட்டு வானேறிவிட்டனன்; ஆதலின், யாம் மஹாராஜனைத் தேடிக்கொண்டே இங்கெய்தினேம்; இவ்வண்ணம் யாங்கள் இங்கெய்தியதற்குக் காரணம் முதலிய யாவும் உரைசெய்தேன்; யானும் எம்மையரும் மஹாராஜனையே தஞ்சமடைந்தோம்;

ఏషదత్త్వాచవిత్తాని ప్రాప్యచానుత్తమంయశః
లోకనాథఃపురాభూత్వా సుగ్రీవంనాథమిచ్ఛతి.
పితాయస్యపురాహ్యాసీ చ్ఛరణ్యోధర్మవత్సలః
తస్యపుత్రశ్శరణ్యశ్చ సుగ్రీవంశరణంగతః.

ஏஷதத்வாசவித்தாநி ப்ராப்யசானுத்தமம்யசஃ
லோகநாதஃபுராபூத்வா ஸுக்ரீவம்நாதமிச்சதி.
பிதாயஸ்யபுராஹ்யாஸீ ச்சரண்யோதர்மவச்சலஃ
தஸ்யபுத்ரச்சரண்யச்ச சுக்ரீவம்சரணங்கதஃ.

இந்த எம்மையர் முன்பு, ஸகல லோகநாதனும், ஸர்வாந்தர்யாமியுமாகித் தன்னைச் சார்ந்தோரெல்லோர்க்கும் நற்செல்வங்களையளித்து மிகப் புகழ்பெற்றும், இப்போழ்து சுக்கிரீவனைத் தமக்கு நாதனாகக் கோருகின்றனரந்தோ? யாவருடைய தந்தை எல்லோருந் தஞ்சமடையத்தக்கவரும், மிகவுந் தருமமுடையவருமாயினரோ? யாவர் தந்தையைப்போலவே எல்லோருந் தஞ்சமடையத்தக்கவராகிச் சக்கரவர்த்தித்திருமகனு மாகின்றனரோ? அந்த எம்மையரோ இப்போழ்து சுக்கிரீவனைத் தஞ்சமடைகின்றனரய்யோ? இவர் முன்பு, எல்லாவுலகங்களுந் தஞ்சமடையத்தக்கவராகியும், எனக்குத் தமையனாகியும, மஹாராஜனைத் தஞ்சமடைகின்றனர்;—

యస్యప్రసాదేసతతం ప్రసీదేయురిమాఃప్రజాః
సరామోవానరేన్ద్రస్య ప్రసాదమభికాంక్షతి.

யஸ்யப்ரஸாதேஸததம் ப்ரஸீதேயுரிமாஃப்ரஜாஃ
ஸராமோவானரேந்த்ரஸ்ய ப்ரஸாதமபிகாம்க்ஷதி.

யாவருடைய அருளினால் மூவுலகங்களிலுமுள்ள இவ்வுயிர்களெல்லாம் மகிழ்ந்து வாழ்வுறுமோ ? அந்த எம்மையரோ வானரங்களுக்கு ராஜனுடைய அருளைக் கோருகின்றனர் ; எவருடைய தந்தையைப் பாரிலுள்ள தார்வேந்தர்களெல்லோரும் பணிந்து மகிழ்ந்து இன்புற்றனர்களோ ? அந்த எம்மையர் உலகினில் மிகப் புகழ்பெற்றும், வானரராஜனைச் சரணமடைகின்றனர் ; எம்மையர் மிகத் துயரமடைந்து தஞ்சமெனச்சேர்ந்தமையின், மஹாராஜர் இவர்மேல் அருள்செய்யக்கடவர். என்றிவ்வண்ணம் கண்ணீர் பெருக்கித் தீனமடைந்து வருந்தி மொழிந்தனர். சிறியதிருவடி இவ்வண்ணம் இளையபெருமாளருளிச்செய்த வாக்கியத்தைக்கேட்டு மிக மகிழ்ந்து அவரை நோக்கிக் கேட்டருளீர் இளையபெருமாளே ! மிகவும் நன்மதி பூண்டும், சினத்தையடக்கியும், புலன்களைவென்றும், திவ்விய சத்தியுற்றும் விளங்குகின்ற தேவர்களைப்போன்ற மஹாநுபாவர்கள் தற்செயலாயிருக்குமிடந்தேடி எழுந்தருளுகையில், மஹாராஜர் தேவர்களைக்கண்டு சேவித்து தன்னியராகத்தக்கவராகாரோ ? மஹாராஜரும் அரசிழந்து, வாலியினால் பகைக்கப்பட்டு, மனைவியையும் பறிகொடுத்துக் காட்டிலலைந்து வருந்துகின்றனர் ; கதிரவன் திருமகனான அந்த சுக்கிரீவமஹாராஜர் அப்படித் துன்புற்றவராயினும், எங்களுடன் கூடித் தேவர்களுக்குத் தடையின்றியுதவி செய்வார் ; ஆதலின், நாமெல்லோரும் மஹாராஜர் இருக்குமிடத்திற்குச் செல்வோம் எழுந்தருளுக ; என்று இனிமையாக விண்ணப்பஞ் செய்தனர். இளையபெருமாள் அதைக்கேட்டு மகிழ்ந்து அவரைப் புகழ்ந்து பெருமானை நோக்கி, எம்மையரே ! இந்த மாருதி மகிழ்வுடன் கூறுகின்றமையின், இவர் உரைப்பது உண்மையே யாகும் ; ஸுக்கிரீவர் சீதாதேவியைத் தேடுவதற்குத் துணையாகுவாரென்பதில் ஐயமிலது ; ஆதலின், தேவர் காரியம் முடிந்ததெனவே எண்ணுக ; இவர் வாயுபகவான் புத்திரராதலாலும், மகிழ்வினால் முகமலர்ந்து, ஒளிதிகழ்ந்து மொழிந்தமையாலும், பொய்யுரைத்திலர் ; இனியும் பொய்யுரையார் ; ஆதலின், நாம் இவருடன் செல்லுவோமெழுந்தருளுக ; என்று விண்ணப்பம் செய்தனர். உடனே சிறியதிருவடி மகிழ்ந்து அந்த பிரஹ்மசாரிரூபத்தை விட்டு நிஜரூபத்தை தரித்து, ஸ்ரீராமலக்ஷ்மணர்களிருவரையும் தமது தோள்களின்மேலேற்றி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு இனி எல்லாக்காரியங்களும் முடிந்ததென நிச்சயித்து, மஹாராஜர் வீற்றிருந்த அந்த ரிசியமூக மலையை நோக்கி, எழுந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நான்காவது சருக்கம்

முற்றிற்று.

ஐந்தாவதுசருக்கம்.

பெருமாள் மஹாராஜருடன் அக்கினிஸாக்ஷியாக நட்புச்செய்துகொண்டு வாலியைக்கொலைசெய்து உனக்குப் பட்டங்கட்டுவிப்பேனென்று முன்னமே பிரதிஜ்ஞைசெய்து அபயங்கொடுத்தருளியது.

பின்பு, சிறியதிருவடி, ஸ்ரீராமலக்ஷ்மணர்களை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு ரிசியமூகமலை சேர்ந்து, அவ்விடத்திலே இவர்களை யிறக்கி யோரிடத்திலெழுந்தருளி யிருக்கச்செய்து, இவர்களைக்கண்டு அச்சங்கொண்டு ஓடி மஹாராஜர் ஒளிந்திருந்த மலயமலைக்குச்சென்று மஹாராஜரை நோக்கிக் கேளீர் வானரர்கோமானே ! ரகுமஹாராஜாவின் திருவம்சத்திலவதரித்து மிகச்சூரமுடையவர்களும், தசரதசக்கரவர்த்தித்திருக்குமாரர்களும், ஸ்ரீராமலக்ஷ்மணர்களென்னும் திருநாமமுடையவர்களுமாகிய இவ்விருவரும் மிகவுந் தருமகுணமுடையவர்களுமாகிப் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்வதன்பொருட்டுத் தண்டகாவனத்தில் வாழ்கையில், ராவணன் ஸ்ரீராமபத்தினியாகிய சீதையென்னும் பிராட்டியாரைத் திருடிக் கொண்டோடிவிட்டான் ; ஆதலின், அவரைத் தேடிக்கொடுப்பதன்பொருட்டு உம்மைத் தஞ்சமென வந்தடைந்தனர்கள் ; பற்பல யாகங்கள்செய்து அளவற்ற தானங்கள்பண்ணிப் பார்முழுதும் ஒரு குடைக்கீழாண்ட சக்கரவர்த்தியாரின் திருக்குமாரர்களாகியும், சீதாபிராட்டியாரின்பொருட்டு உம்மைச் சரணமடைந்தனர்கள் ; உம்முடன் தோழமைகொள்ளவுங் கோருகின்றனர்கள் ; யாவராலும் பூஜிக்கத்தக்கவர்கள் ; ஆதலின், நீர் அவர்களைக் கண்டு பூஜைசெய்து நட்புச்செய்து கொள்ளுக ; என்று மொழிந்தனர். மஹாராஜர் அம்மொழிகேட்டு மிக மகிழ்ந்து அச்சம் நீங்கி, மனந்தேர்ந்து, மானிடரூபம்பூண்டு, ரிசியமூகமலைசேர்ந்து பெருமாளைக்கண்டு ஸ்வாமி ! தேவர் மிகவும் தருமமுடையீரெனவும், ஒப்பற்ற தனிவீரரெனவும், ஸர்வபூத தயாபரரெனவும், மற்றும் பற்பல திவ்விய கல்யாண குணாகரரெனவும், மாருதி யுரைசெய்யக் கேட்டு மகிழ்ந்தேன் ; தேவர் ஸர்வலோக சரண்யராகியும், அற்பவானரனான அடியேனுடன் நட்புச்செய்யத் திருவுளங் கொண்டதென்பது, அடியேனுடைய பாக்கியமே ? இதுவே அடியேனுக்குயர்ந்த மரியாதை ? தேவர்க்கு இவ்வண்ணந் திருவுளமிருப்பது உண்மையாயின், அடியேன் இதோ வலதுகையை நீட்டினேன் ; தேவர் இதன்மேல் கைபோட்டுப் பிடித்துக்கொண்டருள்க ; தக்க ஏற்பாடுஞ்செய்தருள்க ; என்று மொழிந்து கையை நீட்டினர். பெருமாளும் மகாராஜர் இவ்வண்ண முரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு,—

సప్రహృష్టమనాహస్తం పీడయామాసపాణినా
హృద్యంసౌహృదమాలంబ్య పర్యష్వజతపీడితం.

ஸப்ரஹ்ருஷ்டமனாஹஸ்தம் பீடயாமாஸபாணிநா
ஹ்ருத்யம்ஸௌஹ்ருதமாலம்ப்ய பர்யஷ்வஜதபீடிதம்.

மிகவும் மகிழ்ந்தவராகித் தமது திருக்கரத்தினால் மஹாராஜருடைய கரத்தைப் பிடித்துத் திடமாக அணைத்தாலிங்கனஞ்செய்துகொண்டு மகிழ்ந்தருளினர். உடனே சிறியதிருவடியும் பிரஹ்மசாரிவேஷத்தை விட்டுவிட்டு மறுபடியும் நிஜரூபத்தை யெடுத்துக்கொண்டு, இரண்டரணிக்கட்டைகளைக் கடைந்து தீயை யுண்டுபண்ணி வளர்த்து மலர்களினால் பூஜித்து எரிகின்ற அத்தீயை மஹாராஜர் பெருமாள் இவ்விருவர்களின் நடுவில் கொணர்ந்து வைத்தனர். உடனே ஸ்ரீராம ஸுக்கிரீவர்களிருவரும் அச்செழுந்தீயை வலம் வந்து ஒருவர்க்கொருவர் நட்புச்செய்துகொண்டு ஒருவர்க்கொருவர் பார்த்து மகிழ்ந்தும், தழுவியும், புகழ்ந்தும், நீரே எனக்குத்தோழரும் இனியுருமாகின்றீர்; இனி நமக்குத் துன்பமும் ஒன்றே? இன்பமும் ஒன்றே? என்று சொல்லிக்கொண்டு மகிழ்ந்தனர்கள். அப்பொழுது மஹாராஜர் தாமே ஸாலமரத்தினது மலர்ந்த கிளைகளை முறித்துத் தரையில் பரப்பிப் பெருமாளுடன் வீற்றிருந்தனர். உடனே சிறியதிருவடியும் சந்தனமரத்தின் மலர்ந்த தழையைமுறித்துத் தரையில் பரப்பி இளையபெருமாளை எழுந்தருளியிருக்கச்செய்தனர். அப்பொழுது மஹாராஜர் பெருமாளை நோக்கி, ஸ்வாமி! அடியேன் தமையனான வாலியினால் ராஜ்ஜியத்தையும், மனையாளையும், அபகரித்துக்கொண்டு வெருட்டப்பட்டுப் பாரெங்கும் அலைந்திங்கே திரிந்துகொண்டிருக்கின்றேன்; அந்த வாலி என்மீது தீராப்பகைகொண்டிருக்கின்றமையின், துயிலுமின்றி, நிரந்தரம் அச்சங்கொண்டு வருந்துகின்றேன்; மஹாபாகராகிய தோழரே! அந்த வாலியின்பயம் எனக்கு எவ்வண்ணம் நீங்குமோ? எவ்வண்ணம் யான் இன்புற்றுச் சிந்தையின்றி வாழ்வேனோ? தேவர் அவ்வண்ணஞ் செய்து அடியேனைக் காத்தருள்க; இவ்வண்ணம் அடியேனுக் கபயமுந்தந்தருள்க; அடியேன் தேவரையே தஞ்சமடைந்தேனென்று விண்ணப்பஞ்செய்தனர். இவ்வண்ணம் மஹாராஜர் உரைசெய்த வாக்கியத்தைப் பெருமாள் திருச்செவிசார்த்தித் தருமமுணர்ந்தவரும், தருமத்தில் விருப்புடையவருமாதலின், கருணைகூர்ந்து புன்னகைசெய்துகொண்டே மஹாராஜரை நோக்கி,—

ఉపకారఫలంమిత్రం విదితమ్మేమహాకపే
వాలినన్తంవధిష్యామి తవభార్యాపహారిణం.

உபகாரபலம்மித்ரம் விதிதம்மேமஹாகபே
வாலிநம்தம்வதிஷ்யாமி தவபார்யாபஹாரிணம்.

கேளீர் வானரராஜரே! எனக்குத்தோழராயினவர்கள்; என்னால் செய்யப் பட்ட உபகாரத்தையே நற்பலனாகவுடையார்; என்பது எங்கும் வெளிப் பட விளங்குகின்றதன்றோ? ஆகலின், உம்முடைய பாரியையைப் பறித்த அந்தக் கொடிய வாலியை யான் விரைவில் கொலைசெய்வேன்; யான் எவ் வண்ணம் அவனைக் கொலைசெய்வேனோவென்று ஐயமுறற்க; என்னுடைய இக்கணைகள் குறி தப்பாதவைகளும், கதிரவனை நிகர்த்தனவும், கூராகத் தீட்டப்பட்டனவுமாகி விளங்குகின்றன; இவை யந்த வாலியின்மேலே விரைவாகப்பாய்ந்து அவனைக் கொலைசெய்யப்போகின்றன; இந்தக் கணை கள் கழுகின் இறகுகள் கட்டியும், கூரிய முனை பொருந்தியும், கோணாமல் நீண்ட கணுக்கள் அமைந்தும், ஒலித்துக்கொண்டு செல்லுகையில், சினங்கொண்ட நச்சரவங்கள்போல விளங்கும்? அந்த வாலி இந்தக் கணைகளினால் அடி பட்டு வச்சிராயுதத்தினாலடிபட்ட மாமலைபோலத் தரையில்வீழ்ந்து கிடக் கையில், விரைவில் நீர் கண்ணுற்று மகிழ்வீர்; என்று அருளிச்செய்தனர். மஹாராஜர் இவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களைக் கேட்டுப் பரமாநந்தமடைந்து பெருமாளை நோக்கி, ஸ்வாமி ராகவகுல துரந்தரா! புருஷோத்தமா! தேவருடைய திருவருளினால் அடியேன் மனையாளையும், ராஜ்ஜியத்தையும், இப்போழ்தே பெற்று மகிழ்வேன்; என் அண்ணனான அந்தப் பகைகொண்ட வாலி இப்பொழுதே எவ்வண்ணம் மரணமுறுவானோ? அவ்வண்ணஞ்செய்து அடியேனைக் காத்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து வேண்டினர். இவ்விருவரும் இவ்வண்ணம் தோழமைகொண்டு ஸம்பாஷணஞ்செய்யுங்காலையில், பிராட்டியார்க்கும், வாலிக்கும், இராவணனுக்கும், முறையே தாமரை மலரையும், பொன்னை யும், தீயையும் நிகர்த்த இடதுகண்கள் ஒரேகாலத்தில் துடித்தன;—

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐந்தாவது சருக்கம்
முற்றிற்று.

சிறியதிருவடி மறுபடியும் பிரஹ்மசாரிவேஷத்தை விட்டு நிஜரூபந்தரித்தா ரென்றிருப்பதால் ஸ்ரீராமலக்ஷ்மணர்களை ரிசியமூககிரியில் எழுந்தருளப்பண்ணி விட்டு மஹாராஜரிடஞ்செல்லுங்காலையில், அவர் மனந்தெளிவுறுமளவும் அவரெதிரில் அவர் வாக்கியத்தின்படி மீளவும் பிரஹ்மசாரிவேஷந் தரித்தனரெனத் தோற்று கின்றது;—

பெண்களுக் கிடதுகண் துடிக்கின், விரைவில் மங்கலமுண்டாகுமென்றும், புருஷர்களுக் கிடதுகண் துடிக்கின், துன்பம் நேருமென்றும், சகுனநூலிலிருக்கின்ற மையின், இங்கு பிராட்டியார்க்கு யின்பமும், வாலி ராவணர்களுக்குத் துன்பமும் விளையுமென்பதை துடித்த இடதுகண்கள் அவரவர்களுக் கறிவித்தன;—

பெருமாள் முன்னமே வாலியைக் கொலைசெய்வேனென பிரதிஜ்ஞை செய்த தினால், இவரே மும்மூர்த்திகளுள் முதன்மையானவரென்றும், ஒப்பாருமிக்காரும் இல்லாதாரென்றும், ஸர்வவல்லமை யுடையரென்றும், யாவு முணர்ந்தவரென்றும் நன்கு விளங்கும்;—

ஆறுவது சருக்கம்.

மஹாராஜர் பிராட்டியார் ஆகாயத்தில் செல்லுகையில், கீழேபோட்ட திருவாபரணங்களைக் காப்பாற்றி எடுத்துக்கொண்டுவந்து பெருமாளிடத்தில் ஸமர்ப்பித்தது.

மீளவும் மஹாராஜர் மகிழ்ந்து மாயாமானுஷவிக்ரஹனை பெருமானை நோக்கி, ஸ்வாமி என்னினிய தோழரே ! மஹாபலபராக்கிரமமுடையவரும், மிகச் சிறந்த புத்தியுடையவரும், அடியேனுக்கு நன் மந்திரியுமாகிய இந்த ஆஞ்சனேயர் என்னை நோக்கித் தேவர் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலனஞ்செய்வதன்பொருட்டுத் திருவயோத்தியை விட்டுத் தண்டகாவனஞ்சேர்ந்து தேவியாருடனும், இளையபெருமாளுடனும் எழுந்தருளியிருக்கையில், ராவணன் கபடஞ்செய்து ஸ்ரீஜனகராஜன் திருமகளாகிய ஸ்ரீஸீதாபிராட்டியாரைப் பறித்துக்கொண்டோடிவிட்டதாகவும்; அந்த ராவணன் நடுவில் ஜடாயுவையும் கொன்றுவிட்டதாகவும், அந்தப் பிராட்டியாரைத் தேடிக்கொண்டே தேவர்கள் இங்கெழுந்தருளியதாகவும் தெரிவித்தார். இது உண்மையாயினும், துயரற்க; விரைவில் துயரந்தீர்ந்து பிராட்டியாரைச்சேர்ந்து மகிழ்ந்தருள்வீர்; மதுகைடபர்களினுல் வேதச்ருதியைப்போல ராவணனுல் ஒளிக்கப்பட்ட அந்தப் பிராட்டியாரை யான் விரைவில் தேடிப் பிடித்தெழுந்தருளப் பண்ணிக்கொண்டுவருவேன்; பிராட்டியார் பாதாளத்திலாயினும், விண்ணுலகிலாயினும், மற்றும் எவ்விடத்திலாயினும் எழுந்தருளியிருந்தாலும், யான் தேடிக்கண்டெழுந்தருளப்பண்ணி வருவேன்; அன்றியிலே, அடியேன் ஒரு விண்ணப்பஞ்செய்கிறேன்; இதனை யுண்மையென்றே அறிந்தருள்க; தேவர் தேவியாராகிய பிராட்டியாரை இந்திரன் முதலிய தேவர்களும், தானவர்களும் கூடிக் கெடுக்க முயலினும், திறமைகொள்ளார்கள்; அவருடைய கற்பு யாவரையும் பற்றி யெரிக்கும்; ஆதலின், தேவர் துன்பத்தைத் துறந்தருள்க; அவரை யான் எவ்விதத்திலும் தேடி எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருவேன்; அடியேன் முன்பொருநாள் இவ்விடத்தில் இந்நான்குமந்திரிகளுடன் உட்கார்ந்திருக்கையில், ராவணன் ஒரு பெண்ணையெடுத்துத் தேரிலேற்றிக்கொண்டு ஆகாயத்தில் சென்றனன். அப்பெண்ணும் ராமா ! ராமா ! என்றும், லக்ஷ்மணா ! லக்ஷ்மணா ! என்றும், கூவி யழுதுகொண்டே சென்றனள். அந்தப்பெண் பிராட்டியாராகவேயிருக்கவேண்டுமென் றிப்போழ்து ஊஹிக்கிறேன்; அப்போழ்தவர் எங்களைக்கண்டு உத்தரீயத்தையும், திருவாபரணங்களையும் கட்டிப்போட்டனர். அவைகளை யாங்களும் எடுத்துவைத்திருக்கின்றனம்; இப்போழ்தவைகளை யழைப்பித்து ஸமர்ப்பிக்கின்றேன்;

கடாக்ஷித்து அறிந்துகொண்டருள்க; என்று விண்ணப்பஞ்செய்தனர். பெருமாளும் அம்மொழியைக் கேட்டவுடனே மஹாராஜனை நோக்கித் தோழரோ! ஏன் இன்னும் ஆலஸியம் செய்கின்றீர்; விரைவாக அந்த ஆடையாபரணங்களைக் கொணர்க; என்று நியமித்தருளுதலும், மஹா ராஜர் உடனே எழுந்து புகற்கரிய அம்மலையின் குகைக்குட்புகுந்து பிராட்டியாருடைய அந்த உத்தரீயத்தையும், திருவாபரணங்களையும் எடுத்துக்கொண்டுவந்து பெருமாளைக்கிட்டி ஸ்வாமி! இதோ கொணர்ந் தேன்; கடாக்ஷித்தருள்க; என்று காட்டி யளித்தனர். பின்பு பெருமாள் அவைகளைக் கைக்கொண்டு பனிநீர்த்துளிகளினால் சந்திரன் தடையுண்டு ஒளி குலைவதுபோலச் சோகநீர்களினால் சூழ்ந்து தடுக்கப்பட்டு அந்தோ? என் பிராணநாயகி! என்று கூவித் தீரத்தை விட்டுச் சோகத்தை மேற் கொண்டு தரையில் வீழ்ந்து அந்த அணிகளைத் தமது திருமார்பின்மேலே வைத்துக்கொண்டு கோலினால் தூண்டிச் சினமுறுத்தப்பட்டுப் புற்றி லுறைகின்ற நச்சரவம்போலப் பெருமூச்செறிந்து கண்ணீரைத் தாரை தாரையாகப் பெருக்கி அருகிலிருந்த இளையபெருமாளை நோக்கிப் புலம்பலுற்றனர். பாரடா லக்ஷ்மணா! வைதேஹி ராவணனால் பறிக்கப் படுகையில்; இவைகளைக் கீழே யெறிந்தனள்; இந்த ஆடையாபரணங்கள் பசும்புல்லுள்ள இடத்தில் போடப்பட்டனபோலும், ஆதலின், பச்சை நிறமுற்றிருக்கின்றன; இவை சீதையின் ஆடை யணிகளே யல்லவோ? என்றிவ்வண்ணம் பெருமாள் புலம்பி யழுது வினவுகையில், இளைய பெருமாள் பெருமாளை நோக்கி, எம்மையரோ!—

నాహంజానామికేయూరే నాహంజానామికుణ్డలే
నూపురేత్వభిజానామి నిత్యంపాదాభివన్దనాత్.

நாஹம்ஜாநாமிகேயூரே நாஹம்ஜாநாமிகுண்டலே
நூபுரேத்வபிஜாநாமி நித்யம்பாதாபிவந்தநாத்.

அடியேன் கேயூரங்களையும், (வங்கிகளையும்) அறியேன்; அடியேன் குண்டலங்களையும் அறியேன்; தினந்தோறும் திருவடிகளில் தண்டம் ஸமர்ப்பித்துக்கொண்டிருந்தமையின், பிராட்டியாரது நூபுரங்களை (கச்சை கொலுசுகளை) மாத்திரமே நன்றாக அறிந்துணர்கின்றேன்; இவைகள் பிராட்டியார் திருவடிகளில் ஸமர்ப்பித்திருந்தவைவே? என்று விண்ணப்பஞ்செய்தனர். பின்பு, பெருமாள் தீனமடைந்து மஹாராஜனை நோக்கி, மந்திகளின் கோமானே உரையீர்; எவ்விடத்தில் சீதையை ராவணன் எடுத்தோடுகையில் நீர் கண்டீர்; அவள் எனக்கு உயிரினும் இனியளாயினளே? எனக்கு மிகவும் துயரமளித்த அந்த அரக்கன் எங்கு உறைகின்றனன்; அவனொருவன் பொருட்டே யன்றோ? யான் எல்லா வரக்கர்களையும் கொலைசெய்யப்போகின்றேன்; அவன் சீதையைப்

பறித்து யான் சினமுறச்செய்ததென்பது தான் இறப்பதன்பொருட்டு வலுவில் மரணமுறும் வழியைத் திறந்து கொண்டதுபோலாயிற்று; எந்த அரக்கன் என்னுடைய மிகவும் இனியளான மனையாளை மோசஞ் செய்து பறித்து வந்தனனோ? அவன் யாவன்; எங்குறைகின்றனன்; விரைவிலுரையீர்; உடனே யவனைக் கொலைசெய்து யமலோகத்திற் கனுப்பிவிடுவேன்; என்று முனிந்தருளிச் செய்தனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஆறுவது சருக்கம் முற்றிற்று.

ஏழாவது சருக்கம்.

பெருமாள் பிராட்டியாரைத் தேடும்படி மஹாராஜர்க்குக் கட்டளையிட்டு வாலியைவென்று உம்மை ராஜனாக அபிஷேகஞ்செய்விப்பேனென்று பிரதிஜ்ஞைசெய்துகொடுத்து மஹாராஜரை மகிழ்வித்தருளியது.

இவ்வண்ணம் பெருமாள் வருந்திக் கண்ணீர்ததும்ப வினவக்கேட்டு மஹாராஜர் தாமும் தோழமையினால் வருந்திக் கண்ணீர்பெருக்கிக் கைகளைக் கூப்பிக்கொண்டு பெருமாளை நோக்கி, ஸ்வாமி! அடியேன் இப்போழ்து அந்தக் கொடிய ராவணனுடைய இருப்பிடத்தையும், பல பராக்கிரமங்களையும் நன்றாக அறிகின்றிலேன்; நீசகுலத்தில் பிறந்த அவனுடைய குலத்தையும் அறிகின்றிலேன்; ஆயினும், அடியேன் தேவருக்கு உண்மையாக ஒரு பிரதிஜ்ஞை செய்துகொடுக்கிறேன்; தேவர் துயரத்தைத் துறந்தருள்க; தேவர் எவ்வண்ணம் பிராட்டியாரைப் பெற்று மகிழ்ந்தருள்வீரோ? அவ்வண்ணம் அடியேன் முயற்சிசெய்வேன்; யான் ராவணனைக் கூண்டுடன் கொலைசெய்து எனது தோள்வலியைப் பயன்படுத்தி விரைவில் தேவர் திருவுளம் மகிழுமாறு செய்வேன்; இது

---

* பிராட்டியாருடைய நூபுரமும், முத்துவடமும், நடுவழியில் நழுவி வீழ்ந்து விட்டன; மற்றுள்ள அணிகளையே பிராட்டியார் கழற்றிக் கீழேயெறிந்தனர்; சிறிய திருவடி முதலானோர் காட்டில் திரிந்து நூபுரத்தையும், முத்துவடத்தையுங்கூடக் கண்டெடுத்து வைத்திருந்தனர்கள்போலும்; ஆதலின், இங்கே நூபுரத்தையும், மஹாராஜர் தந்தளித்தனரென்றறிக;—

ஆபரணதர்சன வ்யாஜத்தால் பகவான், யாத்ருச்சிக ப்ராஸங்கிக ஸுக்ருததர்சனத்தாலும், சேதனஸம்ரக்ஷணத்தில் உத்யுக்தனாகுவானென்பது ஸூசிக்கப்பட்டது; மேல்சருக்கத்திலும் இதுவே கூறப்படுகின்றது.

வரையில் தீனமடைந்ததுபோதும், இயல்பாய் அடங்கியுள்ள தீரத்தை நினைந்தருள்க; இவ்வண்ணம் தீனமுறுவது தேவர்போன்றவர்களுக்கு உரியதன்று; யானும் பெண்டாட்டியைப்பறிகொடுத்து மிகவுந் துயர மடைந்தேன்; ஆகிலும், யான் இவ்வண்ணந் தீனமுறுகின்றிலேன்; தீரத்தையுந் துறந்து வருந்துகின்றிலேன்; யான் அற்பவானரனாயினும், மனையாளை நினைந்து சோகமுறுகின்றிலேன்; தேவர் மஹாத்துமாவும், பற்பல நூல்களைப் பயின்று குருகுலவாஸஞ்செய்தவரும், தீரமுடையவருமாகியும் இவ்வண்ணம் வருத்தமுறுவது தகாதென்பது விளைவல் வேண்டுமோ? ஆதலின், தீரத்தை மேற்கொண்டு மேலெழுந்த கண்ணீரை யடக்கி யருள்க; திறமையும், வலிமையுங் கொண்டவர்களுக்கு எல்லையா யுள்ள தீரத்தைத்துறந்து வருந்தற்க; துன்பம் நேரினும், பொருளழி யினும், அச்சம் வாய்க்கினும், உயிர் மாயினும், தீரமுடையோன் தன் புத்தியினாலேதானே நன்காராய்ந்து மேன்மைகொண்டு மகிழ்வானே யன்றித் தீமையுறான்; யாவனொருவன் எப்பொழுதும் தீனமுறுகின்றானோ அவன் மடையனென்னப்படுவான்; அவன் சுமப்பதற்கரிய பாரமேற்றிய படகு கடலில் மூழ்கிவிடுவதுபோல சோகக்கடலில் மூழ்கி யழிவான்; அடியேன் நட்பினால் இவ்வண்ணங் கைகூப்பி வேண்டி யுரைக்கின்றேன்; சோகத்திற்கிடங்கொடாமல் பௌருஷத்தை மேற்கொண்டருள்க; சோகத்தையே மேற்கொள்பவர்களுக்கு ஒருக்காலேயிலும் இன்பமிலது; அவர்களுக்குத் திறமையும் அழிந்துவிடும்; ஆதலின், தேவர் துயருறற்க; மிகவும் சோகமுற்றவன் பிழைப்பதிலும் ஐயமே? ஆதலின், சோகத்தைத் துறந்து தீரத்தையே மேற்கொண்டருள்க;—

హితంవయస్యభావేన బ్రూమినోపదిశామి తే
వయస్యతాంపూజయన్మే న త్వంశోచితుమర్హసి.

ஹிதம்வயஸ்யபாவேந ப்ருமிநோபதிசாமிதே
வயஸ்யதாம்பூஜயன்மேந த்வம்சோசிதுமர்ஹஸி.

அடியேன் தேவர்க்குத் தோழனென்பதினால் இதத்தை விண்ணப்பஞ்செய்து அறிவிக்கின்றேனே யன்றி, யுபதேசமாவது, கட்டளையாவது செய்கின்றிலேன்; தேவரும் அடியேன்மேல் அருள்செய்து தோழமையை விளங்குவிப்பதன்பொருட்டு இவ்விண்ணப்பத்தைத் திருவுளம்பற்றித் துயரத்தைத் துறந்து தீரத்தை மேற்கொண்டருள்க; என்றிவ்வண்ணம் விண்ணப்பஞ்செய்தனர். பெருமாளும் இவ்வண்ணம் மஹாராஜர் இனிமையாகத் தேற்றின வாக்கியங்களைத் திருச்செவிசார்த்தி உத்தரீயத்தின் முனையினால் சோகநீர்த்துளிகளைத் துடைத்துக்கொண்டு மனந் தேர்ந்து தீரமுற்று மஹாராஜரை மகிழ்ந்தாலிங்கனஞ்செய்துகொண்

டவரைநோக்கிக் கேளீர் வானரர் சீமானே! நேசமும், அன்பும், பிரியமும், இதமுமுடையோர்கள் தோழருக் குரைப்பதுபோலவே தகுதியுற்றதும், காலத்திற்குத் தக்கதும், இனியதுமாக நீர் உரைத்ததைக்கேட்டு மகிழ்ந் தேன்; அவ்வண்ணமே யான் உம்மால் தேற்றப்பட்டு இயல்பாயுள்ள தீரத்தை மேற்கொண்டேன்; இத்தருணத்தில் இவ்வண்ணம் உம்மைப் போல இதமுரைக்கத்தக்க தோழர் வாய்ப்பதரிது; அன்றியிலே, சீதை யைத் தேடும் விஷயத்தில் நீர் மிகவும் முயற்சிசெயல்வேண்டும்; என்ன லுமக்கு ஆகவேண்டிய காரியம் யாதோ? அதனையும் ஐயமும், கூச்சமு மின்றி, யுரைசெய்க; மழைகாலத்தில் நல்ல நிலத்தில் விதைத்த எல்லா விதைகளும், தப்பாமல் முளைப்பதுபோல என்னிடத்தில் இறக்கப்பட்ட எக்காரியமும் கைக்கூடுமென்றே நம்புக; இப்போது யானுரைத்த இந்த வாக்கியம் அபிமானத்தினலாவது, அன்பினலாவது, கசடினலாவது உரைக்கப்பட்டதாக நினையற்க; யான் உரைப்பதெல்லாம் உண்மை யெனவே நம்புக;—

అనృతంనోక్తపూర్వమ్మేన చవక్ష్యేకదాచన
ఏతత్తేప్రతిజానామి సత్యేనైవచతేశపే.

அந்ருதம்நோக்தபூர்வம்மேந சவக்ஷ்யேகதாசந
ஏதத்தேப்ரதிஜாநாமி ஸத்யேநைவசதேசபே.

யான் இதுவரையில் பொய்மொழி மொழிந்தேயிலேன்; இனியும் ஒருக்காலும் மொழியேன்; இவ்வண்ணம் உமக்கு யான் பிரதிஜ்ஞை செய்துகொடுக்கிறேன்; எனது ஸத்தியத்தின்மேலும் ஆணையிட்டுக் கொடுக்கிறேனென்று தாமே பரப்ரஹ்மமென்பது விளங்க அருளிச் செய்தனர். மஹாராஜரும் மந்திரிகளுடன் பெருமாளிவ்வண்ணம் அருளிச்செய்ததையும் பிரதிஜ்ஞைசெய்துகொடுத்தருளியதையுங் கேட் டுப் பரமானந்தமடைந்து திகழ்ந்தனர். இவ்வண்ணம் ஸ்ரீராம ஸுக்ரீ வர்கள் மிக நட்புக்கொண்டு ஒருவர்க்கொருவர் துன்பவின்பங்களை மொழிந்துகொண்டு மகிழ்ந்தனர்கள். மஹாராஜரும் பெருமாள் அருளிச் செயல்களை முற்று முணர்ந்து தன் மனதில் தன் காரியம் முழுதும் முடிந்துவிட்டதாகவே எண்ணி மிகவும் மகிழ்வுகொண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஏழாவது சருக்கம்
முற்றிற்று.

இந்தச்சருக்கத்திலே ஆபரணதர்சன வியாஜத்தினலே சேதனனுடைய யாத்ருச் சிக ப்ராஸங்கிக ஸுக்ருததர்சனத்தினலே பகவானுக்கு அந்தச் சேதனனை யடையும் விஷயத்திலுண்டாகிய த்வரை யுரைக்கப்படுகின்றது; இதில் மஹாராஜர் ராவண

னுடைய இருப்பிடத்தையாவது பலபராக்ரமங்களையாவது அறியேனென்று விண்ணப்பஞ்செய்தார். மேலே பிராட்டியாரைத்தேடுவதற்கு வானரர்களை யனுப்புங்காலையில், தென்கடலின்நடுவில் நூறுயோஜனம் அகன்ற இலங்காத்தீவுயிருக்கின்றது; அதுதான் ராவணன் உறையுமிடமென்று சொல்லுகிறார்; ஆதலின், இது எப்படி பொருந்துமென்னில், பொருந்தும்; முதலில் பெருமாளுக்கு ராவணன்செய்திகளை யறிவித்துவிட்டால் உடனே ராவணனைக்கொலைசெய்யும்பொருட்டுத் தாமே இளையபெருமாளைத் துணையாகக்கொண்டு எழுந்தருளிவிடுவரோ என்று எண்ணி, அப்படியானால் தான் உதவிசெய்து பெரும்புகழ்பெற்று க்ருதார்த்தனாகுவதற்கில்லையே யென்று மறைத்தனர் மஹாராஜரென்றுணர்க. வாலி மரணமுறுமளவும் தான் மதங்காசிரமத்தை விட்டுப் புறப்பட அச்சங்கொண்டிருக்கின்றமையின், இப்போது எவ்வண்ணம்பெருமாளுக்கு உதவிசெய்வார்; வாலியைமுதலில் கொல்லுவித்துத்தான் அபிஷேகங்கொண்டபின்பானால் அநேகங்கோடி வானரர்களைக்கொண்டும் தாமும்பெருமாளுக்கு உதவியென்னும் கைங்கரியஞ்செய்து தன்யராகுவாரல்லரோ? ஆதலின், மறைத்தனர்; ஆதலாலேதானே இதுமித்ரத்ரோஹமாகாதெனவுணர்க. முன்பு மஹாராஜர் ராவணனுடையசெய்தியை யறிந்தேயிலர்; பின் தாரை இளையபெருமாளுடன் விண்ணப்பஞ்செய்த வாக்கியத்தைக் கேட்டே தெரிந்துகொண்டனர்; என்று சிலர் கூறுவார்கள். அது பொருந்தாது; முன்னே தான் வாலியினால்வெருட்டப்பட்டு லோகாலோகமலைவரையில் எங்குமோடியலைந்ததாக மகாராஜர் உரைக்கின்றமையாலும், ராவணன் வாலியுடன் பகைத்துத்தோல்வியுற்றுப்பின்பு நட்புக்கொண்டிருந்தமையாலும், ராவணன்செய்தியை மஹாராஜர் அறியாரென்றுரைப்பதுவே அறியாமை; மஹாராஜர் அறிந்தே தனக்குக் கைங்கரியம் நேராமல் போகுமோ என்று மறைத்தனர்; ஆகையாலேதான் எவ்விடத்தில் சீதை ராவணனால் பறிக்கப்பட்டனளோ உரையீரென்று பெருமாள் வினவியதற்கும் மஹாராஜர் விடையுரைத்திலர்; சிலர், ராவணன் இருப்பிடம் முதலியவற்றை நன்கறியேன்; சிறிது அறிவேன்; என்று மஹாராஜர் உரைத்ததாகப் பொருள் கூறுவார்கள்; அதுவும் பொருந்தாது, ஆங்காயின் அறிந்தவரையிலுமாவது உரைத்திருக்கவேண்டுமன்றோ? சிறிதும் உரைத்திலரே, ஆதலின் அறிந்தேமறைத்தனரென்றேயுணர்க. இவ்வண்ணமாயின் பெருமாளுக்கு இவர்மீது பொய்யரென்னும் மித்திரத்ரோஹஞ் செய்பவரென்னும் அவிசுவாஸம் தோற்றாதோவெனில், தோற்றாது; பெருமாள் ஸர்வஜ்ஞர் ஸர்வசக்த ஸத்தியஜ்ஞாநாநந்தஸ்வரூபியும், ஸர்வாந்தர்யாமியுமாகிய பரபிரஹ்மமேயாதலின், தாமே ஸ்வஸங்கல்பானுகுணமாக மஹாராஜர்க்கு புத்தி பிரதானம் செய்தருளியிருக்க அவிசுவாஸம் தோற்றுவ தெவ்வண்ணம்; ஆதலின், பெருமாளுக்கும் இதுதான் திருவுளமெனவறிக; மஹாராஜர் ராவணன் இருப்பிடத்தை யறிவாராயின், பிராட்டியைத்தேட நாற்றிசைகளிலும் வானரர்களை யனுப்பியதென்னெனில், ராவணன் மாயாவியாதலாலும், பிராட்டியைப்பறித்தோடி நெடுங்காலமாயினமையாலும், ஒருக்கால் வேறிடங்களில் ஒளித்துவைத்திருப்பானென்று ஐயுற்று அனுப்பினாரெனவறிக; ஒருவருஷம்வரையில் ராவணன் பிராட்டியைக் காவலில்வைத்து வருத்தாவிட்டால் அவன்செய்த சிவபூஜையினாலுண்டாகிய தபோமகிமை குறையாது, அதுகுறையாவிட்டால் பெருமாளால் ராவணன் கொலைசெய்யப்படான், ஆதலின் அதுவரையில் மஹாராஜருக்கு ராவணன் செய்தி தோன்றாமலிருக்குமாறு சிவசங்கல்பமிருந்ததென்று அப்பயதீக்ஷிதன்சொன்னான், இது மிகவும் மடமையினாலுரைசெய்தது, அத்தன்மையதாகிய தபோமகிமை ராவணனுக்குளதாயின் சிவனார் ஏன் பிராட்டியைப்பறிக்கும்படி செய்தார்; அதற்கு ஓர்வருஷமென்று என்ன ஏற்பாடு, அதுஉண்மையாயின் இதற்குமுன்னமே பற்பலபரத்தையல்களைப் பறித்து வருத்தியதினாலேதானே அத்திற

எட்டாவது சருக்கம்.

மஹாராஜர், பெருமாள் வாலியைக் கொலைசெய்வேனென்று பிரதிஜ்ஞை செய்தபின்னர், தான் யுவராஜாவாக யிருந்ததையும், பின்பு, வாலி தன் மனையாளை யபகரித்துக்கொண்டு தன்னை வெருட்டியதையும், வாலியுடன் பகைநேர்ந்த காரணத்தையும் உரைசெயலுற்றது.

இவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியத்தை மஹாராஜர் கேட்டு மிக மகிழ்ந்து, இளையபெருமாளுக்கெதிராகப் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் என்னருமை நட்பினரே! திருக்கல்யாணகுணங்கள் யாவும் குறைவின்றி நிறைந்துள்ள தேவரே அடியேனுக்குத் தோழராயினமையின், தேவர்களும், தெய்வங்களும், என்மேல் அருளுடையர்களாயினர்கள்; இவ்விஷயத்தில் ஐயமென்பதேயில்லை; தேவர் திருவுள்ளத்தில் கருதின் அடியேனுக்குத் தேவேந்திரன்பட்டமும் பெறலரிதாகாது; அவ்வண்ணமாயின், இந்த கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப்பெற்று மகிழேனோ? அடியேன் அக்கினிஸாக்ஷியாக தேவருடன் நட்புக்கொண்டமையின், இனத்தார், சுற்றத்தார், தோழர்கள் யாவரும் இனி என்னைச் சேர்ந்து மகிழ்வார்கள்; அடியேனும் தேவர்க்குத் தகுதியான தோழனென்று தேவரே விரைவில் அறிந்தருள்வீர்; என்னுடைய குணங்களை யானே இப்போ புகழ்ந்து கொள்ளேன்; பிரஹ்மஜ்ஞான முடையவர்களுக்குத் தீரம் ஒருக்காலும் அழியாததுபோல தேவர்போன்ற மஹானுபாவர்களினுடைய அன்பும் ஒருக்காலும் அழிவுறாது; வெள்ளி, தங்கம், ஆடையாபரணம் முதலிய யாவும் தோழர்களுக்குப் பகுதியற்றனவென்றே தோழர்கள் நினைக்கின்றனர்கள்;—

மையழிந்திராதோ? இதனால் மூடர் மயங்கினும் உணர்ந்தோர் மயங்குவாரோ? மயங்கார்; ஆனால் அவன்செய்த சிவபூஜைக்குப் பயன்யாதெனில், பிருகுமஹாமுனிவர் சாபமிட்டபடி பரத்தையல்களைப்பறிப்பதும் பெரியோர்களைப் பகைப்பதும் நல்லொழுக்கத்தைத்துறந்து தீச்செயல்புரிவதும் பாஷண்டியாகித் திரிவதுமே பயனெனவுணர்க; இப்பிறவியில் பயன்நேரின் மறுபிறவியில் பயன் கற்பிக்கக்கூடாதென்று மீமாம்ஸாதி நியாயமிருப்பதால் இதுதான் நன்கு அமையும், மஹாராஜர் இதற்குமுன் பெருமாளுடன் வார்த்தையுரைசெய்கையில் கைகளைக்கூப்பாமல் இப்போது கைகளையுங்கூப்பிக் கண்ணீர்பெருக்கி யுரைசெய்யத்துடங்கினமையின், தாம் உண்மையை மறைத்துப் பொய்யுரைப்பதைப் பொறுத்தருளவேண்டுமென்னும் கருத்துடையரென்று நன்றாகவிளங்கும்; ஆகையாலேதான் உடனே இரண்டாவதுசுலோகத்தில் பிரதிஜ்ஞையும் செய்தார்; இவைகளை நன்காராயின், பொருந்துமென்றே யுணர்வினர்களுணர்வார்கள்.

ఆఢ్యోవాపిదరిద్రోవా దుఃఖితస్సుఖితోపివా
నిర్దోషోవాసదోషోవా వయస్యఃపరమాగతిః
ధనత్యాగస్సుఖత్యాగో దేహత్యాగోపివాపునః
వయస్యార్థేప్రవర్తన్తే స్నేహందృష్ట్వాతథావిధం.

ஆட்யோவாபிதரித்ரோவா துக்கிதஸ்ஸுகிதோபிவா
நிர்தோஷோவாஸதோஷோவா வயஸ்யஃபரமாகதிஃ.
தநத்யாகஸ்ஸுகத்யாகோ தேஹத்யாகோபிவாபுநஃ
வயஸ்யார்தேப்ரவர்தந்தே ஸ்நேஹந்த்ருஷ்ட்வாததாவிதம்.

தோழன் செல்வமுடையவனாயினும், செல்வமற்றவனாயினும், துன்புற்றவனாயினும், இன்புற்றவனாயினும், தீக்குணமுடையவனாயினும், நற்குணமுடையவனாயினும், அவனே தஞ்சமாகக்கடவன். நல்லோர்கள் தோழர்களின்பொருட்டுப் பொருளை யிழந்தாவது, போகங்களைத் துறந்தாவது, உயிரை விட்டாவது அவர்களைக் கைவிடாமல் பாதுகாத்தளிப்பார்கள். ஆதலின், இனி யடியேனுக்கு சிறிதுங் குறையிலது; என்று விண்ணப்பஞ்செய்தனர். பெருமாளும் அதைத் திருச்செவிசார்த்தி யது அவ்வண்ணமே யாகுமென்று உடன்பட்டு, எதிரிலுள்ள இளையபெருமாளுடன் உகந்தருளிச்செய்து மகிழ்ந்தருளினர்.

அநந்தரம் மஹாராஜர் பிராட்டியாருடைய திருவாபரணங்களை வாங்கிக் கடாக்ஷித்தது முதல் நின்றுகொண்டிருக்கின்ற பெருமாளைப்பார்த்து அவரை எழுந்தருளப்பண்ணுவதற்காக நாற்புறமும் நோக்கி, யருகில் தளிர்த்து மலர்ந்திருக்கும் ஆச்சாமரத்தின் கிளையை முறித்துக் கீழேபரப்பிப் பெருமாளை எழுந்தருளியிருக்கச்செய்து தாமும் உட்கார்ந்தனர். உடனே சிறியதிருவடி இளையபெருமாள் நிற்பதைக்கண்டு மற்றொருகிளையை முறித்துக் கீழேபரப்பி யவரையும் வீற்றிருக்கச் செய்தனர். இவ்வண்ணம் அம்மலையின்மிசையில் கலக்கமற்றுத் தெளிந்த ஆழ்கடல்போல கம்பீரமாக வீற்றிருக்கின்ற பெருமாளை மஹாராஜர் நோக்கிப் பெருமகிழ்சியினால் வாய் தழுதழுத்து மொழியலுற்றனர். கேட்டருளீர் மஹானுபாவரே! அடியேன் தமையனான வாலியினால் வெருட்டப்பட்டு அச்சங்கொண்டிங்கே திரிந்தலைந்துகொண்டிருக்கின்றேன்; பாரியையும் இழந்து, மகிழ்வுகுன்றித் துன்பக்கடலில் மூழ்கி யிருக்கின்றேன்; அனைத்துலகங்களுக்கும் அபயங் கொடுத்துக் காத்தருளும் அருளாழியம்மானே? அடியேனையும் இந்த வாலியினின்றும் காத்தருள்செய்க; என்றிவ்வண்ணம் மஹாராஜர் விண்ணப்பஞ்செய்ததைப் பெருமாள் கேட்டருளித் தாம் தருமமறிந்தவரும், ஆசிரிதபரிபாலனஞ்செய்யவல்ல திவ்விய தேஜஸ்ஸை யுடையவரும், ஆசிரிதவாச்சல்ய முடையவருமாதலின், மந்தஹாஸத்துடன் மஹாராஜரை நோக்கிக் கேளீர் தோழரே! தோழமைக்கு உபகாரமும், பகைக்கு

அபகாரமும் அடையாளமாதலின், யான் இப்போழ்தே அந்த வாலியைக் கொலைசெய்து உம்மை மகிழச்செய்வேன் ; என்னுடைய இந்தக் கணைகள் மிக வேகமுள்ளனவும், இறகுடையனவும், கொடிய வொளி யுடையனவும், கார்த்திகேயவனத்திலுண்டாயினவும், தங்கக்கட்டமைந்தனவுமாகி விளங்குகின்றன ; இவை பகைவர்மேல் நச்சரவம்போலவும், வச்சிராயுதம்போலவும் பாய்ந்து கொலைசெய்யும் ; உமக்கு அண்ணனென்னும் மாறு பெயருள்ள சத்துருவை இக்கணையினால் அடிபட்டிறந்தனனெனவே எண்ணுக ; இக்கணையினால் அவன் சிதறுண்ட மாமலைபோல வீழ்ந்திறப்பனேயன்றி, யுய்யானென்றருளிச்செய்தனர். மஹாராஜர் இம்மொழியைக்கேட்டு மகிழ்ந்து நன்குநன்கென்று புகழ்ந்து அவரை நோக்கி, ஸ்ரீராமசந்திரரே ! அடியேன் மிகவும் சோகத்தினால் வருந்தி யிருக்கின்றேன் ; சோகமடைந்தோர்களுக்குத் தேவரே தஞ்சம்; தேவர் தோழராயினமையின், அடியேன் தேவரிடத்தில் முறையிட்டழுகின்றேன் ; தேவர் அக்கினிஸாக்ஷியாகக் கைகொடுத்தமையின், அடியேனுக்குத் தோழராயினரல்லீரோ? ஆதலாலும், மிகவும் பலபராக்ரமமுடையீரென்பதாலும், அச்சமின்றி யுரைக்கின்றேன்; இவ்விஷயத்தில் சத்தியத்தின்மேல் ஆணையிட்டுத்தருவேன் ; துன்பத்தை இதுவரையில் உள்ளே யடக்கிவைத்திருந்தமையின், என் மனதை யறுத்துக்கொண்டிருந்தது ; என்றிவ்வண்ண முரைத்துக் கண்ணீர்ப்பெருக்கினால் மேலே சட்டியாகக்கூறுவதற்குத் திறமையற்றவராயினும், தீரத்தினால் சோகத்தையும், கண்ணீர்ப்பெருக்கையும் உள்ளே யடக்கிக்கொண்டு, பின்பு, கண்ணீரையுந் துடைத்துக்கொண்டு பெருமூச்செறிந்து மனந்தேறி, மீளவும் பெருமானை நோக்கிக் கேட்டருளீர் இனியதோழரே ! முன்னே வாலி என்னை வன்மொழி மொழிந்து நாட்டினின்றும் வெருட்டி யோட்டிவிட்டனன் ; என்னுடைய இனிய மனையாளையும் பறித்துக்கொண்டனன் ; என்னுடைய தோழர்களையும் சிறையில் வைத்தனன் ; என்னைக் கொலைசெய்வதிலும் மிக முயற்சிகொண்டிருக்கின்றனன் ; பல தட்வைகளில் என்னைக் கொலைசெய்வதன்பொருட்டு அவனாலேவப்பட்டு வானரர்கள் இங்கெய்தி என்னுடன் போர்செய்து மடிந்தனர்கள் ; தேவரும் வாலியினாலேவப்பட்டவரோ என்று எண்ணியே தேவரைக்கண்டவுடன் எதிரில் வாராமல் ஒளித்திருந்தேன் ; அச்சமுற்றகாலையில், யாவரும் எதைக் காணினும் அச்சமுறுகின்றனர்களல்லரோ ? இந்த அநுமான் முதலிய நால்வரே எனக்குத் துணையாகி யிருக்கின்றனர்கள்; ஆகையாலேதான் இவ்வண்ணம் மிகவும் துன்புற்றும் இறக்காமல்பிழைத்திருக்கின்றேன்; இவர்களே என்னை விட்டுப் பிரியாமல் சென்றவிடத்தில் சென்றும், இருந்தவிடத்திலிருந்தும், என்னைப் பாதுகாத்துக்கொண்டு வருகின்றனர்கள் ;—

என் தோழரே ! இதுதான் என்னுடைய விண்ணப்பத்தின் சுருக்கம், விரிவாக உரைப்பதினால் யாதுபயன் ; மிகவும் சிறந்த பலமுடைய என் தமையனான அந்த வாலியே எனக்குச் சத்துரு ? அவன் இறந்தாலொழிய

என் துன்பம் தீராது; எனக்கு இன்பமும், உயிர்வாழ்வும், அவன் அழிந்த பின்புதான் நிலைக்கும்; இதுதான் என்னுடைய துன்பத்தின் முடிவு; தோழனுக்குத் துன்புற்றவனாயினும், துன்பற்றவனாயினும், தோழனே தஞ்சமாதலின், உரைசெய்தேன்; என்று மொழிந்து மௌனமடைந்தனர். பெருமாளும் அம்மொழியைக்கேட்டு மஹாராஜனை நோக்கி, வானரா சீமானே! உமக்கும் வாலிக்கும் பகையேனுண்டாயிற்று; அதை யான் கேட்டுணர விரும்புகின்றேன்; அதைக்கேட்டபின் பலாபலங்களை எளிதாக வுணர்ந்து தேர்ந்து, மேலே நடக்கவேண்டியத்தை நடத்துவேன்; உம்மை இவ்வண்ணந் துன்புறுத்தியதைக்கேட்டு வாலியின்மேல் எனக்குக் கடுஞ் சினந்தோன்றி, மழைகாலத்தில் ஆற்றின்வேகம்போல என் மனத்தைப் பிளந்து மேலெழுகின்றது; ஆதலின், யான் கோதண்டத்தில் நாண்கட்டு வதற்குள் அதனை மகிழ்ந்துரைசெயீர்; யான் வீணையைத் தொடுத்தெய்வே னாகில், உடனே வாலி இறந்தனனெனவே நம்புக; என்று விளம்பியருளினர். மஹாராஜர் அதுகேட்டு நான்கு வானரர்களுடன் மிக மகிழ்ந்து பெருமாளை நோக்கி, வாலியுடன் தமக்குப் பகைநேர்ந்த காரணத்தை மொழியலுற்றனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் எட்டாவது சருக்கம்

முற்றிற்று.

ஒன்பதாவது சருக்கம்.

மஹாராஜர், மாயாவியுடன் வாலி பகைகொண்டு போர்செய்தது முதலிய செய்தியைப் பெருமாளுக்கு அறிவித்தது.

கேட்டருளீர் ஸ்ரீராமசந்திரரே! வாலியென்கிற என் தமையன் மஹாவீர முடையவனும், எம் தந்தைக்கும், எனக்கும், மிகவும் இனியனுமாகி யிருந்தனன்; பின்பு, தந்தை பொன்னுலகமடைகையில், மந்திரிகளெல்லோருஞ்சேர்ந்து மூத்தவனென்பதினால், வாலிக்குப் பட்டங்கட்டுவித்தனர்கள். பின்பு, அவன் அரசாட்சிசெய்துவருகையில், யான் எப்பொழுதும் பிரியாமல் விநயம்பூண்டு தொண்டன்போல அருகிலேதானே யிருந்து கொண்டிருந்தேன்; துந்துபிக்கு மூத்தவனும், மயாஸுரன் பிள்ளையுமாகிய மாயாவியென்பவன் அப்பொழுது ஒரு பெண்ணின் நிமித்தமாக வாலியுடன் பகைகொண்டிருந்து ஓர்நாள் அர்த்தராத்திரியில் எல்லோரும் உறங்கினபின், கிஷ்கிந்தையின் கோபுரவாயிலில் வந்து கோரமாகச் சிங்கநாதஞ்செய்து வாலியைப் போர்வதற்கழைத்தனன்; துயில்கொண்டிருந்த

வாலியும், அந்தக் கூக்குரலைக்கேட்டுத் துயிலுணர்ந்து அதனைப்பொறுமல் விரைவாகவெழுந்து அவ்வஸுரனுடன் போர்செய்யும்படி புறப்படுகையில், அந்தப்புரத்திலுள்ள வனிதையர்களும், யானும் பலவாறாகத் தடைசெயினுங் கேளாமல் சினங்கொண்டு புறப்பட்டு வந்தனன்; யானும் அவன்மீதுள்ள பத்திமையினுல் அவனுடன் புறப்பட்டுச்சென்றேன்; அந்த மாயாவி எங்களிருவரையுங்கண்டு அச்சங்கொண்டு மிகவும் வேகமாக ஓடிப்போயினன். அப்பொழுது சந்திரனெழுந்து வழியெங்கும் பிரகாசமாக விளங்கினமையின், யாங்களும் அவனை வெருட்டிக்கொண்டோடினேம்; அந்த அஸுரனும் புல்லெழுந்து மூடிய பூமியிலுள்ள ஒரு பிலத்தினுள்ளே புகுந்து மறைந்தனன். யாங்களும் அங்கே சென்று நிற்கையில், வாலி மிகவுஞ் சினமுடையவனுதலின், மீளாமல் என்னை நோக்கி, அடா தம்பி! யான் வருமளவும் இவ்விடத்திலேயிருந்து மிகவும் ஊக்கத்துடன் இவ்வாயிலைக் காத்துக்கொண்டிரு? யான் இதனுள்ளே புகுந்து அந்த அஸுரனைத்தேடிக் கொலைசெய்து வருவேனென்று மொழிந்தனன். யான் அம்மொழிகேட்டு யானும் உடன் வருவேனென்று பலவாறாகவேண்டினேன்; அவன் அதற்குடன்படாமல் ஆணையிட்டுத் தகைந்துவிட்டு பெரிய அக்குகைக்குள்ளே புகுந்தனன். யான் அவன் கட்டளையின்படி அக்குகையின் வாயிலைக் காத்துக்கொண்டிருக்கையில், ஒருவருஷமாகியும் அவன் வாராமையால், அந்தோ! அண்ணன் இறந்துவிட்டனனோவென்று ஐயமுற்று மிகவுந் துயரமடைந்திருந்தேன்; பின்பு, நெடுநாளைக்கு அக்குகைக்குள்ளே அநேகமாயிரம் அசுரர்களின் இரைச்சலும், வாலியின் கூக்குரலுங் கேட்கப்பட்டன; உடனே நுரையுடன் கூடிய குருதியும் வெகுவாக அக்குகையினின்றுந் தோன்றிற்று; யான் இக்குறிகளினுல் வாலியே இறந்துவிட்டனனென்று நிச்சயித்து மிகவும் துன்பமடைந்து அந்த அசுரன் மீளவும் இங்கெய்தி எம்மையும் கொலைசெய்வானே என்கின்ற எண்ணத்தினுல் மலைபோன்ற பெரிய குண்டுக்கல்லை அந்தக் குகையின் வாயிலில் அடைத்து மூடிவிட்டு நீரிலாடி வாலியைக்குறித்துத் தருப்பணஞ்செய்து சோகத்தையடக்கி இதன் உண்மையை அறியுமளவும், யார்க்கும் அறிவித்தலாகாதென்று இதனை யொருவர்க்கும் கூறுமல் மறைத்திருந்தேன்; ஆயினும், மந்திரிகள் இதனை எப்படியோ அறிந்துகொண்டு எல்லோருஞ்சேர்ந்து ஆலோசனைசெய்து என்னை நிர்பந்தித்து அபிஷேகஞ் செய்வித்தனர்கள். பின்பு, யான் நீதிவழுவாமல் சிறிதுகாலம் அரசாட்சி செய்துகொண்டிருக்கையில், வாலி அந்த அஸுரனைக் கொலைசெய்துவிட்டு யான் அடைத்துவந்த கல்லினையுந்தள்ளி, யந்தக்குகையாலேதானே வந்து யான் அபிஷேகங்கொண்டு அரசாட்சிசெய்வதையுங்கண்டு கடுஞ்சினம்பூண்டு கண்கள் சிவந்து என்னுடைய மந்திரிகளையுங்கட்டிச் சிறையில்வைத்து, என்னையும் நோக்கி, வன்மொழிகள் மொழிந்தனன்; அப்பொழ்து ராஜ்ஜியம் யாவும் என்வசத்திலிருந்தமையின், அவனை வெல்லுந்திறமையும்திருந்தேனுயினும்,

அவன்மீதுள்ள அன்பினாலும், பத்திமையினாலும், யான் அந்த எண்ணங் கொள்ளாமல் அவனைக்கண்டவுடனெழுந்து விதியின்படி வந்தனம் செய்தேன்; ஆயினும், அவன் சினந்தணிந்து மகிழ்ந்து ஆசீர்வாதஞ்செய்யாமலிருக்கையில், மீளவும் யான் வணங்கி வேண்டுகையிலும் சினந்தணியாமையால் அருள்செய்திலன் மஹாபிரபுவாகிய என் தோழரே; என்று மொழிந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஒன்பதாவது சருக்கம் முற்றிற்று.

பத்தாவது சருக்கம்.

மஹாராஜர் பெருமாளை நோக்கி, வாலி என் வேண்டுகோளுக் கிரங்காமல் வெருட்டினானென்றுரைத்ததும், பெருமாள் அவனைக் கொலை செய்து உமக்கந்த ராஜ்ஜியத்தை யளிப்பேனென்று அபயமளித்ததும்.

மீளவும் மஹாராஜர் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் என் பிரியமுள்ள தோழரே! மறுபடியும் யான் மிகச் சீற்றமுடைய வாலியை நோக்கி, எழுந்தருள்க எம்மையரே! என்னுடைய நல்வினையினால் நீர் குசலமுற்றெழுந்தருளினீர்; உம்மால் பகைவனும் கொலைசெய்யப்பட்டனன்; யான் அநாதனாயினேனென்று துயருற்றிருந்தேன்; எனக்கு நீர் ஒருவரே கருணைகூர்ந்த நாதனாகின்றீர்; இந்த நூறு சலாகைகளை யுடையதும், முழுமதி போன்றதுமாகிய வெண்குடையினையும், வெண்சாமரங்களையும், உம்மிடத்திலே ஒப்பித்துவிட்டேன்; உளமகிழ்ந் தேற்றுக்கொண்டருள்க; என்னையனே! என்னுடைய இவ்விண்ணப்பத்தைக் கேட்டருள்க; யான் உம்முடைய கட்டளையின்படி அந்தக்குகையை யொருவருஷம்வரையில் காத்துக்கொண்டு உம்மை எதிர்பார்த்திருந்தேன்; பின்பு, அதினின்றும் நுரையும் ரத்தமும் மிகுதியாகத் தோன்றிற்று; அதைக்கண்டு உமக்கே தீமை நேர்ந்ததென்று எண்ணி மிகவுஞ் சோகக்கடலில் மூழ்கி யவ்வஸுரன் மீளவும் வந்து எம்மையுங் கொலைசெய்வானோவென்று அச்சங்கொண்டு மலையின் சிகரத்தினால் அக்குகையை மூடி யங்கிருந்து புறப்பட்டிங்கெய்தினேன்; பின்பு, யான் துயரங்கொண்டிருந்தமையின், மந்திரி முதலானோர்கள் யானிவ்வண்ணம் எண்ணிவந்ததை யறிந்துகொண்டு வலுவில் அபிஷேகஞ் செய்வித்தனர்கள். இதில் ஒருமொழியேனும் பொய்யுரைத்திலேன்; ஆதலின், இதனை நன்குணர்ந்து இப்பிழையைப் பொறுத்தருள்க; இனி

நீரோ அரசாகிப் பாதுகாக்கக்கடவீர். யான் முன்போலவே தொண்டுபூண்டிருப்பேன்; நீர் இல்லாமையினால் யான் அரசுசெய்து வந்தேனேயன்றி, வேறில்லை; வைப்பாகயிருந்த இந்த ராஜ்ஜியத்தைப் பகையின்றிப் பாதுகாத்து மீளவும் உமக்களிக்கின்றேன்; ஆதலின், என்மீது சினமுறற்க; இவ்வண்ணம் யான் கைகூப்பி வேண்டுகின்றேன்; அரசற்ற ராஜ்ஜியம் செழிப்புறுதென்று அமைச்சர் முதலானோர் எனக்கு நிர்பந்தம்பண்ணி அபிஷேகஞ்செய்வித்தனர்களேயன்றி, வேறில்லை; என்றிவ்வண்ணம் உரைசெய்து வேண்டினேன்; வாலி இதைக்கேட்டு அருள்செய்யாமல் எதிர்த்து அதட்டி யடா நீசா! சீச்சீ உன்னை யிகழ்க; என்று பலவாறாக வல்லுரையுரைத்து, நாட்டார் நகரத்தோர்களையுங் கூட்டி என்னையுங்குறித்து அவர் நோக்கிக் கேளீர்கள் அன்பர்களே! முன்பொருநாள் இரவில் மாயாவி யென்னும் அசுரன் கெடுமதிபூண்டு என்னைப் போர்செய்வதன்பொருட்டு அழைத்தனனே? அது உங்களெல்லீர்க்குந் தெரியுமன்றோ? அப்போது யான் அவனது வீரவாதத்தைக்கேட்டுப் பொறாமல் புறப்பட்டேன்; அப்போது இந்தக் கொடிய சுக்கிரீவனும் என்பின்றொடர்ந்து வந்தனன்; அந்த அஸுரன் எங்களிருவரையுங்கண்டு அச்சங்கொண்டோடினன்; யாங்களும் அவனைத் தொடர்ந்தோடினோம்; அந்த அசுரன் விரைவாக ஓடி யொரு பெரிய குகைக்குள் புகுவதைக்கண்டு யான் இவனை நோக்கி, அடா தம்பி! யான் வருமளவும் நீ இந்தக் குகையைக் காத்திரு? யான் அந்த அஸுரனைக்கண்டு கொலைசெய்யாமல் மீளேனென்று உரைத்துவிட்டு இவன் இவ்வண்ணமேயிருப்பானென்றெண்ணி அந்தக் குகைக்குள் புகுந்து சென்றேன்; பின்பு, அவனைத்தேடிப்பிடிப்பதற்கு ஒருவருஷமாகிவிட்டது; பின்பு, அவனைக்கண்டு இனத்தார் சுற்றத்தார்களுடன் எளிதில் கொலைசெய்துவிட்டேன்; அப்போது அவனுடைய குருதி அக்குகையின் வாயில் வழியாகப்பெருகிற்று; பின்பு, யான் அவ்வழியைத்தேடிவந்து வழியைக் கல்லினால் அடைத்திருப்பதைக்கண்டு, அடா சுக்கிரீவா என்று பலதடவை கெட்டியாகக்கூவியும் எதிர்மொழிகேளாமையினால், மிகவுந்துயரமடைந்து வெகுவாகக் கால்களினால் உதைத்து அக்கல்லைத் திறந்துகொண்டு அந்த வழியினால் புறப்பட்டிங்கெய்தினேன்; ஆதலின், இவனே ராஜ்ஜியத்தைத் தானே யாளவேண்டுமென்றெண்ணி, யான் இறக்கினும் இறக்குகவென்று கெடுமதிபூண்டு அக்குகையின் வாயிலை மூடிவிட்டு வந்தனன்; இவன் கொடுமைபூண்டு அண்ணனென்னும் அன்பினையும் மறந்து இவ்வண்ணஞ் செய்தனன்; என்றிவ்வண்ணமாக இகழ்ந்துரைத்து, மனையாளையும் அபகரித்துக்கொண்டு உடுத்த துணியுடன் வெருட்டி யடித்தோட்டி விட்டனன். அவனால் வெருட்டப்பட்டே இப்பார்முழுதும், காடு மலை யடங்கலும் திரிந்தலைந்தேன்; பின்பு, வேறொருகாரணத்தினால் வாலி இவ்விடத்திற்கு வரக்கூடாமையை யறிந்து இந்த ரிசியமூகமலையைச்சேர்ந்துறைகின்றேன்; கேட்டருளினீரோ எம் தோழரோ! யானிவ்வண்ணம் சிறிதும் பிழையின்

றியே கடுந்துயரமடைந்தேன்; இவ்வண்ணம் வாலிக்கும் எனக்கும் பகை நேர்ந்ததற்குக் காரணத்தை யுரைத்தேன்; ஆதலின், இனி வாலியின் அச்சந்தீர்ந்து இன்புற்று அடியேன் மகிழ்ச்சியுற்று வாழுமாறு அருள் செய்க; தேவர் அநாதரக்ஷகரும், ஆபத்பந்துவும், இனியதோழருமாகின்றீ ரல்லீரோ? என்று விண்ணப்பஞ்செய்து வேண்டினர். பெருமாளும் அம் மொழியைத் திருச்செவிசார்த்தி அஞ்சன்மின் என்று அபயமளித்து, அவரை நோக்கிக் கேளீர் மஹாராஜரே! குறிதப்பாமல் விரைவாகப் பாய் கின்ற என்னுடைய இக்கணைகள் கதிரவன்போல ஒளிகொண்டு வாலியின் மேலே விழப்போகின்றன; மிகவும் தீச்செயல் பொருந்திய அந்த வாலி எனக்குக் கட்புலனாகும்வரையிலுமே பிழைத்திருப்பான், யான் துன்புற் றிருப்பதினாலே நீரும் மிகவும் சோகக்கடலில் மூழ்கிக் கிடக்கின்றீரென அறிகின்றேன்; உமது பாரியையைப் பறித்துக்கொண்ட அந்த வாலியை விரைவில் கொலைசெய்து உம்மைக் கரையேற்றுவேன்; பின்பு, நீர் கோரிக்கையீடேறி இன்புற்று வாழ்வீரென்று புன்னகையுடன் அருளிச் செய்து தேற்றியருளினர். மஹாராஜரும் அம்மொழியைக்கேட்டு மிக மகிழ்ந்து பெருமாளை நோக்கி, மொழியலுற்றனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் பத்தாவது சருக்கம்

முற்றிற்று.

பதினொன்றாவது சருக்கம்.

மஹாராஜர் பெருமாளுடன் வாலிக்குநேர்ந்த மதங்கமாமுனியின் சாபத்தை யுரைசெய்து அவனுடைய தோள்வலியைப் புகழப் பெருமாள் மாஹாராஜர்க்கு விசுவாஸம் வருவதற்காக துந்துபியின் சரீரத்தை இடதுகால் கட்டைவிரலி னால் பத்துக்காதவழிதூரம் தள்ளியருளியது.

அநந்தரம் மஹாராஜர் பெருமாள் அருளிச்செய்த திருவாய்மொழி களைக் கேட்டதினால் பெருமகிழ்வுகொண்டு பௌருஷம்பெருகிப் புகழ் ந்து பூஜித்துப் பெருமாளைநோக்கிக் கேட்டருளீர் அருளாழியம்மானே! தேவர் திருவுளஞ் சீறியருள்வீராகில், கொடிய கூரிய கணைகளினால் மூவு லகங்களையும் ஊழிகாலையில் கொழுத்தெழுந்த செங்கதிரோன்போல

* மாயாவியென்பவன் துந்துபிக்கு உடன்பிறந்தோனும் ஒருவனுளன்; இங்கே இவன் துந்துபியின் மகனெனவே தோற்றுகின்றது.

எரித்தருள்வீரென்பதில் சிறிதும் ஐயமிலது. ஆயினும், வாலியினுடைய தீரத்தையும், வீரத்தையும், பௌருஷத்தையும், அடியேன் உரைக்கின்றேன்; இதனைக்கேட்டருளிப் பின்பு, தக்கவண்ணஞ்செய்தருள்க; வாலி தினந்தோறும் பின் மாலையிலெழுந்து. மேல்சமுத்திரத்திலிருந்து கீழ்சமுத்திரத்திற்குந் தென்சமுத்திரத்திலிருந்து வடசமுத்திரத்திற்கும் கதிரவன் உதிப்பதற்குமுன்னமே வருத்தமின்றிச் சுற்றிக்கொண்டு வருவான்; மாமலையின் சிகரங்களைக் கையிலெடுத்துக்கொண்டு அம்மானையாடுவான்; காட்டிலுள்ள பற்பல முதிர்ந்த சிறந்த மரங்களையும், வேகத்தினல் முறித்துச் சாய்ப்பான்; ஒருக்கால் துந்துபியென்னும் அசுரன் கயிலைமலையின் சிகரம்போலப் பருத்துயர்ந்த காட்டெருமைக்கிடாவின் வேஷத்தை யெடுத்துக்கொண்டு ஆயிரம் யானை பலம் தனக்குளதென்றும் செருக்கினல் மதமேறி வரம்பெற்றிருந்ததினல், ஒருவரையும் மதிக்காமல் சமுத்திரராஜனைக்கிட்டிக் கேளீர் நீர்க்கடவுளே! என்னுடன் போர் செய்யவருக; என்று அழைத்தனன். சமுத்திரராஜனும் எழுந்து அவனைநோக்கி, அடாதுந்துபி! யான் இப்போது போர்செய்ய வல்லமை கொள்ளுகின்றிலேன்; உன்னுடன் போர்செய்ய வல்லவன் யாவனே? அவனையுரைசெய்கின்றேன் கேளாய்; முக்கண்ணனுக்கு மாமனும், மாமலைகளுக்குக் கோமானும், பற்பல சுனை, காடு, ஆறுகளையுடையனுமாகிய வரையரையன் யிருக்கின்றனன்; அவன் உன்னுடன் போர்செய்யவல்லவன் அங்குச் செல்லாயென்று உரைசெய்தனன். துந்துபி யதுகேட்டு சமுத்திரராஜன் தன்னைக்கண்டு அச்சங்கொண்டதாகநினைத்து, வில்லினின்றும் விடுக்கப்பட்ட பாணம்போல விரைவாகப் பாய்ந்துவந்து இமயமலையைச்சேர்ந்து வெண்மைநிறமுள்ள சிறந்த சிகரங்களை முட்டிக் கீழேதள்ளிச் சிங்கநாதஞ் செய்தனன். வரையரையனும் அதுகண்டு நீரற்று வெண்மைபொருந்திய மேகம்போன்ற இனியரூபந் தரித்துக்கொண்டு தனது சிகரத்தின்மீதில் வீற்றிருந்து துந்துபியை நோக்கி, அடா தானவா! நீ யென்னையேன் துயருறுத்துகின்றனை; யான் போர்செய்யத் தக்கவனல்லேன்; மாமுனிவர்களெல்லோரும் என்னைச்சேர்ந்து தவம்புரிந்துக்கொண்டிருக்கின்றனர்கள்; ஆதலின், என்னை வருத்தற்க; என்று மொழிந்தனன். துந்துபி யதுகேட்டுச் சினத்தினல் கண்சிவந்து அவனை நோக்கி, அடா மாமலை மன்னவா! உன்னைப் போரில் சிறந்தவனென்று கூறுகின்றனர்களே? என்னிடத்தில் அச்சங்கொண்டே இவ்வண்ணம் உரைக்கின்றனையோ? ஆகில், என்னுடன் இப்போது யர்வன் போர்செய்யவல்லனே அவனை யுரைசெய்க; என்று வினவினன். பர்வதராஜன் அதுகேட்டு அவனை நோக்கிக் கேளடா துந்துபி! வாலியென்னும் வானரராஜன் தேவேந்திரனுக்கு நிகரான பல பராக்ரமமுடையவனகிக் கிஷ்கிந்தையில் அரசு செய்து வருகின்றனன்; அவன் உன்னுடன் போர்செய்ய மிகவும் வல்லவன், அவன் நமுசிக்கு வாஸவன்போல உனக்குத்தக்கசூரன், உனக்குப்

போர்செய்ய விருப்பமுளதாயின், விரைவாக அங்குச்செல்லுக ; என்று உரைசெய்தனன். துந்துபி அதுகேட்டு உடனே புறப்பட்டுக் கிஷ்கிந்தாபுரிசேர்ந்து மழைகாலத்தில் நீருண்டகொண்டல்போலப் பருத்துயர்ந்து மகிஷவேஷத்துடன் கோட்டைவாயலில்வந்து ரணபேரிமுழங்கியதுபோலக்கூவினன்; அருகிலுள்ள மரங்களையும் முறித்தனன் ; பூமியையும் கால்களின் குரங்களினால் பிளந்தனன் ; கோட்டைக்கதவினையும் யானைபோலக் கொம்புகளினால்மோதி முட்டிக் கொந்தினன்; அந்தப்புரத்தில் படுத்திருந்த வாலி யந்த ஒலியைக்கேட்டெழுந்து சினங்கொண்டு தாரைமுதலிய பெண்களுடன் கூடி விண்மீன்களுடன் கூடிய சந்திரன்போலப் புறப்பட்டு வந்து துந்துபியை நோக்கி, அடா தானவா ! எல்லாவானரங்களுக்கும் வாலி ராஜனாகியிருக்கையில், நீயேன் இவ்வண்ணம் கோட்டைவாயலில் கூவுகின்றனை; அடா உன் செய்தியை யான் அறிவேன்; தப்பிப் என்றுமல் ஓடிவிட்டால் பிழைப்பாய் ; ஏன் உயிரை மாய்த்துக்கொள்ளுகின்றனை ; உயிரைப் பாதுகாத்துக்கொள்ளடா ? என்று மொழிந்தனன். துந்துபி யதுகேட்டுச் சினங்கொண்டு அவனை நோக்கி, அடா வாலி ! நீ பெண்களின் நடுவிலிருந்து இவ்வண்ணம் மொழிவது உன்னுடைய வீரத்திற்குத் தக்கதன்று ; என்னுடன் நீ இப்போது போர்செய்க; பின்பு, உனது பலம் இத்தன்மையதென்று யான் அறிந்து கொள்வேன் ; அன்றியில், இன்றிரவுமுழுதும் சினத்தையடக்கிப் பொறுத்திருக்கின்றேன் ; அதற்குள் நீ இன்பங்களை யனுபவித்து, அன்பர்களை யணைந்துகொண்டு, கோரினவைகளை யளித்துவிட்டுத் தோழர்களையுங்கண்டு இந்நகரியையும் நன்கு கண்ணுற்று, உனக்கு நிகரான மற்றொருவனுக்குப் பட்டமும் கட்டுவித்து, மனைவிகளுடனும் புணர்ந்து வாழ்க ; பின்பு, நாளையதினம் உதயத்தில் உன்னுடன் போர்ந்து உன் கொழுப்பை யடக்கிக் கொலைசெய்து மகிழ்வேன் ;—

యోహిమత్తంప్రమత్తంవా సుప్తంవారహితంభృశం
హన్యాత్సభ్రూణహాలోకే త్వద్విధంమదమోహితం.

யோஹிமத்தம்ப்ரமத்தம்வா ஸுப்தம்வாரஹிதம்ப்ருசம்
ஹந்யாத்ஸப்ரூணஹாலோகே த்வத்விதம்மதமோஹிதம்.

கள் முதலியவற்றைக் குடித்து மதங்கொண்டு மயங்கியிருப்பவனையும், ஊக்கமற்றுப் பராக்காயிருப்பவனையும், துயில்கொண்டவனையும், ஆயுதமின்றித் தனித்திருப்பவனையும், உன்னைப்போலக் காமவேட்கைகொண்டு மயல்கொண்டவனையும், யாவனொருவன் கொலைசெய்வானோ ? அவன் உலகினில் கருவையழித்த பாவத்தையும், வேதியரைக் கொலைசெய்த பாவத்தையும் அடைவானென்று தருமமுணர்ந்தோர் மொழிகின்றனர்களல்லரோ ? என்று செருக்குற்று மொழிந்தனன். வாலியும் அம்

மொழியைக்கேட்டு நகைத்துச் சினமுற்றுத் தாரை முதலிய பெண்களை யனுப்பிவிட்டு அவனை நோக்கி, அடடா மூடா ! நான் மதங்கொண்டிருக்கே னென்றெண்ணற்க ; நீ போரில் அச்சமற்றவனாயின், எதிரே நின்று இப் போழ்தே போர்செய்யடா ? என்னுடைய இந்த மதத்தையும், இந்தப் போர்க்கு வீரபானமென்றெண்ணடா ? என்றிவ்வண்ணமுரைத்து தன் தந்தையான தேவேந்திரனால் அளிக்கப்பட்ட பொன்மயமான மாலையை தோள்களில் உயர எடுத்துக் கட்டிக்கொண்டு போர்செய்யச் சன்னத்தமாகி நின்றனன். உடனே யந்த துந்துபியும் போர்வதற் கெதிர்த்துவருகையில், வாலி யவனுடைய இரண்டு கொம்புகளையும் பிடித்துச் சுழற்றிக் கீழேயடித் துச் சிங்கநாதஞ்செய்து மகிழ்ந்தனன். அப்போது அந்த துந்துபியின் காதுகளினின்றும் குருதி தாரையாகப்பெருகிற்று; பின்பு இருவரும் மிக ச்சினங்கொண்டு கோரமாகச் சண்டைசெய்கையில், வாலி முஷ்டிகளினா லும், முழங்கால்களினாலும், குண்டுக்கல்லுகளினாலும், மரங்களினாலும் அடித்தனன். துந்துபியும் கொம்புகளினாலும், கால்களாலும் அடித்தனன். இவ்வண்ணம் போர்கையில், வாலிக்குக் காந்தியும், பலமும், பராக்கிரம மும் வளர்ந்தன ; துந்துபிக்கு அவைமுறையே குறைந்தன ; அப்போது வாலி துந்துபியைப் பிடித்துச் சுழற்றித் தரையில் அடித்தனன். உடனே துந்துபி தரையில்வீழ்ந்திறந்தனன். வாலியும் அப்போழ்து அந்த துந்துபி யின் சரீரத்தையெடுத்துக் கைகளால் சுழற்றியெறிகையில், அது ஒருகாத வழிதூரந்தாண்டித் தரையில் வீழ்ந்தது; வேகமாகத் தரையில் அந்த உடல் வீழ்ந்தமையின், வாயினின்றும் இரத்தவெள்ளம்தோன்றிக் காற்றினால்மத ங்கமாமுனியின் ஆசிரமமெங்கும்போய்ப்பாய்ந்தது; அங்கே வீற்றிருந்த மதங்கமாமுனிவர் அதைக்கண்டு மிகமுனிவுகொண்டு யாவன் அவன் இவ் வண்ணம் செய்தவன் ; அவன் என்மீதும் குருதிபடியுமாறு செய்தன னல்லனோ ? எவன் இவ்வண்ணம் மதியற்றவனும், மதிகெட்டவனும், மடமையுடையோனும், பெரியோர்களிடத்தில் பழக்கமற்றவனுமாகின்ற னன் ; என்று அருளிச்செய்து ஆசிரமத்தின் புறத்திலெழுந்தருளி மாம லைபோல இறந்து வீழ்ந்துகிடந்த காட்டு மகிஷத்தைக்கண்டு ஞானக்கண் ணினால் இவ்வண்ணம் வாலியினால் செய்யப்பட்டதென்று அறிந்து அவன் மேல் மிகத்திருவுளஞ்சீறி அந்தவாலி இன்றுமுதலிவ்விடத்திற்கு வரக்கட வனல்லன்; மீறிவருவானாகில் உடனே இறக்கக்கடவன். அவன் இந்த துந் துபியின் உடலையெறிந்து மரங்களையும் முறித்து, சோணிதத்தையும் இறைத்து, என்னாசிரமத்தைக் கெடுத்தனனல்லனோ ? அவன் சுற்றிலும் காதவழிதூரமுள்ள இந்த ஆசிரமத்தில் புகுவானாயின், உடனே யவன் இறந்துவிடுவனென்பதில் சிறிதேனும் ஐயமிலது ; அவனுக்கு மித்திரர் களான வானரர்கள் யாவருளரோ ? அவரும் இவ்விடத்தில் வாழக்கட வரல்லர் ; அவர்கள் என்னுடைய இம்மொழியைக்கேட்டு வேறிடந்தேடி போகக்கடவர்கள் ; இதனைக்கேட்டும் இங்கிருப்பார்களாயின், அவர்கள்

மேலும் சாபமிடுவேன்; யான் அருமையாகப் பிள்ளைகளைப்போல வளர்த்துவந்த என்னுடைய இந்த ஆசிரமத்தை யந்தப்பாவி யழித்தனனே? இன்றுதினம்மாத்திரமே இங்குள்ள வாலியைச் சேர்ந்த வானரர்களுக்குக் கெடுவுகொடுத்திருக்கின்றேன்; நாளையதினம்முதல் யான் யாவனேயாயினும் காண்பேனுயின் அவன் அநேகம் ஆயிரம் வருஷங்கள் கல்லாகிக் கிடக்கக்கடவன்; என்று சாபமிட்டருளினர். அங்குள்ள வானரர்கள் எல்லோரும் அம்மொழியைக்கேட்டுணர்ந்து உடனே புறப்பட்டுக் கிஷ்கிந்தைக்கோடிச் சேர்ந்தனர்கள். வாலியும் அவர்களைக்கண்டு வாரீர்கள் வானரர்களே! நீங்களெல்லீரும் மதங்கவனத்தில் வாழ்ந்துகொண்டிருந்தீர்களே? இப்போழ்து ஏன் இங்கேகூடி யோடிவருகின்றீர்கள்; அவ்விடத்தில் உங்களுக்கு நன்மையுளதா? யாதேனுந் தீமை நேர்ந்ததோ? என்று வினவினன். பின்பு, அந்த வானரர்களும் வாலியை நோக்கிக் கேட்டருளீர் எம்மிறையே! தேவராலே எறியப்பட்ட துந்துபியின் குருதிபாய்ந்து மதங்கமாமுனியின் ஆசிரமமெங்கும் அழிந்தமையின், அவர் முனிந்து தேவரையும், தேவரைச்சேர்ந்த எங்களையும், இவ்வண்ணம் சாபமிட்டனரென்று நிகழ்ந்தவாறு மொழிந்தனர்கள். வாலியும் அம்மொழிகேட்டு விரைவாக வோடிவந்து அந்த மதங்கமாமுனியைக்கண்டு வணங்கி யந்தச் சாபத்தைப் போக்கும்படிவேண்டினன். அம்முனிவர் அதுகேட்டும் இரங்காமல் அவனை இலக்ஷியஞ்செய்யாமல் நிராகரித்துவிட்டு ஆசிரமத்துக்குள் புகுந்தனர். வாலி யதுகேட்டு அச்சங்கொண்டு கிஷ்கிந்தை சேர்ந்து அன்றுமுதல் இந்த மதங்காசிரமத்துக்குள் புகுகின்றிலன். பின்பு, அவன் இங்கே வரக்கூடாதென்பதையறிந்து அச்சந்தீர்ந்து மந்திரிகளுடன் இன்புற்று வாழ்கின்றேன்; இதோ கண்டருளீர் அந்த துந்துபியின் எலும்புகளின் குவை காணப்படுகின்றது; இதுதான் வாலியினுல் எறியப்பட்டு மலைபோல வீழ்ந்திருக்கின்றது; இதோ காணப்படுகின்ற இந்தப் பருத்துயர்ந்த ஏழு ஆச்சாமரங்களுமிருக்கின்றனவே? இவைகளுள் வாலி யொரு மரத்தைப்பற்றி யசைப்பானுகில், அது இலைகள்யாவுமுதிர்ந்து மொட்டையாகிவிடும்; ஸ்வாமி என் தோழரோ! வாலியின்பலம் இவ்வண்ணம் ஒப்பற்றதாக யிருக்கின்றதே அத்தன்மையனுகிய அந்த வாலியைப் போரில் தேவர் எவ்வண்ணங் கொலைசெய்தருள்வீரென்று மொழிந்தனர். மஹாராஜர் இவ்வண்ணம் மொழிந்ததை இளையபெருமாள் கேட்டருளி நகைத்து அவரைநோக்கி மஹாராஜரே! இப்பொழுது எந்தகாரியத்தைச் செய்தால் என்னையர் வாலியைக் கொலைசெய்வாரென்று நீர் நம்புவீரோ? அதனை யுரைசெய்வீரென்று வினவியருளினுர். மகாராஜர் அதுகேட்டு அவரை நோக்கிக் கேளீர் இளையபெருமாளே! வாலி இந்த ஏழு ஸாலமரங்களையும் தனித்தனியசைத்துப் பலதடவைகளில் இலையுதிரச்செய்திருக்கின்றனன்; ஆதலின், பெருமாள் இவற்றுள் ஒன்றினை யொருகணையினுல் அடித்துத்தள்ளினுலும், இந்த துந்துபியின் எலும்பையெடுத்து எண்ணூறுமுழந்தூரத்

தில் எறிந்தருள்வராயினும், பெருமாள் வாலியைக் கொலைசெய்து விடு வாரென்று யான் நம்பி யச்சந்தீர்ந்து மகிழ்வேனென்று மொழிந்து முகூர்த்தகாலஞ் சிந்தையுற்றிருந்து பின்பு, பெருமாளையும்நோக்கிக்கேட்டருளீர் தோழரே! அந்த வாலி மிகவும்சூரனும், சூரர்களைக்கொலைசெய்பவனும், உண்மையாகப் புகழப்பட்ட பௌருஷமுடையவனும், சிறந்த பலமுடையோனும், போரில் ஒருக்காலுந் தோல்வியுறாதவனுமாகின்றனன்; அவனுடைய செயல்களில் ஒவ்வொன்றும் தேவர்களாலும், வியப்புறத்தக்கதாகின்றது; அவைகளை நினைந்தேயான் மிகவும் அச்சங்கொண்டு அவனுடன் போர்செய்யாமல் இந்த ரிசியமூகமலையைச் சேர்ந்து வாழ்கின்றேன்; அந்த வாலி வெல்லவொண்ணாதவனெனவும், மிகச் சினமுடையவனெனவும், எண்ணியே இந்த இடத்தைவிட்டு நீங்காமலிருக்கின்றேன்; இங்கே வாழ்கையிலும், அச்சமுற்றே யாரைக்காணினும் அவனால் ஏவப்பட்டவர்களோ என்று ஐயமுற்று நடுங்குகின்றேன்; இந்த அனுமான் முதலான நன்மந்திரிகளினாலேதான் நான் இன்புற்றிருக்கின்றேன்; தேவரும் அடியேனுக்குச் சிறந்த தோழராக நேர்ந்தருளினீர்; தேவரும் என்னுடைய சோகத்தை போக்கியருளத் திருவுளங்கொண்டிருக்கின்றீரென்பதையும் அறிவேன்; என்னுடைய தாபந்திரும்படி இமையமலையைப் போலத் தேவரைத் தஞ்சமடைந்தேனாதலின், இனி யெனக்குக் குறையில்லை யென்பதையும் அறிவேன்; ஆயினும், அந்தக்கொடிய வாலியின் பல பராக்கிரமங்களைக் கண்ணாரக் கண்டவனாதலின், ஐயுறுகின்றேன்; தேவருடைய பல பராக்கிரமங்களை யடியேன் நேராகக் கண்டிலேனல்லேனோ? ஆதலின், யான் இவ்வண்ணம் மொழிகின்றேனே யன்றி வேறில்லை; அடியேன் தேவரைப் பரீக்ஷை பார்க்கின்றேனென்றாவது, இகழ்கின்றேனென்றாவது, அச்சமுறுத்துகின்றேனென்றாவது எண்ணியருளற்க; அந்த வாலியின் செயல்களினால் அடியேன் இவ்வண்ணம் விண்ணப்பம் செய்கின்றேன்; ராகவகுலதுரந்தரா! தேவருடைய திருவாய்மொழியும், தீரமும், ஆகாரமும், இம்மூன்றுமே நீறுபூத்த நெருப்புப்போல திவ்விய தேஜஸ்ஸு தேவரிடத்தில் உளது என்பதை யறிவிக்கின்றன; ஆதலின், வேறுவிதமாகத் திருவுளம் பற்றற்க; என்று விஜ்ஞாபனஞ் செய்தனர். இவ்வண்ணம் மஹாராஜர் செய்த விண்ணப்பத்தைப் பெருமாள் கேட்டருளிப் புன்னகைசெய்து மஹாராஜரை நோக்கிக் கேளீர் தோழரே! உமக்கு நம்முடைய திறமையில் நம்புதல் இல்லையாயில் நீர் நம்பும்படி செய்வோம் பாரீரென்று அருளிச்செய்து அங்கே கிடந்த அந்த துந்துபியின் காயத்தைத் தமது இடதுகால் கட்டை விரலினாலசைத்துப் பத்துக்காதம் தூரம்போய்ச் செல்லுமாறு எறிந்தருளினர். மஹாராஜர் அதனைக்கண்டும் நம்புதலுறாமல் பெருமாளை நோக்கித் தோழரே! இந்த துந்துபியின் காயத்தை வாலி எறியுங்காலையில், இது புதியதாய் மாம்ஸங்களுடனும், இரத்தத்துடனும், தோலுடனும் சேர்ந்து

ஈரமாய் மிகவும் பாரமாயிருந்தது; இப்போழ்தோவெனில், குருதி மாம்சங்களின்றி யுலர்ந்து எலும்புகள்மாத்திரம் மிகுந்து எளிதாகியிருக்கின்றது; அன்றியிலே வாலி இதனை எறியுங்காலையில், அவனுடன் நெடுநேரம் போர்செய் திளைத்திருந்தனன். தேவர் இப்போழ்திளைப்பின்றி மகிழ்ந்து எறிந்தருளினீர்; ஆதலின், இதனாலே தேவர் வாலியை விடச் சிறந்த பலமுடையீரென்று நம்புவதற்கிடமில்லை; முன்பு இது ஈரமாயிருந்ததற்கும், இப்போது உலர்ந்திருப்பதற்கும், கனத்தில் வெகுவாக ஏற்றத்தாழ்வுண்டு, ஆதலின், தேவருடைய பலமே உயர்ந்ததோ? அவனுடைய பலமே யுயர்ந்ததோ? என்னும் ஐயம் அப்படியே யிருக்கின்றதேயன்றித் தீர்ந்திலது; ஆதலின், இந்த ஸாலமரங்களுள் ஒன்றினைத் தேவர் பிளந்தருள்வீராயின், அப்போது தேவருடைய பலம் விளங்கும்; ஆதலின், இந்தக் கோதண்டத்தில் கணையைத் தொடுத்து விட்டருள்க; தேவரால் எய்த இக்கணை இந்த மரத்தைப் பிளக்குமென்பதில் சிறிதும் ஐயமில்லை; ஆதலின், தேவர் ஆலோசனை செய்யற்க; இவ்வண்ணம் அடியேனுடைய வேண்டுகோளைச் செய்தருள்க; ஒளிகளுள் கதிரவன்போலவும், மலைகளுள் இமயம்போலவும், நாலுகாலுடைய பசுக்களுள் சிங்கம்போலவும், வீரமுடைய மனிதர்களுள் தேவரே சிறந்தவராகின்றீர்; இவ்வண்ணம் அடியேன் பிரதிஜ்ஞைசெய்து பிரமாணம் பண்ணுவேன்; ஆதலின், இவ்வண்ணம் கிருபைசெய்தருள்க; என்று வேண்டினார்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினொன்றாவது சருக்கம்

முற்றிற்று.

பன்னிரண்டாவது சருக்கம்.

பெருமாள் ஸப்தஸாலங்களையும் பிளந்து மஹாராஜரை வாலியுடன் போர் செய்வித்துப் பின்பு பேதம்தெரியாமையால் தோல்வியுற்றோடி வந்த அந்த மகாராஜருக்கு அடையாளங்கட்டி மீளவும் போர்செய்யத் தூண்டியருளியது.

இவ்வண்ணம் மஹாராஜர் உரைசெய்த வாக்கியத்தைக்கேட்டருளிப் பெருமாள் கோதண்டத்தைத் திருக்கரத்திலேந்தி மஹாராஜர்க்கு நம்புதலுண்டாவதன்பொருட்டு அதில் கூரிய கணை யொன்றினைத்தொடுத்து அந்த ஆச்சாமரங்களைக்குறித் தெய்தருளினர். அந்தக் கணை யுடனே பேரொலிகொண்டு புறப்பட்டு அம்மரங்களேழினையும் பிளந்துகொண்டு மலையின் தாழ்வரையையும் பிளந்து பாதாளத்திற்சென்று உடனே தனா

யைப் பிளந்துகொண்டு மேலெழுந்து பெருமாளுடைய அம்பருத்தூணி யில் முன்போலச் சேர்ந்து திகழ்ந்தது; மஹாராஜர் இதனைக்கண்டு வியப்படைந்து மகிழ்ந்து கைகளைக்கூப்பிப் பெருமாளைத் திருவடித் தொழுது பெருமாளை நோக்கி, ஸ்வாமி! ஸ்ரீசக்கரவர்த்தித்திருமகனுரான தோழரே!—

సేన్ద్రానపిసురాన్సర్వాన్ త్వంబాణైఃపురుషర్షభ
సమర్థస్సమరేహన్తుం కింపునర్వాలినంప్రభో
యేనసప్తమహాసాలా గిరిర్భూమిశ్చదారితాః
బాణేనైకేనకాకుత్స్థ స్థాతాతేకోరణాగ్రతః.

ஸேந்த்ரானபிஸுரான்ஸர்வான் த்வம்பாணைஃபுருஷர்ஷப
ஸமர்த்தஸ்ஸமரேஹந்தும் கிம்புநர்வாலிநம்ப்ரபோ.
யேனஸப்தமஹாஸாலா கிரிர்ப்பூமிச்சதாரிதாஃ
பாணேநைகேநகாகுத்ஸ்த ஸ்தாதாதேகோரணாக்ரதஃ.

தேவர் ஒரே பாணத்தினாலே ஏழு ஆச்சாமரங்களையும், தாழ்வரை யையும், பூமியையும் பிளந்து கணப்பொழுதில் மீளவும் அம்பருத்தூணி யில் அந்தக் கணையைச் சேர்க்குந் திறமையுடையீராதலின், தேவர் இந்தி ரன் முதலாகியுள்ள தேவர்களெல்லோரையும் போரில் பாணங்களினால் அடித்து வெற்றிகொள்ளவும் வல்லீர் எனின் இந்த வாலி யொருவனை வெற்றிகொள்ளீரோ? போர் முகத்தில் தேவர்க்கெதிராக நிற்பவன் யாவ னுளன்; இப்போதுதான் யான் ஐயந்தீர்ந்தேன்; துன்பத்தையுந் துறந் தேன்; மிகவும் மகிழ்ந்தேன்; இந்திர வருணர்களுக்கு நிகராயுள்ள தேவரோ அடியேனுக்குத் தோழராயினமையின், யாது குறையுளது; என்னை மகிழ்விப்பதன்பொருட்டு அந்த வாலியை இப்பொழுதே கொலை செய்தருள்க; அவன் எனக்கு உடன்பிறந்தோனாயினும், பகையே யல்லனோ? இதன்பொருட்டுக் கைகூப்பி வேண்டுகின்றேன்; என்று மொழிந்தனர். பெருமாளும் அம்மொழியைக்கேட்டருளி மஹாராஜரை மகிழ்ந்து தழுவிக்கொண்டு இளையபெருமாளுடைய அபிப்பிராயத்தை யும் அறிந்து மஹாராஜரை நோக்கித் தோழரே! இங்கிருந்து கிஷ்கிந் தைக்குச் செல்வோம் வாரீர்; நீர் முன்சென்று வாலியைப் போர்வதன் பொருட்டுக் கூவியழையீரென்று அருளிச்செய்தனர். உடனே எல்லோ ரும் விரைவாகக் கிஷ்கிந்தைசேர்ந்து அடர்ந்திருண்டுதழைத்துள்ள மரங் களில் மறைந்திருந்தனர். பின்பு, மஹாராஜர்மாத்திரம் முன்சென்று சிங்கநாதஞ்செய்து வாலியைப் போருக்கழைத்தனர். வானெங்கும் பிளக் கும்படி யொலித்த அந்தவொலியை வாலிகேட்டு மிகச் சினம்பூண்டு வெய்யோன் அஸ்தகிரியினின்றும் புறப்பட்டாற்போலே புறப்பட்டு

மஹாராஜனைக்கிட்டிப் போர்ந்தனன். பின்பு, வாலி சுக்கிரீவர்களிருவருக்கும் பெருஞ்சண்டைவிளைந்து விண்ணிடையில் புதனுக்கும், அங்காரகனுக்கும்போலக் கோரமாக நடக்கையில், வச்சிரங்கள்போன்ற கரதலங்களினாலும், கைக்குத்துகளினாலும், இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டு ஓயாமல் போர்கையில், பெருமாள் கடாக்ஷித்து இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் பேதமின்றியிருந்தமையின், இவன் வாலி இவர் மஹாராஜனென்று அடையாளந்தெரியாமல் அசுவினி தேவர்கள்போலவே இணையாக விளங்கினமையின், தோழனுக்கே ஒருவேளை தீங்கு நேருமோவென்று ஐயுற்றுக் கணைதொடுக்கத் திருவுளமுறாமல் மயங்கி நின்றருளினர்; அத்தருணத்தில் மஹாராஜர் வாலியினால் அடிக்கப்பட்டுத் தம்மைப் பாதுகாத்தருளவல்ல பெருமாளைக் காணாமல் அச்சங்கொண்டோடி மீளவும் ரிசியமூகம் சேர்ந்து, மெய்முழுதுங் குருதிபடிந்து வாடிவதங்கி அடிகளினால் மெய்முறிந்து வாலியினால் வெருட்டப்பட்டு பெருங்காட்டினிடைசேர்ந்து ஒடுங்கி யிருந்தனர். வாலியும் வெருட்டிக்கொண்டு வந்து மதங்கமாமுனியின் சாபத்தினாலே அவ்வனத்திடையில் செல்லாமல் மீண்டு மஹாராஜனை நோக்கி, அடா சுக்கிரீவா! இன்று தப்பிவிட்டனை; மீளவும், என்கையில் அகப்படாமல் போவாயோ? ஆகுக; என்று மிதட்டிவிட்டுக் கிஷ்கிந்தை வந்து சேர்ந்தனன். பெருமாளும் இளையபெருமாளுடனும், சிறியதிருவடியுடனும், மீண்டெழுந்தருளி மஹாராஜரிருக்குமிடஞ் சேர்ந்தருளினர். மஹாராஜரும் பெருமாளைக் கண்டு நாணத்தினாலே தலைகுனிந்து, தனையை நோக்கிக்கொண்டு ஸ்வாமி! நீ போய் வாலியைச் சண்டைக்கழையென்று அருளிச்செய்தனுப்பிவிட்டுத் தேவர் பராக்கிரமத்தை நன்கு விளங்கச்செய்தீர்; தேவர் என்னை வாலியைக்கொண்டு கொல்வித்ததனால் யாது செய்யப்பட்டதாயிற்று; அப்போதே நான் வாலியைக் கொலைசெய்யேனென்று உண்மையை யுரைத்துவிடுவீராயின், நான் இங்கிருந்து சென்றிரேனே? இவ்வண்ணம் என்னை வருந்தச்செய்வது தகுமோ? என்று சினமும், துயருங்கொண்டு மொழிந்தனர். பெருமாளும் இவர் இவ்வண்ணந் தீனங்கொண்டுரைசெய்ததைக் கேட்டருளி யவரை நோக்கி, மஹாராஜரே! சினத்தைத்துறந்து யான் இப்போது வாலியைக் கொலைசெய்யாமல் வந்த காரணத்தை யுரைசெயக் கேளீர்; அலங்காரத்தினாலும், வேஷத்தினாலும், உயரம் பருமன்களாலும், நடையினாலும், கண்டவொலியினாலும், காந்தியினாலும், கண்ணோக்கினாலும், மொழிகளாலும், தோள்வலியினாலும், நீரும் வாலியும் ஓரேரீதியாயிருந்தமையின், அடையாளந்தெரியாமல் உமக்கொருக்கால் தீங்குநேர்ந்துவிடப் போகிறதேயென்று அச்சங்கொண்டு குறிதப்பாமல் பாயவல்ல கூரியகணையைத் தொடுத்திலேன்; யான் அவஸரப்பட்டு பாணத்தை விட்டுவிடுவேனாகில், நம்மிருவருக்கும் முதல்மோசம்நேருமே? யான் அறியாமையினால் பாணத்தை விட்டு

தலும், அதனால் நீர் துன்புறுவீராயின், எல்லோரும் என்னை மடையனெனவும், இளைமையனெனவும் இகழ்ந்து பழிப்பார்களே?

దత్త్వాభయవధోనామ పాతకంమహదుచ్యతే.

தத்தாபயவதோநாம பாதகம்மஹதுச்யதே.

ஒருவனுக்கு அபயங்கொடுத்து நம்புவித்துப் பின்பு அவனைக் கொலை செய்வதென்பது, கொடும்பாவமென இகழ்ந்துரைக்கப்படுகின்றதன்றோ? அன்றியும், யானும், இலக்ஷ்மணனும், சீதையும், யாங்களெல்லோரும் உமக்கே அதீனமாகின்றோம்? உம்மையே தஞ்சமடைந்திருக்கின்றோம்? ஆதலின், நீரே எங்களுக்குத் தஞ்சம், அஞ்சற்க; மீளவுஞ்சென்று போர் செய்க; இனி முன்போல இகழற்க; இந்த க்ஷணத்திலேதானே வாலியொரு கணையினால் அடிப்பட்டுத் தரையில்வீழ்ந்து புரளக்காண்பீர்; ஆனால், நீர் ஒரு அடையாளம் மாத்திரம் செய்துகொண்டு செல்லுக; அதனால் யான் உம்மை யறிந்துகொண்டு வாலியைக் கொலைசெய்வேன்; என்று அருளிச்செய்து தேற்றி இளையபெருமாளைக் கடாக்ஷித்து அடா லக்ஷ்மணா! இந்த மலர்ந்த கஜபுஷ்பியென்னுங் கொடியைப் பேர்த்து இந்த மஹாராஜருடைய கழுத்தில் அடையாளமாகக் கட்டுமென்று கட்டளையிட்டருளினர்; உடனே இளையபெருமாள் அந்த மலையின் தாழ்வரையில் முளைத்து முழுதலும் மலர்கள் மலர்ந்த அந்தக் கொடியைக் கொணர்ந்து மஹாராஜர் கழுத்தில் கட்டினர்.

సతయాశుశుభేశ్రీమాన్ లతయాకణ్ఠసక్తయా
విపరీతఇవాకాశే సూర్యోనక్షత్రమాలయా.

ஸதயாசுசுபேஸ்ரீமான் லதயாகண்டஸக்தயா
விபரீதஇவாகாசே ஸூர்யோநக்ஷத்ரமாலயா.

அந்தமஹாராஜரும் இளையபெருமாளாலே தமது கண்டத்தில் கட்டப்பட்ட அந்தப் பூங்கொடிமாலையினாலே கதிரவன் தான் நடுவிலிருக்கையிலும், சுற்றிலும் ஒளிகுன்றாமல் விளங்கும் விண்மீன்களினாலே சூழப்பட்டு விளங்கினாலெப்படியிருக்குமோ அப்படி விளங்கினர். இவ்வண்ணம் மஹாராஜர் அந்த மாலையினால், பலாகைகளின் நிரையினால், சந்தியின் சிகப்பினால் சிவந்த மேகம்போல விளங்கிப் பெருமாளருளிச்செயலின்படி பெருமாளிளையபெருமாளுடன் கூடி மகிழ்ந்து கிஷ்கிந்தையை நோக்கிப் புறப்பட்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பன்னிரண்டாவது சருக்கம் முற்றிற்று.

சிலர் சூரியன் என்பதற்கு விண்மீன்களினிடையில் விளங்குகிற சந்திரனென்று பொருளுரைத்து (தாராமத்ய கதச்சந்த்ரஸ்ஸூர்ய இத்யபிதீயதே) என்று நிகண்டு

பதின்மூன்றாவது சருக்கம்.

மஹாராஜர் கிஷ்கிந்தைச்குப் போகும்வழியில் ஸப்தஜனர்களினுடைய ஆசிரமத்தின் மகிமையைப் பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்தது.

அநந்தரம் தர்மாத்துமாவான அந்தச்சக்கரவர்த்தித்திருமகனார் இளையபெருமாளுடன் அந்த ரிசியமூகமலையினின்றும் வாலியினாலே பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தையை நோக்கி, எழுந்தருளத் திருவுளங்கொண்டு கோதண்டத்தையும் திருக்கரத்திலேந்திக் கூரிய கணைகளையும் கையிற்பிடித்து அம்பறாத்தூணிகளையுங் கட்டிக்கொண்டு புறப்பட்டருளினர். அப்போது முதலில் மஹாராஜரும் அவரைத்தொடர்ந்து, இளையபெருமாளும் அவரைத்தொடர்ந்து, பெருமாளும் அவரைத்தொடர்ந்து, சிறியதிருவடியும் அவரைத்தொடர்ந்து, நளனும் அவனைத்தொடர்ந்து, நீலனும் அவனைத்தொடர்ந்து, தாரனும் சென்றுகொண்டு, மலர்ந்து தழைத்த பற்பல மரங்களையும், தெளிந்து குளிர்ந்து பெருகுகின்ற நதிகளையும், மலைகளையும், குகைகளையும், கற்பிளவுகளையும், வீடுபோன்ற கந்தரங்களையும், சிறந்த மலைச்சிகரங்களையும், சுனைகளையும், காளுறுகளையும், வைடூரியமணிகள்போல நிர்மலமாயுள்ள இலைகளையும், மலர்ந்த தாமரைகளையும்பொருந்தித் திகழும் மடுக்களையும், குளங்களையும், அன்னம், நாரை, ஸாரஸம், வஞ்சுளம், நீர்க்கோழி முதலிய நீர்ப்பறவைகள் ஒலித்தும், மெல்லிய இளம்புற்களை மேய்ந்து அச்சமின்றித் திகழும் மான்கூட்டங்கள் நிறைந்தும் திகழுமிடங்களையும், வெண்மைநிறமுள்ள இரண்டு தந்தங்களையுடைய யானைகள் குளங்களிலிழிந்து கலக்கியும், கரையை மோதியும், மகிழ்வதையும், சில யானைகள் மாமுகில்கள்போலவும் உருவங்கொண்டு திரியும் மாமலைகள்போலவும் மதமேறித் திரிவதையும், மற்றுமுள்ள பசுபக்ஷிகளையுங்கண்டு மகிழ்ந்துகொண்டே விரைவாகச் சென்றனர்கள். இவ்வண்ணம் யாவரும் செல்லுகையிலே அடர்ந்திருண்டதொருகாட்டைப் பெருமாள் கண்ணுற்று மஹாராஜரை நோக்கித் தோழரே! இந்தக் காடு கொண்டல்போலக் கறுத்திருண்டுயர்ந்திருக்கின்றது; சுற்றிலும் மேகமாலைபோன்ற வாழைத்தோட்டங்களினால் சூழப்பட்டுளது; இஃது யாருடையது; என்னபெயருடையது; இதனை யறியவேண்டு

வும் கற்பித்து வியாக்கியானம் செய்தனர்கள். அந்த வசனமும் இந்த கோசத்திலென்று குறித்திலர்; எங்கும் கண்டிலோம்; வெய்யோனருகில் விண்மீன்கள் விளங்காவாதலின், இவ்வண்ணம் பொருள்கூறவேண்டுமென்பதே அவர்கள் கருத்து, ஆனால் அலங்காரசாஸ்திரத்தை யவர்கள் ஆராய்ந்திருப்பார்களாயின், இவ்வண்ணம் கற்பனை செய்யார்கள்; ஆனால் அதற்கு என்னவழியெனின், அபூதோபமாலங்காரமெனவறிக;—

மென மிக விருப்பங்கொண்டிருக்கின்றேன் ; நன்றாக உரைசெய்கவென்று வினவியருளினர். மஹாராஜரும் அதுகேட்டு நடந்துகொண்டே பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் தோழரே ! மிகவும் விசாலமுடையதும், இளைப்பைப்போக்குவதும், மாஞ்சோலை பூஞ்சோலைகள் அடர்ந்ததும், மதுரமான காய் கனி நீர்களை யுடையதுமாகிய இந்த ஆசிரமம் ஸப்தஜனரென்னும் மாயோகிகளினுடையது ; ஏழுவர்களாதலாலே ஸப்தஜனரென்னப்பட்ட அம்முனிவர்கள் இவ்விடத்திலே தலைகீழாக நின்றும், நீரிலுறைந்தும், ஏழுதினத்திற்கொருதரம் காற்றைப் புசித்தும் தவஞ்செய்துகொண்டிருந்து அநேகமாயிரம் வருஷம் வாழ்ந்து கடையில் சரீரத்துடனே பொன்னுடு சேர்ந்தனர்கள். இஃது அம்மாதவர்களின் ஆசிரமமாதலின், இந்திரன் முதலிய தேவர்களாலும் அழித்தற்கரியது ; அதனுள்ளே பறவைகளும், மற்றுள்ள வனத்திலுறையும் விலங்குகளும் புகுகின்றில ; யாரேனும் அறியாமல் அதனுள்ளே புகுவாராயின், மீண்டு வரார்கள் ; அவ்விடத்திலே இப்போதும் நிருத்த கீதவாத்தியங்களின் தொனியும், மணியணிகளினொலியும் கேட்கப்படுகின்றன ; திவ்வியகந்தத்தின் பரிமளமும் வீசுகின்றது ; கார்ஹபத்தியம், ஆஹவநீயம், தக்ஷிணம் என்னும் முத்தீகளும் எரிகின்றன ; அவற்றின் புகையும் மேலெழுகின்றது ; அப்புகை மாடப்புறாக்களின் கண்டம்போன்ற நிறமுடையதாகி மரங்களின் சிகரங்களைச் சூழ்ந்து பற்றுவதுபோலத் திகழ்கின்றது; அப்புகைகளினாலே சூழப்பட்ட இந்த மரங்களும் மஞ்சுலாவும் வைடூரியமலைகள்போல விளங்குகின்றன ; ஆதலின், அந்தப் பஞ்சஜனமாமுனிவர்களின்பொருட்டு இளையபெருமாளுடன் விநயம்பூண்டு கைகூப்பித் தலைவணங்கி வந்தனஞ்செய்தருள்க ; அம்முனிவர்களின்பொருட்டு யார் வந்தனஞ்செய்கின்றனர்களோ ? அவர்களுக்குச் சரீரத்திலே ஒரு நோயும் உண்டாகாது ; முன்புள்ள நோய்களும் தீர்ந்துவிடுமென்று கூறினர். பெருமாளும் இளையபெருமாளுடன் அம்மொழியைக்கேட்டு அம்முனிவர்களைக்குறித்துப் பிரணாமஞ்செய்தருளினர். பின்பு, மஹாராஜர் முதலிய வாநரர்களும் பிரணாமஞ்செய்தனர்கள். உடனே யாவரும் புறப்பட்டு நெடுந்தூரம் நடந்து வாலியினாலே பாதுகாக்கப்பட்ட கிஷ்கிந்தையைக்கிட்டி சுற்றிலும்பார்த்து ஆயுதங்களைக் கையில் ஏந்தி வாலியைக் கொலைசெய்யும்படி நிச்சயங்கொண்டு நின்றனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதின்மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

பதினைன்காவது சருக்கம்.

மஹாராஜர் பெருமாளால் ஏவப்பட்டு வாலியைப் போருக்கழைத்தது.

அந்தப் பெருமாள் இளையபெருமாள் வானரர்கள் எல்லாரும் கிஷ்கிந்தையைச்சேர்ந்து அடர்ந்த காட்டில் மறைந்துகொண்டிருக்கையில், மஹாராஜர் எங்கும் சுற்றிப்பார்த்து வாலிமீதுள்ள பகையினாலும், கோபத்தினாலும், ஆகாசம்கூட பிளக்கும்படியாகக் காற்றினால் மோதப்பட்ட காளமேகம் போலக் கர்ஜித்து, பாலசூரியன்போன்ற காந்தியும், மதமேறிய சிங்கம் போன்ற நடையும் கொண்டவராகியும், மனதில் அச்சம்கொண்டு பெருமாளை நோக்கி, தோழரே! வாலி என்னும் வலையினால் சூழப்பட்டும், பொன்னாற்செய்த தோரணகோபுரம் கட்டப்பட்டும், மணிமாடங்களினால் சூழப்பட்டுமுள்ள கிஷ்கிந்தையை வந்து சேர்ந்துவிட்டோம்; இனி வாலியைக் கொலைசெய்வேனென்று தேவரால்செய்யப்பட்ட பிரதிஞ்ஞையைப் பயனுளதாகச் செய்தருளுக என்று வேண்டினர். பெருமாள் அதுகேட்டு மகாராஜரை நோக்கி, கேளீர் தோழரே! கஜபுஷ்பி என்னும் இந்தக் கொடி லக்ஷ்மணனாலே அடையாளமாக உமது கழுத்தில் கட்டப்பட்டிருக்கின்றமையின், இந்தக் கொடியினால் உற்பாதகாலத்தில் சூரியன் விண்மீன்களினால் சூழப்பட்டு விளங்குவதுபோல நீர் விளங்குகின்றீர்; ஆதலின், இப்பொழுது ஓரே பாணத்தினால் வாலியினிடத்திலுண்டாகிய உம்முடைய அச்சத்தையும், பகையையும் போக்கி விடுவேன்; உமக்கு அண்ணன் என்னப்பட்ட அந்தப் பகையாளியை என் கட்புலனாகச்செய்யீர்; அவன் என் கண்ணில் படுவானாகில், உடனே இறந்து தரையில் விழுந்து துகள்படிந்து துடிப்பானேயன்றி, மீளவும் பிழைத்துச் செல்லான்; பின்பு, யான் திறமை அற்றவனென்றாவது, கபடமுற்றவனென்றாவது நினைக்கமாட்டீர்; ஆதலின், இப்பொழுது இகழ்க; உமக்கெதிராகவே சப்தசாலங்களையும் ஒரு கணையினால் பிளந்தேனன்றோ? அவ்வண்ணமே வாலியையும் இறந்தனனெனவே எண்ணுக;—

అనృతంనోక్తపూర్వమ్మే వీరకృచ్ఛ్రేపితిష్ఠతా
ధర్మలోభపరీతేన నచవక్ష్యేకథఞ్చన.

அந்ருதம்நோக்தபூர்வம்மே வீரக்ருச்ரேபிதிஷ்டதா
தர்மலோபபரீதேந நசவக்ஷ்யேகதஞ்சந.

நான் எவ்வளவு சங்கடத்தை அடைந்திருக்கையிலும், பொய்மொழி மொழிந்திலேன்; தர்மத்திற்கஞ்சி இனிமேலும் பொய்யுரையேன்; ஆதலின், என் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவேனேயன்றி, தவிரேன்; நீர் ஐய

முரற்க; நீர் விரைவாகச்சென்று வாலி உடனே புறப்பட்டுவரும்படியாக வீரவாதம் செய்க; வெற்றியுடையவனும், தோள்வலியினால் செருக்குற்றவனும், உம்மிடத்தில் தோல்வியடையாதவனுமாதலின், உம்முடைய தொனியைக்கேட்டுப் பொறுமைகொண்டு வாலி உடனே எதிர்த்து வருவான்; பகைவர்களின் வீரவாதத்தைச் சூரர்கள் ஒருக்காலும் பொறுத்திரார்கள். அந்த வாலி தன்பலத்தை நன்கு அறிந்தவனாதலின், ஸ்திரீகளின் நடுவிலிருந்து உம்முடைய தொனியைக்கேட்டு உடனே எதிர்த்து வருவானென்று அருளிச்செய்தனர். மஹாராஜர் அதுகேட்டு மகிழ்ந்து ஆகாசம் பிளந்து இறும்படியாகக் கர்ஜ்ஜனைசெய்கையில், நீதியற்ற இராஜனுடைய தோஷத்தினால் அலைகின்ற குலமகளிர்கள்போலப் பசுக்கள் அச்சம்கொண்டு நடுங்கின; போரில் அடிபட்ட குதிரைகள்போல மான்களும் பயந்தோடின; நல்வினை தீர்ந்த விண்மீன்கள்போலப் பறவைகளும் தரையில் வீழ்ந்தன; மஹாராஜர் மறுபடியும் உற்சாகத்தினால் சௌரியம் வளர்ந்து பெருங்காற்றினால் மேலெழுந்த திரைகளையுடைய பெருங்கடல்போலவும், வானமெங்கும் நிறைந்த நீருண்ட கொண்டல்போலவும் கர்ஜ்ஜனைசெய்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினான்காவது சருக்கம்

முற்றிற்று.

பதினைந்தாவது சருக்கம்.

வாலி மஹாராஜர் தொனியைக்கேட்டு தான் சினங்கொண்டு புறப்படுகையில், தன்னைத் தடுத்துப் பலவிதமாக இதமுரைத்த தாரையை நிராகரித்துப் புறப்பட்டது.

இவ்வண்ணம் மஹாராஜர் செய்த வீரவாதத்தை அந்தப்புரத்தில் தாரை முதலிய பெண்களுடன் கூடியிருந்த வாலிகேட்டு உடனே காமமும் மதமும் தணிந்து பொறுமைகொண்டு சினமூண்டு கேதுவினால் பிடிக்கப்பட்ட சூரியன்போல ஒளிகுன்றி, சினத்தினால் எழுந்தெரிகின்ற தீபோல ஜொலித்து, யானையினால் கலக்கி வேருடன் களைந்த தாமரைபொருந்திய பெருமடுப்போலக் கலங்கி விரைவாக எழுந்து அடிவைப்புக்களினால் தரையை பிளப்பவன்போலப் புறப்படுகையில், தாரை கண்டு அச்சமும் நடுக்கமும்கொண்டு அன்பினால் தழுவிக்கொண்டு அவனை நோக்கி, கேளீர் என் பிராணநாயகரே! ஆற்றுவெள்ளம்போல மேலெழுந்த இச்சினத்தை அணிந்த மாலையைப்போலக் காலையில் துயிலுணர்ந்தபின் போக்கியருள்க; இரவில் போர் செயற்க; இந்தச் சுக்கிரீவனுடன் பொழுது விடிந்த பின்பு,

போர் செய்க; இதனால் பகையாளிக்கு ஏற்றமும், தேவர்க்கு ஒரு தாழ்வுமில்லை; இப்பொழுது ஆராயாமல் தேவர் விரைவாகச்செல்வது எனக்குத் தகுமெனத்தோற்றாது; இவ்வண்ணம் யான் தடுத்துரைப்பதற்குக் காரணத்தையும் கூறுகின்றேன் கேளீர்; அந்தச் சுக்கரீவன் இன்றையதினமே வந்து உம்மைப் போருக்கழைத்து உம்முடன் போர்செய்து உம்மால் சிதற அடித்து வெருட்டப்பட்டு ஓடிவிட்டனனல்லனோ? அவன் மறுபடியும் இப்பொழுதே வந்து உம்மைப் போருக்கழைப்பதென்பது, சந்தேகிப்பதற்கு இடமாகின்றது; அவனுடைய கர்ஜ்ஜனையினால் மதமும், செருக்கும், மன உறுதியும், ஆடம்பரமும், மிக விளங்குகின்றன; இதற்குச் சிறந்த காரணமிருக்கவேண்டும்; இவன் இப்பொழுது சிறந்த சகாயத்துடன் வந்தனனேயன்றி, சகாயமின்றி வந்தானென்று நான் நம்புகின்றிலேன்; அதினால்தான் அவன் இவ்வண்ணம் கர்ஜ்ஜனைசெய்கின்றான். சுக்கிரீவன் இயல்பாகவே திறமையுடையவனும், புத்தியுடையவனுமாதலின், அவன் நன்கு பரீக்ஷை செய்யாமல் அற்பனைத் துணையாகக்கொண்டு இங்கு வரமாட்டான்; அன்றியிலே குமாரனை அங்கதன் ஒருசங்கதி கேள்வியுற்று என்னுடன் சொல்லியிருக்கின்றான்; அதை உரைசெய்வேன் கேளீர்; அங்கதன் காடெங்கும் திரிகையில், அன்புள்ள சாரர்கள் அவனைக்கண்டு திருஅயோத்திக்கு அரசாயிருந்த தசரதசக்கரவர்த்தியாருக்குத்திருக்குமாரர்களும், சௌரியமுடையவர்களும், போரில் பிறரால் வெல்லவொண்ணாதவர்களும், இக்ஷுவாகு குலத்தில் பிறந்தவர்களும், ஸ்ரீராமலக்ஷ்மணர்களென்னும் திருநாமங்களுடையவர்களுமாகி இரண்டு குமாரர்கள் சுக்கிரீவனுடன் நட்புக்கொண்டு அவனுக்குப்பிரியம்செய்வதன்பொருட்டு வந்திருக்கின்றவர்களென்று உரைத்தனர்களென அங்கதன்வந்து சொன்னான். ஆதலின், உமது தம்பிக்கு துணையாகவந்த அந்த ஸ்ரீராமன் போரில் கொடுமைகொண்டு பிறரை வெல்லுந்திறமையுற்று ஊழிகாலத்தீபோல ஜொலிப்பவரும், நல்லோர்களுடைய தாபத்தைத்தீர்க்கத்தக்க தண்மைகொண்ட விருக்ஷம்போன்றவரும், துன்புற்றுத்தஞ்சமென அடைந்தவர்களுக்குச் சிறந்த தஞ்சமாகியவரும், கோபவர்களுக்கு புகலிடமாகியவரும், புகழுக்குறைவிடமும், ஞானசொரூபியும், ஞானமுடையவரும், பிதிர்வாக்கியபரிபாலனம் செய்பவரும், பற்பல தாதுக்களுக்கு இமயமலைபோலப் பற்பல நற்குணங்களுக்குப் புதையலிடமாகியவரும் ஆகின்றனர்; ஆதலின், மகாத்துமாவும், வெல்லவொண்ணாதவரும், போரில் அளவிடத்தகாத தோள்வலியுற்றவருமாகிய அந்த ஸ்ரீராமனுடன் நீர் பகைகொள்வது தகுதியற்றது; ஆதலின், யான் ஒருவாக்கியம் உரைசெய்கின்றேன்; இகழாமலும், சினமுறாமலும் கேட்டு அவ்வண்ணமே செய்தருள்க; இப்பொழுது சுக்கிரீவனுடன் போர்செய்யாமல் அன்புடன் அழைப்பித்து இளவரசுப்பட்டம் கட்டுவித்தருள்க; சிறந்த பலமுடைய அவனுடன் போர்செய்வது தகாது; பகையைத் தூரத்தில் துறந்து ஸ்ரீராமனுடன் தோழமைகொண்டு தம்பியிடத்தில் அன்புகூர்ந்திருப்பது இப்பொழுது

உமக்குத்தகுமென எண்ணுகின்றேன்; சுக்கிரீவன் உமக்குத் தம்பியாதலால் அன்புசெய்யவேண்டியது தர்மமன்றோ? அவன் அங்கிருக்கினும், இங்கிருக்கினும், எவ்விதத்திலும் அவன் தம்பியேயன்றோ? சோதரனுக்கு நிகரான பந்து உலகத்தில் ஒருவனுமிலன்; ஆதலால், தானமானங்களாலே அவனுக்கு மரியாதைசெய்தருளுக; அவனும் பகைமைத்துறந்து உம்முடன் சேர்ந்து மகிழ்வான்; ஆதலின், இப்பொழுது சுக்கிரீவனுடன் நேசங்கொள்வதை விட உமக்கு வேறு உய்யும் வகையில்லை; எனக்கு இதம் செய்யவேண்டுமென்று உமக்கு இஷ்டமுள்ளதாயினும், யான் உமக்கு இதமே உரைப்பேனென்று நீர் அறிந்திருப்பீராயினும், என்னுடைய வேண்டுகோளுக்கு இரங்கி இவ்வண்ணம் செய்தருள்க; யான் உரைத்த இம்மொழி இதமெனவே நம்புக; நீர் சென்ற வழியே செல்லற்க; கோபத்தை நீக்குக; தேவேந்திரனுக்கு நிகரான பராக்கிரமத்தையுடைய கோசலராஜன் திருக்குமாரனான ஸ்ரீராமசந்திரனுடன் நட்புக்கொள்வது தகுமல்லது, பகைகொள்வது தகாது; என்று இவ்வகையாகத் தகைந்து வேண்டி இதமுரைத்தனள். வாலி அவ்வாக்கியத்தைக்கேட்டும் மரணகாலங்கிட்டினமையின், மதிகெட்டு அவ்வாக்கியத்தை நலமெனவுகந்து உடன்பட்டிலன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

பதினாறாவது சருக்கம்.

வாலி தாரைக்குச் சமாதானமுரைத்துப் புறத்தில் வந்து மஹாராஜருடன் போர்செய்து பெருமாள் எய்த பாணத்தினால் அடிபட்டுத் தரையில் விழுந்தது.

இவ்வண்ணம் வேண்டி உரைசெய்த முழுமதிபோன்ற முகத்தையுடைய தாரையை வாலி மிதட்டி அவளை நோக்கி, அடி நாயகி! என்னுடன் கடும் பகைகொண்ட இந்த சுக்கிரீவன் வீரவாதம் செய்து என்னைப் போருக்கு அழைக்கையில், யான் அச்சம்கொண்டு அடங்கி அதனை எவ்வண்ணம் பொறுத்திருப்பேன்;—

అధర్షితానాం శూరాణాం సమరేష్వనివర్తినాం
ధర్షణామర్షణం భీరు మరణాదతిరిచ్యతే.

அதர்ஷிதானாம்சூராணாம் ஸமரேஷ்வநிவர்த்திநாம்
தர்ஷணாமர்ஷணம் பீருமரணாததிரிச்யதே.

அடி அச்சமுடையவளே! பிறரால் வெல்லப்படாமலும், போர்முகத்தில் பின் செல்லாமலுமிருக்கிற சூரர்களுக்குப் பகைவனுடைய வீரவாதத்தை கேட்டுப் பொறுத்திருப்பதென்பது, மாணமுறுவதினும் சிறந்ததன்றோ? ஆதலின், போர்வதின்பொருட்டுக் கூவுகின்ற சுக்கிரீவனுடைய கூக்குரலைக்கேட்டு யான் ஒருபொழுதும் பொறுத்திரோன்; ஸ்ரீராமர் என் விஷயத்தில் தீங்குசெய்வாரென்று நீ துன்புறற்க; தர்மமுணர்ந்தவரும், நன்றி அறிந்தவருமாகிய அவர் என்விஷயத்தில் ஏன் தீமைசெய்வார்; ஆதலின் பெண்களுடன்கூடி நீ திரும்பிச் செல்லுக; ஏன் மீளவும் பின்றொடர்ந்து வருகின்றனை; என்னிடத்தில் உனக்குள்ள அன்பும், ஆசையும், இதினால் நன்கு வெளியிடப்பட்டது; ஆதலின், நீ அச்சம் தீர்ந்து செல்லுக; யான் சுக்கிரீவனுடன் போர்ந்து அவனுடைய கொழுப்பை அடக்கி வருவேன்; அவனை உயிர்மாளக் கொலைசெய்யேன்; போரில் மரங்களாலும், குத்துகளாலும், என்னால் பீடிக்கப்பட்டு அவன் ஓடிவிடுவான்; அவன் என்னுடைய கர்வத்தையும், முயற்சியையும் பொறுத்திரான்; அடி அன்புடைய நாயகி! புத்தியினால் உதவிசெய்ததுபோதும், அன்பும் நன்கு வெளியிடப்பட்டது, என்னுடைய பிராணன்மேல் ஆணையிட்டுத் தடுக்கப்படுகின்றனை; ஆதலின், ஜயத்துடன் மீளுக; யான் போரில் அவனை வெற்றிகொண்டு மீளுவேனென்று உரைசெய்தனன். தாரை அதுகேட்டு மெதுவாக அழுதுகொண்டு வாலியைத்தழுவி வலம்செய்து மந்திரங்களினால் நலங்களை வேண்டி வாழ்த்திப் பெண்களுடன் சோகத்தினால் மயக்கம் கொண்டு அந்தப்புரம் சேர்ந்தனள். பின்பு, வாலியையும் சீறி நச்சரவம் போலப் பெருமூச்செறிந்து புறத்தில் வந்து நாற்புறங்களிலும் சுற்றிப் பார்த்துப் பொன்னின்வண்ணம்பொருந்திய சுக்கிரீவன் ஓடிவருவதைக் கண்டு ஆடையை இறுக்கிக்கட்டி முஷ்டியை மேல் எடுத்துக்கொண்டு அவனுக்கெதிராக ஓடி அவனை நோக்கி, அடா சுக்கிரீவா! என்னுடைய இந்த குத்தானது உன் பிராணனை உண்டு செல்லப்போகின்றது; என்று உரைத்துக் கையை நோக்கினன். மஹாராஜரும் அதுகேட்டுச் சினம் கொண்டு அடடா என்னுடைய இந்தக் குத்துதான் உன்னுயிரைப் பருகப் போகின்றது; என்று சொல்லிக்கொண்டிருக்கையிலே வாலியினால் குத்தப்பட்டு அருவியைப்பெருக்குகின்ற மாமலைபோலக் குருதியைப்பெருக்கிச்சினமதிகரித்து, ஆச்சாமரத்தை வேருடன்களைந்து வேகமாகச் சுழற்றி அடித்தனன். வாலியும் அதனால் அடிபட்டு வச்சிராயுதத்தினால் அடிபட்ட மாமலைபோலத்திகைத்து நின்று கடலில் மிகவும் பாரத்தையுடைய ஓடம்போல அழுந்தினன். இவ்வண்ணம் சிறந்த பலமுடையவர்களும், கருடனுக்கு நிகரான வேகமுடையவர்களும், அச்சமுறத்தக்க சரீரமுடையவர்களும், சந்திரசூரியரைப்போலக் காந்தியை யுடையவர்களுமாகிய இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் அடித்துக்கொண்டும், சமயம் பார்த்துக்கொண்டும் பொருந்தனர்கள். அப்பொழுது முறையே வாலி

பலததினல் உயர்ந்தும், மஹாராஜர் தாழ்ந்தும் ஆகுகையில், மஹாராஜர் வாலியினல் அடிபட்டு சினமதிகரித்து மரங்களினுலும், கிளைகளினுலும், மலைச்சிகரங்களினுலும், வச்சிரம்போல் கொடிய நகங்களாலும், குத்துகளாலும், முழங்கால்களாலும், கால்களினுலும், கைகளினுலும், பலமுறை வாலியைச் சிதற அடித்தனர். இவ்வண்ணம் இருவரும் ஓயாமல் விருத்திர வாசவர்கள்போலப் போர்செய்து குருதிதோய்ந்து மேகங்கள்போலக் கர்ச்சனைசெய்து அடர்கையில், மஹாராஜர் இளைத்து நாற்றிசைகளையும் அடிக்கடி நோக்கிக்கொண்டு வருந்துவதைப் பெருமாள் கடாக்ஷித்து வாலியைகொலைசெய்ய சங்கல்பித்து, நச்சரவம்போன்ற ஓர்கணையைக் கோதண்டத்தில்தொடுத்து காலாந்தகன்காலசக்கிரத்தைப்போல அக்கோதண்டத்தையிழுத்தருளுகையில்,நாணின் ஒலியினல் சிறந்த பறவைகளும், விலங்குகளும், ஊழிகாலத்தில்போல அச்சமும், மோகமும் கொண்டு ஓடின; உடனே அக்கணை பெருமாளால் எய்யப்பட்டு வச்சிரம்போல ஒலித்துப் பேரிடிபோலஜொலித்து வாலியின் மார்பில் பாய்ந்தது. உடனே மதங்கொண்ட வாலியும், அதனல் அடிபட்டு ஆசுவயுஜமாசத்தில் பூர்ணிமைதிதியில் உயர்த்திக் கட்டப்பட்ட இந்திரதுவஜம்போலச்சாய்ந்து தரையில்விழுந்து மோகமடைந்தனன். இவ்வண்ணம் புருஷோத்தமரான ஸ்ரீராமசந்திரன் ஊழிகால யமன் போன்றதும், பொன்கட்டமைந்ததும், பகைவரைக்கொல்வதுமாகிய அந்தச்சிறந்த பாணத்தைச் சிவன் முகத்துநின்றும் புகையுடன் பயின்ற தீயைப்போல விடுத்துத் திகழ்ந்தனர். அந்த இந்திரன் குமாரனுன வாலியும் அக்கணையினல் அடிபட்டுக் குருதிபடிந்து மலர்ந்த அசோகமரம் தீயினல் எரிக்கப்பட்டது போலவும், இந்திரதுவசம் சாய்க்கப்பட்டதுபோலவும் தரையில் விழுந்து மூர்ச்சையடைந்து கிடந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினறுவது சருக்கம்

முற்றிற்று.

பதினேழாவது சருக்கம்.

வாலி பெருமாளை இகழ்ந்தது.

இவ்வண்ணம் பெருமாள் எய்தகணையினல் அடிபட்ட வாலி வேரில் வெட்டுண்டமரம்போலவும், கயிற்றைத்தளர்த்திய இந்திரன் துவஜம்போலவும் தரையில் விழுந்துகிடக்கையில், இரவில் சந்திரனற்ற ஆகாசம்போல அப்பூதலம் திகழ்ந்திலது; அவன் அடிபட்டுத் தரையில் விழுந்திருக்கையி

லும், இந்திரனுலடிக்கப்பட்ட வயிரமிழைத்த பொன்னணிமாலையின் மகிமையினலே அவனுடைய காந்தியும் அழிந்திலது; பலபராக்கிரமங்களும் குறைந்தில; உயிரும் மாய்ந்திலது; வீரனை அவ்வாலி அம்மாலையினலே சந்தியின் செம்மையினலே சூழப்பட்ட மேகம்போல விளங்கினமையின், அவனுடைய காந்தி அம்மாலையிலும், மெய்யிலும், ஸ்ரீராமபாணத்திலுமாக மூவகையாகப் பிரிந்து தோன்றிற்று; வாலிமிகக்கொடியனுயினும் ஸ்ரீராமனுல் விடுக்கப்பட்டபாணம் அவனுக்கு நற்கதியை உண்டுபண்ணிற்று; இவ்வண்ணம் அடிபட்டு தரையில் வீழ்ந்து தீ அடங்கிய நெருப்பு போலவும், நல்வினை தீர்ந்தவுடன் விண்ணுலகினின்றும் நழுவிவிழுந்த யயாதிபோலவும், ஊழிகாலத்தில் தரையில் வீழ்ந்த சூரியன்போலவும் திகழ்பவனும், மிகவும் சூரரான பெருமாளைக்கணிசித்துப் பார்ப்பவனும், மகேந்திர மலைபோல அசைக்கவொண்ணுதவனும், மகேந்திரன்போல வல்லவொண்ணுதவனும், பொன்மாலை அணிந்தவனும், சிங்கத்திற்கு நிகரான மார்பை உடையவனும், நீண்டுருண்ட புஜங்களை யுடையவனும், ஆகிய அந்த வாலியைப் பெருமாள் இளையபெருமாளுடன்கடாக்ஷித்து, அருகில் எழுந்தருளினர். வாலியும் மோகந்தெளிந்து பெருமாளையும் இளைய பெருமாளையும்பார்த்து, இனியதும்,கொடியதும்,தர்மமுற்றதுமாக மொழிந்திகழலுற்றனன். கேட்டருளீர் ஸ்ரீராமசந்திரரே! தேவர் தசரதச்சக்கிரவர்த்திக்குத்திருக்குமாரரும், தர்மமுடையோரென்று யாவராலும்புகழப்பட்டவரும், இனியரூபமுடையவரும், நற்குலத்தில் பிறந்தவரும், சத்துவகுணமுடையவரும், சிறந்த பல பராக்கிரமங்களை யுடையவருமாகியும் யான் பராங்முகனுகத் தம்பியுடன் போர் செய்துகொண்டிருக்கையில், தேவர் இவ்வண்ணம் கூரியகணையை மார்பில்நாட்டி என்னை வருத்துவது தர்மமா? சூரருக்குக் கருமமா? இதனுல் தேவருக்கு யாதுபயனுளது? தேவர் அருளுடையீரெனவும்,உயிர்களுக்கிதஞ்செய்பவரெனவும்,பிறரைத் துயருறச்செய்யாப் பண்புடையீரெனவும், காலமறிந்தவரெனவும், மேற்கொண்ட விருதத்தைத்தவருமல் முடிப்பவரெனவும். தேவருடைய குணங்களை யாவரும் புகழ்கின்றனர்களே!—

దమశ్శమః క్షమాధర్మో ధృతిస్సత్యం పరాక్రమః
పార్థివానాం గుణారాజన్ దణ్డశ్చాప్యపరాధిషు

தமச்சமஃக்ஷமாதர்மோ த்ருதிஸ்ஸத்யம்ப்ராக்ரமஃ
பார்த்திவாநாம்குணராஜன் தண்டச்சாப்யபராதிஷு.

அரசர்களுக்கு உட்புலனை யடக்குவதும், ஐம்புலன்களையும் வெல்லுவதும், அறிவிலர் செய்தபிழையைப்பொறுப்பதும், தருமம் தவருமலிருப்பதும், சத்தியம் தவருமையும், எதிர்த்தவர்களைப்போர்செய்து வெல்லுவ

தும், பிழைசெய்தவரைத்தண்டிப்பதும்,இயல்பாயுள்ள குணங்களல்லவோ? அக்குணங்கள் யாவும் தேவரிடத்தில் குடிகொண்டிருப்பதையும் நம்பியே யான் தாரையினால் தடைசெய்யப்பட்டும் அவளை நிராகரித்து வந்து சுக்கிரீவனுடன் போர்செய்தேன் ; தேவரை நான் காணாமலிருக்கையிலேயும், பிறருடன்போர்செய்துகொண்டுஊக்கமற்றிருக்கையிலேயும்,என்மீதுதேவர் கணையை எய்யீரென்றே எண்ணியிருந்தேனே யல்லது, இவ்வண்ணம் மனதில் கெடுமதிபூண்டும், புறத்தில் தருமவேஷங்கொண்டும், புல்லெழுந்த பாழ்ங்கிணறுபோலவும், நீறுமூடிய நெருப்புபோலவும், இவ்வண்ணம் தீமைசெய்வீரென்று நான் நினைத்திலேன் ; தேவருடைய நாட்டிலாவது நகரத்திலாவது ஒருக்காலும் யாருக்கும் தீங்குசெய்திலேன் ; தேவரையும் இகழ்ந்திலேன்; பிழையற்ற என்னைஏன் இவ்வண்ணம்கொலைசெய்தீர்; காய் கனி கிழங்குகளைப்புசித்துக் காட்டில் திரிந்துகொண்டிருக்கும் வானரனை நான் தேவரையும் எதிர்த்திலேன் ; பிறருடனும் போர்ந்துகொண்டிருந்தேன்; இத்தருணத்தில் என்னைக்கொலைசெய்தல் தகுமோ?அன்றியில் பற்பல நூல்களையும் கசடறக்கற்று, தர்மவேஷத்தையும் மேற்கொண்டு, இவ்வண்ணம் உம்மைப்போல் எவன்தான் தீச்செயல்புரிவான்; ஸ்ரீராமா! நற்குலத்தில் பிறந்து, தர்மமுடையோனெனவும் புகழ்பெற்று, கொடுமைகொண்ட நீரேன் இனியவேஷங்கொண்டு அலைகின்றீர்; இனியமொழி மொழிதல், பொருளளித்தல், அருளுடைமை, தருமம், சத்தியம், தீரம், தோள்வலி, பிழைசெய்தவரைத் தண்டித்தல் என்னும் இக்குணங்கள் அரசர்களுக்கு முக்கியமானவை அல்லவோ ? அன்றியிலே யான் காட்டில் அலைபவன் ; நீர் நாட்டில் உறைபவர் ; யான் காய்கனி உண்பவன் ; நீர் அறுசுவை உண்பவர் ; யான் வானரன்; நீர் நரர்கோமான்; இவ்வண்ணம் தேவர்க்கும் எனக்கும் ஏற்றத் தாழ்வு மிகவுமுளது ? உலகத்தில் ஒருவர்க்கொருவர் பகை நேருவதற்கு மண், பொன், பொருள்களுள் ஏதேனும் ஒன்று காரணமாகவேண்டும் ; என்னுடன் நீர் பகைகொள்வதற்கு யாதுகாரணமுளது; யான் உண்ணும் கனிகளில் உமக்குவிருப்பமுளதோ? நீதியும் அருளும் நல்வேந்தரின் தருமங்கள், நீதியின்மையும் கொடுமையும் அற்பராஜரின் தர்மம், இவ்வண்ணம் ராஜதர்மம் ஒன்றுக்கொன்று சம்பந்தமின்றி, தனித்தனி விளங்குமேயன்றி, அவர்கள் ஒவ்வொரு வேளை ஒவ்வொருவிதமாக மனம்போனபடி செய்யார்கள். தேவரோவெனில், காமத்தை முதன்மையாக வுடையவரும், சினம்பூண்டவரும், உறுதி யற்றவரும், ராஜநீதி யற்றவரும், காரணமன்றிக் கணைதொடுப்பவருமாகின்றீர் ; தேவர்க்குத் தர்மத்திலும் ஆவலிலது ; நீர் இராஜனாகியிருந்தும், நிலைகெட்டு ஐம்புலன்களினால் அலைக்கப்படுகின்றீர்; காகுத்தா! நீர் இவ்வண்ணம் நீதி தப்பி என்னை அடித்து விட்டு நாடு சேர்ந்தபின் சூரர்கள் வினவுகையில், அவர்களுக்கு யாது பதில் உரைசெய்வீர் ;—

రాజహాబ్రహ్మహాగోఘ్న శ్చోరఃప్రాణివధేరతః
నాస్తికఃపరివేత్తాచ సర్వేనిరయగామినః.
సూచకశ్చకదర్యశ్చ మిత్రఘ్నోగురుతల్పగః
లోకంపాపాత్మనామేతే గచ్ఛన్తేనాత్రసంశయః

ராஜஹாப்ரஹ்மஹாகோக்னச் சோரஃப்ராணிவதேரதஃ
நாஸ்திகஃபரிவேத்தாச ஸர்வேநிரயகாமினஃ.
ஸூசகச்சகதர்யச்ச மித்ரக்னோகுருதல்பகஃ
லோகம்பாபாத்மனமேதே கச்சந்தேநாத்ரஸம்சயஃ.

வேந்தனைக் கொலைசெய்தவனும், வேதியரைக் கொலைசெய்தவனும், பசுவைக் கொன்றவனும், பிறர் பொருளைப் பறித்தவனும், உயிர்களைக் கொலைசெய்பவனும், வேதத்தையும், தெய்வத்தையும், பெரியோர்களையும் பழிப்பவனும், தமயன் விவாஹஞ்செய்துகொள்ளாமலிருக்கையில், தான் விவாஹம் செய்துகொள்பவனும், கோளுரைப்பவனும், செல்வமிருந்தும் கொடைசெய்யாத லோபியும், மிகக் கொடிய நரகிலழுந்தி நெடுங்காலம் வருந்துவர்கள். அன்றியும், என் தோலும் உடுப்பதற்குரியதன்று; என் எலும்புகளும், மயிர்களும், ஒரு காரியத்திற்கும் உரியனவல்ல; என்னுடைய மாம்ஸமும் உண்ணத்தக்கதன்று;—

పఞ్చపఞ్చనఖాభక్ష్యా బ్రహ్మక్షత్రేణరాఘవ
శల్యకశ్వావిడోగోధా శశకూర్మశ్చపఞ్చమః

பஞ்சபஞ்சநகாபக்ஷ்யா ப்ரஹ்மக்ஷத்ரேணராகவ
சல்யகச்வாவிடோகோதா சசஃகூர்மச்சபஞ்சமஃ.

ஐந்து நகங்களையுடைய ஜந்துக்களுள் சல்யகமென்னும் சுவாவித்தென்னும் பன்றிகளும், முசல், ஆமை, உடும்பு ஆகிய இவ்வைந்து ஜந்துக்களே அரசர்கள் புசிக்கத்தக்கவைகளல்லவோ ? தர்மமுணர்ந்தோர் குரங்காகிய என்னுடைய தோல்களையும், எலும்புகளையும், தொடவும் தோடார்கள்; என் மாமிசத்தையும் புசிக்கார்கள்; இவ்வண்ணம் ஒன்றுக்கும் உபயோகமற்ற ஐந்து நகமுடைய என்னை ஏன் அடித்தீர்; தாரை யான் வருகையில் என்னைத்தடுத்துப் பலவாறுகவேண்டினள். யான் அறியாமையால் அவளை மீறி இங்கெய்தி உம்மால் அடிக்கப்பட்டேன்; கற்புடைய குலமகளிற்கு தூர்த்தனான கணவன்போல மிகச் சிறந்த இப்பார்மகளிற்கு நீர் தக்க வேந்தரல்லீர்; பிறர் அறியாவண்ணம் தீமை செய்பவரும், பிறரை வருத்தியே பிழைப்பவரும், அற்பரும், பொய்யரும், கபடமுடையவருமாகிய நீர் தசரதமஹாராஜாவினிடத்தில் எவ்வண்ணம் தோன்றினீர்; அறுக்கப்பட்ட நற்செயலென்னும் கட்டுத்தறியையுடையதும், தர்மவழி

யைக்கடந்து நடப்பதும், தர்மமென்னும் அங்குசத்தை மீறியதுமாகிய ராமன் என்னும் மதவேழத்தினுல் அனியாயமாகக் கொலேசெய்யப்பட்டேனே ? தீமை தருவதும், தகுதியற்றதும், இகழப்பட்டதுமாகிய இத்தீச்செயலேப் புரிந்து பெரியோர்களால் இகழப்படீரோ ? ஊக்கமுற்றிருந்த என்மீது வெளியிட்ட இத்தோள்வலியைப் பெண்டாட்டியைப் பறித்துக்கொண்டோடிவிட்ட பகைவர்கள்மேல் செல்லவிடக்கூடாதோ? இராஜகுமாரரே ! எனக்கெதிரில் நின்று என்னுடன் போர்செய்வீராயின், இப்பொழுதே நீர் யமதர்மராஜனைக் காணுமாறு செய்துவிட்டு இருப்பேனே ? அவ்வண்ணமன்றி, பதிகிடந்து மறைந்திருந்ததினுலன்றோ ? நான்உம்மால் மதத்தினுல் மோகங்கொண்டு மயங்கிக்கிடக்குமானிடன் மதயானையினுல்போல கொலேசெய்யப்பட்டேன்; நீர் சுக்கிரீவனைத்தேடி வந்த விஷயத்தை முன்னமே எனக்கு அறிவித்திருப்பீராகில், அன்றுதினமே பிராட்டியைத்தேடி. எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து அளித்திருப்பேன் ; இராவணன் பொருட்டன்றோ ? சுக்கிரீவனுடன் தோழமைகொண்டு என்னைக்கொலேசெய்தீர்; அச்செய்தியை என்னுடன் உரைத்திருப்பீராகில், அந்த இராவணன் கழுத்தில் கைகொடுத்து நெட்டித்தள்ளிக் கொணர்ந்தாவது, போரில் கொலேசெய்தாவது, உம்மை மகிழ்வித்திருப்பேன்; இவன் பிராட்டியைக் கடலிடையிலாவது, பாதாளத்திலாவது, விண்ணுலகிலாவது மறைத்திருந்தாலும் தேவருடைய கட்டளேயினுல் மதுகைடபாசுரர்களினுல் பாதாளத்தில் தகையப்பட்ட அசுவதரி என்னும் வேதத்தை ஸ்ரீமகாவிஷ்ணு அயகிரீவ அவதாரம் செய்து கொணர்ந்தது போல யானும் பிராட்டியாரைக் கொணர்ந்து அளித்திருப்பேன் ; சுக்கிரீவன் யான் இறந்தபின் என்னுடைய ராஜியத்தைப் பெறுவதென்பது தகுதியே?தேவர் என்னைத் தருமமின்றி இவ்வண்ணம் கொலேசெய்ததென்பது மாத்திரம் மிகவும் தகுதியற்றது; உலகினில் பிறந்தவன் இறப்பதென்பது இயல்பே ? நீர் இவ்வண்ணம் மறைந்து அடித்தது தகாதது ; இதற்குத் தக்க பதிலுளதாயின் உரைசெய்யீர் ; என்று இவ்வண்ணம் உரைசெய்து ஸ்ரீராமபாணம் மார்பில் நன்ருக நாட்டியிருக்கின்றமையின், வருந்தி வாய் உலர்ந்து பெருமாளேப்பார்த்துக்கொண்டே பேசாமலிருந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினேழாவது சருக்கம்

முற்றிற்று.

பதினெட்டாவது சருக்கம்.

பெருமாள் வாலிக்கு சமாதானம் அருளிச்செய்ததும், வாலி அபராதக்ஷாபனம் செய்துக்கொண்டதும்.

இவ்வண்ணம் இனிமையாகவும், அறம்பொருளுடையதாகவும், வாலி உரைசெய்த வாக்கியத்தைப் பெருமாள் கேட்டருளியும், ஒளியிழந்த சூரியன்போலவும், மழைபொழிந்து நீரற்ற மேகம்போலவும், எரிந்தணைந்த அக்கினிபோலவும், தரையில் வீழ்ந்திருக்கின்ற அவ்வாலியை நோக்கி, தர்மார்த்தசகிதமாக அருளிச்செய்யலுற்றனர். அடா வாலி ! அறம் பொருள் இன்பங்களையும், லோகாசாரத்தையும், நன்கறியாமல் இளமையினால் நீ நம்மை இவ்வண்ணம் ஏன் இகழ்கின்றனை ; புத்தியுடையோர்களும் ஞானத்தினாலும், வயதினாலும், மூத்தோர்களும் ஆகிய ஆசிரர்களுடன் பழகாமலும், அவர்களைக் கேளாமலும், குரங்கின் தன்மையினால் நீ நம்மை நோக்கி, இவ்வண்ணம் உரைசெய்வது தகுமா ? காடு கடல் மலைகளுடன் கூடிய இப்பார்முழுதும் இக்ஷுவாகுகுலத்தில் பிறந்த எமக்குரியதேயாதலின், இதிலுள்ள துஷ்டர்களைச் சிக்ஷிப்பதும், சிஷ்டர்களை ரக்ஷிப்பதும், நமது தொழிலேயன்றோ ? இப்பொழுது இந்த பூமியை தர்மமுணர்ந்தவனும், சத்தியம் தவறாதவனும், கபடமற்றவனும், தர்மகாமார்த்தங்களை அறிந்தவனும், நீதி தவறாதவனுமாகிய பரதன் அரசாக்ஷி செய்து வருகிறான். நீதியும், துஷ்டநிக்கிரகமும், பொய்யாமையும், தோள்வலியும், எவரிடத்தில் நிலைத்திருக்கின்றனவோ ? எவன் தேசகாலங்களை யறிந்தவனோ ? அவனே இராஜனாகக்கடவன். நாமும் மற்றும் பல இராஜர்களும் அந்த பரதன்பொருட்டு தர்மங்களைப் பாதுகாப்பதற்காகப் பார்முழுதும் திரிந்துகொண்டு தர்மங்களை வளர்த்து வருகிறோம். மிகவும் தர்மமுள்ள அந்த பரதன் பார்முழுதும் பாதுகாத்து வருகையில், எவன்தான் தர்மத்தைத்துறந்து நடப்பான் ; அந்த இக்ஷுவாகுகுலத்தில் பிறந்த நாமும் தர்மத்தை நிலைநிறுத்துவதன்பொருட்டு பரதனுடைய ஆஜ்ஞையை முன்னிட்டு தர்மத்தைத் துறந்தவர்களை விதியின்படி தண்டனைசெய்து வருகிறோம் ; நீ தர்மத்தைத்துறந்தவனும், தீச்செயலுடையவனும், காமத்தை முதன்மையாகக்கொண்டவனுமாதலின், நீ இராஜமார்க்கத்திலிருக்கின்றனையா ? நீதிதப்பியன்றோ இருக்கின்றனை ;—

జ్యేష్ఠోభ్రాతాపితాచైవ యశ్చవిద్యాంప్రయచ్ఛతి
త్రయస్తేపితరోజ్ఞేయా ధర్మేపథిహివర్తినః.
యవీయానాత్మనఃపుత్ర శ్శిష్యశ్చాపిగుణోదితః
పుత్రవత్తేత్రయశ్చిన్త్యా ధర్మశ్చేదత్రకారణం.
సూక్ష్మఃపరమదుర్జ్ఞేయ స్సతాంధర్మఃప్లవంగమ
హృదిస్థస్సర్వభూతానా మాత్మావేదశుభాశుభం.

ஜ்யேஷ்டோப்ராதாபிதாசைவ யச்சவித்யாம்ப்ரயச்சதி
த்ரயஸ்தேபிதரோஜ்ஞேயா தர்ம்யேபதிஹிவர்திநஃ.
யவீயானாத்மநஃபுத்ரச் சிஷ்யச்சாபிகுணோதிதஃ
புத்ரவத்தேத்ரயச்சிந்த்யா தர்மச்சேதத்ரகாரணம்.
ஸூக்ஷ்மஃபரமதுர்ஜ்ஞேயஸ் ஸதாந்தர்மஃப்லவங்கம
ஹ்ருதிஸ்த்தஸ்ஸர்வபூதானா மாத்மாவேதசுபாசுபம்.

'தமயன், தந்தை, நூல்களைக் கற்பிப்பவன் இவர்கள் மூன்றுபெயர்களும் பிதாவெனப்படுவார்கள்; தம்பி, மகன், சீஷன், இம்மூவரும் புத்திரர்களெனப்படுவார்கள். தர்மமென்பது மிகவும் நுட்பமாதலின், அது நன்குணர்ந்த பெரியோர்களுக்கும் அறியற்கரியதாகும்; சர்வபூதங்களுடைய சுபாசுபங்களையும் சர்வாந்தரியாமியான ஸ்ரீமந்நாராயணனே அறிகிறார்; நீ அற்பத்தனமுடையவனாய் அற்பவான்களுடன் கூடிப் பிறவிக்குருடர்களுடன் கூடின பிறவிக்குருடன்போல யாதுசெய்யவல்லை; யான் நீ கேட்டதற்கு பதில் நன்குரைப்பேன்; நீ சினத்தையே மேற்கொண்டு இவ்வண்ணம் இகழற்க; யான் உன்னைக் கொலைசெய்ததற்குக் காரணமுரைப்பேன் கேளாய்; நீ தர்மத்தைத்துறந்து மகனுக்கு நிகரான தம்பியின் மனையாளான ருமையைச்சேர்ந்து புணர்ந்து மகிழ்வதுமன்றித் தம்பியையும் வெருட்டினை; ஆதலின், தர்மத்தைத்துறந்து காமத்தையே மேற்கொண்டு தம்பி மனையாளுடன் சேர்ந்த பாவத்திற்காக உனக்கு இந்த சிக்ஷைசெய்யப்பட்டது; தர்மத்தையும் துறந்து உலகவழக்கத்தையும் மீறி மனதுபோனபடிநடப்பவனுக்குத் தண்டனைசெய்வதைவிட வேறு சிக்ஷையில்லை; யான் நற்குலத்தில் பிறந்த இராஜனாதலின், நீ செய்த இப்பிழையைப் பொறுத்திரேன்;—

ఔరసీంభగినీంవాపి భార్యాఞ్చాప్యనుజస్యయః
ప్రచరేతనరఃకామాత్తస్యదణ్డోవధస్స్మృతః.

ஔரஸீம்பகினீம்வாபி பார்யாஞ்சாப்யனுஜஸ்யயஃ
ப்ரசரேதநரஃகாமாத் தஸ்யதண்டோவதஸ்ஸ்ம்ருதஃ.

யாவனொருவன் காம அவஸ்தையினால் பெண்ணையும், தங்கையையும், தம்பி மனையாளையும் சேருவானோ ? அவனுக்குக் கொலைசெய்வதே சிக்ஷையென்று விதிக்கப்பட்டிருக்கின்றது ; இப்பொழுது பரதன் அரசனாகவும், யாங்கள் அவன் கட்டளையின்படி நடப்பவர்களாகவுமிருக்கையில், தர்மத்தைத் துறந்த உன்னை எவ்வண்ணம் உபேக்ஷைசெய்திருப்போம்; பரதன் துஷ்டர்களைச் சிக்ஷைசெய்துகொண்டு உலகத்தைப் பாதுகாத்து வருகிறான் ; யாங்களும் அவன் கட்டளையை விதியாகக் கொண்டு உன்னைப்போன்றவர்களைத் தண்டிப்பதன்பொருட்டுத் திரிந்துகொண்டிருக்கின்றோம் ; அன்றியிலே, சுக்கிரீவருக்கும் எமக்கும் லக்ஷ்மணனுக்கும் எமக்கும்போல அழியாத்தோழமைஉண்டாயிற்று; அப்பொழுது உன்னைக் கொலைசெய்து இராஜ்ஜியத்தையும், மனைவியையும், உன்னுடன் சேர்ப்பேனென்று பிரதிஜ்ஞையும் செய்துகொடுத்திருக்கிறேன் ; ஆதலின், யான் செய்த பிரதிஜ்ஞையைத் தவிர்வேனோ ? ஒருக்காலும் தவிரேன் ; ஆதலின், இது முதலாயுள்ள சிறந்த தர்மமான பல காரணங்களினால் இப்பொழுது உன்னைக் கொலைசெய்தேன் ; ஆதலின், இதனைத் தருமமெனவே அறிக ; அன்றியிலே, மகாராஜர் எனக்குத் தோழரானமையின், அவருக்குச் சத்துருவான நீ எனக்கும் சத்துருவல்லையோ ? இதனாலும் உன்னைக் கொலைசெய்தது ராஜதர்மமே யாகும் ; மனுவினால் கூறப்பட்ட இரண்டு சுலோகங்களையும், நீ கேட்டிலையோ ? அதனைக்கேட்டுணர்வாயாகில், யான் செய்தது தர்மமெனவும், உனக்குமது நற்கதி விளைப்பதெனவும், நன்கு அறிவாய் ; பாபம் செய்தவர்கள் ராஜர்களால் செய்யப்பட்ட சிக்ஷையை யடைந்து, அதனால் பாபம் தீர்ந்து, நல்வினை செய்தவர்கள்போலவே நின்மலராகி நற்கதிபெறுவார்கள் ; களவுசெய்தவர்களும் ராஜனால் சிக்ஷைசெய்யப்பட்டாலும், விடுவிக்கப்பட்டாலும், பாவத்துநின்றும் விடுபடுவார்கள் ; பாபத்திற்குத்தக்கபடி ராஜா சிக்ஷை செய்யானாகில், அந்தப் பாபத்தை இவனே அடைவான்; முற்காலையில் ஒரு பௌத்தசன்னியாசி உன்னைப்போலவே கொடிய பாபம் செய்கையில், என் முன்னோர்களாகிய மாந்தாதா இவ்வண்ணமே கொடிய சிக்ஷைசெய்திருக்கிறார் ; மற்றும் பல ராஜர்களும், இதரர்களும், உன்னைப்போல கொடிய பாபம் செய்கையில், அப்போதுள்ள நல்வேந்தர்கள் அதற்கு பிராயச்சித்தமாகக் கொடிய தண்டனை செய்தார்கள். அதனால் அப்பாவங்களும் தீர்ந்தன ; ஆகையால், நீயும் என்னால் சிக்ஷைசெய்யப்பட்டவனாகி பாவம் தீர்ந்து நற்கதிபெறுவாய் ; ஆதலின், தாபமுற்று வருந்தற்க ; அன்றியில், வேறொருகாரணத்தையும் உரைக்கின்றேன் கேளாய்; அதைக் கேட்டபின், சினமும் துயரமும் கொள்ளாய் ; நீ அறியாமையினாலும், இளமையினாலும், என்னை இகழ்ந்ததற்கு நான் சிறிதும் சினமுறுகின்றிலேன் ;—

వాగురాభిశ్చపాశైశ్చ కూటైశ్చవివిధైర్నరాః
ప్రతిచ్ఛన్నాశ్చదృశ్యాశ్చ గృహ్ణన్తిసుబహూన్మృగాన్॥
ప్రధావితాన్వావిత్రస్తాన్ విస్రబ్ధాంశ్చాపినిష్ఠితాన్
ప్రమత్తానప్రమత్తాన్ వానరామాంసార్థినోభృశం॥
విధ్యన్తివిముఖాంశ్చాపి నచదోషోత్రవిద్యతే
యాన్తిరాజర్షయశ్చాత్ర మృగయాన్ధర్మకోవిదాః॥

வாகுராபிச்சபாசைச்ச கூடைச்சவிவிதைர்நராঃ
ப்ரதிச்சன்னாச்சத்ருச்யாச்ச க்ருஹ்ணந்திஸுபகூன்ம்ருகான்.
ப்ரதாவிதான்வாவித்ரஸ்தான் விஸ்ரப்தாம்ச்சாபிநிஷ்டிதான்
ப்ரமத்தாநப்ரமத்தான்வா நராமாம்ஸார்த்திநோப்ருசம்.
வித்யந்திவிமுகான்சாபி நசதோஷோத்ரவித்யதே
யாந்திராஜர்ஷயச்சாத்ர ம்ருகயாந்தர்மகோவிதாঃ.

மனிதர்கள் மறைந்தாவது, எதிரிலாவது இருந்து வலைகளினாலும், கயிறுகளினாலும், மற்றும் பற்பல கபடச்செயல்களினாலும், பலவகை விலங்குகளையும் பிடிக்கிறார்கள். அவைகள் ஓடிக்கொண்டிருந்தாலும், அச்சமுற்றிருந்தாலும், நம்பி உட்கார்ந்திருந்தாலும், ஊக்கமுற்றிருந்தாலும், ஊக்கமற்றிருந்தாலும், யாராமல் பராக்காயிருந்தாலும், மாமிசத்திற்காகவாவது, வேடிக்கையாகவாவது, அவைகளைக் கொலை செய்கிறார்கள். இது இராஜர்களுக்குத்தருமமேயன்றிக் குற்றமாகிறதில்லை; தர்மமுணர்ந்த பற்பல ராஜரிஷிகளும், இவ்வண்ணம் வேட்டையாடி இருக்கிறார்கள். ஆகையால், யான் உன்னைக் கணையினால் அடித்தேன்; நீ என்னுடன் போர்செய்யாவிடினும், பிறருடன் போர்செய்துகொண்டிருந்தாலும், நீ குரங்கேயாதலின், உன்னை எவ்வகையிலும் கொலைசெய்தது குற்றமே ஆகாது; ராஜர்கள் பிறர்க்கரிய தர்மத்தையும், இல்வாழ்க்கையையும், இன்பத்தையும் கொடுப்பவர்களாதலின், அவர்களைப் பீடிப்பதும், இகழ்வதும், அவர் கட்டளையைத் தவிர்ப்பதும், பிரியமல்லாத மொழிகளை மொழிவதும், தகுதியற்றது; தேவர்களே இராஜர்களாகப் பூலோகத்தில் அவதாரம் செய்திருக்கிறார்களல்லரோ? இவ்வண்ணம் யான் தொல்லையாயுள்ள தருமத்தில் ஊக்கங்கொண்டு தருமப்பிரகாரம் செய்த என்னை நீ மாத்திரம் தருமத்தை யறியாமல் சினத்தையே மேற்கொண்டிவ்வண்ணம் இகழ்ந்தனையேயன்றி, வேறில்லை; என்றிவ்வண்ணம் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களை வாலி முற்றுஞ்செவியுற்று நன்காராய்ந்து பெருமாள்மீது சிறிதும் தருமக்குறைவைக்காணமல் அறியாமையினால் இவ்வண்ணம் பெருமாளை இகழ்ந்துரை செய்துவிட்

டேனேயென்று மனம் வருந்திப் பெருமாளை நோக்கிக் கைகூப்பிக் கேட்டருளீர் புருஷோத்தமரே !—

యత్త్వమాత్థనరశ్రేష్ఠ తదేవం నాత్రసంశయః
ప్రతివక్తుం ప్రకృష్టేహి నాపకృష్టస్తుశక్నుయాత్॥

யத்வமாத்தநரச்ரேஷ்ட்ட, ததேவம்நாத்ரஸம்சய:
ப்ரதிவக்தும்ப்ரக்ருஷ்டேஹி நாபக்ருஷ்டஸ்துசக்னுயாத்.

தேவர் அருளிச்செய்த வாக்கியங்கள் தேவர் அருளிச்செய்தபடி தருமங்களே யாகின்றன ; இவ்விஷயத்தில் சிறிதேனும் ஐயமிலது ; உயர்ந்தவர்களிடத்தில் தாழ்ந்தவன் தகுந்த பதிலுரைசெய்ய வல்லவனுகுவானே ? ஒருபொழுதுமாகான் ; ஆதலின், அடியேன் முன்பு, தேவர் விஷயத்தில் அறியாமையினுலே அயுக்தமாகவும், தருமமற்றதாகவும், பிரியமல்லாததாகவும், தேவரை இகழ்ந்துரைத்தேன்; அந்த அபராதத்தையும் பொறுத்து உகந்தருள்க ; தேவர் தத்துவங்களை யுண்மையாக அறிந்தவரும், உலகங்களுக்கு இதஞ்செய்பவருமாதலின், தேவருடைய புத்தி ஒருவன் செய்த பாவங்களை யறிந்து அதற்குத்தக்கபடி சிக்ஷை செய்வதில் தெளிவுற்றிருக்கின்றது ; அருளாழியம்மானே ! இவ்வண்ணம் நற்செயல்களைத்துறந்தும், தீச்செயல்களைப் புரிந்தும் கெட்டழிந்த அடியேனுடைய அபராதங்களைப் பொறுத்தருளினேனென்று அன்புகூர்ந்து அருளிச்செய்து அடியேனுடைய அச்சத்தைத்தீர்த்து அடியேனைப் பாதுகாத்தருள்க ; சுவாமி தீனதயாளு ! நான் இறந்துவிடுகிறேனே என்று என்னைக்குறித்தும், இனிய மனைவியான தாரையைக்குறித்தும், அன்புள்ள பந்துக்களைக்குறித்தும் சோகமுற்றிலேன் ; மிக்க நற்குணமுடையவனும், பொன்னுற்செய்த தோள்வளைகளை யுடையவனுமாகிய அங்கதனைக்குறித்தே மிகவும் சோகத்தை அடைகிறேன்; அவன் என்னைக் காணுமல் பிறப்புமுதல் அருமையாக வளர்க்கப்பட்டமையின், மிகவும் சோகமடைந்து நீர்வற்றிய தடாகம்போல உலர்ந்து வருந்துவானன்றே ? அவன் இளமையுடையவனும், நூல்களைக் கற்காமையின் நிலையுறாத புத்தியுடையோனும், ஒரே புத்திரனுமாகையால், அவனைத் தேவர் பாதுகாத்து அளித்தருளல்வேண்டும் ; சுக்கிரீவனிடத்துப்போலவே அவனிடத்திலும் சரியான அருள்செய்து ரக்ஷித்தல்வேண்டும் ; தேவரோ ஒன்றைச்செய்வதற்கும், தடுப்பதற்கும், தண்டிப்பதற்கும், காப்பதற்கும் வல்லவர் ; ஸ்ரீபரதாழ்வானிடத்திலும், இளையபெருமாளிடத்திலும், சுக்கிரீவனிடத்திலும், தேவர்க்கு எவ்வளவு அருளுளதோ ? அவ்வளவு அருள் அங்கதனிடத்திலும் வைத்தருள்க ; என்மீதுள்ள பகையினுல் சுக்கிரீவன் தாரையை வருத்தாமலிருக்குமாறு பாதுகாத்தருள்க ; தேவருடைய அனுக்கிரகத்திற்குப் பாத்திரனுகித் தேவருடைய திருவுள்ளத்திற்கு இசைந்தபடி

இருப்பவர்களே அரசாக்ஷிசெய்யத்தக்கவர்களாவார்கள்; தேவரீரை எதிர்ப்பவர்கள் நெடுங்காலம் வாழார்களென்பதை அடியேன் அறிவேனாகிலும், தேவரீர் திருக்கையினால் கொலைசெய்யப்பட்டு நற்கதி பெறவேண்டுமென்று நிச்சயங்கொண்டே தாரை பலவாறாகத் தடைசெய்யினும் கேளாமல் வந்து சுக்கிரீவனுடன் போர்செய்தேன்; என்று இவ்வண்ணம் வேண்டி உரைசெய்து ஆயுள்மாளுங்காலங்கிட்டினமையின், மொழிவதற்குத் திறமையின்றி, பேசாதிருந்தனன். பெருமாளும் அப்பொழுது அவனை நோக்கிக் கேளாய் வானரர் கோமானே! நீ அங்கதன்விஷயமாகச் சோகமுறற்க; எம்மையும் தர்மமன்றிக் கொலைசெய்தோமென்று எண்ணற்க; நீயும் இறந்துவிடுகிறேனேயென்று துஞ்சற்க; உன்னுடைய பாபத்தைப்போக்கி உன்னை நற்கதி அடைவிப்பதன்பொருட்டே நாம் மஹாராஜருடன் தோழமைகொண்டு பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அவ்வண்ணம் உன்னைக் கொலைசெய்தோம்; யாவனொருவன் தக்கபடி சிக்ஷை செய்கிறானோ? யாவனொருவன் தக்கபடி சிக்ஷைசெய்யப்படுகின்றனனோ? அவ்விருவரும் நற்கதி பெறுவார்களேயன்றி, அழியார்கள்; ஆதலின், நீயும் எம்மால் சிக்ஷைசெய்யப்பட்டவனாகிப் பாவந்தீர்ந்து நல்வழிபெற்று பெருவீடு பெறுவாய்; ஆதலின், துன்பத்தையும், மோகத்தையும், அச்சத்தையும் தீர்ந்து மகிழ்க; தெய்வத்தை மீறி நடப்பதற்கு உன்னால் முடியுமோ? ஆதலின், தெய்வச்செயலினால் நேர்ந்த இவ்விஷயத்தில் சிந்தையுறற்க; அங்கதன் உன்னிடத்திற்போலவே சுக்கிரீவனிடத்திலும், என்னிடத்திலும், அன்பும் பக்தியும்கொண்டு நடப்பானென்பதில் சந்தேகமில்லை; என்று இனிமையாகவும், தர்மமாகவும் அருளிச்செய்து தேற்றியருளினர். வாலியும் பெருமாள் அருளிச்செய்த மதுரமான வாக்கியத்தைக்கேட்டுப் பெருமாளை நோக்கி, அடியார்க்கினியராகிய ஸ்ரீராமா! பாணத்தினால் அடிபட்டு மதிமயங்கித் தேவரை அடியேன் பலவகையாக இகழ்ந்துரைத்துப் பெரும்பாவி ஆயினேன்; இந்த அபராதத்திற்கு பிராயச்சித்தம் செய்ய வகையின்மையால், இதனைத் தேவர் பொறுத்து அடியேனை ரக்ஷித்தருளல்வேண்டுமென்று பலவாறாக வேண்டினன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினெட்டாவது சருக்கம் முற்றிற்று.

பதினேழாவது சருக்கத்தில் வாலிகேட்ட கேள்விகளுக்கெல்லாம் இந்த சருக்கத்தில் பெருமாளே சமாதானம் அருளிச்செய்துவிட்டமையின், நாம் கூறவேண்டுவதொன்றுமிலது; பெருமாள் வாலியை எதிரில் வந்து ஏன் கொலைசெய்திலரெனின், பெருமாளை வாலி காண்பானாகில், பெருமாள் தாடகை ஸுபாகு மாரீசன் விராதன் கபந்தன் கரதூஷணாதி ராக்ஷஸர்கள் முதலானோர்களைக் கொலைசெய்தாரென்பதையும், சிவன் வில்லை முறித்தாரென்பதையும், பரசுராமனையும் வெற்றிகொண்டாரென்பதை

பத்தொன்பதாவது சருக்கம்.

வாலி இறந்ததைக்கேட்டுத் தாரை அங்கதனுடன் அங்கோடி வந்தது.

அந்த வானரர்கோமானன வாலியும் பெருமாள் அருளிச்செய்த வாக்கியங்களைக்கேட்டுத் தகுமென உணர்ந்து மகாராஜர் எய்த கல்லுகளினாலும், மரங்களினாலும் அடிபட்டு ஸ்ரீராமபாணத்தாலும் வருந்தி உயிர் மாளும் தருணத்தில் மோஹமடைந்தனன். தாரையும் அந்தப்புறத்திலிருந்து பெருமாள்எய்த பாணத்தினால் வாலி இறந்தனனெனக்கேட்டுக் கூவென்று கதறி மெய்நடுங்கி பிள்ளையுடன் விரைவாக விழுந்து அம்மலைக் குகையினின்றும் ஓடி வந்தவள். அங்குள்ள அங்கதனுடைய பரிவாரங்களும் அங்கே வில்லும் கணையும் கையிலேந்திப் பெருமாள் எழுந்தருளியிருப்பதைக்கண்டு அச்சங்கொண்டு ஓடின; யூகத்தலைவன் இறக்கையில் அச்சங்கொண்டு ஓடுகிற மற்றுள்ள யானைகளைப்போல ஓடி வருகிற அந்த வானரர்களைத் தாரை கண்டு அவர்களை நோக்கி, சூரர்களே! வானரர் கோமானன வாலிக்கு நீங்கள் முன்செல்லத்தக்கவர்களாகியும் ஏன் அச்சம் கொண்டு ஓடுகின்றீர்கள்; மண்ணாசையினால் சுக்கிரீவன் கொடிய ராமனைக்கொண்டு கூரிய பாணங்களை எய்வித்து என்னாயகனைக் கொன்றனனோ? ஆயினும், அதனால் நீங்கள் அஞ்சுவதேனென்று வினாவினள். அவ்வானரர்களும் அவ்வாக்கியத்தைக்கேட்டுத் தாரையை நோக்கி, அம்மா ராணி! நீ மகனுடன் பிழைத்துத் திரும்பிச் செல்லீர்; அருமையான அங்கதனையும் பாதுகாத்தருளீர்; நமனே ராமனாக வந்து வாலியைக் கொலைசெய்தனன். வாலி சுக்கிரீவனால் போடப்பட்ட கல்லுகளையும், மரங்களையும் தடுத்து அடித்தும், வச்சிரம்போன்ற ராமபாணத்தினால் அடிபட்டு விழுந்தனர். இந்திரனுக்கு நிகரான நம் வேந்தர் அடிபட்டு

யுங் கேட்டிருக்கின்றமையின், அவரைக்கண்டவுடன் அவருடைய தோள்வலிக்கு அஞ்சித் தஞ்சமென வந்தடைந்துவிடுவான்; பின்பு, தஞ்சமடைந்தவர்களைக் கொலை செய்யக்கூடாமையின், வாலியைக் கொலைசெய்வேனென்று தாம் செய்த ப்ரதிஜ்ஞை பொய்யாகிவிடும்; இவ்வண்ணம் எண்ணங்கொண்டே பெருமாள் மறைந்து வாலியையடித்தருளினரேயன்றி, வேறில்லை; வாலியுடன் எதிராகநின்று போர்செய்பவர்களுடைய பலத்தில் பாதி முறையே வாலியைச் சேர்ந்து விடுகிறதென்று வாலிக்கு இந்திரன் வரமளித்துப் பொன்மாலை கொடுத்திருக்கின்றமையின், பெருமாளும் வாலிக்கெதிராகப் போர்செய்தால் பலங்குறைந்து தோல்வி யுறுவாராதலின், மறைந்தடித்தாரென்று சிலர் சொல்லுவார்கள்; அது சரியன்று; நெடுநேரம் போர்செய்தபின்பே பலங்குறையுமே யன்றி, முதன் முதலில் குறையாதாதலின், முதலிலேதானே ஒரு கணையைத்தொடுத்து அவனைக் கொலைசெய்துவிடலாகுமன்றோ? மஹாராஜரும் நெடுநேரம் போர்செய்தபின்பே பலங்குறைந்து வருந்தினரேயன்றி, முதலில் வருந்திலரோ? ஆதலின், நாம் உரைசெய்ததே சரியென வுணர்க.

விழுகையில், மற்றுள்ள சேனைகள் யாவும் அச்சங்கொண்டு நாற்றிசைகளிலும் திரிந்தலைகின்றன; ஆதலின், கோபுரவாயல்களைக் காவல்கள் வைத்து அங்கதனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்தருளீர்; வானரர்கள் எல்லோரும் அங்கதனையே வேந்தரெனப் பணிவார்கள்; உமக்கு இந்த கிஷ்கிந்தையில் இருப்பதற்கு மனமிலதாயினும், வேறு அரணுள்ள இடம் தேடிச்செல்லுவோம்; முன்பு, வாலியினால் துரத்தப்பட்ட சுக்கிரீவாதிகளிடத்துநின்றும் நமக்கு இங்கு மிகவும் பயமுளது; என்று உரைத்தனர்கள். தாரை அம்மொழிகளைக்கேட்டு அதற்கு உடன்படாமல் அவர்களை நோக்கி, அன்பர்களே! வானரர்சீமானான மிகச் சிறந்த என் கணவன் இறந்தபின்னர், எனக்கு அங்கதனாலாயினும், ராஜ்ஜியத்தினாலாயினும், என் உயிரினாலாயினும் யாது பயன்; ஸ்ரீராமபாணத்தினால் அடிபட்டு விழுந்த என் பிராணநாதனுடைய பாதமூலத்தையே போய்ச்சேருவேன்; என்று உரைத்துவிட்டுத் துன்புற்றுக் கூவி அழுதுகொண்டு தலையிலும், மார்பிலும், கைகளால் அடித்துக்கொண்டு விரைவாக ஓடிவந்து சிறந்த தானவர்களையும் அடிப்பவனும், உயர்ந்த மலைகளையும் பேர்ப்பவனும், பெருங்காற்றினால் மோதப்பட்ட மகாமேகம்போலக் கர்ஜ்ஜிப்பவனும், இந்திரனுக்கு நிகரான பராக்கிரமமுடையவனுமாகிய தன் பர்த்தா ஸ்ரீராமபாணத்தினால் அடிபட்டு மழைபொழிந்தொழிந்த மேகம்போலவும், புலியினால் வசைதப்பி அடிபட்டு விழுந்த ஆண்சிங்கம்போலவும், யாவராலும் அர்ச்சிக்கப்பட்டும், சூளிகை நாட்டியும், திண்ணை கட்டியுமழகாயுள்ள தோரணவாயில் அடங்கியிருந்த பாம்பைப் பிடிப்பதன்பொருட்டுப் பெரிய திருவடியினால் இடித்துத் தள்ளப்பட்டாற்போலவும், சாய்ந்து படுத்திருக்கக்கண்டு சிறந்த கோதண்டத்தை ஊன்றிக்கொண்டு நின்றுகொண்டெழுந்தருளியிருக்கின்ற பெருமாளையும், இளையபெருமாளையும், மகாராஜரையும் தாண்டி வாலியைக்கிட்டிச் சோகத்தினால் மனங்கலங்கித் தரையில் வீழ்ந்து மோகமடைந்து மீளவும் துயிலுணர்ந்த பெண்போலெழுந்து பிராணநாதாவென்று கூவி யமபாசத்தினால் கட்டப்பட்ட பதியை நோக்கிப் புலம்பி அழுதனள். மஹாராஜர் தாரை இவ்வண்ணம் அழுவதையும், அங்கதன் வந்து தயங்கி நிற்பதையுங்கண்டு தாமும் மிகவும் துயரமடைந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் பத்தொன்பதாவது சருக்கம்

முற்றிற்று.

இருபதாவது சருக்கம்.

தாரை புலம்பி யழுதது.

இவ்வண்ணம் பெருமாளுடைய கோதண்டத்தினின்றும் புறப்பட்டதும், ஆயுளை மாய்ப்பதுமாகிய கணை யொன்றினாலே அடிபட்டுத் தரையில் வீழ்ந்திருக்கின்ற வாலியை முழுமதிபோன்ற முகத்தையுடைய தாரை கண்ணுற்று விரைவாகக்கிட்டி யவனை யணைந்துகொண்டு மதங்கொண்ட யானை போன்றவனும், மஹேந்திரமலைக்கு நிகரானவனுமாகிய அந்த வாலியின் குணங்களை நினைந்து மிகவும் துயரங்கொண்டு கூவி யழுது புலம்பலுற்றனள். என் பிராணநாதரே! போரில் பகைவர்மேல் கொடுமையுடையோரே! மிகச் சிறந்த தோள்வலி யுடையோரே! சிறந்த வீரமுடையோரே! வானரர் கோமானே! மிகவும் சோகக்கடலில் மூழ்கினவளும், தேவரிடத்திலுள்ள நற்குணங்களையே கண்டு மகிழ்ந்துகொண்டிருந்தவளுமாகிய என்னுடன் இப்பொழுது ஏன் இனியமொழி மொழிகின்றிலீர்; வலீமுகர் சீமானே! எழுந்திருந்தருள்க; சிறந்த பஞ்சணைமெத்தையில் படுத்தருள்க; தேவர்போன்ற சிறந்த வேந்தர்கள் இவ்வண்ணம் தரையில் துகள்படியப் படுத்திருப்பார்களோ? தேவர்க்கு என்னை விட இப்பார்மடந்தையே மனத்துக்கினிய மனையாள்போலும், இப்பொழ்து உயிர்மாய்ந்தும், என்னைத்துறந்து இப்பார்மகளை யங்கங்களினால் தழுவிக்கொண்டு படுத்திருக்கின்றீரல்லீரோ? மிகவும் வீரராகிய என் பிராணநாதரே! தேவர் நல்வினையினாலே விண்ணுலகினில் இந்தக் கிஷ்கிந்தைபோன்ற சிறந்த மற்றொருபட்டணத்தைப் படைத்திருக்கின்றீர் போலும், ஆதலாலேதான் மிகவும் இனிய இந்தக் கிஷ்கிந்தையைத் துறந்து விட்டீர்; எந்தெந்த இடங்களில் தேன்பொழியும் பூஞ்சோலைகளில் எங்களுடன் கூடிக் குலாவி இன்புற்றீரோ? அந்தந்த இடங்களுக்கெல்லாம் தேவரால் அழிவு நேர்ந்தது; தேவர் இவ்வண்ணம் ஆயுள்மாண்டழிந்தமையின், யான் ஆசையும், ஆனந்தமும் குன்றிச் சோகக்கடலில் மூழ்கினேனன்றோ? என்னுடைய இந்த இதயம் கல்லினும் கடினமானது போலும், என் பிராணனாதனான தேவர் ஆயுள்மாண்டிருக்கையிலும், இந்த இதயம் ஆயிரஞ்சிதறுண்டழிந்திலதன்றோ?—

வானரர் கோமானே! தேவர் முன்னே மஹாராஜருடைய பத்தினியான ருமையையும் அபகரித்துக்கொண்டீர்; அந்த மஹாராஜனையும் வெருட்டினீர்; அந்தத் தீச்செயலின்பலம் இப்போழ்து தேவரால் அடையப்பட்டது; தேவருக்கு நன்மையையே கோருகின்ற என்னையும் அறியாமையாலும், மோகத்தினாலும் இகழ்ந்து நிராகரித்தீர்; யான் தேவருக்கு இதத்தைக் கோரியே இப்போழ்து போர் செயற்க என்று தகைந்தேன்;

இனியரூபயௌவனங்களினாலும், காமநூல் பயிற்சியாலும் செருக்குற்ற தெய்வப்பொதுமடந்தையர்களைச்சேர்ந்து மகிழ்வீர்போலும், இக்காலம் தேவருடைய ஆயுளை மாய்க்குங்காலந்தான்போலும், இல்லாவிடின் இந்த ஸுக்கிரீவனுக்கு வசமாகி இப்படி யழிந்திறப்பீரோ ? இதுவரையிலும் யான் தேவராலே சிறிதுந் துன்பமின்றி வளர்க்கப்பட்டமையின், இனி கைம்பெண்ணாகி காதனின்றித் துன்பக்கடலில் மூழ்கி வாழ்நாளை எவ்வண்ணம் போக்குவேன் ; இவ்வாறு தேவரும் வானேறிச் சிற்றப்பனான சுக்கிரீவனும் பகைகொண்டு சினமுற்றிருக்கையில், துயரமென்பதையே அறியாமல் இதுவரையிலும் வளர்த்துச் சீராட்டப்பட்ட அங்கதன் இனி எப்பாடு படுவானோ ? அறிகின்றிலேன் ; அந்தோ ? என்னுடைய பிரியமுள்ள பர்த்தாவே ! தேவர் மீளாப் பிரயாணம் புறப்பட்டமையின், தேவருடைய இந்தப் பெறலரும் புதல்வனைக் கண்குளிரக்கண்டு தழுவி யுச்சிமோந்து இதமுரைத்துத் தேற்றி யருள்க ; இந்த ஸ்ரீராமன் தேவரையும் கொலைசெய்தமையின், யாவரும் வியப்புறத்தக்கவனாயினர் ; சுக்கிரீவன் பொருட்டுச் செய்த பிரதிஜ்ஞையையுந் தீர்த்துக்கொண்டனர். என்றிவ்வண்ணம் பதியை நோக்கிப் புலம்பி யங்கதனை நோக்கி, அடா என் கண்மணியே ! தந்தையைக் கண்ணாரக்காணாய் ; இனி நீ தந்தையைக்காண்பதரிதாகும் ; என்று புலம்பி மஹாராஜனையும் நோக்கி, மைத்துனரே ! நீரினி மனங்குளிர்க ; ருமையையும் பெற்று மகிழ்க ; இனி யச்சந்தீர்ந்தரசாக்ஷி செய்க ; உம்முடைய அண்ணனார் வானேறிவிட்டனரல்லரோ ? என்று புலம்பி மறுபடியும் பர்த்தாவை நோக்கி, என்னுயிர்க்காவலரே ! யானிவ்வண்ணம் புலம்பி யழுகையிலும் என்னுடன் மாற்றமுரைக்கின்றிலீரோ ; தேவருடைய மனைவியர்கள் யாவரும் இங்குவந்து புலம்புகின்றனர்கள் கண்டருள்க; என்றிவ்வண்ணம் தாரை புலம்பிய புலம்பலைக்கேட்டு மற்றுள்ள வாலியின் மனைவியர்களும் அங்கதனைத் தழுவிக்கொண்டு கூவென்றுகூவியழுதனர்கள். மீளவும் தாரை வாலியை நோக்கி, என் பிராணநாதரே ! தேவருக்கு மிகவும் இனியனான இந்த அங்கதகுமாரனை விட்டு விட்டு இவ்வண்ணம் நெடுந்தூரம் மீளாமல் செல்லல் தகுமோ? யானாயினும், அங்கதனாயினும், தேவர் விஷயத்தில் யாதேனும் பிழை செய்தேமோ ? ஏன் இவ்வண்ணம் எம்மைத் துறந்து செல்லுகின்றீர் ; ஒருக்கால் யான் அறியாமல் பிழைசெய்திருப்பேனாயினும், அதனைப் பொறுத்தருள்க; தேவர் திருவடியிணையைத் தலைவணங்கித்தொழுவேன்; என்றிவ்வண்ணம் மறுபடியும் சக்களத்திகளுடன் கூடிப் புலம்பி வாலியின் சமீபத்திலேதானே பிராயோபவேசம்பண்ணி இறப்பேனென நிச்சயங் கொண்டனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபதாவது சருக்கம்
முற்றிற்று.

இருபத்தொன்றுவது சருக்கம்.

பிராயோபவேசஞ்செய்த தாரையைச் சிறியதிருவடி இனியமொழிகளினாலே தேற்றியது.

தாரை இவ்வண்ணம் உறுதிகொண்டு விண்ணினின்றும் நழுவி விழ்ந்த விண்மீன்போலத் தரையில்வீழ்ந்து படுத்திருக்கையில், சிறிய திருவடி கண்டு அருகில் வந்து அவளை நோக்கிக் கேளீர் அம்மா !—

గుణదోషకృతంజన్తు స్స్వకర్మఫలహేతుకం
అవ్యగ్రస్తదవాప్నోతి సర్వంప్రేత్యశుభాశుభం॥
శోచ్యాశోచసికంశోచ్యం దీనందీనానుకంపసే
కస్యకోవానుశోచ్యోస్తి దేహేస్మిన్బుద్బుదోపమే॥

குணதோஷக்ருதஞ்சந்துஸ் ஸ்வகர்மபலஹேதுகம்
அவ்யக்ரஸ்ததவாப்நோதி ஸர்வம்ப்ரேத்யசுபாசுபம்.
சோச்யாசோசஸிகம்சோச்யம் தீநந்தீநாநுகம்பஸே
கஸ்யகோவாநுசோச்யோஸ்தி தேஹேஸ்மின்புத்புதோபமே.

எல்லா உயிர்களும் அறிந்தாவது அறியாமலாவது செய்த நல்வினை தீவினைகளின்படி இம்மையிலும் வாழ்ந்து இறந்த பின்பும், அக்கருமங்களின் பலனை மறுமையிலும் அடைகிறார்கள்; ஆதலின், ஒருவன் இறப்பதும், பிறப்பதும், வாழ்வதும், தத்தம் முன்வினைகளினால் வாய்ப்பதே [illegible]. வேறொருவராலும் நேராது; ஆதலின், வாலியை ஸுக்கிரீவனே [illegible] செய்தனனென எண்ணற்க; இவர் நிமித்தமாத்திரமேயன்றி, வாலி தன் முன்வினையாலேதானே இறந்தனர். ஆதலின், அவர்பொருட்டு நீர் துன்புறுவதும் சரியன்று; நாம் எவ்வண்ணம் நற்கதியடைவோமென்று உம்மை நீரே சோகித்துக்கொள்ளவேண்டுமேயன்றி, மற்றெவனைக்குறித்து நீர் சோகமுறுகின்றீர்; கடையேறும் வழி யறியாமல் நீரே நிலைமடைய வேண்டி யிருக்கையில், திறமையற்ற நீர் மற்றெவனைக்குறித்து அருள் செய்வது; யார்க்கு எவன் சோகிக்கத்தக்கவனாகின்றனன்; ஒருவர்க்கும் ஒருவனும் இலன்; எல்லோர்க்கும் இந்த யாக்கை நீரிலெழுங்குமிழிபோல் சஞ்சலமே யன்றோ? அன்றியிலே, நீர் மக்கட்பேறு அற்றவராயின், இவ்வண்ணம் துன்புறுவது தகும்; இந்த அங்கதகுமாரனை நீர் பாதுகாத்தளித்தல் வேண்டுமென்றோ? இனி இவனுக்கு வாழ்நாள்களில் இதமுறும்படி நன்காராய்ந்து மனந்தேர்ந்தெழுந்திரீர்; எல்லாவுயிர்களும் பிறப்பதும்

இறப்பதும் பிழைப்பதும் நிலையற்றனவென்று நீர் அறிந்திலீரோ? ஆதலின், அறிந்தவர்கள் இம்மையில் நலம் விளையத்தக்க நற்செயல்களைச் செய்ய வேண்டுமேயன்றித் துயருறுவது நலமற்றது ; இந்த வாலியையே அடுத்து பதினாயிரம், லக்ஷம், கோடி, நூறுகோடி, என்று மேன்மேலுமுயர்ந்த கணக்குடையதும், கணக்கிறந்ததுமாகிய பற்பல பிரிவாயுள்ள வானரசேனைகள் பிழைத்தனர்கள். அத்தன்மையராகிய வாலி தம்முன்வினையின்படி வானேறினராதலின், அவர்பொருட்டு ஏன் துயருறுகின்றீர் ; அன்றியிலே, இவர் நியாயமாகவே அரசாக்ஷி செய்தவரும், ஸாமதானங்களிலும் பொறுமையிலும் ஆவலுடையவருமாதலின், நல்வினையினர் பெறும் பொன்னாடு சேர்ந்து மகிழ்வார் ; ஆதலினால், இவர்பொருட்டுத் துயருறற்க; இங்குள்ள வானரசேனைகளும், இந்த அங்கதகுமாரனும், இந்த கிஷ்கிந்தாராஜ்ஜியமும், உம்முடைய அதீனமேயாகும் ; ஆதலின், இந்த சோகத்தையும், ஸந்தாபத்தையும் துறந்து மகிழ்க ; உம்மால் கட்டளையிடப்பட்டு இந்த அங்கத குமாரரும் அரசாக்ஷிசெய்யக்கடவர் ; உலகினில் யாவரும் மக்கட்பேற்றினைக் கோருவது தாமிறந்தபின்னர், தமக்குத் தருப்பணம் முதலானவை செய்வதன்பொருட்டே யன்றோ ? இப்போது செய்யவேண்டிய காரியமும், உம்முடைய கணவனுக்குச் செய்யவேண்டிய சரமகைங்கரியமே யன்றோ ? ஆதலின், இப்பொழுது வேந்தர்பொருட்டுச் செய்யவேண்டும் கருமங்களை அங்கதகுமாரனைக்கொண்டு செய்விக்கக்கடவீர் ; இக்காலத்திற்கு இதுவே தகுமன்றி, இவ்வண்ணந் துன்புற்று வருந்துவது தகாது ; வானரர் கோமானான வாலிக்கு தஹனஸம்ஸ்காரஞ் செய்வித்துப் பின்பு, அங்கத குமாரனுக்கும் அபிஷேகஞ்செய்விக்கக்கடவீர். பின்பு, சிங்காஸனத்தில் வீற்றிருக்கும் குமாரனைக்கண்ணுற்றுச் சோகந்தணிந்து மகிழ்வீர் ; என்றிவ்வண்ணம் இனியமொழிகளை மொழிந்து தாரையைத்தேற்றினர். தாரையதுகேட்டும் பர்த்தாவின் சோகத்தினாலே மிகவும் வருந்தி எதிரில் நின்ற சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் மாருதி ! அங்கதன்போன்ற ஆயிரம் பிள்ளைகளைக் காண்பதைவிட வானரர் சீமானான என்னாயகர் திருமேனியைத் தழுவி மகிழ்ந்திருப்பதே மிகச் சிறந்தது ; அன்றியிலே, இப்பொழுது என் பர்த்தாவுக்கு ஸம்ஸ்காரம் செய்விப்பதற்காவது, அங்கதனுக்கு அபிஷேகஞ்செய்விப்பதற்காவது, யான் உரியளல்லேன் ; அங்கதனுக்குச் சிற்றப்பனாகிய மஹாராஜரே ! இனி நடக்கவேண்டிய காரியங்களெல்லாவற்றிற்கும் நியாமகர் ; அங்கதனைக்குறித்து நீர் இவ்வண்ணம் எண்ணற்க ; தந்தையற்ற மகனுக்குச் சிற்றப்பனே பந்துவாகுவானல்லது,

தாய் பந்துவாவாள்; எனக்கு என் கணவனைச்சேர்ந்து செல்வதைவிட இம்மையிலாவது, மறுமையிலாவது, நலந்தருவது வேறொன்றுமில்லை; ஆதலின், பகைவருடன் போர்செய்திறந்த என் பிராணநாதர் படுத்திருக்கின்ற இவ்விடத்திலேதானே படுத்திறப்பது எனக்கு மிகவுந் தகுந்தது; என்று மொழிந்து வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்திரண்டாவது சருக்கம்.

வாலி மூர்ச்சைதெளிந்து மஹாராஜர் அங்கதன் இவர்களுடன் மேலே நடக்கவேண்டிய விதத்தை யுரைசெய்து அவ்வண்ணமே செய்யும்படி வேண்டியது.

பின்பு, வாலி மூர்ச்சைதெளிந்து அங்கதகுமாரனுக்கெதிராகத் தனக்கெதிரில் நிற்கின்ற மஹாராஜனை முதன் முதல் பார்த்து அவனை நோக்கிக் கேளடா தம்பி! யான் தீமையை விளைக்கத்தக்க தீவினையினாலே மதிமயங்கிச் செருக்குற்று உன்னுடைய பாரியையையும் அபகரித்துக்கொண்டு உன்னையும் வெருட்டினேன்; ஆதலின், அப்பகையை என்மேல்கொண்டு என்னைத் தீயோனென்று எண்ணி இகழற்க; தலைவிதி யாவரையும் தான் செல்லும் வழியிலேதானே பற்றி இழுக்கின்றதன்றோ? உனக்கும் எனக்கும் ஒரே காலத்தில் கூடி இன்புறும்படி ஸ்ரீமந்நாராயணன் ஸங்கற்பித்திலனென்று எண்ணுகின்றேன்; அடா சுக்கிரீவா! ஆகையாலேதான் எனக்கு அவ்வண்ணம் மதிமயங்கித் தீச்செயல் புரிந்தேன்; தலைவிதியைத் தவிர்ப்பது ஒருவராலும் முடியாதன்றோ? இனி நீ தாமஸஞ்செய்யாமல் இப்பொழுதே அபிஷேகம்பூண்டு இந்த வானரர்களெல்லோர்க்கும் ராஜனாகி யரசாட்சி செய்க; யான் இப்பொழுதே யமதர்மராஜன் பட்டணம்போகின்றேனென்றெண்ணுக; இப்பொழுதே உயிரையும், வாலி யொருவராலும் கொலை செய்யப்படானென்னும் புகழையுந்துறந்து செல்லுகின்றேன்; இக்காலையிலே யான் சொன்னவண்ணம் செய்வதென்பது அருமை; ஆயினும், என்மீது அன்புவைத்து இவ்வண்ணமே செய்யக்கடவை. என்னருமைக் குழந்தையான இந்த அங்கதன் இன்புறுவதற்கே உரியவனும், இதுகாறும் துன்பமென்பதை யறியாதவனும், இளமை யுடையோனும், நல்ல[illegible]

பெரியோனுமாகியும், இப்போழ்து துன்புற்றுத் தரையில் வீழ்ந்து வருந்து கின்றனன் பாராய்; இந்த என்னுயிரினும் பிரியமுள்ள இம்மகனை இனி என்னை நினைந்து வருந்தாவண்ணம் உன்மகனாக எண்ணிப் பாதுகாத்தளிக் கக்கடவை. இனி நீயே இவனுக்கு வேண்டியவைகளை யளிப்பவனும், பாதுகாப்பவனும், அச்சம்நேருங்கால் அச்சத்தைத்தீர்ப்பவனுமாகின்றனை; யானிறந்தபின், நீ தவிர வேறொருத்தருமிலர் அன்றோ? அன்றியிலே, தாராகுமாரனான இந்த அங்கதன் உனக்கு நிகரான பல பராக்கிரமமுடை யோனாதலின், அரக்கர்களுடன் போர்செய்யுங்காலையில் முன்னின்று போர் செய்வான்; யௌவனமுடைய இம்மைந்தன் போர்க்களத்தில் என் மக னென்பதற்குத் தக்கபடியே பற்பல செயல்களையும் செய்வான்; இந்த ஸுஷேணன் மகளாகிய தாரையும் மேலே விளையும் நன்மை தீமைகளை யாராய்ந்தறிவதில் மிகவும் நுட்பமான நன்மதி யுடையவளாதலின், இவள் எந்தச்செயலை நன்கென்று மொழிவளோ? அச்செயலை ஐயமுறாமல் விரை வாகச்செய்க; எதனைத் தீதென்று விலக்குகின்றனளோ? அச்செயலை யொ ருகாலையிலுஞ்செய்யற்க; இவள் ஆராய்ந்து தேர்ந்த விஷயம் ஒருக்காலும் மாறுபட்டதில்லை; சக்கரவர்த்தித்திருமகனாருடைய காரியங்களையும், தடை யின்றி விரைவாகச்செய்க; நீ செய்யாயாகில், பாவமும் சேரும்; பெரு மாளுஞ் சீறி யுனக்குத் தீமை செய்தருள்வார்; யான் கழுத்திலணிந்திருக் கின்ற இந்தப் பொன்மலர்மாலையை யான் இறப்பதன்முன்னமே கழற்றி யுன்கழுத்திலணிந்துகொள்க; யானிறந்தபின்னர், இதிலுள்ள சிறந்த திவ்விய காந்தி யழிந்துவிடுமென்று மொழிந்தனன். மஹாராஜரும் தமை யன் இவ்வண்ணமுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு அவன்மீதுள்ள சினந் தணிந்து மகிழ்வுகுன்றிச் சோகம் அதிகரித்து ராகுவினால் பிடிக்கப்பட்ட முழுமதிபோல் ஒளியிழந்து சாந்தியடைந்து அம்மொழிகளையெல்லாம் நல மெனவே உடன்பட்டு வாலியின் அநுமதியின்படி அந்தப் பொன்மலர் மாலையை வாங்கி யணிந்து கொண்டனர். வாலியும் மாலையை யளித்த பின்பு, பொன்னாட்டுக்குப் புறப்படச் சித்தமாகி எதிரில் தேங்கி நிற்கின்ற அங்கதனை நோக்கி, அடா என்னரும்புதல்வா! காலதேசங்களை யறிந்து இன்பமுறின் மகிழாமலும், துன்பமுறின் வருந்தாமலும், இரண்டினையும் பொறுத்து உன் சிற்றப்பனுடைய கட்டளையின்படி நடந்துகொள்ளக் கடவை. நீ எவ்வண்ணம் இதுவரையில் என்னாலே எப்படியிருக்கினும் நிரந்தரம் பாதுகாத்தளிக்கப்பட்டு இன்புற்றனையோ? அவ்வண்ணம் ஸுக் கிரீவன் நீ எப்படியிருக்கினும் உன்னை நன்குமதியான்; ஆதலின், இவ னுடைய மதப்படியிருந்து இவன் மகிழும்படி நடந்துகொள்வாயாகில், இவனும் உன்மீதன்புசெய்து அளிப்பான்; ஆதலின், இந்த சுக்கிரீவ னுடைய பகைவர்களுடனாவது, அவரைச் சேர்ந்தவர்களுடனாவது தோழ மை கொள்ளற்க; எப்பொழுதும் இவனுடைய இதத்தையே கோரிக் கொண்டு இவனுக்காட்பட்டிருக்கக்கடவை.

నచాతిప్రణయః కార్యః కర్తవ్యోప్రణయశ్చతే
ఉభయంహిమహాన్దోషస్తస్మాదన్తరదృగ్భవేత్॥

நசாதிப்ரணய꞉கார்ய꞉ கர்தவ்யோப்ரணயச்சதே
உபயம்ஹிமஹான்தோஷஸ்த ஸ்மாதந்தரத்ருக்பவேத்.

யாருடனும் மிகவும் நெருங்கியு மிணங்கற்க; இணங்காமலும் தனித்து நில்லற்க; இவ்விரண்டும் மிக்க தீமைக்கிடமாகும்; ஆதலின், யாவருடனும் தக்கபடி நட்புக்கொண்டு வாழ்ந்து மகிழக; என்று மொழிந்து கண்களை மெரளவிழித்துக் கணையினுல் வேதனையுற்று நன்குவிழித்து பயங்கரமான பார்வைகளினுலே பார்த்து மேலெழுந்த உயிரையுடையனுகி யிறந்தனன். பின்பு, தாரை முதலிய வானரமாதாகளும், வானரர் படைத்தலைவர்களும் கூவென்று கூவி ஐயையோ இப்பொழுது கிஷ்கிந்தை பாழாயிற்றே? தோட்டங்களும், மலைகளும், காடுகளும் அழிந்தன; வானரர்களும் ஒளியிழந்தவர்களாயினர்கள்; எந்த மஹாவீரருக்கு அஞ்சிக் காடுகளும் எக்காலையிலும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்தனவோ? அவர்போல் இனி யாவன் இவ்வண்ணம் செய்வான்; எந்த மஹானுபாவர் கோலபனென்னும் கந்தர்வனுடன் பதினைந்துவருஷம் ஓயாமல் பொர்செய்து, இரவென்னும் பகலென்னும் வேற்றுமையின்றியே போர்ந்து பதினுறுவது வருஷத்தில் அவனை யடித்து வெற்றிகொண்டு நம்மெல்லோரையும் மகிழ்வித்தனரோ? அத்தன்மையரான தனிவீரராகிய இவர் எவ்வண்ணங் கொலைசெய்யப்பட்டனரந்தோ? என்றிவ்வண்ணம் புலம்பி யழுது சிங்கத்தையுடைய பெருங்காட்டில் பெருங்காளை இறந்துவிடுகையில், அதனைச் சேர்ந்த பசுக்கள்போல வருந்தினர்களே யன்றிச் சிறிதும் இன்புற்றிலர்கள்; அப்பொழுது தாரையும் பதி இவ்வண்ணம் இறந்ததைக்கண்டு வெட்டுண்டு சாய்ந்த மரத்தின்மேல் படர்ந்திருந்த வல்லிபோலச்சாய்ந்து வாலியைத் தழுவிக்கொண்டு சோகஸாகரத்தில் மூழ்கி வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்திரண்டாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்துமூன்றுவது சருக்கம்.

தாரையின் புலம்பல்.

அநந்தரம் தாரை வானரர் கோமானுன வாலியின் முகத்தை மோந்து இந்த அவ்வாலியைக்குறித்துப் புலம்பலுற்றனள். அந்தோ? என்னுருயிர்க்

காவலரே ! என்னுடைய மொழிகளைக்கேளாமல் ஏன் இவ்வண்ணந் தரையில் படுத்திருக்கின்றீர் ; இப்பார்மகள் தேவர்க்கு என்னினும் பிரியமுடையாள்போலும், என்னுடன் பேசாமல் இவளையே தழுவிப் படுத்திருக்கின்றீரல்லீரோ? அந்தோ தெய்வம் இப்பொழுது சுக்கிரீவனுக்கு வசமாகியதோ? இப்போது ஸுக்கிரீவனேயல்லனோ வீரமுடையவனாயினன் ; ரிக்ஷவானரத் தலைவர்களெல்லோரும் தேவரையே தொழுதுகொண்டிருந்தனரோ ? அவர்களெல்லோரும் இங்கே கூடிப் புலம்புகின்றனர்கள் ; அங்கதனும் வருந்துகின்றனன் ; இவர்களின் புலம்பலையும். என்னுடைய இம்மொழிகளையும் கேட்டும் ஏன் மறுமொழி மொழிகின்றிலீர் ; எந்த இடத்தில் பற்பல பகைவீரர்களும் தேவரால் கொலைசெய்யப்பட்டுப் படுத்தனர்களோ ? அவ்விடத்திலேதானே தேவர் இப்பொழுது ஆயுள்மாண்டு படுத்திருக்கின்றீரந்தோ ? நற்குலத்திற்பிறந்தவரும், கசடற்ற தோள்வலி யுடையவருமாகிய என் பிராணநாதரே ! என்னை அநாதையாக விட்டு விட்டு மீளாமல் சென்றீரய்யோ ? உலகினில் ஒருவரும் சூரன்பொருட்டுக் கன்னிகையை விவாஹஞ்செய்து கொடுக்கக்கடவரல்லர் ; யான் சூரனுக்கு மாலையிட்டு மணம்புரிந்திவ்வண்ணம் கைம்பெண்ணாயினேனல்லேனோ ? எனது மானமும் அழிந்தது ; நற்கதியும், இன்பமும் தொலைந்தன ; ஆழமுடைய சோகக்கடலில் மூழ்கினேன் ; என்னுடைய இந்த இதயமும் கல்லினுங் கடினமாகியது ; இது கணவனிறக்கக்கண்டும் சிதறுண்டு பிளந்தழிந்திலதன்றோ ? பிரியமுடையோரும், பாதுகாப்பவரும், பிரியஞ்செய்பவரும், போர்க்களத்தில் தோல்வியுறாதவருமாகிய என் பர்த்தா இப்பொழுதிறந்தனரோ ? ஒரு பெண் மக்கட்பேறுடையவளாயினும், பெருஞ்செல்வமுடையாளாயினும், நற்குண நற்செய்கை யுடையவளாயினும் ஆகுக ; அவள் எப்படியிருக்கினும் கணவனற்றவளாயின், கைம்பெண்ணெனவே யன்றோ ? யாவரும் இகழ்ந்துரைசெய்வார்கள் ; வீரமுடைய வென்னாதரே ! தேவருடைய திருமேனியினின்றும் பெருகிய குருதி பாய்ந்து செவப்புற்ற இவ்விடத்திலே இந்திரகோபம்போல் செவந்த பட்டினாலியற்றிய பஞ்சணைமெத்தைபோலவே படுத்திருக்கின்றீரோ ? தேவருடைய சரீரமும் துகள்படிந்து உதிரம் தோய்ந்திருக்கின்றமையின், கைகளினாலே தழுவிக்கொள்ளத் திறமைகொள்ளுகின்றிலேன் ; இந்த சுக்கிரீவனுடைய தீராப்பகையும், அச்சமும், ஸ்ரீராமனெய்தருளிய ஓரே கணையினாலே தீர்க்கப்பட்டமையின், இவன் மனங்குளிர்ந்தனன் ; அந்தோ ? என் நாயகரே ! தேவர் இறந்திருக்கையிலும், தேவரைத்தழுவிக்கொள்வதற்கு மார்பில் நாட்டப்பட்ட இந்தக் கூரிய கணை தடைசெய்கிறது என்று புலம்பினள். அப்பொழுது சேனாபதியான நீலன் மலைக்குகையினுள் புகுந்திருந்த நச்சரவம்போன்ற அக்கணையை வாலியின் மார்பினின்றும் பேர்த்தெடுத்தனன். அப்பொழுது அக்கணை அஸ்தகிரியில் மாலைப்பொழுதில் கதிரவனது கதிர்போலத் திகழ்ந்தது ; உடனே வாலியினது தேகத்திலுள்ள காயத்தினின்றும் குருதியானது மலையினின்றும்

காவிபடிந்த சுனைநீர்போலத் தாரை தாரையாக நாற்புறத்திலும் பெருகிற்று; இவ்வண்ணம் துகள்படிந்து குருதிதோய்ந்த வாலியின் சரீரத்தைத் தாரை கண்ணீர்களினாலே துடைத் தலம்புகின்றவள்போலக் கண்ணீரைப்பெருக்கி அங்கத குமாரனை நோக்கி, அடா என் பெறலரும் புதல்வா! உன் தந்தை யின் மரணவஸ்தையைக் கண்ணுறாய்; தீராப்பகையென்னும் பாவச் செயல் இப்போழ்து முடிவுபெற்றது; பாலஸூரியன்போன்ற மேனி யுடையவரும், பொன்னுலகினை நோக்கிப் புறப்படுபவருமாகிய உன்னு டைய தந்தையைத் தலைவணங்கி வந்தனஞ்செய்யடா? என்று புலம்பி யுரை செய்தனள். அங்கதகுமாரனும் தாரை யுரைசெய்த அம்மொழியைக்கேட் டெழுந்து கைகளைக்கூப்பித் தந்தையைத் திருவடித்தொழுது அபிவாதனம் பண்ணினன். அப்பொழுது தாரையும் வாலியைக்குறித்து என் பிராண நாயகரே! முன்பு அங்கதன் பணியுங்காலைகளில் தேவர் மகிழ்ந்து நெடுங் காலம் வாழ்க; என்று மகிழ்ந்து வாழ்த்தி யருள்வீரோ? இப்போழ்து ஏன் அவ்வண்ணம் ஆசீர்வாதம் செய்கின்றிலீர்; அருளிச்செய்க; காட்டிடையில் சிங்கத்தினாலடிபட்ட காளையைச் சேர்ந்து கன்றுடன் கூடிய பசு துன்புறு வதுபோல யானும் அங்கதனுடன் தேவரைச்சேர்ந்து வருந்துகின்றேன்; என்னன்புள்ள நாயகரே! உலகினில் யாகஞ்செய்பவர் மனைவியுடன் கூடியே அவபிருதஸ்நானஞ்செய்வார்களே யன்றித் தனித்துச் செய்யார்களல்லரோ? தேவர்மாத்திரம் போர்க்களமென்னும் யாகசாலையில் போர்வதென்னும் யாகத்தைச்செய்து முடித்து ஸ்ரீராமனெய்த கணையென்னும் தீர்த்தத்தில் தருமபத்தினியான என்னைவிட்டு எவ்வண்ணம் மரணமென்னும் அவபிருத ஸ்நானஞ்செய்தீர்; போர்க்களத்தில் தேவருடைய தோள்வலியைக் கண்டு மகிழ்ந்த தேவராஜனான தேவர் தந்தையினால் அளிக்கப்பட்ட பொன்மலர் மாலையை இப்போழ்து காண்கின்றிலேனே? கதிரவன் மறைந்துவிடினும், வெய்யோனொளி மேருமலையைவிட்டகலாததுபோலவே தேவர் மரணமுற் றிருக்கினும், ராஜலக்ஷ்மி தேவருடைய திருமேனியைவிட்டகலுகின்றிலது; தேவர் போர்செய்வதன்பொருட்டுப் புறப்படுகையில், யான் வேண்டி யுரை த்த வார்த்தையும் தேவர்க்கு இதமென்று தோன்றியிலது; ஆதலின், யானும் தேவரைத் தடைசெய்யுந் திறமைகொண்டவளாகியிலேன்; தேவர் எனது வாக்கியத்தைக்கேளாமல் வந்திறந்தமையின், தேவரால் யானும் மகனுடன் வருந்திக் கைம்பெண்ணாகி யழகினையும் இழந்தேனந்தோ? என்று புலம்பி யழுது வருந்தினள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்துமூன்றாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்துநான்காவதுசருக்கம்.

இவ்வண்ணந் தாரை துன்புற்றலதைக்கண்டு மஹாராஜர் தாமும் சோகமடைந்து தீயில்வீழ்ந்திறப்பேனென்று பெருமாளை வேண்டியதும், பெருமாளதுகேட்டருளித் தாரையைத் தேற்றுவதன்பொருட்டுச் செல்லுகையில், தாரை பெருமாளை நோக்கிப் புலம்பியதும், பெருமாளும் அவளை நன்மொழிகளினல் தேற்றியருளியதும்.

இவ்வண்ணந் தாரை தீராத்துயரங்கொண்டு சோகக்கடலில் மூழ்கி வருந்துவதை மகாராஜர் கண்ணுற்றுப் பகை நீங்கித் தமையனை யறியாமையினுலே கொல்வித்தேனேயென்று மிக வருந்திக் கண்களில் சோகநீர்பெருக்கி மகிழ்வுகுன்றிப் பெருமாளெழுந்தருளியிருக்குமிடஞ்சென்று வில்லைக் கையிலேந்தி நச்சரவத்துக்கு நிகரான கணையைக் கையிற்பிடித்து கம்பீரமாய் நிற்கின்ற அந்தப் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் நலமுள்ள தோழரே! தேவர் பிரதிஜ்ஞை செய்தவண்ணம் நிறைவேற்றி யருளினீர்; தேவருடைய திறமை கைகண்ட மருந்தாயிற்று; அடியேனுக் கிப்பொழுது போகங்களிலும், உயிர் வாழ்தலிலும், மனம் வெறுப்புற்றிருக்கின்றது; இந்தத் தாரை இவ்வண்ணம் வருந்துகையிலும், அங்கதகுமாரன் இவ்வண்ணம் துயருறுகையிலும் எனக்கு அரசாக்ஷிசெய்யவேண்டுமென்று எவ்வண்ணம் மனமுளதாகும்; முன்பு, வாலி காரணமின்றி என்னை வெருட்டியோட்டினமையாலும், வன்மொழிகளை மொழிந்தமையாலும், தீராப்பகைகொண்டு மனையாளையும் அபஹரித்துக்கொண்டு மிகவும் வருத்தினமையாலும், அவனைக் கொல்லும் விஷயத்தில் உடன்பட்டுத் தேவரை வேண்டினேன்; அவனிப்போழ்திறந்தபின்னர், மிகவும் பச்சாத்தாபமடைந்து வருந்துகின்றேன்; இப்பொழுது நான் முன்பு ரிசியமூகமலையில் வாழ்ந்து கொண்டிருந்ததே நலமென்று எண்ணுகிறேன்; இப்போதிந்த வாலி இறந்தபின்பு, பொன்னுட்டிற்கரசனுகி வாழ்கைதன்னையும் நன்கு மதிக்கின்றிலேன்; மஹாத்துமாவான என்னண்ணன் என்னுடன் போர்செய்து என்னை வெருட்டுகையிலும், என்னை நோக்கி, அடா சுக்கிரீவா! யான் உன்னை யுயிர்மாயக் கொலைசெய்யேன்; நீ என்னை எதிர்த்தமையின், உனது கொழுப்பைமாத்திரம் அடக்கிவிடுகிறேனென்று என்மீது தம்பியென்னும் அன்பினுல் உரைத்தனனே? அவ்வண்ணமுரைசெய்வது பெருந்தகவுடைய அவனுக்கே தகும்; இவ்வன்ணம் அன்பின்றி யவனைக் கொல்விப்பது கொடும்பாவியான எனக்கே தகும்; அண்ணனைக் கொலைசெய்து அரசாக்ஷி செய்வதினும், பின்பு நேர்ந்த துயரத்தைப் பொறுப்பது மிகவும் கடின

மென்பதை யறிந்தாராயாமல் மண்ணாசை பெண்ணாசையையே முக்கியமாகக்கொண்டு கொடும்பாவியான என்னைப்போல மற்றெவன்தான் இவ்வண்ணம் மிகவுந்திறமையுடைய அண்ணனைக் கொலைசெய்விக்கத் துணிவு கொள்ளுவன்; என் தமையன் மஹாமகிமை யுடையோனாதலின், என்னைக் கொலைசெய்ய நினைத்திலன்; யான் கெடுமதி யுடையோனாதலின், அவனைக் கொலைசெய்விக்க மனந்துணிந்தது; என்னைக் கிளையினாலடித்து வருத்தி அடா தம்பி! நீ இனி இவ்வண்ணம் என்னை எதிர்த்துப் போர் செயற்க; என்று மதிகூறிக் கொலைசெய்யாமல் விட்டுவிட்டமையின், அவனால் தருமமும், உடன்பிறப்பும், பெருந்தகவுடைமையும், நன்கு பாதுகாக்கப்பட்டன. என்னாலோவெனில், சினமும், பகையும், காமமும், குரங்கின் தன்மையும் நன்கு விளக்கப்பட்டன. ஸ்ரீரகுநந்தன! நினைத்தற்கரியதும், துறக்கத்தக்கதும், விருப்புறற்கரியதும், காணற்கரியதுமாகிய கடும்பாவத்தை யண்ணனைக் கொலைசெய்வித்தமையின், விசுவரூபனைக் கொலைசெய்த தேவேந்திரன்போல அடைந்து வருந்துகின்றேன்; இந்திரனுடைய பாவத்தையாயினும், பூமி, ஜலம், மரங்கள், பெண்கள், இந்நால்வரும் ஏற்றுக்கொண்டு, வேழ்மண், நுரை, பிஷிண், தூமை என்னும் இந்நான்கு விதங்களாக முறையே தாங்கினர்கள். இந்த என்னுடைய கொடும்பாவத்தை எவன்தான் ஏற்றுக்கொள்வான்; தருமமின்றிக் குலத்தையழித் திவ்வண்ணம் வருத்தமுற்ற பிரஜைகள் என்மீது அச்சத்தினாலோ அருளினாலோ அன்பினாலோ செய்யும் மரியாதையையும் விரும்புகின்றிலேன்; இளவரசனாகுவதையும் விரும்பேன்; அரசனாகுவதையும் வேண்டேன்; கொடும்பாவஞ்செய்து உலகினில் பெரும்பழியையும், இகழ்வையுமடைந்து வருந்துகின்றமையின், பெருமழையில் நீர்வெள்ளம் பள்ளத்தாக்கில் பெருகி வளர்வதுபோலச் சோகமென்னும் பெருவெள்ளம் உலகினில் தாழ்ந்த என்மேல் பெருகி வளர்கின்றது. அண்ணன் கொலையென்னும் பின்புறமும் வாலுமுடையதும், ஸந்தாபமென்னும் துதிக்கை, கண், தலை, தந்தங்களை யுடையதுமாகிய பாவமென்னும் மதயானை நதியின் கரையைத்தாக்கி இடித்துச் சாய்ப்பதுபோல என்னையும் மோதி இடித்துச் சாய்க்கின்றது; ஸ்ரீரகுகுலதுரந்தரா! நெருப்பில் காய்ச்சின தங்கம் அழுக்குச்சிட்டத்தைவிட்டகலுவதுபோல என் மனதில் விவேகம் பாவத்தைச்சேராமல் அகலுகின்றது. ஸ்ரீராகவா! இந்த அங்கதகுமாரன் இவ்வண்ணம் சோகமடைந்து தவிக்கின்றமையின், இவ்வாநரர்களெல்லோரும் மரணமுறுபவர்போலத் தவிக்கின்றனர்கள். உலகினில் நற்குண நற்செய்கையுடைய மகன் பெரும்பாலுமுளனாயினும், இந்த அங்கதனுக்கு நிகரான குமாரன்மாத்திரம் எங்குமிலன்; என்னண்ணனைப் போன்ற சோதரர்களும் எங்குமிலர்; இனி அத்தன்மையனான அண்ணனுடன் வாழ்வதேது; ஸ்ரீராமசந்திரா! இந்த அங்கதன் சோகத்தினாலிறவாமல் பிழைப்பானாயின், தாரையும் பிழைப்பாள். அங்கதனின்றி

மாத்திரத் தாரை மொருக்காலும் உய்யாளென்று நம்புகின்றேன்; ஆதலின், யான் அண்ணனுடனும், அங்கதகுமாரனுடனும், மறுபிறவியிலாவது நட்பினைக்கோரித் தீயில் வீழ்ந்திறப்பேன்; இவ்வானரர் தலைவர்கள் தேவருடைய கட்டளையின்படி பிராட்டியாரைத் தேடி யளிப்பார்கள். யானிறந்துவிடினும், தேவர் எல்லாக்காரியங்களையும் நிறைவேற்றிக் கொள்ளவல்லீர்; ஆதலின், அண்ணனைக் கொல்வித்த கொடும்பாவியான யான் இறப்பதன்பொருட்டனுமதி கேட்கின்றேன்; என் வேண்டுகோளுக் கிரங்கி யனுமதி கொடுத்தருள்க; என்றிவ்வண்ணம் புலம்பி வேண்டினர். பெருமாள் அம்மொழிகளைக் கேட்டருளித் தாமும் கண்ணீர்பெருக்கி வருந்தி முகூர்த்தகாலம் சிந்தையுற்றிருந்து யாவராலும் யாது பதிலருளிச் செய்வாரென்று பார்க்கப்பட்டுப் பார்மடந்தைபோல மிகப் பொறுமையுடையவராதலினாலும், அனைத்துலகங்களையும் பாதுகாத்தளிப்பவராதலாலும், இவ்வண்ணம் இவர்கள் துயருறுவதைப்பொறாமல் இவர்களைத்தேற்றி மகிழ்விப்பதன்பொருட்டுத் திருவுளங்கொண்டு சோகக் கடலில் மூழ்கி வருந்துகின்ற தாரையைக்கடாக்ஷித்து அவளருகிலெழுந் தருளினர். உடனே அங்குள்ள வானரத்தலைவர்கள் கணவனைத்தழுவிக் கொண்டு புலம்புகின்ற அந்தத் தாரையைப் பெண்களைக்கொண்டு எழுந் திருக்கச்செய்கையில், தாரையும் பதியைவிட்டுத் திரும்பி வில்லுங் கணை யுங் கையிலேந்திக் கதிரவன்போலக் காந்திகொண்டு விளங்குகின்ற ஸ்ரீராமபத்திரனைக் கண்டு இவருடைய திவ்விய தேஜஸ்ஸினாலும், ராஜ லக்ஷணங்களினாலும், இவரே ஸ்ரீராமபத்திரனென்றறிந்து துன்புற்றுக் கொண்டே பெருமாளுடைய சமீபத்தையடைந்து சோகத்தினால் மெய் நடுங்கி வருந்திப் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் சக்கரவர்த்தித் திருக்குமாரரே!—

త్వమప్రమేయశ్చదురాసదశ్చ జితేన్ద్రియశ్చోత్తమధార్మికశ్చ
అక్షయ్యకీర్తిశ్చవిచక్షణశ్చ క్షితిక్షమావాన్ క్షతజోపమాక్షః॥

த்வமப்ரமேயச்சதுராஸதச்ச ஜிதேந்த்ரியச்சோத்தமதார்மிகச்ச
அக்ஷய்யகீர்திச்சவிசக்ஷணச்ச க்ஷிதிக்ஷமாவான்க்ஷதஜோபமாக்ஷ:.

தேவர் அளவிடத்தகாதவரும், தீவினையோர்கள் அடைவதற்கரியவரும், புலன்களுக்கு வசப்படாமல் புலன்களையே தன் வசமாக்கி யருளியவரும், தருமமுணர்ந்தோர்களுள்ளும் தருமமுடையோர்களுள்ளும் சிறப்புற்றுயர்ந்தவரும், ஒருக்காலையிலும் குறைவும் அழிவுமுறாத பெரும்புகழுடையவரும், உபய விபூதிகளையும் தக்கபடி நடாத்துவதில் மிகத் திறமையும் வலிமையுமுடையவரும், பார்மகட்கு நிகரான பொறுமையுற்றுத் தஞ்சமடைந்தவர்களின் பிழைகளைப் பொறுத்துப் பாதுகாத்தளித்தருள்பவரும், உதிரம்போலச் சிவப்புற்றும் செந்தாமரைமலர்போல வியன்றகன்றுமுள்ள

திருக்கண்களை யுடையவருமாகிய ஸ்ரீமந்நாராயணனே ஆகின்றீர்; தேவர் அப்பிராகிருதமான சுத்தஸத்துமயமான திவ்விய சரீரா வயவங்களை யுடையவராகியும், தீயோர்களை வென்று நல்லோர்களைப் பாதுகாப்பதன்பொருட்டு லீலாமானுஷ திவ்வியமங்கள விக்கிரஹத்தையுடையராக அவதரித்துக் கோதண்டத்தையும் பாணத்தையும் திருக்கைகளிலேந்தி அதிமானுஷ பல பராக்கிரமங்களை யுடையராய் அலிகளும், ஆண்பிள்ளைகளும் கூடக்கண்டு மயங்கிப் பெண்ணுருக்கொண்டு புணர விரும்பத்தக்க திவ்யாவயவ ஸௌந்தரிய முடையவருமாகியும், பின் பிவ்வுருவை விட்டு முன்போலவே அப்பிராகிருத திவ்வியமங்களவிக்கிரஹமுடையராகுவீர்; என்று பெருமாளுடைய திவ்வியமங்களவிக்கிரஹத்திலீடுபட்டுப் புகழ்ந்து மீளவும் வானர ஜாதியாகையால், மதிகலங்கிப் பெருமாளை நோக்கி, ஸ்வாமி! தேவர் எந்த பாணத்தினால் என் பர்த்தாவை யடித்தருளினீரோ? அந்தக் கணையினாலே தானே என்னையும் அடித்தருள்க; என் பர்த்தா! என்மீது மிகப் பிரிய முடையவராதலின், பொன்னுலகிலும் என்னைப் பிரிந்து மகிழ்வுறார்; இவர் பொன்னுலகை யடைந்தும் முற்றும் சுற்றிப்பார்த்து என்னைக் காணாராயின், சிறந்த ஆடையாபரணங்களையுடைய தெய்வப்பொதுமகளிர்களைக் கண்ணுறினும், மகிழ்ந் தவர்களுடன் சேர்ந்தின்புறார்; மிகவும் அழகிய இந்த மலையருகில் தேவர் எழுந்தருளியிருந்தும் பிராட்டியாரைப் பிரிந்திருக்கின்றமையின், எவ்வண்ணந் துன்புற்று வருந்துகின்றீரோ? அவ்வண்ணமே விண்ணுலகிலும் என் பதி! என்னைப் பிரிந்து, மகிழ்வுகுன்றி, யொளியிழந்து, மெய்வாடி, வருந்துவாரய்யோ? தேவர் பெண்டாட்டியைப் பிரிந்தவர்களுறுந் துன்பம் மிகவும் பொறுத்தற்கரியதென்பதை நன்கறிந்தருள்வீரல்லீரோ? ஆதலின், என் பிராணநாதன் என்னைப் பிரிந்து வருந்தாவண்ணம் என்னைக் கொலை செய்து என் பர்த்தாவிடம் என்னைச் சேர்த்து மகிழ்வித்தருள்க. தேவர் என்னைக் கொலைசெய்யும் விஷயத்தில் பெண்கொலைசெய்வது தருமமன்றே என்று எண்ணற்க; என்னை வாலியின் ஆத்துமாவாகவே யெண்ணிக் கொலைசெய்தருள்வீராகில், பெண்கொலைத் தேவரை யணுகாது; பதிக்குப் பாரியை பாதி யாத்துமாவென்றும், பத்தினி பதிக்கு வேறல்லளென்றும், முதனூல்களில் குறிக்கப்படுகின்றதன்றோ? பாரியையைப் பதிக்களித்து மகிழ்விப்பதை விடச் சிறந்த தருமம் வேறொன்றுமில்லையென்று தருமமுணர்ந்தோர்கள் உரைக்கின்றனர்களே? ஆதலின், என்னைப் பதியுடன் சேர்த்துச் சிறந்த தருமத்தை யடைந்தருள்க; இவ்வண்ணம் என்னைப் பதியுடன் சேர்ப்பீராகில், இது நல்வினையே யாகுமல்லது, தீவினை யாகாது; கொலைசெய்த பாவமும் சேராது; இவ்வண்ணம் நாதனின்றித் துயருற்று வருந்துகின்ற என்னைக் கொலைசெய்து பதியுடன் சேர்த்து இன்புற்று வாழுமாறு செய்தருள்க; யான் மதயானைபோலுலாவுகின்றவரும், வானரப்படைகளனைத்துக்கும் இறையவரும், மிகவும் புத்தி யுடையோரும், சிறந்த பொன்மணி மாலை யணிந்தவருமாகிய என்

கணவனை விட்டுப் பிரிந்து வருந்தி நெடுங்காலம் வாழ்வுற விருப்பங் கொள்ளுகின்றிலேன்; என்றிவ்வண்ணமுரைத்துப் புலம்பினள். பெருமானும் தாரை யுரைசெய்த வாக்கியங்களை யெல்லாங் கேட்டருளி யவளைத் தேற்றி யவளை நோக்கிக் கேளாய் வீரபத்நினியாகிய தாரையே! நீ யுலக வழக்கத்திற்கு விருத்தமாக எண்ணமுறற்க; எல்லாவுலகங்களும் தெய்வத்தினாலியற்றப்பட்டு அதன் சங்கற்பபடி நடப்பன வல்லவோ? ஒருவர்க்குத் துன்பம் நேர்வதும், இன்பம் நேர்வதும், தெய்வச்செய்கையேயென்று யாவரும் உரைக்கின்றனர்களல்லரோ? மூவுலகத்தவர் தெய்வத்தினாலளிக்கப்பட்ட துன்பத்தையோ இன்பத்தையோபெற்று அதற்கு வசப்பட்டிருக்கின்றனர்களே யன்றித் தெய்வத்தை மீறி நடப்பவர் ஒருவருமிலர்; ஆதலின், தெய்வத்தினால் அளிக்கப்பட்ட முன்போன்ற இன்பங்களையும் அடைந்து மகிழ்வாய்; உனது மகனும் யுவராஜனாகி மகிழ்வான்; இவ்வண்ணமே தெய்வத்தினால் ஸங்கற்பிக்கப்பட்டுளது; ஆதலின், நீ துன்புறற்க; ரணசூரன் மனைவியர்கள் இவ்வண்ணம் வருந்திப் புலம்பார்களே? என்று அருளிச்செய்து தேற்றியருளினர். தாரையும் இவ்வண்ணம் பெருமாளாலே தேற்றப்பட்டவளாகிச் சோகத்தை யுள்ளடக்கி மனந்தேர்ந்து மௌனமடைந்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்துநான்காவது சருக்கம் முற்றிற்று.

தனிச்லோகி—புஜயுத்தத்தாலும், வாக்யுத்தத்தாலும், வாலியைச்சென்று கொன்று வெற்றிகொண்டு பெருமாள் நிற்கிறவளவிலே பார்த்ருவதஜனிதமான சோகக்குரோதங்களாலே விக்ருதையாய் என்னுண் மகனைக்கொன்றவனை வாயாற வெய்ய வேணுமென்று கட்டி யுடுத்து வந்த தாரையானவள் பெருமாளைக்கண்டு அவருடைய மகிமையினாலே கோபந்தணிந்து ஸத்துவகுணந்தலையெடுத்து அதன்காரியமான ஜ்ஞாநம்பிறந்து தெளிவுற்ற சிந்தையளாகையாலும், அவ்வஸ்துவை யொரு போகியாக ஸாக்ஷாத்கரித்து நிர்ணயம்பண்ணி, வெய்யப்புக்க வாயாலே வாழ்த்துகிறாள். பகவத்ஸாக்ஷாத்காரம்பிறந்தால் ப்ரதிபந்தகம்போய் தத்துவாநுபவம்பண்ணக் குறைவில்லையிறே? ஸ்ரீவால்மீகிபகவான், அல்லாத ரிஷிகளையும், வேதங்களையும்போலே தாந்தாம் பகவானுடைய பரத்வோபபாதனம்பண்ணத்துடங்கி வசனாந்தரங்களாலே ஸாம்ய சங்கை பண்ணும்படியாவது, தேவதாந்தரங்களினுடைய ஆதிக்கியசங்கை பண்ணும்படியாவது, பூர்வாபரவாக்கியங்களும் தர்மிக்ராஹக ப்ரமாணங்கொண்டு ஸாமாநாதிகரண்ய வாக்யங்களுக்கும், அந்தர்யாமி பர்யந்தானுஸந்தானத்தாலே என்றும், அவ்வோதேவதைகளைச்சொல்லுகிற ப்ரதேசங்கள் தானும் தத்வபரமன்று; ப்ரசம்ஸாபரமென்றும், ஆகாச, ப்ராண, வாமதேவேந்த்ர ப்ரஹ்லாதாதிகளுக்குப் பரத்வம்வரிலாயித்து; ருத்ராதிகளுக்குப் பரத்வம் வருவதென்கிற துல்யந்யாயத்தாலும் உபபாதிக்கவேண்டி க்லேசபகுளமாயிராதபடி ஆண்பெண்ணடங்கலும் பிரசித்த வைபவமுடையவர் பெருமாளென்று அறிவிக்கைக்காக தாராங்கதாதிகளையிட்டுத் ததுவநிர்ணயம் பண்ணுகிறான்.—இதில் இத்ததைக்கு முன்பு கண்டறியாத திருக்கச்செய்தேயும், திருமேனியில் ஸ்வயம்வரித்துக்கிடக்கிற ராஜலக்ஷணங்களாலும், பெருமாளுக்கு அஸாதாரணமான கண்ணழகாலும், என்னுடைய பர்த்தாவைக் கொன்ற பெருமாள் இவர்தானென்று அறிந்தாளென்று ஸௌலப்யத்தி லொரு

யோஜனையும், ஸௌலப்ய சிஹ்நங்களாலே மறைந்திருக்கச்செய்தேயும், ஊகிக்கத் தக்க பரத்வகுணங்களாலும், பரத்வ ஸூசகமான திருக்கண்களாலும், கண்டவாத் தாற்றனதே யுலகே நின்றனென்னும், நிழலெழுகிற புருஷகார ப்ராதான்யத்தாலும், இச்சக்கரவர்த்தித்திருமகனார் அப்பரவஸ்துதானென்று அறிந்தாளென்று பரத்வத் திலே ஒரு யோஜனையுமிறே ? அவ்விரண்டையும் சேர்த்து யோஜிக்கிறது ; (த்வம்) இவளுடைய பர்த்ருபக்தியிருக்கிறபடி ராஜாக்களையும் நீயென்கிருள். (த்வம்) மேலே அப்ரமேயச்ச என்று துடங்கி ஏறப்புகுகிற குணபாரத்துக்கு அதிஷ்டானமுண்டாம் படி ஆச்ரயந்தன்னைப் பாரிக்கிருள். (த்வம்) அநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாண குணங்களடைய ஒரு சிராங்கையாம்படியான ஸ்வரூபத்தின் கன மிருந்தபடியேன் ; (த்வம்) ராவண துந்துபி முதலானோர்களை யகப்பட தலையழித்த வாலியைக்கொன்று வெற்றிகொண்டு ஒன்றுஞ்செய்யாதாரைப்போலே நின்ற நிலை யென்னென்கிருள் (த்வம்) வாலிக்கஞ்சிக் கிடங்கடைந்து கிடந்த மஹாராஜருக் ககப்பட வெற்றிகொடு த்து சரணாகதவச்சலரான நீர் (த்வம்) பெண்களும், இளையோர்களுமான நாங்களும் அகப்பட மதியாதே வந்து கிட்டும்படியான நீர் (த்வம்) ஒரு வஸ்துவை வேறு வஸ்துவாக்குமாபோலே வாயாற வெய்யவந்த என்னை வாழ்த்தும்படி பண்ணிவைத்த நீர் நீ வாழ்த்துகைக்கு உருப்படாயாகில், அது தன்னைத் துடங்கலாகாதோவென்ன ? (அப்ரமேயஃ) உம்மையுமறியாதே என்னையுமறியாதே முகங்கொள்ளலாமோவென்று பார்த்தேன் ; அது முகங்கொள்ளவொண்ணுதாயிருந்தது ; (அப்ரமேயஃ) நானே யன்று வேதமும் அகப்பட மீளும்படியன்றோ? தேவரை அளவிடக்கூடாமையிருப்பது (அப்ரமேயஃ) ப்ரமைக்கு விஷயமாவது, பிரமேயமிறே ? பிரமையாகிறதுதான் நன்று அனுபவித்தலிறே ? அதாவது, ப்ரத்யக்ஷாநுமாநாகமஜன்யஜ்ஞாநமிறே ? அம்மூன்றுக் கும் விஷயமல்லீராயிருந்தீர்; (அப்ரமேயஃ) பிரமாணங்களுக்கு விஷயமல்லீரொன்னு மிடஞ் சொல்லவேண்டுமோ ? தேவர் மகிமையை யளவிட ஸர்வஜ்ஞரான தேவரால் தான் முடியுமோ ? நித்தியமாகையால், காலத்தினுல் அளவில்லை ; விபுவாதலின், தேசத்தினுலும் அளவில்லை ; எல்லாவுயிர்களும் தேவர்க்கு சரீரபூதங்களாகையாலே வேறே சேஷியில்லாமையால், வஸ்துவினுலும் அளவில்லை ; (த்வமப்ரமேயச்ச) என் கண் முகப்பே நிற்கச்செய்தேயும் எட்டப்போகிறதில்லை ; இவன் என்று சொல்லும் படி கிட்ட இருக்கையிலும், அவனென்று சொல்லும்படி அளவிடவரியராகின்றீர் ; கண்ணிட்டுப்பார்த்தவாறே எளியீராயிருந்தீர் ; நெஞ்சிட்டுப்பார்த்தவாறே அறியீரா யிருந்தீர் ; கையும் வில்லுமாய் எளியீராயிருக்கிற நீர் கையும் சங்குசக்கரங்களுமான பரவஸ்துவாயிருந்தீர் ; பரத்வம் எட்ட ஒண்ணுதென்றிருந்தோம் ; ஸௌலப்யந் தானும் எட்டப்போகிறதில்லை ; ஒரு பரிகரமன்றிக்கே தனிமைப்பட்டாப்போலே யிருக்கிற நீர் அபரிமித பரிகரரைப்போலே உள்கொள்ள வொண்ணுதபடியாயிருந்தீர் ; பிதாவின் நியோகத்தாலே தாபஸராய் வனவாஸம்பண்ணப்போந்தீர் ; விராதகரக பந்த வாலிகளைக்கொன்று திரியாநின்றீர் ; உம்முடைய நினைவும் செயலும் அறிதி யிடப்போகிறதில்லை ; அந்தஃகரணத்துக் கெட்டவொண்ணுதென்றெழிந்தால் பாஹ்ய கரணந் தனக்கெட்டலாமோவென்றிருந்தோம் ; (துராஸதச்ச) அதுவும் செய்ய வொண்ணுதபடியாயிருந்தது ; மனஸ்ஸால் கிட்டவொண்ணுத்தையோ ? சரீரத்தால் கிட்டலாகிறது ; நல்வழியே போவார்க்குக் கிட்டலாமத்தனைபோக்கி, வழிகெட்டு நின்றவர்களுக்கு ஒருக்காலும் கிட்டவொண்ணுதாயிராநின்றது ; (துராஸதஃ) ஷத்ல் விசரணகத்யவஸாதநேஷு, இறே - அப்படிக்கு விசரணார்த்தமாய் பொடியாக்க வென்று பார்த்தால் ஸூஸூக்ஷ்மம் என்று ஸூக்ஷ்மவஸ்துவாகையாலே பொடியாக்க வொண்ணுது ; கதிப்ாய் நின்ற விடத்திலும், கடக்க வடிக்க வென்று பார்த்தால் எங்

கும் பரந்துள்ளுகையாலே கடக்க வடிக்கப்போகாது; அவஸாதநமாய் முடிக்க
வென்று பார்த்தால் நித்தியமாகையாலே நாசம்பண்ணவொண்ணுது; வாலி வதகுபித
ரானவர்களும் வந்து அடர்ந்து பிரதி பண்ணலாமோவென்றிருந்தோம்; அப்படி
வருவார்க்கு அணுகவுங்கூடவொண்ணுதபடியிருந்தீர்; இப்படி கர்விதராய் பரதார
ராஜ்ஜியங்களைப் பறித்தாளுவதாகக் கொன்றீரொன்றிருந்தோம்; (ஜிதேந்த்ரியச்ச)
அப்படியன்றியிலே, மஹாராஜர்க்குக் கொடுத்தபடியாலே விஷயசபலரன்றியிலே
யிருந்தீர்; புலன்களும் அடங்காதே கண்ட விஷயங்களிலே சபலங்களாகையன்
றிக்கே அவை உம்முடைய கீழே யடங்கும்படி அமுக்கி யாள வல்லீராயிருந்தீர்;
ஆரோனும் ஒரு புருஷனும், ஏதேனும் ஒரு ஸ்திரீயைக்கிட்டினுல் ஏறிட்டுப்பார்க்கக்
கடவதாய் வாய்த்திருப்பது; அப்படியிருக்க, நான் இத்தனைபோது நிற்கிறவிடத்தில்
முகமெடுத்துப்பாராதே நிற்பதே என்ன விரக்தரோ இவர் என்கிருள். நாட்டோ
பதிக்கிவை படைத்தீரத்தனைபோக்கி நாட்டாளைப்போலே புலன்களுக்கு ஆள்பட்டு
இருநதீரல்லீர்; இப்படி விரக்தராயிருக்கிறவர் நம்மை நலிவானேன்; அதார்மிகரோ
வென்றிருந்தோம்; (உத்தமதார்மிகஃ) இந்த வியாபாரமெல்லாம் பரமார்த்தமாக
உபகரிக்கையாயிருந்தது; தனக்கென்று செய்யுமவன் அதமதார்மிகன்; தனக்கும்
பிறருக்குமென்று செய்யுமவன் மத்யமதார்மிகன்; பிறர்க்கென்று செய்யுமவன் உத்
தமதார்மிகன்; அன்றிக்கே, தார்மிகன், உத்தார்மிகன், உத்தரதார்மிகன், உத்தமதார்
மிகன், என்று தார்மிகர்களும் நால்வர், தார்மிகராகிருர்; வர்ணுச்ரமோசிததர்ம
முடையவர்கள், உத்தார்மிகராகிருர்; பக்திமார்க்கமுடையவர், உத்தரதார்மிகராகிருர்;
எல்லாவுயிர்களுக்குந் தஞ்சமாயிருப்பவர், உத்தமதார்மிகராகிருர்; புருஷகார
வசீகார்யர், இப்படி உத்தமதார்மிகராயிருந்தீர்;—ஒரு நோயஸ்ஸாதனமான தர்மமே
யாய் பல பர்யந்தமன்ரூெவென்றிருந்தோம்; (அக்ஷய்யகீர்திச்ச) மன்னும் பெரும்
புகழாயிருந்தீர்; ஒருவராலும் மதிக்கவெண்ணுத புகழுடையீராயிருந்தீர்; அதாவது,
தனிவீரனுன வாலியைக்கொன்று தேடிப்படைத்த புகழ்க்கு, மறைந்து கொன்றீரொன்
றும், பிழையின்றி கொன்றீரொன்றும், பயனின்றிக்கொன்றீரொன்றும், இப்புடைகளிலே
அநேகம் கண்ணழிவுஞ்சொல்லி யழிக்கலாமோ வென்று பார்த்தோம்; தேவர் என்
பர்த்தாவுக்கு அருளிச்செய்த உத்தரங்களினுல் அப்படி யழிக்கவொண்ணுத புகழுடை
யீராயிருந்தீர்; இப்படி மாருத புகழ்படைக்கைக்கடியென்னென்றிருந்தோம்; (விச
க்ஷணச்ச) ஸர்வசக்தியுமுடைய தேவர்க்கிதுவும் ஒரு ஏற்றமோ? மேன்மேலும்
பதிலுரைத்து எங்கள் வாதத்தையடக்கவல்ல பொறிவாளராயிருந்தீர்; வாலியைக்
கொன்று மஹாராஜரைக் கூட்டினீராகையாலே, நல்லாரறிவீர், தீயாரறிவீர், இவ்வுல
கத்தெல்லாமறிவீராயிருந்தீர்; இப்படி விசக்ஷணராகையாலே சத்துருசேஷங் கூடா
தென்று அங்கதனையும் முடிப்பிப்பீரோ வென்றிருந்தோம்; (க்ஷிதிக்ஷமாவான்)
பொறுமையிலும் பூமியாயிருந்தீர்; வாலிமேலுற்ற கோபத்திஞல் அங்கதனையும் என்
னையுந் தொலையாதிது நிற்றற்கென்னென்றிருந்தோம்; (க்ஷதஜோபமாக்ஷஃ) உயிர்க்
கெல்லாம் தாயாயளிக்கின்ற தண்டாமரைக்கண்ணனென்றும், ஸர்வரக்ஷகத்வஸூசக
மான இக்கண்ணின்வைலக்ஷிண்ய மிருந்தபடியென்கிருள். வாலிமேலுற்ற சீற்றத்
தால் தோற்றிய கண் சிவப்புமாருதிருக்கினும் என்னைக்கண்டு கொலைசெய்யாதிருந்த
தேன்; இந்தக் கண் சிவப்பு பிராட்டியின் பிரிவினுலோ? வாலிமேலுற்ற சீற்றத்தி
னுலோ? மஹாராஜர்மீதுள்ள அன்பினுலோ? தெரிகிறதில்லை; இங்குற்ற சகாரங்கள்
இங்கு கூருத திவ்விய கல்யாண குணங்களையும் சேர்க்கின்றன; அபஹதபாப்மத்து
வாதிகளுக்கு எதிர்த்தட்டாக வேருரு எண்குணங்களையுங் காட்டினுர். தனிசுலோகி
யிலே இது மிக விரிந்துளதாகையின், விரிவினிற்கஞ்சித் தொகுத்துரைத்தனம்.

இருபத்தைந்தாவது சருக்கம்.

மஹாராஜர் பெருமாளுடைய கட்டளையின்படி அங்கதகுமாரன் முதலானவர்களுடன் வாலிக்கு ஸம்ஸ்காரஞ்செய்வித்து நீர்க்கடனையும் முடித்துவிட்டுப் பெருமாளருகில் வந்து சேர்ந்தது.

அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் கூடி மஹாராஜர் முதலானோர்களுடைய சோகத்தினால் மிகச் சோகமடைந்து மஹாராஜர் தாரை அங்கதகுமாரன் முதலானோர்களை நோக்கிக் கேளீர் அன்பர்களே! சோகமுற்றுப் பரிதாபமுறுவதினாலே பொன்னாடுசேர்ந்த வாலிக்கு நலம் விளைவதிலது; ஆதலின், சோகத்தையடக்கி மேல் நடக்கவேண்டிய காரியம் யாதுளதோ ? அதனைச்செய்து வாலி நற்கதியடையுமாறுசெய்க; எக்காலையிலும் உலகவழக்கம் யாதுளதோ ? அதனை யாவரும் செயல்வேண்டும்; ஒருவன் இறந்துவிடுகையில், கண்ணீர்விட்டழல்வேண்டிய வழக்கமும் செய்யப்பட்டது; ஸர்வலோகநியாமகனான ஸ்ரீமந்நாராயணனை மீறி யொருசெயலும் எவராலும் செய்து முடிப்பதருமை; உலகத்தில் யாவும் உண்டாவதற்குத் தெய்வமே காரணம்; தெய்வமே எல்லாச் செயல்களுக்குந் துணையாகும்; எல்லாவுயிர்களையும் ஒரு செயலைச் செய்யும்படி யேவுதற்கும் தெய்வமே காரணம்; ஒருவனும் எச்செயல் செய்வதற்கும் கர்த்தாவல்லன்; ஒருவனை ஒருசெயல் செய்யும்படி யேவுதற்கும் திறமைகொண்டவனல்லன்; எல்லோரும் ஈச்வரனுக்கு வசப்பட்டே யிருக்கின்றனர்கள்; எல்லாவற்றிற்கும் தெய்வமே தஞ்சம்; தெய்வமும் ஒருவர் நல்வினையுறுவதற்கும், தீவினை யுறுவதற்கும், உரிய காலத்தைக் கடந்து நடக்கின்றிலது; தெய்வம் ஒருக்காலும் அழிகின்றிலது; ஆதலின், தத்தம் முன் வினையை யடைந்து ஒருவனும் தெய்வத்தை மீறி நடவான்; தெய்வமான ஸ்ரீமந்நாராயணனுக்கு இவர் இனத்தாரொன்றுவது, இவர் வீரமுடையோரொன்றுவது, இவர் தோழரொன்றுவது, இவர் சுற்றத்தாரொன்றுவது பக்ஷபாதஞ்செய்து தனது சங்கற்பத்துக்கு வேறாக ஒன்றுஞ்செய்தருளார். ஆதலின், பெருமாள் ஒருவர்க்கும் வயப்படார்; ஆகையால், எவரொவருடைய காலம் எப்படியெப்படி முடிகிறதோ ? அது தெய்வச்செயலெனவே யறிந்து வருந்தாதிருத்தல்வேண்டும்; அறம்பொருளின்பம் வீடு என்னும் நால்வகைச் சித்திகளும் ஸ்ரீமந்நாராயணனாலேதான் கிடைக்கும்; ஆதலின், வாலியும் இப்போது தன் முன்வினையின்பயனையடைந்தனன்; அன்றியிலே, அவன் அறம்பொருளின்பங்களையும் சேர்ந்தமையின், நற்கதியையே யடைந்தனன்; தருமத்தையே மேற்கொண்டு போரில் பின்செல்லாது வெற்றிகொண்டு உயிரைத் துரும்பாக நினைத்து மடிந்தமையின், அவன் பொன்

ளுடு பெறுவதிலும் ஐயமுளதோ? இப்போழ்து வாலி எந்தக்கதியை யடைந்தனனோ? அக்கதி மிகச் சிறந்தது; ஆதலின், வருந்தியதுபோதும்; இனிச் செய்யவேண்டிய கருமங்களைச்செய்க; என்று தேற்றி யருளிச் செய்தனர். அப்பொழுதிளையபெருமாளும் சோகமுற்று வருந்துகின்ற மஹாராஜனை நோக்கி, மஹாராஜரே! பெருமாளிவ்வண்ணம் அருளிச் செய்கையிலும், ஏன் துன்புற்று வருந்துகின்றீர்; உன் தமையனுக்குச் சரமகைங்கரியங்களை விரைவாகச் செய்விக்கக்கடவீர். தாரையையும், அங்கதனையும் தேற்றி யவர்களுடன் சேர்ந்து வாலிக்கு ஸம்ஸ்காரஞ் செய்வதற்குப் போதுமான உலர்ந்த காஷ்டங்களை மிகுதியாகக் கொண ரும்படி கட்டளைசெய்தழைப்பிக்கக்கடவீர். அக்கட்டைகளும் சிறந்த சந்தனக்கட்டைகளாகவே யிருப்பது நன்று; மிக வருந்திப்புலம்புகின்ற இவ்வங்கதனையும் தேற்றுக; இனி இந்நகரமெல்லாம் உன்னதீனமாயின மையின், புன்மதிகொள்ளாமல் பெருமதிபூண்டு தக்கபடி கட்டளைசெய்க; அங்கதன் சிறந்த மாலைகளையும், பலவகை யாடைகளையும், கந்தங்களையும், எண்ணெய் நெய் முதலிய மற்றும் வேண்டிய திரவியங்களையும் கொணர் வான்; வாரீர் தாரரே! நீர் வாலியை முதுகாட்டிற்குக் கொண்டுபோவ தற்காகச் சிவிகையை விரைவாகக் கொணர்க; எச்செயலும் விரைந்து செய்வதே தகுதியானது; இப்படிப்பட்ட தருணத்திலே மிகவுந் துரை யுடன் செயல்களைச்செய்து முடித்தல்வேண்டும்; அச்சிவிகைக்கு வாஹகர்களும் ஸந்நத்தராகக்கடவர்கள். வாஹகர்கள் மிகவும் பலமுடை யோர்களாகவேண்டும்; என்று அருளிச்செய்துவிட்டுப் பெருமாளுடைய அருகில் வந்து நின்றருளினர். தாரனென்னும் ஸேநாபதியும் விரைவுடன் கூடிக் கிஷ்கிந்தாகுகைக்குள் புகுந்து சிவிகையை எடுப்பித்துக்கொண்டு புறத்திலே வந்து சிறந்த தோள்வலிகளுடையவர்களினாலே தாங்கிக் கொள்ளப்பட்டதும், சிறந்த பக்ஷிவகைகளாகவும், செடி கொடி வகைக ளாகவும், சித்திரமெழுதி யலங்கரிக்கப்பட்டதும், சிறந்த இனிய பீடங்களை யுடையதும், சிறந்த தேர்க்கு நிகராகியதும், சித்திரங்களின் வரிசைகளி னாலே அடர்ந்ததும், தேவவிமானம் போன்றதும், சாளரங்களை யுடைய தும், அகலமாகவும், நீண்டதாகவும், விசுவகர்மனாலே இயற்றப்பட்டதும், விளையாட்டுக்குரிய மலைபோன்ற சிகரத்தை யுடையதும், நன்றாகத் துடைத் தலங்காரஞ்செய்யப்பட்டதும், சிறந்த மணியணிகளினாலும், முத்துவடங்களினாலும், சிறந்த மாலைகளினாலும் சிங்காரிக்கப்பட்டதும், குகைகளாகவும், காடுகளாகவும் செய்து இயற்றப்பட்டதும், செஞ்சாந்த மப்பியதும், நறுமலர்கள் தூவப்பட்டதும், தாமரை மலர்மாலைத் தோர ணங்கட்டியதும், ஆகியப் பாலசூரியன்போல வொளிவிடுகின்ற தங்கச் சிவிகையைப் பெருமாளுக்கெதிரில் கொணர்ந்து சேர்த்தனன். இத்தன் மையதான சிவிகையைப் பெருமாளும் கண்டு மகிழ்ந்து இளையபெரு மாளை நோக்கி, அடா தம்பி! விரைவாக வாலியை இச்சிவிகையிலேற்றி

முதுகாட்டிற்குச் சேர்க்கும்படியும், தகனாதி ஸம்ஸ்காரங்களைச் செய்யும் படியும் செய்யடா என்று நியமித்தருளினர். உடனே மகாராஜர் வாலியை யெடுப்பித்து அங்கதனுடன் அழுதுகொண்டே அச்சிவிகையிலேற்று வித்து, உடனே அருகிலுள்ள தலைமையானவர்களை நோக்கிக் கேளீர் அன்பர்களே ! என் தமையருக்குக் கந்தபுஷ்பாதிகளாயுள்ள அலங்காரங் களினாலே அலங்காரஞ்செய்து அவருக்குத் தக்கபடி எல்லாச்சடங்கு களையும் குறைவறச் செய்விக்கக்கடவீர்கள். சிறந்த பலவகை மணிகளை யும் மிகுதியாகக் கொடை யளிக்கக்கடவீர்கள். வானரர்களெல்லோரும் ஆசந்திச்குச் சமீபத்திலே முன்னே செல்லக்கடவர்களென்று கட்டளை செய்தனர். உடனே அவர்களும் மிகச் செல்வமுடைய வேந்தர்களுக்கு எவ்வண்ணம் செய்வார்களோ ? அவ்வண்ணமே சடங்குகளையெல்லாஞ் செய்வித்தனர்கள். தாரன் முதலிய வானரர்களெல்லோரும் அங்கதனைப் பிடித்துக்கொண்டு துன்புற்றுக்கொண்டே சென்றனர்கள். தாரை முதலிய வாலியின் மனைவியர்களும், பலாக்கணம்பாடி யழுதுகொண்டே வாலி யைப் பின்றொடர்ந்து சென்றனர்கள். அந்த வானரப்பெண்கள் அப்போ ழ்து அழுகையில், அவர்களினுடைய அழுகுரலினாலே அங்குள்ள காடு மலை யாறுகளடங்கலும் கூவி யழுதனபோலொலித்தன ; உடனே மலையி னின்றும் பெருகி வருகின்ற மலையாற்றினது மணற்குன்றிலே இவ்விடம் மிகவும் தூயதும், ஏகாந்தமுடையதுமாகின்றதென்று அநேகம் வாநரர்கள் வாலிக்குச் சிதை யடுக்கினர்கள். வாஹகர்களும் சிவிகையை யவ்விடத்தி லிறக்கி வருந்தி நின்றனர்கள். அப்பொழுது தாரை தன் பர்த்தா சிவிகை யிலே படுத்திருக்கக்கண்டு அவன் தலையைத் தனது மடிமேலெடுத்து வைத்துக்கொண்டு கடுந்துயரங்கொண்டு ஐயையோ ? வானரர்களெல் லோர்க்கும் நல்வேந்தரோ ! அந்தோ ? என் பிராணநாதரோ ! அய்யோ ? என்மேல் ஆவலும், அன்புமுடைய இனியரோ ! அந்தோ ? மிகச் சிறந்த வரோ ! நீண்டுருண்ட திருத்தோள்களை யுடையவரே ! அய்யோ ? என்னு யிர்க்காவலரோ ! நான் இவ்வண்ணம் வருந்திப் புலம்பி யழுதுவரக் காணீரோ ? இங்கெல்லோரும் துயர்கொண்டு வருந்துவதைக்கண்டு ஏன் இனியமொழிகளை மொழிந்து தேற்றுகின்றிலீர். அந்தோ ? என் நாயகரோ ! தேவர் உயிர்மாண்டிருக்கையிலும், தேவருடைய திருமுகம் மகிழ்வுற்றதுபோல மலர்ந்து விளங்கி அத்தகிரியை யடைந்த கதிர வனுக்கு நிகரானவண்ணமுடையதாகிக் காணப்படுகின்றது ; அந்தோ ? என்னாயகரோ ! இந்த ஸ்ரீமந்நாராயணரோ ஸ்ரீராமசந்திரருருவங்கொண்டு

தேவரைப்பற்றி யிழுக்கின்றனர்; இந்த ஸ்ரீராமனொருவராலேதானே ஒரு கணையினால் யாங்களெல்லோரும் கைம்பெண்களாயினோ மல்லோமோ? அந்தோ என்னையகரோ! தேவர்க்கு மிகவும் பிரியமுள்ள இம்மனைவியர்களெல்லோரும் தேவரைத் தொடர்ந்து நெடுந்தூரம் நடந்து வருந்திப் புலம்புகின்றனர்களே? தேவர் ஏன் அறிகின்றிலீர்; இப்போழ்து மஹாராஜர் வானரர்களெல்லோர்க்குந் தலைவராகி எதிரிலிருக்கின்றாரோ? ஏன் காணுகின்றிலீர்; தாரன் முதலிய சேனாபதிகளெல்லோரும் நகரத்தார்களுடன் வந்து உம்மைச் சூழ்ந்து வருந்துகின்றனர்களே? இவர்களுக்குத்தக்கபடி மரியாதை செய்து விடைகொடுத்தனுப்புக; பின்பு, நாமிருவரும் மற்றுள்ள தேவர் மனைவியர்களுடனும் கூடித் தேன்பொழியுஞ் சோலைகளிலே இன்புற்று மகிழ்வோம், என்று புலம்பினள். இவ்வண்ணஞ் சோகத்தினால் புலம்புகின்ற தாரையை மற்றுள்ள வானரர்கள் பற்றியெடுத்து எழுந்திருக்கச்செய்து வருந்தி நின்றனர்கள்; அங்கதனும் மஹாராஜருடன் அழுதுகொண்டே வாலியைச் சிதையிலேற்றி விதியின்படி அக்கினி ப்ரதாவஞ்செய்து சடங்குகளை முடித்து நீரிலாடி நீர்க்கடனை முடிப்பதன்பொருட்டு நன்னீரையுடைய நதியை யடைந்தனன். உடனே மஹாராஜர் தாரை முதலிய யாவரும் அங்கதனை முன்னிட்டுக்கொண்டு நீரிலாடி வாலியின்பொருட்டுத் தருப்பணஞ்செய்தனர்கள். மஹாராஜர் துன்புற்றிருந்தமையின், பெருமாளும் துன்புற்று வாலிக்குச் செய்யவேண்டிய சரமகைங்கரியங்களையெல்லாம் விதியின்படி செய்வித்தருளினர். மஹாராஜரும் வாலிக்குச்செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் முடித்துவிட்டுப் பெருமாளுடைய அருகில் வந்து சேர்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

இருபத்தாறுவது சருக்கம்.

மழைகாலம் நேர்ந்தமையின், அது முடியுமளவும் சீதையைத்தேட முடியா தாதலின், இப்போழ்து நீர் பட்டாபிஷேகஞ் செய்துகொள்க வென்று பெருமாள் மகாராஜருக்கு அருளிச்செய்து பட்டமும் கட்டுவித்து, அங்கதகுமாரனுக்கும் இளவரசுப்பட்டங் கட்டுவித்தருளியது.

அநந்தரம் மஹாராஜர் வாலிக்குச் செய்யவேண்டிய கிரியைகளை முடித்துவிட்டு ஈரவாடையுடன் வானரர்களெல்லோர்களாலும் சூழப்பட்டுச் சோகத்தினல் வருந்திப் பெருமாளுடைய அருகில் வந்து கைகுவித்து நிற்கையில், மேருமலைபோலப் பருத்துயர்ந்தவரும், பாலஸூரியன் போன்ற முகமுடையவருமாகிய சிறியதிருவடி பெருமாளுக்குத் தண்டம் ஸமர்ப்பித்து அவரை நோக்கி, ஸ்வாமி! தேவருடைய அனுக்கிரஹத்தினல் மஹாராஜர் தாதை மூதாதை முதலிய குலமுறையாக வந்த வாநர ராஜ்ஜியத்தைப் பெறற்கரியதாயினும் பெற்றனர். ஆதலின், தேவர் இப்போழ்து அனுமதிசெய்தருளுமாயின், மஹாராஜர் கிஷ்கிந்தைக்குள் சென்று ராஜகாரியங்களையெல்லாம் திட்டஞ்செய்து குறைவற நடப்பித்து இனத்தார் சுற்றத்தார் தோழர் முதலானேர்களுடன் கூடி விதியின்படி அபிஷேகம்பூண்டு நவமணி யணிகளாலும், நறுமலர் மாலைகளாலும், தேவர்க்குப்பூஜைசெய்து மகிழ்வார்; ஆதலின், தேவர் மஹாராஜருடைய தோழமையைப் பாராட்டியருளித் தேவரும் கிஷ்கிந்தைக்குள்ளே எழுந்தருளி வானரர்களெல்லோரையும் மகிழ்வித்தருள்க; என்று விஜ்ஞாபனஞ்செய்தனர். பெருமாளும் அதைத் திருச்செவிசார்த்தித் திருவடியை நோக்கிக் கேளீர் அன்புள்ள மாருதி! பதினன்குவருஷங்கள் கழியுமளவும் யான் நகரிக்குள்ளாவது, ஊருக்குள்ளாவது புகேன்; இவ்வண்ணம் எந்தந்தையின் கட்டளையாதலின், அதனை யொருக்காலும் தவிரேன்; ஆதலின், மஹாராஜர் மிகச் செல்வமுடைய கிஷ்கிந்தைக்குட் புகுந்து விதியின்படி விரைவாகப் பட்டாபிஷேகஞ் செய்துகொள்ளக் கடவர். அவ்வண்ணம் நீவிரெல்லீரும் சேர்ந்து நடப்பிக்கக்கடவீர்கள் என்று அருளிச்செய்து மஹாராஜரையும் நோக்கிக் கேளீர் தோழரோ! உம்முடைய தமையனர் குமாரனும், தோள்வலியினல் உமக்கு நிகரானவனும், பெருந்தன்மையுடையவனும், இளவரசுப்பட்டத்துக்கு உரியோனுமாகிய இந்த அங்கதனுக்கும் இளவரசுப்பட்டங் கட்டுவிக்கக் கடவீர். இப்போது கார்காலமாதங்கள் நான்கில் முதலாவதான ஆடி

மாதம் இப்போது நேர்ந்துளது; இது முதல் நான்குமாதங்களும் மழை பொழிவதினல் போர்செய்வதற் குரியனவல்ல; ஆதலின், யான் இந் நான்குமாதங்களையும் லக்ஷ்மணனுடன் கூடி இம்மலையிலேதானே வாழ்ந்து போக்கிக்கொண்டிருப்பேன்; கார்த்திகைமாதம் பிறப்பதன்முன் நீர் ராவணனைக் கொலைசெய்ய முயற்சி செய்க; நம்மிருவர்க்கும் இது தான் ஏற்பாடு, இப்போது நீர் கிஷ்கிந்தைக்குட்சென்று அபிஷேகஞ் செய்து கொள்க; தோழர்களையும் மகிழச்செய்க; என்று அனுமதி செய்தருளினர். மஹாராஜரும் உடனே பெருமாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அநேகமாயிரம் வானரர்களினல் பணிந்து சூழப்பட்டுக் கிஷ்கிந்தைக்குள் புகுந்து தம்மைக்கண்டு தலைவணங்கித்தொழுத நகரத்தாரெல்லோரையும் தக்கபடி மரியாதைசெய்து ஆதரித்து வாலியின் அந்தப்புரஞ்சேர்ந்து முற்றும்பார்த்து ஏற்பாடுசெய்து புறத்தில் வருகையில், வானரர்களெல்லோரும் தேவர்கள் தேவேந்திரனுக்குக் கொப்பாக அபிஷேகஞ் செய்யவேண்டுமென்று நிச்சயஞ்செய்து வெண்குடையினையும், வெண்சாமரங்களையும், பற்பல சிறந்த மணிகளையும், நவதான்னியங்களையும், பற்பல ஓஷதிரஸங்களையும், பாலுள்ள மரங்களின் முளைகளையும், மலர்களையும், வெண்பட்டுகளையும், வெண்சந்தனத்தையும், நன்மணமுள்ள மாலைகளையும், நிலத்தாமரை மலர்களையும், திவ்விய சந்தனங்களையும், பலவகை கந்தங்களையும், அக்ஷதங்களையும், தங்கத்தையும், யவதானியங்களையும், தேன் நெய்களையும், தயிரையும், புலித்தோல்களையும், பன்றித்தோலினல் செய்த பாதரக்ஷைகளையும், பூசிக்கொள்ளுந் திரவியத்தையும், கோரோசனத்தையும், மனச்சிலையையும் கொணர்ந்தனர்கள். சிறந்த மகிழ்ந்த பதினறு கன்னிப்பெண்களும் வந்து சேர்ந்தனர்கள். அநந்தரம் வானரர்களெல்லோரும் ஆடையாபரணங்களாலும், பலவகை யுண்டிகளாலும் வேதியர்களை மகிழச்செய்து, தீயை வளர்த்துத் தருப்பங்களைப் பரப்பி விதியின்படி மந்திரத்தினல் ஹவிஸ்ஸை ஹோமஞ்செய்து, தங்கமயமான கால்களை யுடையதும், சிறந்த சித்திராஸனமுடையதும், பலவகை மாலைகளினல் அலங்காரஞ்செய்யப்பட்டதும், மிக வழகியதுமாகிய மேல் மாளிகையிலே சிறந்த சிங்காஸநத்தைப்போட்டு கடல்களினின்றும், பலவகை நதிகளினின்றும், மற்றுள்ள புண்ணிய தீர்த்தங்களினின்றும் தீர்த்தங்களை யழைப்பித்து, தங்கக்குடங்களில்வைத்து மந்திரித்து மஹாராஜரை யந்தச் சிங்காஸநத்திலுட்காரச்செய்தனர்கள். அப்போது கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாதனன், மைந்தன், துவிவிதன், அனுமான், ஜாம்பவான், நளன் என்னும்,

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

மஹாராஜர் பட்டாபிஷேகம்.

అభ్యంషిఞ్చన్త్సుగ్రీవం ప్రసన్నేనసుగన్ధినా
సలిలేనసహస్రాక్షం వసవోవాసవంయథా॥

அப்யஷிஞ்சந்தஸுக்ரீவம் ப்ரஸந்நேநஸுகந்திநா
ஸலிலேநஸஹஸ்ராக்ஷம் வஸவோவாஸவம்யதா.

மந்திரிகள் பத்துப்பேர்களும், நன்மணமுள்ள தெளிந்த புண்ணிய தீர்த்தத்தினால் வஸுதேவதைகள் தேவேந்திரனுக்குப்போல மஹாராஜர்க்கு ஆயிரம் கண்களையுடைய ஸஹஸ்ராரம் என்கிற தட்டினால் அபிஷேகஞ் செய்தனர்கள். அதனைக் கண்ணுற்று வானரர்களெல்லோரும் மகிழ்ந்து புகழ்ந்து களித்தனர்கள். பின்பு, மஹாராஜரும் பெருமாளுடைய வாக்கியத்தின்படி அங்கதகுமாரனை மகிழ்ந்து தழுவிக்கொண்டு இளவரசுப்பட்டங்கட்டுவித்து அன்பு செய்தனர். அதைக்கண்டு வானரர்கள் நன்குநன்கென்று புகழ்ந்து, பெருமாளையும், இளையபெருமாளையும் சிலாகித்துத் துதி செய்தனர்கள். அப்பொழுது மலைக்குகையிலுள்ள அந்தக் கிஷ்கிந்தாபுரியானது, மனக்களிப்பும், மேனியழகுமுற்ற ஜனங்களை யுடையதாகியும், தோரணங்கட்டிச் சூளிகைநாட்டப்பட்டதாகியும், மிக வழகியதுமாகித் திகழ்ந்தது; மஹாராஜரும் இங்கே நிகழ்ந்த செய்திகளை யெல்லாவற்றையும், பெருமாள் எழுந்தருளியிருக்குமிடஞ் சென்றும் அறிவித்துவிட்டு அவரிடத்தில் விடைபெற்று மீளவும் அந்தப் புரம் சேர்ந்து ராஜ்ஜியத்தையும், மனையாளான ருமையையும் பெற்று விண்ணுலகினில் தேவராஜன்போல மகிழ்ந்தின்புற்று வாழ்ந்துகொண்டிருந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

கார்காலம் ஆவணி புரட்டாசி இரண்டுமாதங்களே யாதலின், நான்கென்பது எப்படி சரியாகுமெனின், மழைகாலத்துக்கு முன்னொருமாதமும், பின்னொருமாதமும் மழையிருக்குமாதலின், ஆடி ஐப்பசியையும் கூட்டிக் கார்காலமென்றனர்; என்று சிலர்கூறினர்கள். பதினைந்து தினமான ஒருபக்ஷத்துக்கே மாதமென்று வேத

இருபத்தேழாவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளுடன் மழைகாலத்தை மலைக்குகையில் போக்கிப் பிராட்டியாரை நினைந்து வருந்துகையில், இளைய பெருமாள் சோகந்தணியத் தேற்றி யருளியது.

இப்படி மஹாராஜர் பட்டாபிஷேகம்பூண்டு பெருமாளிடத்தில் அநுமதிபெற்றுப் பரிஜன பரிவாரங்களுடன் கிஷ்கிந்தாகுகையை நோக்கிச் சென்ற பின்னர், பெருமாளும் இளையபெருமாளுடன் புறப் பட்டு மான், புலி, கரடி, சிங்கம், குரங்கு, கோலாங்கூலம், பூனை முத லிய விலங்குகளினால் கூவப்பட்டும், காடு, மரம், செடி, புதர்கள் அடர்ந் தும், எந்நாளும் குளிர்ந்தும், மணங்கமழ்ந்தும், தெளிந்தும், தூய்மை கொண்டுமுள்ள நன்னீருடைய குளங்களையுடையதும், நீருண்டகொண்டல் போல நீண்டிருண்டுயர்ந்ததுமாகிய பிரஸ்ரவணமென்னும் மலையையடை ந்து அதன் சிகரத்தில் வியன்றகன்ற தோர் குகையைக் கண்டு இக்கார்

த்தில் பெயர் கூறப்பட்டுளதாயின், ஆவணி புறட்டாசி இரண்டுமாதங்களும் நான்கு மாதங்களென்னப்பட்டன; என்று சிலர் கூறினர்கள்.

ஐப்பசி மாசத்திலேதானே சீதையைத்தேட முயற்சிசெய்யும்படி பெருமாள் கட்டளைசெய்தனர்; அப்போது வாநரர்களைச் சேர்ப்பதற்காகவே கட்டளையிட்டருளி னர். சுயம்ப்ரபாபிலத்துநின்றும் அநுமான் அங்கதன்முதலிய வாநரர்களெல்லோரும் புறப்பட்டவுடன் இளவேனிற்பருவம் ஸமீபித்ததாகக் கூறுகின்றமையின், இக்காலங் களின் விவரம் முறையே கூறப்படுகின்றது. ஒருபக்ஷத்தில் இளவேனிற்பருவம் பங் குனி சித்திரை இரண்டும் என்று உரைக்கப்பட்டன. பெருமாள் சித்திரைமாஸத்தில் அயோத்தியினின்றும் புறப்பட்டருளியது; அகஸ்தியாசிரமத்திற்கெழுந்தருளுகையில், பத்துவருஷங்களாயினவென்று கூறப்பட்டன. பஞ்சவடியில் மூன்றுவருஷம், பதி னான்காவது வருஷம் சித்திரைமாதத்தில் சூர்ப்பணகையின் நாசியை யறுத்ததும், கராதிகளைக் கொலைசெய்ததும், அம்மாசத்திலேதானே ராவணன் பிராட்டியாரைப் பறித்தது. ஆடிமாசத்தில் வாலியைக்கொலைசெய்தது. முன் பனிப்பருவத்தில் சேனை களைச்சேர்த்தது. மார்கழி மாசத்தில் வாநரர்களை யனுப்பியது. பங்குனிமாசத்தில் சுக்லபக்ஷதிரயோதசியில் சிறியதிருவடி கடலைத் தாண்டியது. மறுநாள் மீண்டு வந்தது. பூர்ணிமையில் பெருமாள் சேனைகளுடன் புறப்பட்டருளியது. என்று முறை யுணர்க. இனிமேல் யுத்தகாண்டத்தில் கூறப்படுகின்றன.

முற்காலையில் வாநரர்களும் நரர்கள்போலவே இரண்டுகால்களினால் நடந்து கொண்டிருந்தனரென்று தோற்றுகின்றது. பாஷையும் வடமொழியே? அன்றியில், இவர்கள் தேவாம்சமாகையால், இவர்கள் மாத்திரம் மனிதர்போலிருந்தனர்களெனி னும் ஒக்கும்; வாநரர்களுள்ளும் பிராஹ்மணாதி ஜாதிகளுளவாகும்; அன்றியில், அங் குள்ள வேதியர்களை யழைப்பித்து அபிஷேகத்திற்கு ததீயாராதனஞ் செய்வித்தனர்க ளெனினும் ஒக்கும்.

காலத்தைக் கழித்து வாழ்வதற்கு இஃது தக்க இடமென்று தேர்ந்து, இளையபெருமாளை நோக்கிப் பாரடா தம்பி ! இந்த மலைக்குகையானது மிக வழகியதும், விசாலமாகியதும், மந்தமாருத முடையதுமாகின்றது ; இக்கார்காலங்களை இங்குறைந்து போக்குவோம்; இம்மலைச்சிகரமும் மிக வுயர்ந்தும், கறுத்தும், வெளுத்துமிருக்கின்ற பலவகைச் சிலைகள் பொருந்தியும், பற்பலதாதுக்கள் நிறைந்தும், குகை புதர் முதலியவைகளுற்றும், பற்பல மரஞ் செடி கொடிகளடர்ந்தும், பற்பல பறவைகளொலித்தும், குந்த திந்துக சிந்துவார மல்லிகா மாலதீ குரண்ட கதம்பார்ஜுந ஸர்ஜ காதிகளான செடி கொடிகள் மலர்ந்தும் திகழ்கின்றது ; இந்தத் தாமரையோடையும் மலர்ந்த தாமரைமலர்கள் நிறைந்து இக்குகைக்கு அருகிலே விளங்குகின்றது ; இக்குகை இம்மலையின் மேற்குத்திசையில் தென்மேற்குமுகமாக வாயிலை யுடையதாய் பின்புறத்திலுயர்ந்திருக்கின்றமையின், கீழ்காற்றடிக்காமல் கம்மென்றிருக்கும் ; இக்குகையின் வாயிலில் வியன்றகன்ற கல்லும், ஏற்றத்தாழ்வின்றி மழமழவென்று வழுழுண்டு பொடிசெய்திழைத்த மெய்யின் குவைபோல மின் மின் என்று திகழ்கின்றது; அடா லக்ஷ்மணு ! இம்மலைச்சிகரத்தின் வடபுறத்தைப் பாராய்; அது அஞ்சனத்திரள்போலவும், நீர்கொண்ட கொண்டல்போலவும் உயர்ந்து விளங்குகின்றது; தென்புறத்திலோவெனில், வெள்ளைக்கல்லொன்று கயிலைமலைச் சிகரம்போல உயர்ந்திருக்கின்றது ; இக்குகையின் கீழ்புறத்தில் கீழ்த்திசையை நோக்கிப் பெருகி விழுகின்ற இந்நதி மூன்று சிகரங்களையுடைய திரிகூடமலையில் பெருகி விழுகின்ற கங்கைபோல விளங்குகின்றது ; சம்பக சாம்பேய திலகா மலக தாலத மால ஸரள வகுளா திமுக்த பத்ம கேதக தவ வாநீர திமிச திரிட நீப வேத்ர க்ருத மால ஹிந்தாலாதியாயுள்ள பலவகை மரங்களும் அந்நதியின் இருகரைகளிலும் செழித்துத் தழைத்து விளங்குகின்றன ; இவைகளினுல் இந்நதி தளிர் மலர்களையே வஸந்தகாலத்தில் அணியாக அணிந்துகொண்டுலாவுகின்ற தருணிபோலத்திகழ்கின்றது; பலவகைப் பறவைகளும், தனித்தனி காந்தைகளுடன்கூடி மகிழ்ந்து கூவுகின்றன ; மணற்குன்றுகளும், அன்னப்புள், சாரஸப்புள், சக்கரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் நிறைந்தொலிக்கின்றன ; ஆதலின், இந்நதி மதமுற்ற மானினி மனமகிழ்ந்து நகைக்கின்றுப்போல விளங்குகின்றது ; இஃது சிலவிடத்தில் கருநெய்தல்களினுலும், சிலவிடத்தில் செந்தாமரை செங்கழுநீர்களினுலும், சிலவிடத்தில் வெண்டாமரை குமுதங்களாலும் நிறைந்து மறைக்கப்பட்டு விளங்குகின்றமையின், பலகலனுமணிந்த காந்தைபோல வொளிக்கின்றது; இது பலவகைப்பறவைகளாலும் ஒலிக்கப்பட்டும், மாமுனிவர்களினுலடையப்பட்டும், மிக வழகுற்றிருக்கின்றது காணுய் ; கடம்பமரங்களும், சந்தனமரங்களும், தொடுக்கப்பட்டனபோல அடர்ந்து விளங்குகின்றன ; அஹோ இவ்விடம் மிகவும் மனமகிழத்தக்கதாகின்றது; ஆதலின், நாம் இவ்விடத்

திலேதானே நன்கின்புற்று வாழ்வோம் ; இவ்விடத்திற்கு மஹாராஜர் வாழும் கிஷ்கிந்தாபுரியும் நெடுந்தூரமன்று ; அவ்விடத்தில் கூவுகின்ற வானரர்களின் சிங்கநாதமும், கீதவாதித்திரகோஷமும் கேட்கப்படுகின்றன வல்லவோ ? மஹாராஜர் சிறந்த வாநரராஜ்ஜியத்தையும், மிகுந்த செல்வத்தையும், மனத்துக்கினிய மனையாளையும் பெற்று நன்கு மகிழ்வுற்று வாழ்வார் ; என்றிவ்வண்ணம் அருளிச்செய்து இளையபெருமாளுடன் அம்மலையெங்குஞ்சுற்றிப் பற்பல விநோதங்களையுங் கண்டு அவ்விடத்திலேதானே வாழ்ந்தருளினர். இவ்வண்ணம் அவ்விடம் பற்பல விநோதங்களை யுடையதாகியும், பெருமாளுக்குக் கிஞ்சித்தாயினும் இன்பந்தந்திலது ; தம்முயிரினும் பிரியமுள்ள பிராட்டியாரைப் பறிகொடுத்து நினைந்து வருந்துகையில், இன்பமென்பது எங்குளதாகும் ; பெருமாள் இரவுகளில் இனிய சயநத்தில் படுத்திருக்கினும், கீழ்த்திசையில் உதிக்கின்ற சந்திரனைக் கண்டு விரஹத்தீபற்றி யெரித்தமையின், இன்புற்றுத் துயில்கொண்டிலர் ; இவ்வாறு நாடோறும் பெருமாள் துயிலின்றிச் சோகமுற்று வருந்துகையில், இளையபெருமாளும் மிக வருந்தி அய்யனை நோக்கிக் கேட்டருளீர் தனிவீரரோ ! தேவரீர் இதுகாறும் துன்புற்றது போதும், தேவரும் இவ்வண்ணம் சோகிப்பது தகுமோ ?—

శోచతోవ్యవసీదన్తి సర్వార్థావిదితంహితే
భవాన్క్రియాపరోలోకే భవాన్దైవపరాయణః
ఆస్తికోధర్మశీలశ్చ వ్యవసాయీచరాఘవ ॥

சோசதோவ்யவஸீதந்தி ஸர்வார்த்தாவிதிதம்ஹிதே
பவான்க்ரியாபரோலோகே பவான்தைவபராயண:
ஆஸ்திகோதர்மசீலச்ச வ்யவஸாயீசராகவ.

சோகமுற்று வருந்துபவர்களுக்கு எல்லாப்பயன்களும் அழிந்துவிடுகின்றன ; இவ்விஷயம் தேவர் திருவுளமறிந்ததேயன்றி, வேறில்லையே ? அன்றியிலே, தேவர் இவ்வுலகினில் புருஷகாரத்தை முதன்மையாகவுடையவரும், தெய்வஸங்கற்பமும் அதற்குத் துணையென வறிந்தவரும், மறுமையுளதென்னும் உண்மையை யறிந்தவரும், தருமத்தையே இயல்பாகவுடையவரும், முயற்சி யுடையவருமாகின்றீரல்லீரோ ? முயற்சியிலாதோர் பகைவரை வெல்வதெவ்வண்ணம், மேலும் கபடமுடைய கொடிய அரக்கர்களைத் தேவர் மிக முயற்சிசெய்தே கொலைசெயல்வேண்டும் ; தேவர்தான் அவர்களைக் கொலைசெய்யவல்ல தோள்வலியுற்றவர் ; ஆதலின், தேவர் இந்தச் சோகத்தை வேருடன் களைந்தழித்து அழியாமுயற்சியை மேற்கொண்டருள்க ; பின்பு, ராவணனைப் புத்திரமித்திரகளத்திராதிகளுடன் கொலைசெய்தருள்க ; தேவர் திருவுளஞ் சிறியருளுவீராயின், காடு

கடல் மலைகளுடன் கூடிய இப்பார் முழுதையும் வேறுப்படுத்தவல்லீர்; எனின் இவ்வரக்கனைக் கொலைசெய்தலரிதாகுமோ? இப்போழ்து கார்காலம் நிகழ்கின்றமையின், இக்காலங்கழிந்து கூதிர்காலம் வருமளவும் எதிர்பார்த்திருந்தருள்க; அநந்தரம், ராவணனை நாடு நகரத்தவர்களுடன் கொலைசெய்தருள்வீர்; நீறுபூத்த நெருப்பை நெய்யாகுதிகளினுல் ஜொலிக்கும்படி செய்வதுபோல மானிடபாவனையினுல் உள்ளடங்கிய தேவருடைய இயல்பான பராக்கிரமமென்னும் பெருந்தீயைத் தக்க காலங்களில் நினைவூட்டி மேலெழுந்தெரியச்செய்வேன்; என்றிவ்வகையாக விண்ணப்பஞ்செய்து பெருமாள் சோகந்தணியுமாறு தேற்றியருளினர். பெருமாளும் அன்பும் பத்தியும் ஆவலும் பூண்டு தேற்றிய இளையபெருமாளுடைய இவ்வாக்கியங்களைக்கேட்டருளி மகிழ்ந்து புகழ்ந்து அவரைநோக்கி, அடா என்னன்புள்ள ஸஹோதரா! அன்பும் நேசமும் பிரியமும் இதமும் சத்தியமும் பராக்கிரமமும் உடைய தோழன் சோகமுறுங்கால் எவ்வண்ணமுரைசெய்து தேற்றுவானே? நீயும் அவ்வண்ணமே யுரைசெய்தாய்; எல்லாக்காரியங்களையும் அழிக்கவல்ல சோகத்தை யான் துறந்துவிட்டேன்; விக்கிரமங்களில் தடையின்றிச் செல்லுகின்ற தேஜஸ்ஸை மேற்கொண்டேன்; கூதிர்காலத்தையும் எதிர்பார்த்திருக்கின்றேன்; உன்னுடைய வாக்கியத்தின்படியே திரமுற்றிருக்கின்றேன்; மஹாராஜருடையவும், நதிகளினுடையவும் பிரஸாதத்தை (அனுக்கிரஹத்தை—தெளிவை)க்கோரியிருக்கின்றேன்; மஹாராஜர் நம்மிடத்தில் உபகாரத்தை யடைந்திருக்கின்றமையில், நமக்கும் அவர் பிரதியுபகாரஞ்செய்வார்; உபகாரத்தை யடைந்தவன் நன்றியை மறந்து பிரதியுபகாரஞ்செய்யானுகில், எல்லாருக்கும் பகையாகி எல்லோராலும் மனம் நொந்து பழிக்கப்படுவான்; என்றருளிச்செய்தனர். இளையபெருமாளும் இவ்வருளிச்செயல்களைக்கேட்டு மகிழ்ந்து புகழ்ந்து ஞானக்கண்ணினுல் முன்வருவதையெல்லாமறிந்து அதனைப் பெருமாளிடத்திலும் விஜ்ஞாபனஞ்செய்து மீளவும் அவரை நோக்கி, எம்மையரோ! தேவர் அருளிச்செய்தபடியே மஹாராஜர் தேவர் திருவுள்ளத்தையெல்லாம் நிறைவேற்றுவர்; கூதிர்காலத்தை எதிர்நோக்கி, இக்கார்காலங்கழியுமளவும் சோகத்தையும் கோபத்தைம் உள்ளடக்கி ஆடி ஆவணி புரட்டாசி ஐப்பசியென்னும் இந்நான்குமாசங்களையும் என்னுடன் கூடி இம்மலையிலேதானே கழித்துப் பின்பு பகைவரைக் கொலைசெய்வதில் முயற்சிசெய்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து தேற்றிப் பெருமாளையும் மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்து வாழ்ந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தேழாவது சருக்கம்

முற்றிற்று.

இருபத்தெட்டாவது சருக்கம்.

பெருமாள் இளையபெருமாளுடன் கார்காலத்தை வர்ணனைசெய்தருளியது.

அந்தப்பெருமாள் அவ்வண்ணம் வாலியைக்கொன்று மஹாராஜர்க்கு அபிஷேகமும் செய்வித்தருளி மாலியவந்தமென்னும், ப்ரஸ்ரவணமென்னும் கூறப்பட்ட மலையின் சிகரத்தில் வாழ்கையில், இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மண! இப்போழ்து கார்காலம் நன்றாகத் தோன்றிற்று; மலைபோலப்பருத்துயர்ந்த நீருண்ட கொண்டல்களினால் விண்டலமெங்கும் மண்டிதமாய் இருண்டிருக்கின்றது; விண்ணென்னும் ஒண்டொடியாள் கதிரவன் கிரணங்களினால் கடலினின்றும் ஆகர்ஷிக்கப்பட்ட உப்புநீரைக் கார்த்திகைமாதம் முதல் ஆடிமாதமளவாக ஒன்பதுமாதம் கர்ப்பந்தரித்து உருசியுள்ளதாக்கிப் பெறுகின்றது; உலகிலுள்ள வனிதையர்களும் தத்தம் நாயகனுடன் புணர்ந்திவ்வாறே கர்ப்பந்தரித்து நன்மக்களைப் பெறுகின்றனர்களல்லரோ? பிராட்டியும் பிரிந்திலளாயின், இவ்வண்ணமே மக்கட்பேறுடையாளாகுவாளந்தோ? மேகங்களென்னும் படிவழியாய் விண்ணின்மிசையேறி கிரிமல்லி முதலிய நறுமலர்களினால் ஸூரியமண்டலமத்தியிலெழுந்தருளியிருக்கின்ற நங்குலதெய்வமான ஸ்ரீமந்நாராயணனைப் பூஜிப்பது தகும்; சந்தியின் செம்மைபடர்ந்து இடையிடையில் வெண்மையையும் பொருந்திக் கண்டங்கண்டமாயுள்ள மேகங்களினால் ஆகாசம் மெய்முழுதும் காயமுற்று அதனை யாற்றுவதன்பொருட்டு மருத்துச்சீலை (ப்ளாஸ்திரி) யுற்றிருப்பதுபோலக் காணப்படுகின்றது; விண்டலம் மந்தமாருதமென்னும் பெருமூச்சுற்றதும், சந்திச்செவ்வியென்னும் செஞ்சாந்தமப்பியதும், வெண்மேகங்களினால் மெய் வெளுத்ததுமாகிக் காமாதுரன்போலக் காணப்படுகின்றது; இப்பார்மகளும் தன் மகளான சீதைபோலவே தாபத்தினால் பீடிக்கப்பட்டும், தாரைதாரையாய்ப் பெருகிவரும் தெளிநீரில் நனைந்தும், பாஷ்பத்தை (கண்ணீரை—ஜலதூமத்தை) விடுகின்றனள்; மேகத்திடையில் தோன்றி செங்கழுநீர்மலர்களில்படிந்து தண்மையுற்று, தாழைமடல்களையுஞ் சேர்ந்து மணமுற்று வீசுகின்ற இக்காற்றுகளும் கைகளினால் வாரியள்ளியெடுத்துப் பருகத்தக்கன வாகின்றன; இந்த மாமலை மஹாராஜர்போல மலர்ந்த மலைமல்லி கடம்புகளையுடையதாகித் தாழை மடல்களினால் மணமுற்றுத் தீர்த்த தாரைகளினால் அபிஷேகஞ்செய்யப்படுகின்றது; இம்மலைகளும் கருமுகிலென்னும் கிருஷ்ணாஜிநத்தையுடுத்து, வர்ஷதாரையென்னும் யஜ்ஞோபவீதம் பூண்டு, காற்றினால் பூரிக்கப்பட்ட குகைகளுடையதாகித் தொனியுற்றிருக்கின்றமையின், வேதமோதும் மாணுக்கர்கள்போலக் காணப்படுகின்றன; ஆகாச

களினுடைய மனத்தை வருத்தமுறச் செய்வானல்லனே ? என்றிவ்வண்ண மருளிச்செய்கையில், இளையபெருமாளதைச்செவியுற்று மகிழ்ந்து பெருமாளை நோக்கி, எம்மையரோ! தேவரருளிச்செய்தது உண்மையே? மஹாராஜர் இம்மழைகாலங் கழிந்ததும் பிராட்டியைத்தேட முயற்சிசெய்வதில் தடையில்லை; ஆதலின், தேவர் சரத்காலத்தையே யெதிர்நோக்கி இக்காலத்தைத் துன்புறாமல் கழித்தருள்க; என்று வேண்டி விண்ணப்பஞ் செய்தனர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தெட்டாவது சருக்கம் முற்றிற்று.

இருபத்தொன்பதாவது சருக்கம்.

சிறியதிருவடி மஹாராஜர்க்குணர்வூட்டிச் சேனைகளை யழைப்பிக்கும்படி கட்டளை செய்வித்தது.

அங்கே மஹாராஜர் கார்காலம் நீங்கி யாகாசம் மேகமின்றி நின்மலமாகி அன்னப்பறவைகளினெலிகொண்டு சந்தனம்போலக் குளிர்ந்தும் வெண்மைநிறமுற்றுமுள்ள நிலவினுல் திகழ்ந்திருக்கையிலும், காமமயக்கினலறியாமல் தர்மார்த்தங்களையுந்துறந்து நல்வழிதப்பி யெப்பொழுதும் அந்தப்புரத்திலேயேயிருந்து மதுபானஞ்செய்து மதங்கொண்டு தன் கோரிக்கையெல்லாமீடேறித் தன் மனைவியான ருமையையும், மனத்துக்கினிய தாரையையும் அடைந்து அச்சம்தீர்ந்து அல்லும் பகலும் இடைவிடாமல் விஹாரஞ்செய்துகொண்டு நந்தநவனத்தில் தெய்வப்பொதுமகளிர்களுடன் கூடி விளையாடுகின்ற விண்ணவர் வேந்தன்போல மகிழ்ந்து ராஜ்ஜிய காரியங்களை மந்திரிகளாதினஞ்செய்து அவர்கள் யாது செய்ததையும் ஆராயாமல் காமமோகிதனுகியிருப்பதைச் சிறியதிருவடி கண்டு மிகவும் ராஜபக்தியுடையவரும், காலதேசவிசேஷங்களையறிந்தவரும், மிகவும் நுண்ணறிவுடையவருமாதலால், இவர் இப்பொது பெருமாளுடைய

---

* இந்த ஸர்க்கத்தில் பெருமாள் அடைக்கலமாக அடைந்தவர்களைப் பிரிவதில் தமக்குள்ள துன்பத்தை அன்யாபதேசமாய் சுலோகந்தோறும் அருளிச்செய்திருக்கின்றனர் ; அதனை முறையே சருக்கமாகக் காட்டுகின்றேன் ; சில சேதனர்களுக்கு புராதன கர்மபரிணமத்தாலே மடமையைத்தருகின்ற காலம் நேர்ந்தது ; மனம் இருளாலே மூடப்பட்டது ; சிலர் நல்வினையினலே என்னைத்தொழுகின்றனர் ; சிலர் காமக்குரோதாதிகளாலே பீடிக்கப்படுகின்றனர்கள் ; என்றிவ்வகையாகவே நுண்ணறிவினுல் உணர்ந்து கொள்க.

காரியத்தில் முயற்சியில்லாமலிருப்பது தகுதியற்றதென்று ஸமயம்பார்த்து மதுரவாக்கியங்களினாலே மஹாராஜனைமகிழ்வித்து தற்காலத்திலும் எதிர்காலத்திலும் மறுமையிலும் நன்மை விளையுமாறு பிரீதி விசுவாஸ பூர்வமாக மஹாராஜனைக்கிட்டிமொழியலுற்றனர். கேளீர் மஹாராஜரே! தாங்கள் கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப்பெற்று கீர்த்தியுற்று குலமுறையாகவந்த செல்வத்தையும் அடைந்து மகிழ்ந்தீர்; ஆயினும், மித்திரர்களைச் சேர்த்துக்கொண்டு மகிழ்விக்கவேண்டும்; தங்களுக்கு அந்த காரியமொன்றே மிகுந்துளது; யாவன் மித்திரர்களிடத்தில் காலத்தை யறிந்து நடந்துகொள்ளுகின்றானோ? அவனுக்கே இராஜ்ஜியம் கீர்த்தி பராக்கிரமங்கள் வளரும்; யாவனுக்கு பொருள் சேனை தோழர் செங்கோலிவை சேர்ந்திருக்கின்றனவோ? அவனே நெடுங்காலம் பாராள்வான்; ஆதலின், தாங்களும் நற்குண நற்செயலுடையீரும், நல்வழி துறந்திலீரும் ஆகின்றீர்கள்; ஆகையால், முன்னமே யுதவிசெய்த தோழருடைய காரியத்தை முயற்சி செய்து முடிக்கக்கடவீர்கள். யாவனொருவன் எல்லாக்காரியங்களையும் விட்டு விட்டாவது மித்திரகாரியத்தையே மேற்கொண்டு செய்து முடிக்கின்றானோ? அவனுக்கு ஒருக்காலும் தீமைகள் நேரா; இப்போது நமக்கு மித்திரகாரியம் ஸீதாபிராட்டி யெழுந்தருளியிருக்குமிடத்தைத் தேடுவதே யாகின்றது; அந்தக் காரியம் செய்யும் காலமும் நேர்ந்துளது; செயற்குரிய காலங் கடந்தபின்பு, யாவனொருவன் மித்திரகாரியங்களில் முயற்சியுறுவானோ? அவன் அக்காரியத்தைச் செய்து முடித்துத்தரினும் உதவி செய்தவனாகான்; பெருமாளுக்கு உடனே பிராட்டியாரைத் தேடுவிக்கவேண்டுமென்று திருவுளமிருக்கினும் தாங்களேற்படுத்திய காலங்கழிவதன்முன்னம் அவஸரப்பட்டுத் தங்களுக் கறிவித்தருளார்; தங்களுடைய குலஞ் செழிப்பதற்குக் காரணமும், நீங்கா நட்புடையவரும், அளவிடற்கரிய பிரபாவமுடையவருமாகிய அந்த ஸ்ரீராமசந்திரருக்குத் தாங்களும் நிகரான தோழராகின்றீர்கள்; அவர் தங்களுக்கு முன்னமே யுதவிசெய்திருக்கின்றமையில், அவர் காரியத்தைத் தாங்கள் ஆவலுடன் செய்க; வானரசேனைகளைச் சேர்ப்பதற்காகத் தூதர்களுக்குக் கட்டளைசெய்தருள்க; பெருமாள் தங்களை ஏவுமளவும் மித்திரகாரியஞ் செய்யவேண்டிய காலங் கழிந்திலதென்றே யெண்ணவேண்டும்; ஏவினபின்பு, அந்தக்காலங்கழிந்து விட்டதாகவே யாகும்; முன்னம் உபகாரஞ் செய்யாதவர்களுக்கும் தாங்கள் உபகாரஞ் செய்தவர்களாகின்றீர்கள்; ராஜ்ஜியத்தினாலும், தனத்தினாலும் உபகாரஞ்செய்த பெருமாள் விஷயத்தில் கேட்கவேண்டுமோ? அநேகமாயிரம் ருக்ஷவானர கோலாங்கூலாதிகளுக்கு இறையாகிய தாங்கள் அந்தக் காரியத்தைச் செய்யும் திறமையுடையீராகியும், கட்டளையிட ஏன் தாமஸஞ் செய்கின்றீர்கள்; பெருமாளும்முடைய உதவியின்றியே ஸுராஸுர மஹோரகராக்ஷஸசாதிகளையும்கொன்று வெற்றிக்கொள்ளத்திறமையுடையவராகியும், தாங்கள் பிராட்டியிருப்பிடத்தை யானே வானரர்களைக்

கொண்டு தேடுகின்றேனென்று பிரதிஜ்ஞைசெய்திருக்கின்றமையின், அந்தப் பிரதிஜ்ஞையை நிறைவேற்றுவதன்பொருட்டு எதிர்பார்த்திருந்தருளுகின்றனர்; பெருமாள் தங்களுக்குத் தம்முயினை விடுவதிலும் அச்சமின்றி மஹோபகாரஞ்செய்தருளினர்; ஆதலின், பிராட்டி மண்ணுலகிலோ? விண்ணுலகிலோ? எங்கிருக்கினும் தேடி வருவோம்; தேவாஸுர கந்தர்வ யக்ஷகின்னரோரகாதியர்களும் பெருமாளுக்குத் தீமைசெய்யத் திறமை கொள்ளார்களாயின், அரக்கர்கள் எவ்வண்ணந் தீமைசெய்யவல்லவராவார்கள். ஆதலின், அத்தன்மையரான பெருமாளுக்கு உதவிசெய்ய முயற்சி செய்க; தங்களுடைய கட்டளையினாலே யாங்கள் செல்வோமாயின், பாதாளத்திலாயினும், பூமியிலாயினும், ஜலத்திலாயினும், வானிடையிலாயினும், விண்ணுலகிலாயினும் தடையிலது; ஆதலின், கட்டளை செய்தருள்க; யாவன் எவ்விடத்தில் யாது செயல் செய்யக்கடவன். அநேகங்கோடி வானரர்கள் தங்கள் கட்டளையை எதிர்பார்த்திருக்கின்றனர்களல்லரோ? என்றிவ்வண்ணமுரைசெய்த சிறியதிருவடி வாக்கியத்தை மஹாராஜர் கேட்டு மனந்தெளிந்து ஸேனாபதியான நீலனை யழைத்து நாற்றிசைகளிலுமுள்ள வானரசேனைகளை யெல்லாம் அழைப்பிக்கும்படி நிச்சயித்து அவனை நோக்கிக் கட்டளைசெயலுற்றனர். கேளடா நீலா! அங்கங்குள்ள சேனைகள் கட்டளையைக் கேட்டவுடனே சிறிதுந் தாமஸமின்றி எவ்வண்ணம் புறப்பட்டு வருமோ? அவ்வண்ணம் வேகமுள்ள வானரஸேனாந்த பாலர்கள் விரைவாகச் சென்று அழைத்துவரக் கடவர்கள். நீயுமருகிலுள்ள சேனைகளை யழைத்து வருக; பதினைந்து நாளைக்குள்ளே எல்லோரும் இங்கே வந்து சேர்ந்துவிடவேண்டும்; அந்நாள் கடந்து யாவன் வருவானோ அவனுக்குடனே விசாரணையின்றி உயிர் வாங்குந் தண்டனை விதிக்கப்படும். ஆதலின், நீ யிப்பொழுதே அங்கதகுமாரனுடன் சேர்ந்து ஜாம்பவான் முதலிய பெரியோர்களைக்கண்டு என் கட்டளையை நன்காராய்ந்து தடையின்றிச் செய்க; என்றிவ்வண்ணம் மஹாராஜர் கட்டளைசெய்துவிட்டந்தப்புரத்தினுள்ளே சென்று மகிழ்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் இருபத்தொன்பதாவது சருக்கம்

முற்றிற்று.

முப்பதாவதுசருக்கம்.

கார்காலம் கழிந்தும் மஹாராஜர் முயற்சியின்றி யிருப்பதறிந்து பெருமாள் திருவுளஞ் சீறி யருளியது.

அங்கே பெருமாளும் கார்காலம் நீங்கி, மேகங்களின் தடையின்றி, யாகாயம் நின்மலமாக விளங்குகையில், கார்காலம் நான்கு மாதங்களையும் காமசோகமோக பீடையினால் வாடி வருந்திக் கழித்து ஆகாயம் வெண்மை யுற்றிருப்பதையும், சந்திரன் நின்மலமாக விளங்குவதையும், சரத்கால ராத்திரியும், நிலவென்னும் வெண்சாந்தம்பூசி யொளிப்பதையுங்கண்டு மஹாராஜர் முயற்சியின்றிக் காமவேட்கைகொண்டிருப்பதையும், சீதா தேவி பிரிந்து வருந்துவதையும் நினைந்து மிக வருந்தி மோகமடைந்து பின்பு தெளிந்து பிராட்டியையே நினைந்து கொண்டு திரிந்து நாநாவித தாது ராகமுற்ற அம்மலையின்மிசை யுட்கார்ந்து நின்மலமான வானை நோக்கி, யன்னப்புள்ளின் ஒலியையும் கேட்டு நாயகியை நினைந்து வருந்தி யழத்தொடங்கினர். அந்தோ ? முன்பு ஸாரஸப்பறவைகளின் தொனிகளை என்னுடன் சேர்ந்து செவியுற்று மகிழ்ந்த பான்மொழியளான என்னாயகி இப்போழ்து அவைகளின் தொனியைக்கேட்டு எவ்வண்ணம் மகிழ்வுறு வாள் ; மலர்ந்த பொன்போன்ற பந்தூகமலர்களைக்கண்டும் என்னைக் காணமல் எவ்வண்ணம் மகிழ்வாள் ; முன்பு யாவள் களஹம்ஸங்களின் கலநாதத்தினல் துயிலுணர்ந்து மகிழ்ந்தனளோ ? அவள் இப்போது எவ் வாறு மகிழ்வாள் ; மகிழ்ந்தொலிக்கின்ற சக்கரவாகப்புள்ளின் தொனியைக் கேட்டும் எவ்வண்ணம் என்னைப்பிரிந்து உய்வள்; அந்த மனத்துக்கினிய மனையாளின்றி, வாபீகூபதடாககிரிகானனங்களைக் காணினும் மகிழ்வுறு கின்றிலேன் ; என்னைப்பிரிந்து வருந்துகின்ற என் மனையாளை சரத்கால குணங்களினல் நிறைந்த காமன் நன்கு வருத்தாது அருள்செய்வன் கொலோ ! என்றிவ்வண்ணம் பெருமாள் நீரின்றிச் சாதகம் புலம்புவது போலப் புலம்பி வருந்திக்கொண்டிருந்தனர். அப்பொழுது காய் கனிகள் கொணர்வதன்பொருட்டுப் புறத்தில் சென்றிருந்த இளையபெருமாள் எழுந் தருளிப் பெருமாளிவ்வண்ணம் சோகமுற்று வருந்துவதைக்கண்டு பெரு மாளை நோக்கி, எம்மையனே ! தேவர் இப்பொழுது காமனுக்குக்குறியாகி வருந்துவதினலாயினும், இயல்பாயுள்ள பௌருஷத்தை யிகழ்வதினலாயி னும், பிராட்டியைத்தேடுவதில் முயற்சிசெய்யவேண்டுவதைத் துறப்பதின லாயினும் யாது பயன் ; மனந்தேறி யுகந்தருள்க ; காரியத்தில் முயற்சி யையும், மனந்தெளிவுற்றிருப்பதையும், தைரியம் உபாயங்களை மேற் கொள்ளத்தக்க காலம் நேர்ந்ததையும், மஹாராஜர் முதலானோர்களின் உதவி செய்யுந் திறமையையும், தேவபூஜை முதலியவைகளால் வாய்த்த

நல்வினையையும் கண்டு மகிழ்ந்தருள்க; தேவருடன் கூடிய பிராட்டியை மனதினுல் விரும்புவதற்கும் வேறே யொருத்தனும் திறமைகொள்ளான்; தீயின் ஜ்வாலையைக் கிட்டிய எவன்தான் எரிந்தழியான்; என்றிவ்வண்ணம் இதமாகவும், உண்மையாகவும், இனிதாகவும் மொழிந்து தேற்றினர். பெருமாளும் அதுகேட்டு மனந்தேறி யவரை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மண! நீ மொழிந்தவாறு சீதாதேவியைத் தேடுவதில் முயற்சிசெயல்வேண்டுமே? போர்செய்வதற்குரிய உற்சாஹாதிகளையும் மேற்கொளல்வேண்டும்; சீதையைப்பெறும் உபாயம் நன்றாக ஆலோசனை செயல்வேண்டுமே? இவ்விஷயத்தில் சிறிதும் ஐயமிலது; என்று அருளிச்செய்து பிராட்டியை நினைந்து முகம் முகிழ்ந்து வருந்தி மீளவும் இளையபெருமாளை நோக்கி, அடா தம்பி! பரஜன்யதேவனும் மழைபொழிந்துலகங்களை மகிழ்வித்து மீண்டுச் சென்றனன்; மேகங்களும் நாடு நகர் காடு மலை முழுதலும் பரவி முழங்கி மழை பொழிந்திளைத்து மால்யானைகள் மதமேறி யெங்குமலைந்து மதம் நீங்கி யிளைப்புற்றனபோலாயின; மழைக்காற்றுகளும் குளிர்ந்தும்,குடஜம், அர்ஜுனம், கேதகிகளின் மணங்கொண்டு வீசி யிளைத்தொழிந்தன; மேகங்களினுடையவும், மதவேழங்களினுடையவும், மயில்களினுடையவும், மலையருவிகளினுடையவும், மிக்க வொலிகள் குலைந்தன; மலைகளும் மழையினுல் நின்மலமாகிப்பற்பல தாதுக்களின் காந்திகொண்டு நற்சாந்தமப்பின போல விளங்குகின்றன; இக்காலத்திலாறுகள் முதன்முதல் நாயகருடன் புணர்கின்ற குலமகளிர்கள் வெட்கத்தினுல் மெல்ல மெல்ல ஜகனத்தைக் கட்புலனுக்குவதுபோல மணற்குன்றுகளை வடிவினுல் மேல்ல மெல்லக் கட்புலனுக்குகின்றன; இப்பொழுது இந்த சரத்காலம் தன்னுடைய செல்வத்தை யேழிலை வாழைமரங்களின் கிளைகளிலும், ஸூரியன் சந்திரன் விண்மீன்களின் ஒளிகளிலும், சிறந்த யானைகளின் லீலைகளிலும், பகிர்த்துக்கொண்டு விளங்குகின்றது; இவ்வண்ணம் பற்பல இடங்களில் பலவகைப்பட்ட சரத்காலத்தின் செல்வமானது இப்பொழுது கதிரவன்கிரணத்தினுல் மலர்க்கப்பட்ட தாமரைமலர்களின்மேலே மிகவும் அதிகமாக விளங்குகின்றது; ஏழிலம்பாலை மலர்களின் மணங்கொண்டு களிவண்டுகளின் ஒளி மிகுந்து வீசுகின்ற காற்றும் மதவேழங்களினுடைய திரளை மனம் வெகுண்டு மதம்மிகுந் துலாவச்செய்கின்றது; மழைகாலத்தில் புறத்தில் போய்வந்து அழகிய சிறகுகளையுடைய கமலமலர்களின் தூளிகள் படிந்து நீரிலுலாவி மஹாநதிகளின் மணற்குன்றுகளிற்கூடிய சக்கரவாகங்களுடன் சேர்ந்து அன்னப்பறவைகள் விளையாடுகின்றன; மதங்கொண்டு பிளிறுகின்ற, களிறுகளும், இறுமாப்புற்ற காளைகளும் கலக்கமின்றித் தெளிவுற்ற ஆறுகளும் மிகவும் ஒளிகொண்டு விளங்குகின்றன, மயில்களும் கருமுகிலினுல் விடப்பட்டு நின்மலமான விண்தலத்தைக்கண்டு, தோகைகளையுமுதிர்த்து ஒளிகுன்றி பேடுகளினிடத்திலாவலழிந்து சிந்தைகொண்டிருக்கின்றன; இனியகந்தங்கள் பொருந்தி மலர்களின் பாரத்தினுல் முனையில்

வணங்கிப் பொன்னிறமுற்றுக் காணற்கினிய பந்தூகமரங்களினால் காடெங்கும் மிகவும் ஒளிகொண்டு விளங்குகின்றது; வசைகளுடன் கூடினவும், தாமரைகளின் மேல் ஆசையுடையனவும், காடெங்குமலைந்து ஏழிலைம்பாலை மலர்களின் பரிமளத்தை மோந்து மதங்கொண்டனவுமாகிய யானைகள் இப்போது மெல்ல மெல்ல நடக்கின்றன; ஆகாசம் மேகங்களின்றித் தீட்டிய சஸ்திரம்போன்ற வண்ணமுற்று விளங்குகின்றது; ஆறுகளும் நீர்வற்றி மெதுவாகப் பெருகுகின்றன; காற்றும் செங்கழுநீர்மணம்பொருந்திக் குளிர்ந்து வீசுகின்றது; திசைகளும் இருளின்றி விளங்குகின்றன; பூமியும் கதிரவன் கிரணங் காய்வதினால் சேறுலர்ந்து துகளெழுகின்றது; ஆதலின், ஒருவர்க்கொருவர் பகையும் பொறாமையுங்கொண்ட அரசர்களுக்கு; இது போர் முயற்சி செய்யுங்காலம் நேர்ந்தது; சரத்காலகுணங்களினால் வளபந்த தேஹகாந்தியுற்று மகிழ்ந்து தூளிபடிந்து மதங்கொண்டு போருகின்ற காளைகள் தம்மினத்திடையில் ஒலிக்கின்றன; காமவேட்கைகொண்டு காட்டிடையில் மெல்ல மெல்ல உலாவுகின்ற மதயானையை யாசையுடன் வசைகளும் சூழ்ந்து செல்லுகின்றன; மயில்களும் தமக்கணிகள்போன்ற தொகையை யுதிர்த்துவிட்டு அன்னங்களின் ஒலியினால் மிதட்டப்பட்டனபோலத் தீனங்கொண்டு நதிகளின் கரையில் மதங்குன்றி யிருக்கிறன; மயக்குற்ற யானைகள் பிளிறல்களினாலே காரண்டவம் முதலிய நீர்ப்பறவைகளை யச்சமுற்றோடச்செய்து தாமரைமலர்கள்மலர்ந்தழகாய குளங்களிலிறங்கிக் கலக்கிக்கலக்கி நீர் குடிக்கின்றன; கலக்கந்தெளிந்து மணற்குன்றுகள் தோன்றி உருசியுற்ற நீர் பொருந்திக் கோகுலங்களுடன் கூடி ஸாரஸப்புள்ளின் தொனியும் பொருந்தி விளங்குகின்ற நதிகளில் அன்னப்பறவைகள் மகிழ்ந்து வந்தடைகின்றன; இப்போது நதிகளினுடையவும், மேகங்களினுடையவும், மலையருவிகளினுடையவும், பெருங்காற்றினுடையவும், மயில்களினுடையவும், மண்டூகங்களினுடையவும் ஒலிகள் அழிந்தன; பற்பலவண்ணமுடைய கார்ப்பருவத்தில் புற்றிலடங்கி யிளைத்திருந்த நாகங்களும் பசியினாற் சினங்கொண்டு விடம் மிகுந்து இரைதேடித் திரிகின்றன; சந்திரனென்னும் காந்தனுடைய கிரணங்களென்னும் கைகளின் ஸம்பந்தத்தினால் மகிழ்ந்து மலர்ந்த தாரகை (விண்மீன்—கருவிழி) யுடைய சந்தியென்னும் காந்தை ராக (செம்மை—ஆசை) முற்றுத் தானாகவே அம்பரத்தை (ஆகாயத்தை—ஆடையை) விட்டுவிடுகின்றனள். அந்தோ? இரவென்னும் வனிதையும், சந்திரனென்னும் முகத்தையும், விண்மீன்களென்னுங் கண்களையும், நிலவென்னும் வெண்பட்டும் உடையளாகி விளங்குகின்றனள். பக்குவமான செம்பாக்கதிர்களைத்தின்று மகிழ்ந்த ஸாரஸப்பறவைகளின் நிரையானது விரைவாக ஆகாயத்தில் பறந்து செல்லுகையில், காற்றினலசைக்கப்பட்ட தோரண மாலைபோல விளங்குகின்றது; ஓரன்னப்பறவை யுறங்குகின்ற குமுதங்கள் மலர்ந்த இக்குளமானது மேகங்களின்றி, விண்மீன்கள் நிறைந்து சந்திரனையுமுடைய விண்ணிடைபோல விளங்குகின்றது;

மும் மின்னற்கொடிகளென்னும் பொன்னாற்செய்த கசைகளினாலடிக்கப்பட்டு முழங்கும் மேகங்களினால் வேதனையுற்றழுகின்றதுபோலும், கருமுகிலிடையில் துடிக்கின்ற மின்கொடியைக்கண்டபின்ன ரென்மனத்திடையில் குடிகொண்ட துடியிடையாளும், கொடிய ராவணனுடைய மடியில் இவ்வண்ணந் துடித்துக்கொண்டே சென்றிருப்பளெனத் தோற்றுகின்றது; மேகங்களினால் பூசப்பட்டனபோன்ற இப்பத்துத்திசைகளும் காமித்துக் காமினியர்களைப் புணரும் காமுகர்களுக்கு மிகவும் இனியன; சிலவிடத்தில் கிரிமல்லிகள் ஜல தூமங்களினால் சூழப்பட்டுச் கார்காலத்தை எதிர்நோக்கி மலர்ந்திருக்கின்றமையின், கணவனைப்பிரிந்து கண்ணீர்பெருக்கிக் கார்காலம் நேர்ந்தமையின், கணவன் வருவானென்று மகிழ்ந்து நகைகொண்ட நாணுதலார்போலிருக்கின்றன; இவைகள் விரகமடைந்த எனக்குத் துன்பந்தருகின்றன ;—

రజఃప్రశాన్తం సహిమోఽద్య వాయుః నిదాఘదోషప్రసరాః ప్రశాన్తాః
స్థితాహి యాత్రా వసుధాధిపానాం ప్రవాసినో యాన్తి నరాః స్వదేశాన్,

ரஜஃப்ரசாந்தம்ஸஹிமோத்யவாயுர் நிதாகதோஷப்ரஸராச்சசாந்தா꞉
ஸ்திதாஹியாத்ராவஸுதாதிபாநாம் ப்ரவாஸிநோயாந்திநராஸ்வதேசான்.

வானம் மழைபொழிகின்றமையின், தூளிகளடங்கின; காற்று குளிர்ந்து வீசுகின்றது; முதுவேனிற்காலத்திலுண்டாகிய வெம்மை வேர்வை முதலிய தோஷங்களெல்லாம் அழிந்தன; வெற்றித்தார்வேந்தர்கள் பகைவர்மேல் படையெடுத்துச் செல்லும் முயற்சிகள் நின்றன; தூரதேசஞ் சென்றவர்களெல்லோரும் மீண்டு தத்தமிருப்பிடம்போய்ச் சேர்கின்றனர்கள். அன்னப்பறவைகள் மானஸஸரோவரத்தை நோக்கிப் புறப்பட்டுச் செல்லுகின்றன; சக்கரவாகங்களும் காமவேட்கையினால் பேடுகளுடன் சேர்ந்திருக்கின்றன; வழிகளெங்கும் நிரந்தரம் மழைபொழிந்தழிந்திருப்பதினால் வண்டி முதலிய வாகனங்கள் செல்லுகின்றில; ஆகாயம் மேகங்களினால் பரவப்பட்டு சில விடங்களில் பிரகாசமாகவும், சில விடங்களில் பிரகாசமின்றியும், சில விடங்களில் மலைகளினால் தகையப்பட்டு அலைகளின்றித் தேங்கிய கடல்போலும் விளங்குகின்றது; வேங்கை கடம்பைகளின் பூவினால் நன்மணமுற்றும், மலைத்தாழ்வரைகளிலுள்ள தாதுக்களினால் பற்பலவண்ணமுற்றுமுள்ள புதிய மழைநீர் மயில்களின் கேகா என்னு மொலியினால் வளர்ந்த பேரொலிகொண்டு மலை யருவிகளில் வீழ்ந்து பெருகுகின்றது; வண்டுகள்போல் கறுத்த மதுரமுள்ள நாவல் பழத்தை யாவரும் மிகவும் புசிக்கின்றனர்கள்; பற்பல வண்ணமுள்ள மாம்பழங்களும் தரையிலுதிர்ந்து வீழ்கின்றன; போர்க்களத்தில் நிற்கின்ற யானைகள்போல மேகங்கள் மின்னலாகிற பதாகைகளை யுடையனவும், நானாப்பறவைகளின் நிரையாகிய மாலையையுடையனவும், மலைச்சிகரங்கள்போன்ற

மேனி யுடையனவுமாகிக் கர்ஜனை செய்கின்றன; பாரடா தம்பி! இந்த வனங்கள் மழைநீரினால் செழிப்புற்ற இளம்புல்லுகளை யுடையனவும், எங்கும் பொன்சிறகை விரித்தாடுகின்ற மயிலினமுடையனவும், பொழிகின்ற மேகங்களையுடையனவுமாகி இப்போழ்து மாலைப்பொழுதில் நன்கு விளங்குகின்றன; மேகங்கள் நீர்ச்சூலுற்றுக் கர்ஜனை செய்துகொண்டு கருவுடைய பெண்கள்போல மலைச்சிகரங்களில் இறங்கி யிறங்கி இளைப்பாறிச் செல்லுகின்றன; கர்ப்பத்தை தரிப்பதன்பொருட்டு மேகத்திற் கெதிராக எங்கும் பறக்கின்ற நாரைகளின் நிரையானது வானிடையில் கட்டிய காற்றினாலசைக்கப்பட்ட சிறந்த வெண்டாமரை மலர் மாலைபோல விளங்குகின்றது; இந்திர கோபங்களுடன் கூடிய இளம்புற்களினாலே கிளிபோன்ற காந்தியுள்ள செம்புள்ளிகளையுடைய பட்டுடுத்த பான்மொழியாள்போலப் பார்மகள் விளங்குகின்றனள். துயில் மெல்ல மெல்ல முகில்வண்ணனை கண்ணைச் சேர்கின்றது; ஆறுகள் விரைவாகச் சாகரத்தைச் சேர்கின்றன; நாரை நீருண்ட கொண்டலை மகிழ்ந்து தாவிச் சேர்கின்றது; காமினியர்கள் காமவேட்கை மிகுந்து காந்தனைச் சேர்கின்றனர்கள். காடெங்கும் மயிலினமாடுகின்றது; கடம்பமரங்களெங்கும் முகிழ்த்தன; காளைகள் ஆவல் கொண்ட ஆனிரைகளுடன் கூடி வேட்கையுறுகின்றன; பாரெங்கும் பயிர்களினால் செழித்துத் திகழ்கின்றது; நதி மேகம் மதவேழம் வனம் வனிதையைப் பிரிந்தவர் மயில் குரங்கு இவைகள் முறையே பெருகுகின்றன; மழை பொழிகின்றன; பிளிறுகின்றன; செழிப்புற்று விளங்குகின்றன; சிந்தை யுறுகின்றனர்கள்; ஆடுகின்றன; இளைப்பாறுகின்றன; மதயானைகள் தாழைமடலின் மணத்தை மோந்து மலையருவிகள் மலைத்தாழ்வரைகளின் வீழ்கின்ற தொனியைச்செவியுற்று வெருண்டோடி மயில்களுடன் கூடிக் கூவுகின்றன; மழைவேகத்தினாலடிபட்டு வணங்கிய கடம்பமரங்களின் கிளைகள் தாழ்ந்தசைகின்றன; அதிலிருந்த வண்டுகளும் மழையினாலடிபட்டு அந்த மரத்தின் மலர்களிலுள்ள மதுவைப் பானஞ்செய்ததனாலுண்டான மதமுமிழந்து அலைகின்றன; கரிகள்போலக் கறுத்த பழங்கள் நிறைந்த நாவல்மரங்கள் வண்டுகளினால் சூழப்பட்டனபோல் விளங்குகின்றன; மேகங்கள் முன்னே கூறியபடி போர்க்களத்தில் நிற்கின்ற யானைகள்போலவே விளங்குகின்றன; சிறந்த யானையானது தன் வழிபற்றிச் செல்லுகையில், மேக கர்ஜனத்தைக் கேட்டுப் பகை யானையென்றெண்ணி எதிர்த்துச் செல்லுகின்றது; காடுகள் கூவுகின்ற வண்டுகளினாலே சிலவிடத்தில் பாடுகின்றனபோலும், மயில்களினால் ஆடுகின்றனபோலும், யானைகளினால் மதமுற்றனபோலும் காணப்படுகின்றன; காடெங்கும் கதம்பார்ஜுன ஸர்ஜகந்தளிகளினாலே நிறைந்து, மழைநீர் தேங்கி, மயில்கள் மதமேறிக் கூவி யாடியுமிருக்கின்றமையின், சாராயக்கடைபோல விளங்குகின்றது; மழைநீர் இலைகளினிடையில் வீழ்ந்து முத்துபோல விளங்குகின்றது; பற்பலவண்ணமுற்ற சாதகப்பறவைகள் மழைநீரை வானிடை

யிலேயே பானஞ்செய்கின்றன ; வண்டுகளாகிற வீணையின் தொனியோங்கியும், தவளைகளின் கண்ட வொலியினால் தாளமுயர்ந்தும், மேகத்தின் தொனியினால் மர்தளம் முழங்கியும் விளங்குகின்றமையின், அவ்வனம் பாடுகின்றதுபோலும், மயில்கள் சில விடங்களில் ஆடிக்கொண்டும், சில விடங்களில் கூவிக்கொண்டும், சில விடங்களில் மரங்களின் நுனிகளிலுட்கார்ந்து சிறகை விரித்துத் தாழ்த்திக்கொண்டுமிருக்கின்றன ; மேகங்களினுடைய தொனியைக் கேட்டும், மழை தாரையினாலடிக்கப்பட்டும், தவளைகள் கூவுகின்றன ; நதிகளும் நீரில் நீந்துகின்ற சக்கரவாகப் பறவைகளென்னும் கொங்கைகளை யுடையனவும், ஆடை நழுவியதுபோல இடிந்து விழ்ந்த கரைகளை மோதிக்கொண்டும், பற்பல மலர்த்துளிகளினால் மதங்கொண்டும், நீரில் வீழ்ந்த புதிய பூ கனி முதலியனவென்னும் உபகாரங்களை யலைகளென்னும் கைகளிலேந்திக்கொண்டும், காமவேட்கைகொண்ட காந்தையர்கள் விரைவாக நாயகனிடஞ் செல்வதுபோலத் தம் நாயகனான ஸமுத்திரராஜனை நோக்கி, விரைவாகச் செல்லுகின்றன ; நீரைப் பருகிக் கறுத்த மேகங்கள் தம்போன்ற மேகங்களின்மேலே சென்று காட்டுத் தீயினாலெரிக்கப்பட்ட இந்திர நீல மலையின்மேலே வளர்ந்த மலைகள்போல விளங்கின ; மதயானைகள் மகிழ்ந்து கூவுகின்ற மயில்களையுடையனவும், பட்டுப்பூச்சிகளுடன் கூடிய இளம்புல்லுடையனவும், கடம்பப்பூ முதலியவற்றால் மணமுற்றனவுமாகி யழகிய கானகங்களிலே மகிழ்ந்து திரிகின்றன; வண்டுகள் புதிய மழையினால் மடக்கப்பட்ட தாதுகளையுடைய தாமரை மலர்களை விட்டு விட்டு அன்று மலர்ந்த கடம்பமலர்களைச் சேர்கின்றன ; காடுகளில் யானைகளும் மதங்கொண்டன ; காளைகளும் மகிழ்ந்தன; சிங்கங்களும் இளைப்பாறின ; மலைகளும் அழகுற்றன ; வேந்தர்களும் போர் முயற்சியை விட்டடங்கினர்கள் ; இந்திரனும் மேகங்களுடன் விளையாடுகின்றனன் ; மேகங்கள் ஊழிகாலத்திய பொங்கோதம்போல வொலிக்கின்றனவாகி மழையினால் ஆறு ஏரி குளம் நடவாபி கிணறுகளை நிரப்பிப் பாரெங்கும் பெருகச் செய்கின்றன ; மழைநீர் வேகமாசப் பருத்து வீழ்கின்றது ; காற்று மொலியுற்று வீசுகின்றது ; ஆறுகளும் கரைகளை யுடைத்துக்கொண்டு வழிகடந்து வேகமாகப் பெருகுகின்றன ; தார்வேந்தர்கள் மனிதர்களினாலே போலச் சிறந்த மலைகள் மேகங்களினாலே அபிஷேகஞ் செய்யப்பட்டனவாகி யழகிய தம்மழகினைக் காட்டுகின்றனபோலும், ஆகாயமெங்கும் அம்புதத்தினால் மறைக்கப்பட்டது ; ஸூரியன்கண்ணுக்குக் காணப்படுகின்றிலன் ; யாரெங்கும் நீர் பாய்ந்து நனைந்தது ; திசைகளெல்லாமிருள்மூடி விளங்குகின்றில ; பருத்துயர்ந்த மலைச்சிகரங்கள் அருவிநீர்களினாலே முத்துமாலை பூண்டனபோலத் திகழ்கின்றன ; அந்த அருவிகளே கற்களில் சிதருற்ற மயில்கள் கூவுகின்ற குகைகளில் தேங்கி அறுபட்டுதிர்ந்த மணிவடம்போலக்காணப்படுகின்றன; நாற்புறங்களிலும் மழை தாரைகளும் புணருங்காலையி லறுந்துவிழ்ந்த விண்ணுலகிலுள்ள

பெண்களின் முத்துவடங்கள்போலவே விளங்குகின்றன ; பறவைகள் கூடு களிலடங்குகின்றமையினாலும், தாமரைமலர்கள் குவிகின்றமையினாலும், ஜாதிமலர்கள் மலர்கின்றமையினாலும், கதிரவன் அத்தகிரியை யடைந்தன னென்றறிகின்றேன் ; ராஜர்களின் யுத்த யாத்திரை தீர்ந்தமையின், சேனை கள் மீண்டு வருகின்றன; பகை யடங்கிற்று; வழி மழை நீரினால் நிரப்பப் பட்டது ; ஸாமவேதிகளுக்கு அத்தியயநாரம்பகாலமான புரட்டாசிமாதம் வந்தது ; பரதன் இப்போது எல்லாச்செயல்களையும் நிறுத்திவிட்டு வேண்டும் பொருள்களையெல்லாம் ஸம்பாதித்துச் சித்தஞ்செய்துகொண்டு கோஸலநாட்டிலே சாதுர்மாசிய ஸங்கல்பஞ் செய்துகொண்டு விரதம் பூண்டிருப்பன் ; நான் வனவாஸம் புறப்படுகையில், அயோத்தியிலே எவ் வண்ணந் தொனியுண்டாயிற்றோ ? அவ்வண்ணமே இப்போழ்து ஸரயூ நதியிலே மேல் வெள்ளத்தினாலே பேரொலி யெழுந்திருக்கும் ; இந்த மழை காலங்களில் மஹாராஜரும் பகையின்றி யரசுபெற்று மனைவியுடன் சேர்ந்தின்புற்று மகிழ்கின்றனர் ; யானொருவனே இப்பொழுது பாரியிழந்து, பத்தினியையும் பறிகொடுத்து, நதியின் கரைபோலக் கரைந்து நைந்து வருந்துகின்றேன் ; அடா லக்ஷ்மணா ! என் சோகமும் மிக வளர்ந்தது ; கார்ப்பருவமும் கழிகின்றிலது ; பகைவனோ கொடிய அரக்கர்கோனான ராவணன் ; ஆதலின், இம்மூன்றும் முடிவற்றதெனத் தோற்றுகின்றது ; இப்போழ்து யுத்த யாத்திரைக்குத்தக்க காலமன்றென்பதையும், வழி யெங்கும் சேறுகி யாறுகளினால் தடுக்கப்பட்டுளதென்பதையும் கண்டே மஹாராஜர் இப்போழ்தே பிராட்டியைத்தேட முயற்சிசெய்யக் கட்டளை செய்தருள்கவென்று வணங்கி வேண்டுகையிலும் உடன்படாமலிருந்து விட்டேன் ; அன்றியும், நெடுநாளாய் மிகவுந் துன்புற்று இப்போழ்தே இல்லாளுடன் கூடிய மஹாராஜரைச் சிறிதுகாலமாவதின்புறச்செய்யாமல் என் காரியத்தையே பெரிதாக நினைந்து வருத்தமுறுவிக்க மனங்கொண்டி லேன் ; அவன் இப்போழ்தின்புற்று இளைப்புத்தீர்ந்து சரத்காலம் வருகை யில் தாமே யறிந்து நன்றியுடையனாகி என் காரியத்தைச் செய்வனென் பதில் ஸந்தேஹமில்லை ; ஆதலின், யான் அந்தக் காலத்தையே எதிர்பார்த் திருக்கின்றேன் ; மஹாராஜரும் நதிகளும் எப்போழ்து தெளிவுறுவார் களோ ?—

ఉపకారేణవీరోహి ప్రతికారేణయుజ్యతే
అకృతజ్ఞో ప్రతికృతో హన్తిసత్త్వవతాంమనః

உபகாரேணவீரோஹி ப்ரதிகாரேணயுஜ்யதே
அக்ருதஜ்ஞோப்ரதிக்ருதோ ஹந்திஸத்வவதாம்மனஃ.

சூரனான அவனை நாம் செய்த உபகாரம் ப்ரதியுபகாரஞ் செய்யும் படி செய்யும் நன்மையை மறந்து பிரதியுபகாரம் செய்யாதான் பெரியோர்

கும்பலாகக்கூவுகின்ற அன்னங்கள்பொருந்தி மலர்ந்த கமல குமுத கல்கார மலர்களுற்ற சிறந்த வாபிகளின் காந்தி பலகலனுமணிந்த காமினிகளின் காந்திபோல விளங்குகின்றது ; மூங்கில்களின் தொனியினல் தூரியமுழங்கியும், காலேயிலோங்கிய காற்றினுல் வளர்ந்துமுள்ள கடைகின்ற தையிர்ப் பானேகளினுடையவும், காளேகளினுடையவும், பசுக்களினுடையவும், மிகுந்தவொலியானது தம்முள் ஒன்றினே யொன்று வளர்க்கின்றதுபோலும், நதிகளின் கரைகள் மலர்ந்த மலர்களினுல் வெண்மைநிறமுற்ற நாணல்களினுலே வெண்பட்டணிந்தனபோல் விளங்குகின்றன ; காடுகளில் வேகமுற்று மதுவுண்டு மதமேறிய வண்டுகள் மகிழ்ந்து காற்றைப் பின்றொடர்ந்து கமல தூளிகள் படிந்து செல்லுகின்றன ; நீர் தெளிவுற்றது ; ஆம்பல் மலர்ந்தது ; அன்னமொலிக்கின்றது ; செம்பாப்பயிர் கதிர் பழுத்துப் பொன்னிறமுற்றிருக்கின்றது ; மந்தமாருதம் வீசுகின்றது ; சந்திரனும் நிலவுகின்றனன் ; ஆதலின், கார்காலங் கழிந்ததென்று நன்கு விளங்குகின்றது ; மீன்களுலாவுகின்ற நதிகளின் வேகமும் மந்தமாயிற்று ; அது உதய காலத்தில் காந்தனைப் புணர்ந்தெழுந்து சோம்பலுற்றுச் செல்லுகின்ற காந்தையர்களின் கமனம்போல விளங்குகின்றது ; நதிகளின் முகங்கள் சக்கரவாகம் வேலம்பாசி நாணல் மலர்களுடன் கூடி யிருக்கின்றமையின், கோரோசனுதிலகம் மகரி காபத்திரம் வெண்பட்டு இவைகளேயுடைய காமினி முகம்போல விளங்குகின்றது ; மலர்ந்த பாணம் அஸநம் இவைகளின் மலர்களினுலே பலவண்ணம் பொருந்தியும், மதமேறிய வண்டுகளொலித்துமுள்ள வனங்களில் காமன் பாணர்ஸநமுடையனுகிக் கொடுமை கொண்டிருக்கின்றனன் ; மேகங்களும் மழையினுலுலகங்களே மகிழ்வித்தும், ஆறு குளங்களே நிறைத்தும், பயிர்களேச் செழிப்பித்தும் மறைந்து விட்டன ; மடுக்களும் குரரி சக்கரவாகம் முதலிய பறவைகளினுலொலிக்கப்பட்டு தெளிந்து விளங்குகின்றன ; மலேத்தாழ்வரைகளிலே அஸநம் கோவிதாரம் ஸப்தபர்ணம் பந்துஜீவம் என்னும் இவைகள் மலர்ந்து விளங்குகின்றன ; பாரடா லக்ஷ்மணு ! ஹம்ஸஸாரஸ சக்கரவாககுரரங்களினுலே நதிகளின் மணற்குன்றுகள் விளங்குகின்றன ; ஆதலின், பகைகொண்ட வேந்தர்கள் படையெடுத்துப் பகைவர்மேல் செல்லும் வேளே நேர்ந்துளது ; ஆதலின், இப்போழ்தே மஹாராஜரும் முயற்சிசெயல் வேண்டுமன்றே ? அவனையும் காண்கின்றிலேன் ; அவ்வண்ணமான முயற்சியையும் அறிகின்றிலேன் ; கார்காலமான நான்கு மாதங்களும் எனக்கு அநேகமாயிரம் வருஷங்கள்போலக் கழிந்தன ; சக்கரவாகப்பெண் தன் பர்த்தாவை விட்டுப் பிரியாமல் கூடவே செல்வதுபோல என்னயகியும் கோரமான தண்டகாரணியத்தையும் உத்தியானவனமாக எண்ணி என்னுடன்றொடர்ந்து வந்தனளல்லளோ ? அடா தம்பி ! யான் அத்தன்மையளான மனேவியையுமிழந்து, ராஜ்ஜியத்தையுந்துறந்து துன்புற்றிருக்கையிலும், மஹாராஜர் என்மீதருள்செய்கின்றிலரந்தோ ? யான் அநாதனென்றும்,

ராஜ்ஜியத்தை யிழந்தவனென்றும், பத்தினியைப் பறிகொடுத்தவனென்றும், தீனமடைந்தவனென்றும், பரதேசியென்றும், காமுகனென்றும், என்னையே தஞ்சமடைந்தவனென்றும், இக்காரணங்களினாலேயோ ஸுக்கிரீவன் துர்ப்புத்தியுற்று என்னை மதிக்காமல் இகழ்கின்றனன்; சீதையைத் தேடும் விஷயத்தில் அவன் எனக்குப் பிரதிஜ்ஞை செய்துகொடுத்து அக்காலம் நேர்ந்ததை யறியாமல் மதிகெட்டிருக்கின்றனன்; ஆதலின், நீ இப்பொழுது கிஷ்கிந்தைக்குள்ளே சென்று வாநரர்களுட் சிறந்தவனும், மூர்க்கனும், சிற்றின்பங்களில் மயக்குற்றுழல்பவனுமாகிய சுக்கிரீவனை நோக்கி, யானுரைத்ததாக வுரைசெய்க.—

అర్థినాముపపన్నానాం పూర్వఞ్చాప్యుపకారిణాం
ఆశాం సంశ్రుత్య యో హన్తి స లోకే పురుషాధమః

அர்த்திநாமுபபந்நாநாம் பூர்வஞ்சாப்யுபகாரிணாம்
ஆசாம்ஸம்ச்ருத்யயோ ஹந்திஸலோகேபுருஷாதமஃ.

முன்னம் உபகாரஞ்செய்தவர்கள் ஆபத்தை யடைந்து தனக்குதவி செய்யும்படி யாசனைசெய்கையில், அப்படியே செய்வேனென்று அவர்களுக் காசை காட்டிப் பின்பு, உதவி செய்யாமல் எவன் வருத்துகின்றானோ? அவன் உலகினில் எல்லோரிலும் கடையானவன்; பாவமோ புண்ணியமோ யாவனொருவன் தான் சொல்லியபடி தவறாமல் செய்வானோ? அவனே மிகவும் சூரன், யாவரிலுமுயர்ந்தவன், ஒருவரால் உபகாரத்தை யடைந்த பின் அவர்களுக்கு ஸமயத்தில் யாவனொருவன் பிரதி யுபகாரம் செய்கின்றிலனோ? அந்த நன்றி மறந்தவனை இவ்வுலகினில் யாவரும் பழிப்பதுமன்றி, இறந்த பின்னும் அவனுடலைக் கழுகு முதலிய ஜந்துக்களும் தின்னா? அந்த ஸுக்கிரீவன் இப்போது என் காரியத்தில் முயற்சியின்றி யிருக்கின்றமையின், போர்க்களத்தில் பொன்னணியமைந்த என்னுடைய கோதண்டத்தின் கோரமான மின்போன்ற ரூபத்தைக்காண விரும்புகின்றனன்போலும், சீற்றங்கொண்டு கோதண்டத்தில் யான் கணையைத் தொடுக்கையில், அதன் ஞாணின் தொனியைச் செவியுறக் கோருகின்றனன்போலும், உன்னையே துணையாகவுடைய என்னுடைய தோள்வலியை நன்கறிந்திருந்தும், அதனை இலக்ஷியம் செய்யாமலிருப்பானோ? யாம் எந்தப்பயனைக் கோரியே இவ்வண்ணம் அவனுடன் தோழமைசெய்துகொண்டு வாலியையும் கொன்று முடிசூட்டிவித்தனமோ? அந்தப்பயன் விளையும் முயற்சிக்குரிய காலம் நேர்ந்திருக்கினும், தன்னுடைய காரியம் ஆகிவிட்டதென்று இறுமாந்தறியாமலிருக்கின்றனன். மழைகாலம் நான்கு மாதம் மாத்திரம் பொறுத்தருள்க; பின்புடனே முயற்சிசெய்கிறேனென்று பிரதிஜ்ஞைசெய்தும் அக்காலம் கழிந்துவிட்டதை யுணராமல் மயக்குற்றிருக்கின்றனன். அவன் இன்னும் இனத்தார் சுற்றத்தார்களுடன் கூடி மதுபானஞ்செய்து மயங்கி

யிருக்கின்றனனேயன்றி, எம்மேல் சிறிதும் தயைசெய்கின்றிலன்; ஆதலின், நீ சென்று யான் சினமுறுவேனாகி லெவ்வண்ணமிருப்பேனோ? அந்த கோரரூபத்தையும் அவனுக்கறிவித்து யானுரைத்ததாக மீளவுமிவ்வாறுரை செயாய்;—

న చ సంకుచితః పంథా యేన వాలీ హతో గతః
సమయే తిష్ఠ సుగ్రీవ మా వాలి పథమన్వగాః

நசஸங்குசித꞉பந்தாயேந வாலீஹதோகத꞉
ஸமயேதிஷ்டஸுக்ரீவ மாவாலிபதமன்வகா꞉.

கேளாய் ஸுக்கிரீவா! வாலி யென்னாலடிபட்டு எந்தவழியிலே சென்றானோ? அந்த வழி யின்னும் புல்லெழுந்து மறைந்து குறுகியிலது; ஆகையால், ஸத்தியத்திலே உறுதியாய் நின்று வாழ்க; வாலி சென்ற வழிபற்றிச் செல்ல விருப்பமுறற்க; முன்பு யான் வாலி யொருவனையே கொன்றேன்; இப்போது நீ சத்தியம் தவறுவாயாகில், உன்னை இனத்தார் சுற்றத்தார்களுடன் கொலை செய்வேனேயன்றித் தனியே கொல்லேன்; ஆகையால், காரியம் இவ்வண்ணமிருக்கையில் யாது செயின் நலமோ? அதனைச்செய்க; என்றுரைத்து மேலும் யாது யாது உரைசெயின் தகுமோ? அவ்வாறு மொழிக; காலம் கழிகின்றமையின், துரை செய்க; மஹாராஜனே! ஸத்தியம் செய்தபடி செய்க; வாலியின் வழியைச் சேரற்க; என்று மேன்மேலும் உரைசெய்க; என்றிவ்வண்ணம் கட்டளைசெய்தருளிப் பெருமாள் சினமும் சோகமும்கொண்டு மனம் வருந்துவதை இளையபெருமாள் கண்டு ஸுக்கிரீவன்மேல் கடுஞ்சினங்கொண்டு அவன் விஷயத்தில் கெடுமதிகொண்டு ஜொலித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பதாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்தொன்றாவது சருக்கம்.

இளையபெருமாள் சினங்கொண்டு கிஷ்கிந்தைக் கெழுந்தருளுகையில் அங்கதன் அதுகண்டு மஹாராஜருக் கறிவித்தது.

பெருமாளிவ்வண்ணம் காமசோக பீடிதராய்ச் சினங்கொண்டதைக் கண்டு இளையபெருமாள் அவரை நோக்கிக் கேட்டருளீர் எம்மையரோ! அந்த ஸுக்கிரீவன் நன்னடக்கைகொண்டு ஸத்தியத்தில் நிலையுறான்; இது

செயின் நன்று, இது செயின் தீது என்பதையும் அறியான்; ஆதலின், இந்த வாநரராஜ்ஜியத்தையும் நெடுங்காலம் ஆட்சிசெய்து இன்புறுன்; அவன் புத்தி இப்போதும் நங்காரியத்தில் ஊக்கங்கொண்டிலதன்றே? அவனைக் கொன்று வாலியுடன் சேர்த்தல்வேண்டும்; தீக்குணமுடைய இவனுக்கு ராஜ்ஜியமளிப்பதுந் தகுதியுடையதன்று; மிகவும் பெருகி வளருங் கோபத்தைப் பொறுக்கவுந் திறமைகொள்ளுகின்றிலேன் யான்; ஆதலின், ஸத்தியம் தவறின அவனை இப்போதே கொலைசெய்து வருவேன்; வாலி புத்திரனை அங்கதகுமாரனை அபிஷேகம்பூண்டு வானரசேனைகளுடன் கூடிப் பிராட்டியாரைத் தேடக்கடவன். ஆதலின், இவ்வண்ணம் அனுமதி செய்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து வில்லுங்கணையுங் கையிலேந்திச் சினத்தினுல் பதைத்தனர். பெருமாள் அவர் மிகவுஞ் சினமுற்றிருப்பதைக் கடாக்ஷித்து அவரை நோக்கி, அடா தம்பி லக்ஷ்மணு! உன்னைப் போன்றவர் உலகத்தில் இவ்வண்ணம் பாவச்செயலை யொருவரும் செய்யார்; நல்விவேகத்தினுலே இவ்வகையான கெடுமதியை யாவன் போக்கி நற்செயல் செய்வானே? அவனே யன்றே சிறந்தவன்; அடா இவ்வண்ணம் கொலைசெய்வதை நற்செயலென்று எண்ணற்க; முன்பவன்மீதுள்ள அன்பினையும், நட்பினையும், ஆராய்ந்தறிந்து செய்க; அவன் காலந்தப்பி யிருக்கினும், வன்மொழி மொழியாமல் நன்மொழியாலேயே செய்தியை யறிவிக்கக்கடவை என்று இதமுரைத்துத் தேற்றிச் சினத்தைத் தணித்தருளினர். இளையபெருமாளும் இவ்வண்ணம் பெருமாள் மொழிந்ததைக் கேட்டுத் தேர்ந்து விடைபெற்றுக்கொண்டு விரைவாகச்சென்று கிஷ்கிந்தையைக் கிட்டிப் பட்டணத்தினுள்ளே புகுந்து இந்திரன் வில் மலைமுடிகள் போன்ற கோதண்டத்தைக் கையிலேந்திக் காலாந்தகன்போல ஜொலித்து மந்தரமலைபோலசைந்து தேவகுருவுக்கு நிகரான புத்தியுடையராதலின், தான் சுக்கிரீவனுக்குரைக்கவேண்டிய வசனங்களையும், அதற்கு அவன் இது பதிலுரைப்பான் என்பதையும், அதற்கு பதிலிது உரைக்கவேண்டுமென்பதையும் நன்காராய்ந்து கொண்டு பெருமாளுடைய காமசோக கோபங்களினுலே தாமும் மிகச் சினங்கொண்டு பெருங்காற்றுப்போல எழுந்தருளி ஸால தால தமால அசுவகர்ணம் முதலிய பற்பல மரங்களை வேகத்தினுல் முறித்தும், மலைச்சிகரங்களை யுருட்டியும், கால்களினுலே சிலைகளைப் பொடிசெய்துகொண்டும், நெடுந்தூரமாயினும் ஓரடியைப்போல வேகமாக மதயானைபோல நடந்து மலைகளினிடையிலிருக்கின்ற பற்பல வாநரசேனைகள் நிறைந்த அந்தக் கிஷ்கிந்தையைக் கண்டு சுக்கிரீவன்மேலுள்ள கோபத்தினுலே உதடுகள் துடித்து அந்தக் கிஷ்கிந்தைக்குப் புறத்திலே திரிகின்ற வாநரர்களைக்கண்டு கிட்டிச் சென்றனர். அந்த வாநரர்கள் இவர் இவ்வண்ணம் சினங்கொண்டு வருவதைக் கண்டு போர்செய்ய வருவதாக நினைத்து அவர்களும் மரங்களையும், சிலைகளையும் கையிலெடுத்துக்கொண்டு போர்செய்யச் சித்தங்கொண்டு நின்றனர்கள். இளையபெருமாளும் அவர்

கள் இவ்வண்ணம் நிற்பதைக்கண்டவுடனே மிகுதியாக விறகுகளை யுடைய தீபோல இருமடங்கு சினங்கொண்டு ஜொலித்து விளங்கினர். அந்த வாநரர்களும் இவர் இவ்வாறு மிகச் சினமுற்றதைக் கண்டு அச்சங்கொண்டு பிரளயகால மிருத்தியுவாகவெண்ணிப் பத்துத்திசைகளிலுமோடி மஹாராஜர் மனை சேர்ந்து இளையபெருமாளிப்படி சினங்கொண்டு வந்திருப்பதை யுரைத்தனர்கள். ஆயினும், சுக்கிரீவன் தாரை முதலிய வநிதையர்களுடன் கூடி மதுவுண்டு மதிமயங்கி யிருக்கின்றமையின், அவர்கள் இவ்வண்ணங் கூவி யுரைத்ததைச் செவியுறாமல் அந்தப்புரத்தினுள்ளே யிருந்தனன். பின்பு, மந்திரிகள் எல்லோரும் யோசனைசெய்து யானை மலை மேகங்களுக்கு நிகரான வாநரர்களை யேவினர்கள்; அவர்கள் எல்லோருங் கோரரூபமுடையவர்களும், சிங்கம் புலிகள்போன்ற வீரமுடையவர்களும், சிலர் பத்துயானை பலமுடையவர்களும், சிலர் நூறு, சிலர் ஆயிரம், சிலர் பதினாயிரம், சிலர் லக்ஷம், என்றிவ்வண்ணம் மேன்மேலுயர்ந்த யானைகளின் பலமுடையவர்களுமாதலின், யாவரும் கோட்டைவாயில் வந்து தடுப்பவர்களாக நின்றனர்கள். அவர்களிவ்வண்ணங் கற்களையும், கிளைகளையும், மரங்களையும் கையிலேந்தி யெதிர்த்து நிற்பதை இளையபெருமாள் கண்டு சினம் மூண்டு வாநரர்கள் இவ்வண்ணம் உள்ளும் புறமும் நிறைந்திருப்பதையும், சுக்கிரீவன் மதிமயங்கி யூக்கமற்றிருப்பதையும், பெருமாள் காமமும் சோகமுமுற்று வருந்துவதையும் ஆராய்ந்து வெம்மைகொண்டு நெட்டுயிர்த்துக் கண்சிவந்து புகையுடைய பாவகம்போல மூண்டெரிந்து பாணங்களின் முனைகளென்னும் நாவினையும், கோதண்டமென்னும் உடலையும், தேஜஸ்ஸென்னும் விஷத்தையுமுடைய ஐந்தலை நாகம்போலச் சீறி எரிகின்ற ஊழிகாலத்தீபோலவும், தூண்டப்பட்ட நச்சரவம்போலவும் திகழ்ந்தனர். இவர் இவ்வண்ணம் இருப்பதை யங்கதகுமாரன் கண்டு துன்புற்று நின்றனன்; இளையபெருமாள் அந்த அங்கதனையழைத்து அடா குமாரா! யான் உரைத்ததாக மஹாராஜரிடம் சென்று லக்ஷ்மணன் தங்களைக்காண்பதன்பொருட்டு வந்திருக்கின்றனன்; அவன் தம்மையரின் துயரத்தினால் மிகத்துயரங்கொண்டு வாயிலில் நிற்கின்றனன்; அவருடைய வாக்கியத்தில் தங்களுக்கு ஆவலுளதாயின்; தாங்களே யங்கேசெல்வதோ? அவரையே இங்கேயழைப்பிப்பதோ? இரண்டிலொன்று செய்க; என்றுரைசெய்து அவர் அதற்குபதில் யாதுமொழிவதையுங் கேட்டுணர்ந்து விரைவாக வந்து செய்திசொல்லாய்; என்று உரைசெய்தனுப்பியருளினர். அங்கதகுமாரன் அந்த வாக்கியத்தைக் கேட்டு விரைவாக வோடிவந்து மஹாராஜர் தாரையுடனிருக்கும் யவர்களைத்தொழுது பின்பு நிகழ்ந்தவண்ணமுரைசெய்தனன். ஸுக்கிரீவன் தூக்கத்தினாலும், மதத்தினாலும் மயக்குற்றிருக்கின்றமையின், அதனை யுணராமல் காமமோஹிதனாயிருந்தனன்; பின்பு, அங்கதன் விரைவாக வராமையினாலே இளையபெருமாள் சினங்கொண்டு வருவதை யங்குள்ள வாநரர்கள் கண்டு அவரை நல்வார்த்தைகளினால் ஸமா

தானஞ்செய்து யாது செய்வரோவென்று கில்கிலென்று கூவினர்கள். சிலர் பெருவெள்ளம்போல் வேகங்கொண்டு வச்சிராசனிபோல் தொனியுற்று வருகின்ற இவனைக்கண்டு சிங்கநாதம் செய்தனர்கள். இவ்வகையாகப் பேரொலியெழுந்துபட்டணமெங்கும் ஒலிக்கையில் சுக்கிரீவன் அது கேட்டுத் திடுக்கிட்டு மலர் மாலை மணிவடங்களெல்லாமசைந்து எழுந்தனன். அத்தருணத்தில் அங்கதன் ஓடி யழைக்க சுக்கிரீவனுக்கு மிகவும் இனியர்களும், அந்தப்புரத்திற் சென்று இராணிகளைப்பார்க்கத்தக்கவர்களுமாகிய இரண்டு மந்திரிகளான ப்லக்ஷன் ப்ரபாவன் என்னும் இரண்டுபேர்களும் உள்ளே சென்று இளையபெருமாளிவ்வண்ணம் வந்திருக்கின்றனரென்பதை யறிவித்தனர்கள். தேவேந்திரனைப்போல் போகமுடைய அந்த ஸுக்கிரீவனை யவர்கள் நல்வாக்கியங்களினால் புகழ்ந்து தேற்றிக் கேளீர் மஹாராஜரே! ஸத்தியந்தவறாதவர்களும், மஹாபாக்கியமுடையவர்களும், பாராளத்தக்கவர்களுமாகிய ராமலக்ஷ்மணரென்னுமிருவர் தங்களுடன் நட்புச் செய்துகொண்டு வாலியையும் கொலைசெய்து கிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும் தங்களுக்களித்து உபகாரஞ்செய்தனர்களே? அவர்களுள் ஒருவரான இளையபெருமாள் வில்லுங்கையுமாக நங்கோட்டைவாயிலில் வந்து நிற்கின்றனர்; அவரைக்கண்டு அச்சங்கொண்டே வாநரர்களெல்லோரும் கூவுகின்றனர்கள். அந்த லக்ஷ்மணர் பெருமாளுடைய கட்டளையைத் தங்களுக் கறிவிப்பதன்பொருட்டே வந்திருக்கின்றனர்; இந்த அங்கதனும் அவரால் தங்களிடம் அனுப்பப்பட்டிருக்கின்றனன்; இவரோ கண்களாலே வாநரர்களை யெரிப்பவர்போலச் சினங்கொண்டு வாயிலில் காத்திருக்கின்றனர், ஆதலின், தாங்களே இனத்தார் சுற்றத்தார்களுடன் கூடி யங்குச்சென்று அவரைத் தலைவணங்கி வேண்டிச் சினத்தைத்தணித்தருள்க; பெருமாள் யாது கட்டளைசெய்தனுப்பியிருக்கின்றனரோ? அதனை யவ்வண்ணமே செய்க; நல்லொழுக்கங்கொண்டு ஸத்தியத்தைப் பாதுகாத்து மகிழ்க; என்று அங்கதனுடன் கூடி யுரைத்து மனந்தெளிவித்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்திரண்டாவது சருக்கம்.

சிறியதிருவடி மஹாராஜர்க்கு இதமுரை செய்தது.

பின்பு, ஸுக்கிரீவன் இவ்வண்ணம் அங்கதனும் மந்திரிகளும் உரை செய்த வாக்கியத்தைக் கேட்டு அறிவுற்று அச்சங்கொண்டு சினமுற்ற இளை

பெருமாளை யெவ்வண்ணம் ஸமாதானஞ்செய்வேனென்று சிந்தைகொண்டு ஆஸநத்தை விட்டிறங்கி ஆலோசனையில் மிகவும் புத்தியுடைய மந்திரிகளை நோக்கிக் கேளீர் அமைச்சர்களே ! யான் பெருமாள்விஷயத்திலாயினும், இளையபெருமாள் விஷயத்திலாயினும், சிறிதும் வன்மொழி மொழிந்திலேன்; தீச்செயலுஞ் செய்திலேன்; ஆயினும், இளையபெருமாள் ஏன் சினமுற்றனரென்று சிந்தை செய்கிறேன் ; ஒருக்காலையில் என்மீது பகைகொண்ட யாரேனும் எனக்குத் தீங்குசெய்யச் சமயம்பார்த்து என்மீதில்லாத தோஷங்களையுரைத்து இளையபெருமாள் சினமுறச் செய்தனர்கள்கொலோ ? இவ்விஷயத்தில் நீவிரெல்லீரும் நன்காராய்ந்து அவர் சினமுறுவதற்குக் காரணம் யாதாகுமோ ? உண்மையாக அறிந்துரைமின், பெருமாளிடத்திலாயினும், இளையபெருமாளிடத்திலாயினும் எனக்கு அச்சமுற விரகில்லையே ? ஆயினும் காரணமின்றித் தோழமைகொண்டவர் ஏன்சினமுற்றனரென்று எண்ணுகின்றேன் ; அதனாலேயே நடுக்கமுறுகின்றேன்; யாவருடனும் தோழமை செய்துகொள்வதென்பது எளிதே ? பின்பு, அத்தோழமை யழியாவண்ணம் பாதுகாத்துக்கொள்வது மாத்திரம் அரிது ; சித்தஞ் சஞ்சலமாதலின், அற்பவிஷயத்திலும் பிரீதி யழிந்துவிடுகிறதன்றே ? ஆதலாலேதான் யான் அச்சமுறுகின்றேன் ; பெருமாள் எனக்குச் செய்த மஹோபகாரத்துக்கு யான் என்னசெய்தால்தான் பிரதியுபகாரமாகும் ; என்றிவ்வண்ணமுரைசெய்கையில், அருகிலுள்ள சிறியதிருவடிகேட்டுத் தாமே தமக்குள் ஊகித்து மஹாராஜனை நோக்கிக் கேளீர்மஹாராஜரே ! தாங்கள் பெருந்தகவுடையராதலின்; இவ்வண்ணம் நன்றிமறவாமலிருப்பதென்பது இயல்பே யாதலின், ஆச்சரியமுறத்தக்கதன்று; பெருமாள் தங்களுக் குபகாரஞ்செய்வதன்பொருட்டே யன்றே ? அச்சமின்றித் தேவேந்திரனுக்கு நிகரானபராக்கரமமுடைய வாலியைக் கொலைசெய்தருளினர். எவ்வகையாலோசனை செய்யினும் பெருமாளிப்போது தங்கள்மீது கொண்டிருக்கின்ற கோபம் பிரணயகோபமாகக் காணப்படுகின்றதேயன்றி, யுண்மையானதாக தோற்றுகின்றிலது ; தாங்கள் மதிமயக்குற்றிருக்கின்றமையின், கார்காலம் கழிந்து கூதிர்காலம் முதிர்ந்ததென்பதையும் அறிகின்றிலீரென்று காலத்தை யறிவிப்பதன்பொருட்டே பெருமாள் இளையபெருமாளை யிங்கனுப்பியருளியிருக்கின்றனர்; மலர்ந்த ஏழிலம்பாலை மரங்களினால் அழகுற்ற சரத்காலம் வந்திருக்கின்றதன்றே ? ஆகாசமும் மேகங்களின் மறைவின்றி நின்மலமான விண்மீன்களையுடையதாகி விளங்குகின்றது ; ஆறு குளங்களும் தெளிவுற்றன ; திசைகளும் விளங்குகின்றன ; இவ்வண்ணம் உத்யோககாலம் நேர்ந்திருப்பதையும் தாங்களுணர்கின்றிலீர்; ஆதலின், தாங்களிவ்வண்ணம் ஊக்கமற்றிருப்பதையறிந்தே இளையபெருமாளிங்கெழுந்தருளினர். பெருமாள் பாரிழந்து பத்தினியையும் பறிகொடுத்துத் துயருற்றிருக்கின்றமையின்; அவராலேவப்பட்ட இளையபெருமாள் ஏதேனும் வன்மொழி மொழியினும் சினமுறாமல் பொறுத்தருள்க.

కృతాపరాధస్యహి తే నాన్య త్పశ్యామ్యహం క్షమం
అన్తరేణాఞ్జలింబధ్వా లక్ష్మణస్యప్రసాదనాత్

க்ருதாபராதஸ்யஹிதே நாந்யத்பச்யாம்யஹம்க்ஷமம்
அந்தரேணாஞ்சலிம்பத்வா லக்ஷமணஸ்யப்ரஸாதனாத்.

தாங்கள் பெருமாள்விஷயத்தி லிவ்வண்ணம் காலந்தப்பினமையின், அபராதஞ்செய்தீராயினர்; ஆதலின், இப்போழ்து தாங்கள் கைகூப்பித் தொழுது இளையபெருமாளை இனியமொழிகளினால் சினந்தணியுமாறு தேற்றிச் சமாதானஞ் செய்வதைவிட மற்றொன்றும் தங்களுக்கிப்போது தக்கதாக எண்ணுகின்றிலேன்; மந்திரிகளாயிருப்பவர் கேட்குங்காலையில், இதமுரைக்கவேண்டுவது கடமையாதலின், யான் இப்போது அச்சமின்றி யுரைசெய்தேன்; பெருமாள் சினமுற்றுக் கையில் கோதண்டத்தை யெடுத்து நிற்பராகில், தேவாஸுரகந்தர்வாதிகளுடன் கூடிய எல்லாவுலகங்களையும் தம்வசம் செய்து கொள்ள வல்லவரல்லரோ? ஆதலின், அவரை இப்போது சினமுறுவிப்பது தகுதியன்று; பின்பும் சமாதானஞ்செய்யும்படியே நேருமன்றோ? அன்றியிலே, நன்றிசெய்தவர் விஷயத்தில் இனியமொழி மொழியவேண்டுமென்பதை விளம்பவேண்டுமோ? ஆதலின், தாங்கள் புத்திர மித்திராதிகளுடன்கூடி யவரை வணங்கிக் கணவனுக்குக் காந்தை யடங்கி யிருப்பதுபோலவே அடங்கியிருத்தலே நன்று; பெருமாளுடையவும், இளையபெருமாளுடையவும், கட்டளைகளைத் தாங்கள் மனதிலும் தவற நினைப்பது தீது; தேவர்கோனுக்கு நிகரான ரூப பல பராக்கிரமமுடைய பெருமாளுடைய் திறமையும், தோள்வலியும், தங்கள் சித்தத்துக்கு விசதமே யன்றோ? ஆதலின், அவரை யன்புடனழைத்து வணங்கிச் சமாதானஞ் செய்தருள்க; என்று அமைச்சர்களின் நடுவில் மேன்மையாக மொழிந்து தேற்றி மகிழ்ந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்திரண்டாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்துமூன்றாவது சருக்கம்.

சினங்கொண்டு வந்த இளையபெருமாளைத் தாரை இனிய மொழிகளினால் தேற்றிச் சீற்றத்தை யாற்றியது.

அநந்தரம் சிறியதிருவடி யுரைசெய்த வாக்கியங்களை மஹாராஜர் கேட்டு அதுவே இதமென்றுணர்ந்து இளையபெருமாளை எழுந்தருளப்

பண்ணிக்கொண்டு வரும்படி கட்டளைசெய்ய அவ்வண்ணமே வாநரர்களால் அழைக்கப்பட்ட இளையபெருமாள் பெருமாளுடைய நியமனப்படிக்குக் கிஷ்கிந்தைக்குள்ளே சென்றனர் வாயில் காப்பவரெல்லோரும் இவனைக் கண்டு கைகூப்பி நின்றனர்கள். இவர் பெருமூச்செறிகின்ற நாகம்போல் வருகின்றமையின், வாநரர்களெல்லோரும் அச்சங்கொண்டு கிட்டிச் சூழ்ந்துகொள்ளாமல் ஒதுங்கி நின்றனர்கள். இளையபெருமாளும் இரத்தினங்களிழைக்கப்பட்டும். மலர்ந்த காடு சோலைகளை யுடையதும், மாளிகை மேன்மாளிகைகளினாலே அடர்ந்தும், பலவகைப்பண்டங்கள் நிறைந்தும், வேண்டும் கனிகள் பழுத்த மரங்களினால் மணங்கமழ்ந்து விளங்கியும், தேவ கந்தர்வாதிகளின் அம்சமுடைய வாநரவீரர்கள் திவ்விய மால்ய வஸ்திரங்கள் தரித்து காணற்கினியராகி விளங்கியும், சந்தனம் அகரு தாமரை முதலிய வாஸனை திரவியங்களினால் மணமுற்றும், ஸுரா மதுக்களின் வாஸனை வீசியு முள்ள ராஜவீதி யுடையதுமாகிய அந்தக் கிஷ்கிந்தையையும், நின்மலமான மலையருவிகளையும், முறையே அங்கதன் மைந்தன், துவிவிதன், கவயன், கவாக்ஷன், கஜன், சரபன், வித்யுன்மாலி, ஸம்பாதி. ஸூர்யாக்ஷன் அனுமான், வீரபாகு ஸுபாகு. நளன், குமுதன், ஸுஷேணன், தாரன், ஜாம்பவான், ததிவக்த்ரன். நீலன், ஸுபாடலன், ஸுநேத்ரன் முதலிய வாநரர் தலைவர்களுடைய மாளிகைகளையும் கண்டு அம்மாளிகைகள் மிகச் செல்வமுடையனவும், வெண்மைநிறமுற்ற சரத்கால மேகம் போன்ற வண்ணமுடையனவும், திவ்விய மாலைகளுடையனவும், மிகுந்த தனதான்யங்களுடையனவும், சிறந்த பெண்மணிகள் நிறைந்தனவுமாகி விளங்குவதைக் கண்டு வியப்புற்று வெண்மைநிறமுள்ள கோட்டைச் சுவரினாலே சூழப்பட்டுப் பகைவர்கள் புகற்கரிய மஹாராஜருடைய தேவேந்திர பவநம்போன்ற மாளிகை கைலாஸமலைச்சிகரங்களைபோன்ற மேல்மாளிகைகளின் சிகரங்களாலும், பலவகைப் பழங்கள் பழுத்து மலர்கள் மலர்ந்து மணங்கமழ்ந்து தழைத்த பற்பல மரங்களினாலும், தேவேந்திரனாலளிக்கப்பட்ட கற்பக மரங்களினாலும் மிக விளங்கியும், சஸ்திரபாணிகளான சிறந்த பலமுடைய வாநரர்களினால் வாயிலிலே காக்கப்பட்டும், திவ்விய மாலைகளினால் அலங்கரிக்கப்பட்டும், பொன் மணித் தோரணங்கள் கட்டப்பட்டும் விளங்குவதைக்கண்டு அதற்குள்ளே கதிரவன் மேகமண்டலத்திடையில் தடையின்றிப் புகுவதுபோலப் புகுந்து ஏழு கோட்டைகளையும் தாண்டிச் சென்று பொன் வெள்ளிகளினாலே செய்யப்பட்ட கட்டில் முதலிய ஆஸநங்களையுடையதும், பற்பல அலங்காரங்களையுடையதுமான மஹாராஜருடைய அந்தப்புரத்தைக்கண்டும், இனிய நிருத்த கீதவாத்தியங்களின் தொனியைச் செவியுற்றும், பற்பல ரூபயௌவநகர்விதர்களும். நற்குலத்திற் பிறந்தவர்களும், சிறந்த ஆடையாபரணங்களைத் தரித்தவர்களும், திருப்தி யுடையவர்களும், காமபோகங்களில் ஆவலுடையவர்களும், சிறந்த போகோபகரணங்களை யுடையவர்களுமாகிய பெண்களையும், பரிஜன

பரிவாரங்களையும் கண்டும் அப்பெண்களின் சதங்கைத்தண்டைகளின் ஒலியைக் கேட்டும் வெட்கமடைந்து அணிகளினொலியினாலே சினங்கொண்டு நல்லொழுக்கமுடையவராதலின், அப்பெண்களைக்காணாது அச்சங்கொண்டு மறையும்படி செய்வதற்காக தனுஷ்டங்காரஞ்செய்து அதனால் திசைகளையெல்லாம் முழங்கச்செய்து ஏகாந்தமான ஓரிடத்திற்சென்று பெருமாளுடைய சோகத்தை நினைந்து வருந்தி நின்றனர். அந்தவொலியினால் இளையபெருமாள் அருகில் எழுந்தருளினானென்பதை யறிந்து மஹாராஜர் அச்சங்கொண்டு சிறந்த சிங்காஸநத்தினின்றும் அசைந்து அங்கதன் முன் பென்னிடம் வந்துரைசெய்த துண்மையே? அவ்வண்ணமே யிளையபெருமாள் அருகிலெழுந்தருளிவிட்டனர்; தனுஷ்டங்காரம் கேட்கப்படுகின்றது; என்று ஆராய்ந்தறிந்து முகம்வாடிச் சிந்தைகொண்டு நடுங்கித் தாரையை நோக்கி, கேளடீ அன்புள்ள என்னுயிரே! இயல்பாகவே சாந்தகுணமுடைய இளையபெருமாள்சினங்கொண்டவர்போல வருவதற்குக் காரணம் யாதாகுமோ நீ யென்னென்று நினைக்கின்றனை; நரசிங்கமான அவர்காரணமின்றிச் சினமுறுரல்லரோ? நாம்சிறிதேனும் இவர் விஷயத்தில் தீங்குசெய்தனமோ? இதனை நீ விரைவாக ஆராய்ந்து தேர்ந்துரைசெய்க; அன்றி, நீயே நேராகச்சென்று அவரைக்கண்டறிந்து இனியமொழிகளினாலே தேற்றிச் சீற்றந்தணியுமாறு செய்யக்கடவை. அவர் உன்னைக் காண்பராயின், மநம் மகிழ்வாரேயன்றிச் சினமுறார்; பெரியோர்கள் பெண்களிடங்களில் ஒருக்காலும் தீமைசெய்யார்கள்; நீபோய் இனியவாக்கியங்களினாலே தேற்றக்கேட்டு மனமகிழ்ந்திருக்கையில், யான் இடையிலே வந்திளையபெருமாளைக் கண்டு வார்த்தைசொல்லித் தேற்றுவேனென்றுரைசெய்தனுப்பினர். தாரையும் மகாராஜராலிவ்வண்ணமேவப்பட்டு மதமயக்கினால் கண்கள் சுழன்று கால்களிடறி அரைஞாணைத்தொங்கவிட்டுக் கொங்கைகளின் பாரத்தினால் வணங்கி யிளையபெருமாளருகிற்சென்றுநின்றனள். அந்த இளையபெருமாளும் இந்தத் தாரையைக் கண்டு பரத்தையல்களை யுற்றுப்பார்ப்பது பாவமென்று தலைகுனிந்து பெண்ணருகிலிருப்பதனால் கோபந்தணிந்து உதாசினமாக நின்றனர்; ஆயினும், அந்தத் தாரை மதுபானஞ் செய்ததினாலே நாணமின்றி இளையபெருமாளுடைய கண்ணோக்கங்குளிர்ந்து தெளிந்திருந்தமையின். அச்சமுந்தீர்ந்து இளையபெருமாளை நோக்கி, யன்புகூர்ந்து நல்வார்த்தைகளினாலே தேற்றி மகிழ்விக்க முயன்றனள். கேட்டருளீர் தயரதன் திருமகரான இளையபெருமாளே! தேவர் சீற்றங்கொண்டதற்கு யாதுகாரணமுளது; தேவருடைய கட்டளையின்படி யாவன் நடக்கின்றிலன்; உலர்ந்த காடெங்கும் பற்றியெரிகின்ற காட்டுத்தீயை யாவன் அச்சமின்றியெதிர்த் துள்ளே செல்பவன்: என்றிவ்வண்ண மொழிந்த தாரையின் வாக்கியத்தை இளையபெருமாள் கேட்டு அவளை நோக்கிக் கேளம்மா பெண்ணரசே! நீ மிகவும்நுண்மதி யுடையளாயிருந்தும் உன்பர்த்தாவான மஹாராஜர் இவ்வண்ணம் காமமயக்குற்றுசெய்கருமங்களை யுணராதிருக்கி

ன்றுமொன்பதையும் அறிகின்றிலேயோ? அவர் எம்மால் ராஜ்ஜியம் தமக்கு வாய்த்ததென்பதையும், யாங்களிவ்வண்ணம் அவரை யடுத்திருக்கின்றோ மென்பதையும், அறிகின்றிலரோ? இனத்தார் சுற்றத்தார் மந்திரிகள் எல்லோர்களுடனும் மதுவுண்டே மயங்கிக் கிடக்கின்றனரோ? அவர் எங்களுக்கு நான்கு மாதம் கார்காலம் கழிந்தவுடன் பிராட்டியைத் தேடுவிக்கின்றே னென்று பிரதிஜ்ஞைசெய்து கொடுத்து அது கழிந்ததையும் அறியாமல் மதுவுண்டின்புற்றே மயங்கிக்கிடக்கின்றனரோ?

నహిధర్మార్థసిద్ధ్యర్థం పానమేవం ప్రశస్యతే
పానాదర్థశ్చధర్మశ్చ కామశ్చపరిహీయతే.

நஹிதர்மார்த்தஸித்யர்த்தம் பாநமேவம்ப்ரசஸ்யதே
பாநாதர்த்தச்சதர்மச்ச காமச்சபரிஹீயதே.

பானத்தினால் தர்மார்த்தகாமங்கள் மூன்றுங்குறைந்தழிகின்றமையின் தர்மார்த்தங்கள் சித்திப்பதன்பொருட்டாக இவ்வண்ணம்பானஞ்செய்வதை ப்பெரியோர்கள் புகழ்கின்றிலர்கள்; நன்றி செய்தவர்களுக்குப் பிரதி யுபகாரம் செய்யாதார்க்குத் தருமம் மிகவுங் குறைந்துவிடுகின்றது; குணவானை தோழனைத் துறப்பதினாலே பொருளும் அழிந்துவிடுகின்றது; தோழனே தருமத்திற்கும், அர்த்தத்திற்கும் காரணமல்லனோ? மித்திரனை யுபேக்ஷைசெய்வதினால் அவ்விரண்டும் அழிந்துவிடுமன்றோ! இப்போது எமது காரியம் இவ்வண்ணம் நேர்ந்திருக்கையில், மஹாராஜர் இவ்வண்ணமிருப்பாராயின். யாங்கள் யாதுசெயில் தகுமோ அதனை நுண்ணறிவுடைய நீயே யாராய்ந்துரையாய் என்று மொழிந்தனர். அந்தத் தாரையும் அவ்வாக்கியங் களைக்கேட்டு பெருமாளுடைய காரியத்தில் விசுவாஸம் தோற்றும்படியாக இளையபெருமாளை நோக்கி மொழியலுற்றனள். கேட்டருளீர் இளையபெருமாளே! தேவர் இப்போழ்து மஹாராஜர்மேல் சினமுறத்தக்க காலமன்று; பெரியோர்கள் தம்மையடுத்தவர்கள் மேலும் கடுஞ்சினங்கொள்வார்களோ? தேவர்களாலேதானே பொருளின்பங்களையுடைய இம்மஹாராஜருடைய மதமயக்கினுலூக்கமற்றிருப்பதாகிய இப்பிழையையும் பொறுத்தருள்க; ராஜகுமாரரே! வீரமுடையோர்கள் தமக்கு நிகரான வலிமைகொண்டெதிர்க்கின்ற பகைவர்மேலன்றோ சினமுறுவார்கள்; தமக்கீடில்லாத எளியர் மேலெவ்வண்ணஞ் சினமுறுவார்கள்; அன்றியிலே, தேவர்போன்ற ஸத்துவகுணமுற்றுத் தவத்திற்கும் பிறப்பிடமானவர்கள் யார்மேலாயினும் சினமென்பதை யெவ்வண்ணம் எவர்தானறிவார்கள்; பெருமாள் சினமுற்றதையும் அறிவேன்; அதற்குக் காரணமான காலக்கழிவையும் அறிவேன்; தாங்கள் செய்த நன்றியையும் அறிவேன்; இப்போது யாதுசெயல்வேண்டுமோ அதனையும் அறிவேன்; காமனுடைய திறமை மிகவும் வலியதென்

பதையும் அறிவேன்; அந்தக் காமனால் மஹாராஜன் எந்த ஜனத்தின்மீ தாசையுறுவிக்கப்பட்டனனோ? அதனையும் அறிவேன்; தேவர் இவ்வண் ணம் சினமுற்றமையின், தேவர் புத்தி காமதந்திரத்திலூக்கங்கொண்டிலது; காமவேட்கை மிகுந்த மனிதன் தேசகாலங்களையாயினும், அறம்பொருள் களையாயினும் அறிகின்றிலனல்லனோ? எப்பொழுதும் என்னருகிலிருக் கின்றமையின், காமவேட்கை யதிகரித்து நாணமுமற்று மயங்கிக் கிடக்கி ன்ற மஹாராஜர் தேவர் தமையருக்குத் தோழரெனனும் முறையினால் தேவ ர்க்குச் சஹோதரராதலின், அவர்மீதுள்ள இப்பிழையைப்பொறுத்தருள்க; உண்டி சுருங்கிப் புலன்களைவென்று யோகஞ்செய்துகொண்டிருந்த மஹா முனிவர்களும் காமனுக்குக்குலியாகி மயங்கனர்களெனின், இயல்பாகவே சஞ்சலசித்தமுடைய கபிஜாதியான இம்மஹாராஜர் விஷயஸுகங்களிலழு ந்தி மயங்கிக் கிடப்பதென்பது வியப்போ என்று தாரை இவ்வண்ணம் மொழிந்து இளையபெருமாளைமகிழ்வித்து மீளவும் அவரை நோக்கி, மஹா ராஜர்க்கிதமாகமொழியலுற்றனள். கேட்டருளீர் ராஜகுமாரரே! மஹாராஜர் காமக்கடலில் மூழ்கி மயங்கியிருக்கினும் தேவர்கள் காரியத்தில் முன்பே முயற்சிசெய்யும்படி கட்டளைசெய்தேயிருக்கின்றனர்; ஆதலால், நாநாதேச நகரவாஸிகளான வாநரர்கள் ஆயிரம், பதினாயிரம், கோடி, பத்துகோடி, நூறுகோடிகளாகச்சேர்ந்து வந்திருக்கின்றனர்கள்; இதுவரையில் பரத்தை யலேக் கண்ணுறலாகாதென்று புறத்திலேதானே நின்ற தேவரால் நல்லோர் நடைக்கை பாதுகாக்கப்பட்டது; தோழர் தோழருடைய பாரியையைக் காண் பது கபடமின்மையினால் இகழப்படாததாதலின், அந்தப்புரத்தினுள்ளே எழுந்தருள்க; என்றிவ்வண்ணம் தாரையின் மொழியைக்கேட்ட இளைய பெருமாள் தாரையின்வேண்டுதலாலும், காலக்கழிவாகின்றதெனபதினாலும் உடன்பட்டுள்ளேசென்று சிறந்த ஆஸ்தரணமுடைய சிறந்த தங்கச்சிங்கா தனத்தின்மேல் கதிரவன்போல விளங்குகின்றவரும், திவ்வியாபரணங்களி னால் நாநாவண்ணமுடையமேனியுடையவரும், சிறந்த மாமலர்மாலைகள்சூடி நல்லாடையுடுத்து அலங்காரஞ்செய்துகொண்டவரும், மஹேந்திரன்போல பிறரால் வெல்ல வொண்ணாதவருமான மஹாராஜர் திவியாபரணாலங்காரங் களையுடைய காமினியர்களுடன்கூடிச் சூழப்பட்டிருக்கக்கண்டு இருமடங்கு சினங்கொண்டு கண்கள் சிவந்த ஊழிகால யமன்போல கோரரூபமுற்றுச் சென்றனர். மஹாராஜரும் சிறந்த சிங்காஸநத்திலுட்கார்ந்து ருமையென் னும் தன்மனையாளைத் தழுவிக்கொண்டு இளையபெருமாளெழுந்தருள்வதை க்கண்டனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்துமூன்றுவது சருக்கம்

முற்றிற்று.

முப்பத்துநான்காவது சருக்கம்.

இளையபெருமாள் மஹாராஜர்க்குப் பெருமாளுடைய கட்டளையை யறிவித்தருளியது.

மஹாராஜர் இவ்வண்ணம் தடையின்றிச் சினங்கொண்டு வருகின்ற அந்த இளையபெருமாளைக் கண்டு அச்சங்கொண்டு மூண்டெரிகின்ற தீபோன்ற வரும், பெருமாளுடைய வியஸனத்தினாலே பீடிக்கப்பட்டவருமான அவர் கிட்டுவதன்முன்னமே யாஸநத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட நெடிய சக்கரனுடைய த்வஜம்போல வெழுந்து நிற்கையில், ருமை முதலிய பெண்களும் உடனே வானிடையிலெழுகின்ற சந்திரனைத்தொடர்ந்து விண்மீன்களெழுவதுபோல எழுந்தனர்கள்; அப்பொழுது மஹாராஜரும் கைகூப்பிக் கற்பகம்போல அசைந்து நின்றனர்; இளையபெருமாளும் ருமை முதலிய பெண்களுடன்கூடின மகாராஜர் விண்மீன்கள் சூழ்ந்த பூர்ணசந்திரன்போலொலிக்கக்கண்டு சினங்கொண்டவனாநோக்கிக் கேளீர் மஹாராஜரே!—

సత్వాభిజనసంపన్న స్సానుక్రోశో జితేంద్రియః
కృతజ్ఞస్సత్యవాదీచ రాజాలోకే మహీయతే.

ஸத்வாபிஜனஸம்பன்ன ஸ்ஸானுக்ரோசோஜிதேந்த்ரிய:
க்ருதஜ்ஞஸ்ஸத்யவாதீச ராஜாலோகேமஹீயதே.

ஸத்துவமுடையோனும், நற்குலத்திற்பிறந்தோனும், கருணை கூர்ந்தவனும், புலனைகளைவென்றவனும், நன்றிமறவாதானும், சத்தியந்தவறாதவனுமாகிய ராஜனே உலகினில் புகழப்படுகின்றனன். எந்த வேந்தன் அதருமமுற்றவனும்,உபகாரஞ்செய்த தோழர்கள்விஷயத்திலேதானே பொய்யாகப் பிரதிஜ்ஞைசெய்தவனுமாகின்றனனோ? உலகினில் அவனிலுங் கொடுமை கொண்டவன் யாவனுளன்;—

శతమశ్వానృతే హంతి సహస్రంతు గవానృతే
ఆత్మానం స్వజనం హంతి పురుషః పురుషానృతే.

சதமச்வாந்ருதேஹந்தி ஸஹஸ்ரந்துகவாந்ருதே
ஆத்மானம்ஸ்வஜனம்ஹந்தி புருஷ:புருஷாந்ருதே.

குதிரைவிஷயத்தில் பொய்யுரைப்பவன் நூறு குதிரைகளைக் கொலை செய்தபாவத்தை யடைவன்; பசுவிஷயத்திலே பொய்யுரைசெய்பவன், ஆயிரம்பசுக்களைக் கொலைசெய்த பாவத்தை யடைவான்; மனிதன் விஷயத்தில் பொய்சொல்லுமவன், தன்னினத்தாரையுங்கொலைசெய்து தானுங் கொலைசெய்து கொண்ட பாவத்தையடைவன்; புருஷோத்தமரான பெரு

மாள்விஷயத்தில் பொய்யுரைப்பவன், யாது கதியை யடைவனோ? நீயே யாராய்ந்தறியாய்; கேளாய் வானரர்கோனே! முன்பொருவரிடத்தில் நன்றி பெற்றுக்கொண்டு பின்பு, அந்நன்றியை மறந்து பிரதி யுபகாரம் செய்யாதவன்யாவனோ? அவன் எல்லாராலும் கொலைசெயற்குரியவன்; முன்பு, திசைமுகதேவர் நன்றிமறந்தவனைக்கண்டு சினங்கொண்டொரு சுலோகமுரைசெய்தனர். அதனை மொழிகின்றேன் கேளாய்;—

బ్రహ్మఘ్నేచసురాపేచ చోరేభగ్నవ్రతేతథా
నిష్కృతిర్విహితాసద్భిఃకృతఘ్నేనాస్తినిష్కృతిః

ப்ரஹ்மக்னே சஸுராபேச சோரேபக்னவ்ரதேததா
நிஷ்க்ருதிர்விஹிதாஸத்பிஃ க்ருதக்னேநாஸ்திநிஷ்க்ருதிஃ.

பிரஹ்மஹத்திசெய்தவனுக்கும், ஸுராபானஞ்செய்தவனுக்கும், களவுசெய்தவனுக்கும், பிரஹ்மசர்யம் முதலிய விரதத்தைத்துறந்தவனுக்கும், முனிவர்கள் பிராயச்சித்தம் விதித்திருக்கின்றனர்கள்; நன்றி மறந்தவனுக்குமாத்திரம் பிராயச்சித்தம் விதித்திலர்; இல்லையென்றே கூறினர்கள்; என்னும் பொருளுடையசுலோகமே அது. நீயவ்வண்ணம் நல்லொழுக்கமிலாதவனும், நன்றிமறந்தவனும், பொய்யனும் ஆகின்றனை; முன்பு பெருமாளிடத்தில் உபகாரத்தைப்பெற்றுக்கொண்டு இப்போது அதற்கு பிரதி யுபகாரஞ்செய்கின்றிலையல்லையோ? நீ ஸ்ரீராமனுக்குப்பிரதியுபகாரஞ்செய்யக்கருத்துற்றிருக்கின், இதுவரையில் பிராட்டியைத்தேடும் விஷயத்தில் முயற்சிசெய்திருக்கவேண்டுமன்றோ? நீயிவ்வண்ணம் அற்பமான கிராமியபோகங்களிலே விருப்பங்கொண்டு பொய்யாக பிரதிஜ்ஞைசெய்து தவளைபோலக் கற்றித் தன்னிடத்தில் வரும் தவளையைத்தின்னும் நச்சரவம்போன்றவன் என்பதைப் பெருமாளிதுவரையிலுமறிந்திலர்; ஆதலாலேதான் மஹாபாகரான பெருமாள் துராத்துமாவான உன்னுடன் தோழமைசெய்துகொண்டு வாலியையுங் கொலைசெய்து வானரராஜ்ஜியப்பட்டாபிஷேகஞ் செய்வித்தருளினர். நீ யிப்போது பெருமாள் செய்த நன்றியை மறந்து மயக்குற்றிருப்பாயாகில், உடனே கொடிய கணைகளினாலடிப்பட்டு முன்சென்ற வாலியைப் போய்க்காண்பாய்; வாலி சென்றவழி யின்னும் புல்லெழுந்தழிந்து மறைந்திலது; ஆதலின், சத்தியத்தில் நிலைகொண்டு கட்டுண்டிருக்க; வாலிசென்ற வழியைச் சேரற்க; நீ பெருமாளுடைய கூரிய கணைகள் வச்சிராயுதம் போலப் பாய்ந்துவருவதைக் கண்ணுறக் கருதுகின்றனைபோலும், ஆதலாலேதான் இவ்வண்ணம் நிரந்தரம் விஷய ஸுகங்களையே யனுபவித்துக் கொண்டு பெருமாளுடைய காரியத்தை மனதிலுங்கருதுகின்றிலை; என்று சிறிதுந் தாக்ஷிண்யமின்றிப் பட்படவென்று மொழிந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்துநான்காவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்தைந்தாவதுசருக்கம்.

மீளவும் தாரை இளையபெருமாளை இனியமொழிகளினால் ஸமாதானஞ்செய்து சீற்றத்தைத்தணித்தது.

இவ்வண்ணங் கொடுமொழிமொழிந்திகழ்ந்த இளையபெருமாள் ஒளிகொண்டெரிகின்ற தீபோல ஜொலிக்கக்கண்டு முழுமதிபோன்ற முகத்தையுடைய தாரை இளையபெருமாளைநோக்கி கேட்டருளீர்இளையபெருமாளே! தேவர் இவர் விஷயத்தில் இவ்வண்ணம் வன்மொழிமொழிவதுந் தகுதியற்றது; இவரும் கொடுமொழிமொழிவதற்கு இடமாகார்; விசேஷமாக தேவர் வாக்கினால் கூறப்பட்ட கொடுமொழிகளை வாநரராஜனை இவர் செவியுறுவது தகுமோ? இம்மஹாராஜர் தேவர் உரைசெய்தவாறு நன்றியறியாதாருமலர்; ஏகாந்தத்திலே தீங்குசெய்பவருமலர்; கொடுமைகொண்டவருமலர்; பொய்யருமல்லர்; குடிலமுடையருமல்லர்; தாங்கள் செய்த உபகாரத்தை இவர் மறந்திலர்; பெருமாளுடைய அருளினாலேயே மிகுந்த கீர்த்தியையும், பெறற்கரியகிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும், ருமையையும், என்னையும் அடைந்தனரல்லரோ? ஆயினும், இவர் முன்பு நெடுங்காலம் ஆகாரநித்திரையின்றித் துன்புற்றமையின், இப்போது இப்பேரின்பத்தைப்பெற்று மயங்கி அவ்வக்காலங்களில் செயற்குரியவைகளையும் செய்யுமுணர்வற்றிருக்கின்றனர்; முன்பு விசுவாமித்திரமஹாமுனி நெடுங்காலம் தவஞ்செய்துகொண்டிருந்தொருநாள் கிருதாசியென்னும் தெய்வப்பொதுமகளைக் கண்டு காமுற்று அவளுடன் புணர்ந்துகொண்டிருந்து பத்துவருஷங்கள் கழிந்தும் அவைகளையொரு பகலாகவே நினைத்தனரல்லரோ? அந்த மஹாமுனியே காமமயக்கினால் காலக்கழிவை யறிந்திலரெனின், மற்றவர்கள் மயங்கியிருப்பது வியப்போ? தேஹதர்மமான ஆஹார நித்திராமைதுனங்களையே முக்கியமாக எண்ணி நெடுங்காலந் துன்புற்று இப்போழ்தே இன்பமுற்று மயங்கிய இவருடைய இப்பிழையைப் பொறுத்தருள்க; உலகின் தன்மையை யாராய்ந்து உண்மையையறியாமல் மூடன்போல விரைவாகச் சினத்தையேமேற்கொண்டு வருத்தற்க; தேவர் போன்ற ஸத்துவகுணமுடைய பெரியோர்கள் ஆராய்ந்தறியாமல் சீற்றமுறுவார்களல்லரோ? மஹாராஜர் பொருட்டாக யானே தேவரை வேண்டுகின்றேன்; இக்கடுங்கோபத்தைத் துறந்து மகிழ்ந்தருள்க; பெருமாளுக்குப் பிரியமாயின், மஹாராஜர் ருமையையும், என்னையும், கிஷ்கிந்தாராஜ்ஜியத்தையும், மற்றுமுள்ள தனதான்யாதிகளையுந் துறந்துவிடுவரென்றே யான் நம்புகின்றேன்; மஹாராஜர் ராவணனைக் கொலைசெய்து பெருமாளைப் பிராட்டியுடன் சேர்த்து ஹிராணியுடன் கூடின சந்திரனைப்போல விளங்கச்செய்வார்; இலங்காபுரியிலே அநேக லக்ஷங் கோடி ராக்ஷஸர்கள் குவைகுவையாக மிகக்கொடியவர்களா

கவும், வேண்டியபடி ரூபந்தரித்துக்கொள்ள வல்லவர்களாகவுமிருக்கின் றனர்கள்; அவர்களெல்லோரையும் கொலைசெய்யாமல் ராவணனைக் கொலை செய்வது ஒருவராலும் முடியாது; அவனைக் கொலைசெய்யாமல் பிராட் டியை மீட்பதுமரிது; ஆதலின், அவனைக் கொலைசெய்வதற்குப் பலபேர் களுடைய உதவிவேண்டும்; இவ்வண்ணம் வாலி யெனக்குரைத்திருக்கின் றனர்; அவர் ராவணனுடைய ஸாரம் எல்லாம் நன்ருக அறிந்தவர்; யான் நேராகக் கண்டிலேனுதலின், கேட்டபடி யுரைசெய்தேன்; அன்றியிலே, தேவர்களுக்கு ஸஹாயம் செய்வதன்பொருட்டே அங்கங்குள்ள வாநரஸே னைகளையழைத்துவரும்படி தூதர்கள் அனுப்பப்பட்டனர்கள்; அவர்கள் வரு வதை யெதிர்பார்த்தே மஹாராஜர் இதுவரையில் புறப்படாமலிருக்கின் றனர்; இவர் தூதர்களை யனுப்புங்காலையிலேயே இன்று முதல் பதினைந்து தினத்துக்குள் யாவன் வருகின்றிலனே? அவன் உடனே விசாரணையி ன்றி உயிர்வாங்குந்தண்டனைக்கு உள்ளாகுவானென்று கண்டிதமாகக் கட் டளைசெய்திருக்கின்றனர்; இன்றியதினமே அவர்கள் எல்லோரும் வந்து சேரவேண்டியவேளை; ஆதலின், அநேகமாயிரங்கோடி கரடிகளும், அவ் வளவு கோலாங்கூலங்களும், அவ்வளவு கருங்குரங்கு செங்குரங்கு வெண் குரங்குகளும், இப்போழ்தே இங்கு வந்து கூடப்போகின்றன; சீற்றந் தணிந்து மகிழ்ந்தருள்க; தேவருடைய திருமுகமண்டலம் சினத்தினுல் ஜொலித்துக் கண்கள் சிவப்புற்றிருப்பதைக்கண்டு மஹாராஜர் பத்தினிக ளெல்லோரும் வாலியைக் கொலைசெய்ததை நினைந்து மகிழ்வுகுன்றி வரு ந்துகின்றனர்களேயன்றி, இன்புறுகின்றிலர்கள்; ஆதலின், மகிழ்ந்தருள்க; என்று தாரை இளையபெருமாளைத் தேற்றி மகிழ்வித்து மகிழ்ந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தாருவது சருக்கம்.

இளையபெருமாளும் மஹாராஜரும் சினமும் மயக்கமுந்தீர்ந்து மகிழ்வுடன் ஸம்பாஷணஞ் செய்து கொண்டது.

இவ்வண்ணந் தாரையுரைசெய்த வாக்கியம் விநயமும் தருமமும் இனி மையும் பொருந்தி யிருந்தமையின், குளிர்ந்த தன்மையையுடைய இளைய பெருமாள் அதற்குடன்பட்டுக் கடுஞ்சினந்தீர்ந்து அருள் கூர்ந்து மகிழ்வு கொண்டு திகழ்கையில், மஹாராஜர் அதுகண்டு அவரிடத்தில் தோன்றிய அச்சத்தை நனைந்த வஸ்திரத்தைப்போலத் துறந்து தன் கண்டத்திலே

அணிந்துகொண்டிருந்த சிறந்த நறுமலர்மாலைகளையும் அறுத்தெறிந்து விட்டு மதுபானமயக்கும் காமமயக்குந்தீர்ந்து சிறந்ததோள்வலியுற்ற இளைய பெருமாளைநோக்கி மகிழ்வுறும்படி மொழியலுற்றனர். கேட்டருளீர் இளைய கோவே! முன்பு என்னுடைய செல்வமும், புகழும், கபிராஜ்ஜியமும் அழிந்துவிட்டன; பின்பு இப்போழ்து பெருமாளுடைய அருளினலே தானே அவை என்னால் அடையப்பட்டன; அவ்வண்ணம் மஹோபகாரஞ்செய்த அந்த மஹானுபாவனை பெருமாளுக்குப் பிரதியுபகாரஞ்செய்ய எவன் தான் திறமையுடையவனகுவான்; ஆதலின், பெருமாளே தமது திறமையினலே பிராட்டியையும் அடைவார்; ராவணனையும் கொலைசெய்வார்; யான் ஸஹாயமாத்திரனக அவருடன் சேர்ந்திருக்கவல்லனேயன்றி, மற்று யாது செய்ய வல்லேன்; அந்த மஹாபுருஷனுக்கு யாருடைய உதவிதான் விரும்பத்தக்கதாகும்; அவர் ஓரேகணையினலேதானே ஏழு ஸாலமரங்களையும், மலையையும், பூமியையும் துணித்துத் துளைத்துப் பிளந்தருளினரல்லரோ? அன்றியிலே, இவர் தனுஷ்டங்காரஞ் செய்கையிலே காடு மலை கடல்களுடன்கூடின பார்முழுதும் கிடுகிடென்று நடுங்கியதன்றே? அவருக்கு யாருடைய உதவிதான் வேண்டும்; பெருமாள் புத்திர மித்திர களத்திராதிகளுடன் கூடின ராவணனைக் கொலைசெய்வதன்பொருட்டெழுந்தருளுகையில், யானும் பின்றொடர்ந்துமாத்திரம் செல்வேன்;—

యదికిఞ్చిదతిక్రాన్తం విశ్వాసాత్ప్రణయేనవా
ప్రేష్యస్యక్షమితవ్యం మేనకశ్చిన్నాపరాధ్యతి,

யதிகிஞ்சித்திக்ராந்தம் விச்வாஸாத்ப்ரணயேநவா
ப்ரேஷ்யஸ்யக்ஷமிதவ்யம் மேநகச்சின்னபராத்யதி.

தேவர்கள் அடியேனிடத்தில் மிகவும் அருள்புரிந்திருக்கின்றமையின், பிழைசெயினும் பொறுத்தருள்வீர்களென்னும் விசுவாஸத்தினலாயினும், தேவர் விஷயத்திலே அபராதஞ்செய்தேனயினும், யான் தொண்டு பூண்டவனென்பதினலே அப்பிழையைப்பொறுத்தருள்க; உலகினில் ஒருவனயினும் அபராதம் செய்யாதானென்பதில்லை; ஆராய்ந்துணரில் எல்லோரிடத்திலும் ஏதேனும் ஒருபிழையிருக்கவேயிருக்கும்; ஆதலின், சினந்தணிந்து மகிழ்ந்தருள்க; என்றிவ்வண்ணமுரைசெய்தமஹாராஜருடைய வாக்கியத்தை இளையபெருமாள் கேட்டு மகிழ்ந்து அவரை நோக்கிக் கேளீர் மஹாராஜரே! நீர் இவ்வண்ணம் வணக்கமுற்று அன்புகூர்ந்திருக்கின்றமையின், எம்மையர் எவ்வகையினலும் உம்மால் இறையுடையராயினர்; உம்மிடத்தில் சிறந்த வலிமையும், மகிமையும், தூய்மையும் குடிகொண்டிருக்கின்றமையின், இந்தக்கபிராஜ்ஜியத்தை யாட்சிசெய்வதற்கு நீரோ தக்கவர்; பெருமாள் உம்மைத்துணையாகக்கொண்டுவிரைவாகவே ராவணனைக்கொலை செய்தருள்வாரென்பதிலையமிலது; நீர் தருமமுணர்ந்தவரும், நன்றியுடை

யவரும், போர்க்களத்தில் மீளாது போர்பவருமாதலின், நீர் இவ்வண்ணம் இனிமையாக மொழிந்தது மிகவும் தகுதியானது ;—

దోషజ్ఞస్సతిసామర్థ్యే కోన్యోభాషితుమర్హతి
వర్జయిత్వామమజ్యేష్ఠం త్వాంచవానరసత్తమ.

தோஷஜ்ஞஸ்ஸதிஸாமர்த்யே கோந்யோபாஷிதுமர்ஹதி
வர்ஜயித்வாமமஜ்யேஷ்டம் த்வாஞ்சவாநரஸத்தம.

தன்னை யிகழ்பவரை யழிக்குந்திறமையிருக்கையிலேயும், தன்மீது நாட்டிய தோஷத்தை யுண்மையென்றுடன்பட்டு அதனைப் பொறுக்கும்படியார் வணங்கி யிவ்வண்ணம் மொழிபவர்; உம்மையும் எம்மையனையும் விட்டு மற்றெவருளர்; ஒருவருமிலர்; ஆதலின், நீர் தோள்வலியினாலும், பலத்தினாலும், குணங்களினாலும், பெருமாளுக்குத்தக்கவராகவே நீங்கள் துணைகூடினர்கள்; ஆதலின், நீர் இப்பொழுதே இங்கிருந்து புறப்பட்டுச்சென்று மனைவியைப் பறிகொடுத்ததினால் மிக வருந்தி இளைத்திருக்கின்ற எம்மையனைத்தேற்றி மகிழ்வித்தருள்க ; பெருமாள் சோகத்தினால் மொழிந்த வாக்கியத்தைக்கேட்டுச் சினங்கொண்டு நும் விஷயத்தில் யான் மொழிந்த வன்மொழிகளையும் பொறுத்தருள்க ; என்று மொழிந்து மகிழ்வித்து மகிழ்ந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

முப்பத்தேழாவது சருக்கம்.

மஹாராஜருடைய கட்டளையின்படி வாநரசேனைகள் வந்து கூடியது.

இவ்வண்ணம் இளையபெருமாளருளிச்செய்த வாக்கியத்தை மஹாராஜர் கேட்டு மகிழ்ந்து அருகிலிருந்த சிறியதிருவடியைநோக்கிக் கேளீர் மாருதியே ! மஹேந்திரம், இமையம், விந்தியம், கைலாஸம் முதலிய வெண்மை நிறம்பொருந்தியும், செம்மையுற்று இளம்வெயில்போலவும் விளங்குகின்ற நாற்றிசைகளிலுமுள்ள மலைகளிலும், மேற்றிசையில் கடலோரங்களிலும், உதயகிரி அஸ்தகிரிகளிலும் உள்ள சந்தனம் பனை முதலிய பற்பல மரங்களடர்ந்த காடுகளில் வாழ்கின்றவர்களும், அஞ்சனமலைபோன்றவர்களும், கருமுகில்போன்றவர்களும், மதவேழத்தை நிகர்த்த தோள்வலியுடையவர்களும், ஆகியவர்களும், அஞ்சனமென்னும் மலையிலே வாழ்கின்றவர்களும்,

மேரு தூம்ரம் மஹாருணம் என்னும் மலைகளில் வாழ்பவரும், மற்றும் பற் பல காடுகளிலும்,முனிவர்களின் ஆசிரமங்களிலும் வாழ்பவர்களுமான வாந ரர்களை ஸாமதானங்களினாலே மகிழ்வித்து விரைவாகவந்து சேருமாறு செய்க; முன்பு நான் அவர்களை யழைப்பதன்பொருட்டே கட்டளைசெய்தனுப் பிய தூதர்கள் தாமஸஞ்செய்யாமல் விரைவாக வருவதற்காக மீளவுந் தூதர் களையனுப்புக; காமமயக்கில்மயங்கி யாவர் தாமஸஞ்செய்கிறார்களோ?அவர் களை என்னெதிரில் அழைத்துவருக; என்னுடைய கட்டளையின்படி பத்து தினத்துக்குள்ளே எவர் வந்து சேருகின்றிலர்களோ ? அவர்களுக்குடனே உயிர்வாங்கும் தண்டனை விதிக்கப்படும் ; ஆதலின், அநேகமாயிரங் கோடி வாநரர்கள் என்னுடைய சட்டளையினால் விரைவாக ஆகாயத்தை மறைத்தெழுந்து சென்று சேனைகளெங்கெங்கிருக்கின்றனவோ?அவைகளை யுணர்ந்து கையுடனழைத்துவரக்கடவர்கள்; என்று கட்டளையிட்டனர். சிறி யதிருவடி யந்தக் கட்டளையைக்கேட்டு அவ்வண்ணமே சிறந்த பலமுடைய வாநரர்களை யனுப்பினர். அவர்களும் அவ்வாறே ஆகாயமார்க்கத்தில் வாயு வேகமனோவேகமாய்ச் சென்று அங்கங்குள்ள வாநரர்களெல்லோரையும் பெருமாளுடைய காரியத்திற்காகத்துரைசெய்து மஹாராஜர் கட்டளையையு மறிவித்தனர்கள். அவ்வாநரர்களும் ஊழிகாலயமன்போன்ற அம்மஹாரா ஜருடைய கட்டளையைச் செவியுற்றவுடனே சிறிதுந் தாமஸம் செய்யாமல் புறப்பட்டனர்கள். அவர்களுள் அஞ்சனகிரியில்வாழ்ந்துகொண்டு அஞ்சன வண்ணமுற்றிருந்தவர்கள், மூன்றுகோடி சேனைகள் ; அஸ்தகிரியில் வாழ் ந்து தங்கநிறம்பொருந்தியவர்கள், பத்துக்கோடி சேனைகள் ; கைலாஸசிகர த்தில் வாழ்ந்து சிங்கத்தின் கேஸரம்போன்ற மேனியுடையவர்கள், அநேக மாயிரங்கோடிகள் ; இமையமலையில் வாழ்ந்து வெண்மைநிறமுற்றவர்கள், ஆயிரமாயிரங்கோடி சேனைகள் ; விந்தியமலையில் வாழ்ந்து அங்காரகன் போன்ற வண்ணமுற்றவர்கள், அநேகமாயிரங்கோடிகள் ; திருப்பாற்கட லின் கரையில் பச்சிலை மரக்காடுகளில் வாழ்ந்து பசிய நிறமுடையவர்கள், கணக்கிறந்தவர்கள்; இவ்வண்ணம் வநங்களினின்றும், குகைகளினின்றும், ஆறுகளினின்றும், அநேகமாயிரஞ் சேனைகள் வானிடையில் பரவி கதிர வனை யுண்பனபோலப்புறப்பட்டன; முன் சென்றவர்களை துரைப்படுத்து வதற்காக பின்சென்ற வானரர்கள் அப்பொழுது இமயமலைபோய்ச் சேர்ந்த னர்கள். அம்மலையிலேதான் முன்பு சகல தேவர்களும் மகிழ்வுறும்படி மகா தேவன் சிறந்த யாகம் செய்தனன் ; அந்த யாகத்தின் ஹோமதிரவியங் களின் பெருக்கினால் மதுரமுள்ள கந்தமூலபலாதிகள் உண்டாயின; அவை களை யாவன் ஒருவன் ஒருவேளை புசிக்கின்றானோ ? அவன் ஒருமாதம்வரை யில் பசிதாகமின்றி மகிழ்வான் ; அக்கனி காய் கிழங்குகளை அவ்வானரர் கள் பறித்து உண்டும், மகாராஜர்பொருட்டு அவைகளையும், மற்றுமங்குள்ள நறுமலர்களையும் பறித்தெடுத்துக்கொண்டும், அங்கங்குள்ள சேனைகளை விரைவாகவரும்படி துரைசெய்தும், மீண்டு அச்சேனைகளுக்கு முன்பே

கிஷ்கிந்தை வந்து சேர்ந்து மகாராஜனைக் கண்டு வணங்கி அவைகளை அளி த்து அவனைநோக்கி வேந்தே! யாங்கள் தங்கள் கட்டளையின்படி மலை, கடல், காடு முதலிய எல்லா இடங்களையும் சுற்றி அங்கங்குள்ள வானரப்படைகளை யும் துரைப்படுத்தி வந்தனம் அவர்களும் வந்துகொண்டிருக்கின்றனர்கள்; என்று விண்ணப்பஞ்செய்தனர்கள். மகாராஜரும் அதுகேட்டு மிகமகிழ்ந்து அவ்வுபாயனங்களையும் அங்கீகரித்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தேழாவது சருக்கம் முற்றிற்று.

முப்பத்தெட்டாவது சருக்கம்.

மஹாராஜர் இளையபெருமாளுடன் பெருமாளெழுந்தருளியிருக்கு மிடத்திற்கு வந்து அவரைக்கண்டு மகிழ்ந்தது.

இவ்வண்ணம் மஹாராஜர் அவ்வுபாயங்களைப்பெற்றுக்கொண்டு அவ் வானரர்களை இனியமொழிகளினால் மகிழ்வித்தனுப்பி தம்மையும் பெருமா ளையும் கிருதார்த்தர்களாக நினைத்து மகிழ்ந்தனர். இளையபெருமாள் அப் பொழுது அவரை நோக்கி, மஹாராஜரே! நும்மனம் உகக்குமாயின், காலக் கழிவுசெய்யாது இப்பொழுதே இங்கிருந்து புறப்படுக; என்று மொழிந்த னர். மஹாராஜர் அதுகேட்டு மகிழ்ந்து இவ்வண்ணமே ஆகுக வென்று உடன்பட்டு தாரை ருமை முதலிய மனைவியர்களையும் அனுப்பிவிட்டுவருக வென்று வாநரர்களைநோக்கிமொழிந்தனர். வாநரர்களும் அதுகேட்டு விரை வாக ஓடிவந்து கைகூப்பி நிற்கையில், மஹாராஜர் அவர்களுக்கு விரைவாகச் சிவிகையை கொணர்கவென்று கட்டளையிட்டனர். அவர்களும் அவ்வண் ணம் விரைவாக சிறந்த சிவிகையைகொணர்ந்து அறிவித்தலும், மஹாராஜர் இளையபெருமாளையும் அதின்மீது எழுந்தருளியிருக்கும்படி வேண்டித் தா மும் அவருடன் அதிலேறி இருந்து வெண்குடை பிடித்து, வெண்சாமரங் கள்வீசி, சங்கம் பேரிமுதலிய வாத்தியங்களை முழக்கி மகிழ்வுகொண்ட பற் பல வானரர்களினால் புகழப்பட்டும், படையேந்தி கொடுமைகொண்ட பல கோடி வானரப்படைகளினால் சூழப்பட்டும் புறப்பட்டு பெருமாள் எழுந்த ருளியிருக்குமிடம் சேர்ந்து இளையபெருமாளுடன் இறங்கி பெருமாளைக் கிட்டி வணங்கி கைகூப்பி நிற்கையில், உடன் வந்த வாநரர்கள் எல்லோரும் அவ்வண்ணமே தொழுது கைகுவித்தனர்கள். பெருமாளும் முகிழ்ந்த கல கோசங்களை உடைய தேங்கிய தடாகம்போன்ற வானரசேனையைக் கடாக்ஷி த்து மகிழ்ந்து தம் திருவடிகளில் தலைவணங்கிய மஹாராஜனையும் பிரீதியி

ஹலும், வெகுமானத்தாலும் எடுத்தணைத்து அருகில் வீற்றிருக்கும்படி கட்டளை செய்து அவரை நோக்கி, மஹாராஜரே! அறம் பொருள் இன்பங்களை அவ்வவற்றிற்குரிய காலங்கள் அறிந்து யாவன் பகிர்த்தனுபவிக்கின்றனனே? அவனே அரசுக்குரியனாகுவான்; யாவன் அறம்பொருள்களைத் துறந்து காமத்தையே மேற்கொண்டு மயலுறுகின்றானே? அவன் மரத்துநுனியில் துயில்பவன்போல தன்னிலையினின்றும் வீழ்ந்தே தாழ்மைகொண்டு விழித்துக்கொள்வான்; பகைவரைக் கொல்வதிலும், தோழரைச் சேர்ப்பதிலும் ஊக்கங்கொண்டு அறம் பொருளின்பம் மூன்றினையும் தக்கபடி உண்பவனே ராஜதர்மமுடையவனாகுவான்; ஆதலின், இப்பொழுது முயற்சி செய்யும் காலம் நேர்ந்திருக்கினும், ஊக்கமற்றிருப்பது தகுதி அற்றதன்றே? ஆதலின், வாநரமந்திரிகளுடன் கூடி நன்கு ஆராய்க; என்று அருளிச்செய்தனர். மஹாராஜர் அதுகேட்டுப் பெருமாளைநோக்கி, இனியதோழரே! என்னுடைய செல்வமும், புகழும், கபிராஜியமும், மனைவியும், யாவும் தேவருடைய திரு அருளினாலேதான் மீளவும் அடியேனுக்கு வாய்த்தன; ஒருவன் செய்த உபகாரத்திற்கு பிரதி உபகாரம் எவன் செய்யானே? அவன் யாவரிலும் கடையனாகி இகழப்படுவான்; ஆதலின், அடியேன் தேவர் காரியத்தில் ஊக்கமற்றிலேன்; இவ்வாநரர்கள் பாரெங்கும் சென்று அங்கங்குள்ள கரடி வானரகோலாங்குலங்களை அழைத்து வந்தனர்கள்; அவர்கள் காடு மலை கடல்களிலுள்ள எல்லா இரகசியங்களையும் அறிந்தவர்களும், தேவகந்தர்வர் முதலான தேவகணங்களின் புத்திரர்களும், வேண்டும்படி ரூபங்கள் தரிப்பவர்களும், சிறந்த தோள்வலி யுடையவர்களுமாகின்றனர்கள்; அவர்கள் இப்பொழுது நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்து லக்ஷம், கோடி, அர்புதம், பிருந்தம், கர்வம், நிகர்வம், மகாகர்வம், ஸரோஜம், சங்கு, சமுத்திரம், அந்தம், மத்தியம், பரார்த்தம் என்று ஒன்றுக்கொன்று பதின்மடங்கு அதிகமுள்ள கணக்குடையனவும், கணக்கிறந்தனவுமாகிய பற்பல வாநரசேனைகளுடன் கூடி வழியில் வந்துகொண்டிருக்கின்றனர்கள்; அவர்கள் மேருமந்தரம் போன்றவர்களும், சிறந்த பராக்கிரமமுடையவர்களுமாதலின், அச்சமன்றி நொடிப்பொழுதிலிங்கு எய்துவார்கள்; ராவணனையும் குலத்துடன் களைந்து வெற்றிகொண்டு பிராட்டியையும் மீட்டு அளிப்பார்கள்; ஆதலின், தேவர் ஒன்றுக்கும் சிந்தையின்றி மகிழ்ந்து உகந்தருள்க; என்று விண்ணப்பஞ்செய்து மகிழ்வித்தனர். பெருமாளும் அதுகேட்டு மஹாராஜருடைய முயற்சிக்கு உகந்து அன்று மலர்ந்த கருங்குவளைபோன்ற திருமேனிவண்ணமுற்று விளங்கியருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தெட்டாவது சருக்கம்

முற்றிற்று.

முப்பத்தொன்பதாவது சருக்கம்.

வானரசேனைகள் எல்லாம் மஹாராஜரிடம் வந்து கூடியது.

இவ்வண்ணமுரைத்து கைகுவித்து நின்ற மஹாராஜரைப் பெருமாள் மகிழ்ந்து தழுவி அவரை நோக்கித் தோழரே! மேகம் மழைபொழிவதும், கதிரவன் இருளை அகற்றி வானை நின்மலமாக்குவதும், சந்திரன் பூமியை நிலவினால் திகழ்விப்பதும், எவ்வண்ணம் வியப்பன்றே? அவ்வண்ணமே நும்போன்ற தோழர்களும் பிரத்தி உபகாரம் செய்வதும் வியப்பன்று; உபகாரத்தை விரும்பாமலே உதவி செய்பவர்களுக்கு இது எவ்வண்ணம் வியப்பாகும்; ஆதலின், நீர் என் காரியத்தில் இவ்வண்ணம் முயர்ச்சியுற்றிருப்பதும் வியப்பன்று; நீர் இத்தகவுடையவரென்பதை முன்னமே அறிவேன்; யான் உம்முடன்சேர்ந்து போர்க்களத்தில் பகைவர்களை எல்லோரையும் கொல்லவும் வல்லேன்; ஆதலின், நீரே எனக்கு தோழரும், இனியருமாகி உதவிசெய்க; ராக்ஷஸாதமனான இராவணன் அநுஹ்லாதன் இந்திராணியை எடுத்தோடி ஒளித்ததுபோலச் சீதாதேவியை வஞ்சனைசெய்து பறித்தோடினன்; புலோமாஸுரனைப் பௌலோமீமணாளன் கொலைசெய்தாற்போலவே யான் அந்த ராவணனைப் போரில் கூரிய கணைகளினாலடித்துக் கொலைசெய்வேனென்று அருளிச்செய்துகொண்டிருந்தருளினர். அத்தருணத்திலேதானே பெருந்துகள் பூமியினின்றுமெழுந்து வெப்பமுற்ற வெய்யோனுடைய கொடிய வெயிலையும் மறைத்திருள்மூண்டு வானெங்கும்பரவியெழுந்தது; அத்துகளினாலே திசைகளும் காணப்பட்டில; காடு கடல் மலைகளுடன் கூடிய பூமியும் அசைந்தது; உடனே வருகின்ற கூரிய கோரப்பல்லுடையவர்களும், சிறந்த பலமுடையவர்களுமாகிய கணக்கிறந்த வானரசேனைகளினாலே பத்துத்திசைகளும் மறைக்கப்பட்டன; அவர்களுள் ஒவ்வொருவரும் அநேகமாயிரங்கோடி பரிவாரங்களுடையவர்கள்; சிலர் நதிகளிலும், சிலர் கடல்களிலும், சிலர் மலைகளிலும், சிலர் காட்டிலும் வாழ்பவர்கள்; எல்லோரும் மாமலைபோன்றவர்களும், மேகம்போல் கர்ஜனை செய்பவர்களுமானவர்கள்; சிலர் பாலஸூரியன் போன்றவர்கள்; சிலர் பூர்ணசந்திரனை நிகர்த்தவர்கள்; சிலர் தாமரைத்தாதுவண்ணர்; சிலர் வெண்மைநிறத்தவர்; சிலர் மேருமலையில் வாழ்பவர்; அவர்களுள் முதன்முதல் சதவலியென்னும் யூதபதி பதினாயிரங்கோடி வானரர்களுடன் காணப்பட்டனன்; பின்பு, தாரையின் தாதையான ஸுஷேணன் அநேகம் பதினாயிரங்கோடி சேனைகளுடனும், ருமையின் பிதாவான தாரன் ஆயிரங்கோடி சேனைகளுடனும் காணப்பட்டனர்கள்; பின்பு, வானரர்களனைவர்களுள் சிறந்தவனும், புத்திமானுமாகிய சிறியதிருவடியின் தகப்பனாராகிய கேஸரியென்பவன் அநேகமாயிரங்கோடி சேனைகளுடன் காணப்பட்டனன்; பின்பு, கவாக்ஷன் ஆயிரங்கோடி கோலாங்கூல சேனைகளுடனும், தூம்ரன் இர

ண்டாயிரங்கோடி கரடி சேனைகளுடனும், பனஸன் மூன்றுகோடி சேனைகளுடனும், நீலன் பத்துக்கோடி கருங்குரங்கு சேனைகளுடனும், கவயன் ஐந்துகோடி வாநரசேனைகளுடனும், தரீமுகன் ஆயிரங்கோடி சேனைகளுடனும், அசுவினி தேவர்களின் குமாரர்களான மைந்த துவிவிதர்களிருவரும் தனித்தனி யாயிரங்கோடி சேனைகளுடனும், கஜன் மூன்றுகோடிகளுடனும், ஜாம்பவான் பத்துக்கோடி கரடி சேனைகளுடனும், ருமண்வான் நூறுகோடி சேனைகளுடனும், கந்தமாதனன் பத்துலக்ஷங் கோடி சேனைகளுடனும், யுவராஜனான அங்கதன் பதினாயிரம் லக்ஷங்கோடி சேனைகளுடனும், ருமையின் தாதை யன்றியிலே மற்றொருதாரனென்பவன் ஐந்துகோடி சேனைகளுடனும், இந்திரஜாநு பதினென்றுகோடிசேனைகளுடனும், ரம்பன் பதினோராயிரத்தொருநூறுகோடிசேனைகளுடனும், துர்முகன் இரண்டுகோடி சேனைகளுடனும், அனுமான் ஆயிரங்கோடி சேனைகளுடனும், நளன் நூறாயிரங்கோடி சேனைகளுடனும், ததிமுகன் பத்துக்கோடி சேனைகளுடனும் காணப்பட்டனர்; இவ்வண்ணமே சரபன், குமுதன், வஹ்நி, ரம்ஹன் என்பவர்களும் தனித்தனி பத்துக்கோடி சேனைகளுடன் வந்தனர்கள்; இவர்போன்ற மற்றுமுள்ள கணக்கிறந்த யூதபதிகளும், அநேகமாயிரங்கோடி சேனைகளுடன் காடு கடல் மலையடங்கிய மண்டலமெங்கு நிறைந்துவந்தனர்கள்; இவர்களெல்லோரையுங்கணக்கிட்டுரைப்பது ஒருவர்க்கும் ஸாத்தியமன்று; இவ்வண்ணம் உலகினிலுள்ள வானரர்களெல்லோரும் தாவிக்கொண்டும், மேலெழும்பிக்கொண்டும், கர்ஜனை செய்துகொண்டும், மேகங்கள் ஸூரியமண்டலத்தைச் சூழ்ந்துகொள்வதுபோல மஹாராஜனைச் சூழ்ந்துகொண்டனர்கள்; பின்பனவர்களும் தத்தம் நாமங்களையுரைத்து மஹாராஜர்க்குத் தலைவணங்கி யறிவித்தனர்கள்; சிலர்கள் விநயங்கொண்டு கைகூப்பி மஹாராஜரருகில் நின்றனர்கள்; மஹாராஜரும் இவர்களெல்லோரையுங்கண்டு மகிழ்ந்து சேனைகளெல்லோரையும் காடு மலை முதலிய இடங்களில் சுகமுறுமாறு இறக்கிப் பெருமாளிடத்திலும் அவரவர்களினுடைய ரூபபல பராக்ரமாதிகளை விண்ணப்பஞ் செய்தனர். மஹாராஜர் யாவுமறிந்தவராதலின், அச்சேனைகளின் தன்மைகளை நன்கறிய வல்லவரல்லரோ?—

கிஷ்கிந்தாகாண்டத்தில் முப்பத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

இந்தச்சருக்கத்தில் கணக்கிறந்த சேனைகள் மஹாராஜரிருக்குமிடத்திற்சேர்ந்தனவென்று கூறப்பட்டுளது; சிறியதான அவ்விடத்தில் அவ்வளவு சேனைகளெவ்வண்ணமடங்கியிருந்தனவென்று சிலர் ஆக்ஷேபஞ்செய்வர்கள்; ஆயினும், இச்சருக்கத்திலேயும் அங்கங்கு (காமரூபிகள்) வேண்டுமாறு ரூபந்தரிக்கவல்லர்கள், என்று விசேடணமுரைத்திருப்பதினாலேயே அந்த ஆக்ஷேபத்திற்கு சமாதானம் அறிந்துகொள்ளலாம்; எல்லோரும் வானிடையிலிருக்க வல்லவர்களாதலினாலும், சிலர் ஆகாயத்திலும், பலர் பாரிலும், மேனியைச் சுருக்கிக்கொண்டிருந்தனர்களென வுணர்க.

நாற்பதாவது சருக்கம்.

பிராட்டியைத் தேடுவதற்காக விநதனென்னும் யூதபதியை மஹாராஜர் கீழ்த்திசைக்குக் கட்டளைசெய்தனுப்பியது.

அநந்தரம் மஹாராஜர் பெருமகிழ்வுகொண்டு மஹாபல பராக்ரமமுடைய பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் அன்புள்ள தோழரே! காமரூபிகளும், சிறந்த பலமுடையோர்களும், மதவேழம் போன்றவர்களுமாகிய என் கட்டளைக்குட்பட்ட வாநரர்களெல்லோரும் வந்து சேர்ந்துவிட்டனர்கள். இவர்கள் அநேகமாயிரஞ் சேனைகளுக் கிறையவர்கள்; தைத்திய தானவர்கள்போலக் கொடுமை கொண்டவர்கள்; வியப்புறத்தக்க செயல்களினாலே பெரும்புகழடைந்தவர்கள்; எவ்வளவுகாரியஞ்செயினும் இளைப்புறார்கள்; முயற்சிசெய்வதிலும், மேற்கொண்ட காரியத்தை முடிப்பதிலும் சிறப்புடையவர்கள்; சிலர் பாரிலும், சிலர் நீரிலும் நடப்பவர்கள்; இவர்கள் எல்லோரும் தேவர்க்குத்தொண்டர்களாகித் தேவருடைய கட்டளையையே யெதிர்பார்த்து நிற்கின்றனர்கள்; மிகவும் குருபத்தியுடையவர்கள்; இப்பொழுது தேவர் திருவுளத்திலிருக்கின்ற காரியத்தைச் செய்து முடிக்குந் திறமையுடையவர்கள்; அநேகமாயிரங்கோடி வாநரர்களுடன் தேவரையே யெதிர்பார்த்து நிற்கின்ற இவர்களுக்கு இப்பொழுது யாதுகட்டளைசெயின் தகுமோ? அதனை யருளிச்செய்தருள்க; இச்சேனைகளெல்லாம் தேவருடையனவே? தேவராதீனமாயினவே? ஆதலின், கட்டளைசெய்தருள்க; இவர்கள் செய்யவேண்டும் காரியத்தையும் யான் நன்குணர்வேன்; ஆயினும், தேவரே உண்மையாக அருளிச்செயல்வேண்டும்; என்று விண்ணப்பஞ் செய்து வேண்டினர். பெருமாளும் இவ்வண்ணமொழிந்த மஹாராஜர் வாக்கியத்தைக் கேட்டருளி மகிழ்ந்து அவரைத் திருக்கைகளினால் தழுவி யவரை நோக்கி, மஹாராஜரே! இப்போழ்து இவர்கள் செயல்வேண்டுவதைக் கூறுகின்றேன் கேளீர்; என் பிராணநாயகியான ஜாநகி பிழைத்திருக்கின்றனளோ? இலளோ? அந்த ராவணன் எங்குறைகின்றனனோ? இவ்விஷயத்தைமாத்திரம் இவர்கள் உண்மையாக அறிந்து வரல்வேண்டும்; அதனையறிந்த பின்பு நாமிருவரும் ஆலோசித்து யாதுசெயின் தகுமோ? அதனையப்பொழுது செய்வோம்; இவ்விஷயத்தில் யானுயினும், லக்ஷ்மணனுயினும் பிரபுவல்லோம்; வாநரர்களெல்லோருக்கும் இறையான நீரொருவரே பிரபு; ஆதலின், என்னுடைய காரியத்தின் நிச்சயத்தை நீரே கட்டளை செய்தனுப்புக; என்னுடைய காரியத்தை யுண்மையாக அறிவதற்கு நீரொருவரே நன்குணர்கின்றீரல்லீரோ? நீர் நமக்குத் தோழரும், குருகுலவாஸஞ்செய்து கலைகளெல்லாவற்றையுமோதியவரும், மஹாபல பராக்கரம

முடையவரும், காலதேசங்களை யறிந்தவரும், நம் காரியத்தை நன்குணர்ந்தவரும், பற்பல காரியங்களைச்செய்து முடித்தவரும் ஆகின்றீர்; ஆதலின், நீரே இவர்களுக்குக் கட்டளைசெய்தனுப்புக; என்று அருளிச்செய்தனர். பெருமாளிவ்வண்ணம் அருளிச்செய்த வார்த்தையை மஹாராஜர் கேட்டு மகிழ்ந்து பெருமாளிளையபெருமாளிருவருக்கெதிரிலேயே விநதனென்கிற சேனுபதியையழைத்து அவனை நோக்கி மொழியலுற்றனர். கேளாய் சேனுபதியே! சோமசூர்யாம்சமுற்ற வாநரசேனுபதிகளும், நீயும் மிகுதியாயுள்ள சேனைகளுடன்கூடிக்காலதேசங்களுக்குத்தக்கபடி செயற்குரியனவும், செயற்கரியனவும் இவையெனத்தேர்ந்து, காடு கடல்களுடன் கூடின கீழ்த்திசையிற்சென்று அங்கே சீதாபிராட்டி எழுந்தருளியிருக்குமிடத்தையும், இராவணன் வாழுமிடத்தையும் தேடி யோரிடமும் விடாமல் நன்காராய்ந்துவருக; அத்திசையில் வழியிலே பாகீரதி, ஸரயு, கௌசிகி, காளிந்தி என்னும் நதிகளும், யாமுனமென்னும் மலையும், ஸரஸ்வதி, ஸிந்து, சோணம் என்னும் நதிகளும், பற்பல காடுமலைகளடர்ந்த காளமலா என்னும் நாடும், ப்ரஹ்மமாலம், விதேஹம், மாளவம், காசி, கோஸலம், மாகதம், புண்டரம், வங்கம் என்னுந்தேசங்களும், கோசகாரரென்னும் ராஜர்களின் ராஜதானியும், வெள்ளிகனியுடைய பூமியும் முறையே யிருக்கின்றன; இவை யெல்லாவற்றையும் முறையே தேடுக; அதற்குமேல் குணகடல், அதனடுவில் பற்பல மலைகளும், நகர்களும், மந்தரமலையின் சிகரமும் இருக்கின்றன; அவைகளில் செவியில்லாதவர்களும், உதடிலே செவியுடையவர்களும், எஃகுபோன்ற முகமுடையவர்களும், ஜவனரென்பவர்களும், ஒரேகாலுடையவர்களும், அழிவற்றவரும், பலமுடையவரும், மனிதர்களைத்தின்கின்றவர்களும், ஆகியவர்களும், கிராதர்களும், செவியில் சிகையுடையவர்களும், தங்கம்போன்ற மேனியுடையவர்களும், பச்சைமீனை யுண்பவருமாகிய பற்பல ஜாதிகள் வாழ்கின்றனர்கள்; அங்கு நீரினுள்ளும் பாதி புலியுருவமும், பாதி மானிடவுருவமுமமைந்த கொடியஜாதிகளுமிருக்கின்றனவாம்; இதுவாயில் ஜம்பூத்வீபம், அதன்மேல் சிலத்தீவுகள் மலைவழியாலும், சிலத்தீவுகள் நாவங்களினுலும் அடையத்தக்கவை; சிலத்தீவுகள் ஆகாசமார்க்கமாகவே செல்வதற்குறியன; அவைகளிலும் சென்று தேடுக; அதன்மேல் ஏழுகண்டமாகப்பிரிந்த யவத்வீபம், அது நவமணிகளுடையதும், வெள்ளி தங்கங்களின் நிறமுடையதும், தங்கக்கனியுடையதுமாகின்றது; அதனைத் தாண்டிச் சிசிரமென்னும் மலை, அதனுடைய சிகரம் வானுலகைச் சேர்ந்துளது; அங்கு தேவதானவர்கள் வாழ்கின்றனர்கள்; கீழ்ச்சொல்லிய இடங்களில் ஓரிடமாயினும் விடாமல் காடு மலை யாறு குளம் குட்டை கோட்டை நாடு நகர்களெங்கும் பிராட்டியைத்தேடிவருக; அதன்மேல் செவப்புற்றும், ஆழ்ந்தும், விரைவாகப் பெருகுகின்ற சோணமென்னும் நீரிருக்கின்றது; அதன்மேல் கடலின் அக்கரை அங்கும் சித்தசாரணஸேவிதமான பற்பல தீர்த்தங்களிருக்கின்றன; அங்கும் பிராட்டியாரையும் ராவணனையுந்தேடுக; அதன்

மேலும் பற்பலத் தீவுகளிருக்கின்றன; அதன்மேல் கரும்பின்சாற்றின்கடல் அது காற்றினால் மிக வெழுந்தலைத்தொலிக்கின்றது; அங்கு மிகவும் மாயாவிகளான அஸுரர்கள் வாழ்ந்துகொண்டு மேலே செல்பவர்களை நிழலைப் பற்றி யிழுக்கின்றனர்கள்; அவர்களுக்கிவ்வண்ணந் திசைமுகதேவர் வரமளித்திருக்கின்றனர்; அங்கு நீங்கள் உபாயத்தினால் தனையிலேயேசென்று தாண்டுக; அதன்மேல் லோஹிதமென்னும் கடல் ரத்தம்போலிருக்கின்றது; அதன்மேல் ஓங்கியுயர்ந்த இலவமரம் (சால்மலி) இருக்கின்றது; அதனால் அதன்மேலுள்ள தீவுக்கு சால்மலித்வீபமென்ற பெயர்; அங்கு பெரிய திருவடிக்கு விச்வகர்மன் கையிலைமலைபோன்ற திருமாளிகையை யியற்றியளித்திருக்கின்றனன்; அங்குள்ள மலைகளில் பற்பல உருவங்களுற்று பயங்கராளான மந்தேஹரென்னும் அஸுரர்கள் தொங்குகின்றனர்கள்; அவர்கள்தான் தினந்தோறுங் கதிரவனுதிக்கையில் வேதியர்களளித்த அர்க்யமென்னும் வச்சிரங்களினாலடிபட்டு நீரில் மடிந்து வீழ்கின்றனர்கள்; கதிரவன் கிரணங்களின் வெப்பந்தணிதலும் அவர்கள் முன்போலவே எழுந்து மலைகளின்மேலேறுகின்றனர்கள்; இவ்வண்ணம் உப்பு, கரும்பின்சாறு, ஸுரா, நெய், தயிர் என்னும் ஐந்து கடல்களையும், ஜம்பூ, யவம், ப்லக்ஷம், சால்மலி, குசம், க்ரௌஞ்சம் என்னும் ஆறுதீவுகளையும்கடந்து செல்லின் வெண்மையுற்ற மேகம்போன்றக்ஷீரோதமென்னுந்திருப்பாற்கடலிருக்கின்றது; அது அலைகளினிரையினால்முத்துவடம்போலக்காணப்படும்; அதனடுவில் ரிஷபமென்னும்மாமலை வெண்மைநிறமுற்று திவ்ய கந்தரசங்களுடைய வெள்ளிபோன்ற மலர்ந்த மரங்களினாலும் விளங்குகின்றது; அதில் தங்கத்தாதுள்ள வெள்ளித்தாமரைகள் மலர்ந்த சுதர்சனமென்னும் புஷ்கரிணியிருக்கின்றது; அங்கு தேவசாரண கந்தர்வ கின்னர கிம்புருஷாதி தேவகணங்கள் மகிழ்ந்து விளையாடுகின்றனர்கள்; அக்கடலையும் தாண்டிச்செல்வீர்களாயின், நன்னீர்க்கடல் காணப்படும்; அதனிடையில்தான் படபாநலம் எரிந்துகொண்டிருக்கின்றது; அதனாலேதான் ஊழிகாலத்தில் எல்லா நீரும் பருகப்படுகின்றது; அக்கடலிடையில் வாழ்கின்ற சிறந்த உயிர்களும் அந்தத் தீயைக்கண்டச்சங்கொண்டு கூவுகின்றன; அங்கு அவ்வொலி மிக வொலிக்கின்றது; அத்தண்ணீர்க்கடலினக்கரையில் பதின்மூன்று காதத்திலே ஜாதரூபசிலமென்னும் சிறந்த தங்கமலையொன்றுளது; அம்மலையின்மேலே சந்திரன்போல் ஒளிவிடுகின்றவரும், தாமரையிதழ்போன்ற கண்களையுடையவரும், ஸகல லோகங்களாலும் பூஜிக்கப்பட்டவரும், ஆயிரம் தலையுடையவரும், நீலவஸ்திரமுடுத்தவருமாகிய திருவநந்தாழ்வான் எழுந்தருளியிருக்கின்றனர்; அம்மலையின் நுனியிலேதானே மூன்று கிளையுள்ள பருத்துயர்ந்த தோர் தங்கப்பனைமரம் கீழ்த்திசைக்கெல்லையாக நாட்டப்பட்டு வேதியுடன் விளங்குகின்றது; அதற்குமேல் பொன்மயமான உதயகிரியிருக்கின்றது; அதன் சிகரம் நூறுயோஜனம் உயர்ந்துளது; அதிலுள்ள ஸால தால தமால கர்ணிகாரம் முதலிய மரங்களும் பொன்மயமாக

வே மலர்ந்து விளங்குகின்றன; அதில் ஒரு யோஜனம் விஸ்தாரமும், பத்து யோஜனம் உயரமுமுள்ள ஸௌமனஸமென்னும் ஒரு சிகரமிருக்கின்றது; முன்பு, பெருமாள் உலகத்தை யளக்குகையில், அதன்மேலேதான் முதலடியையும், மேருவின்முனையிலிரண்டாவதடியையும் வைத்தருளினர்; கதிரவன் தினந்தோறும் மேருவுக்கு வடபுரத்தைச் சுற்றிவருகையில், அச்சிகரத்தை யடையும்பொழுதுதான் தென்புறத்திலுள்ளோர்களினால் காணப்படுகின்றனன்; அங்கு வைகானஸரென்னும், வாலகில்யரென்னும் வேற்றுமையுடைய மாமுனிவர்கள் தவஞ்செய்துகொண்டு கதிரவனுக்கு நிகராகக் காணப்படுகின்றனர்கள்; அதற்கு எதிரிலிருக்கின்ற ஸ்தானத்தில் கதிரவன் யாவராலுங் காணப்படுகின்றமையில், அதற்கு ஸுதர்சன த்வீபமென்று பெயர் கூறப்பட்டுளது; அம்மலைகளின் சிகரங்களிலும், குகைகளிலும், ராவணனும் பிராட்டியும் இருக்கின்றனர்களோவென்று தேடிவருக; அம்மலையினொளியும், கதிரவனொளியுஞ்சேர்ந்து செம்மையுற்று விளங்குகின்றமையின், காலைச்சந்தியென்னப்படுகின்றது; பிரஹ்மா உலகினைப்படைக்கையில், முதன்முதல் பூலோகத்திற்கு உதயகிரியை துவாரமாகச்செய்து சூரியனையும் அந்த இடந்தொடங்கிச் சுற்றும்படி செய்தமையின், அத்திசைக்குப் பூர்வதிசை (கீழ்த்திசை) யென்னும் அம்மலைக்கு உதயகிரியென்று பெயரிடப்பட்டது; அம்மலையின் பின்புறங்களிலும் தேடுக; அம்மலையினப்புறத்திலே ஸூரிய சந்திராதிகளின் ஒளிகளின்றி இருள்மூடியிருக்கின்றது; ஆதலின், அங்குச்செல்வது ஒருவராலும் முடியாது; அதுவரையிலும்தான் வாநரர்களால் செல்லல்தகும்; ஆதலின், நீங்கள் அதுவரையிலுமுள்ள இடங்களில் ஓரிடமாயினும்விடாமல் முழுதும் தேடிவரக்கடவீர்கள்; அதற்குமேல் இருள்மூடியிருக்கின்றமையின், அதன் முடிவை யாமறிந்திலோம்; இவ்வளவிடங்களுக்கும் ஒரு மாதத்திற்குள்ளாகவே சென்று பிராட்டியையும், ராவணனையுந்தேடி இன்றைக்கு முப்பதாவதுதினந் தப்பாமலிங்குவந்து சேரக்கடவீர்கள்; ஒருவரும் மாதங்கடந்து வரல்கூடாது; அப்படி வருபவன் உயிர்வாங்குந் தண்டனைக்குள்ளாகுவான்; ஆதலின், நீவிரெல்லீரும் இந்திரன் திசையான கீழ்த்திசையையடைந்து யான் கூறினவும், கூறப்படாவுமாகிய இடங்களெல்லாவற்றிலும் பிராட்டியையும், ராவணனிருப்பிடத்தையுந்தேடி ஒரு மாதத்துக்குள்ளாக இவ்விடம் வந்து சேர்ந்து செய்திகூறி யின்புற்று வாழ்வுறக்கடவீர்கள்; என்று மஹாராஜர் விநதனென்னும் யூதபதிக்குக் கட்டளைசெய்து முடித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பதாவது சருக்கம்
முற்றிற்று.

இந்தச் சருக்கத்தில் கீழ்த்திசையின் எல்லை கூறப்பட்டுளதே? இது கிஷ்கிந்தை முதலாகவா? மேருகிரிமுதலாகவா? திருவயோத்திமுதலாகவா? என்று சிலர் சந்

கிப்பார்கள் ; இமையம், விந்தியம் என்னும் இரண்டு மலையின் நடுவில் சராவதியெ ன்னும் ஒரு நதியுளது ; அதுமுதலாகவென்றுணர்க ; சூரிய சித்தாந்தம், ஆர்யபடீயம் முதலிய சோதிட நூல்களில் பூமி எண்ணூறு யோஜனமே நீளமுள்ளதென்றும், ஐந் தாயிரஞ் சில்லலையோஜனமே பரிதியுள்ளதென்றும் கூறியிருப்பதனாலும், இப்பொ ழுது ஊணர் முதலியோர்களும் அவ்வண்ணமே கண்டதாகக் கூறுகின்றமையினாலும், பூமி யுருண்டைவடிவாக விளங்கனிபோலச் சிறிதாகவேயிருக்கின்றதென்றும், ஸ்ரீபா கவதம், ஸ்ரீவிஷ்ணுபுராணம் முதலிய புராணங்களில் பூமிதட்டையாகவும், ஐம்பது கோடி யோஜனம் விஸ்த்தீர்ணமென்றும், மேரு முதலிய மலைகள் மிகவும் உயரமுள் ளனவென்றும், உப்புநீர்க்கடல் முதலாக ஏழுகடல்களுளவென்றும், முறையே ஒவ் வொரு கடல்களும், ஒவ்வொரு தீவுகளும், லக்ஷம் லக்ஷம் யோஜனம் விஸ்தீர்ணமுள் ளனவென்றும் கூறப்பட்டது பொருந்தாதென்றும் சிலர் சங்கிப்பார்கள் ; சோதிட நூல் செய்தவர்கள்தாம் கிருஹாதிகளை ஸ்புடஞ்செய்வதற்கு எவ்வகை யெளிதோ அவ்வகையாகக் கணக்கேற்படுத்திக்கொண்டனர்களே யன்றி, பிரபஞ்சத்தின் உண் மையைக் கூறவந்தவர்களல்லர்; ஆதலின், அவர்களினுடைய வாக்கியம் திதி நிர்ணயா திவிஷயங்களில் பிரமாணமேயன்றி, தத்துவவிஷயத்தில் பிரமாணமாகாது ; ஊணர் முதலியவர்களும், ஓர் சிறியகிணற்றிலிருக்கின்ற ஆமை அக்கிணற்றைவிடப் பெரிய ஆறு குளங் கடல்களிருப்பதாகவே உடன்படாததுபோல் சார்வாகர்போலத் தாம் கண்ணால்கண்டவரையிலுமே பூமியென்பவர்களாதலின், அவர் வாக்கியமும் தத்துவ விஷயத்தில் பிரமாணமாகாது ; ஆதலின், அவர்களின் வாக்கியங்களைக்கொண்டு முக் காலப்பொருள்களையும் ஞானக்கண்ணினால் முற்றுமுணர்ந்த ஸ்ரீசுக சௌநக வியாஸ பராசரர்களின் திருவாக்குகளைப் பொய்யெனத்துணிபவன் எந்த மடையன் ; அன்றி யிலே, சோதிடநூல்களுக்கும், புராணங்களுக்கும் ஆராயுங்கால் விரோதமேயில்லை. ஏனெனின், சோதிடர்கள் நாமிப்போழ்திருக்கும் இவ்விடத்தையே பூமியின் மேற்புற மாகவைத்துக்கொண்டு ககோளம் பூகோளத்தைச் சுற்றுவதாகக் கூறினர்கள் ; இப் போழ்து நாமிருக்குமிடம் பூமியின் மேற்புறமேயன்று ; இது மேருகிரியின் தென்கி ழக்கான தாழ்வரையே யன்றி, பூமியின் மேற்புறம் அன்று ; ஆதலின், மேருமலை யின் அடிவாரம் இதற்கு மிகவும் நெடியதூரத்திலிருக்கின்றது ; அதற்குமேலேதான் பூமியின் விஸ்தீர்ணமிருக்கின்றது ; அதற்கு மேற்புறத்தில்தான் உப்புநீர்கடலின் விஸ் தீர்ணமிருக்கின்றது ; அதற்குமேலேதான் மற்ற ஆறு கடல்களும், ஆறு தீவுகளும் மேன்மேலும் விஸ்தீர்ணமாயிருக்கின்றன ; அதற்குமேல் லோகாலோக பர்வதமிருக்கி ன்றது ; இவ்வுண்மையை மாமுனிவர்கள் கேசரகதி சித்தியினால் சென்று கண்டறி ந்து மேருவின் நுனியை மேலாகவைத்துக் ககோளம் மேருவைச்சுற்றுகிறதென்றும், பூகோளத்தின் நிலை யித்தன்மைத்ததென்றும், புராணங்களில் தத்துவத்தை யருளிச் செய்திருக்கின்றனர்கள் ; ஊணர் முதலானோர்களும் இப்போழ்து நாமிருக்கும் பரி தியைமாத்திரம் சுற்றி வருகிறார்களேயன்றி, மேருவின் நுனியையாயினும், இதற்குத் தென்முனையையாயினுஞ்சென்று கண்டிலர்கள் ; அவர்கள் இதற்குத் தெற்கில் சுமார் இரண்டாயிரம் மயில்தூரம் சென்றிருப்பதும் அரிது ; அதற்குமேல் லக்ஷம் மயில் தூரம் செல்லினும் பூமி முடிவுபெறாது ; அதற்குமேலேதான் பூமியின் விஸ்தீர்ண மிருக்கின்றது ; இதனுண்மையை யறியாமல் முனிவர்களின் மொழியைப்பழிப்பது மடமையென்பதிலும் ஐயமுறுவார்களோ சான்றோர்கள் ; இப்போழ்திந்த கண்டத் தைச் சுற்றியிருக்கும் கடலும் உப்புநீர்க்கடலின் முனையேயன்றி, யதன்விஸ்தீர்ணம் பூமியின் விஸ்தீர்ணத்துக்கப்புறமே யுளது ; அன்றியிலே, அவர்கள் பூமியே சுழன்று கொண்டிருக்கின்றதென்றும், சூரியன் ஒரேயிடத்தில் நிற்கின்றனெனவும், மற்றுள்ள

கிரஹங்கள்மாத்திரம் சுழலுகின்றனவென்றும், வேகத்தினுல் நமக்குப் பூமி சுழலுவதாகத் தோற்றுகின்றிலதென்றும், சூரியன் சுழலுவதாகத் தோற்றுவது பிராந்தியென்றும், இப்பூமியும் கோளங்கள்போலவே ஆதாரமின்றி ஆகாயத்திலிருக்கின்றதென்றும் கூறுகின்றனர்கள்; இதுவும் மடமையை விளக்குகின்றது; பூமி கிழக்குமுகமாகச் சுமார் ஒரு மினிட்டுக்கு இருபத்தைந்து மயிலுக்குக் குறையாமல் சுழல்வதாக அவர் கூறியிருக்கின்றமையின், அது மிகவும் பொருந்தாது; ஏனெனின், கலுழன் முதலிய சிறந்த பறவைகள் நாடோறுங் காலையிலெழுந்து ஆகாயத்தில் பறந்து சுமார் இரண்டு மூன்று மணிவரையிலும் கீழே யிறங்காமல் வேண்டும் திசைகளிற்சென்று இரை தேடிக்கொண்டு மீளவும் தங்கூடுகளில் மாலையில் வந்தடைகின்றன வல்லவோ? அது எவ்வண்ணம் பொருந்தும்; அவை கீழே யிறங்குவதற்குள் இப்பூமி யெவ்வளவுமயில்தூரம் சுழன்றிருக்கவேண்டும்; சுமார் இரண்டாயிரம் மயிலுக்குமேலேயே சுழன்றிருக்கவேண்டுமே? இவ்வளவு வேகமாகப் பூமி சுழன்றுகொண்டிருக்கையில், மறுபடியும் அப்பறவை யக்கூட்டைத்தான் எவ்வாறடையக்கூடும்; ரயில்வண்டி வேகமாகச்செல்லுகையில், யாராலாயினும் ஏறக்கூடுகின்றதோ? ரயில்வண்டி வேகமாகச்செல்லுகையில், அதன்மேற்புறத்திலொருவனிருந்துகொண்டு ஓர் பறவையை யுயரப்பறக்கவிட்டு ஒரு நாழிகை யப்பறவையை யாகாயத்திலேயே பறந்துகொண்டிருக்கச்செய்வானுகில், மீளவும் அப்பறவை யந்த வண்டியைச் சேருமா? சேராதென்பது மடையனுக்கும் தெரியுமன்றே? அதற்குள் அந்த வண்டி சுமார் நாற்பது மயிலுக்குக் குறையாமல் சென்றிருக்குமே? பூமிக்குத்தான் சுழலும் வழியிலேயே எல்லாவற்றையும் இழுக்கும்படியான சக்தியுளதெனின், பறவைகள் எப்பொழுதும் கீழ்த்திசையைநோக்கியே செல்லல்வேண்டுமேயன்றி, மற்றத்திசைகளில் ஒருக்காலும் செல்லல் கூடாது; ரயில்வண்டியிலும், நாவத்திலும் இருப்பவர்களுக்கு ஒருக்காலையில் பூமியும் நீரும் சுழல்வதாகத் தோற்றினபோதிலும் ஆராயுங்கால் ரயில்வண்டியும் நாவமுமே சுழல்வதாக நன்கு விளங்குகின்றது; அவ்வண்ணமே சூரியன் சுழல்வதாகத்தோற்றினும் நன்ருக ஆராய்ந்து பார்க்குங் காலையிலாயினும் பூமி சுழல்வதாகத் தோற்றவேண்டுமன்றே? அப்படி யொருவர்க்குந் தோற்றுகின்றிலதே? அப்படியிருக்க முனிவர்களின் வாக்கியங்களையும் பொய்யென்று வாதித்து அனுபவத்துக்கும் விருத்தமாகப் பூமியே சுழலுகின்றதென்று சாதிப்பது என்ன மடமை; ஆதலின், சோதிடர்களின் கருத்தையும், மாமுனிவர்களின் மகிமையையும் அறியாமல் பிதற்றுகின்ற பேதையர்களின் வார்த்தையினுல் மயக்குறற்க; இதனைக்கண்டவர்களுக்கு ஒரு விரோதமும் தோன்ருது; சூரியாதி கிரஹங்களின் நிலை சில விடங்களில் ஒருவிதமாகவும், சில விடங்களில் மற்றொருவிதமாகவும் கூறப்பட்டிருப்பதற்கு ஒன்று மண்டலங்களின் நிலையையும், மற்றொன்று அம்மண்டலாதிஷ்டான தேவதையின் நிலையையும் கூறினதாகப் புலவர்கள் கருத்துரைத்திருக்கின்றனர்கள்; ஆதலின், இவ்வண்ணமுரைப்பது ஒரு நூலுக்கும் விரோதமில்லை; இந்தச் சருக்கத்திலும் மஹாராஜர் கீழ்த்திசையின் விஸ்தீர்ணமுறைகளை யுரைத்திருப்பதை யாராயுங்காலையிலும் இப்பொருளே நன்கமையுமென வனவர்க்கும விளங்கும்; இதினுரைத்தற்குரியது வெகுவாகவுளதாயினும் விரிவுக்கஞ்சி மௌனமடைந்தனம்.

இராவணனுடைய இருப்பிடம் தென்திசையில் இலங்கையென்பது மஹாராஜர்க்குத் தெரியுமாயினும், அவன் மாயாவியாதலாலும், ஸ்ரீராமசந்திரனுடைய தோள் வலிக்கஞ்சி வேறிடத்திலோடி யொளித்துக்கொண்டிருப்பனேவென்கிற ஐயத்தினுலும், நாற்றிசைகளிலும் தூதனுப்பினரென வறிக.—

நாற்பத்தொன்றுவது சருக்கம்.

மஹாராஜர் தென்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.

மஹாராஜரிவ்வண்ணம் கீழ்த்திசைக்கு விநதன் முதலிய வாநரசேனைகளை யனுப்பிவிட்டுத் தென்திசைக்கும் சிறந்த வாநரர்களை யனுப்பும்படி நிச்சயங்கொண்டு அநலகுமாரனாகிய நீலனையும, அநிலகுமாரராகிய சிறிய திருவடியையும், திசைமுகதேவர் மைந்தனான ஜாம்பவந்தனையும், ஸுஹோத்திரன், சராரி, சரகுல்மன், கஜன், கவாக்ஷன், கவயன், ஸுஷேணன், ரிஷபன், மைந்தன், துவிவிதன், விஜயன், கந்தமாதனன், உல்காமுகன், அஸங்கன், அங்கதன் முதலியவர்களையும் அழைத்து இராவணனுறையிடமத்திசையிலென்பதை யறிந்தவராதலின், சிறந்த மிகுந்த சேனைகளையும் கூட்டிக்கொண்டு தென்திசையைத் தேடும்படி கட்டளைசெய்து மொழியலுற்றனர். கேண்மின் அன்புடைய சேனாதிபர்களே ! நீவிரெல்லீருஞ் சென்று தென்திசையில் எங்கெங்கு ஏகாந்தமான இடங்களுளவோ ? அங்கங்கே சென்று சீதாதேவியாரையும், இராவணப்பயலையும் தேடி வருக ; அதற்கு முறையே வழியுரைக்கின்றேன் கேளீர் ; அநேக சிகரங்களையுடைய பற்பல காடுகளடர்ந்த விந்தியமலையையும், கொடிய கருநாகங்களையுடைய நர்மதாநதியையும், கோதாவரி, கிருஷ்ணா, வரதா, மேகலா, உத்கலா என்னும் நதிகளையும், தசார்ணதேசத்திலுள்ள நகரங்களையும், அச்வவந்தி, அவந்தீ என்னும் சிறந்த நாடுகளையும், விதர்ப்பம், ரிஷிகம், மாஹிஷகம், வங்கம், களிங்கம், கௌசிகம் என்னுந் தேசங்களையும் முறையே தேடிப் பற்பல காடு மலைகளடர்ந்த தண்டகாரணியத்தையும், அங்குப் பெருகி வருகிற அந்தக் கோதாவரியையும், ஆந்த்ரம், புண்ட்ரம், சோளம், பாண்ட்யம், கேரளம் என்னும் தேசங்களையும், அயோமுகமென்னும், ஸஹ்யமென்னும் பெயருடைய மலைகளையையும், அதினின்றும்பெருகிவருகின்ற காவேரியையும், அதன் சிகரத்தில் வீற்றிருக்கின்ற அகஸ்த்ய மஹாமுனிவரையும் சென்று காண்க. பின்பு, அவரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு தாம்ரபர்ணியென்னும் நதியையுந் தாண்டிச் செல்க ; அந்த நதி இருகரையிலும் சந்தனமரங்களடர்ந்து தெளிவுற்றுப் பெருங்கடலைச் சேர்கின்றமையில், காமினி காமுற்றுக் காந்தனிடம் செல்வதுபோல விளங்கும் ; அதன்மேல் பொன்மயமான பாண்டியராஜர்களின் ராஜதானி கட்புலனாகும் ; அதன்மேல் தென்கடலின் கரையில் அகஸ்தியமுனிவராலே தாபிக்கப்பட்ட மகேந்திரமென்னும் மலை யிருக்கின்றது ; அது பொன்மயமாகியும், பற்பல காடுகளடர்ந்துமுளது ; அதில் தேவகந்தர்வ ஸித்தசாரண கிந்நரகிம்புருஷாதி தேவர்களும், தேவரிஷிகளும் வாழ்வுற்று மகிழ்கின்றனர்கள் ; அம்மலைக்குப் பர்வங்கள்தோறும் தேவேந்தி

ரன் வருகின்றனன் ; அதற்குமேல் நூறுயோஜன தூரத்தில் இலங்கா துவீபமிருக்கின்றது ; அதுதான் அந்த ராவணனுக்கு வாழ்விடம் ; ஆதலின், அங்கு மிகவும் ஊக்கத்துடன் பிராட்டியை நன்கு தேடுக ; அங்கு மநிதர்கள் செல்வதரிது ; அதற்குச் செல்லும் வழியிலே அங்காரகையென்னுமொரு கொடிய அரக்கி கடலிடையில் வாழ்கின்றனள் ; அவள் ஆகாசத்தில் செல்லுமவர்களையும், அவர்களின் நிழலைப்பற்றி யிழுத்துக் கொலை செய்கின்றனள் ; ஆதலின், அவ்விடங்களில் மிகவும் ஊக்கத்துடன் சென்று எவ்வெவ்விடங்களில் ஐயந்தோற்றுகின்றதோ ? அவ்வவ்விடங்களை நன்காராய்ந்து ஐயந்திர்ந்து பிராட்டியைத் தேடுக ; அந்த இலங்காபுரிக்குத் தெற்கில் நூறு யோஜனதூரத்தில் புஷ்பிதகமென்னும் சிறந்த மலை பல சிகரங்களை யுடையதாகிக் கதிரவன்போல ஜொலிக்கின்றது ; அதில் ஒரு சிகரம் பொன்மயமாகியது ; அதுதான் ஸூரியனுக்கு வாழ்விடம் ; மற்றொன்று வெள்ளிமயமாயிருக்கின்றது ; அது சந்திரனுக்கு வாழ்விடம் ; அதில் மற்றும் பற்பல தேவகணங்களும் வாழ்கின்றன ;—

నతంకృతఘ్నాః పశ్యన్తి నన్రృశంసానా నాస్తికాః
ప్రణమ్య శిరసా శైలం తంవిమార్గత వానరాః.

நதம்க்ருதக்னாஃபச்யந்தி நந்ருசம்ஸாநாஸ்திகாஃ
ப்ரணம்யசிரஸாசைலம் தம்விமார்கதவாநராஃ.

அம்மலையை நன்றியில்லாதவர்களும், கொடுமைகொண்டு ஜீவஹிம்சை செய்பவர்களும், வேதத்தைப் பிரமாணமாக உடன்படாமல் நிரீசுவரவாதம் செய்கின்ற நாஸ்திகர்களும் கண்ணுறுர்கள் ; நீங்கள் அதனைக் கண்டு வணங்கிப் பின்பு, பிராட்டியைத்தேடுக ; அதற்குமேல் பதினன்கு யோஜன தூரத்தில் ஸூரியவான் என்னும் மாமலையிருக்கின்றது ; அதற்கு வழி மிகவும் செல்வதற்கு அரியதாகும் ; அதற்குமேல் வைத்யுதமென்னும் மலை பற்பல மரங்கள் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனித்துள ; நீங்களங்கே சென்று காய் கனிகளை யுண்டு தேனையும் பருகி மகிழ்ந்து மேலே செல்லக்கடவீர்கள் ; அதற்குமேல் மிகவும் கண்ணுறத்தக்க குஞ்சரமென்னும் மலை யுளது ; அதன் சிகரத்திலேதான் விசுவகர்மன் அகத்தியமாமுனிவருக்கு ஆசிரமம் இயற்றி யளித்திருக்கின்றனன் ; அம்மலையின்மேல் பத்துயோஜனமுயரத்தில் ஒரு யோஜனம் விஸ்தாரமுள்ள போகவதியென்னும் வாழ்விடமிருக்கின்றது ; அதிலும் பன்னகர்களே வாழ்கின்றனர்கள் ; அங்கு நாகராஜனை வாஸுகியும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன் ; அங்கும் சென்று பிராட்டியைத் தேடுக ; அதற்குமேல் பற்பல கூடமான இடங்களுள ; அங்கும் நன்காராய்ந்து பிராட்டியைத் தேடுக ; அதற்குமேல் ரிஷபம்போலவே உருவமமைந்த ரிஷபமென்னும் மலை யுளது ; அந்த ரிஷபகிரியில் கோரோசனவண்ணமுற்றதும், பதுமதள

வண்ணமுற்றதும், தமாலதளவண்ணமுற்றதும், தீப்பொறிபோன்றதுமாகிய திவ்ய சந்தனம் உண்டாகின்றது; நீங்களதைக்கண்டு விருப்புற்று கையினால் தொடற்க; அவ்வநத்தை ரோஹிதனென்னும் கந்தர்வர்கள் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றனர்கள்; அவர்களுக்கு இறையவர்கள் சைலூஷன், கிராமணி, சிக்குரு, சுப்ரன், பப்ரு என்னும் ஐவர் வாழ்கின்றனர்கள்; சூரியன், சந்திரன், அக்கினிகள்போன்ற மேனியுடைய நல்வினை செய்தவர்களும் அங்கு வாழ்கின்றனர்கள்; வானுலகம் பெற்றவர்களும் அங்கிருக்கின்றனர்கள்; அதுவரையில்தான் இவ்வுலகத்தவர்களால் செல்லலாகும்; அதற்குமேல் மிகவும் கொடியதான பிதிரர்களின் உலக மிருக்கின்றது; அது உங்களுக்குச் செல்வதற்குரியதாகாது; அது மிகவும் நள்ளிருளினால் மூடப்பட்டிருக்கும்; அங்கேதான் யமதர்மராஜனுடைய ஸம்யமினியென்னும் ராஜதானி யுளது; இதுவரையில்தான் நீங்கள் செல்வதற்கும், பிராட்டியாரைத் தேடுவதற்கும் திறமை கொள்வீர்கள்; ஆதலின், நீங்கள் அதுவரையிலும் சென்று எல்லாவிடங்களிலும் நன்றாகப் பிராட்டியைத் தேடி யவர் செய்தியை யறிந்து வரக்கடவீர்கள்; யாவனொருவன் இவ்வண்ணந் தேடி ஒரு மாதத்துக்குள்ளாக என்னிடம் வந்து கண்டேன் சீதாதேவியை யென்று மங்களங்கூறுவானோ? அவன் என்னுடன் கூடி எனக்கு நிகரான போகங்களைப்பெற்று மகிழ்ந்து வாழ்வான்; அவனிலும் இனியன் எனக்கு மற்றொருவனுமிரான்; அவனே எனக்கு உயிரினும் இனியவன்; அவன் ஏதேனும் அபராதஞ்செயினும், எனக்கினியனாகவே எண்ணப்படுவான்; நீங்கள் அளவற்ற பல பராக்கிரமமுடையவர்களும், நற்குலத்திற் பிறந்தவர்களும், நுண்ணறிவுடையவர்களுமாகின்றீர்கள்; ஆதலின், நீங்கள் பிராட்டியை எவ்வண்ணங்கண்டு மகிழ்வீர்களோ? அவ்வண்ணம் நன்முயற்சிசெய்து சென்று காரியத்தை நிறைவேற்றிக்கொண்டு வரக்கடவீர்கள்; என்று மஹாராஜர், ஜாம்பவான், அனுமான், அங்கதன் முதலானோர்களுக்குத் தென்திசையின் வழி யுரைத்து விடைகொடுத்தனுப்பினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தொன்றாவது சருக்கம்
முற்றிற்று.

கீழ்த்திசையிற்போலத் தென்திசையில் முழுதும் செல்வதற்கு நடுவில் யமலோகம் புகற்கரியதாதலின், தடையாகின்றது; தென் கிழக்காகவாவது, தென் மேற்காகவாவது சுற்றிக்கொண்டே பூமியினடிப்புறத்தை யடையவேண்டும்.

புஷ்பிதகம் என்னும் மலைவரையிலுமே சூரிய சந்திரர்கள் தக்ஷிணாயனத்தில் சாய்கின்றனர்கள்; அதற்குமேலுள்ளவர்களுக்கு சூரிய சந்திரர்கள் எப்பொழுதும் வடபுறத்திலேயே காணப்படுவார்கள்; ஒருவர்க்கு பல விடங்களில் வீடிருப்பது

நாற்பத்திரண்டாவது சருக்கம்.

மஹாராஜர் மேற்குத்திசைக்கு வாநரர்களை யனுப்பியது.

மஹாராஜர் இவ்வண்ணம் ஜாம்பவான் முதலானோர்களைத் தென் திசைக்கு அனுப்பி மேற்றிசைக்கனுப்புவதற்காக தாரையின் தந்தையான ஸுஷேணனை யழைத்துத் தமக்கு மாமனாராதலின், அவரை வலஞ் செய்து வணங்கி மொழியலுற்றனர். கேளீர் மரீசிமஹாமுனியின் குமார ரான மாரீசரே! நீர் மற்றுமுள்ள மரீசி குமாரர்களுடனும், மற்றுமுள்ள ரிஷி குமாரர்களான வாநரர்களுடனும் புறப்பட்டு மேற்றிசைக்கு இரண்டு லக்ஷம் சேனைகளின் திரள்களுடன் சென்று தேடுக; சராவதி நதியினின் றும் மேற்காக நீங்கள் செல்வீர்களாயின், முறையே ஸுராஷ்ட்ரம், பாஹ்லீகம், சூரம், பீமம் முதலிய செழிப்புள்ள தேசங்களும், பற்பல நகரங் களும், புன்னாகவகுளோத்தாலகங்களின் திரளுடைய பெரிய வனமும், தாழஞ்சோலைகளும் காணப்படும்; மேற்குதிசைநோக்கிப் பெருகுகின்ற பற்பல நதிகளும், பற்பல யோகிகளின் ஆசிரமங்களும், பற்பல காடு களும், மலைகளும், நீர் மரஞ் செடி கொடிகளற்ற மருகாந்தாரமும், உயர்ந்த சிலைகளும், முறையே காணப்படும்; அங்கெல்லாம் பிராட்டியை நன்றாகத்

போலவே ஸூரிய சந்திராகஸ்திய வாஸுகி முதலானோர்களுக்கும் வேண்டுங்காலங் களில் வாழ்வதற்காக அங்கங்கு வாழ்விடங்களுளவென்றுணர்க. அவர்கள் தெய்வத் தன்மை யுடையவர்களாதலின், ஒருவரே பலவிடங்களிலும் பல உருவங்கொண்டிருப் பார்கள்.

மஹாராஜர் முன்பு பெருமாளுடன் ராவணனிருப்பிடந்தெரியாதென்றுரைத் திப்பொழுது இராவணனிருப்பிடத்தை யுரைத்தனர்; ஆதலின், அவர் பொய்யரல் லரோவெனின், பொய்யரல்லர்; முன்பு ராவணனுக்கு வாழ்விடம இலங்கையாயினும், பிராட்டியைப் பறித்துவந்த பின்பு, அங்கு வாழ்கின்றானென்பது நிச்சயமில்லை; அச்சத்தினால் வேறிடத்திலும் ஒளிந்து வாழ்வான்; அப்போழ்து அவனிருக்குமிடத் தைத் தேடுவதற்குச் சேனைகளும் ஸ்வாதீனத்திலில்லை; ஆதலின், அப்பொழுது பெருமாளுக்கிருந்த துரையில் சந்தேகமா யுரைசெயினும், அப்போழ்தே பிராட்டி யைத்தேட முயற்சி செய்வார்; அவ்வண்ணம இலங்கைக்கு வந்து பார்த்து இராவ ணன் அங்கிரானாகில், பின்பு செய்வது யாது; ஆதலின், பெருமாள் காரியம் அப் போழ்து முடிவுபெறாமல் சிரமம்மாத்திரம் அதிகமாகும்; என்று ஆராய்ந்தே அப் பொழுது அந்தச் சங்கதியை யுரைசெய்யாது மறைத்தனரெனவுணர்க; ஒருவருக்குத் தீங்கு நேரும்படியான பொய்யே பொய்யாகுமல்லது, ஒருவர்க்குந் தீங்கில்லாமல் ஒருவர்க்கு இதமான பொய் பொய்யாகாது; மஹாராஜர் முன்னமே பெருமாளுக்கு இராவணனிருப்பிடத்தை யுரைசெயின், தமது காரியம் முடிவுபெறாதென்று பொய் யுரைசெய்தனரென்று சிலர் கூறுவார்கள்; அது தோழமைக் குரியதாகாதாதலின், பொருந்தாது.

தேடி அதற்கு மேற்கில் செல்வீர்களாயின், பச்சிமசமுத்திரம் தென் படும்; அதன் தீரத்தில் தாழை தமாலங்களின் காடுகள் மிகுந்துள; வானரர்கள் அவ்விடங்களில் மிகவும் மகிழ்வுறுவார்கள்; அங்குள்ள காடு களிலும், மலைகளிலும், பிராட்டியையும், இராவணனையும் தேடுக; அன்றி யிலே, அங்கே முரசிபட்டணம், ஜடீபுரம், அவந்திபுரம், அங்கலோமை, மிகவும் மரங்களடர்ந்த அலக்ஷிதமென்னும் வனம், மற்றும் பற்பல நாடு நகரங்களுமுள; ஸிந்து நதிக்கும், ஸாகரத்திற்கும், ஸங்கமபூமியிலே ஹேமகிரியென்னுமொருமலை பற்பல சிகரங்களை யுடையதாகி விளங்கு கின்றது; அதன் தாழ்வரைகளிலே சிறகுகளையுடைய சிங்கங்கள் வாழ் கின்றன; அவைகள் திமிதிமிங்கிலங்களையும், யானைகளையும் எடுத்துப் பறந்து தத்தம் கூடுகளுக்குச் செல்லுகின்றன; மதமேறி யிறுமாப்புற்று மேகங்கள்போலப் பிளிறுகின்ற களிறுகளும் அக்காடுகளில் திரிகின்றன; அம்மலையின் சிகரமும் பொன்மயமாகி வியன்றுயர்ந்துளது; அவ்விடங் களிலும் தேடுக; அதற்குமேல் பச்சிமசமுத்திரத்தில் பாரியாத்திரமென் னும் மலையுளது; அதனுடைய சிகரம் பொன்மயமாகி நூறுயோஜனம் வியன்றுயர்ந்துளது; அதன்மேலே வேண்டுமாறு ரூபந்தரிக்கவல்லத் தீபோல விளங்குகின்ற இருபத்துநான்குகோடி கந்தர்வர் வாழ்கின்றனர் கள்; அவர்கள் மிகக் கொடியர்களாதலின், நீங்களவரருகிற் செல்லற்க; அங்குள்ள காய் கனி முதலியவைகளையும் விரும்பற்க; அவர்கள் அவை களைக் காத்துக்கொண்டிருக்கின்றனர்கள்; அவ்விடங்களில் நீங்கள் மிகவும் ஊக்கத்துடன் முயற்சிசெய்து பிராட்டியைத் தேடுக; வானரஜாதியுடைய வர்களுக்கு அவர்களிடத்தில் அச்சமுறல் வேண்டுவதில்லை; அதற்குமேல் வைடூரியவண்ணமுற்று வச்சிரமணிகளுடையதாகிப் பற்பல மாஞ்செடிக ளடர்ந்துள்ள வச்சிரமென்னும் மாமலை நூறுயோஜநம் உயர்ந்தும், அகன் றும், ஒளிகொண்டு விளங்குகின்றது; அங்குள்ள குகைகளிலும் பிராட்டி யாரைத் தேடுக; அதற்குமேல் கடலில் நான்காவது பாகத்திலே சக்கர வான் என்னும் மலை யுளது; அங்கு முன்பு விசுவகர்மன் ஆயிரம் அரமு டைய திருச்சக்கரத்தையியற்றினன்; ஸ்ரீமந்நாராயணன் ஓரவதாரத்தில் ஹயக்கிரீவனென்றும் தானவனைக் கொலைசெய்து அவனால் பறிக்கப்பட்ட சக்கரத்தையும், பஞ்சஜனனென்றுந்தானவனைக் கொலைசெய்து அவனு டையஎலும்பினாலுண்டாகிய பாஞ்சஜன்யமென்னும் சங்கத்தையும் பறித்த ருளினர். அந்தச்சக்கரவானென்னும் மலையின்தாழ்வரைகளிலும், குகைக ளிலும், இராவணனையும் பிராட்டியாரையும் தேடுக; அதற்குமேல் அறு பதினாயிரம் யோஜனதூரம் தாண்டிச்செல்வீர்களாயின், வராஹமென்னும் மலை பொன்மயமான சிகரங்களையுடையதாகி யாழ்ந்த கடலிடையில் விள ங்குகின்றது; அதன்மேலேதான் ப்ராக்ஜ்யோதிஷமென்னும் பொன்மய மான பட்டணமிருக்கின்றது; அதில் மிகவுங்கொடிய தன்மையுடைய நரகா ஸுரன் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன்; அவ்விடங்களிலும் இராவண

னையும் பிராட்டியாரையுந் தேடுக; அதனையுந் தாண்டிச் செல்வீர்களாயின், மேகவான் என்னும் மாமலை பொன்மயமாகி யெங்கும் விளங்குகின்றது; அதில் பன்றி, யானை, புலி, கரடி, சிங்கம், முதலிய விலங்குகள் கர்ஜனை செய்து அதனால் தோன்றிய பிரதி தொனியைக்கேட்டு மிகவும் கூவுகின்றன; அதன்மேலேதான் முதலில் தேவேந்திரன் தேவராஜ்ஜியபட்டாபிஷேகஞ்செய்யப்பட்டனன்; அதனைக்கடந்து முறையே அறுபதினாயிரந்தங்கமலைகளைக்காண்பீர்கள்; அதிலுள்ள மரங்களும் பொன்மயமாகிப் பூத்துத் தழைத்து விளங்குகின்றன; அம்மலைகளின் நடுவிலே ஸாவர்ணி மேருவென்னும் ஒரு மலை மற்றுள்ள மலைகளுக்கு அரசன்போலவே விளங்குகின்றது; அது வையோனிடத்தில் வரம்பெற்று ஓரிரவும் பகலும் தன்மேல் வாழ்ந்த தேவகந்தர்வ தானவ் பசு பக்ஷி முதலிய வெல்லா வஸ்துக்களையும் பொன்மயமாக்குகின்றது; தேவகந்தர்வாதிகளும்; ஸப்தரிஷிகளும், அஷ்டவஸுக்களும், விசுவேதேவர்களும், மற்றுமுள்ள தேவமுனிக்குழாங்களும் தினந்தோறும் அங்கெய்தி மாலைப்பொழுதில் ஸூரியனை நோக்கிப் பூஜை செய்கின்றனர்கள்; அவர்களால் பூஜிக்கப்பட்டவுடனேதான் இரவி இங்குள்ளோர்களால் காணற்கரியனாகி அஸ்தகிரியை யடைகின்றனன்; அங்கிருந்து அஸ்தகிரிக்குப் பதினாயிரம்யோஜனதூரமிருக்கின்றது; அவ்வளவுதூரத்தையும் கதிரவன் அரை முகூர்த்தத்தில் தாண்டி மறைந்து விடுகின்றனன்; அம்மலையின் சிகரத்திலே பொன்மயமாகியும், பொன்மயமான பசு பக்ஷி முதலியவைகளையுடையதும், பலவகை மரங்களடர்ந்ததுமாகியதோர்பட்டணம் விசுவகர்மனாலே இயற்றப்பட்டுளது; அதிலேதான் பாசஹஸ்தனான வருணன் வாழ்கின்றனன்; அந்த ஸாவர்ணி மேருவுக்கும், அஸ்தகிரிக்கும், இடையில் பத்து முனையுள்ள பருத்துயர்ந்த பனைமரமொன்றுளது; அதுவும் பொன்மயமாகியதும், விசித்திரமான வேதியுடையதுமாகி விளங்குகின்றது; அங்குள்ள எல்லாவிடங்களிலும், ஆறுகுளங்களிலும், பிராட்டியாரைத்தேடுக; அந்த ஸாவர்ணி மேருவின்மீது மேருஸாவர்ணி யென்றும் மஹாயோகி தமது தேஜஸ்வினாலேயே விளங்குகின்றனர்; கதிரவன்போல் ஒளிக்கின்ற அம்மேரு ஸாவர்ணி மாமுனிவரை நீங்களெல்லோரும் கண்டு பணிந்து பிராட்டியின் சங்கதியையும் கேட்டறிந்து கொள்க; இவ்வளவுதூரம் வரையிலேதான் கதிரவன் ஒளிக்கச்செய்து இருளையகற்றி யஸ்தகிரியை யடைந்து மறைகின்றனன்; இதுவரையிலும்தான் உங்களாலே செல்லல்தகும்; அதற்குமேல் கதிரவனொளியின்றி யிருள்மூண்டு அளவற்றிருக்கின்றது; அதற்கும

மேலே நாம் சென்றிலோம்; கேட்டறிந்துமிலோம்; இதுவரையில் நீங்கள் சென்று பிராட்டியின் செய்தியையும், இராவணனொளித்திருக்குமிடத்தையும் அறிந்துகொண்டு ஒருமாதத்திற்குள் மீண்டெய்திச் செய்தி யுணர்த்தக்கடவீர்கள்; ஒருமாதத்திற்குமேல் ஒருவனுமிருக்கக்கடவனல்லன்; அப்படியிருப்பவன் உயிர்த் தண்டனைக் குள்ளாகுவான்; உங்களுடன் கூடவே எனக்கு மாமனரும், மிகவும் வீரமுடையவருமாகிய இந்த ஸுஷேணர் வருகின்றனர்; நீங்களெல்லோரும் இவருடைய கட்டளையின்படி நடந்துகொள்ளக்கடவீர்கள்; இவரும் சிறந்தவர்; நீங்களும் சிறப்புற்றவர்கள்; ஆதலின், நீங்களிருவரும் எனக்கு முதன்மையானவர்கள்; ஆதலின், இவரை முன்னிட்டுக்கொண்டு மேற்றிசையைத் தேடிவருக; பெருமாளுடைய பிரிய மஹிஷியான பிராட்டியாரைக் கண்டு வருவீர்களாயின், பெருமாள் செய்த உபகாரத்திற்குப் பிரதியுபகாரமாகுமாதலின்; எல்லோரும் நல்வினையராகுவோம்; ஆதலின், யானுரைசெய்யாவிடினும், காலதேசங்களுக்குத்தக்கபடி யெவ்வண்ணஞ் செயல்வேண்டுமோ? அவ்வண்ணஞ் செய்து காரியத்தை முடித்துக்கொண்டு வருக; என்றிவ்வண்ணம் மஹாராஜர் கட்டளைசெய்தனர். ஸுஷேணன் முதலிய வாநரர்களும் அதனைக்கேட்டு மகிழ்ந்து அவ்வண்ணமே மேல்திசைமுழுதும் தேடிவருவோமென்று உடன்பட்டு அவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு பிரயாணப்பட்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்திரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

கீழ்த்திசையைப்போலவே மேல்திசையிலும் ஸூரியகிரணம் முழுதலும் வியாபிக்கின்றமையின், ஸஞ்சரிக்கத்தக்கதாகின்றது; தென்திசையில் அவ்வண்ணமில்லாமல் இருள்மூடியிருக்கின்றமையின், செல்லற்கரியதென்றே யியம்பினரேயன்றி, முடிவு கூறவில்லை; இத்திசையிலும் ஏழுகடல்களும் அதனதனது தீவுகளும் உள; விசேஷமின்மையின், எடுத்துக் கூறப்படாவாயினும், கூறப்பட்டனவாகவே எண்ணல் வேண்டும்; இவ்வண்ணம் நாற்றிசைகளிலும், ஏழுகடலையுங் கடந்து லோகாலோக பர்வதம் சுற்றி யிருக்கின்றது; அதற்குமேலும் இருள்மூடி யளவற்ற இடமுமிருக்கின்றது; இப்படி லோகாலோகந்தாண்டி நெடுந்தூரம் இருளில் ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ஜுனனை யழைத்துக்கொண்டுபோய் பிரகிருதி மண்டலத்துக்குள்பட்ட ஸ்ரீவைகுண்டமென்னும் வேறொரு திவ்விய லோகத்திற்கு எழுந்தருளினரென்று ஸ்ரீமஹாபாரதாதிகளிலுமிருக்கின்றது; இவ்வண்ணமாராயுங்கால் முனிவர்கள் முக்காலப் பொருள்களையுமுணர்ந்து உண்மையாகக் கூறியதைப் பிழையென்று பழிப்பவரைவிட மடையருமுளரோ? ஆதலின், எல்லோரும் இவ்விடங்களிலெழுதிய நோட்ஸ்களை நன்காராய்ந்து பழிப்பவர்களுக்குத்தக்க ஸமாதானங் கூறக்கடவர்கள்.

நாற்பத்துமூன்றுவதுசருக்கம்.

மஹாராஜர் வடதிசைக்குச் சதவலியென்னும் யூதபதியைக் கட்டளைசெய்தனுப்பியது.

மஹாராஜர் இவ்வண்ணம் தம்மாமனாராகிய ஸுஷேணனை மேற்குத் திசைக்கு வழியுரைத்தனுப்பி விட்டுப் பின்பு சதவலியென்னும் மிகவும் வீரமுடைய வானரனை யழைத்து ராஜதருமத்தை நன்குணர்ந்தவராதலின், தமக்கும் பெருமாளுக்கும் நலம் விளையுமாறு மொழியலுற்றனர். கேளாய் சதவலி! நீ உன்னைப்போன்ற சிறப்புற்ற அநேகமாயிரம் வானர சேனைகளுடனும், யமதர்மராஜன் குமாரர்களுடனும், அமைச்சர்களுடனும் கூடிப் புறப்பட்டு இமயமலையையே அலங்காரமாகவுடைய வடதிசையை நோக்கிச் செல்லுக; அங்குள்ள விடங்களுள் ஓரிடமும் விடாமல் பிராட்டியாரைத் தேடுக; இக்காரியம் நிறைவேறுமாயின், பெருமாள் திருவுள முகந்தருளுநவர்; அப்பொழுதுதான் நாம் கடன் தீர்ந்தவர்களாகுவோம்; நமக்குப் பெருமாள் பேருதவிசெய்தருளினரல்லரோ? ஆதலின், அதற்குப பிரதி யுபகாரஞ் செய்தோமாயின், நம்பிறவி பயன்பட்டதாகும்;—

అర్థినఃకార్యనిర్వృత్తి మకర్తురపియశ్చరేత్
తస్యస్యాత్సఫలంజన్మ కింపునఃపూర్వకారిణః

அர்த்தினஃகார்யநிர்வ்ருத்தி மகர்துரபியச்சரேத்
தஸ்யஸ்யாத்ஸபலஞ்சன்ம கிம்புநஃபூர்வகாரிணஃ.

ஒருவன் நமக்குபகாரஞ் செய்திலனாயினும், அவன் காரியத்தை யாவன் செய்கின்றனனோ? அவனுடைய பிறப்பும் பயனுளதாகுமெனின், முன்பே நன்றி செய்தவனுடைய காரியத்தைச் செய்பவனுடைய பிறவி பயனுளதாகுமென்பதில் ஐயமுறல் வேண்டுமோ? ஆதலின், இதனை இதயத்தில் நினைந்துகொண்டு நமக்கிதஞ்செய்பவர்களாதலின், பிராட்டியார் எவ்வண்ணம் காணப்படுவாரோ? அவ்வண்ணம் முயற்சிசெய்து தேடுக; அன்றியிலே, இந்தப் பெருமாளும் ஸர்வ பூதங்களுக்கும் இறையவரும், பூஜை செய்துகொள்வதற்குரியவரும், நமக்கும் இனிய தோழருமாகின்றனர்; ஆதலாலும், நீங்கள் இக்காடுகளிலும், நதிகளிலும், மலைகளிலும், நன்கு தேடுக; அங்கிருந்து புறப்பட்டு ம்லேச்சம், புளிந்தம், சூரஸேனம், ப்ரஸ்த்தலம், பரதம், குரு, மத்ரம், காம்போஜம், யவனம், சகம், ஆரட்டம், பாஹ்லீகம், ரிஷிகம், பௌரவம், கண்டகம், சீனா, பரமசீனா, நிஹாரர், தரதம் என்னுந் தேசங்களையும் சென்று தேடுக; அங்கிருந்து

இமயமலை சேர்ந்து லோத்ரம், சந்தனம், தேவதாரு முதலிய காடுகளிலும், இராவணனுடன் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து தேவகந்தர்வ ஸேவிதமான சோமாசிரமத்தையும், அங்கிருந்து காளமென்னுமுயர்ந்த மலையையும் சேர்ந்து அங்கங்குள்ள காடு குகை முதலிய விடங்களிலும் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து செல்லின் பொன்மயமாகிய ஸுதர்சனமென்னும் மாமலையும், அதற்குமேல் அநேகங்கோடி பறவைகளுடைய் தேவஸகமென்னும் மாமலையும் காணப்படும், அவ்விடங்களிலும் தேடுக; அங்கிருந்து நூறுயோஜநம்வரையில் ஆறு குளங் குட்டை காடு செடி பசு பக்ஷி மிருகங்களொன்றுமின்றி மருகாந்தாரமாயிருக்கின்றது; அதனை மிகவும் விரைவாகத் தாவிச் செல்வீர்களாயின், வெள்ளிநிறமுள்ள கைலாஸமென்னும் மாமலையையடைந்து மகிழ்வீர்கள்; அம்மலையின்மேலேதான் சரத்கால மேகம்போன்ற பொன்னலலங்காரஞ்செய்யப்பட்ட சிறந்த பெருமாளிகையை விசுவகர்மன் குபேரனுக்கு இயற்றி யளித்திருக்கின்றனன்; அவ்விடத்தில்தான் விசாலமான மானஸமென்னும் ஸரோவரம் தாமரை அல்லி ஆம்பல் கருநெய்தல் செங்கழுநீர் முதலிய மலர்கள் மலர்ந்தும், ஹம்ஸஸாரஸாதியான நீர்ப்பறவைகளொலித்தும், தெய்வப் பொது மகளிர்களினலே நீர்விளையாடலாடப்பட்டும்விளங்குகின்றது; அங்கேதான் யக்ஷர்களனவர்க்கும் இறைவனாகிய குபேரன் யக்ஷர்களுடன் மகிழ்ந்து வாழ்கின்றனன்; அங்கும் அதைச்சூழ்ந்த மலைகளிலும் பிராட்டியாரையும் ராவணனையுந் தேடுக; அங்கிருந்து க்ரௌஞ்சமென்றும் மலையைச்சேர்ந்து மிகவும் ஊக்கத்துடன் அதனது பிலத்தினுள்ளே செல்லுக; அங்கு தேவர்களாலும் பூஜைசெய்யப்பட்ட சிறந்த மாயோகிகள் வாழ்கின்றனர்கள்; அம்மலையிலுள்ள எல்லாவிடங்களிலும் பிராட்டியாரைத் தேடுக; அங்கிருந்து அவ்ருக்ஷம், காமசைலம், மானஸம், விஹகாலயம் என்னும் நான்கு மலைகளையும் சேர்ந்து தேடுக; அங்கு தேவதானவ ராக்ஷஸர்களொருவரும் செல்லுகின்றிலர்; அங்குள்ள விடங்களிலும் தேடுக. இம் மலைகளெல்லாம் க்ரௌஞ்சகிரியைச் சூழ்ந்துள்ள மலைகள்; அங்கிருந்து செல்லின் மைநாகமலை, அங்கேதான் மயாஸுரன் தனக்கு அரண்மனை கட்டிக்கொண்டிருக்கின்றனன்; குதிரையின் முகமுள்ள கிம்புருஷர்களின் பெண்டீர்களும் அங்கு வாழ்கின்றனர்கள், அவ்விடங்களிலும் தேடுக; அங்கிருந்து செல்லின், சித்தர், வைகானஸர், வாலகில்யர் முதலிய மாயோகிகளின் ஆச்ரமமிருக்கின்றது, அங்குச்சென்று அவர்களைக்கண்டு வணங்கி விநயம்பூண்டு பிராட்டியாருடைய செய்தியையும் வினவி யறிந்துகொள்க; அங்கு பொற்றாமரைகள் மலர்ந்து பாலஸூரியன்போன்ற அன்னப்பறவைகளொலித்து வைகாநஸமென்னும் சிறந்த ஸரோவரமொன்றுளது; அவ்விடத்திலேதான் குபேரனுக்கு வாஹனமான ஸார்வபௌமமென்னும் திக்கஜம் பெண் யானைகளுடன் கூடி யுலாவிக்கொண்டிருக்கும்; அந்த வைகாநஸ ஸரஸ்ஸைத் தாண்டிச் செல்லின், ஸூரியசந்திர நக்ஷத்

திரங்கமொன்றுமின்றியும், மேகங்களின்றியும், அளவற்றும் இருக்கினும் அங்குள்ள மாயோகிகள் கதிரவன் கிரணங்கள்போல வொளிக்கின்றமையின், அவ்விடமெங்கும் எப்பொழுதும் பகல்போலவே அம்முனிவர்களின் தேஹ காந்தியினுலே விளங்கும்; அவ்விடத்தைத் தாண்டிச் செல்லின் சைலோதையென்னும் பெரிய நதி யிருக்கின்றது; அதன் இருகரையிலும் கீசகமென்னும் வேய்கள் அடர்ந்திருக்கின்றன; அவைகளே அங்குள்ள சித்தர்களை இக்கரையிலிருந்து அக்கரையிலும், அக்கரையிலிருந்து இக்கரையிலும் சாய்ந்து ஏற்றிக்கொண்டு கொணர்ந்து விடுகின்றன; அவ்விடத்திலேதான் உத்தரகுருக்ஷேத்திரமிருக்கின்றது; அந்த இடத்திலும் நல்வினை யற்றவர்கள் வாழ்வுறுர்கள்; அதற்குமேல் பொற்றுமரை மலர்களையும், இந்திரநீல வைடூர்யமயமான இலைகளையுமுடைய பற்பல தாமரைகளையுடைய ஆறுகள் பலவாருக இருக்கின்றன; அங்குள்ள மடுவுகளும், கதிரவன்போலொலிக்கின்ற பொற்றுமரைகளினுலே விளங்குகின்றன; அவ்வாறுகளிலும் சிறந்த மணிமயமாகிய இலைகளையும், பொன்மயமாகிய தாதுகளையுமுடைய கருநெய்தல்களும், பொன்மணலுற்று முத்துக்கள் சூழ்ந்த மணற்குன்றுகளும், நவமணிமயங்களும், பொன்மயங்களுமாகி எப்பொழுதும் தளிர்த்தும் பூத்தும் காய்த்தும் கனித்துமுள்ள மரங்களும், மணிமயமாகிய பறவைகளும் விளங்குகின்றன; அன்றியிலே அம்மரங்கள் அங்குள்ளவர்களுக்கு வேண்டியவைகளையெல்லாமளிக்கின்றன; சில மரங்கள் அங்குள்ள காமினியர்களும், காமிகளும் அணிவதற்குரிய பற்பல அணிகளையும், ஆடைகளையுமளிக்கின்றன; சில மரங்கள் பற்பல விநோதமான சயனங்களையும், மலர் மாலைகளையுமளிக்கின்றன; சில மரங்கள் பலவகைப் பானங்களையும், பற்பல பக்ஷியங்களையுமளிக்கின்றன; அங்குள்ள பெண்களும் நற்குண நற்செய்கை யுற்றவர்களும், ரூபயௌவனமுடையவர்களும் ஆகின்றனர்கள்; அவ்விடங்களில் தேவகந்தர்வ கின்னர கிம்புருஷ ஸித்த வித்யாதர நாக யக்ஷாதி தேவகணங்களும், காந்தையர்களுடன் கூடி இன்புறுகின்றனர்கள்; அங்குள்ள யாவரும் கதிரவன்போன்ற மேனியுடையவர்களும், நல்வினை செய்தவர்களும், இன்பமுடையவர்களும், வேண்டியவைகளை யெல்லாம் பெற்று மகிழ்ந்தவர்களும், காமினியர்களுடன் சேர்ந்திணைபிரியாதவர்களுமாகின்றனர்கள்; அவ்விடத்தில் நிருத்த கீத வாத்தியங்களினெலியும், மந்தஹாஸவொலியும் கூடி யாவருக்கு மினிமையாகக் கேழ்க்கப்படுகின்றது; அவ்விடத்தில் மகிழ்வற்றவனும், மனைவியைப் பிரிந்தவனும் ஒருவனுமிலன்; தினந்தோறும் அவ்விடத்தில்

நற்குணங்கள் வளர்கின்றன ; அதனைக் கடந்து செல்லின் வடகடல் கட்புல னாகும் ; அதனிடையில் ஸோமகிரியென்னும் பொன்மலை யொன்றுளது ; இந்திரலோகத்திற்கும், பிரஹ்மலோகத்திற்கும் செல்லுகின்ற தேவர்கள் அவ்வழியாகவே செல்லல் வேண்டுமாதலின், அதனைக் கண்ணுறுவார்கள் ; அவ்விடம் இரவில் கதிரவனுடைய காந்தி யுற்றிலதாயினும், அம்மலையி னொளியினாலே பகல்போலவே விளங்கும் ; அம்மலையின்மேலும் விசுவ ரூபியும், ஸ்ரீயஃபதியுமாகிய பகவானும், பதினொன்று ருத்திரரும், நான் முகனும், பற்பல பிரஹ்மரிஷிகளினாலே சூழப்பட்டவர்களாகி எழுந்தருளி யிருக்கின்றனர்கள் ; அந்த உத்தரகுருக்ஷேத்திரத்திற்கு மேலே நீங்க ளொருக்காலையிலும் செல்லற்க ; அதற்குமேல் ஒருவர்க்கும் செல்வதெளி தாகாது; அந்த ஸோமகிரி தேவர்களாலும் செல்லற்குரியதன்று; ஆதலின், அந்த ஸோமமலைவரையிற்சென்று அதனைக்கண்டு உடனே மீண்டெய்துக; இதுவரையிலுமே வாநரர்களால் செல்லற்குரியது ; அதற்குமேல் கதிரவ னொளியின்றியும், முடிவின்றியும் இருத்தலால் அதன்மேல் யாமறிந்தி லோம் ; இதுகாறும் எம்மால் கூறப்பட்ட இடங்களிலும் கூறப்படாதுள்ள இடங்களிலும் சென்று பிராட்டியாரையும், இராவணனையும் தேடி வருக ; இவ்வண்ணம் நீங்கள் சென்று பிராட்டியாரைத் தேடி வருவீர்களாயின், பெருமாளுக்கும் நமக்கும் இனிது செய்தீர்களாகுவீர்கள் ; அன்றியிலே, நம்முடன் சேர்ந்து பகைவர்களையும் வென்று பிராட்டியாரையும் பெரு மாளுக்களித்து எம்மால் பூஜை செய்துகொள்ளப்பட்டவர்களாகி புத்திர மித்திர களத்திராதிகளுடன் கூடி வாழ்வீர்கள் ; ஆதலின், இக்காரியத்தில் மிகவும் ஊக்கங்கொண்டு தேடி வாரீர்கள் என்று மஹாராஜர் கட்டளை செய்தனுப்பினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்து மூன்றாவது சருக்கம்

முற்றிற்று.

மஹாராஜர் வடதிசைக்கு வழி கூறுவதில் மேருமலையைக் கூறியிலரே யென்று சிலர் கேட்பார்கள் ; அநேகமாயிரம் பொன்மலைகளுளவென்னுமிடத்திலேதானே மேருகிரியுமிருப்பதாக வெண்ணுக ; அன்றியிலே, முன்னர் தாம் நேராகச்சென்று கண்ணால் கண்ட வழியைமாத்திரம் முறையே கூறினாராதலின், தாம் செல்லும் காலை யிலும் மேருகிரிக்குச்செல்லாது அதனது கிழக்குப்பக்கமாகச் சென்றிருப்பாராத லின், அவ்வாறே கூறினாரென வுணர்க; வடதிசையிலும் மற்றத்திசைகளிற்போலவே ஏழுகடல்களும், தீவுகளும் உளவாயினும் தாம் சென்றிலராதலாலும், மனுஷியஸஞ் சாரமதற்குமேலில்லாமையாலும், மஹாராஜர் கூறியிலர்; இவ்வண்ணமுறைசெய்ததி னால் அனுபவத்திற்கும், சோதிடத்திற்கும், புராணங்களுக்கும், சிறிதும் விரோதமி ல்லை ; ஆதலின், இவ்வண்ணமே யுண்மையென்றுணர்ந்து அற்பர்களின் வாக்கியங்க ளினால் ஐயமுறற்க ;—

நாற்பத்துநான்காவது சருக்கம்.

பெருமாள் சிறியதிருவடியிடத்தில் தமது மோதிரத்தைப் பிராட்டியாருக் கடையாளமாக அளித்தருளியது.

மஹாராஜர் இவ்வண்ணம் நான்குதிசைகளுக்கும் வாநரர்களை யேவி விட்டு மீளவும் சிறியதிருவடியை யழைத்து இவரே மிகச் சிறந்தவரும், யாவுமறிந்தவரும், தாம் மேற்கொண்ட காரியத்தை யூக்கத்துடன் செய்து முடிப்பவருமாதலின், இக்காரியத்தையும் எவ்வகையிலும் செய்து முடிப்ப ரென்று நிச்சயங்கொண்டு மொழியலுற்றனர். கேளீர் வாயுகுமாரராகிய அனுமானே! உமக்குப் புவியிலாயினும், ஆகாயத்திலாயினும், வானுலகி லாயினும், பொன்னுலகிலாயினும், நீரிலாயினும், தீயிலாயினும் தடைகண் டிலேன்; நீர் தேவாஸுர நாககந்தர்வ நரகிந்நரர் முதலானோர்களையும், எல்லாவுலகங்களையும், காடு கடல் மலைகளையும் நன்குணர்கின்றீர்; கதியும், வேகமும், தேஜஸ்ஸும், உபாயமும், உம்முடைய தந்தையிடத்திற் போலவே உம்மிடத்திலும் குடிகொண்டிருக்கின்றன; தோள்வலியிலும், வலிமையிலும், காந்தியிலும், புத்தியிலும், உமக்கு நிகரான பூதம் ஒன்று மிலது; ஆதலின், பிராட்டியார் எவ்வண்ணங் கட்புலனாகுவாரோ? அவ் வண்ணம் நீரே யாராய்ந்து செய்யக்கடவீர். அதற்குத்தக்க பல புத்தி பராக்கிரமங்கள் உம்மிடத்திலேதானிருக்கின்றன; காலதேசங்களுக்குத் தக்கபடி நீரே நடக்க வல்லவர்; என்று மகிழ்ந்து மஹாராஜர் மொழிந் தனர். மஹாராஜரிவ்வண்ணம் சிறியதிருவடியிடத்தில் நம்புதலுற்று மீள வும் மொழிந்தமையினாலும், இவரும் தாம் மேற்கொண்ட காரியத்தை முடிப்பவர்போலவே தோற்றப்படுகின்றமையினாலும், இவரே இக்காரி யத்தை ஸாதித்துக்கொண்டு வருவாரென்றாராய்ந்துணர்ந்து தீரமும், முயற்சியும், ஊக்கமுங்கொண்டு விளங்குகின்ற அவரைக் கடாக்ஷித்துப் பிராட்டியார் தமது திருக்கரத்தினுள்ளிருப்பதாகவே எண்ணி மகிழ்வு கொண்டு அவரை யருகிலழைத்துத் தமது திருநாமத்துடன் விளங்குகின்ற கணையாழி மோதிரத்தைக் கழற்றி யவர் கையிலளித்து அவரை நோக்கிக் கேளீர் நல்லன்பரே! ஜனகராஜன் திருமகளாகிய என்னுயிர்க்கு இஃது நல்லடையாளமாகும்; அவள் இதனைக் கண்ணுறுவளாயின் நீர் நம்மிடத்தி லிருந்து வந்தீரெனவே நிச்சயங்கொண்டச்சந்தீர்ந்து கண்டு செய்தியுரை செய்வாள்; உம்முடைய முயற்சியும், பலமும், பராக்கிரமமும், சிறந்த நல்லறிவும், மஹாராஜர்க்கும்மிடத்திலுள்ள நம்புதலும் சேர்ந்து எனது காரியம் கைக்கூடித்தென்று நம்புவிக்கின்றனபோலும் என்றருளிச் செய்த னர். அந்தச் சிறியதிருவடியும் அம்மோதிரத்தை வாங்கிக்கொண்டு தலைமே லஞ்சலி செய்து வணங்கிப் பெருமாளுடைய திருவடிகளைத் தொழுது

சிறந்த மிகுந்த சேனைகளுடன் கூடிப் புறப்படுகையில், கார்ப்பருவந்தீர்ந்து மேகங்களின் மறைவின்றி விளங்குகின்ற வானிடையில் விண்மீன்களுடன் கூடிய முழுமதிபோல விளங்குகையில், மீளவும் பெருமாளவரை நோக்கிக் கேளீர் மகாபல பராக்கிரமமுடையோரே ! உம்முடைய தோள்வலியைச் சேர்ந்தே யான் எனது காரியத்தை முடித்துக்கொள்ள நிச்சயங்கொண்டிருக்கின்றேன் ; ஆகையால், அந்த ஜனகசக்கரவர்த்தியின் திருமகள் எவ்வண்ணங் காணப்படுகின்றாளோ ? அவ்வண்ணம் முயற்சிசெய்து காரியத்தை முடித்துக்கொண்டு மகிழ்ந்து மீண்டெய்துக ; என்று அருளிச்செய்து வாழ்த்தி யனுப்பியருளினர். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்து நான்காவது சருக்கம் முற்றிற்று.

நாற்பத்தைந்தாவது சருக்கம்.

நாற்றிசையிலுமனுப்பப்பட்ட வாநரர்களெல்லோரும் பிரயாணப்பட்டது.

பின்பு மஹாராஜர் மீளவும் வாநரசேனாபதிகளெல்லோரையும் அழைத்து அவர்களை நோக்கிக் கேளீர்கள் அன்பர்களே ! நீவிரெல்லீரும் சென்று யானுரைத்தவண்ணம் எல்லாவிடங்களிலும் பிராட்டியாரைத் தேடிப் பெருமாளுடைய காரியத்தை எவ்விதத்திலும் நிறைவேற்றிக்கொண்டு யானிட்ட அவதிக்குள்ளாக வந்து சேர்ந்து செய்தி யுரைசெய்யக்கடவீர்கள்; என்று கட்டளையிட்டனர். அவ்வாநரப்படைத்தலைவர்களெல்லோரும் அக்கொடிய ராஜசாஸனத்தைக்கேட்டு உடனே வானிடையிலெழுந்து மின்மினிப் பூச்சிகள்போல எங்கும் பரவிப் பூமியை மறைத்துக்கொண்டு புறப்பட்டனர்கள். பெருமாளும் இளையபெருமாளுடன் அந்த ஒரு மாஸம் வரையில் அந்தப் பிரஸ்ரவண மலையிலேதானே யெழுந்தருளியிருந்தனர். அப்பொழுது சதவலியென்னும் யூதபதி யநேகமாயிரம் வாநரசேனைகளுடன் கூடி

* மஹாராஜர் மீளவும் சிறியதிருவடியை யழைத்துப் புகழ்ந்துரைசெய்தமையினாலே, மஹாராஜர்க்கும் தெய்வத்தன்மையுளதென்றும், முக்காலப்பொருளறிவுளதென்றும் நன்குவிளங்கும் ; பெருமாளும் கணையாழிமோதிரமளித்தருளினமையின், தாமே பரதெய்வமென்பதும், தமது சங்கற்பம் இவ்வண்ணமே யுளதென்பதும் தோற்றுவதற்காகவே அவ்வண்ணஞ் செய்தருளினரென்றறிக ; அங்ஙனமிலதாயின, அநேகமாயிரம் யூதபதிகளிருக்கையில், சிறியதிருவடியையே மீளவுமழைத்து ஏன் கணையாழி யளித்தருளினர் பெருமாளுரைமின்.—

மேருகிரியினுல் விளங்குகின்ற வடதிசையை நோக்கிச் செல்வதற்குச் சன்னுகஞ் செய்தனன். விநதனும் அவ்வண்ணமே கிழக்கு நோக்கிச் செல்லமுயன்றனன். சிறியதிருவடியும் தாராங்கதாதிகளுடன் கூடித் தென்திசை நோக்கிப் புறப்பட்டனர். ஸுஷேணன் மேற்றிசையை நோக்கிப் புறப்பட்டனன். இவ்வண்ணம் மஹாராஜர் எல்லாத்திசைகளுக்கும் வானரர்களையேவிவிட்டு மனமகிழ்வுகொண்டனர். அவ்வானரர்களும் இவ்வண்ணம் மஹாராஜரால் ஏவப்பட்டவர்களாகித் தத்தந் திசையை நோக்கிப் புறப்பட்டனர்கள். அவர்கள் செல்லுங்காலையிலேயும், எவ்வகையிலும் பிராட்டியாரை யெழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருவோம்; இராவணனையும் கொலைசெய்வோம்; என்று கூவிக்கொண்டும, கர்ஜனை செய்துகொண்டும், துள்ளிக்கொண்டும், தாவிக்கொண்டும், ஓடிக்கொண்டும், வீரவாதம் பேசிக்கொண்டும், யான் ஒருவனே இராவணனைப் போர்க்களத்திற் கொலை செய்து விடுவேன்; அவனை வலுவிலடித்துப் பிராட்டியாரையும் மீட்பேன்; யானொருவனே செல்வேன்; நீவிரெல்லீரும் நின்மின்; இராவணன் பிராட்டியாரைப் பாதாளத்தில் மறைத்திருப்பானுயினும் கண்டு பிடித்து மீட்டுக்கொண்டெய்துவேன்; மரங்களையும் முறிப்பேன்; மலைகளையும் பேர்த்துத் தள்ளுவேன்; பூமியையும் பிளப்பேன்; கடல்களையும் கலக்குறச் செய்வேன்; யான் நூறுயோஜனம் தாண்டுவேன்; யான் ஆயிரம் யோஜனம் தாண்டுவேன்; யான் எவ்வளவுயோஜனமாயினும் தாண்டுவேன்; எனக்குப் பாரிடையிலாயினும், கடலிலாயினும், மலைகளிலாயினும், காடுகளிலாயினும், பாதாளத்திடையிலாயினும் செல்வதற்குத் தடை சிறிதுமிலது; என்று வானரர்களெல்லோரும் தனித்தனி வீறு கூறிக்கொண்டும், மஹாராஜரிடத்தில் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தைந்தாவது சருக்கம்
முற்றிற்று.

நாற்பத்தாருவது சருக்கம்.

மஹாராஜர் தாம் முன்பு பார்முழுதும் சுற்றியதற்குக் காரணத்தைத் தம்மை வினவியருளிய பெருமாளுக் குரைசெய்தது.

இவ்வண்ணம் வானரர்களெல்லோரும் தத்தம் திசை நோக்கிச் சென்ற பின்னர், பெருமாள் மஹாராஜரை நோக்கித் தோழரே! நீர் நாற்றிசைக்கும் வழியுணர்செய்தனரே? அதனை யெவ்வண்ணம் நீர் அறிகின்றீர் என்று வினவியருளுதலும், மஹாராஜர் பெருமாளை நோக்கிக் கேட்டருளீர் எம்

பெருமானே ! யாவற்றையும் விரைவாக வுரைசெய்கின்றேன் ; முன்பு மஹிஷவேஷங்கொண்டு வந்த துந்துபியென்னும் அஸுரனை என் தமையனான வாலி துரத்திக்கொண்டு எப்பொழுது மலயமலையை நோக்கி யோடினையே ? அப்பொழுது துந்துபி அம்மலயமலையின் குகைக்குள்ளே சென்றவன் ; வாலியும் அவனைக் கொலைசெய்ய நினைத்து அதற்குள்ளே புகுந்தனன் ; பின்பு யான் ஒரு வருஷம்வரையில் அக்குகையின் வாயிலைக் காத்துக்கொண்டிருக்கையிலும் வாலி வந்திலன் ; பின்பு, அதினின்றும் மிகுந்த இரத்தந்தோன்றி அக்குகை நிறைந்துவிட்டது ; யானதனைக்கண்டு வியப்புற்று வாலியே யிறந்துவிட்டனனென்றெண்ணி இதுகாறும் வாலி மீண்டெய்தாமையினால் பிழைத்திலனென்றேநிச்சயங்கொண்டு அந்தமஹிஷன் வெளியே புறப்படாமல் அக்குகையினுள்ளேயே அழிந்திறக்கக்கடவனென்று அக்குகையின் துவாரத்தைப் பெருஞ்சிலையினால்மூடிவிட்டு இனியண்ணன் வருவானென்னுமாசை நீங்கித் துன்புற்றுக் கிஷ்கிந்தைக்கெய்தித் தாரையுடனும், ருமையுடனும் கூடிக் கிஷ்கிந்தாராஜ்ஜியத்தைப் பெற்றுத்தோழர்களுடனுங் கூடி யச்சமின்றி யரசாட்சிசெய்து வாழ்ந்துகொண்டிருந்தேன் ; பின்பு, வாலியும் அந்தத் துந்துபியைக் கொலைசெய்து வெற்றிக்கொண்டெய்தினன் ; யானவனைக்கண்டவுடனே மகிழ்வும் பயமுங்கொண்டு கௌரவஞ்செய்து தலைவணங்கி வேண்டிக் கபிராஜ்ஜியத்தை யளித்துவிட்டேன் ; இவ்வண்ணம் யான் உண்மைகூறி வேண்டி வணங்கியிருக்கையிலும், வாலி யென்மீது சினங்கொண்டு என்னைக் கொலைசெய்யத் துணிந்து கொடுமைகொண்டு மதிகெட்டு என்னை நாட்டினின்றும் ஓட்டிவிட்டனன் ; யானும் அவ்வண்ணமே அனுமான் முதலிய நான்குமந்திரிகளுடன் கூடி நாடுவிட்டோடுகையிலும், அவன் சினந்தணியாமல் பின்றொடர்ந்தோடிவந்து துரத்தினன் ; அப்பொழுது யான் அவனால் துரத்தப்பட்டவனாகிச் செல்லுகையில், காடு செடி மலை யாறு கடல் நாடு நகர் தீவுகளுடன் கூடின இப்பார்முழுதும் அலாத சக்கரம்போலக் காணப்பட்டு மாட்டின் குளப்படிபோல் தாண்டவும்பட்டது ; அப்பொழுதுதான் யான் வாலியினாலே துரத்தப்பட்டு முன்பு கிழ்த்திசையிற்சென்று பற்பல காடு கடல் ஆறு தீவுகளையும், உதயகிரியையும், திருப்பாற்கடலையும் கண்டு மீண்டு வந்து தென்திசையிலோடிப் பற்பல மலைகளைக்கண்டு மீண்டெய்தி மேற்றிசையிலோடிப் பற்பல தேசங்களையும், கடல்களையும், அஸ்தகிரியையும் கண்டு மீண்டு வடதிசையிலோடி இமயம் மேரு முதலிய மலைகளையும், வடகடலையும் கண்டு அங்குந் துரத்தப்பட்டு எங்கும் புகலிடமின்றித் தவித்தேன் ; அப்பொழுது மிகவும் புத்தியுள்ள அனுமான் என்னை நோக்கி, மஹாராஜரே ! இப்பொழுதுதான் எனக்கோரிடம் நினைவில் வந்தது ; மதங்கமாமுனி தம்மாசிரமத்தில் வாலி வருவானாயின், தலையிற் சிதறுண்டு இறக்கக்கடவனென்று சாபமிட்டிருக்கின்றனர் ; அவ்விடத்திற்சென்று யாம் வாழ்வுறுவோமாயின், அச்சந்தீர்ந்தின்புறுவோம் ; என்று மொழிந்த

னர். யானதுகேட்டுணர்ந்து உண்மையென்றுடன்பட்டு ரிசியமூகமலை சேர்ந்துவாழ்வுற்றேன்; வாலியும் மதங்கசாபபயத்தாலே அந்த் மதங்காசிரமத்தினுள் வந்திலன்; ஸ்வாமீ! இவ்வண்ணம் யான் முன்பு பார்முழுதுந் திரிந்து பின்பு ரிசியமூகஞ்சேர்ந்தேன்; ஆதலால்தான் யான் கண்டவண்ணம் வழியுரைசெய்தேன் என்று விண்ணப்பஞ் செய்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

நாற்பத்தேழாவதுசருக்கம்.

தென்திசை நீங்கலான மூன்று திசைகளிலும் சென்ற வாநரர்கள்
பிராட்டியாரைத்தேடிக் காணாமல் மீண்டெய்திவிட்டது.

முன்பு, பிராட்டியாரைத் தேடிப் பார்ப்பதன்பொருட்டு மஹாராஜராலே கட்டளைசெய்தனுப்பப்பட்ட வாநரர்களெல்லோரும் புறப்பட்டு ஆறு, குளம், குட்டை, புதருகள், ஆகாயம், நாடு, நகரங்கள், கோட்டைகள், கடல்கள், மலைகள் முதலிய எல்லாவிடங்களிலும் பிராட்டியைத் தேடிக்கொண்டு மஹாராஜராலே கூறப்பட்ட ஆறு, கடல், மலைகளிலுந் தேடினர்கள்; எல்லோரும் இவ்வண்ணம் பகல் முழுதும் ஆகாயத்தின்மேற்சென்று தேடி இரவில் பாரிலிறங்கினர்கள்; இவ்வண்ணம் புறப்பட்ட தினம் முதலாகக்கொண்டு ஒருமாசம் வரையிலும் தேடி யெங்கும் பிராட்டியைக் காணாமல் ஆசை யொடுங்கி மீண்டெய்தி மஹாராஜரைக் கண்டு செய்தி யுரைசெய்து மாலியவந்த மலை சேர்ந்தனர்கள். இவ்வண்ணம் மஹாபலமுடைய விநதன் அமைச்சர்களுடனும், சேனைகளுடனும், கீழ்த்திசை முழுதலும் தேடிப் பிராட்டியைக் காணாமல் ஒரு மாசத்திற்குள்ளாக மஹாராஜரிடம் வந்து விட்டனர்; பின்பு, வடதிசையினின்றும் சதவலியும் அவ்வண்ணமே மகிழ்வுகுன்றி வந்துவிட்டனன். பின்பு, ஸுஷேணனும் சேனைகளுடன் மேல்திசை முழுதலும் தேடிப் பிராட்டியாரைக் காணாமல் மாதம் முடிவுதினத்தில் வந்து சேர்ந்தனன்; இவ்வண்ணம் எல்லோரும் மீண்டு வந்து அந்த பிரஸ்ரவணகிரியில் பெருமாளிளையபெருமாள்களுடன் வீற்றிருந்த மஹாராஜரைக் கண்டு வணங்கி மஹாராஜரே! எங்களால் எல்லாமலைகளும், எல்லாக் காடுகளும், எல்லாப் புதர்களும், எல்லா நதிகளும், எல்லாக் கடல்களும், எல்லாத்திவுகளும், எல்லாநாடுகளும், எல்லாக்குகைகளும், தங்களால் கூறப்பட்டனவும், கூறப்படாவும், பற்பல செடி கொடிகளடர்ந்த குஞ்சங்களும் தேட

ப்பட்டன ; புகற்கரிய தேசங்களிலும், புகற்கரிய ஏற்றத்தாழ்வுள்ள இடங்களிலும் சென்று தேடினேம், மிகப் பெரிய உயிர்களையும் கண்டு கொலை செய்தனம், எங்கும் பிராட்டியாரைக் கண்டு மகிழ்ந்திலோம் ; ஆயினும், பிராட்டியார் எந்தத்திசையை நோக்கி எழுந்தருளி யிருக்கின்றனரோ ? அந்தத் தென்திசையை நோக்கியே சிறந்த பல பராக்கிரமமும், நற்குலமும், நற்செயலும், நன்மதியும், நற்புகழும், மகாமஹிமையும் பொருந்திய மஹாபல குமாரராகிய அனுமான் சென்றிருக்கின்றனர்; ஆதலின், அவரே தப்பாமல் பிராட்டியார் எங்கிருக்கினும் தேடிக் கண்டு மகிழ்ந்து வந்து நற்செய்தி யறிவிக்கப்போகின்றனர் ; என்று எல்லோரும் ஒரு மொழியாக மொழிந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தேழாவது சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தெட்டாவது சருக்கம்.

தென்திசையிற்சென்ற சிறியதிருவடி முதலானோர் நடுவழியில் ஓரஸுரனைக் கண்டு கொடிய ராவணனென்றெண்ணிக் கொலைசெய்தது.

அங்கே சிறியதிருவடியும் தாரன், அங்கதன் முதலிய வாநரர்களுடன் கூடி மஹாராஜர் கட்டளையின்படி நெடுந்தூரஞ்சென்று விந்திய மலை தொடங்கி யதனுண்டிய குகைகளிலும், புகற்கரிய காடுகளிலும், அதனைச் சூழ்ந்துள்ள மலைகளிலும், ஆறுகளிலும், குளங்களிலும், அடர்ந்துயர்ந்து வளர்ந்த காடுகளிலும், காடுகளடர்ந்துள்ள பற்பல குன்றுகளிலும் தேடியும், ஜனக சக்கரவர்த்தியின் திருமகளாகிய ஸீதாதேவியை யெங்கும் கண்ணுற்றிலர்; ஆயினும், மேன்மேலும் முயற்சியுற்று அங்கங்குள்ள காய் கனி கிழங்குகளைப்புசித்துக்கொண்டும்,அங்கங்கிரவிலுறைந்துகொண்டும் செல்லுகையில், பற்பல குகைகளையுற்றும், நீர் மரஞ் செடி கொடிகளின்றியும், பசு பக்ஷி மிருகம் முதலிய உயிர்களின்றியும், கோரமாயுள்ளதோர் தேசம் காணப்பட்டது ; அந்த வாநர யூதபர்களெல்லோரும் அவ்விடத்தையுந் தாண்டிச் சென்றும், அத்தன்மையதாகிய காடுகளே நேர்ந்தமையின், அங்கும் பிராட்டியாரைத் தேடி மிகவும் இளைப்புற்று வருந்தியும், அச்சமின்றி மற்றொரு காட்டினுள்ளே புகுந்து அங்குள்ள மரங்களும், தளிர் மலர் காய் கனிகளின்றியும், ஆறுகள் நீரின்றியும் இருந்தமையின், கிழங்குகள் கூட வாய்க்காமல் எருமை, மான், யானை, குதிரை, புலி, கரடி முதலிய விலங்குகளும், காட்டிலுள்ள பறவைகளுமின்றியும், மரஞ்செடி கொடிகளி

ன்றியும், குளங்களிலும் நீர் வற்றித் தாமரை முதலியவை யுலர்ந்து தும்பி யன்னம் முதலியவைகளினொலியற்றும் இருந்தமையின், மிக வாடிப் பசி தாகங்களினால் வருந்தினர்கள்; முன்பு, அவ்வனம் செழிப்புற்றிருக்கையில், கண்டு வென்னும் மாமுனி யங்குத் தவஞ்செய்துகொண்டிருந்தனர். அப்போழ்தொருநாள் பதினாறுவயதுள்ள அம்முனிவருடைய குமாரன் வழிதப்பி யக்காட்டினுள்ளேசென்று மீண்டெய்தாமலிறந்துவிட்டனன். அதனால் அம்முனிவர் மிகச் சீற்றங்கொண்டு அந்தக்காடழிந்து மரஞ் செடி கொடிகளின்றியும், நீரின்றியும், பசு பக்ஷிகள் முதலிய உயிர்களின்றியும், கோரமான மருகாந்தாரமாகும்படி சாபமிட்டனர். அதுமுதல்தான் அக்காடு அவ்வண்ணமாகிவிட்டது ; அந்த வாநரர்கள் அந்தக் கோரமான காட்டிலுஞ் சென்று மலைகளின் குகைகளிலும், ஆறுகளின் பிறப்பிடங்களிலும், மிகவும் ஊக்கங்கொண்டு தேடியும், பிராட்டியைக்கண்டின்புற்றிலர்கள் ; ஆயினும், இவர்கள் இளைப்புறாமல் மேன்மேலுந் தேடிச் செல்லுகையில், மிகவுங் கொடுஞ்செயலுடையோனும், கொடிய ரூபமுடையோனும், அச்சமற்றோனுமாகிய ஓரசுரனைக் கண்டு அவனுடன் போர்வதன்பொருட்டுஸந்நாஹஞ் செய்துகொண்டனர்கள். அவனும் இவர்களைக்கண்டு வாரீர் வாநரர்களே! நீங்களெல்லீரும் என்கையிலகப்பட்டுக்கொண்டு இப்போழ்தே இறக்கக்கடவீர்கள் ; என்று வீரவாதஞ்செய்து மலைபோலசைந்தெதிர்த்தோடி வந்தனன் ; இவ்வண்ணமவன்கையை யுயரவெடுத்துக்கொண்டு முட்டியால் குத்தும்படி வருவதை யுவராஜனை அங்கதன் கண்டு சினமூண்டு இவனிராவணனே யென்று எண்ணங்கொண்டு எதிர்த்து வந்து கரதலத்தினாலோங்கி போரறையறைந்தனன் ; அந்த அஸுரன் உடனே வாயினால் உதிரத்தைக் கக்கிக்கொண்டு ஊழிகாலத்தில் காற்றினால் சாய்க்கப்பட்ட மாமலைபோலச் சாய்ந்து தரையில்விழ்ந்துயிர்மாய்ந்திறந்தனன் ; அவ்வாநர வீரர்களும் அவனிறந்ததைக் கண்டு மகிழ்ந்து வெற்றியினால் விளங்குபவர்களாகி அங்குள்ள மலைக்குகைகளிலெல்லாவற்றிலும் ஓரிடமாயினும் பாக்கியின்றித் தேடி அங்கிருந்து புறப்பட்டு மற்றோர் காட்டிற்சென்று அங்குந்தேடிப் பிராட்டியைக்காணாமல் மகிழ்வு குன்றி இளைத்து எல்லோருஞ் சேர்ந்தோர் மரத்தடியிலுட்கார்ந்து சிந்தைசோர்ண்டனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தெட்டாவது சருக்கம்

முற்றிற்று.

நாற்பத்தொன்பதாவது சருக்கம்.

அங்கதன் முதலானோர்கள் மற்றும் பிராட்டியைத் தேடியது.

அநந்தரம் அங்கதகுமாரன் மிக வருத்தமுற்றிருக்கினும் யாவுமுணர்ந்தவனாதலின், நன்காராய்ந்து முகூர்த்தகாலஞ்சென்றினைப்பாறி அவ்வாநரர்களெல்லோரையும் நோக்கி மொழியலுற்றனன். கேளீர்காளன்பர்களே! காடு, செடி, புதர், மலை, குகை, யாறு, குளம், குட்டைமுதலிய எல்லாவிடங்களிலுஞ் சென்று நன்றாகத்தேடியும் ஸ்ரீ ஸீதாதேவியையாயினும், அந்த ராவணனையாயினுங் கண்டிலோம்; மஹாராஜர் கெடுவிட்டமாதம் ஒன்றிலும் வெகுதினங்கடந்துவிட்டது. அவரோ மிகவுங் கொடுமையான தண்டனைசெய்பவர்; ஆகையால், நீங்களெல்லோரும் கூடிச் சோம்பலையும், துன்பத்தையும், துயிலையும் துறந்துவிட்டுப் பிராட்டியாரை நன்றாகத்தேடக்கடவிர்கள்; இவ்வண்ணஞ் செய்வோமானால் பிராட்டியாரைக் காண்போம்.

అనిర్వేదశ్చదాక్ష్యఞ్చమనసశ్చాపరాజయః
కార్యసిద్ధికరాణ్యాహుస్తస్మాదేతద్బ్రవీమ్యహం

அநிர்வேதஞ்சதாக்ஷயஞ்ச மனஸச்சாபராஜய:
கார்யசித்திகராண்யாஹு ஸ்தஸ்மாதேத்தப்ரவீம்யஹம்.

வெறுப்பின்மை, நுண்ணறிவுடைமை, செய்திறமை, மனங்குன்றாமை, இவை யெவரிடத்திருக்கின்றனவோ? அவர்கள் மேற்கொண்ட காரியம் கைக்கூடுமென்பார்கள்; ஆதலின், யானிவ்வண்ணஞ் சொல்லுகின்றேன்; ஆதலின், இப்போதும் துன்புறாமல் அந்தக்காடுமுழுதலுந்தேடிப் பிராட்டியைப் பார்க்கக்கடவீர்கள்.

అవశ్యంక్రియమాణస్యదృశ్యతేకర్మణఃఫలం
అలంనిర్వేదమాగమ్య నహినోమీలనంక్షమం

அவச்யங்க்ரியமாணஸ்ய த்ருச்யதேகர்மண:பலம்
அலம்நிர்வேதமாகம்ய நஹிநோமீலநம்க்ஷமம்.

ஒருவன் மிகவும் ஊக்கங்கொண்டொருகாரியஞ் செய்வானானால் எவ்விதத்திலும் அதற்குப் பலன்கிடைக்குமேயன்றிக் கிடையாமல்போகாது; ஆதலின், இதுவரையிலும் வெறுப்புற்றிருந்ததுபோதும், இனிமேல் யாமிவ்வண்ணம் கண்களை மூடிக்கொண்டிருப்பது தகுதியற்றது; மஹாராஜர் மிகச் சினமுடையவரும், கொடுந்தண்டனை செய்பவருமாதலின், எப்பொழுதும் அவரிடத்தில் அச்சமுறல்வேண்டும்; பெருமாளும் மஹாமகிமை

யுடையவராதலின், அவரிடத்திலும் அச்சமுறல்வேண்டும்; எல்லோரும் இதமுறல்வேண்டுமென்றிவ்வண்ணமுரைசெய்தேன்; பின்புங்களுக்கெவ்வண்ணந் தோற்றுகின்றதோ அவ்வண்ணஞ்செய்க; அன்றியில், யாதுசெயின் தகுமோ அதனை யுரைசெய்யக்கடவீர்கள். என்றிவ்வண்ணம் யுவராஜன் மொழிந்த வாக்கியத்தைக் கந்தமாதனனென்பவன் கேட்டு தாகத்தினாலே மிகவும் வருத்தமுற்றிருந்தமையின், கூவியுரைக்கத் திறமையின்றி, மந்தமாக மொழியலுற்றனன். கேட்டுணர்ந்தீர்களோ வீரர்களே! யுவராஜர் மிகவும் நலந்தருமாறுமொழிகின்றனர். இதமாகவும், அநுகூலமாகவுமுள்ள இவருடைய வாக்கியத்தின்படிசெய்க; மறுபடியும் மலைகளையும், குகைகளையும், ஆறு, மலையருவி, காடு முதலிய விடங்களையுமடைந்து திரிவோம்; மஹாராஜர் உரைசெய்தவிடங்களிலுஞ் சென்று தேடுக; என்று, கந்தமாதனனும் மொழிதலும், வாநரர்களெல்லோரும் மீளவுமெழுந்து விந்தியமலையின் காடுகள் துடங்கித் தென்திசையைநோக்கிச்சென்று தேடிக்கொண்டு வருகையில், சரத்காலமேகம்போன்ற குகைகளையும், சிகரங்களையுமுற்று விளங்குகின்ற வெள்ளிமலையையும், அதன்மேலுள்ள ஏழிலைம்பாலை முதலிய காடுகளையும்தேடியும் பிராட்டியாரைக்காணுமல் மிகவும் இளைப்புற்று மனங்குன்றி அங்குள்ள மரத்தடிகளில் முகூர்த்தகாலமிருந்திளைப்பாறி மீளவும் புறப்பட்டுச் சிறிய திருவடி முதலாகவுள்ள வானரர்களும், ஒன்றாகச்சேர்ந்து விந்தியமலையினடிதொடங்கித் தென்திசை முழுதலும் தேட முயற்சிகொண்டு அங்கங்குச் சுற்றி யலைந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் நாற்பத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பதாவது சருக்கம்.

சிறியதிருவடி முதலானோர்கள் ரிக்ஷபிலமென்னுங் குகையினுள்ளே புகுந்துவிட்டது.

மீளவுமிவ்வண்ணம் தாரன், அங்கதன் முதலானோர்களுடன்சேர்ந்து விந்தியமலையின் குகைகளிலும், அதனைச் சேர்ந்துள்ள காடுகளிலும், சிங்கம், புலி, கரடி முதலிய விலங்குகளுள்ள புதர்களிலும், ஆறுகளிலும், மேடுபள்ளங்களுள்ள மாமலைகளிலும், மலையருவிகளிலும், அம்மலைகளின் கொடிமுடிகளிலும் தேடிக்கொண்டு வருகையிலேதானே மஹாராஜர் கெடுவிட்ட அந்த ஒருமாதமும் கடந்துவிட்டது; அவ்விடங்களில் புகற்கரிய இடங்களெங்கெங்குளவோ? அவ்விடங்களிலெல்லாம் சிறியதிருவடி தப்பாமல் தேடிவந்தனர். அன்றியிலே, கஜன், கவாக்ஷன், கவயன், சரபன், கந்தமாத

னன், மைந்தன், துவிவிதன், ஜாம்பவான், அங்கதன், ஸுஷேணன், நளன், தாரன் முதலிய யூதபதிகளையும், அருகிலருகில் சென்று ஓரிடமாயினும் தப்பாமல் தேடி வரச்செய்தனர். இவ்வண்ணமெல்லோரும் பற்பல இடங்களிலுந் தேடிக்கொண்டு வருகையில், புகற்கரிய ரிக்ஷபிலமென்னும் பெரிய தோர்பிலத்தின் துவாரத்தைக்கண்டு பசிதாகத்தினால் மிகவும் வருந்தி இளைத்து நின்றனர்கள். அந்தக் குகை மயனென்னுந் தானவனால் பாதுகாக்கப் படுகின்றமையில், யாவராலும் புகலரிது. அதினின்றும் குரௌஞ்சம், அன்னம், ஸாரஸம், சக்கரவாகம் முதலிய நீர்ப்பறவைகள் நீரினால் நனைந்தும், தாமரைத்தாதுபடிந்து செம்மையுற்றும் புறப்பட்டன; குளிர்ந்து நன்மணமுற்று மந்தமாருதமும்வீசிற்று; அந்த வானரர்களெல்லோரும் அதனைக் கண்டு வியப்புற்று அதனுள்ளே தாமரைக்குளமொன்றிருத்தல் வேண்டுமென்றாசைகொண்டு மிகவும் பல பராக்கரமமுடையவர்களாகையாலே அச்சமென்பதின்றி யந்த பிலத்தினுள்ளே புகுந்தனர்கள். அது பற்பல ஜந்துக்கள் நிறைந்தும், பாதாளம்போல் கண்ணுறற்கரியதாகிப் புகுவதற்குங் கூடாமலிருள்மூடி யிருந்தது; மாமலையின் சிகரம்போன்ற அனுமான் அது கண்டு காடுகளையெல்லாம் நன்குணர்ந்தவராதலின், மற்றுள்ள வானரர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர் அன்புள்ள நேசர்களே! யாம் காடு,மலை,புதர் முதலிய எல்லாவிடங்களிலும் தேடினோம், ஓரிடத்திலும் பிராட்டியாரைக் காண்கின்றிலோம்; பெரும்பாலும் இளைப்புற்றனம்; இந்தக் குகையினின்றும் அன்னம், ஸாரஸம், குரௌஞ்சம் முதலிய நீர்ப்பறவைகள் நீரில் நனைந்து மகிழ்ந்து வருகின்றன; இதனாலிக்குகைக்குள் குளமோ நடவாபியோ சிறந்த நீருற்றிருத்தல் வேண்டும்; இந்தப் பிலத்தின்வாயிலிருக்கின்ற மரங்களும் நனைந்திரமுற்றிருக்கின்றன; ஆதலின், எல்லோரும் இதனுள்ளே புகுந்து நெடுந்தூரம் சென்று பார்ப்போம் என்று மொழிந்தனர். வானரர்களெல்லோரும் அதனைக்கேட்டு உடன்பட்டு மிக விருள்மூடிய அந்தக் குகைக்குள்ளே புகுந்து சிங்கம் முதலிய மிருகங்களையும், பறவைகளையும் பார்த்துக்கொண்டே இருள்மூடிய இடஞ்சேர்ந்து அதனுள்ளேயும் வாயுவேகமாகச்சென்றனர்கள். கண்மாத்திரம் ஒன்றினையுங்காணமல் பயனற்றிருந்தது; இவ்வண்ணம் அவர்கள் கண்களைமூடிக்கொண்டு வேகமாகச்செல்லுகையில் நெடுந்தூரம் சென்றபின்னர் பிரகாசத்தைக்கண்டு கண்களைத்திறந்து பார்க்கையில், அங்கு மிகவும் அழகுற்றதாகியும், பற்பல மரங்களடர்ந்துமுள்ள இடத்தைக்கண்டானந்தமடைந்தனர்கள். அதுவரையிலும் எல்லோரும்ஒருவர்க்கொருவர் கைகளைப் பற்றிக்கொண்டும், கட்டிக்கொண்டும் சென்றனர்கள்; இதற்குள்ளாக அவர்களுக்குப் பசியும் தாகமும் அதிகமாகி மதிமயங்கி நீர் நீரென்று நீரையை கோரிக்கொண்டு ஒருகாதத்திற்குமேல் நடந்து இளைத்து முகம்வாடி வெளிச்சத்தைக்காணமல் இனிப் பிழைத்துப் புறத்திற் செல்வோமென்னுமெண்ணங்குன்றி இறப்போமென்றே நிச்சயங்கொண்டு சிறிது காலஞ் சென்றபின்புதான் அந்த வெளிச்சம் காணப்பட்

டது. பின்பு, அதனுள்ளே பொன்மயமாகி எரிகின்ற அக்கினிபோலொளிக்கின்ற ஸால, தால, தமால, புன்னாக, குடஜ, வஞ்சுள, தவ, சம்பக, நாக, கர்ணிகாராதிகளான மரங்கள் பொன், வெள்ளி, நவமணிகள் மயங்களான பூங்கொத்துகளினாலும், செவ்விய தளிர்களினாலும், அதன்மேலே சிரோபூஷணம்போல்படர்ந்த கொடிகளினாலும், பொன்னணிகளினாலும் திகழ்வுற்று பால சூரியன்போல விளங்கி வைடூரிய மணிமயமான வேதிகளையுடையனவாகி விளங்குவதையும், இந்திரநீலம் வைடூரியங்கள் போன்ற தண்ணீர்பொருந்திய தாமரைத் தடாகங்களிலும், பொன்மயமான கமலங்களும், நீர்ப்பறவைகளும், மீன் முதலிய நீர்வாழு முயிர்களும், ஸூரியன்போல விளங்குவதையும், தங்கம் வெள்ளிகளால் செய்த விமானங்களும், கோபுரங்களும், பொன்மயமானகவாக்ஷங்களுற்றும், முத்துவடங்கள் தொங்கவிட்டும், நவமணிகளிழைத்தும் விளங்குவதையும், பொன், வெள்ளி, வைடூரியங்களால் செய்த சிறந்த வீடுகளையுங்கண்டு மகிழ்ந்தனர்கள். பொன்மயமான மரங்களும், தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பொன்மயமான வண்டுகள் பொருந்தித் தேன் பெருகத்திகழ்ந்தன; நவமணிகளிழைத்த சயனங்களும், ஆஸனங்களும், சிறந்த வாஹனங்களும், பொன், வெள்ளி, வெண்கலம், இவைகளினால்செய்த பாத்திரங்களும், அகரு, ஹரி, சந்தனம் முதலிய நன்மண வஸ்துக்களும், நின்மலமான கந்தமூலபலாதிகளாயுள்ள உண்டிகளும், சிறந்த பானங்களும், உருசியுள்ள மதுவும், உயர்ந்த விலையுற்ற ஆடைகளும், விசித்திரமான கம்பளங்களும், மான்தோல்களும், அங்கங்கு வைக்கப்பட்டு எரிதழல்போல விளங்கின; வாநரர்கள் அவைகளையுங் கண்டு வியப்புற்று அங்கங்கு தேடிக்கொண்டு செல்லுகையில், அருகில் ஒரு பெண்மணி மரவுரி யுடுத்து, மரையுரிபோர்த்து, உண்டி சுருங்கித் தவஞ்செய்து தேஜஸ்வினால் ஜொலிக்கின்ற மேனியுற்று விளங்கக்கண்டு அச்சமும் வியப்புங்கொண்டு சுற்றிலும்நின்றனர்கள். அவர்களுள் சிறியதிருவடி தீரங்கொண்டு அவளருகிற்சென்று அவளைத்தொழுது கைகூப்பி வணக்கமாக அவளை நோக்கி, அம்மா பெண்ணரசே ! நீர் யாவர்; இக்குகையாருடையது ; இங்குள்ளமணிகளும், பொன் வெள்ளிகளும் யாருடையன ; இம்மாளிகைகளுள் யார் வாழுகின்றனர்கள்; என்று வினவினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பதாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தொன்ருவது சருக்கம்.

அந்த ரிக்ஷபிலத்தின் வரலாற்றை அங்குள்ள சுயம்பிரபையென்பவள் சிறியதிருவடி முதலானோர்க் குரைசெய்தது.

சிறியதிருவடி இவ்வண்ணம் வினவி மீளவும் மரையுரியுடுத்துத் தவஞ் செய்து தருமத்தை மேற்கொண்டு மஹாமகிமைகொண்ட அந்தப் பெண் மணியை நோக்கி, அம்மா! நாங்களெல்லோரும் பசிதாகத்தினல் மிகவும் இளைத்து வருந்தி நள்ளிருள் கொண்ட இக்குகையினுள்ளே விரைவாகப் புகுந்து வந்தோம்; இங்கு வந்தும் மிகவும் ஆச்சரியமுறத்தக்கனவும், எங்கள் போன்றவர்களால் கண்ணுறுவதற்கும், வினவுதற்கும் அரியனவுமாகிய இவ்விடங்களைக்கண்டு வியப்பும், அச்சமும் கொண்டோம்; இங்குள்ள பொன்மயமாகிப் பாலசூரியன்போன்ற உத்தியானவனங்களும், நின்மலமான காய், கனி, கிழங்கு முதலிய உணவுகளும், பொன்விமானங்களும், வெள்ளி வீடுகளும், பொன் ஜாளரங்களும், நவமணி வடங்களாலலங்கரிக்கப்பட்ட சயனங்களும், தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனித்துமுள்ள பொன்மய மான மரங்களும் எவருடையவைகள்; யாருடைய மகிமையினலே பொற்ருமரைகளும், இவ்வண்ணம் பொன்மாளிகைகளும், பொன்மரங்களும் உண்டாயின; மீன், ஆமை முதலிய ஜல ஜந்துக்களும் பொன்மயமாகி யுலாவுகின்றனவே? இவ்விடத்திற்கு இவ்வளவு மஹிமை யாருடைய தபோபலத்தினலுண்டாயிற்று; யாங்களிம்மகிமையை யறிந்திலோமாதலின், குறைவற மொழிந்து எங்களுடைய ஐயத்தைத் தீர்த்தருளீர் என்று வினவினர்.

அந்த யோகினியும், சிறியதிருவடி யிவ்வண்ணமுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு எல்லாவுயிர்களுக்கும் இதமேசெய்பவளாதலின், சிறியதிருவடியை நோக்கிக் கேளீர் மஹானுபாவரே? மயனென்னுந் தானவன் சிறந்த மாயைகளையுடையனகி யிருக்கின்றனன். அவன்தான் தன்மாயையினலே இந்தப்பொன்மயமாகிய வநத்தையும், விமானங்களையும்,மாளிகைகளையும், நடவாபிபொற்ருமரைகளையும் இயற்றினன். அவன்தான் முன்பு தானவர்களெல்லோருக்கும் விஸ்வகர்மனகிச் சிற்ப வேலைகளெல்லாவற்றையும் செய்துவந்தனன். அவன் இந்த வநத்தில் அநேகமாயிரவருஷங்கள் தவஞ் செய்து நான்முகனைக்கட்புலனக்கி யவரிடத்தில் சிற்பசாஸ்திரங்கள் யாவும் குறையின்றி யுணரும்படி வரம்பெற்ற பின்புதான் சிறப்புற்றனன். பின்பும் திறமையினல் இங்கு வெகு விநோதமான பொருள்களையுமியற்றிச் சிறிது காலம் வாழ்ந்துகொண்டிருந்தனன். இவ்வண்ணம் அவன் வாழ்ந்துகொண்டிருக்கையில், ஹேமையென்னும் தெய்வப்பொதுமகளைப் பலாத்காரஞ் செய்து புணர்ந்துகொண்டிருந்தமையின், அதனைத் தேவேந்திரனறிந்து

இங்குவந்து வச்சிராயுதத்தினாலவனையடித்து வெருட்டிவிட்டனன். பின்பு இந்தவநத்தையும் அந்தமயன் அந்த ஹேமை யென்பவளுக்கே அளித்து விட்டனன். யான் மேருஸாவர்ணியின் குமாரி சுயம்பிரபையென்னும் பெயருடையேன்; யான் அந்த ஹேமையின் வநமாகிய இவ்விடத்தைப் பாதுகாத்துக்கொண்டிருக்கின்றேன். அந்த ஹேமை எனக்குத் தோழியாதலின், அவளுடைய வரத்தினால் மகிமையுற்றிதனைப் பாதுகாத்து வருகின்றேன்; இவ்வண்ணம் என்னுடைய வரலாற்றை யுரைசெய்தேன்; நீங்கள் இந்தக் கோரமான காடுகளில் திரிவதற்குக் காரணம் யாது; யாது பயன்; புகற்கரிய இவ்வநத்தை யெவ்வண்ணங்கண்டீர்கள்; நீங்கள் மிகவும் பசிதாகத்தினால் இளைப்புற்றிருக்கின்றமையின், இங்குள்ள காய்கனிகிழங்குகளைப் புசித்து தண்ணீர் பருகி யிளைப்பாறிப் பின்பு விடை யுரைசெய்யக் கடவீர்கள் என்று அன்புகூர்ந்து மொழிந்து மகிழ்வித்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தொன்றாவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்திரண்டாவது சருக்கம்.

சிறியதிருவடி சுயம்பிரபைக்குத் தாங்களங்கேவந்ததற்குக் காரணமுரைசெய்தது.

பின்பு, வாநரர்களெல்லோரும் சுயம்பிரபையின் வாக்கியத்தைக் கேட்டு மகிழ்ந்து காய் கனி கிழங்குகளையுண்டு, நன்னீர்பருகி, இளைப்பாறி மகிழ்கையில், தருமபுத்தியுள்ள அந்த சுயம்பிரபை வீரமுடைய அந்தவாநரர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர்கள் வாநரர்களே! கனிகளை யுண்டதினால் உங்களுக்குப் பசிதணிந்திளைப்புத்தீர்ந்ததா? யான் வினவியதற்கு விடை யான் கேட்பதற்குரியதாயின், உரைசெய்க; கேட்டு மகிழ்வேன் என்று மீளவும் வினவினள். சிறியதிருவடி யவ்வாக்கியத்தைக் கேட்டு அவளை நோக்கி வஞ்சமின்றி யுண்மையாக முறையே மொழியலுற்றனர். கேளம்மா பெண்ணரசே! சகலலோகங்களுக்கும் அதிபதியும், மஹேந்திர வருணர்களுக்கு நிகரானவரும், தசரதசக்ரவர்த்தியின் திருமகனுமாகிய ஸ்ரீராமபத்திரர் இளையபெருமாளுடனும், சீதாதேவியென்னும் ஜனகசக்ரவர்த்தியின் திருமகளான பாரியையுடனும் கூடித் தந்தையின் சத்தியவாக்கியத்தை ரக்ஷிப்பதன் பொருட்டுத் தண்டகாரணியத்திற்கு எழுந்தருளினர். அந்தச் சீதாதேவியை இராவணன் கபடத்தினால் களவுசெய்து பறித்துக்கொண்டோடிவிட்டனன்; பின்பு, அவர் ரிசியமூகஞ்சென்று சுக்கிரீவரென்னும் மஹாராஜருடன் நட்புச் செய்துகொண்டு வாலியை வென்று

கிஷ்கிந்தாராஜியத்தை யவர்க்களித்தருளினர். மஹாராஜர் அந்த நன்றியி ஞலே எங்களை யந்தப்பிராட்டியார் எழுந்தருளியிருக்குமிடத்தைத் தேடி வருமாறு கட்டளை செய்தனர். அதனல் யாங்களெல்லோரும் இந்த யம திசையை நோக்கிப் புறப்பட்டுத் திரிகின்றனம்; அவ்வண்ணம் திரிந்து எங்கும் பிராட்டியைக்காணுமல் பசிதாகத்திஞல் இளைத்து வருந்தி மரத் தடியிலுட்கார்ந்தோம்; அங்கெல்லோரும் முகம் வாடிச் சிந்தைகொண்டு சோகசாகரத்தின் கரையைக்காணுமல் வருந்தி நாற்புறங்களிலும் பார்க்கை யில், இந்த பிலத்தைக்கண்டனம்; இந்த பிலம் மரஞ்செடி கொடிகளடர்ந்து இருள்மூடியிருந்தாலும் இதிலிருந்து ஹம்ஸஸாரஸாதிகளாயுள்ள நீர்ப்பற வைகள் நீரில்மூழ்கி யீரத்துடன் சிறகுகளை யுதறிக்கொண்டு புறப்பட்டன; யானதனைக்கண்டு இதனுள்ளே புகுந்து பார்ப்போம் இங்கே நீர் இருக்கு மென்று எல்லோரையும் பார்த்துரைத்தமையின், யாவரும் அதற்குடன் பட்டு இதனுள்ளே புகுந்தனர்கள். பின்பு, எல்லோரும் ராஜகாரியத்தில் துரையுடையோர்களாதலின், வழியில் நல்லிருள்மூடியிருக்கினும் அச்ச முருமல் ஒருவர்க்கொருவர் கட்டிக்கொண்டு இங்குவந்து கண்களைத்திற ந்து விநோதங்களைக்கண்டு மகிழ்ந்தனம்; இவ்வண்ணம் யாங்கள் பிராட்டி யைத்தேடுவதன்பொருட்டு முழுதுந்திரிந்து இங்கெய்தி யும்மையும் கண்டு மகிழ்வுகொண்டோம்; உம்மால் அதிதிபூஜையாக அளிக்கப்பட்ட காய் கனி கிழங்குகளைப் புசித்துப் பசிதீர்ந்து நன்னீரைப் பருகித் தாகமுந்தணிந்து உயிர்மாய்ந்திறக்குங்காலையிலே உம்மால் பாதுகாத்தளிக்கப்பட்டு மகிழ்ந் தோம்; நீர் செய்த இந்த மஹோபகாரத்திற்கு யாங்கள் யாது பிரதியுப காரஞ் செய்யக்கடவோம் உரைசெய்யக்கடவீர்; என்றிவ்வண்ணம் சிறிய திருவடி யுரைசெய்த வாக்கியங்களை யாவுமுணர்ந்த அந்த சுயம்பிரபை கேட்டு மகிழ்ந்து வாநரயூதபதிகளெல்லோரையும் நோக்கிக் கேளீர் வாநரசேனுதிபர்களே! நீங்களிங்கெய்தி என்னிடத்தில் அதிதிபூஜையைப் பெற்றுக்கொண்டதனுலேயே யான் மிகவும் ஆநந்தமுற்றேன்; தருமங் குன்ருமல் தவஞ்செய்கின்ற எனக்கு உங்களால் செய்யத்தக்க செயல் யாதுளது. ஒன்றுமில்லை; ஆதலின், நீங்களெல்லோரும் சுகமாகச்சென்று வாழ்க; என்று மொழிந்தனள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்திரண்டாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்துமூன்றுவது சருக்கம்.

வாநரர்களெல்லோரும் ருக்ஷபிலத்து நின்றும் புறத்தில் வந்து மஹாராஜர் கெடுவிட்ட காலங்கழிந்தும் பிராட்டியைக் காணுமல் போனதைக்குறித்து மிகச் சிந்தித்து வெறுப்புற்றிருந்தது.

இவ்வண்ணம் சுயம்பிரபை இனிமையாக மொழிந்த வாக்கியத்தைச் சிறியதிருவடி கேட்டு அவளை நோக்கிக் கேளம்மா உயோகினி! யாங்களெல்லோரும் உம்மையே சரணமாக அடைந்தோம்; மஹாராஜர் எங்களுக்குக் கொடுத்திருந்த கெடுவு இந்த பிலத்தில் புகுந்தலைந்ததினுல் கடந்துவிட்டது; மீளவும் இதினின்றும் புறத்திற் செல்லும் வழியையும் நன்கறிகின்றிலோம்; ஆதலின், நீர் அருள் செய்து இதினின்றும் எங்களைப் புறப்படுத்தக்கடவீர். மஹாராஜர் கட்டளையை மீறித் திரிந்து அச்சங்கொண்ட எங்களைப் பாதுகாத்தருள்க; எங்களால் மிகப் பெரிய காரியஞ் செய்யத்தக்கதுளது; ஆயினும், இதனுள் புகுந்து அதனையும் செய்து முடித்திலோம்; என்று வேண்டினர். அந்த ஸுயம்பிரபை யதுகேட்டு அவரை நோக்கிக் கேளீர் நல்லோரே! இதனுள்ளே புகுந்தவர் மீளவும் உயிருடன் புறத்திற் செல்லார்; ஆயினும், யான் செய்த தபோநியமபலத்தினுலே உங்களெல்லோரையும் புறத்திற் சேர்ப்பேன்; நீங்களெல்லோரும் கண்களை மூடிக்கொள்க; கண்களைத் திறந்துகொண்டிங்கிருந்து புறத்திற் செல்வதரிது; என்று மொழிதலும், வாநரர்களெல்லோரும் உடனே கண்களை மூடிக்கொண்டு கைகளினுலும் மறைத்துக்கொண்டனர்கள். அவ்வண்ணமே அவர்களை சுயம்பிரபை தன்னுடைய யோகமகிமையினுலே ஒரு நொடிப்பொழுதுக்குள்ளாகவே அந்த பிலத்து நின்றும் புறத்திற்சேர்த்து புறத்தில் வந்து திசை யறியாமல் மயங்கிய அந்த வாநரர்களை நோக்கிப் பாரீர்கள் யூதபர்களே! பற்பல மரஞ் செடி கொடிகளடர்ந்த இம்மலைதான் விந்தியம் என்னப்பட்டது; இங்கே காணப்படுகின்ற மலைதான் பிரஸ்ரவணமென்பது; எதிரில் காணப்படுகின்றதுதான் தக்ஷிண சமுத்திரம்; இனி நீங்கள் சுகமாகச் செல்லுக; யானிருப்பிடம்போய்ச் சேர்கின்றேன்; உங்களுக்கு நலமுண்டாகக்கடவது. என்றுரைசெய்து தேற்றி யந்த பிலத்தினுள்ளே புகுந்தனள். பின்பு, அந்த வாநரர்களும் அங்கிருந்தே அளவற்றுக் கரைகாணுமல் கோரமாக கர்ஜனைசெய்கின்ற தென்கடலைக்கண்டு திகைத்து நின்றனர்கள்; மயாஸுரன் மாயையினுலியற்றிய அந்த குகைக்குள்ளே இவர்களிருக்கையிலேதானே மஹாராஜர் கெடுவிட்ட அந்த ஒரு மாதமும் தீர்ந்துவிட்டது; ஆதலின், அவர்களெல்லோரும் அந்த விந்தியகிரியின் தென்புறத்தில் உட்கார்ந்து சிந்தையுற்று வருந்தினர்கள். அப்பொழுது வஸந்தகாலத்தில் மலர்கின்ற மரங்களெல்லாம் மலர்ந்திருந்தமையின்

அவர்களதனையுங்கண்டு வஸந்தகாலம் வந்ததென்றறிந்து காலங் கழிந்து விட்டதேயென்று அச்சமதிகரித்து அங்கிருந்து கீழே யிறங்கினர்கள். பின்பு, மூப்புடையவர்களும், சிறப்புடையோர்களும், நன்மதியினர்களு மாகிய வாநரயூதபதிகளெல்லோரையும் அங்கதகுமாரன் நோக்கி மொழிய லுற்றனன். கேளீர்கள் தோழர்களே! யாமெல்லோரும் மஹாராஜருடைய கட்டளையினாலன்றோ புறப்பட்டு வந்தோம்; யாம் பிலத்திலிருக்கையிலே தானே அவர் கொடுத்த கெடுவு சென்று விட்டதை யறிகின்றிலீர்களோ? யாம் ஐப்பசிமாசத்திலேயே பெருமாள் மஹாராஜருக்கிட்டிருந்த வருஷா காலம் நான்குமாதங்களும் கழிந்துவிட்டனவென்று அறிந்தவர்களல்லோ யோ? அதுமுதல் பிரயாண ஸந்நாஹஞ்செய்து புறப்பட்டோமே? பின்பு, மஹாராஜர் நமக்கிட்ட காலமும் கழிந்துவிட்டதே? இனி யாம் செயல் வேண்டும் காரியம் யாதுளது; நீங்கள் மஹாராஜரிடத்தில் மிகவும் நம்பிக்கை யுடையவர்களும், நீதிமார்க்கத்தை நன்குணர்ந்தவர்களும், பிரபுவின் இதச்செயலில் அபிநிவேச முடையவர்களும், எல்லாச்செயல் களிலும் திறமை யுடையவர்களும், எல்லாவிடங்களிலும் மேற்கொண்ட காரியங்களைச்செய்து முடிக்க வல்லவர்களென்று புகழுற்றவர்களுமாதலின், என்னை முன்னிட்டுக்கொண்டு மஹாராஜருடைய கட்டளையின்படி வந்தீர் கள்; ஆயினும், இப்போழ்து மஹாராஜருடைய கட்டளையை மீறினமையின், எல்லோரும் அவருடைய தண்டனைக்குள்பட்டு இறத்தல்வேண்டுமென்பதி லையமில்லை; மஹாராஜருடைய கட்டளையை மீறி எவன்தான் இன்புறுவான்; ஆதலின், காலம் சென்றுவிட்டமையின், நாமெல்லோரும் இங்கே பிரா யோபவேசஞ்செய்திறப்பதே நலமென்று தோற்றுகின்றது; மஹாராஜர் இயல்பாகவே கொடுமைகொண்டவர் இப்போழ்து இறையாகவுமாயினர்; ஆதலின், பிழைசெய்த நம்மைப் பொறுத்தருளார்; ஒருக்கால் ஸீதையின் செய்தியை யறிந்துகொண்டு சென்றாலும் பொறுப்பார்; இப்போழ்து காரியமின்றிச் செல்லின், பொறுப்பாரோ? ஆதலின், பிள்ளை, மனைவி, பொருள், வீடு முதலியவைகளைத்துறந்து இட்போழ்திங்கே பிராயோப வேசஞ்செய்வதே நலமாகும்; நாமிப்போழ்து மீண்டுச் செல்வோமாயின், மஹாராஜர் நம்மைத் தண்டனைக்குட்படுத்துவாரென்பதிலும் ஐயமுளதோ? அங்கே சென்றிறப்பதைவிட இங்கே இறப்பதே மேலாகும்; அன்றியிலே மஹாராஜர் என்மீது அன்புகூர்ந்திளவரசுப்பட்டங் கட்டிவித்திலர்; குற்ற மென்பதின்றி யருள்பெருகி வளர்ந்த பெருமாளே எனக்கு இளவரசுப் பட்ட மளித்தருளினர். முன்பு என் தந்தைமீதுள்ள பகையை என்மேலும் மிகக்கொண்ட மஹாராஜர் என்மீதிந்தப் பிழையை வியாஜங்கொண்டு என்னைக் கொலைசெய்து விடுவர்; நீங்கள் என்மேல் அன்புடையீர்களாயி னும் மஹாராஜர் என்னைத் தண்டனை செய்கையில், நீங்கள் துன்பங் கொண்டு தலைகுனிந்து துன்புறுவீர்களல்லது, வேறு யாதுசெய்ய வல்லீர் கள்; அவ்வண்ணம் உங்களைத் துன்புறுத்துவதினால் யாது பயன்; ஆதலின்,

தூய்மைகொண்ட இந்தத் தென்கடலின் கரையிலேதானே பிராயோபவேசஞ்செய்வேன் ; என்றிவ்வண்ணம் யுவராஜன் மொழிந்த வாக்கியத்தையவர்களெல்லோருங்கேட்டு தீனங்கொண்டு அங்கதனைநோக்கி, இளவரசே! நீர் உரைசெய்த துண்மையே ? மஹாராஜர் கொடுமை கொண்டவர் ; பெருமாள் மனையாள்மேல் மிக மோகமுற்றவர் ; ஆதலின், சீதாதேவியைக் காணுமல் நாம் அங்கே செல்வோமாயின், மஹாராஜர் பெருமாளுக்கு மகிழ்ச்சி செய்வதற்காக நம்மெல்லோரையுங் கொலைசெய்வார் ; ஆதலின், பிழைசெய்தபின்பு மஹாராஜர் அருகில் செல்வது தக்கதன்று ; ஆதலின், இவ்விடத்திலேதானே பிராட்டியாரைத் தேடிக் கண்டாவது ; அன்றியில், உண்மையாகச்செய்தி யறிந்தாவது செல்லலாகுமேயன்றி, இல்லாவிட்டால் இங்கேதானே பிராயோபவேசஞ்செயல்வேண்டும்; இப்படியே மஹாராஜரிடம் செல்வோமாயின், யமலோகம்போய்ச் சேர்வோமென்பதில் ஸந்தேகமில்லை ; என்றுரை செய்தனர்கள். இவ்வண்ணம் அச்சங்கொண்டு சிந்தையுற்றுரைசெய்த வாநரர்களின் வாக்கியத்தைத் தாரனென்பவன் கேட்டு அவர்களை நோக்கி, அன்பர்களே! நீங்கள் அச்சங்கொண்டு துன்புறற்க ; நீங்களெல்லோரும் உடன்படுவீர்களாயின், மீளவும் இக்குகையினுள்ளே சென்று வாழ்வோம் ; இந்த பிலம் மயாஸுரனால் மாயாபலத்தினலே இயற்றப்பட்டதாதலின், பிறர் புகற்கரியதும், பற்பல காய் கனிகளைத் தருகின்ற மரஞ் செடி கொடிகளை யுடையதும், நன்னீர் நல்லுண்டிகள் மிகுந்தது மாகின்றது ; இங்கு நாம் வாழ்வோமாயின், தேவேந்திரனுக்காவது, சக்கரவர்த்தித் திருமகனுருக்காவது, மஹாராஜருக்காவது அச்சமுறல்வேண்டுவதில்லை; என்று மொழிந்தனன். வாநரர்களெல்லாரும் அந்த அங்கதனுடைய வாக்கியத்தையும், தாரனுடைய வாக்கியத்தையுங் கேட்டு இதமென்றுணர்ந்து எல்லோரையும் நோக்கி, நேசர்களே ! எவ்வகையிலாயினும் யாம் எவ்வண்ணம் மஹாராஜரால் கொலைசெய்யப்படாமல் இன்புற்று வாழ்வோமோ? அவ்வண்ணம் ஆலசியஞ்செய்யாமல் உடனே செய்துகொளல் வேண்டுமென்றும் ஓரே மொழியாக மொழிந்தனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்து மூன்றாவது சருக்கம் முற்றிற்று.

விந்தியமலை கிஷ்கிந்தைக்கு வடக்கே யிருக்கின்றமையின், தென்றிசையில் தேடப்போனவர்கள் வடக்கே ஏன் சென்றனர்கள் ; செல்லினும் மீளவும் கிஷ்கிந்தையை தாண்டிச் செல்லுகையில், அங்குள்ளோர்களால் காணப்பட்டிலார்களா? என்று சிலர் ஆக்ஷேபஞ் செய்வார்கள் ; முன்பே சராவதியென்னும் நதியை நடுவாக வைத்துக்கொண்டு அங்கிருந்து கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு என்று திசைகளை யவரவர்களுக்கு மஹாராஜர் வகுத்தளித்தனரென்பதைக்குறித்துக் காட்டி யிருக்கின்றமையினுல், அந்தச் சராவதி முதல்கொண்டு இவர்கள் தேடவேண்டிய பாக

ஐம்பத்துநான்காவது சருக்கம்.

சிறியதிருவடி அங்கதனுக் கிதங்கூறல்.

இவ்வண்ணம் முழுமதிபோன்ற காந்தியுடைய தாரன் முதலிய யூதபதிகள் மொழிந்த வாக்கியத்தைச் சிறியதிருவடி கேட்டு அங்கதனுக்கு இளவரசுப்பட்டத்தை யாளுவதற்குரிய திறமையையும், ஒருவர் மொழிவதை விரைவிலறிந்து கொளல், அதனை மறவாமை, நினைவுடைமை, அதனைப் பிறர்க்குரைக்குந்திறமை, கற்பனை செயல், ஒருவர் கூறிய வாதத்திற்குத் தக்க பதில் கூறி யதனை நிராகரித்தல், ஒருவர் கூறிய வாக்கியத்தில் பொருளுணர்தல், உண்மையை யாராய்ந்தறிதல், (கிரஹணம், தாரணம், ஸ்மரணம், பிரதிபாதனம், ஊஹம், அபோஹம், அர்த்த விஜ்ஞாநம், தத்வஜ்ஞாநம்,) என்னும் புத்திகுணங்களெட்டும்; பாகுபலம், மநோபலம், உபாயபலம், பந்துபலம், என்னும் நான்கு பலங்களும் காலதேசங்களை யறிதல்; மனவுறுதி, எல்லாத்துன்பங்களையும் பொறுத்தல், எல்லாவற்றையும் அறிதல், திறமை, தோள்வலி, இரஹஸியத்தைப் புறப்படுத்தாமை, முன்னடந்ததை யொத்து நடத்தல், உற்சாஹமுடைமை, திறமை யறிதல், நன்றி யறிதல், தஞ்சமடைந்தவர்மேல் அருளுடைமை, பகைவர்மேல் பொறுமையுடைமை, சபலமுறுமை என்னும் பதினான்கு குணங்களும் நிறைந்து தேஜோபல பராக்ரமங்களாலே சுக்லபக்ஷத்தில் மூன்றாவது பிறைச் சந்திரன்போல் மேன்மேலும்வளர்கின்ற தன்மைபொருந்திப் புத்தியில் தேவகுருவையும், பராக்கிரமத்தில் தந்தையையும் நிகர்த்துத் திகழுந் தன்மையுடையவனென்று உணர்ந்து அவன் யாவுமறிந்தவனாயினும், தாரன் வாக்கியத்தைக்கேட்டு மகாராஜர்மேல் சந்தேகங்கொண்டு வருந்தி மயங்குவதையும் கண்டு அவனைத் தேற்றி யுடன்படுத்த முயன்று ஸாமம், தானம், பேதம், தண்டம் என்னும் நான்குபாயங்களுள் மூன்றாவதான பேதோ

மாதலின், அதற்குத் தெற்கான விந்திய மலையையும் இவர்கள் தேடவேண்டுவது இயல்பேயன்றோ? முன்பு எங்குங் காடாகவே யிருந்தமையின், இவர்கள் மீண்டு வருகையில், அந்தக் கிஷ்கிந்தைக்கு மேற்காகவாவது, கிழக்காகவாவது வந்திருக்கின் அங்குள்ளோர்களுக்கு இவர்கள் எவ்வண்ணந் தென்படக்கூடும்; அன்றியிலே, ஸேது கட்டுவதற்கு முன்பு அந்த விந்தியமலையின் சிறுகுன்றுகள் தென்கடல் சமீபம் வரையிலுளவெனவும், அவற்றிற்கும் விந்தியமென்றே பெயருளதெனவும் உடன்படல் வேண்டும்; ஆகையாலேதான் அந்த விந்தியமலையினின்றும் வாநரர்கள் தென்கடலைக் கண்டனர்களென்று கூறப்பட்டுளதும், ஸம்பாதியை இவர்கள் விந்தியமலையும் அருகிலுள்ள தென்கடலுக்கு எடுத்துக்கொண்டு போயினர்களென்று கூறப்படுமதுவும் பொருந்துகின்றன; அன்றியில், தென்கடலருகிலுள்ள மலயம் என்னும் மலைக்கும் விந்தியமென்றும் பெயருளதாக உடன்படல்வேண்டும்; இப்படியானல் ஒரு விரோதமுமிலதென்று அதிகமஹாவீர சரித்திரத்தில் பவபூதி யுரைத்திருக்கின்றனர்.

பாயத்தை யெடுத்துரைத்து வாநரர்களெல்லோரையும் பிராயோபவேசஞ் செயல்வேண்டுமென்னும் ஒருமைப்பட்ட மதத்தை விட்டு வெவ்வேறு மதமுறுமாறு செய்து அங்கதனையும் நோக்கி, அச்சமுறுமாறு மொழிய லுற்றனர்.

கேளாய் இளவரசே! நீ மிகவும் திறமைகொண்டு பல விதத்திலும் உன் தந்தைக்கு நிகராகியவனாதலின், தந்தையினால் பாதுகாக்கப்பட்ட இந்தக் கபிராஜியத்தைப் பாதுகாக்க வல்லவனாகுகின்றனை; கபிகள் இயல் பாகவே நிலையற்ற புத்தி யுடையவர்கள்; அன்றியிலே, இப்போழ்து மனைவி மக்கள் முதலோரைப் பிரிந்து திரிந்து வருந்தி யிருக்கின்றமையின், உனது கட்டளையின்படி பொறுமைகொண்டு நடவார்கள்; ஆதலின், இந்த ஜாம்ப வான், நீலன், ஸுஹோத்திரன், கடையில் யான், இவ்வெல்லோரும் சாமதானாதிகுணங்களினாலே யுன்மதப்படி யொருக்காலையிலும் நடவோம்; எல்லோர்க்கும் எதிராகவே இவ்வண்ணமுரைசெய்கின்றேன்; ராஜநீதி யுணர்ந்தோரும், பலமுடையோன் பலமிலாதானுடன் பகைத்திருப்பது நலந்தருவதெனக் கூறினர்களே யன்றிப் பலமற்றவன் பலமுடையோ னுடன் பகைத்திருப்பதைப் புகழ்கின்றிலர்; ஆதலின், பலமிலாதான் நன்மை பெறல்வேண்டுமாயின், பலவானுடன் பகையுறக்கடவனல்லன்; இப்போழ்து மஹாராஜர் வாநரர்களெல்லோர்க்கும் இறையும், பெருமா ளுக்குத் தோழருமாதலின், பலவானாகின்றனர்; நீ பலமிலாதானாகின்றனை; ஆதலின், நீ மஹாராஜருடன் பகைகொண்டிவ்வண்ணமுரைப்பது தகுதி யற்றது; நீ இந்த பிலத்தை நல்லரணாக நினைக்கின்றனைபோலும், இதனை யழிப்பது இளையபெருமாளுடைய கணைக்கொரு பெரிதன்று; முன்பிந் திரன் வச்சிராயுதத்தினாலடித்திந்த பிலத்திற்கு துவாரம் மாத்திரஞ் செய் தனன். இளையபெருமாளிதனைக் கூரிய கணைகளினால் உலர்ந்த இலையைப் போலச் சிதறுற வடித்தருளுவர்; இளையபெருமாளிடத்திலிவ்வண்ணந் திறமைகொண்டு மாமலைகளையும் பிளக்கவல்ல கணைகள் வெகுவாகவுள; நீ யூரைத்துறந்திங்கிருக்கவேண்டுமென்று எப்போழ்து கருதுகின்றனை யோ? அப்போழ்தே இவ்வாநரர்களெல்லோரும் உன்னைத்துறந்து திரும் பிச்செல்வதுண்மை; புத்திரமித்திரகளத்திரங்களையுந்துறந்து காடுகளி லலைந்து வருந்திப் பசிமூண்டு சிந்தைகொண்ட இவர்கள் உன்னைத்துறந்து மீண்டுச் செல்வர்களென்பதிலும் ஐயமுளதோ? இவ்வண்ணம் இனத்தார் சுற்றத்தார் முதலிய எல்லோர்களாலுந் துறக்கப்பட்டுத் தனியே நிற்பா யாகில், புல்லசையினும் அதனைக்கண்டு பகைவரோ வருகின்றனர்களோ வென்று அச்சமுற்று வருந்துவாய்; நீ இவ்வண்ணம் ஸ்வாமிகாரியத்தி லூக்கமற்றுப் பகைத்துத் தனியே நிற்கின், இளையபெருமாளுடைய கணைகள் உன்மேல் பாய்ந்து வருத்துமென்பதில் சந்தேகமில்லை; இவ்வ ண்ணமன்றியிலே விநயம்பூண்டு எங்களுடன் சேர்ந்து வருவாயாகில், நாம்

பட்ட பாடுகளை மஹாராஜர் முறையே கேட்டுச் சரிதானென்றுடன்பட்டுன் மேல் பகையின்றி யுன்னையும் ராஜியத்திலே நிலைக்கச்செய்வர்; மஹாராஜர் உனக்கு சிற்றப்பனும், கருமபுத்தியுடையோரும், உன்மீதன்புடையோரும், ஸத்தியம் தவறாதாரும், தூய்மையுடையோரும், கசடற்றவருமாதலின், உன்னை யொருக்காலும் கொலைசெய்யத் துணிவுகொள்ளார்; உன் தாயார் மீது மிகவும் பிரியமுடையோராதலினாலும், அவர்க்கு நீயன்றி வேறே புத்திரனில்லாமையாலும், அவர் உனக்கொருதீங்கும் செய்யார்; ஆதலின், மீண்டெய்துக; என்று சிறியதிருவடி யங்கதகுமாரனுக்கிதங்கூறியருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்து நான்காவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்தைந்தாவது சருக்கம்.

வாநரர்களெல்லோரும் தமக்குக்குறித்த காலம் தீர்ந்துவிட்டதன்மேல் அச்சங்கொண்டு பிராயோபவேசஞ் செய்தது.

இவ்வண்ணம் சிறியதிருவடி இதமாகவும், தருமமாகவும், மதுரமாகவும் உரைசெய்த வாக்கியத்தை யங்கதகுமாரன் கேட்டு மாருதியை நோக்கிக் கேளீர் ஆஞ்சநேயரே! கலக்குறு புத்தியும், ஆத்தும சுத்தியும், மனச்சுத்தியும், துன்புறுத்தாமையும், கசடின்மையும், பராக்ரமமும், தீரமும், என் சிற்றப்பனிடத்தில் தோற்றுகின்றில; அவன் தமையனாகிய என் தந்தை பிழைத்திருக்கையிலேதானே அவருக்குப் பிரியமுள்ள பாரியையும், தமக்குத் தருமத்தினால் மாதாவுமாகிய என் மாதாவைச் சேர்ந்தனனல்லனோ? அன்றியிலே, என் தந்தை யுத்தஞ்செய்வதன்பொருட்டுக் குகையினுள்ளேசென்றிருக்கையில், அக்குகையின் வாயைக் கல்லினாலடைத்துவிட்டு வந்தனனல்லனோ? அத்தன்மையனாகிய அவன் தருமத்தையெவ்வண்ணமறிவான்; அன்றியிலே, பெருமாளுடன் அக்கினிஸாக்ஷியாகத் தோழமை செய்துகொண்டு அவரால் பேருதவியையும் பெற்று அந்நன்றியை மறந்து மயங்கிக்கிடந்தனனே? பின்பு, இளையபெருமாளுடைய சீற்றத்திற்கச்சமுற்றேயன்றோ? பிராட்டியாரைத் தேடும்படி வாநரர்களுக்குக் கட்டளையிட்டனன். இத்தன்மையனான என் சிற்றப்பனிடத்தில் தருமமெவ்வண்ணமுளதாகும்; அவ்வண்ணம் பாவியும், நன்றியற்றவனும், உணர்வற்றவனும், சபலமுடையோனுமாகிய மஹாராஜனிடத்தில் உயிர் வாழ்ந்துய்ய விருப்புற்ற எவன்தான் விசுவாஸமுறுவான்; உலகினில் அரசர்கள் தமக்கு ஔரஸனான மகன் நற்குணமுடையோனாயினும்,

அல்லோனாயினும், அவனுக்கேபட்டங்கட்டுவிப்பார்களேயன்றிப் பகையின் மகனுக்குக் கட்டுவிப்பார்களோ? யான் அவனுக்குப் பகையான வாலியின் புத்திரனும், பகைத்து வேறுபட்டிருப்பவனும், கட்டளையைமீறி யபராதஞ் செய்தவனும், அவனிலும் குறைந்த சத்தியுடையோனும், பலமற்றவனு மாதலின், மீண்டுக் கிஷ்கிந்தைக்குச்சென்றெவ்வண்ணமுயிர்வாழ்வேன்; அவன் கொடியவனும், தீயோனும், தீமைசெய்பவனுமாதலின், யான் அங்கே சென்றவுடனே கபடஞ்செய்து என்னைப்பற்றி விலங்குபோட்டுக் காவலிலிடுவான்; ஆதலின், யானங்கே சென்று இவ்வண்ணந் தீமையுறு வதை விட இங்கேதானே ப்ராயோபவேசஞ்செய்திறப்பது நன்று; ஆதலின், நீவிரெல்லீரும் இவ்வண்ணமெனக்கனுமதி செய்தருளி மீண்டு தத்தமிருப்பிடம்போய்ச் சேர்ந்து வாழ்க; யானிங்கேதானே ப்ராயோப வேசஞ்செய்திறந்துவிடுவேனே யன்றி, மீண்டெய்தேனென்று பிரதிஜ்ஞை செய்கின்றேன்; மிகவும் பலவான்களான ஸ்ரீராமலக்ஷ்மணர்களையும், என் சிற்றப்பனையும் கண்டு யான் வந்தன பூர்வமாகக் குசல முரைசெய்தே னென்று மொழிக; அவ்வண்ணமே ருமையையும், தாரையையும் கண்டு செய்தி யுரைத்துத் தேற்றுக; என் தாய் என்மீது மிகவும் அன்புடையவ ளாதலின், யானிவ்வண்ணமிங்கே இறந்துவிட்டேனென்பதைக் கேட்பா ளாயின், உடனே சோகத்தினாலுயிரை விட்டுவிடுவளென்பதிலையமில்லை; என்று மொழிந்தனன். உடனே யெழுந்து தருப்பங்கொணர்ந்து பரப்பி ஜாம்பவான் முதலிய பெரியோர்களைப்பணிந்து அழுதுகொண்டே யந்தப் புல்லணையில் ப்ராயோபவேசஞ்செய்து இனி இவ்வண்ணம் காலங்கடந்தும் பிராட்டியைக்காணமல் மீளுவதில்லையென்றுறுதிகொண்டனன். இவ்வண் ணம் அங்கதன் ப்ராயோபவேசஞ்செய்துவிட்டதை வாநரர்களெல்லோருங் கண்டு கண்ணீர் பெருக்கித் துன்புற்றுச் சுக்கிரீவனை நிந்தனை செய்து கொண்டும், வாலியைப் புகழ்ந்துகொண்டும், அங்கதகுமாரனைச் சூழ்ந்து ப்ராயோபவேசந் தாமுஞ் செய்யத் துணிந்து யுவராஜாவினுடைய கருத் தையும் உண்மையாக அறிந்து கால் கைகளை யலம்பி யாசமனஞ்செய்து ஸங்கல்பித்துக்கொண்டு கிழக்கு முகமாக தெற்கு நுனியான தருப்பங் களின்மேல் படுத்து இறப்பதற்குத் துணிந்து பெருமாள் வனவாஸமெழுந் தருளியதையும், தசரதசக்கரவர்த்தி வானேறியதையும், ஜனஸ்தானத்தில் கரதூஷணாதியரிறந்ததையும், ஜடாயு பெருவிசும்பு பெற்றதையும், இராவ ணன் பிராட்டியாரைப் பறித்தோடியதையும், தனிவீரனான வாலி யிறந்து விட்டதையும், பெருமாள் மஹாராஜர்மேல் சீற்றங்கொண்டதையும்,

முறையே முறையிட்டுக்கொண்டு புலம்பினர்கள். இவ்வண்ணம் இவர்களினுடைய அழுகுரலினாலே மேககர்ஜனையினாலே போல அம்மலையெங்கு மொலிக்கப்பட்டு ஸம்பாதியைப் புறத்தில் வருமாறு செய்தமையின், அவர்களுக்கு மஹாபயத்தை விளைப்பதாயிற்று ; *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தைந்தாவது சருக்கம் முற்றிற்று.

ஐம்பத்தாறுவது சருக்கம்.

ப்ராயோபவேசஞ்செய்த வானரர்கள் ஸம்பாதியைக்கண்டு ஸம்பாஷணஞ் செய்தது.

இவ்வண்ணம் அங்கதன் முதலிய வானரர்களெல்லோரும் எவ்விடத்தில் ப்ராயோபவேசஞ்செய்திருக்கின்றனர்களோ? அவ்விடத்திற்கே கழுகுகளுக்கிறையும், ஜடாயுவுக்கு மூத்தோனும், சிரஞ்சீவியுமாகிய ஸம்பாதியென்னும் கழுகு சிறந்த பல பராக்கிரமமுடையோனாதலின், அச்சமின்றி அந்த மலையின் குகையினின்றும் புறப்பட்டு அவ்வானரர்களைக் கண்டு மகிழ்ந்து இவ்வண்ணம் மொழியலுற்றது ;—

విధిఃకిలనరంలోకే విధానేనానువర్తతే
యథాయంవిహితోభక్ష్యశ్చిరాన్మహ్యముపాగతః.

விதிஃகிலநரம்லோகே விதாநேநாநுவர்ததே
யதாயம்விஹிதோபக்ஷ்யச் சிரான்மஹ்யமுபாகதஃ.

அந்தோ ? தெய்வமானது தகுதியான ஸம்விதானத்துடன் கூடியே அவனவனை யனுசரித்து வருகின்றது ; அவனவன் வேறே உபாயம் தேடவேண்டுவதில்லை ; நெடுங்காலமாகப் பசியுற்ற எனக்கிவர்களைத் தெய்வமே உணவாகக்கொணர்ந்தளித்ததன்றோ ? ஆதலின், ப்ராயோபவேசஞ்செய்திருக்கின்ற இவ்வானரர்களுள் முறையே இறப்பவர்களைப் புசித்துப் பசி தணிந்து மகிழ்வேன்; என்றிவ்வண்ணம் ப்ராயோபவேசஞ்செய்த தம்மைப்

---

* வானரஜாதியில் ஸோதரர்களுள் யாவன் இறந்துவிடுகின்றனனோ ? அவன் மனைவியை யிருப்பவன் பாரியையாக வைத்துக்கொள்வது ஜாதிதருமமென்று காணப்படுகின்றது ; ஆகையாலேதான் பெருமாள் ருமையுடன் புணர்ந்ததற்கு வாலியைப் பழித்தருளினர். தாரையுடன் புணர்ந்த மஹாராஜனைப் பழித்திலர்; இக்கருத்து இந்த சருக்கத்திலும் அங்கதன் வாக்கியத்தாலும் விளங்கும் ;—

பார்த்து அந்த ஸம்பாதி மொழிந்த மொழியை யங்கதகுமாரன் கேட்டு மிகவும் ஆயாஸமுற்றுச் சிறியதிருவடியை நோக்கிப் பாரீர் மாருதியே! ஸீதை யென்னும் வியாஜத்தினாலே யமதர்மமஹாராஜனே நம்மெல்லோரை யுங் கொலைசெய்வதற்காக விவ்விட மெய்தினன். பெருமாளுடைய காரியத்தையும் செய்தோமல்லோம, மஹாராஜருடைய கட்டளையின்படியும் நடந்தோமல்லோம், இவ்வண்ணம் நம்மெல்லோர்க்கும் தற்செயலாகவே இங்கு நேர்ந்ததன்றோ? பிராட்டியைப் பாதுகாத்தளிப்பதன்பொருட்டுக் கழுகுகளுக்கிறையான ஜடாயுவும் இராவணனுடன் போர்செய்து அவனால் வாளாலறுக்கப்பட்டிறந்தனனென்பதை நீங்கள் கேட்டிலீர்களோ? அவ்வண்ணம் எல்லாவுயிர்களும் விவேகமற்ற ஜாதியாகிய பசு பக்ஷி முதலியவைகளும், அகில புவனாதாரனாகிய ஸ்ரீராமசந்திரன் பொருட்டு உயிரை யிழந்தும் நாம்போலவே உதவி செய்கின்றன; நட்பும் தயையுமுடையவர்கள் பெருமாள்பொருட்டிவ்வகையாகத் தனித்தனி யுபகாரஞ்செய்கின்றனர்கள். ஆதலின், நீங்களும் அவ்வண்ணமே யுபகாரஞ் செய்வதற்காக வுயிரை விடுக; ஜடாயு தருமமுணர்ந்தவராதலின், பெருமாளுக்குப் பிரியஞ்செய்து உயிரையும் விட்டு நல்வீடுபெற்று மகிழ்ந்தனன். நாம் பெருமாள் பொருட்டுயிரைவிடத்துணிந்தும், அவ்வுயிர் மாயுமுபாயம் விரைவாக நேர்ந்திலதாதலின், இவ்வண்ணம் காடுகளில் திரிந்தலைந்து தேடி வருந்தியும் பிராட்டியைக் காணாமலும், உயிர் மாயாமலும் வருந்துகின்றோம்; அந்த ஜடாயு இராவணனாலடிபட்டு நற்கதியுற்று மகிழ்ந்தனன்; நம்மைப்போல மஹாராஜர்க்கிவ்வண்ணமச்சமுற்றுச் சிந்தைகொள்ள விரகின்மையினால் நல்வினையினராயினர். முதலில் தசரதசக்கரவர்த்தி யிறந்தமையின், ஜடாயு இறக்கும்படி நேர்ந்தது; ஜடாயு இறந்தமையின், இராவணன் பிராட்டியைப் பறித்துக்கொண்டு தடையின்றி யோடிவிடும்படி நேர்ந்தது; அவன் ஓடிவிட்டமையின், நாமெல்லோரும் இவ்வண்ணமலைந்து உயிரை மாய்க்குங்காலம் நேர்ந்தது; முதலில் தசரதமஹாராஜரோ இறந்திலராயின், பெருமாள் தண்டகாரணியம் புகுமாறு நேராது; அதனால் நமக்கித்துயரமும் நேராது; என்றிவ்வகையாகப் பெருமாளிளையபெருமாளிருவரும் திருவரணியத்தில் வாஸஞ்செய்ததையும், இராவணன் ஸீதாதேவியைப் பறித்ததையும், ஜடாயு அவனுடன் போர்செய்திறந்ததையும், பெருமாள் மஹாராஜருடன் தோழமைகொண்டு வாலியைக் கொலை செய்ததையும், இடையில் கரதூஷணாதி ஸம்ஹாரத்தையும், இதற்கெல்லாம் கைகேயியின் வரமே மூலமாயிற்றென்பதையும், முறையே யுரைசெய்து வருந்தினன். இவ்வண்ணம் வாநரர்களெல்லோரும் ப்ராயோபவேசஞ்செய்துபடுத்திருப்பதைப் பார்த்தும், அங்கதகுமாரன் புலம்பலைக்கேட்டும், கழுகுகளுக்கிறையான ஸம்பாதி மனங்குன்றி வருந்தி யவர்களை நோக்கிக் கூவி மொழியலுற்றனர். யாரடா அவன் என்னுயிரிலும் இனியனான ஜடாயுவின் மேல் கொடுமொழி மொழிகின்றவன்; அதனால் என் மனம் நடுங்கு

கின்றது ; ஜனஸ்தானத்தில் என் தம்பிக்கும், இராவணனுக்கும், எவ்வண்ணம் போர் நேர்ந்தது ; அன்புள்ள ஸோதரனுடைய ஜடாயுவென்னும் பெயர் நெடுங்காலத்திற்கு இப்போதுதான் கேழ்க்கப்பட்டது ; புகற்கரிய இம்மலையினின்றும் இறங்க விரும்புகின்றேன் ; ஆதலின், நீவிரெல்லீரும் என்னைப்பற்றி யிறக்கக்கடவீர்கள். மிகவும் தோள்வலியினால் புகழப்பட்ட என் தம்பியின் பெயரை யுரைத்தமையின், உங்களிடத்தில் மிகவும் மகிழ்வுளனாகின்றேன் ; வாரீர் வானரவீரர்களே ! என் தம்பி ஜனஸ்தானத்தில் வாழ்கின்றனனே அவன் இராவணனுடன் போர்செய்து ஏன் இறந்தனன்; இவன் தசரதசக்கரவர்த்திக்கு எவ்வண்ணந் தோழனாயினன் ; ஸ்ரீராமசந்திரன் அந்தத் தசரதமஹாராஜர்க்கு இனிய திருக்குமாரரல்லரோ ? இதுகளைக் கேட்டுணர விரும்புகின்றேனாதலால், குறையற மொழிக ; யான் கதிரவனுடைய கொடிய கிரணங்களினாலெரிக்கப்பட்ட சிறகுடையேனாதலால், இறங்கிவரத் திறமைகொள்ளுகின்றிலேன் ; ஆதலினால், என்னையும் இறக்கிவிடக் கடவீர்கள் ; என்று ஸம்பாதி மொழிந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தாறுவது சருக்கம்
முற்றிற்று.

ஐம்பத்தேழாவது சருக்கம்.

வானரர்களெல்லோரும் ஸம்பாதியின் வினவுக்கு விடை கூறியது.

இவ்வண்ணம் ஸம்பாதி சோகத்தினால் தீனமாக மொழியினும் அவ்வாக்கியத்தை யந்த வானரர்களெல்லோரும் கேட்டும் முதலில் இறந்தவர்களைப் புசிப்பேனென்றுரைத்தமையின், அவ்வாக்கியத்தை நம்பாமல் இப்பறவை இவ்வண்ணம் அன்பன்போல நம்மருகில் வந்தெல்லோரையும் புசித்துவிடுமென்றே எண்ணங்கொண்டும், நாம் எவ்விதத்திலும் ப்ராயோபவேசமே செய்துவிட்டமையின், இது புசிக்கின் வருத்தமின்றியே யிறந்து மகிழ்வோமென்று மனந்துணிந்து படுத்திருந்தனர்கள். பின்பு, அங்கதகுமாரனெழுந்து இது யாதுசெயினுஞ் செய்கவென்று உறுதிகொண்டு அப்பறவையை மலையினின்றும் கீழேயிறக்கி யதனை நோக்கி மொழியலுற்றனன். கேளாய் புள்ளிறையே ! ரிக்ஷரஜஸ என்னும் வானரராஜன் மிகவும் வீரமுடையனாகி யிருந்தனன். அவனுக்கு வாலி, சுக்ரீவன் என்னும் இரண்டு புத்திரர்கள் ; அவர்களுள் வாலி யென்பவர் மஹாபலபராக்கிரமமுடையராகிக் கிஷ்கிந்தாராஜ்யத்தைப் பாதுகாத்து வந்தனர். பின்பு, தசரதசக்கரவர்த்தியின் திருமகனாராகிய ஸ்ரீராமசந்திரன் இளையபெருமாளுடனும், பிராட்டியாருடனும், தந்தையின் வாக்கியத்தைப் பாது

காப்பதன்பொருட்டுத் தண்டகாரண்யத்துக்கெழுந்தருளினர். அத்தருண த்தில் இராவணனென்னும் அரக்கர்கோமான் அவ்விருவர்களையும் மோசஞ் செய்து பிராட்டியாரைப் பறித்தோடினன். அந்தத் தசரதமஹாராஜர்க்குத் தோழராகிய ஜடாயுவென்னும் பக்ஷிராஜன் அதனைக்கண்டு இராவணனை யெதிர்த்துப் போர்செய்து அவனுடைய தேரையும் முறித்துப் பிராட்டியைக் கீழே விடும்படி செய்து நெடுநேரம் போர்ந்து யிளைப்புற்றனர். இவ்வண்ணம் அவர் மூப்பினாலும், நெடுநேரம் போர்ந்ததினாலும் வருந்தி யிருக்கையில், அந்தக் கொடிய இராவணன் அவரை வாளாலறுத்து வெற்றிகொண்டு மீளவும் பிராட்டியைத் தேர்மேலேற்றிக்கொண்டு ஓடிவிட்டனன். பின்பு, பெருமாள் பிராட்டியைக்காணுமல் இளையபெருமாளுடன் தேடிக்கொண்டு வருகையில், ஜடாயு அவர்க்குச் செய்தி யுரைத்து யிறந்தனர். பின்பு, பெருமாள் அவர்மேலருள்கொண்டு அவருக்கு தஹன ஸம்ஸ்காரம் செய்து நற்பேறு தந்தருளுதலும், உடனே யவர் வானேறி மகிழ்ந்தனர். அநந்தரம் பெருமாள் இளையபெருமாளுடன் மீளவும் தேடிக்கொண்டு வருகையில், என் தந்தையுடன் பகைகொண்டு மந்திரிகளுடன் ரிசியமூகமலையில் வாழ்ந்துகொண்டிருந்த என் சிற்றப்பனுகிய சுக்ரீவனைக் கண்டு அவனுடன் தோழமை செய்துகொண்டு என் தந்தையைக் கொலை செய்து சிற்றப்பனுக்கு முடி சூட்டிவித்தருளினர். வானரர்களெல்லோர்க்கும் அதிபதியாகிய அந்த ஸுக்ரீவன் அந்த நன்றிக்காகப் பிராட்டியைத் தேடி யளிப்பதாக உறுதிகூறி எம்மெல்லோரையும் அழைப்பித்துப் பிராட்டியாரைத் தேடி வரும்படி நாற்றிசைகளிலும் அனுப்பினர். இவ்வண்ணம் யாங்கள் பெருமாளாலேவப்பட்டுடனே புறப்பட்டு ஓரிடமும் விடாமல் தேடியும் இரவில் கதிரவனொளியைக் காண்பதரிதுபோலப் பிராட்டியைக் காண்கின்றிலோம்; இங்கு மயனுலியற்றப்பட்ட ரிக்ஷபிலத்துக்குள் புகுந்து அலைந்தமையின், மஹாராஜர் எங்களுக்கிட்ட கெடுவு ஒரு மாதமும் தீர்ந்துவிட்டது; அதனுல் மஹாராஜர்க்கு அஞ்சி ப்ராயோபவேசஞ் செய்யத் துணிந்திருக்கின்றனம்; யாங்கள் பிராட்டியையும் காணுமல் காலமுங் கடந்து சென்றபின்பு, மகாராஜரும் பெருமாளும் சீற்றங்கொளின் யாங்கள் உயிர் வாழ்வுற்று மகிழ்வது அரிதன்றோ? ஆதலின், அங்குச்சென்று இகழ்வுற்றிறப்பதை விட இவ்விடத்திலேதானே ப்ராயோபவேசஞ்செய்திறப்பது நலமென்று கருதி இவ்வண்ணம் ப்ராயோபவேசஞ்செய்திருக்கின்றனம்; என்று அங்கதகுமாரன் ஸம்பாதியை நோக்கி மொழிந்தனன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தேழாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தெட்டாவது சருக்கம்.

ஸம்பாதி வாநரர்களுக்குப் பிராட்டி யிலங்கையி லிருக்கின்றனளென வுரைசெய்தது.

இவ்வண்ணம் வாநரர்கள் உயிரை விடுவதிலுந் துணிவுகொண்டு தீனமாக மொழிந்த வாக்கியத்தை ஸம்பாதி செவியுற்றுக் கண்ணீர்பெருக்கி யவர்களை நோக்கிக் கேளீர் வாநர வீரர்களே! எவனைக் கொடிய இராவணனால் கொலைசெய்யப்பட்டனனென மொழிகின்றீர்களோ? அந்த ஜடாயு எனக்கிளையோனாகின்றனன்; ஆதலின், அவனைக் கொலைசெய்த ராவணன்மேல் மிகவும் பகைகொள்ளுகின்றேன்; ஆயினும், மூப்புற்றும், சிறகுகள் எரிந்தும் இருக்கின்றேனாதலின், அந்தப் பகையைத் தீர்த்துக்கொள்ள வல்லமை கொள்ளுகின்றிலேன்; முன்பு மகேந்திரன் விருத்திராஸுரனைக் கொலைசெய்த காலத்தில் யானும் ஜடாயுவும் யௌவநமுடையவர்களாயினோம்; அப்போழ்து யாங்களிருவரும் உயரப்பறப்பதில் யார் சிறந்தவர் என்பதை யறிவதன்பொருட்டு ஒருவர்க்கொருவர் வாது கூறிக்கொண்டு வெகு வேகமாகப் பறந்து ஸூரியமண்டலத்தருகில் சென்றோம்; அத்தருணத்தில் நடுப்பகலாயினமையின், ஜடாயு ஸூரியனுடைய வெப்பத்தை ஸஹிக்கமாட்டாமல் மிக வருந்தினன்; யானது கண்டு அன்பினால் அவனைச் சிறகுகளினால் மறைத்துக்கொண்டேன்; ஆதலின், யான் கதிரவனொளியினாலெரிக்கப்பட்டு விந்தியமலைமேல் வீழ்ந்தேன்; அதுமுதல் யானிவ்விடத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றேன்; பின்பு, ஜடாயுவின் செய்தியை யறிந்திலேன்; என்று மொழிந்தனன். யுவராஜனதுகேட்டு நுண்ணறிவினனாதலின், மீளவும் அவரை நோக்கிக் கேளீர் ஸம்பாதி! நீர் ஜடாயுவுக்கு மூத்தோனென்பது உண்மையாயின், யானுரைத்த வாக்கியத்தைக் கேட்டபின்பு, அந்த இராவணன்மேல் கடுஞ்சினம் தோன்றியிருத்தல் வேண்டுமன்றோ? அவனைக் கொலைசெய்யுந்திறமையிலதாயினும் அவ்வாழ்விடத்தை யுணர்வீராயின் மொழிக; நன்காராயுந் தன்மையின்றி இவ்வண்ணம் நம்மெல்லோரையும் பகைத்த அந்த ராவணன் அருகிலிருக்கின்றனனோ? நெடுந்தூரத்திலிருக்கின்றனனோ? என்று வினவினன். ஸம்பாதி யதுகேட்டு வாநரர்களெல்லோரையும் நோக்கிக் கேளீர் வாநர யூதபர்களே! யான் எரிந்த சிறகுடையோனும், மூப்பினனுமாதலின், யாது செய்வதற்குந் திறமை கொள்ளுகின்றிலேன்; ஆயினும், வாயினாலாயினும் பெருமானுக்கு உதவி செய்கின்றேன்; யான் அதலம், விதலம் முதலிய கீழேழு லோகங்களையும், பூர்புவ: முதலிய மேலேழு லோகங்களையும் நன்கறிகின்றேன்; முன்பு, தேவாஸுரர்கள் போர்செய்ததையும், அவர்கள் கூடித் திருப்பாற்கடலைக் கடைந்ததையும் அறிவேன்; யான் ஸ்ரீராமனுக்கு

உதவி செய்வேனென்று முயன்றாலும் மூப்பினால் வெற்றியும், திறமையும் அற்றிருக்கின்றேன்; யான் ஒருநாள் ஆகாயத்தில் அந்த ராவணன் ஒரு பெண்மணியைத் தேர்மீதேற்றிக்கொண்டோடக்கண்டேன்; அவள் அந்தோ? ஸ்ரீராமா! அந்தோ? லக்ஷ்மணா! என்று கூவிக்கொண்டும், கால் கைகளை யுதறிக்கொண்டும், அணிகளை யறுத்தெறிந்துகொண்டும் வருந்தினள்; உங்களுடைய வாக்கியத்தைச் செவியுற்றபின்னர், அவளே ஸீதாதேவி யாதல்வேண்டுமென்று எண்ணுகிறேன்; அவள் கருமுகில் போன்ற அந்த இராவணனுடைய அருகில் மின்னற்கொடிபோல விளங்கினள். அந்த ராவணன் வாழுமிடத்தையும் உரைக்கின்றேன் கேளீர்; அவன் விச்ரவஸு என்னும் மஹாமுனிவருக்குப் புத்திரன், குபேரனுக்குத் தம்பி, அவன்தான் இராவணனென்னும் பெயருடையவன்; அவன் இலங்கையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனன்; அந்த இலங்கையும் இங்கிருந்து நூறுயோஜனதூரத்திலிருக்கின்றது; அதனை விசுவகர்மன் மிகவும் விசித்திரமாக இயற்றினன்; அஃது பொன்மயமாகிய துவாரங்களாலும், நவமணிகளிழைத்து விசித்திரமான பொன் வேதிகளாலும், கதிரவன் போல வொலிக்கின்ற மிக வுயர்ந்த மதிளாலும் அலங்காரஞ்செய்யப்பட்டுளது; அவ்விடத்தில் இராவணனுடைய அந்தப்புரத்தில் ஸ்ரீஸீதாதேவி ராக்ஷஸிகளால் பாதுகாக்கப்பட்டு வாடி வருந்தி முன்னுடுத்த வெண்பட்டையே யுடுத்திக்கொண்டு சிந்தையுற்றிருக்கின்றனள். ஆதலின், நீவிரெல்லீரும் நூறுயோஜனந்தூரங் கடலைக்கடந்து செல்வீர்களாயின், அவ்விடத்தில் பிராட்டியைக் காணலாகும்; அங்கு இராவணனும் மிகவும் அரண் செய்துகொண்டிருக்கின்றனன்; அவ்விடஞ் செல்வீர்களாயின், தடையின்றிப் பிராட்டியைக் காண்பீர்கள்; யான் ஞானத்தினால் இவ்வண்ணம் அறிகின்றேன்; குலிங்கம் முதலிய தானியத்தால் பிழைக்கின்ற பறவைகளுக்குக் கண்ணோக்கம் முதன்மையானது; காக்கை முதலிய காய் கனிகளினால் பிழைக்கின்ற பறவைகளுக்கு அவைகளைவிட இருமடங்கதிகமானது; நீர்க்காக்கை, க்ரௌஞ்சம், குரரம் என்னும் பறவைகள் அவைகளில் மும்மடங்கு சிறந்தவைகள்; பருந்துகள் அவைகளைவிட நாலுமடங்கு சிறப்புற்றன; கழுகுகள் அவைகளைவிட ஐமடங்கு சிறந்தன; பலம், வீரியம், ரூபம், யௌவநம், இவைகளையுடைய அன்னப்பறவைகள் அவைகளைவிட ஆறுமடங்கு சிறந்தன; அருணகருடர்கள் அவைகளெல்லாவற்றிலும் சிறந்தவர்கள்; அந்த அருணனிடத்து நின்றும் யாங்களெல்லோரும் பிறந்தனம்; ஆதலின், யானிங்கிருந்தே இலங்காத்வீபில் இராவணன் ஸீதாதேவி முதலானோர் இருப்பதைக் காண்கின்றேன்; எமக்கும், அந்த அருணகருடர்களுக்குள்ள திவ்ய தேஜஸ்ஸும், திவ்ய ஜ்ஞாநமும், சிறந்த பலமும் உள; ஆதலாலும், உண்டியின் திறமையினாலும், இயல்பினாலும், யானிங்கிருந்தே நூறு யோஜனதூரத்துக் கப்புறமிருக்கின்ற இலங்கையில் வாழ்கின்ற ராவணனையும், பிராட்டியையும்

கண்ணுறுகின்றேன் ; எங்களுக்கு நெடுந்தூரத்திலுள்ள உணவை யறியுந் திறமை இயல்பாகவே யுளது ; கோழிகள் காலினருகிலுள்ள பொருளையே யறியும் ; அந்த ராவணன் யாவராலும் இகழத்தக்க தீச்செயல் புரிந்து என் தம்பியைக்கொலைசெய்தமையின், அதற்குப் பிரதிசெய்யவேண்டுவது ஆவசியகமாகியது ; ஆதலின், யான் அது செய்யுந்திறமையற்றவனாயினும், வாக்கினாலாயினும் ஸகாயம் செய்கின்றேன் ; ஆதலின், நீங்கள் இக்கடலைத் தாண்டி இலங்காத்தீவுக்குச் செல்லும் உபாயத்தை யாராய்ந்துணரக் கடவீர்கள் ; அங்குச் சென்றபின்னர் பிராட்டியைக்கண்டு ஸேவித்து மேற்கொண்ட காரியம் கைக்கூடி வருவீர்கள் ; யான் சிறகற்றிருக்கின்றமையின், என்னைக் கடல்கரையைச் சேர்க்க ; யான் என் தம்பி ஜடாயுவின்பொருட்டுத் தருப்பணஞ்செய்யக் கருதுகின்றேனென்று மொழிந்தனர் வாநரர்களெல்லோரும் அதுகேட்டு அவ்வண்ணமே யவரைக் கடல்கரை சேர்த்து அவர் நீரிலாடித் தருப்பணஞ் செய்தபின்பு, மீளவும் அவரை இருப்பிடஞ் சேர்த்துப் பிராட்டியின் செய்தி யுணர்ந்தமையின், மிக மகிழ்ந்தனர்கள். *

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தெட்டாவது சருக்கம்

முற்றிற்று.

ஐம்பத்தொன்பதாவது சருக்கம்.

ஸம்பாதி வாநரர்களுக்கு மீளவும் பிராட்டியின் செய்தி கூறியது.

பின்பு, வாநரர்களெல்லோரும் அமிழ்தத்துக்கு நிகராகிய அந்தச் சம்பாதியின் வாக்கியத்தைச் செவியுற்று மகிழ்தலும், அவர்களுள் புத்தியினாலும், வயதினாலும் சிறந்த ஜாம்பவான், மற்றுள்ள வாநரர்களுடன் எழுந்து மீளவும் ஸம்பாதியை நோக்கிக் கழுகுகளுக்கிறையே! ஸீதாதேவி யெவ்விடத்தில் காணப்பட்டனள் ; யாரால் காணப்பட்டனள் ; அவளை யெடுத்தோடினவன் யாவன் ; இவைகளையெல்லாம் நீர் குறையறமொழிக ;

* ஐம்பத்தொன்பதாவது சருக்கமுதல், அறுபத்து மூன்றுவது சருக்கம் முடிவு வரையில், ஐந்து சருக்கங்கள் அநேகம் பிரதிகளில் எழுதப்பட்டில ; சங்கதிகளும் முன்பின் தொடர்ச்சிக்குக் கொஞ்சம் விரோதமாகக் காணப்படுகின்றன ; ஆதலின், வேறு கிரந்தங்களிலிருந்து சேர்க்கப்பட்டனவென்று எண்ணப்படுகின்றன ; ஆயினும், பல புத்தகங்களிலிருக்கின்றமையின், வியாக்கியானஞ் செய்யப்படுகின்றன ; என்று வியாக்கியானஞ் செய்தவர்களெல்லோரும் எழுதி யிருக்கின்றனர்கள் ; ஆதலாலே தானே யானும் அந்தச் சருக்கங்களுக்குத் தர்ஜமா செய்கின்றேன் ;—

எங்களெல்லோர்க்குந் தஞ்சமாகுக ; பேரிடி விழுந்தாற்போல விழுகின்ற பெருமாளிளையபெருமாள்களினுடைய கூரிய கணைகளுக்கு யாவனிரையாகப் போகின்றவன் ; என்று வினவினர். ஸம்பாதியும் அதுகேட்டு முன்னமே மகிழ்வுகொண்ட அவ்வாநரர்களை மீளவும் மகிழ்விப்பவராகி மொழியலுற்றனர். கேளீர் வாநரயூதபர்களே ! யான் பிராட்டியை இராவணன் அபகரித்ததைக் கேட்டவண்ணம் கூறுகின்றேன் ; அப்போது பார்த்தவனையும், பார்த்த இடத்தையும் உரைசெய்கின்றேன்; அநேகம் யோஜனை தூரம் அகன்ற இந்த மலையின்மேலே வீழ்ந்து நெடுங்காலமாய் பல பராக்கிரமங்கள் ஒடுங்கி யடங்கி வாழ்கின்றேன் ; யானிவ்வண்ணம் பறக்குந் திறமை யற்றிருக்கின்றமையின், ஸுபார்ச்வன் என்னும் என் புத்திரன் தினந்தோறும் எனக்குணவுகொணர்ந்தளித்துப்பாதுகாத்துவருகின்றனன்.

తీక్ష్ణకామాస్తు గన్ధర్వా స్తీక్ష్ణకోపా భుజఙ్గమాః
మృగాణాన్తు భయ స్తీక్ష్ణం తత స్తీక్ష్ణక్షుధా వయం.

தீக்ஷ்ணகாமாஸ்துகந்தர்வாஸ் தீக்ஷ்ணகோபாபுஜங்கமா:
ம்ருகாணாந்துபயந்தீக்ஷ்ணம் ததஸ்தீக்ஷ்ணக்ஷுதாவயம்.

கந்தர்வர்கள் கடுங்காமமுடையவர்கள் ; நாகங்கள் கடுஞ்சினமுடையவை ; மான்களுக்கு அச்சங்கடுமையானது ; யாங்கள் கடும்பசி யுடையவர்கள் ; என்பது இயல்பன்றே ! ஆதலின், எனக்கு வேளை தப்பாமல் என் புத்திரன் உணவுகொண்டளித்து வருகையில், ஒருநாள் எனக்குணவுதேடியெங்குமகப்படாமல் கதிரவன் மறைந்த பின்பு வாளா வந்து சேர்ந்தனன். ஆதலின், யான் மூப்பினாலும், பசிதாகத்தினாலும், சினமதிகமாகி யவனையிகழ்ந்தேன் ; அப்போழ்தவன் என்னை வணங்கிச் சினந்தணியுமாறு இனிமையாக மொழியலுற்றனன். கேளீர் அன்புள்ள பிதாவே ! யான் வழக்கப்படி யுமக்காஹாரத்தைத் தேடிக்கொண்டே யாகாயத்திற்பறந்து மஹேந்திரமலையின் துவாரத்தை மறைத்துக் கடலிடையிலுலாவுகின்ற அநேகமாயிரம் ஜந்துக்களையும் கொலைசெய்யுமாறு அவைகளின் வழியை மறைத்து நின்றேன் ; அப்போழ்தொருவன் நன்றாகக் கூட்டப்பட்ட மைபோன்ற மேனியுடையனாகிக் கதிரவனுதித்தாற்போல ஒளிக்கின்ற ஓர் பெண்மணியை யெடுத்துக்கொண்டோடி வந்தனன் ; யானவர்களைக்கண்டு இவர்களே யின்று உணவாகக் கடவர்களென்று நிச்சயித்து அவர்களையெதிர்த்து வழியை மறைத்தேன்; அப்போழ்தவன் என்னைக்கண்டு விநயம் பூண்டு வணங்கி வழிவிடும்படி இனிமையாக வேண்டி வருந்தினன்.

నహి సామోపపన్నానాం ప్రహర్తా విద్యతే క్వచిత్
నీచేష్వపి జనః కశ్చిత్ కిమఙ్గ బత మద్విధః.

நஹிஸாமோபபந்நாநாம் ப்ரஹர்தாவித்யதேக்வசித்
நீசேஷ்வபிஜந:கச்சித் கிமங்கபதமத்வித:.

இனிய மொழிகளை மொழிந்து தஞ்சமென்றடைந்தவர்களைக் கடுமை கொண்டு கொலை செய்பவன் இழிகுலத்தோர்களிலும் எங்குமொருவனும் இலன் ; அங்ஙனமாயின், நற்குலத்திற்பிறந்த என்னைப்போன்றவன் சரண மடைந்தவனைக் கொலை செய்வானோ ? ஆ ! ஆ ! ஆதலின், யான் அவர்களைக் கொலைசெய்யாமல் வழிவிட்டருளினேன் ; ஆதலின், அவன் தடையின்றி யொளியினால் வானெங்குமொலிக்கச்செய்து சென்றனன் ; அப்பொழுது ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்ற பூதங்களெல்லாம் வந்து என்னைக்கண்டு மகிழ்ந்தனர்கள். மகாரிஷிகளும் அப்பா நீ நன்று செய்தனை ; நன்கு வாழ்க ; என்று வாழ்த்தினர்கள். அப்போழ்து யான் அவர்களை நோக்கி, அவன் யாவனென்று வினவுகையில், அவன் இராவணனென்றும், தசரத மஹாராஜன் திருமகனாகிய ஸ்ரீராமசந்திரனுடைய தருமபத்தினியாகிய ஸ்ரீஸீதாதேவியைப் பறித்தோடுகின்றனனெனவும் மொழிந்தனர்கள். அந்தப் பெண்மணியும் அணிகளறுந்து சிதறியும், வெண்பட்டு நழுவியும், சோகத்தினால் மோகமடைந்தும், ராமா ! லக்ஷ்மணா ! என்று கூவிக்கொண்டும் சென்றனள். யான் அதனைப் பார்த்துக்கொண்டிருந்தமையின், காலக் கழிவாய் விட்டது. ஆதலின், இப்பிழையைப் பொறுத்தருள்க ; என்று என் புத்திரனாகிய ஸுபார்சுவன் வந்து கூறினன். அதனை யான் செவி யுற்றும், அவன் பிராட்டி விஷயத்தில் பட்ட அபராதத்திற்குத் தக்க சிக்ஷைசெய்யுந்திறமை கொண்டிலேனாதலின், யாதுந்தோற்றாமல் அற்பன் போலிருந்தேன் ; இப்போழ்து யான் வாக்கினால் மாத்திரம் ஸஹாயம் செய்வது முடியும் ; ஆதலின், உரை செய்கின்றேன் கேளீர்கள் ; உங்க ளெல்லோர்க்கும் புத்தியினாலுதவிசெய்கின்றேன் ; பெருமாளுடைய காரியம் யாதுளதோ ? அஃது என்னுடைய காரியந்தான் ; இதில் சிறிதும் சந்தேஹமில்லை ; நீங்கள் சிறந்தவர்களும், புத்தி யுடையவர்களும், வாஸவனாலும் வல்லவொண்ணாதவர்களுமாதலின், மஹாராஜர் உங்களை யனுப்பினார். பெருமாளிளையபெருமாள் இவ்விருவர்களுடைய பாணங்களும் மூவுலகங்களையும் அழிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் வல்லமை யுடையன ; இராவணனும் மிகவும் தேஜோபல பராக்கிரமமுடையவனே ? ஆயினும், மிகவும் திறமை கொண்ட உங்களுக்கு ஒன்றும் அரியதன்று ; ஆதலின், இனி நீங்கள் காலக்கழிவு செயல்வேண்டாம்; உங்களைப்போன்ற புத்திமான்கள் செயற்குரிய காரியங்களில் அச்சமுற்றுக் காலக்கழிவு செய்யார்கள் ; ஆதலின், உடனே புறப்பட்டு இலங்கைக்குச்சென்று பிராட்டியைக் கண்டு மகிழ்க ; என்று ஸம்பாதி மொழிந்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் ஐம்பத்தொன்பதாவது சருக்கம் முற்றிற்று.

ஸுபார்ச்வன் ராவணனைக் கொலைசெய்யாமல் விட்டதற்கு மாயோகிகள் மகிழ்ந்து வாழ்த்தினதற்குக் காரணம் யாதெனில், சரணமடைந்தவனைப் பாதுகாத்த

அறுபதாவது சருக்கம்.

ஸம்பாதி தன்னுடைய முற்செயலை மீளவும் வாநரர்களுக்கு மொழிந்தது.

அநந்தரமவ்வண்ணம் ஸ்நானஞ்செய்து ஜடாயுவின்பொருட்டுத் தருப்பணஞ்செய்து இருப்பிடம் வந்து சேர்ந்த ஸம்பாதியை யங்கதன் முதலிய வாநரர்கள் எல்லோரும் சூழ்ந்துட்கார்ந்தனர்கள். ஸம்பாதியும் அவர்களிடத்தில் விசுவாஸமுற்று மகிழ்ந்து அவர்களை நோக்கி மொழியலுற்றனர். மஹாபலபராக்கிரமமுடைய வாநரர்களே! எனைச்சல்போடாமல் ஒரேமனமுடையராகிக் கேளீர்கள். யான் பிராட்டியாரை எவ்வண்ணமறிகின்றேனோ அதனுண்மையை மொழிகின்றேன்; முன்பு, யான் இம்மலையின் சிகரத்தில் சிறகுகளெரிந்து வீழ்ந்தேனே? அப்பொழுது உடனே மோகமடைந்து ஆறுதினங்கழிந்து மோகந்தெளிந்து மனம் வருந்தி யெழுந்து பத்துத் திசைகளிலும் கண்திறந்து பார்க்கையில், யாதொன்றுந் தெரிந்திலது; பின்பு, கடல், மலை, யாறு, குளம், காடு, கடற்கரைகளைக் கண்ணுற்றுப் பார்க்கையில், மகிழ்ந்த பறவைகளை யுடையதாகிக் குகைகளையும், சிகரங்களையும்பொருந்தித் தென்கடலுக்கு வடகரையிலிருக்கின்றமையின், இஃது விந்தியமென்னும் பெயருடைய மலையென்று நிச்சயங்கொண்டேன்; முன்பிவ்விடத்தில் தேவர்களாலும் பூஜிக்கப்பட்டு மிகவும் புண்ணியகரமான ஓராசிரமமிருந்தது; அதில் நிசாகரரென்னும் மாயோகி கடுமையாகத் தவஞ்செய்துகொண்டிருந்தனர். யான் அவரைக் காணவேண்டுமென்றெண்ணி இம்மலைச் சிகரத்து நின்றும் இறங்கி மிகவும் வருந்தமுற்று அவ்வாசிரமமடைந்தேன்; அம்முனிவர் முன்பு ஜடாயுவினுலும், என்னுலும் பலமுறை காணப்பட்டவர்; எங்கள்மேல் மிகவும் அன்புள்ளவர்; அவருடைய ஆசிரமத்தில் எப்பொழுதும் மந்தமாருதம் வீசும்; தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனித்துத் தழையாத மரம் ஒன்றுமிலது; அவ்வாசிரமத்தில் ஓர் மரத்தடியில் அவரைக் காண்பதன்பொருட்டு உட்கார்ந்தேன்; பின்பு, அம்முனிவர் நீரிலாடித் துய்பதுபிலுடுத்து வடக்கு நோக்கி யருகிலெழுந்தருளக்கண்டேன்; அவரைக் கரடி, சிங்கம், யானை, நாகம் முதலிய கொடிய ஜந்துக்களும், உயிர்களெல்லோரும் திசைமுகதேவனைச் சூழ்வதுபோலச் சூழ்ந்து பகை நீங்கி வருகின்றன; பின்பு, அம்முனிவர் ஆசிரமஞ்சேர்ந்தபின்னர், அரசன் அரண்மனை சேர்ந்தபின்னர் அவனைச்

னன் என்பதினுலும், இராவணனைக்கொலைசெயின், கூடப் பிராட்டியையும் கொலைசெய்து விடுவனென்பதினுலும், ஒருக்கால் இராவணனைமாத்திரம் கொலைசெய்தாலும் ராக்ஷசர்கள் எல்லோரும் பெருமாளால் கொலைசெய்யப்படார்கள் என்பதினுலும், அப்படிக்கெல்லாமில்லாமல் இராவணனைக் கொலைசெய்யாது விட்டுவிட்டதே மகிழ்ந்து வாழ்த்துவதற்குக் காரணமென்றுணர்க.

சூழ்ந்து வந்த சேனைகளெல்லாம் மீண்டுச் செல்வனபோல அவைகளும் மீண்டுச் சென்றன; பின்பு, அம்முனிவர் என்னைக்கண்டு மகிழ்ந்து மீளவும் எழுந்து என்னருகில் வந்து என்னை நோக்கிப் புள்ளிறையே! நீயிங்கு வந்த காரியம் யாது ; உன்னுடைய உரோமங்கள் விகாரமடைந்திருப்பதைக் கண்டால் உன் சிறகுகள் தீயால் எரிக்கப்பட்டனவென்றும், உடல் மிகவும் விரணமுற்று மிகவும் நோயுடையதென்றும் அறியப்படுகின்றது ; முன்பு, இரண்டு கழுகுகளைக் கண்டிருக்கின்றேன்; அவை காற்றுக்கு நிகரான வேக முற்றும்,வேண்டுமாறுஉருவந்தரித்தும்,கழுகுகளுக்கிறைகளாகவிருந்தன; அவற்றுள் மூத்தது ஸம்பாதி, இரண்டாவது ஜடாயு, அவர்களுள் நீ ஸம் பாதி யென்பவனல்லையோ ? முன்பு நீங்களிருவரும் மானிடரூபங்கொண்டு என்னை வணங்கினீர்களல்லீரோ? அத்தன்மையனை உனக்கு இப்போழ்து வியாதி யுண்டாகியதும், சிறகுகளொரிந்ததுமேன் ; இவ்வண்ணம் நீயேதே னுஞ் செய்த பிழைக்காக யாரேனுந் தண்டனை செய்தாரோ ? இவைகளை யெல்லாம் வினவுகின்ற என்பொருட்டுமொழிக; என்று மொழிந்தருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபதாவது சருக்கம்

முற்றிற்று.

அறுபத்தொன்றாவது சருக்கம்.

இதுவுமது.

கேளீர் வானர யூதபர்களே ! அநந்தரம் யான் அந்த நிசாகரமாமுனி யை நோக்கிப் பிறரால் செயற்கரிய கொடியதாகிய யான் செய்த ஸாஹஸச் செயலை யுரைசெயலுற்றேன் ; கேட்டருளீர் மாதவச் செல்வரே ! என்னு டைய சிறகுகளெரிந்து மெய்யெல்லாம் விரணமாயிருப்பதினாலும், நாணத் தாலும், அதனை நன்கு மொழியுந் திறமையுறுகின்றிலேன் ; யானும் என் தம்பி ஜடாயுவும் கொழுப்பினால் செருக்குற்று மதிமயங்கி யொருவர்க் கொருவர் வாது கூறிக்கொண்டு நம்மிருவருள் யார் சிறந்தவரென்பதை யறிவதன்பொருட்டு ஆகாயத்திலுயரப்பறக்கும்படி கயிலைமலையின் சிகரத் தில் அங்குள்ள முனிவர்களுடைய முன்பாக ஸூரியன் உதயமாகும் பொழுது புறப்பட்டு சூரியன் அஸ்தமயமாகுமளவும் அவனருகிற்சென்று பின் செல்லல் வேண்டுமென்று பிரதிஜ்ஞை செய்துகொண்டோம் ; பின் பிருவரும் அம்முனிவர்களின் உடன்பாட்டின்மேல் அப்படியே புறப்பட்டு வானிடையிற் சென்று பூதலத்திலெங்கும் நகரங்களைத் தேர்ச்சக்கரம் போன்றனவாகவும், சில விடங்களில் நிருத்தகீதவாத்திய கோஷங்களையும்,

சில விடங்களில் வேத கோஷங்களையும், சில விடங்களில் செவ்விய வஸ்திரங்களையுடுத்து மகிழ்ந்து பாடுகின்ற தெய்வப்பெண்களையும் கண்டோம்; இவ்வண்ணம் மேன்மேலும் பறந்து கதிரவன் செல்லும் வழி சேர்ந்து கீழே பார்க்கையில், பாரிலுள்ள பற்பல உயர்ந்த மரங்களடர்ந்த காடுகளும் புல்லுள்ள விடங்கள்போலக் காணப்பட்டன; பூமி பற்பல உயர்ந்த மலைகளுடையதாகியும் சிறிய கற்களுடையதுபோலும், அகன்ற நதிகளுடையதாகியும் மெல்லிய நூல்களினாலே சுற்றப்பட்டதுபோலும் காணப்பட்டது; இமயம், விந்தியம், மேரு முதலிய சிறந்த மலைகளும், மடுவினிடையில் யானைக்குட்டிகளிருப்பனபோலக் காணப்பட்டன; அவ்வண்ணம் மிகவும் உயரச்சென்றுகொண்டிருக்கையில், எங்களிருவர்க்கும் அதிகமான வேர்வை நீரும், சிரமமும், அச்சமும், மயக்கமும், இருளும், மூர்ச்சையும் உண்டாயின; அப்பொழுது இது கிழக்கு, இது தெற்கு, இது மேற்கு, இது வடக்கு, என்று ஒரு திசையும் நன்குணரப்பட்டிலது; ஊழிகாலத்தில் உலகமெல்லாம் ஸங்கர்ஷணாக்கினியினால் எரிக்கப்பட்டாற் போல் காணப்பட்டது; யான் அத்தருணத்திலும் உட்புலனைக் கட்புலனுடன் சேர்த்துத் திரங்கொண்டு கதிரவனை நிமிர்ந்து பார்த்தேன்; அப்போழ்தவன் எங்களுக்குப் பூமிக்குச் சரியாகக் காணப்பட்டனன்; அப்பொழுது ஜடாயு அந்த வெப்பத்தைப்பொறுமல் வருந்திக் கீழே வீழ்ந்தனன். யானது கண்டு அவனைப் பாதுகாப்பதன்பொருட்டுச் சிறகுகளினால் மறைத்துக்கொண்டே கீழிலிறங்கினேன்; ஆதலால், ஜடாயு எரிக்கப்பட்டிலன்; யான் அறியாமல் அவனுக்கு மேலே சென்றமையின், எரிக்கப்பட்டேன்; அப்போழ்து யான் ஜடாயுவை விட்டுச் சிறகுகளெரிந்து மோகங்கொண்டு விந்தியமலையின்மேல் வந்து வீழ்ந்தேன்; அப்போது ஜடாயு ஜனஸ்தானத்தில் வீழ்ந்திருப்பானென்று ஊஹித்தேன்; கேட்டருளீர் மாயோகியே! யான் இவ்வண்ணம் சிறகுகளும் எரிந்து கழுகுகளின் ராஜ்ஜியத்தையுந்துறந்து உடன் பிறந்த ஜடாயுவையும் விட்டுப் பிரிந்து திறமையுமழிந்து இவ்வண்ணம் வருந்துவதை விட இறப்பதே சிறப்பென நினைக்கின்றேன்; ஆகலின், இதன் சிகரத்திலிருந்து கீழே வீழ்ந்திறப்பேன்; என்று மொழிந்து வருந்தினேன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தொன்றாவது சருக்கம்
முற்றிற்று.

அறுபத்திரண்டாவது சருக்கம்.

நிசாகரமாமுனி ஸம்பாதிக்கு இதமுரைத்தது.

கேளீர் வாநரயூதபர்களே! யானிவ்வண்ணம் மொழிந்து கண்ணீர் பெருக்கி யழுது வருந்தினேன்; பேரருள்பூண்ட அம்முனிவரும் என்னுடைய புலம்பலைக்கேட்டு என்மீதருள்கொண்டு முகூர்த்தகாலந் தியானஞ் செய்து பின்பென்னை நோக்கிக் கேளப்பா ஸம்பாதி! நீ இவ்வண்ணந் துயர முறற்க; உன்னுடைய பக்ஷங்களும் முளைக்கப்போகின்றன; கண்களும் காணப்போகின்றன; வலிமையும் உறுதியும் வீரமும் உளதாகும்; சாஸ்திர ரஹஸ்யத்தில் உன் விஷயமாகச் சிறந்த காரிய முண்டாகுமென்று கேட்டிருக்கின்றேன்; இப்போழ்து ஜ்ஞாநதிருஷ்டியினால் பார்த்ததிலும் அது உண்மையெனவே காணப்பட்டது; இக்ஷ்வாகுமஹாராஜன் குலத்தில் தசரதனென்னும் மஹாராஜர் ஒருவர் பிறக்கப்போகிறார். அவருக்கு ஸ்ரீராமனென்னுந் திருக்குமாரர் அவதரிக்கப் போகிறார். அவர் பிதாவின் வாக்கியத்தைப் பரிபாலிப்பதன்பொருட்டு லக்ஷ்மணனென்னும் தம்பியுடனும், ஸீதையென்னும் பிராட்டியுடனும், தண்டகாரணியஞ்சேர்ந்து வாஸஞ்செய்யப்போகிறார். அப்போது ராவணனென்னும் ராக்ஷஸராஜன் தேவதானவாதிகளினால் அழிவில்லையென்னும் செருக்கினால் அந்தச் ஸீதாதேவியை ஜனஸ்தானத்திலிருந்து மோசஞ்செய்து அபகரித்துக்கொண்டு போகப்போகிறான். அந்தச் ஸீதாதேவியும் அவன் வீடு சேர்ந்து வேண்டும் பொருள்களை யளித்து ஆசையுறும்படி செய்யப்பட்டுப் பதி சோகத்தில் மூழ்கி பொன்றையும் இலக்ஷியஞ்செய்யாமல் உணவுமின்றி யிருக்கப் போகிறாள். அதனைத் தேவேந்திரனறிந்து அவளுக்கு இரஹஸியமாய்த் தேவர்களுக்கும் அரிய பரமான்னங் கொணர்ந்தளிக்கப்போகிறான். அதனைப் பிராட்டி கண்டு இந்திரனளித்தது அளிக்கப்பட்டதென வுணர்ந்து அதில் முதலில் ஒரு பாகமெடுத்து என் பர்தா தம்பியுடன் உயிர்வாழ்ந்துயினும், தெய்வத்தன்மையை யடைந்திருக்கினும், இது அவர்பொருட்டாகக்கடவதென்று தரையில் வைத்துவிட்டு மிகுதியைப் புசிக்கப் போகிறாள். பின்பவளைத் தேடுவதன்பொருட்டு ராமனாலனுப்பப்பட்டு வாநரர்கள் தேடிக்கொண்டு வரப்போகிறார்கள். கேளாய் ஸம்பாதி! அப்போழ்து நீ யவர்களைக் கண்டு பிராட்டி யிருக்குமிடத்தை யுரைசெய்யக்கடவை. ஆதலின், நீ இத்தன்மையனாக எங்குஞ் செல்லற்க; திறமை யற்றவனாகி எங்கேதான் செல்வாய்; ஆதலின், தேசகாலங்களை யுணர்; இவ்விடத்திலேயே அவர்களுடைய வரவை எதிர்பார்க்க; அப்போழ்து உனக்குச் சிறகுகளும் முளைக்கப்போகின்றன; ஆதலின், உனக்கிப்போழ்தே சிறகுகள் முளைக்குமாறு செய்வதற்குத் திறமையிருக்கையிலும், மனமுறு

கின்றிலேன் ; நீ இங்கிருந்துகொண்டே இவ்வண்ணம் வாநரர்களைக்கண்டு பிராட்டி யிருக்குமிடத்தை யுரைசெய்வாயாகில், உலகங்களெல்லோர்க்கும் உபகாரஞ் செய்தவனாகுவாய் ; அந்தக் காரியம் அந்த ராமலக்ஷ்மணர்களிருவர்க்குமாத்திரமே யன்று ; அது ப்ராஹ்மணர்கள், தேவர்கள், முனிவர்கள், தேவேந்திரன், இவர் முதலிய எல்லோருடைய காரியமே யாகின்றது ; யானும் அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களைக்கண்டு ஸேவித்துக் கண்கள் குளிர்ந்து மனமகிழ்ந்தின்புறல்வேண்டுமென்று விரும்புகின்றேன் ; ஆயினும், மூப்புற்றுத் திறமையற்ற இந்த சரீரத்துடன் நெடுங்காலம் வாழ்வுற விரும்புகின்றிலேன் ; ஆதலின், இந்த சரீரத்தை விட்டு விட்டு வானேற விரும்புகின்றேன் ; ஆதலால், நீ இவ்விடத்திலேயே வாழ்க ; என்று முக்காலப்பொருள்களையும் உணர்ந்தவராதலின், மனமகிழ்ந்து மொழிந்து தேற்றி யருளினர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்திரண்டாவது சருக்கம் முற்றிற்று.

அறுபத்துமூன்றுவது சருக்கம்.

வாநரர்கள் ஸம்பாதியிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தென்கடலின் வடகரை சேர்ந்து அதனை எங்ஙனந் தாண்டுவதெனச் சிந்தையுற்றது.

கேளீர் வாநரர்களே ! அந்த நிசாகரமாமுனி இவ்வகையாகப் பற்பல இனிய மொழிகளை மொழிந்து என்னைத் தேற்றி விடைகொடுத்தனுப்பித் தாமும் தம்மாசிரமத்தினுள்ளே சென்றருளினர். யானும் அந்தக் குகையினின்றும் புறப்பட்டு மெல்ல மெல்ல இம்மலையின் சிகரத்திலேறி யுங்கள் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்; இப்போழ்து அந்த நிசாகர மாமுனி யுரைசெய்து சென்றது எண்ணாயிரம் வருஷங்களாகின்றன ; அதுமுதல் அவருடைய வாக்கியத்தைக் கருத்திற்கொண்டு தேசகாலங்களை எதிர் பார்த்திருந்தேன் ; அம்முனிவர் மஹாப்ரஸ்தானஞ்சென்று பேறு பெற்றனர். யான் அதுமுதல் பற்பலச் சிந்தைகொண்டு வருந்தி யுயிரை விடுவதில் துணிவுகொண்டிருந்தும் அம்முனியின் மொழியை நினைந்திறந்திலேன் ; எழுந்தெரிகின்ற தீபம் இருளை யழித்து விடுவதுபோல அம்முனி வாக்கியமே என்னுடைய துயரத்தையும் அழித்துக்கொண்டு வந்தது ; இராவணனுடைய திறமை என்னுடைய புத்திரன் திறமையினும் அற்பமானதென்று யான் அறிந்திருக்கின்றேனாதலின், அப்போது

இராவணனைத் தகைந்து பிராட்டியைப் பாதுகாத்து ஏன் மீட்டுக்கொண்டு வந்திலையென்று என் மகனையும் இகழ்ந்து முனிந்தேன்; அவன் அவ்வண்ணம் வந்து விட்டமையின், பிராட்டியை விட்டுப் பிரிந்த அந்த ஸ்ரீராமலக்ஷ்மணர்களும் பாதுகாக்கப்பட்டிலர்கள்; ஆதலின், என் மகன் என் பொருட்டு நன்மைசெய்தானாகியிலன்; எனக்கும் தசரதசக்கரவர்த்திமீதுள்ள நேசம் அத்தன்மையது; என்றிவ்வண்ணம் மொழிந்துகொண்டிருக்கையில், அவ்வாநரர்களுக்கெதிரிலேதானே அந்த ஸம்பாதிக்குச் சிறகுகளிரண்டும் முன்போலவே முளைத்து வளர்ந்தன; ஸம்பாதியும் தனக்கிவ்வண்ணம் செவ்விய இறகுகளுள்ள சிறந்த சிறகுகளினால் தன்னுடைய சரீரம் திகழ்வதைக்கண்டு மகிழ்ந்து வாநரர்களையும் நோக்கிப் பாரீர்கள் வாநரர்களே! எனது சிறகுகளிரண்டும் சூரியனொளியினால் எரிந்துவிட்டபோதிலும் மீளவும் முன்போலவே தோன்றி விளங்குகின்றன; யான் சிறகுகளெரிவதன்முன்னம் இருந்தவண்ணமாகவே சிறகுகளும், தோள்வலியும், வலிமையும், திறமையும், பௌருஷமும், குறையின்றியுண்டாயின; ஆதலின், நீங்களும் நன்றாக முயற்சிசெய்க; பிராட்டியாரைக் கண்டு மகிழ்வீர்கள்; அவ்விஷயத்தில் எனக்கு இவ்வண்ணம் சிறகுகள் தோன்றியதே நற்குறியாகின்றது; என்றிவ்வண்ணமாக ஸம்பாதி யங்கதன் முதலாகவுள்ள வாநரர்களை நோக்கி யுரைசெய்து தனக்கு வானிடையிற் பறக்குந்திறமை யுண்டாகியதைப் பரிக்ஷை செய்துகொள்வதன்பொருட்டு மேலெழுந்து பறந்து சென்றுவிட்டது; அந்த வாநரயூதத்தலைவர்களும் அந்த ஸம்பாதியின் வாக்கியத்தைக்கேட்டு பெருமகிழ்வுகொண்டு சிங்கம்போலக் கர்ஜனைசெய்து அபிஜித்தென்னும் நடுப்பகல்வேளையில் அங்கிருந்தெழுந்து வாயுவேகமனோவேகமுற்றவர்களாதலாலும், ஸீதாபிராட்டியின் செய்தி கேட்டுப் பௌருஷம் அதிகமானமையினாலும், எவ்விதத்திலும் பிராட்டியைத் தேடிக் காண்போமென்னுமுறுதிகொண்டு தென்திசை நோக்கிச் சென்றனர்கள்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்து மூன்றாவது சருக்கம் முற்றிற்று.

ஸம்பாதி வாநரர்களை நோக்கிச் சீதாதேவியை இராவணன் கொண்டுபோகும்போது என் சிறகுகளெரிந்துந் திறமையற்றுமிருந்தமையின், அவனுடன் போர்செய்திலேனென்று மொழிந்தது; பின்பு, தன் மகன் அவர்களைக்கண்டும் சீதாதேவியைப் பாதுகாவாமல் வந்ததற்குச் சினங்கொண்டிகழ்ந்தேனென்றும் மொழிந்தது; ஸ்ரீராமனிடத்தில் அவ்வளவு பக்ஷங்கொண்டிருந்தும் பின்பு சிறகுகள் முளைத்தபின்னர் தனக்கு பல பராக்கிரமங்கள் முன்போலவே தோன்றினவென்றுரைசெய்தும், அவர்களைமாத்திரம் பிராட்டியைத் தேடும்படி சொல்லித் தான் பறந்துவிட்டதாகக் கூறப்பட்டிருக்கின்றது; இப்போது இதுவும் அவர்களுடன் சேர்ந்து ஏன் தேட முயற்சி செய்திலதெனின்; ஸம்பாதிக்கு அம்முனிவர் உரைசெயும்போது அவர் முக்காலப்

அறுபத்துநான்காவது சருக்கம்.

வாநரர்களெல்லோரும் தென்கடலைக்கண்டு அதனைத் தாண்டுவதன் பொருட்டுத் தந்தமக்குள்ள திறமையைக் கூறுமாறு நிச்சயஞ் செய்துகொண்டது.

இவ்வண்ணமாக வாநரர்களெல்லோரும் ஸம்பாதி யுரைசெய்த வாக்கியத்தைக்கேட்டு மகிழ்ந்து இராவணனுக்கிருப்பிடமாகிய இலங்காத்தீவில் பிராட்டியைத் தேடும்படி நிச்சயஞ்செய்துகொண்டு அங்கிருந்து புறப்பட்டு உலகமனைத்துக்கும் பிரதிபிம்பமோ என்று ஐயமுறுமாறு ஸகல வஸ்துகளும் நிறைந்து விளங்குகின்ற கடலின் வடகரைசேர்ந்து சேனைகளை யிறக்கித் தாமுமிருந்து பருத்து நீண்ட உருவங்கொண்டு கோரமாகவும், விகாரமாகவுமுள்ள பற்பல ஜலஜந்துக்கள் வாய்திறந்து கூவி விளையாடவும், பேரலை சிற்றலைகள் மோதவும், நடுவிலுறங்குகின்றதுபோலும், மற்றோரிடத்திலாடுகின்றதுபோலும், சில விடத்தில் மலைகள்போல மேலெழுந்தோங்கியும், பாதாளதலத்தில் வாழுந் தானவர்களுறைந்தும், பார்ப்போர்க்கச்சந்தருவதுமாகிய கடலைக்கண்டனர்கள். அவர்களுள் அற்பர்களாகிய சிலர் அச்சமுற்றனர்கள்; சிலர் ஆகாசம்போல முடிவிடமின்றி வியன்றகன்றுளதே ? இதனை எவ்வண்ணங்கடந்து சென்று பிராட்டியைத் தேடுவோமென்று நினைத்தனர்கள். இவ்வகையாகக் கடலைக்கண்டு துயரங்கொண்ட வலீமுகங்களை யங்கதகுமாரன் தேற்றி மொழியலுற்றனன். கேளீர் அன்பர்களே !—

నవిషాదే మనః కార్యం విషాదో దోషవత్తమః
విషాదో హన్తి పురుషం బాలం క్రుద్ధ ఇవోరగః.

நவிஷாதேமந: கார்யம் விஷாதோதோஷவத்தம:
விஷாதோஹந்திபுருஷம் பாலம்க்ருத்த இவோரக:.

துன்பத்தின்மீது மனனைச் செல்லவிடலாகாது ; துன்பமென்பதே மிகவுந் தோஷமுடையது ; சினங்கொண்ட நச்சரவம் பாலகனைக் கொலை

பொருள்களையுமுணர்ந்தவராதலின், பிராட்டியைச் சிறியதிருவடியே தேடி வந்து பெருமாளுக்குச் செய்தி யுரைசெய்வீர் ; ஆதலின், நீ யவர்களுக்குச் செய்திமாத்திரம் உரைசெய்து நீ வேண்டுமிடத்திற்குச் செல்லென்றும் உரைசெய்திருப்பார் ; அதனை இங்கு மொழிவது முக்கியமன்றென்று உரைசெய்திலரென்றும் ஊகித்தல் வேண்டும் ; இல்லாவிட்டால் இராவணன் ஜடாயுவைக் கொலைசெய்து விட்டதுபோல நம்மையும் கொலைசெய்வானென்று அச்சமுற்றுச் சென்றிலரென்றேதல்வேண்டும் ; இவ்விருவழியை விட்டு வேறு வழி யவ்வினவுக்கு விடையாகாதென்றுணர்க.

செய்வதுபோலத் துன்பமே மனிதனைக் கொலைசெய்வது; பராக்கிரமகாலத்திலும் துன்பமென்பதுளதாயின், அது அதனை யடக்கிவிடுகின்றது; இவ்வாறு உற்சாகமடங்கித் துன்பமதிகமாயின், யாது பயன்தான் கைக்கூடும்; என்றிவ்வகையாக அங்கதகுமாரனுரைசெய்து தேற்றி யன்றிரவுபோக்கி மறுதினமுதயத்திலெழுந்து மீளவும் ஸபைகூட்டி யாலோசனைசெயலுற்றனன். அவ்வலீமுகச்சேனையும் அந்த அங்கதகுமாரனைச்சூழ்ந்து தேவேந்திரனைச் சூழ்ந்த தேவசேனைபோல விளங்கியது; அந்தக் கபிசேனையை யந்த யுவராஜனும், சிறியதிருவடியும் தவிர மற்று யாவன்தான் வசப்படுத்தியாள வல்லவனுளான்; ஆதலின், அங்கதகுமாரன் அச்சேனையையெல்லாம் பேசாமலும், கூவாமலும், நகையாமலும், பகையாமலும், சத்துசெய்யாமலுமிருக்கச்செய்து வானரயூதபர்களையும் உடன்படுத்தி யவர்களை நோக்கிக் கேளீர் நேசர்களே! இப்போழ்திங்குள்ளோரில் யாவன் இக்கடலைக்கடந்து மஹாராஜரை சத்தியசந்தவருமாவாகச்செய்துநம்மெல்லோரையும் மகிழ்விக்க வல்லவன்; நூறுயோஜனதூரம் இடையிலிளைப்புறாமல் தாண்டுந் திறமையுடையோன் யாவன்; யாவன் மஹாராஜர் கட்டளையை நிறைவேற்றி நம்மெல்லோரையும் தண்டனையினின்றும் மீட்கவல்லவன்; யாம் யாவனுடைய திறமையினால் இங்கிருந்து மகிழ்ந்து திரும்பிச்சென்று வீடு சேர்ந்து புத்திரமித்திரகளத்திராதிகளுடன் சேர்ந்தின்புறுவோம்; யாருடைய பேருதவியினால் மீண்டெய்திப் பெருமாளிளையபெருமாள் மஹாராஜர் இவர்களைக்கண்டு மகிழ்வோம்; நம்மில் இவ்வண்ணந் திறமைகொண்டவன் யாவனோ? அவன் இப்போழ்தங்ஙனமே செய்து மஹாராஜர் கட்டளையை நிறைவேற்றுவேனென்று அபயமளித்தருளக்கடவன். என்றிவ்வண்ணம் வாலி மைந்தன் மொழிந்த மொழியை எல்லோருங்கேட்டும் ஒருவரும் மறுமொழி மொழியாமல் சித்திரம்போல அசைவற்றிருந்தனர்கள். தாராகுமாரனதுகண்டு மீளவுமவரை நோக்கிக் கேளீர் யூதபர்களே! நீவிரெல்லீரும் பலமுடையோருள் சிறந்தவர்கள்; அழிவற்ற திறமையுடையீர்கள்; புகழுற்ற நற்குலத்திற் பிறந்தீர்கள்; பலமுறை யாவராலும் புகழ்ந்துரைக்கப்பட்டீர்கள்; உங்களுக்கு மூவுலகிலும் எவ்விடத்திலும் எவர்க்காயினும் செல்லுங்காலையில் இதுவரையில் தடை நேர்ந்திலது; ஆதலின், ஏன் சிந்தை யுறுகின்றீர்கள்; இதனைத் தாண்டும் விஷயத்தில் யார்க்கு எவ்வளவு திறமையுளதோ? அதனை யுண்மையாக முறையே யுரைசெய்மின்; என்று வினவினன்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்து நான்காவது சருக்கம்

முற்றிற்று.

அறுபத்தைந்தாவது சருக்கம்.

அங்கதன் முதலிய வாநரர்களெல்லோரும் தந்தம் திறமையைக்கூறி யந்தக் காரியத்தை முடிப்பவர் யாவருளரெனச் சிந்தையுறுகையில், ஜாம்பவான் சிறியதிருவடியை யேவ முயன்றது.

அநந்தரம் அங்கதன் வாக்கியத்தை வாநரர்களெல்லோரும் கேட்டுத் தத்தந் திறமையை முறையே கூறலுற்றனர். அவர்களுள் கஜனென்பவன் யான் பத்துயோஜனந் தாண்டுவேனெனவும், கவாக்ஷன் இருபது யோஜனந் தாண்டுவேனெனவும், கவயன் முப்பது யோஜனந் தாண்டுவேனெனவும், சரபன் நாற்பது யோஜனந் தாண்டுவேனெனவும், கந்தமாதனன் ஐம்பது யோஜனந் தாண்டுவேனெனவும், மைந்தன் அறுபதுயோஜனந் தாண்டுவேனெனவும், துவிவிதன் எழுபதுயோஜனந் தாண்டுவேனெனவும், ஸுஷேணன் எண்பதுயோஜனந்தாண்டுவேனெனவும் முறையே மொழிந்தனர்கள். அப்போழ்து ஜாம்பவான் அதுகேட்டு அவர்களை நோக்கிக் கேளீர் யூதபர்களே! யான் முன்னம் மூப்பின்றி இளையோனாகி யிருக்கையிலே எவர்க்கும் மிகவும் தாண்டுந் திறமையும், தோள்வலியுமிருந்தன; இப்போழ்து வயது சென்று மிகவும் மூப்புடையேனாயினேன்; ஆதலின், மிகத் திறமைகொண்டிலேன்; ஆயினும், இத்தருணத்தில் உபேக்ஷைசெய்வது தகுதியற்றது; இவ்விஷயத்தில் பெருமாள் மஹாராஜர் இருவரும் மிகவும் அன்புகூர்ந்து ஆவல்கொண்டு நம்பி நம்மை யனுப்பியிருக்கின்றார்களல்லரோ? ஆதலின், எனக்கிப்போதுள்ள திறமையை யறிவிக்கின்றேன்; யானிப்போழ்து தொண்ணூறு யோஜனந் தாண்டுவேனென்பதில் சந்தேஹமிலது; என்றுரைசெய்து மீளவும் அவர்களை நோக்கி, வீரர்களே! தாண்டுவதில் எனது திறமை இவ்வளவேயென்றெண்ணற்க; மஹாபலிசக்கரவர்த்தி யாகத்தில் ஸ்ரீமஹாவிஷ்ணு திரிவிக்கிரமாவதாரஞ்செய்தருளுகையில், அவரைப் பிரதக்ஷிணஞ்செய்து மகிழ்ந்தேன்; இப்போழ்து மூப்புடையேனாயினமையின், தாண்டுந்திறமை குறுகினமையின், இப்போது எனது திறமை இவ்வளவேயென்று எண்ணுகின்றேன்; யானிவ்வளவுதூரஞ் செல்வதினாலும் நமது காரியம் முடிவுபெறுகின்றிலது; ஆதலின், யாது செய்வேனென மொழிந்தனர். அப்போழ்து மஹாதீரனா யுவராஜன் ஜாம்பவானை நோக்கிக் கேளீர் ரிக்ஷபதியே! யான் இந்த நூறுயோஜனதூரமுஞ்சென்று அக்கரை சேர்வேனென்பதிலையமிலது; ஆயினும், மீண்டிங்கெய்துவேனோ எய்தேனோவென்று ஐயமுறுகின்றேன்; எய்துவேனென்று மனம் உறுதிகொள்ளுகின்றிலது; என்றுரைத்தனன். ஜாம்பவானதுகேட்டு அவனை நோக்கி, இளவரசே! நீர் இக்காரியத்தை முடிக்குந் திறமை யுடையீரென்பதிலையமிலது; நூறென்பதென்னகணக்கு ஆயிரம், லக்ஷம் யோஜனமாயி

னும் நீர் தாண்டுவதற்கும், மீண்டெய்துவதற்குந் திறமையுடையீரோ ? ஆயினும், யாவரையும் கட்டளைசெய்தனுப்பவல்ல யஜமானன் எங்கும் அனுப்பத்தக்கவனுகான் ; நீர் இவ்வானரர்களனைவர்க்கும் யஜமானன் இவ்வெல்லோரும் உமக்கு அடிமை பூண்டவர்கள் ; அன்றியிலே, பிரபுவென்பவன் படர்களுக்கு மனையாளை நிகர்த்தவன் ; இவ்வண்ணம் முன்னேர் மொழிந்திருக்கின்றனர்கள். ஆதலின், பாரியையைப்போல நீர் எங்களால் பாதுகாக்கத்தக்கவர்; அன்றியிலே, இக்காரியமென்னுங் கனிக்கு நீர் வேர்போன்றவர் ; ஆதலின், கனி பழுப்பதன்பொருட்டு வேரே பாதுகாக்கத்தக்கது ; இதுதான் காரியவாதிகளின் நீதி ; வேர் அழியாதிருந்தாலன்றோ ? தளிர், பூ, காய், கனிகள் உண்டாகும் ; ஆதலின், இக்காரியத்திற்கு வேர்போலக் காரணமாகிய நீர் பாதுகாக்கத்தக்கவர் ; அன்றியிலே, எங்களுக்கெல்லாம் நீர் இளவரசனும், இராஜபுத்திரனுமாகின்றீர்; ஆதலின், உம்மைப்பற்றியே யாங்கள் காரியங்களை யெல்லாம் நிறைவேற்றவேண்டும் ; ஆதலின், நீர் செல்வது தகுதியற்றது ; என்று மொழிந்தனர். அங்கதகுமாரன் அது கேட்டு மீளவும் அவரை நோக்கிக் கேளீர் ஜாம்பவானே ! யான் இப்போழ்து உமது வாக்கியத்தின்படி செல்லேனுயின், வேறே செல்ல வல்லவன் யாவனுமிலனே ? ஒருவரும் செல்லாமல் காரியம் கெடுமாயின், மீளவும் நாமெல்லோரும் முன்போலவே ப்ராயோபவேசம் செய்திறக்கவேண்டுமல்லது வேறு கதி யாதுளது ; மஹாராஜர் கட்டளையைச் செய்து முடிக்காமல் அங்கே செல்வோமாயின், உயிர்வாழ்ந்தெவ்வண்ணமின்புறுவோம்; மஹாராஜர் அருள்செய்வதற்கும், வெகுண்டு தண்டனை செய்வதற்குந் திறமை பூற்றவரல்லரோ ? ஆதலின், அவர் கட்டளையைச் செய்யாமல் அங்குச் செல்வோமாயின், உடனே யிறப்போமே ? ஆதலின், நீர் யாவுமுணர்ந்தவராதலின், இக்காரியத்திற்குத் தீமை யெவ்வண்ணம் நேராமல் நிறைவேறுமோ ? அவ்வண்ணம் நன்றாக ஆலோசனை செய்து மொழிக ; என்று மொழிந்தனர். ஜாம்பவானும் அதுகேட்டாராய்ந்து மீளவும் அங்கதனை நோக்கிக் கேளீர் யுவராஜனே ! நாம் மேற்கொண்ட இக்காரியத்திற்கு ஒரு குறையும் நேர்வதில்லை ; யாவன் இக்காரியத்தைக் குறையின்றிச் செய்து வருவானே ? அவனைக்கண்டறிந்து ஏவுகின்றேன் பாரீர்; என்று மொழிந்து பின்பு, வானரர்களெல்லோர்க்கும் சிறந்தவரும், பல பராக்கிரமமுடையவரும், நற்புகழும், நன்மதியும், நட்புமுடையவருமாகிய அனுமான் ஓரிடத்தில் தனியே வீற்றிருக்கக்கண்டு அவர் மகிழ்ந்தெழுந்து செல்லுமாறு ஏவுதல் செய்ய முயன்றனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தைந்தாவது சருக்கம்

முற்றிற்று.

அறுபத்தாறாவதுசருக்கம்.

ஜாம்பவான் சிறியதிருவடியின் மகிமையைப் புகழ்ந்து அவனைச் சென்று காரியத்தை முடிக்குமாறு உடன்படுத்தியது.

அநேக நூறாயிரம் வாநரசேனைகள் அலைகடலைக்கண்டச்சங்கொண்டு வருந்துவதை ஜாம்பவான் கண்டு சிறியதிருவடியைநோக்கி, வாரீர் மாருதி! நீர் மஹாவீரமுடையோரும், பற்பல நூல்களையுங் கற்றவரும், தீரமுடையோருமாகியும் ஏகாந்தமாக வீற்றிருப்பதேன்; யாங்களிவ்வண்ணமாலோசனைகொண்டிருக்கையிலும் ஏன் மறுமொழி மொழிகின்றிலீர்? நீர் பராக்கிரமத்திலும், தேஜஸ்விலும், தீரத்திலும், மஹாராஜனையும், பெருமாளையும், இளையபெருமாளையும் நிகர்த்திருக்கின்றீர்; அரிஷ்டநேமியென்னும் காசியபருக்கு விநதையிடத்திலவதரித்த கருத்மானென்று புகழ்கொண்ட பெரியதிருவடி மகாபலமுடையவர்; பறவைகளெல்லாவற்றிற்குமிறை; அவர் அடிக்கடி பன்னகர்களைக் கொலைசெய்வதன்பொருட்டுக் கருங்கடலிடையில் வேகமாகப் பறந்து வருவதை யான் கண்ணுற்றிருக்கின்றேன்: அவருக்குச் சிறகிலுள்ள பலம் உமக்குப் புஜத்திலிருக்கின்றது, உமது விக்கிரமமும், வேகமும், பலமும், புத்தியும், தேஜஸ்ஸும், வலிமையும், அவருக்குக் குறைந்தனவல்ல; இவ்வண்ணம் எல்லாக்குணங்களும் சிறந்திருக்கையில், ஏன் மௌனமுற்றிருக்கின்றீர்; உமது தன்மையை நீர் அறிகின்றிலீரோ? புஞ்சிகஸ்தலையென்னும் தெய்வப்பொதுமகள் சாபத்தினால் அஞ்சனையென்னும் வாநரப்பெண்ணாகப் பிறந்து பெரும்புகழ்கொண்டு கேஸரியென்னும் வானரசிகாமணிக்குப் பத்தினியாக விருந்தனள்; அவள் மூவுலகிலும் மிக்க வழகுடையவள், சாபவசத்தாலேயே யவ்வண்ணம் வானரியாகிக் குஞ்சரனென்னும் வானரயூதபனுக்குப் புத்திரியாகிக் கேஸரிக்கு மணமாலை சூட்டினள். அவள் ஒருநாள் மானிடப்பெண்ணுருவங்கொண்டு மிகவும் அழகுடையளாகி பற்பல கலனையுமணிந்து வெண்பட்டுடுத்து மலையினுனியிலுலாவுகையில், அவளை வாயுபகவான் கண்டு மயல்கொண்டு வெண்பட்டையசைத் தவிழ்த்துவிட்டு திரண்டுருண்டவிரண்டு துடைகளையும், பருத்துயர்ந்த கொங்கைகளையும், மலர்ந்த முகத்தையும், பருத்தகன்ற நிதம்பங்களையும், நுண்ணிய பிடியுடங்குந் துடியிடையினையும், ஆழ்ந்த நாபியையும், மற்றுமுள்ள குற்றமற்ற அவயவங்கள் யாவற்றையும் கண்டு காமவேட்கை மிகுந்து அவளை இருகைகளாலுமெடுத்தணைத்துத் தழுவிக்கொண்டனன். உடனே யந்த அஞ்சனாதேவி கண்டு அச்சங்கொண்டு யாரடா நீ என்னுடைய கற்பினையழிக்க விரும்புகின்றவன்; என்று சினந்தோன்ற வினவினள். வாயுபகவானதுகேட்டு அவளை நோக்கிக் கேளாய் பெண்மணியே! யான் உனது கற்பினை யழிக்க வந்திலேன்; மனதினாலுன்மீது மயல்கொண்டு மயல்

தீருமாறு ஊகங்களினால் தழுவிக்கொண்டேனல்லது, மற்று யாது தீமையும் செய்யேன்; இதனாலுனது கற்பு அழியாது; என்னருளினாலுனக்கொரு நற்புதல்வன் பிறக்கப்போகின்றான். அவன் மிகவும் திறமையும், வலிமையும், மதியும், பலமும் பராக்கிரமமும், உடையனாகித்தாண்டுவதிலும், மென்மேல் செல்வதிலும் பாய்வதிலும் எனக்கு நிகராகுவான்; என்றுமொழிந்து மகிழ்வித்தனன்; அஞ்சனையதுகேட்டுப்பெருமகிழ்வுகொண்டு உடனே கருவுடையளாகிக் குகையில் உம்மைப்பெற்றனள்; உடனே நீர் எழுந்து பாலஸூரியன்? அப்பொழுதே உதயமாகக்கண்டு செவ்வியதோர் பெருங்கனியென்றெண்ணி யதனைப்பறித்துப் புசிப்பதன்பொருட்டு வான்மீது அநேகமாயிரம் யோஜனதூரம்சென்று! அந்தக்கதிரவனுடைய வெப்பத்தினா லெரிக்கப்படினும், சிறிதும் துன்புறாமல் மேன்மேலும், செல்வதை நவக்கிரஹங்களுங் கண்டச்சங்கொண்டோடுகையில், தேவேந்திரனது கண்டோடிவந்து, சதகோடியினாலும்மையடித்தனன்; உடனே நீர் அந்தமலையினுனியில் பக்கமாக வீழ்ந்தமையின் உமது கபோலம் கல்லறைப்பட்டு முறிந்தும், அழியாமலிருந்ததனால், உமக்கு அனுமான்என்னும், திருநாமமுண்டாயிற்று; இவ்வண்ணம் நீர்தம்போளியினாலும், கல்லினாலும், கபோலங்களில் அடிபட்டுவீழ்ந்ததை வாயுபகவான்கண்டு சினங்கொண்டு, மூவுலகினிலெங்கும் வீசாமல் நல்லோர்களுடைய வுயிர்களையும் அடக்கி, யடங்கியிருந்தனன்; அப்போழ்தெல்லோரும் மூச்சின்றித்தவிக்கையில் இந்திரன்முதலியதேவர்களெல்லோரும் அச்சங்கொண்டோடிவந்து வாயுபகவானைக்கண்டு, நன்மொழிமொழிந்து சினத்தையாற்றி மகிழ்விக்கையில் அப்பொழுது நான்முகதேவன் உமக்கு ஆயுதங்களொன்றினாலும் அழிவில்லையென்று வரமளித்தனன்; தேவேந்திரனும் நீர்வச்சிராயுதத்தாலடிபட்டும் அழிவுறாதிருந்தது கண்டு மகிழ்ந்து, நீர்எப்பொழுது மரணத்தைக் கோருகின்றீரோ! அப்பொழுதுதான் இறக்கக்கடவீரென்று வரமளித்தனன். ஆதலின் நீர் அவ்வண்ணம் கேசரிக்கு க்ஷேத்திஜனும், வாயுபகவானுக்கு, ஔரசனும் அஞ்சனானந்தனனும் தேஜஸ்வியினாலும், தாண்டுவதினாலும், வாயுதேவனையே நிகர்த்தவரும் ஆயுதாதிகளால்தீங்கும், இறப்பும், அற்றவரும் ஆகிச்சிறப்புற்றிருக்கின்றீர்; யாங்களிப்போழ்து திறமையற்றிருக்கின்றோம்; ஆதலால், நீர்ஒருவரே யிப்பொழுதெங்களைப்பாதுகாத்தளிக்கக்கடவீர் நீர்திறமையும், கேள்வியும், வலிமையும்கொண்டு பெரிய திருவடிபோலவே விளங்குகின்றீரல்லீரோ; யான்முன்னே மூப்புறாதிருக்கையில் பெருமாள் த்ரிவிக்கிரமாவதாரஞ்செய்தருளுகையில் அவனை இருபத்தோருதரம் வலஞ்செய்துபணிந்தேன்; தேவர்கள் திருப்பாற்கடலைக்கடைகையில் அப்போழ்து அமிழந்தோற்றுவதற்குவேண்டியமூலிகைகளைப்பற்பலவிடங்களிலிருந்தும் விரைவாகக்கொணர்ந்தளித்தேன்; அத்தன்மையனாகியும் நானிப்பொழுது மூப்புற்றுத்திறமைகுன்றி யொடுங்கி,

யிருக்கின்றேன் ; இப்போழ்து நீர் ஒருவரே எம்மெல்லோரினும் சிறப்புடையீர்; ஆதலின் நீர் இப்போழ்து பெருகிவளர்ந்து, கடலைத்தாண்டமுயற்சிகொள்க ; உமதுதிறமையைக்கண்ணாரக்கண்டுமகிழ இவ்வாநரசேனைகளெல்லாம் விரும்புகின்றன; ஆதலின் யூதபர்தலைவரே எழுந்திருக்க, கடலைத்தாண்டுக ; உமதுகதி, யெல்லாப்பூதங்களையும் விடச்சிறந்ததன்றோ ; இவ்வாநரர்களெல்லோரும் துன்புற்றிருக்கின்றார்களே ; இத்தருணத்திலும் நீர் உபேக்ஷையேன் செய்கின்றீர். பெருமாள் வளர்ந்து மூவுலகங்களையும் மூன்றடிகளாக அளந்ததுபோல நீரும்வளர்ந்து இக்கடலையோரடியாகவுளக்கக்கடவீர் என்றிவ்வகையாக ஜாம்பவான்புகழ்ந்துரைசெய்தனர் ; சிறியதிருவடியதுகேட்டு மகிழ்வுகொண்டு அவ்வண்ணமேசெய்வேனென்று உறுதிகூறி யவ்வாநரர்களெல்லோரும் மகிழுமாறு பேருருவங்கொண்டெழுந்தருளினர்.

கிஷ்கிந்தாகண்டத்தில் அறுபத்தாறாவது சருக்கம்.

முற்றிற்று.

அறுபத்தேழாவது சருக்கம்.

சிறியதிருவடி யலைகடலைத்தாண்டுவதன் பொருட்டு மகேந்திரமலைமேலேறிநின்று வாநரங்களை மகிழ்வித்து மகிழ்ந்தது.

இவ்வண்ணம், சிறியதிருவடி நூறுயோஜநதூரங் கடலைத்தாண்ட முயற்சி கொண்டதை வாநரர்களெல்லோருங்கண்டு பெருமகிழ்வுகொண்டு கிலு ! கிலு! என்று கூவியும், சிறியதிருவடியைப்புகழ்ந்தும் வியப்புகொண்டு பெருமாள் உலகமளக்குங்கால், ப்ரஜைகளெல்லோரும் கண்ணுற்றாற்போலக் கண்ணுற்றிருந்தனர். இவ்வண்ணம் புகழப்பட்ட சிறியதிருவடியும், மிகவளர்ந்துலாங்கூலத்தை யுதறியடித்துமகிழ்வினால் பல மதிகமாகி மிகவொளிகொண்டு பேருருவம்பூண்டு மலைக்குகையில்சீறியசிங்கம் வளர்வதுபோல வளர்ந்து திகழ்ந்தனர் ; அப்போதவருடைய முகம்பழுக்கக்காய்ச்சின மடக்குபோலவும்; புகையின்றி யெழுந்தெரிகின்ற, அக்கினிபோலவும், விளங்கிற்று. அவர் அப்பொழுது வாநரர்களினடுவினின்று, எழுந்து பெரியோர்களைப்பணிந்தவரை நோக்கிமொழியலுற்றனர். கேளீர்! அன்புள்ள தோழர்களே ? என்தந்தையாகிய வாயுபகவான், வானிடையிலெழுந்து, வீசுவாராகில் மலைச் சிகரங்களையும் வேகத்தினால் முறித்துத்தள்ள வல்லவர் ; அவருடைய வேகம், வைநதேயாதிகளுக்குமிலது. யான் அவருக்கும் ஔரஸகுமாரனாகையால் வேகத்தில் எனக்கு நிகராகியவன் ஒருவனுமிலன். யானிங்கிருந்தே மிகவுயர்ந்துள்ளமேருகிரியையும் இடையிலெங்கு மூட்காராமல் சென்றடைவேன். இவ்வண்ணம் ஒருதரமேயன்றி பலமுறை செல்லினும் வருத்தமுறேன். அலைகடலையும் , கைகளினால்

கலக்கி, யதின்வேகத்தினுல் ஆறு, குளம், கடல், மலைகளுடன் கூடிய பார முழுமையும் மூழ்த்திவிடவும் வல்லேன். இக்கடலும்; என்னுடையதுடை யின் வேகத்தால் மேலெழுந்து பெருமுதலைகளும் ? புரண்டு கரைகடந்து, செல்லும் பெரியதிருவடி வானிடையில், முன்னெழுந்துபறந்து, செல்லி னும்; யான்பின்சென்று பலமுறையிலும் அவனைப்பிடிக்கவல்லேன்? உதய கிரியினின்றும் கதிரவனுடன், புறப்பட்டு அவன் அத்தகிரியையடைவதன், முன்னமேயான் அத்தகிரிசேர்ந்து பூமியைத்தொடாமலேமீளவும் உதயகிரி வந்துசேர்வேன். இவ்வண்ணம் வானிடையில், செல்லுகின்ற உயிர்களெல் லாவற்றையும் யான்வேகத்தினுல் மீறிச்செல்வேன்; கடலையும், சொஷிக் கும்படிச்செய்வேன் பூமியையும் பிளப்பேன்; மலைகளையும் பொடிசெய் வேன்? தாண்டுகையில் ஊருவின் வேகத்தினுல், கடலையும்மேலெழச்செய் வேன், யானிப்போழ்து ஆகாயத்திலெழும்பிச் செல்லுகையில், பற்பல; மரஞ்செடிகொடிகளின் மலர்கள், பின்ருெடர்ந்துவரும்; ஆதலின் எனது வழிவானிடையில் சுவாதிநக்ஷத்திரத்தின் வழிபோல விளங்கும். யான் ஆகாயத்தில்பாய்ந்து, பறந்தும் உயர்ந்தும்இறங்கியும்செல்லுகையில், எல் லாப்பூதர்களும்என்னைக்கண்டுமகிழ்வார்கள்; என்னுடைய மிகப்பெரியவு ருவத்தையுங்கண்டு மாமுகிலெனவும் எண்ணுவார்கள். அவ்வண்ணம்யான் செல்வேனுகில் மேகங்களையுஞ்சிதறவடிப்பேன் மலைகளையும்அசைப்பேன் கடலையும் கலக்குறச்செய்வேன்; தாண்டும்விஷயத்தில்எனக்குள்ளதிறமை வாயுபகவான் வைநதேயர் இவ்விருவர்க்குமேயன்றிமற்றெவருக்குமில்லை. ஆதலின் யான்செல்வேனுகிலென்னைத்தொடர்ந்து வரத்தக்கவ னொரு வனுமிலன்; மேகத்தினின்றும் மின்னற்கொடிதோன்றி மின்னுவதுபோல் மின்னி ஒருநொடிக்குள்ளாகவே நெடுந்தூரஞ்சென்று அக்கரைசேர்வேன். எனது உருவமும், உலகமளந்த மகாவிஷ்ணுவின் உருவம்போல வளரும்; என்னுடையமனம் மிகவும் தெளிவுற்றிருக்கின்றமையினுலும்; செயலும் தடையின்றிவளர்கையாலும் பிராட்டியையான்கண்டு களித்தே மீண்டெய் துவேனென்று நிச்சயமுறுகின்றேன். ஆதலின் நீவிரெல்லீரும் மகிழ்க, துஞ்சற்க, வேகத்தில் வாயுபகவானுக்கும், பலத்தில் பெரியதிருவடிக் கும் நிகராகுவேன். பதினுயிரம்யோஜனதூரம், தடையின்றிச்செல்வே னெனவுறுதி செய்வேன். சதகோடியைக்கையிலேந்திய தேவேந்திரனுயி னும் நாலுமுகங்களையுடைய விதாதாவாயினும் அமிழ்தத்தைக் கையில் வைத்துக்கொண்டு பாதுகாக்கினும் அவர்களையும் வென்று, அவ்வமிழ்த த்தைப்பறித்துக் கொண்டுவருவேன்; அநேகமாயிரம், அரக்கர்களுடன் கூடிய இலங்காத்தீவையே! வேருடன்பறித்தெடுத்துக்கையிலேந்திவரு வேன். என்றிவ்வகையாகச் சிறியதிருவடி வாநரர்களை நோக்கிவீறுகூறினர்.

இவ்வண்ணங்கர்ஜனைசெய்து மொழிந்த சிறியதிருவடியின்மொழியை யவ்வானரர்களெல்லோருங்கேட்டு மிகவும் மகிழ்ந்து பார்த்துக்கொண்டிருக்கையில், ஜாம்பவான் மகிழ்வுகொண்டு சிறியதிருவடியை நோக்கிக்கேளீர் அனுமானே ! நீர் வீரங்கொண்டு இவ்வண்ணம் மொழிந்ததினால் இவ்வாநரர்களெல்லோருடையவும் சோகக்கடல் வற்றி யாநந்தக்கடல் பொங்குகின்றது; இவ்வாநரர்கள் உமக்கு நலம்விளையுமாறு கூடி வாழ்த்துகின்றனர்கள். ஆதலின், நமதுகாரியம் தடையின்றிக்கைக்கூடும்; இவர்களின் ஆசீர்வாதத்தினாலும், முனிவர்களுடையவும் ஆசிரியர்களுடையவும் அருளினாலும், காரியம் ஜயம் பெறுமாறு நீர்மேலெழுந்து தாண்டுக; நீர் மீண்டு வருமளவும், யாங்களெல்லோரும் ஒரு காலில் நின்றெதிர் பார்த்திருப்போம் ; இனி எங்களெல்லோர்களினுடைய வுயிர்களும் உம்முடைய அதீனமாயினவல்லவோ என்று வேண்டினர். சிறியதிருவடி யதுகேட்டு மகிழ்ந்து அவர்களை நோக்கி, யூதபதிகளோ ! யானிங்கிருந்தே மேலெழுவேனாயின், என்னுடையவேகத்தை இந்தப்பூமிபொறுமலழுந்திவிடும்; இம்மகேந்திரமலையின் சிகரங்கள் திடங்களாகவும், விஸ்தாரமாகவுமிருக்கின்றன ; ஆதலின், அச்சிகரங்களின்மேலேறித் தாண்டுமாறு வேகங்கொள்ளுகிறேன் ; இச்சிகரங்கள் பற்பல மரங்களடர்ந்தும், பலவகைத் தாதுக்கள் நிறைந்தும் இருக்கின்றமையின், யான் நூறுயோஜனதூரஞ்செல்லுமாறு வேகமுறுகையில், என்னுடைய பாதங்களின் வேகத்தைப் பொறுக்கும் என்று மொழிந்து அவர்களை யுடன்படுத்தி யந்த மகேந்திரமலையின் சிகரத்தின்மேலேறினர் ; அம்மலை பலவகைப்பட்ட மரங்களடர்ந்தும், மான்களடர்ந்து புல்லுள்ள பூமியுடையதாகியும், பற்பல மலர்கள் மலர்ந்த கொடிகள் நெருங்கியும், எல்லாமரங்களும் எப்பொழுதும் தளிர்த்தும், பூத்தும், காய்த்தும், கனித்தும், தழைந்தும், சிங்கம் யானை புலி கரடிகளுலாவியும், பற்பல பறவைகளொலித்தும், மலையருவிகள் பெருகியும், சிகரங்களினால் மிகவுமுயர்ந்தும் இருக்கினும் மகேந்திரனுக்குநிகரான பராக்கிரமமுள்ள இந்தச் சிறியதிருவடியின் திருவடிகளினால் பீடிக்கப்பட்டதாகி யழுந்தினமையின், சிங்கத்தினாலடிக்கப்பட்ட மதயானைபோல வொலிசெய்தது ; மலையருவிகளை மிகவும் பெருக்கிற்று; சிகரங்கள் முறிந்து வீழ்ந்தன; மரங்கள் சாய்ந்தன; மான்களும், யானைகளும், அச்சங்கொண்டலைந்தன; இணைபிரியாமல் மதுபாநஞ்செய்தின்புறுகின்ற கந்தர்வர்களும், வித்தியாதரர்களும், மற்றுமுள்ள தேவகணங்களும், பறவைகளும், அச்சமுற்று மேலெழுந்தனர்கள்; மலைநாகங்களும் அச்சமுற்றடங்கின; சிகரங்களசைந்தன ; அப்பொழுது

புற்றினின்றும் பாதி வெளியில்வந்த பாம்புகள் அப்படியே யழுந்திவிட்டமையின், அவைகளினால் அம்மலை பதாகைகளையுடையதுபோலவும், முனிவர்களும் அச்சங்கொண்டு தன்னைவிட்டோடினமையின் பெருங்காட்டில் துணைவிட்டுப்பிரிந்த வழிநடப்பவன் போலவும் விளங்கிற்று; அந்தச் சிறியதிருவடியும் இவ்வகையாக அம்மசேந்திரமலையின்மேலேறி இயல்பாகவே வேகமுடையராதலின், வேகஞ்செய்வதிலூக்கமுற்றும்; வானரர்களுள் மிகவீரமுடையராதலின், பகைவர்களைக்கொலைசெய்ய வல்லவரும், சிறந்த மகிமையுடையராதலின், நன்மனமுடையவருமாகியும், மனத்தைத் தன்வசமாக்கி யச்சமென்பதை யகற்றி யிலங்கையை மனதினால் நினைந்து அங்குச்சென்று செயற்குரியகாரியங்களையெல்லாம்செய்துமுடித்துவருவேனென்று உறுதிகொண்டு தாமும் மகிழ்ந்து தம்முடன் வந்த வானரர்களெல்லோரையும் மகிழ்வித்தனர்.

கிஷ்கிந்தாகாண்டத்தில் அறுபத்தேழாவது சருக்கம் முற்றிற்று.

கிஷ்கிந்தாகாண்டமும்

முற்றுப்பெற்றது.

FINIS